கலைமகள்

தீபாவளி மலர் '82

ADWAVE/IB/1785

இந்தியாவில் முதன் முதலாக......
"வெல்வரைஸ்டு" செய்யப்பட்ட
VIKING
FOLLOWS
SWEET
SOFT
NICE
COOL...
IS: 4964-80
வைகிங்
பனியன்கள்
Viking
VESTS BRIEFS
வைகிங் நிட்டர்ஸ் 638603.
MKTS: ரெங்கா ஹோசரீஸ் 612001.

புதுமைப் பெண்களின் எண்ணங்களில்
என்றென்றும் பசுமையுடன்

காஞ்சீபுரம்
ஆரணி
தர்மாபுரம்
பனாரஸ்

பட்டு புடவைகள்

டெக்ஸ்ரைஸ்டு
ஷிபான்
அமெரிக்கன்
கோட்டாஸ்
சந்தேரி
விமல் சேலைகள்
கட்டாவ் சேலைகள்
லக்ஷ்மி மில்ஸ் சேலைகள்
பாம்பே டையிங் சேலைகள்
ஆர்கண்டி
புல்வாயில்
வாயில்
வெங்கடகிரி
ஹைதராபாத்
பிரிண்டட் ஷிபான் சேலைகள்
மற்றும்

பல வண்ணப் புடவைகள்

16 வது ஆண்டு

பெமினா
சேலைகளின் சமுத்திரம்

10,11, மேலச்சித்திரை வீதி,
மதுரை : 625001
போன் : 32862

Femina
OCEAN OF SAREES

தீபாவளித் திருநாளுக்கு ஸ்ரீராம் அளிக்கும் நல்வாழ்த்துக்கள்!

- ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மென்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்
- ஸ்ரீராம் பைனான்ஸ்
- ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
- ஸ்ரீராம் இன்வெஸ்ட்மென்ட்ஸ்
- ஸ்ரீராம் டிரேடிங் & டிரான்ஸ்போர்ட் பிரைவேட் லிமிடெட்
- ஸ்ரீராம் டிரஸ்ட் (அமுதசுரபி)
- ஸ்ரீராம் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி பிரைவேட் லிமிடெட்

தலைமைப் பதிவு அலுவலகம்:
123, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-600 001.
போன்: 37890, 28545

ADWAVE/SCI/2196

அனைவருக்கும் எமது மனமார்ந்த
தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

மாநகர் மதுரையில்

கண்கவர் காஞ்சிபுரம்

பகட்டான பனாரஸ்

தரமான தர்மாவரம்

அழகான ஆரணி

பட்டுப்

புடவைகள்

பாவாடைகள்

பட்டு ஜவுளிகள்

தேர்ந்தெடுக்க கைராசியான ஸ்தாபனம்

ராஜ்மஹால்

பட்டு ஜவுளி மாளிகை

37, வெங்கலக் கடைத் தெரு,

மதுரை-652 001.

போன்: 22647 தந்தி: SAREE HALL

FOR HEALTH & STRENGTH
KEEP HABIT WITH OUR
SWEETS & SAVOURIES

RK

RAMAKRISHNA
Lunch Home

Y. M. C. A. BUILDING.
223 N. S. C. BOSE ROAD.
MADRAS-600 001. PHONE : 22154

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் TAMIL NADU HOUSING BOARD

தமிழ்நாடு
வீட்டு வசதி வாரியம்

வளமான வாழ்விற்கு வனப்புமிகு வீடு.

மலிவு விலையில் தரமான வீடு.

அனைவருக்கும் வீடு—அதுவே எங்கள் பணி.

ஒதுக்கீடுதாரர்களுக்கு

எங்கள் வாழ்த்துக்கள்

மனைவளம் ஓங்குக.

DIPR/487/82/ADWAVE/TNHB/2191

FOR
QUALITY SWEETS
& SAVOURIES

PHONE:
21219,
31349.

AGARWAL BHAVAN
128 GOVINDAPPA NAICK STREET
MADRAS-600 001

அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்

★ கைத்தறிச் சேலைகள்
★ நைலக்ஸ் புடவைகள்
★ ஷர்ட்டிங்குகள்
★ சூட்டிங்குகள்
★ வேஷ்டிகள்
★ மில் ஜவுளிகள்

இதர எல்லாவிதமான நவீன, தரமான ஜவுளி வகைகளை

நியாயமான விலையில்

வாங்க

நம்பிக்கையும் கைராசியுமான இடம்

ஸ்ரீ மகாதேவி டெக்ஸ்டைல்ஸ்

25-C, நந்திக்கோவில் தெரு, தெப்பக்குளம்

திருச்சிராப்பள்ளி-620 002

போன்: 29016

— VRG

மங்கள ஒளி வீசட்டும்
மகிழ்ச்சி நாதம் பெருகட்டும்
''உங்கள் இல்லங்களில் என்றும்
மங்களம் தங்கிட வாழ்த்துகிறோம்.
ஒளிமயமான எதிர்காலத்திற்கு எளிய சேமிப்புத்திட்டங்கள்
வழங்குகிறது.''
அன்னியச் செலவாணியில்
வர்த்தகம் புரிய அங்கீகாரம்
பெற்ற பாங்க்.
கரூர்
வைஸ்யா
பாங்க் லிட்.,
பதிவு அலுவலகம்: கரூர்,
தமிழ்நாடு.
ஜி. வெங்கடேசம்
சேர்மன்

அழகாக அச்சிடப்படுபவை
வாசகர்களின் கவனத்தைக் கவர்கின்றன.
ஒரு விளம்பரதாரர் என்ற முறையில்
இவ்விஷயத்தில் உங்களுக்கும்
அக்கறை இருக்க வேண்டியது இயல்பே!

தினமலர் நவீன ஆ:ப்ஸெட்
இயந்திரத்தில் அச்சிடப்படுகிறது.
மேலும், அதிக விநியோகமுள்ள
தமிழ் தினசரிகளில்
தினமலர் மூன்றாவதாகத்
திகழ்கிறது (ஆதாரம்:ABC)

தினமலர்
தமிழ் நாளிதழ் சென்னை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய
நகரங்களிலிருந்து ஒரே சமயத்தில் வெளி வருகிறது.
தபால் பெட்டி எண்.1 பழங்காநத்தம், மதுரை 625003

EP-D-101-82

டிவிஎஸ் அளிக்கும் சேவை:



ஒரு லிட்டருக்கு அதிக கிலோ மீட்டர்கள் மட்டும் அல்ல

ஒவ்வொரு வண்டிக்கும் அதிக ஆயுளும் கூட

சுருங்கக் கூறினால், இதுவே டிவிஎஸ் சேவையின் குறிக்கோள்.

டிவிஎஸ்ஸிற்கு ஒரு வண்டி வந்தவுடனேயே அது முழுமையாகப் பரிசோதிக்கப்படுகிறது. பழுதுகள் ஆய்ந்தறியப்படுகின்றன. அவைகளைச் சீர் செய்யும் பணி தொடர்கிறது.

மிகையெனத் தோன்றுகிறதா?

டிவிஎஸ்ஸில் தம் வண்டியைப் பராமரித்தவர்களில் யாரேனும் ஒருவரைக் கேளுங்கள்.

அத்தகையோரில் பலர் டிவிஎஸ்ஸின் வாடிக்கையாளர்களாகத் தொடர்ந்து 30 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வருகின்றனர்.

நிச்சயமாக, அவர்கள் தங்கள் செலவிற்கு ஈடான சேவையைப் பெற்று வந்துள்ளனர்.

"முழுமையான சேவை" என்ற சொற்கள் மட்டும் "டிவிஎஸ் சேவைக்கு"க்கு விளக்கம் தர முடியாது.

டிவிஎஸ் சேவை அதற்கும் மேற்பட்டதொன்று.

ஒரு நட்டினைச் சரியாகப் பொருத்துவதிலிருந்து சீரிய எஞ்ஜின் ஓவர்ஹால் வரை கவனித்து அளிக்கப்படும் சிறப்புப் பணி இது. நவீன இயந்திரங்கள் மற்றும் டூல்களை வேண்டிய அளவு பெற்றுள்ள விசாலமான பணிமனைகளில் பணி அளிக்கப்படுகின்றது. அத்துடன், தகுதியுள்ள, சிறப்பாகப் பயிற்சிபெற்ற பொறியாளர்கள் மற்றும் தொழில் நுணுக்க வல்லுனர்கள் இப்பணிமனைகளில் பணி அளிக்கின்றனர். மோட்டார் உறுப்புகள் மாற்றப்பட வேண்டி இருந்தால் தரம் மிக்க உறுப்புகளே உபயோகிக்கப்படுகின்றன.

இதன் பலன்! உங்கள் வண்டி சீராக இயங்குகிறது. ஒரு லிட்டருக்கு அதிக கிலோமீட்டர்கள் அளிக்கிறது.

உங்கள் வண்டியை டிவிஎஸ்ஸில் தொடர்ந்து பராமரித்து வந்தீர்களானால் அது கடினமான நிலைகளிலும், எப்பொழுதும் சீராக இயங்கும் என்பது உறுதி. இச்சீரான இயக்கம் பல ஆண்டுகளுக்குத் தொடரும்.

தென்னகம் முழுவதும் பல கிளைகளைக் கொண்ட பரந்த அமைப்பைப் பெற்ற டிவிஎஸ், முன்னேற்ற நோக்குடன் செயல்பட்டுவரும் ஒரு நிறுவனமாகும். இது, சாலைப் போக்குவரத்துத் தொழிலில் முன்னோடியாகத் திகழ்ந்தது. உள்நாட்டு மோட்டார் உறுப்புகளின் தயாரிப்பாளர்களை ஊக்குவித்தது. மக்கள் சேவையில் தன்னுடைய தொழில் நுணுக்கம், மனித சக்தி மற்றும் திறமைகளை அர்ப்பணித்தது. எழுபதாண்டுகளுக்கும் மேலாகப் பெற்றுள்ள சேவை மரபினில் டிவிஎஸ் தொடர்ந்து பணியளிக்கிறது.

TVS உங்கள் நம்பிக்கைக்குரியது டிவிஎஸ்

டி.வி. சுந்தரம் அய்யங்கார் அண்ட் சன்ஸ் லிமிடெட்
மதுரை மற்றும் கிளைகள்
சுந்தரம் மோட்டார்ஸ்
சென்னை மற்றும் கிளைகள்

SAA/TVS/2837



ருசியிலே தனி ருசி!

டாலர் பிஸ்கெட்

DOLLAR

தயாரிப்பாளர்கள் :
டாலர் பிஸ்கெட் கம்பெனி
சென்னை - 600 096.

Concept/M/DB/150

வண்ணமும் ஒளியும் நிறைந்த இந்நாளில் ராம்கோவின் வாழ்த்துக்கள்

ராம்கோவின் தொழிற்கூடங்களும், கல்வி நிலையங்களும், அறக்கட்டளைகளும் மக்கள் வாழ்வில் மகிழ்ச்சியும், வண்ணமும், ஒளியும் என்றும் நிறைந்து இருக்க பணி செய்கின்றன.

ராம்கோ குரூப் நிறுவனங்கள் :

ராஜபாளையம் மில்ஸ் லிட்.
மதராஸ் சிமெண்ட்ஸ் லிட்.
ஸ்தான் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் லிட்.
கௌரி ஹவுஸ் மெட்டல் ஒர்க்ஸ்
ரமாராஜு சர்ஜிகல் காட்டன் மில்ஸ் லிட்.
சுதர்சனம் ஸ்பின்னிங் மில்ஸ் லிட்.
ஜயராம் மில்ஸ் லிட்.
பி.எ.சி. ராமசாமி ராஜா பாலிடெக்னிக்
சின்மயா வித்யாலயா பி.எ.சி. ராமசாமி ராஜா மெட்ரிகுலேஷன் ஹையர் செகண்டரி ஸ்கூல்
பி.எ. சின்னைய ராஜா ஞாபகார்த்த மேல்நிலைப்பள்ளி
பி.எ.சி.ஆர். அம்மணி அம்மாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளி
பி.எ.சி. ராமசாமி ராஜா கல்வி அறக்கட்டளை
ராஜா அறக்கட்டளை

APRC R/3

FOR YOUR CARTONS !

For BRIGHT & COLOURFUL PACKAGING, We, at CARTONS & CONTAINERS design and produce folding-box cartons and labels for your particular product.

COLOURFUL PACKAGING STIMULATES SALES
Successfully completed over [illegible] years of Dedicated Service.

CARTONS & CONTAINERS

Office : 87, M.K. Amman Koil St., Mylapore, Madras-4 (76011)
Works : F.A/1, Industrial Estate, Madras-600 058 (632799)

TOUGH TIMES. TOUGHER DIESELS.

Now that running costs are crucial ask about Simpsons road roller|paver|compactor engines.

Simpsons have been at work in the road construction market for a long time. The result is a range of 3, 4 and 6 cylinder engines specifically designed to perform better and cheaper in the tough times ahead

Tougher on tough sites

Renowned for their durability, Simpsons road construction engines operate efficiently and reliably in extremes of temperature, altitude and dust.

Gains in fuel efficiency

Simpsons have long experience in providing diesel power to the road roller|paver|compactor market. Hence Simpsons can ensure that the engine in your equipment is ideally matched with consequent gains in fuel efficiency.

Adding up to total power value

When you buy Simpsons, you buy more than an engine ... a complete power package from the nation's leaders in diesel power.

Simpsons technical back-up and service ranges from design and technical consultancy to supply of Simpsons genuine diesel parts, the most sophisticated in the diesel business.

So to get total power value through the 80's, ask Simpsons about their road roller|paver|compactor engine range.



SIMPSONS engines

The tougher diesels

Simpson & Co. Ltd

861/862, Anna Salai, Madras-600 002.

MAC/S/822

SOUTHERN RAILWAY

DEEPAVALI IS ROUND THE CORNER:

Passengers are hereby requested not to carry fire works crackers and other inflammable goods with them when they perform train journeys since it is extremely dangerous to carry explosive material which may endanger their own lives as well as those of their co-passengers.

Carriage of explosives by passenger trains also attracts the provisions of Sections 59 and 107 of the Indian Railways Act and persons contravening these provisions are liable for prosecution.

Southern Railway Administration wishes its patrons a VERY HAPPY DEEPAVALI.

Issued by: Chief Public Relations Officer
Southern Railway, Madras-3

PUB4/II/I/R338

இந்தியாவில், லாரி மற்றும் பஸ்களுக்கான ஏர் பிரேக் சாதனங்களை முதன் முதலில் உருவாக்கியவர்கள் சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட்.

சாலைப் போக்குவரத்து மற்றும் மோட்டார்த் தொழில் முன்னேடிகளான டிவிஎஸ் நிறுவனத்தைச் சேர்ந்த சுந்தரம்-கிளேட்டன் இங்கிலாந்திலுள்ள கிளேட்டன் டிவாண்டர் கம்பெனி லிமிடெட்டுடன் இணைந்து உருவாக்கப்பட்டது.

இன்று, சுந்தரம்-கிளேட்டன், லாரிகள், பஸ்கள், டிரெய்லர்கள், மற்றும் எர்த்மூவிங் வண்டிகளுக்கான ஏர் பிரேக் சாதனங்களை முழுமையாகத் தயாரித்து அளிக்கின்றது. அத்துடன் நம் நாட்டின் பல கோடி மக்களுக்கு நிச்சயமான மற்றும் நம்பகமான பாதுகாப்பினை அளிக்கின்றது.

இதுமட்டுமல்ல, மேல் நாட்டினரும் சுந்தரம்-கிளேட்டன் ஏர்-பிரேக் சாதனங்களின் தரம், நம்பகத் தன்மை சீரிய உழைப்பு—இவற்றினைக் கண்டு மகிழ்ந்து தாங்கள் தயாரிக்கும் வண்டிகளில் அவைகளைப் பொருத்துகின்றனர்.

ஆம் அன்றும், இன்றும், லாரி, பஸ் மற்றும் எல்லா வாகன உரிமையாளர்களும் விரும்பிப் போற்றுவது CD-TVS ஏர் பிரேக் சிஸ்டம் தான்.

உங்கள் பாதுகாப்பு
எங்கள் பொறுப்பு

CD TVS
We make your safety our business.

சுந்தரம்-கிளேட்டன்
லிமிடெட்
பாடி, சென்னை 600 050.


எம்.எஃப். டிராக்டர்களோடு, உபகரணங்களும்,
உங்களுக்குத் தோள்கொடுத்து வயலிலே
பாடுபடும்போது உங்கள் பண்ணையின்
உற்பத்தித் திறனோடு,
விளைச்சலும்
அமோகமாகப்
பெருகுகிறது.
எம்.எஃப்.245
எம்.எஃப்.1035 டீலக்ஸ்
டாஃப – தலைசிறந்த டிராக்டர்
தயாரிப்பாளர்கள் மட்டுமல்ல:
எல்லா உழவு செய் நேர்த்திகளுக்கும்
ஏற்ற பலவகைச் சாதனங்களையும்
உருவாக்குகிறார்கள்.
டில்லர்
டிஸ்க் பிளவ்
மோல்டு போர்டு பிளவ்
ஆஃப் ஸெட் டிஸ்க் ஹார்ரோ
பாடி டிஸ்க் ஹார்ரோ
டெர்ரஸர் பிளேடு
டில்லர் ஸீடிங் அட்டாச்மென்ட்
சப்-ஸாயிலர்
ஜிப் கிரேன்
டிரெய்லர்
தாய்நாட்டு வேளாண்மை வளரத்
தன்னையே அர்ப்பணித்துக் கொண்டுள்ளது
டிராக்டர்ஸ் அண்டு ஃபார்ம் எக்விப்மென்ட் லிமிடெட்
சென்னை
MF
Massey Ferguson
TAFE
MAC/T/49-TAM/A



To keep pace with the advances in technology, Addison today are equipped with fully automatic computer numerically controlled machines that ensure highest possible accuracies.

The advantages of these machines are :—

- Production rate is assured
- Operator's fatigue is reduced
- Delivery schedules can be advanced
- Machine downtime is reduced
- Human error is completely eliminated

As leaders in the field, Addison manufacture a comprehensive range of precision Engineers' Cutting Tools — Twist Drills, Threading Taps, Reamers, Milling Cutters, End Mills, etc. — both high speed steel and carbide tipped.

Addison's top of the line technology offers the finest of tools, whatever the machining operation — turning, drilling, reaming, tapping, facing, boring, milling, chamfering, etc., and whatever the material— nimonic steels, alloy steels, cast iron, non-ferrous metals, plastics, etc.

Lower overall machining costs, longer tool life and faster production are the other measurable benefits from Addison tools.

Addison's service engineers work closely with their counterparts at customers' factories, solving machining problems, matching up tools with applications, expediting special requirements ...... and maximising productivity.



Addison–Leaders in cutting tool technology

ADDISON ESTABLISHED 1873

Addison & Company Limited
(A unit company of the Amalgamations Group)
803, Anna Salai, Madras - 600 002

Branches : Ahmedabad, Bangalore, Bombay, Calcutta; Ernakulam, Kanpur, Ludhiana, Madras & New Delhi.



MAC/ADD-13D

தீபாவளி வாழ்த்துக்கள்
MAFATLAL
INDUSTRIES
மபத்லால்
இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
MAFATLAL
FINE
தி மபத்லால் ஃபைன்
ஸ்பின். அண்ட் மேன்யு. க. லி.
GW/T-1

ஸ்டேட் பாங்கில் சேமிப்புக் கணக்கைத் துவக்கினல் உங்கள் இன்னிசைக்கு நாங்கள் தாளம் போடுகிறோம்.

எங்களுக்கு வேலை கொடுங்கள். நாங்கள் கடுமையாக உழைக்கத் தயார். உங்களுடைய சேமிப்புக் கணக்கு பணத்தைச் சேமித்து வட்டியை ஈட்டுவதற்காக மட்டும் என்று நினைக்காதீர்கள். உங்களுக்கு உதவி புரிந்து வாழ்க்கையை சொகுசாக வைப்பதே அதன் முக்கிய நோக்கம் என்பதை மறந்து விடாதீர்கள்.

கட்டணங்களைவிடுங்கள், உங்கள் பில்களை நாங்கள் கட்டுகிறோம்.
அதை வங்கியல் மொழியில் நிலையான கட்டளைகள் என்கிறோம். நீங்கள் அதை "எங்கள் பில்களைத் தயவு கூர்ந்து கட்டுக" என்று கூறலாம். அதாவது உங்களுடைய எல்ஐஸி ப்ரீமியம், வீட்டு வாடகை, பள்ளிக் கட்டணம்,லிடிஎஸ் போன்றவை.



பணத்தை விரைவாக மாற்றலாம்
வங்கிமியலில் உங்கள் பணத்தைப் பல வழிகளில் காற்றுவேகத்தில் மாற்றலாம், காசோலை மூலம், கேட்பு உறுதிக்காசோலை, (நீங்கள் கேட்க நாங்கள் தருகிறோம்) தந்தி வழி மாற்றங்கள் வாயிலாக.

காசோலை மூலம் ரொக்கம்
உங்கள் சேமிப்புக் கணக்கில் குறைந்த பட்சம் ரூ. 100/- இருந்தால் காசோலை புத்தகத்தைக் கேட்டு வாங்குங்கள். இப்போது ரொக்கமாக நீங்கள் பெருந்தொகையை உடன் எடுத்துச் செல்லவேண்டிய அவசியமில்லை.

உங்கள் தேவைக் கேற்ப உடனடி வசூல்
6000க்கு மேல் கிளைகள் கொண்ட நாங்கள், உலகிலேயே வேறு எந்த பாங்கையும்விட அதிகமான கிளைகளைக் கொண்டவர்கள். ஆகவே எப்போதும் உங்கள் சேமிப்புக் கணக்கில் காசோலையை டெபாசிட் செய்வது மிகமிக வசதியானது. வெளியூர் காசோலைகள் மீது வசூலிப்பதை உடனடியாக செய்கிறோம்.

உங்கள் வாழ்க்கையை பல வழிகளில் சொகுசாக்கும் பாங்க் ஸ்டேட் பாங்க்

ஸ்டேட் பாங்க்
பாதுகாப்பு ஒரு நிம்மதியான மன நிலை.

CHAITRA-SBI-997 TAM

சௌத் இந்தியா கார்ப்பொரேஷன் (ஏஜென்ஸீஸ்) லிட்.,

சென்னை, கோயம்பத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, செகந்திராபாத், விஜயவாடா, விசாகப்பட்டினம், பெங்களூர், மங்களூர், எர்ணாகுளம் ஆகிய நகரங்களுக்கு விநியோகஸ்தர்கள்.

INNOVATION EXPLOSION

60% material saving through new technology.

Three fold benefits: material savings, productivity increase and better metallurgical properties are the results of application of cold extrusion technology for manufacturing this stainless steel protective sleeve for fuel injection nozzles.

Cold extrusion is an advanced technology which replaces conventional metal removal by metal forming.

By moving metal instead of removing it, substantial material savings are achieved during mass production of complex components.

The cold extrusion project of Sundram Fasteners at Hosur, already a commercial venture, is set for rapid growth.

Simultaneously, Sundram Fasteners is also entering into another high technology field—powder metallurgy. This will once again contribute to material economy and production of components of intricate design.

This diversification is part of the Company's plan for the utilisation of high technology opportunities, both for itself and for the country.

TVS

Sundram Fasteners Limited
Padi, Madras 600 050

தீபஒளி வீசும் தீபாவளித் திருநாளில்
உளங்கனிந்த வாழ்த்துடன்
THE LAKSHMI VILAS BANK LTD
LAKSHMI CASH CERTIFICATE
This is to certify that
is/are the registered holder(s) of Lakshmi Cash Certificate of the value of
Rs. (Rupees only) issued by the bank at this office subject to its rules in this behalf. The Bank undertakes to pay the registered holder(s) at this office on presentation of this certificate after a period of months a sum of Rs. (Rupees only)
ACCOUNTANT
MANAGER
லக்ஷ்மி
கேஷ் சர்டிபிகேட்
உங்களுக்கு சமர்ப்பிக்கிறோம்
இதில் முதலீடு செய்து
பயன் பெறுங்கள்
லக்ஷ்மி விலாஸ்
பாங்க் லிமிடெட்
பதிவு அலுவலகம்: கரூர்-639 001
நிர்வாக அலுவலகம்: சென்னை-600 086
என். முத்தியாலு
சேர்மன்
அன்னிய செலாவணியில் வர்த்தகம் செய்ய
அங்கீகாரம் பெற்ற வங்கி.



LOOK!
The familiar mosaic of Indian automotive industry is undergoing a structural change

The sedate composition of Indian automotive industry is transforming into a vibrant picture. A nearly fundamental qualitative change in the very composition of the industry is in the offing. In a few years from now, the mix of automobiles on Indian roads will almost undergo a metamorphosis.

Impressive investments are being made to upgrade the technological base of the industry. The process essentially centres around critical parts in the engine assembly, as any increase in engine efficiency or output calls for improvements in the piston and its family of components. Considerable amount of research is required to establish the parameters of such radical changes.



Today, our own research and developmental efforts are adequately self-sufficient and capable of absorbing more intricate levels of technology. Our product developmental efforts are in the vanguard of a new direction of growth for the Indian automotiv industry. As the first automotive ancillary fac lity to emerge on the industrial horizon of Indi we continue to spearhea the change that will add significant impetus to the future progress of India automotive industry.

INDIA PISTONS
- the moving force in automotive industry

INDIA PISTONS LIMITED
MADRAS 600 011 INDIA

MAC/IP/0181

உங்கள்
தேவைக்குத்
தகுந்த
மிகச் சிறந்த
ரெப்ரிஜிரேட்டர்கள்
Godrej
Leonard
FEDDERS LLOYD
ZENITH
உங்களது
நம்பிக்கையான
இடம்
VIVEK & CO
Mylapore
Ph: 76923
Purasawalkam
Ph: 662462
T. Nagar
Ph: 444129
V:563


Prompt after-sales service
-cuts down-tool time.
Wolf
That's value added to reliability.
In the field for decades, Wolf has the age, the experience, and the understanding of power tool users' needs. We know that your industrial development and growing production needs call for more efficient servicing of your power tools. Our nationwide service network is organised to provide preventive, regular and breakdown maintenance services within easy reach—and to render them promptly.
Wolf
ELECTRIC TOOLS
Manufactured by Ralliwolf Limited.
Marketed by Rallis India Limited.
Bombay • Calcutta • Delhi • Madras
Creative Unit 4579

NEW FROM PHILIPS.
ARGENTA SUPERLUX
The only milky bulb to give 30% more light.
Where you need it.
The new Argenta Superlux. Designed to trap light that would otherwise spill upwards – and direct it down where you need it. So you get 30% more light (no wastage on the ceiling!) A special frosted window in the bulb focuses the full force of the light – makes the Argenta Superlux the ideal bulb for fine or precision work to read or work by, as it leaves no shadow. Argenta Superlux. Thank technology for showing us the light.
PHILIPS
PHILIPS
Philips — the trusted Indian household name for over fifty years.

டாசெல்
சுகாதார சாதனம்.
சிக்கனத்தின் இருப்பிடம்
அழகின் உறைவிடம்
உழைப்பதில் நிறைகுடம்.
வெடிப்புகள் ஏற்படாத பளிங்கு போன்ற, சுகாதார சாதனங்களை சகாயமான விலைகளில் டாசெல் இப்பொழுது பிரத்யேகமாகத் தயாரித்து அளிக்கிறது.
டாசெல் சுகாதார சாதனங்களால் உங்கள் பாத்ரூம் நவீனமாகவும் அழகு மிகுந்ததாகவும் இருப்பது நிச்சயம்
TACEL
தமிழ்நாடு
செராமிக்ஸ் லிட்.,
சென்னை-600018
TACEL VITREOUS SANITARYWARE


சென்ட்ரல் பேங்க் வழங்குகிறது
புதிய வடிவம்
வளமும் நலமும் உருவாக்கிட.
எமது புதிய சின்னம்.
உங்களுக்கு, விவசாயத் துறைக்கு, தொழிலுக்கு, நாடுமுழுவதற்கும்— ஆகிய நான்கு பிரிவுகளுக்கும் பணி புரிவதை எடுத்துக் கூறுகிறது அச்சின்னம்.
இப்போது, இங்கும், வெளி நாடுகளிலும் பெருகிவரும் எமது வாடிக்கையாளர்கள், புதிய சிறப்பான சேமிப்பு திட்டங்கள், விவசாயம் வர்த்தகம் மற்றும் தொழிலுக்கான மேம்பட்ட வசதிகளைப் பெறமுடியும்.
சேவை செய்வதற்கான உறுதியை வலிமைப்படுத்துவதே எமது புதிய குறிக்கோள்.
ஆகவே, நீங்கள் வளமான வாழ்வு அமைத்திட நாங்கள் உதவ முடியும்.
சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா
(ஒரு இந்திய அரசு நிறுவனம்)
நம்மைச் சுற்றியும் அமைத்திடுவோம், நலமான வாழ்வு

To millions the world over
a refrigerator means
Kelvinator
sold and serviced in over 140 countries
fitted with the
world's most efficient
and trouble-free
compressor
that is now warranted for
five years
Sold & Serviced by :
Expo Machinery Limited
Pragati Tower, 6th Floor,
26 Rajindra Place,
New Delhi-110008.
Kelvinator refrigerators are available in five sizes : 286 & 165 (with automatic defrost system), 135, 90 and 65 litre capacities.
Kelvinator Deep Freezers are available in three sizes: 425, 275 and 85 litre capacities.
Kanara

தீபாவளி
வாழ்த்துக்கள்



SHARDLOW

ஷார்ட்லோ இந்தியா லிமிடெட்
"ஹுஸூர் கார்டன்ஸ்", செம்பியம்,
சென்னை-600 011

MAC/4

With Best Compliments From

Sri Murugan Offset Printers

117, BIG STREET, TRIPLICANE

MADRAS - 600 005

Phone : 842744

♥

Specialists in

Multi Colour Calendars

Labels - Folders

Book Works & Etc.

எமது உளங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்!

அசோகா
சுகந்த பாக்கு

Manufacturers:
ASOKA BETELNUT CO. PRIVATE LTD.
11/236-B, Dr. NANJAPPA ROAD, COIMBATORE-641 018

nbt

நேஷனல் புக் டிரஸ்ட்

புது வெளியீடுகள்

1. **விடியுமா?** (ஸதிநாத் பாதுரியின் வங்க நாவல்)
தமிழாக்கம் : என். எஸ். ஜகந்நாதன்; ரு. 12.75
ஆகஸ்ட் '42 புரட்சியை பின்புலமாய்க் கொண்டு,
மனித நேயத்தை முதன்மைப்படுத்தி எழுதப்பட்ட
சிலிர்ப் பூட்டும் நாவல்.

2. **ஹிந்தி ஓரங்க நாடகங்கள்**
தமிழாக்கம் : எம். வி. வெங்கட்ராம்; ரு. 11.50
பத்து முன்னணி ஹிந்தி எழுத்தாளர்களின்
ஓரங்க நாடகங்கள்.

3. **நீலகண்ட பறவையைத் தேடி ....**
(அதீன் பந்தோபாத்யாயாவின் வங்க நாவல்)
தமிழாக்கம் : எஸ். கிருஷ்ணமூர்த்தி; ரு. 20·00
எழில்மிகு கிழக்கு வங்கப் பிரதேசத்தையும்
அதன் மக்களையும் கண்முன் நிறுத்தும் நாவல்.

4. **தமிழ் நாட்டு மக்களின்**
மரபும் பண்பாடும் - 'சோமலே'
தமிழர் பண்பாடு, நம்பிக்கைகள், சடங்குகள்,
நாட்டுப் பாடல்கள், திருவிழாக்கள், பண்டிகைகள்,
ஆகியவற்றின் ரசமான விவரங்களடங்கியது. ரு. 13.25

பிரதிகளுக்கு

பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை - 600 001

பப்ளிகேஷன்ஸ் டிவிஷன் ஷோரும், எல். எல். ஏ. பில்டிங்,
அண்ணா சாலை, சென்னை - 600 002

பழனியப்பா பிரதர்ஸ், தெப்பக்குளம், திருச்சி - 620 002

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா, ஏ-5, கிரீன் பார்க்,
புது டில்லி - 110 016

பழனி ஸ்ரீ கந்த விலாஸ்

No.1 ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்
ஜவ்வாது வாசனை விபூதி
மிகவும் சிறந்தது

J.P.

சரவணப்பொய்கை சமீபம்.....அடிவாரம்.....பழனி!

மஞ்சரி

சிறந்த தமிழ் டைஜெஸ்ட்
35 ஆண்டு சேவை
பல மொழிகளிலிருந்து சிறந்த கதை, கட்டுரைகள்
விலை ரூ. 1 ஆண்டு சந்தா ரூ 12

மஞ்சரி காரியாலயம், த. பெ. 604, மயிலாப்பூர், சென்னை-600 004.

PHONE: 2150

Royal Industries

1-6, GOVT. INDUSTRIAL ESTATE

DINDIGUL - 624 006

Manufacturers of Superior Quality

ROYAL STEEL FURNITURE

DISTRIBUTORS

Royal Corporation	Geetha Agencies
3, ST., MARYS BUILDINGS	14, ST., MARYS BUILDINGS
MUNICIPAL OFFICE ROAD	MUNICIPAL OFFICE ROAD
DINDIGUL-624 001	DINDIGUL-624 001

லைட்ரூஃப்

எக்ஸ்போ – டெல்

குறைந்த செலவில் சிறந்த கூரை அமைக்க

உயர்தர ஏற்றுமதி ரக அஸ்ஃபால்டிக் கூரைச் சாதனமான எக்ஸ்போ-டெல் அயல்நாட்டு தொழில்நுட்ப கூட்டுறவுடன் தயாரிக்கப்படுகிறது

பொருத்துவது எளிது, செலவு குறைவு, நீடித்த உழைப்பு எக்ஸ்போ-டெல்-8 வளைவுகளோடு 4 அடி (122cms) மற்றும் 6 அடி (183cms) நீளத்தில் கிடைக்கிறது. எந்தப் பருவக் காலத்திற்கும் ஏற்றது; தீயினால் பாதிக்கப்படாதது. விரியாது, தொய்ந்து போகாது, உடையாது. கல்ஃப்ரெட் நிறத்தில் கிடைக்கும்.

இதர வகைகள் : ஜனதா, பாப்புலர், டீலக்ஸ்

மற்ற விவரங்களுக்கு தொடர்பு கொள்க :-

லைட் ரூஃபிங்ஸ் லிமிடெட்

அஸ்ஃபால்டிக் கூரைத்தகடுகள் தயாரிப்பில் முன்னோடி நிறுவனம்

பதிவு அலுவலகம் : 226, லாயட்ஸ் சாலை, சென்னை-600 086

கிளை அலுவலகங்கள் :

4, டி.டி.ஏ. ஷாப்பிங் சென்டர், புது டெல்லி 110 021 ● ப்ளாக் ஏ/2 த்வாரகாபுரி, எல்.பி. சாஸ்திரி மார்க், குர்லா, பம்பாய் 400 070. ● எண். 15, 8வது மாடி, 23-ஏ, நேதாஜி சுபாஷ் சாலை, கல்கத்தா 700 001.



Imageads M-LR-1607

உங்கள் வீடு மாதிரியே வெளியிலும் ஒரு வீடு

ஏர் இந்தியா

அன்பு கனிந்த நம் விருந்தோம்பலின் இதத்தை நீங்கள் அனுபவிப்பீர்கள். 'நமஸ்தே' என்று சொல்வதைவிட, கனிவான வரவேற்பு. உங்கள் மொழி பேசும், எழிலார்ந்த விமான உபசரணைப் பெண்கள், உங்கள் குழந்தைகளைப் பரிவுடன் கவனித்துக்கொள்வார்கள். நீங்கள் விரும்பும் உணவு-தாவர உணவோ, மாமிச உணவோ கிடைக்கும்! இவை மட்டுமா? உங்கள் உறவினர்களுடன் இருப்பது போன்ற சுகத்தையும் நிறைவையும் கூட உணர்வீர்கள்.

ஏர் இந்தியாவில் பறந்து செல்லுங்கள். வீட்டைவிட்டு வெளிச் செல்வதாகவே உணரமாட்டீர்கள்.



ஏர்-இந்தியா

பாரத விருந்தோம்பலின் பண்பு ஐந்து கண்டங்களிலும் பரிமளிக்கிறது.

HTB-AIR-9766

மங்கள தீபாவளி மணங்கமழ் காப்பி

சிறந்த முறையில் காப்பி தயாரிப்பது எப்படி.

எப்பொழுதும் புதியதாக வறுத்து அவ்வப் பொழுது அரைத்த காப்பிப் பொடியை உபயோகியுங்கள். காப்பி ஃபில்டரை நன்கு கழுவவும். காபபியின் வண்டல் காப்பி ஃபில்டரின் துளைகளை அடைக்கா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

1 ஜக்கினுள் ஃபில்டரை இடவும். காப்பிப் பொடியை ஃபில்டருள் சமமாகப் பரப்பவும். ஒரு கோப்பை காப்பிக்கு ஒரு ஸ்பூன் தூள் போதுமானது.



2 பிளஞ்சரை ஃபில்டரின் உள் நுழைதது லேசாக அமுக்கவும். கொதிக்கும் நீரை ஊற்றி ஃபில்டரை மூடவும்



3 ஐந்து நிமிடங்களில் டிகாக்ஷன் இறங்கி விடும். தேவையான அளவு பால், சர்க்கரை சேர்த்து அருந்தவும்.



நாள் முழுவதும் புத்துணர்ச்சியளிக்கத் தேவையான புரதப் பொருள்களும், வைட்டமின்களும மூன்று கோப்பை காப்பியில் பெறலாம்.

காபபி அருந்துபவர்களுக்கு தேவைப் படும் காப்பிக் கொட்டை, காபபித்தூள் மற்றும் காப்பி ஃபில்டர்கள் காப்பி போர்டின் இந்தியா முழுவதும் உள்ள இந்தியா காப்பி ஹவுஸ் மற்றும் டிப்போக்களிலும் கிடைக்கும்.

COFFEE BOARD

காப்பி போர்டு
பெங்களூர்

திருநாளைத் துவக்க—காப்பி.

CAS-CB 80143

பாரதி போற்றிய புதுமைப்பெண் யுகத்திற்கு
நீல்கன் ஏஜன்ஸீஸின் நவீன காணிக்கை :

ஜானீ®

தானியங்கி
வெட்கிரைண்டர்



இடுப்பொடிக்கும் வீட்டு வேலைகளிலிருந்து புதுமைப் பெண்ணினத்துக்கு சுதந்திரம் அளிப்பதில் துணை நிற்பது - ஜானி வெட் கிரைண்டர். மிக நவீன பொறியியல் டிசைன். நீண்ட நேரம் அரைக்கும் சக்திமிக்க மோட்டார். ஊரவைத்த தானியங்களை நிமிடங்களிலே அரைத்து மாவாக்குகிறது. கைபடத் தேவையில்லை. சுத்தமான மாவுவெளியில் தானாக விழும் அமைப்பு.

ஐந்தாவது-ஐடியல் ஹோம் கண்காட்சியில் நவீனத் தயாரிப்புகளுக்கான வெள்ளிப் பதக்கம் பரிசாகப் பெற்றது ஜானி ஆட்டோமேடிக் வெட் கிரைண்டர்

ஆட்டோமேட்டிக்
சாதாரண மின்இயங்கிக்
கல்லுரல்களை ''கற்காலக்
கருவிகளாக''ப் பின்னடையச்
செய்யும் பொறியியல்
படைப்பு

ஒரு வருட
உத்திரவாதம்

ஜானீ®

இல்லத்தரசிகளின்
சுதந்திரப்புரட்சிக்கு
உங்கள் மனையாளின்
சிறப்பான பணியாள்
ஜானிவெட்
கிரைண்டர்

ஜானி நிகரற்ற ஓர்
உன்னத படைப்பு
ஜானி மற்ற, நவீன
வெட் கிரைண்டர்
களுக்கு ஒரு
முன்னோடிப் படைப்பு

Design Patented

Available
in two sizes
1 litre & 2 litres

Manufactured by

Neilgan Agencies,
No. 3, Third Lane,
North Boag Road,
T. Nagar,
Madras-600 017
Ph : 440715

UIPC:MA:306

Stockists all over South India

With Best Compliments From

POORNA CHOKKAN ENGINEERING WORKS

9, Chinna Andangkoil Road

KARUR - 639 001

Structural Engineers
and Fabricators

சத்யா பப்ளிசிட்டீஸ், கரூர்

With the best compliments from

Nagalakshmi Flour Mills Private Limited

Manufacturers of Quality
WHEAT PRODUCTS UNDER THEIR FAMOUS

"KOVIL BRAND"	"STEAMER BRAND"
Maida & Sooji	Atta & Bran
REGISTERED OFFICE	PRINCIPAL OFFICE
Mill & Sales Department	
No. I, Trichy Road	377, Suryanarayana Street
DINDIGUL - 624 009	MADRAS - 600 081
Phone: 1170	Phone: 552672

Gram: FLOUR MILL

எமது தீபாவளி வாழ்த்துக்கள்

எல்லோரும் கண்டு களிப்பது திருச்சி மலைக்கோட்டையை

எல்லோரும் வாங்கி மகிழ்வது
திருச்சி தைலா முதலியார் துணி வகைகள்

* நல்ல தரமான துணி வகைகள்!
* நம்பிக்கையான நிறுவனம்!

நாகரீக பாங்கிற்கும், அழகு நயத்திற்கும், ஏற்ற டிசைன்களில்
○ சிபான் ○ பாலியஸ்டர் சேலைகள் ○ சூட்டிங் ○ சர்ட்டிங்
மற்றும் பாலியஸ்டர் டிரஸ் மெட்டீரியல்ஸ் விற்பனையாளர்

தைலா முதலியார்

மலைவாசல், திருச்சி-620 002
போன்: 26621

—VRG


தரத்தை, நாணயத்தை நாடுவோரின்
நம்பிக்கை நிலையம் - புகழ்மிக்க பாபாலால்
அசல் தங்க நகைகள், அழகழகான வெள்ளி
சாமான்கள், பரிசுப் பொருள்கள்
நவரத்தினங்களுக்கு நிகரில்லாப் பெயர் ஈட்டியது பாபாலால் என்பது
எல்லாரும் ஏற்கும் உண்மை. அதேபோல் அசல் தங்க ஆபரணங்கள்,
நிகரில்லா வெள்ளி வகைகள், நாடு போற்றும் கலைச் சிறப்பு மிக்க
பரிசுப் பொருள்களுக்கும் நம்பிக்கை நிலையம்தான் பாபாலால்.
கலைவினைச் சிறப்பே உயிர் மூச்சாய், நாணயமே வணிகத்தின் சித்தாந்தமாக
நம்பி பணி புரிவது பாபாலால் என்பதே இதன் மூலக்காரணம்.
கடந்த 70 ஆண்டுகளாக நிலைத்து, வளரும் வாடிக்கையாளர் பட்டியலே
பாபாலால் முழு நம்பிக்கைக்கும் பாத்திரமாக வல்லது என்பது சான்று.
பாபாலால் & கோ
ஜுவல்லர்ஸ்
ராட்டன் பஜார்,
சென்னை-600 003
போன்: 32396 & 39573
தந்தி: 'NECKLACE'

அனைவருக்கும் எங்கள் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

தீபாவளித் திருநாளில் கீதா உங்களை மகிழ்விக்கிறது

மதி மயங்கும் மாலையிலே மயங்க வைக்கும்
வேளையிலே மனம் கவரும் சேலையிலே
வலம் வருமே உள்ளமது – அது நினைத்திடுமே
கீதாவை, இனிய நினைவுகளுடன்
உறவாடும் கீதாவின் புதிய ரக
பட்டு ஜவுளிகள் விசேஷ காலங்கள்
மங்கல நாட்கள் கல்யாண விசேஷங்களில்
உடுத்தி மகிழ கீதாவிற்கு
விஜயம் செய்யுங்கள்.

கீதா சில்க் & சாரி பஜார்

31, N.S.B. ரோடு,
திருச்சி 620 002.



கலைமகள்

தீபாவளி மலர் 1982

மூவண்ணச் சித்திரங்கள்

* இயற்கை எழிலும் பருவக் காட்சிகளும்
* அழகியின் துறவு
* திருத் துழாய் மங்கை
* துங்கைக் கரைத் துறவி

வண்ணப் போட்டோக்கள்

* ஸ்ரீகாஞ்சி காமகோடி ஆசாரிய சுவாமிகள்
* ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

முகப்புப் படம்

* அங்கயற்கண்ணியும் ஆலவாய் அழகனும்

வண்ணப் படம்:

* ஸ்ரீராகவேந்திர சுவாமிகள்- வாழ்க்கைச் சித்திரங்கள்
* கோள்களின் சிறப்புத் தலங்கள்

போட்டோக் கோவை

* கதை முதல் காட்சி வரை

அட்டைப் படம்

* மல்லிகை மாலையால் ராமனைச் சீதை பிணைத்தல் (பெரியாழ்வார் பாசுரம்)

22 கதைகள்
\+ 14 கட்டுரைகள்
\+ சிறுவர் பகுதி
\+ 9 கவிதைகள்
\+ நாடகங்கள்
\+ மற்றும் பல

ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள்
வண்ணப் போட்டோ:
கண்ணன், எம். கே. ராமமூர்த்தி

சுந்தரம் பைனான்ஸ் இயந்திரச் சாதனங்களை குத்தகை முறையில் அளிக்க முன் வந்துள்ளது



தொழில்களுக்குப் பண உதவி அளிப்பதில் புதியதோர் திட்டம்

இயந்திரச் சாதனங்களைக் குத்தகை முறையில் அளிக்கும் இப்புதியமுறை மேல் நாடுகளில் பல ஆண்டுகளாகப் பிரபல மடைந்துள்ளது. சுந்தரம் பைனான்ஸின் மூலம் இம்முறை தென்னகத் தொழிலகங் களின் கவனத்தைக் கவர்ந்துள்ளது.

இப்பொழுது, பெரிய மற்றும் சிறிய தொழிலகங்கள் தங்களுடைய முதலீட்டை விலை உயர்ந்த இயந்திரங்கள் மற்றும் சாதனங்களில் முடக்கி விடாமல் உற்பத்திக்கு உதவும் ஏனையச் செலவினங் களில் ஈடுபடுத்திக் கொள்ளலாம். இயந்திரச் சாதனங்களை சுந்தரம் பைனான்ஸின் குத்தகை முறையில் பெறுவதன் மூலம் இது சாத்தியமாகும்.

குத்தகை முறை என்றால் என்ன?

குத்தகை முறையில் உங்களுக்குத் தேவையான இயந்திரச் சாதனங்களை நீங்களே வாங்காமல் சுந்தரம் பைனான்ஸை உங்களுக்காக வாங்கச் சொல்லலாம்.

இயந்திரச் சாதனத்தின் விலையில் முன் பணம் கொடுக்கவேண்டிய அவசியமில்லை. குறிப்பிட்டத் தவணைகளில் வாடகைப் பணத்தைச் செலுத்தி வந்தால் போதும். குத்தகை முறையென்பது இயந்திரச் சாதனத்திற்கான முழு விலையையும் பண உதவியாகப் பெற்று, வாடகைகளின் மூலம் இவ்வுதவிப் பணத்தை முழுமை யாகச் சில வருடங்களில் செலுத்து வதற்கு ஒப்பாகும்.

குத்தகை முறையின் நன்மைகள்:

குத்தகை முறையின் முக்கிய நன்மை என்னவென்றால், நீங்கள் முதலீடு எதுவும் இல்லாமல் இயந்திரச் சாதனத்தைப் பெறுகிறீர்கள். அதன் மூலம் சம்பாதித்துக் கொண்டே பணத்தைச் செலுத்துகிறீர்கள்.

குத்தகை ஒப்பந்தத்தை நீண்ட காலத் திற்கோ, அல்லது குறைந்த காலத் திற்கோ செய்து கொள்ளலாம். மேலும், குத்தகையின் விதி முறைகளை வாடிக்கை யாளர்களின் தேவைகளுக்கேற்ப மாற்றிக் கொள்ள முடியும்.

குத்தகையை ரத்து செய்யமுடியாது. ஆதலால் இயந்திரச் சாதனம் எப்பொழு தும் உங்கள் பாதுகாப்பிலேயே இருக்கும்.

குத்தகை முறையினால் வரிசெலுத்து வதில் ஆதாயமும் உண்டு. மொத்தக் குத்தகைப் பணத்தையும் செலவினங் களில் சேர்த்து விடலாம்.

ஆதலால், நீங்கள் முதலீடு செய்யாமல், உற்பத்தியைப் பெருக்கும் இயந்திரச் சாதனங்களை வாங்க வேண்டுமென்றால் உங்களுக்கு உடனே தேவையானது குத்தகை முறைப் பண உதவி. அதற்குச் சுந்தரம் பைனான்ஸைவிடச் சிறந்ததோர் வழியில்லை.

பண உதவி அளிப்பதில் நம்பகமானதோர் நிறுவனம்

சுந்தரம் பைனான்ஸ், சாலைப் போக்கு வரத்துத் தொழிலின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு, இந்தியாவின் மிகப் பெரியத் தவணை முறைப் பண உதவி நிறுவனமாகத் திகழ் கிறது. 7,700க்கும் மேற்பட்ட வாடிக்கை யாளர்கள் மற்றும் 40,000க்கும் மேற் பட்ட டெபாசிட்தாரர்களின் நம்பிக்கை யில் வளர்ந்த இந்நிறுவனம், தென்னகத் தொழிலகங்களுக்குப் பணிபுரியும் எண்ணத்தோடு, குத்தகை முறைத் துறையில் மிகவும் நம்பிக்கையோடு நுழைகிறது.

சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட்
180 மவுண்ட் ரோடு, சென்னை 600 006
மத்திய அலுவலகம்:
190, மவுண்ட் ரோட்,
ஹமித் பில்டிங்ஸ் (3-வது மாடி)
சென்னை 600 006.

ஏனைய அலுவலகங்கள் :
பங்களூர் — பெல்லாரி — கள்ளிக் கோட்டை — கண்ணனூர் — கோயம் புத்தூர் — எர்ணாகுளம் — ஹூப்ளி கோட்டயம் — கர்னூல் — மதுரை மங்களூர் — மைசூர் — நெல்லூர் பாண்டிச்சேரி — கொல்லம் — ராஜ மந்திரி — சேலம் — செகந்திராபாத் திருநெல்வேலி — திருச்சூர் — திருச்சி திருவனந்தபுரம் — விஜயவாடா விசாகப்பட்டினம்.

ஸ்ரீ சுந்தரம் பைனான்ஸ்- தவணைமுறைப் பண உதவி மற்றும் குத்தகை முறைக்கு நம்பகமானவர்கள்.

ஒளி விழா

ஆண்டுதோறும் தீபாவளி வந்து போகிறது. ஆனாலும் நாம் சலிப்படைவதில்லை. தீபாவளி வருவதற்குமுன்பே அதை எதிர்பார்த்து நிற்கிறோம், எப்படி எப்படி யெல்லாம் கொண்டாடலாம் என்று யோசிக்கிறோம். புது மணமக்களுடைய உவகையைச் சொல்லாலே அளக்க முடியாது. அவர்களுக்குத் தீபாவளி என்பது சொர்க்கலோக வாழ்வு. குழந்தைகளுக்கோ ஒரே கோலாகலம்.

தீபாவளி வந்து போனபிறகு வெடிகளும் வாணங்களும் விருந்தும் போய் விடுகின்றன. ஆனால் ஒன்றுமட்டும் அடுத்த ஆண்டு வரும்வரை களிப்பை ஊட்டுகிறது. அதுதான் தீபாவளி மலர்.

தீபாவளி மலர், தீபாவளிக்கு ஒரு புதிய சோபையை உண்டாக்குகிறது. யார் அதை முதலில் பார்ப்பது என்ற போட்டி, படங்களைப் பார்த்து ரசிப்பதில் ஓர் ஆனந்தம்.

இந்தத் தீபாவளி மலரில் பார்த்து மகிழ்வதற்கும் படித்துச் சுவைப்பதற்கும் உரிய பகுதிகள் பல இருக்கின்றன. எடுத்தவுடன் மதுரை அங்கயற்கண்ணியுடன் அமர்ந்திருக்கும் ஆலவாய் அழகனைத் தரிசிக்கிறோம்; காஞ்சி மகாமுனிவரையும் அவர் வழித்தோன்றலையும் வழிபடுகிறோம். ஆறு ருதுக்களின் படங்களும் வருணனைகளும் இருக்கின்றன. ஆம்ரபாலி என்ற ஆடலழகி இறுதியில் புத்தரிடம் சரணடையும் காட்சி ஒருபுறம் விளங்குறது: தேவீ பாகவதத்தில் வரும் சங்கசூடனின் வரலாற்றைப் படமாகப் பார்க்கிறோம். மதத்துவ மத ஆசாரியரும், இன்றும் அதிஷ்டான நிலையிலிருந்து அருள் பாலிப்பவருமான ஸ்ரீராகவேந்திர சுவாமிகளின் அற்புத தரிசனத்தையும் காண்கிறோம்.

நவக்கிரகங்கள் அநேகமாக எல்லாச் சிவாலயங்களிலும் உள்ளன. ஆயினும் அவற்றிற்குத் தனித்தனியே சில தலங்கள் சிறப்பாக அமைந்துள்ளன. அவற்றைப் பற்றிய விவரங்களைப் படங்களுடன் ஓரிடத்தில் காணலாம்.

இவ்வளவும் கண்ணுக்கும் கருத்துக்கும் மகிழ்ச்சியூட்டும் பகுதிகள்.

உள்ளே உள்ள கதை கட்டுரைகளைப் பற்றிச் சொல்ல வேண்டாமா? சுவை ததும்பும் கதைகளை நாள் முழுவதும் படித்தாலும் படித்து முடிக்க முடியாது. படித்துப் படித்துச் சுவைத்துச் சுவைத்து இன்புறலாம். தமிழ்நாட்டில் புகழ்பெற்ற சிறுகதை எழுத்தாளர்கள் தங்கள் எழுத்தோவியங்களால் இந்த மலருக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

கதை, கட்டுரை, வண்ணப்படங்கள், மற்றப் படங்கள், ஹாஸ்ய வெடிகள் எல்லாம் ஒரே இன்பக் கொள்ளை.

இனி உங்களுக்கு குறுக்கே நிற்க விரும்பவில்லை. நீங்களே திறந்து பார்த்தும் படித்தும் மகிழ்ச்சியில் திளையுங்கள்.

எல்லாருக்கும் எங்கள் தீபாவளி வாழ்த்துக்கள்.

—**ஆசிரியர்**

வாடிக்கையாளர்களுக்கு எங்கள் உளம் கனிந்த

தீபாவளி வாழ்த்துக்கள்

திரு A. முருகேச முதலியார்

ஸ்தாபகர், நியூடன் அண்டு கம்பெனி
பிளாக்மேக்கர்ஸ் &
நியூடன் டைப் பவுண்டரி

ஆப்டோன், லைன்,
மூவர்ணப் பிளாக்குகளுக்குத்
தென்னிந்தியாவில்
புகழ்பெற்ற ஸ்தாபனம்

குறித்த நேரத்தில் திருப்தியான முறையில்
பிளாக்குகள் தயாரித்துத் தரப்படுகின்றன

கலைமகள் மலரில் வெளியாகியுள்ள
லைன் – இரண்டு கலர் லைன்
பிளாக்குகள் எல்லாம்
நாங்கள் செய்து அளித்தவை.

விவரங்களுக்கு:

நியூடன் அண்டு கம்பெனி

56, வாலாஜா ரோடு, மதராஸ் - 600002

டெலிபோன்: ஆபீஸ்: 842832
வீடு: 843879

ஸ்தாபகம்: *1932*

நீடித்த நறுமணத்திற்கு என்றும், எங்கும்
சிறந்து விளங்குவது

செல்வம் ராணி
ஊதுபத்திகள்

மனோரஞ்சிதம் ஊதுபத்திகள்

உரிமையாளர்:

S. B. குணசேகர பாண்டியன்

செல்வம் பரிமளசாலை,
கீழவாசல், தஞ்சாவூர்-613001

அங்கயற்கண்ணியும் ஆலவாய் அண்ணலும்

வண்ணப் படம்:
கே. ராமசந்திரன்

அவனும் அவளும்

'ஜோதி'

அங்கயற் கண்ணி அகம்மகிழ, அவள்
அருகில் அமர்ந்துள்ள சுந்தரேசன்,
வெங்கொடு மைத்துன்பம் நீங்குதற் காக
விளையாடல் அறுபத்து நான்கு செய்தான்.
மீன்விழி யில் அருள் கொப்பு ளிக்கநனி
விளங்கும் பெருமாட்டி, உயிர்களெல்லாம்
தேனம ரும்பார்வை தன்னிலே இன்பத்தைச்
சேர்ந்திடச் செய்யும் கருணையினள்.

அழகுக் கொருவரும் ஒவ்வாத மங்கையை
அழகிய சுந்தரன் கைப்பிடித்தான்;
அழகுக் குதாரணம் ஆக இருவரும்
அமர்ந்திருக் கும்அழ கேஅழகு!
கண் விழிப் பார்வையில் கருணை பொழிந்திடக்
கதிர்த்திரு மேனியில் அழகலைகள்
புண்படும் நெஞ்சினை இன்பச் சுகப் பொங்கல்
பொங்கிடச் செய்கின்ற காட்சியன்றோ?

சோலைப் பசுமைகொள் சொக்கியவள், அவன்
சொக்கத்தங் கத்தின் சோபையினன்;
நீலமும் செம்மையும் ஒன்றி அழகு
நிலாவொளி வீச விளங்கிடுமே!
காதற் சிறப்புக்கோர் உதாரண மாம் ஒளிர்
கட்டழ குக்கோர் எல்லையராம்;
பாதம் வணங்கிய பேர்கட் கருள்தரும்
பாற்கடல் இந்தச் சதிபதிகள்!

நான்கு கரம் கொண்டவளே!

சௌந்தரா கைலாசம்

மு முதும் கதிர்மணிகள் பட்டாடைவிரித்து
வரவேற்றுப் பல்லுயிரை வாழ்வித்து நிற்கும்
உயர்வுடைய தென்திசையின் தஞ்சைவள நாட்டில்
ஒப்பரிய புகழ்பெருகும் எழிற்பட்டுக் கோட்டை
நயமுடனே நாடிவந்து கோயிலது கொண்டு
நானிலத்தைக் காத்தருளும் நாடியம்மன் ஆளுய்!
அயர்வுடைய நெஞ்சமெலாம் அருளமுத வெள்ளம்
அளவின்றி நீபெய்து பேரின்பம் தந்தாய்!

காணமற் போனஒரு குழந்தையினை இந்தக்
காசினியில் எங்கெங்கோ தேடியபின் முடிவில்
கேணியினுள் தேடுங்கால் உனதுசிலை தெரியக்
கிடைத்தபெரும் பேருக முன்னோர்கள் எண்ணி
நீணிலத்தைக் காக்கின்ற தெய்வம்நீ என்று
நிறைவான பக்தியுடன் பிரதிஷ்டை செய்தார்!
காணுமிடம் அத்தனையும் நின்கருணை வெள்ளம்
கங்கையினும் பெரிதாகப் பொங்கிவரச் செய்தாய்!

கலைபலவும் வளர்த்திருந்த சரபோஜி மன்னர்
கருதிமிக, நானூறு வருடங்கள் முன்னம்
சிலைவடிவில் வந்தஉனைச் சிந்தையிலே வைத்துச்
சீர்நிறையும் திருக்கோயில் செப்பமுறக் கண்டார்!
அலைபெருகும் உள்ளமதில் அமைதிவர வேண்டி
அன்பரெலாம் உன்பாதம் தலையின்மிசை வைத்தோம்!
தொலையாத தீவினைகள் ஒருநொடியில் எங்கோ
தொலைந்தேகும் படிஉன்றன் விழிப்பார்வை தந்தாய்!

நான்குகரம் கொண்டவளே நாடியம்மன் தாயே,
நாடிவரு வோர்களுக்கு நலம்தருவாய் நீயே,
திங்கதனைக் கொய்துவிடும் சூலமுடன் கத்தி
திகழ்ந்தொளிரும் உன்னுடைய வலதுகரங் களிலே!
பாங்குடைய கேடயமும் கபாலமதும் இடது
பக்கமிரு கரங்களிலும் விளங்கும்அழ காக!
ஓங்குமெழிற் பீடமதில் உட்கார்ந்த கோலம்!
ஒருகால்கீழ் தொங்கமறு கால்மடங்கிக் காணும்!

வனப்பெல்லாம் ஒருங்காகிக் கவினோங்கி வளரும்
வனத்தினிலே வீற்றிருக்கும் வனதுர்கா தேவி!
கனக்கின்ற கவலையினால் அமிழ்ந்தழியும் நெஞ்சைக்
கரைசேர்த்து வழிகாட்டி மீட்கின்ற காளீ!
உனக்கென்று வரகரிசி மாலையினை நாங்கள்
ஊனுருக உளமுருகச் சூட்டிமகிழ் கின்றோம்!
நினைப்பெல்லாம் நீயாகி ''ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் தும்
துர்கா''வே எம்நாவில் நிலையாகும் தாயே!

உனைஎண்ணி 'ஹ்ரீம்'' என்ற மந்திரத்தை ஓதி
உள்ளுருகி நிற்பார்க்குக் குறையேதும் உண்டோ?
பனைஉயரம் வளர்ந்துவிட்ட பாவத்தின் குவியல்
பட்டென்று கணமொன்றில் மறைந்தோடிப் போகும்;
வினையாவும் நலமாகித் துன்பங்கள் மாறி
மேன்மேலும் இன்பங்கள் மலையாகக் குவியும்
நினைவொன்றி ஓம்என்றும் ஸ்ரீம் என்றும் சொல்லி
நிதமுன்றன் தாள்போற்றி நிற்கின்றோம் தாயே!

வேதனைகள் பலவாக விரிகின்ற உலகில்
விடிவின்றி நெடிதாக வளர்கின்ற துயரின்
சோதனைகள் எவைஎனினும் தாங்குகின்ற நெஞ்சத்
துணிவதனைத் தருகின்ற துர்க்கைஉனை வணங்கும்
போதனைகள் செய்திந்தப் பூமிதனில் வாழும்
பொன்னான நல்வாய்ப்பை உன்னருளால் எய்திச்
சாதனைகள் பலவாகப் புரிகின்ற திறனைத்
தந்தருள வேண்டுகிறோம், நாடியம்மன் தாயே!

கனகாங்கி

கிருபானந்தவாரியார்



உதயபுரி என்ற சிற்றூர். அது நூறு வீடுகளுடன் கூடியது. அதில் வாழ்கின்ற மக்கள் சூதுவாது இல்லாதவர்கள். ஒரு சிறிய பள்ளிக்கூடமும் இருந்தது. பக்கத்தில் ஒரு குன்று நின்று அவ்வூருக்கு அரண் செய்தது. அங்குள்ள பாறை மீது பெண்கள் தானியங்களை உலர்த்தி அருகில் உள்ள வேப்பமரத்தின் கீழ் உட்கார்ந்து ஊர்க்கதைகளை அளப்பார்கள். பக்கத்தில் சிறு பிள்ளைகள் தாவித் தாவி விளையாடிக் கொண்டிருப்பார்கள். அருகில் புங்க மரத்தில் கயிறு கட்டி இளஞ் சிறுமியர் ஊஞ்சல் ஆடுவார்கள். அன்றாடம் மக்கள் உழைத்து உண்பார்கள்.

அந்த ஊரில் கங்கணன் என்பவன் கல்வியறிவு படைத்தவன். அவனுடைய மனைவியும் அறிவும் பண்பும் இயற்கையாக உடையவள். அவள் பேர் கனகாங்கி. பொன்னிறம் பெற்றவள்.

ஒரு நாள் இரவுச் சாப்பாடு முடிந்த பின் வீட்டின் வாசலில் நிலாவொளியில் பாய் போட்டு அமர்ந்து கனகாங்கியும் கங்கணனும் உரையாடத் தொடங்கினார்கள். அவர்களுடைய பேச்சு, பல கோணங்களைப் பற்றியும் அரசியலைப் பற்றியும் அமைந்திருந்தது. இறுதியில் கணவன் சொல்லை மனைவி கேட்பதா? மனைவியின் சொல்லைக் கணவன் கேட்பதா? இது பற்றிக் காரசாரமாகப் பேசிக் கொண்டார்கள்.

"கனகா, எப்போதும் கணவன் சொல்லைத்தான் மனைவி கேட்க வேண்டும். மனைவியின் சொல்லைக் கணவன் கேட்கக்கூடாது.

'தன்னைப் புகழ்வானும்
சாட்சி சொல்லி நிற்பானும்
பொன்னைமிகத் தேடிப்
புதைப்பானும்—ஒன்னலர்தம்
நன்புத்தி கேட்பானும்
நாணமிலதானும் அப்
பெண்புத்தி கேட்பானும் பேய்'

என்று நீதிநூல் கூறுகிறது."

"நாதா, நீங்கள் கூறுவது முற்றும் பொருந்தாது. அறிவும் நுட்பமும் படைத்த மனைவியின் சொல்லைக் கணவன் கேட்க வேண்டும். தீமதி படைத்த பெண்ணின் சொல்லைத்தான் கேட்கக்கூடாது. உலகத்தில் நன்மதி படைத்த பெண்களே அதிகம். உத்தமமான பத்தினியின் வார்த்தையை அவசியம் கணவன் அனுசரித்து நடக்க வேண்டும். அவ்வாறு நடந்தால் அவனுக்கு உய்வு கிடைக்கும். மங்கையர்க்கரசியாரின் வார்த்தையைக் கேட்டதால்தான் அவருடைய கணவனாகிய கூன்பாண்டியன் உய்வு பெற்றான். தாரையின் வார்த்தையைத் தட்டியதால் வாலி மாண்டான். ஆதலால் மனைவி கூறும் அறவுரையை ஆடவர்கள் கேட்க வேண்டும்."

"பெண்ணே, தாரையைப் போல், மங்கையர்க்கரசியைப் போல் உள்ள மதிமங்கையர் மிகச் சிலர்தாம். பெரும்பாலும் பெண்கள் கணவனுக்குத் துர்ப்போதனைதான் செய்கின்றார்கள். 'மான் பிடித்துக் கொடு' என்று சீதை கேட்டாள். இராமர் சீதையைப் பார்த்து, 'பெண்ணே, உனக்கு எசமானன் நான்; அந்த மான் எதற்கு? நெய்கின்றவனுக்குக் குரங்குக் குட்டி எதற்கு? மான் நமக்குத் தேவையில்லை' என்று சொல்லியிருந்தால் வேதனை விளைந்திராது. மனைவி சொல்லைக் கேட்டு வில்லைத் தூக்கிப் புறப்பட்டு மான்பின் சென்றார். வந்தது ஆபத்து. ஒரு முறை ராமர் மனைவியின் சொல்லைக் கேட்டதற்கே இத்தனை துயரம் விளைந்ததே! பல முறை கேட்டவர் படும் பாட்டைச் சொல்லவும் வேண்டுமோ?

'பெண்ஏவல் செய்தொழுகும் ஆண்மையின், நாணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து'

என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். ஆனபடியால் பெண்புத்தி பின்புத்தி என்ற பழமொழியும் ஏற்பட்டுள்ளது."

"நாதா, தாங்கள் கூறுவது ஒருபோதும் பொருந்தாது. பெண்ணுக்கு ஆறு குணங்கள் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கின்றது. (1) கணவனிடம் தாய் போன்ற தயை, (2) அடியவள் போன்ற பணிவிடை, (3) இலக்குமி போன்ற அழகு, (4) நிலமகள் போன்ற பொறுமை, (5) விலைமகள் போல இன்பம் நல்குதல், (6) மந்திரியைப் போல் மதிநலம் உறுதல்.

'அன்னை தயையும் அடியாள்
பணியுமலர்ப்
பொன்னின் அழகும் புவிப்பொறை
யும்—வன்னமுலை
வேசி துயிலும் விறல்மந் திரிமதியும்
பேசில் இவையுடையாள் பெண்'

"இந்தப் பாடலால் மந்திரியைப் போல் மணவாளனுக்கு மதியுரை கூறும் பொறுப்பும் கடமையும் மனைவிக்கு உண்டு.

"கணவன் அரசனைப் போன்றவன். மனைவி மந்திரி போன்றவள். அரசன் சொல்லை மந்திரி கேட்கக்கூடாது. மந்திரியின் சொல்லைத்தான் மன்னன் கேட்கவேண்டும்.

'உமைக்கு நாதற்கும் ஓங்குபுள்
ஊர்திக்கும்
இமைப்பில் நாட்டமோர் எட்
டுடை யானுக்கும்
அமைத்த தோள்வலி தாங்கினர்
ஆயினும்
அமைச்சர் சொல்வழி ஆற்றுதல்
ஆற்றலே'

என்கிறார் வசிட்டர். இராமனுக்கு அரசியல் கூறும் பகுதியில் இவ்வாறு உபதேசித்தார். ஆனபடியால் மனைவி மந்திரி; கணவன் அரசன். எனவே, மந்திரியாகிய மனைவியின் சொல்லை அரசனாகிய கணவன் கேட்க வேண்டும். இந்த நியாயப்படி மனைவியின் மதிமிகு சொல்லை மணவாளன் கேட்பது நியாயந்தான்.''

இவ்வாறு கனகாங்கியும் கங்கணனும் நெடுநேரம் உரையாடிக்கொண்டார்கள். அவர்கள் சொற்களில் நல்ல கருத்துக்கள் மின்னல் போல் பளிச்சிட்டன.

ஒரு நாள் உயர்ந்த உடைநடையுடன் தினகரன் என்ற ஒருவன் அந்த ஊருக்கு வந்தான். கங்கணனைத் தனியே அழைத்து, மெல்ல மெல்லப் பேசி ஒரு நூறு ரூபாய் நோட்டைக் கொடுத்து 25 ரூபாய் வாங்கிக்கொண்டான்.

கங்கணன் ஆசைப்பட்டான். 25 தந்தால் 100 வருவது என்பதனை எண்ணிப் பெருமகிழ்ச்சியுற்றான்.

இப்படித் தினகரன் அடிக்கடி அந்த ஊருக்கு வருவான். 250 பெற்றுக்கொண்டு ஆயிரம் தருவான். தினகரனுக்குப் பெரிய உற்சாகத்துடன் விருந்து செய்வான் கங்கணன்.

இந்தச் செய்தியைக் கனகாங்கி உணர்ந்தாள். கணவனைத் தனிமையில் சந்தித்து, ''என் உயிர்த் துணைவரே, தங்களுக்கு முன்பின் தெரியாத தினகரன் என்பவனுடன் தாங்கள் தொடர்பு கொள்ளுவது நன்றன்று. அன்றியும் விஷயத்தில் நேர்மைக்கு மாறாகவும் நடக்கக்கூடாது. இது நம் குடும்பநலத்தைக் கெடுக்கும்; துன்பத்தைக் கொடுக்கும்; பக்தி நெறியைத் தடுக்கும்'' என்றாள்,

கங்கணன் மனைவியைப் பார்த்து, ''ஸ்! சும்மாயிரு. நமக்கு அதிர்ஷ்டம் தேடிக்கொண்டு வருகிறது. வளர்கிற பழ மரத்தை வெட்டலாமா? தினகரனால் நமக்கு வாழ்வு பெருகும்'' என்றான்.

''அன்புக்குரிய ஆர்வலரே, நீர் சொல்வதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். திருவள்ளுவர் ஒவ்வோர் அறத்துக்கும் ஒவ்வோர் அதிகாரம் கூறினார். புகழுக்கு ஓர் அதிகாரம்; மெய்யுணர்வுக்கு ஓர் அதிகாரம்; ஊழுக்கு ஓர் அதிகாரம்; அரசுக்கு ஓர் அதிகாரம் என்றெல்லாம் கூறினார். ஆனால், நட்புப் பற்றி மட்டும் ஐந்து அதிகாரங்களில் கூறினார். நட்பு, நட்பாராய்தல், பழமை, தீ நட்பு, கூடா நட்பு என்ற ஐந்து அதிகாரங்கள் நட்பைக் குறித்து எழுந்தவை.

'' 'சேரிடம் அறிந்துசேர்; சான்றோர் இனத்திரு' என்று ஔவையார் கூறுகின்றார்.

'தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்.'

என்கின்றார் திருவள்ளுவர்.



''நீராழம் காணலாம். நெஞ்சாழம் காண முடியாது என்பது பழமொழி.

''ஆனபடியால் இனந் தெரியாத ஒருவரிடம் பழகக்கூடாது. பணத்திலும் நேர்மைக்குப் புறம்பாகப் பழகக்கூடாது'' என்று நயமாக நவின்றாள்.

மனைவியின் மதியுரை அவன் செவியில் ஏறவில்லை. விளக்கெண்ணெயாகக் குமட்டியது.

ஒரு நாள் தினகரன் உதயபுரிக்கு வந்தான். வழக்கம்போல் தடபுடலாக வடை, பாயசம், பாதாம் கீர், கட்டித் தயிர், புத்துருக்கு நெய் முதலியன இட்டு உபசரித்தான் கங்கணன்,

தனியே மலையடிக்கு அழைத்துச் சென்று கங்கணனைப் பார்த்துத் தினகரன் கூறுவான்:

''நண்பரே, உமக்கு ஒரு நல்ல எதிர்காலம் இருக்கிறது. அதிர்ஷ்டம் தேடி வருகிறது. இது நல்ல சந்தர்ப்பம். இது தவறினால் பிறகு இந்த வாய்ப்பு நேராது.

''இன்று வெள்ளிக்கிழமை. அடுத்த வெள்ளிக்கிழமை இரவு 11 மணிக்குக் 'கூட்டுரோட்டுக்கு நான் காரில் வருவேன். தாங்கள் இருபத்தையாயிரம் ரூபாய் கொணர்ந்து காத்துக்கொண்டு இருங்கள். நான் ஒரு தோல் பையில் ஒரு லட்சத்து இருபத்தையாயிரம் கொணர்ந்து தருவேன். தாங்கள் பத்திரமாக



வீட்டில் வைத்துச் சிறிது சிறிதாகச் செலவிடுங்கள். ஒரு லட்ச ரூபாய் உமக்குக் கிடைத்துவிடும். இது பெரிய வாய்ப்பு. பிறகு இது மாதிரி சந்தர்ப்பம் கிடைக்காது'' என்றான். ஒரு லட்சம் ரூபாய் என்றதும் கங்கணன் வாயைப் பிளந்தான்.

மனைவியிடம் போய் ஓர் அவசரத்துக்குத் தேவையென்று கூறி நகைகளை வாங்கிக் கொண்டு போய் அடகு வைத்தான். அதில் ஐந்து ஆயிரம் வந்தது. அவன்பால் இருந்தது ஐந்து ஆயிரம். ஏழெட்டு இடங்களில் பாண்டு எழுதிக் கொடுத்துப் பதினைந்தாயிரம் வாங்கினான். ஆக இருபத்தையாயிரத்தைச் சேகரித்துக் கொண்டான்.

அடுத்த வெள்ளிக்கிழமை வந்தது. அது அவனைக் கெடுக்க வந்த வெள்ளிக்கிழமை என்று அவன் உணரவில்லை.

இரவு 11 மணி. ஊர் அடங்கி விட்டது. தன் நண்பன் ஒருவனை அழைத்துக்கொண்டு புறப்பட்டுக் கூட்டுரோட்டை அடைந்தான். கடவுளை எதிர்பார்த்துத் தவஞ்செய்யும் பக்தசிகாமணியைப் போல் தினகரனை எதிர்பார்த்து நின்றான்.

11 மணிக்குக் கார் வந்தது. தினகரன் காரில் இருந்தபடியே 25 ஆயிரத்தைப் பெற்றுக்கொண்டான். தோல் பெட்டியைக் கங்கணன் கையில் தந்தான். மெல்ல அவன் காதில், ''ஒரு லட்சத்து இருபத்தையாயிரம் இருக்கின்றது. பெருந்தொகை. இங்கே திறந்து பார்க்க வேண்டாம். வீட்டில் போய்ப் பார்த்துக்கொள்'' என்று பரம ரகசியமாய் ஓதினான். கார் பறந்து ஓடியது.

கங்கணன் பெட்டியை எடுத்துக் கொண்டு அளவற்ற மகிழ்ச்சியுடன் வீட்டுக்கு வந்தான். கூட அழைத்துக் கொண்டு போனவனையும் அனுப்பி விட்டுக் கதவைத் தாழிட்டு, விளக்கேற்றிப் பெட்டியைத் திறந்து பார்த்தான். அதில் கிழிந்த காவித் துணிகள் இரண்டும், விபூதிப் பையும், ஆறணா பெறுமதியுள்ள ஓர் உருத்திராட்ச மாலையும் இருந்தன.

''ஐயோ! ஐயோ!'' என்று தலையில் அடித்துக் கொண்டான்.

கனகாங்கி, ''என்ன? என்ன?'' என்று பதறிக் கேட்டாள்

நடந்ததை நவின்றான். ''பெண்மணி, உன் பொன்மொழியைக் கேட்டிருந்தால் இந்த இடர் நேர்ந்திராது. கெட்டேன், கெட்டேன். என் தலையில் இடி விழுந்தது. கடன்காரர்களுக்கு என்ன சொல்லுவேன்?'' என்று வாய்விட்டு அழுதான். ❋

இமயத்தை நோக்கி

கி.வா.ஜகந்நாதன்

அந்த ஆசிரமம் ஊருக்குப் புறம்பே ஆற்றங்கரையை ஒட்டியிருந்தது. பல வகை மரங்கள் அடர்ந்து குளு குளு என்று இருந்தது. சாந்தாசிரமம் என்று அதற்குப் பெயர். அங்கே சாந்தானந்த சுவாமிகளும் அவருடைய சீடன் கல்யாணராமனும் இருந்து வந்தனர்.

நாள்தோறும் கல்யாணராமன் ஊருக்குள் சென்று பல இடங்களில் பிட்சை எடுத்து வந்து தன் குருநாதருக்கு வழங்கிப் பிறகு தானும் உண்பான். ஒரு வேளைதான் அவர்கள் அரிசிச் சோறு உண்பது வழக்கம். இரவு நேரங்களில், தரிசனம் செய்ய வருகிறவர்கள் கொடுத்த பழங்களையும் சிற்றுண்டிகளையும் உண்பார்கள்.

சாந்தானந்தர் சற்றே வயசு முதிர்ந்தவர். பல காலம் தவம் இருந்து முகத்தில் தேசுடையவராக விளங்கினார். அவருடைய திருமேனியும் பளபளவென்று இருக்கும். யார் அவரைக் கண்டாலும் அவரை வணங்கவேண்டும் என்ற எண்ணம் தோன்றும். தம்மை வணங்கினவர்களுக்குப் புன்முறுவலுடன் ஆசி கூறி, ''சாந்தம் நிரம்பட்டும்'' என்று வாழ்த்துவார்.

அவருடைய ஆசிரமம் தூய்மையே வடிவானது. பூஜை அறையில் சில விக்கிரங்களும் படங்களும் இருக்கும். அவற்றிற்குக் கல்யாணராமனே நாள்தோறும் பூஜை செய்வான். சாந்தானந்தர் பெரும்பாலும் நிஷ்டையில் அமர்ந்திருப்பார்.

ஆசிரமத்தின் எதிரே ஆறு சலசலவென்று ஓடிக்கொண்டிருந்தது. மிகப் பெரிய ஆறும் அல்ல; சிறியதும் அல்ல. அநேகமாக வருஷம் முழுவதும் அதில் தண்ணீர் போய்க்கொண்டிருக்கும். கோடைக் காலத்தில் சற்றுக் குறைவாக இருக்கும். அப்போது அங்கங்கே மணல் மேடிட்டு இருக்கும்.

நாள்தோறும் அதிகாலையில் எழுந்து ஆற்றில் நீராடிவிட்டு வருவார் சாந்தானந்தர். அவர் நீராடுவதற்கு முன்பே கல்யாணராமன் நீராடிவிட்டு வந்து பூஜைக்கு வேண்டியவற்றை ஒழுங்குபடுத்திப் பூஜை செய்யத் தொடங்குவான். பூஜை முடிந்தவுடன் சாந்தானந்தர் வந்து கை நிறைய மலர்களை அள்ளித் தெய்வத்துக்குத் தூவி வணங்கி எழுந்து செல்வது வழக்கம்.

அன்றைக்குக் கல்யாணராமன் காலையில் நீராடி விட்டான். பூஜை ஆய்விட்டது. குடிக்கத் தண்ணீர் போதாதென்று தோன்றியது. குடத்தை எடுத்துக் கொண்டு ஆற்றுக்குப் போனான். அப்போதுதான் அது நிகழ்ந்தது.

யாரோ ஓர் இளம்பெண், ஆற்றில் மிதந்து மூழ்கி மூழ்கித் தத்தளித்துக்கொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் கல்யாணராமன் சரேலென்று ஆற்றில் குதித்து அந்தப் பெண்ணைக் கரைக்கு இழுத்து வந்தான்.

அவளுடைய இடை ஆடை நழுவவில்லை. அதைச் சரிசெய்து கொண்டாள். அவளுக்கு இருபது வயசு இருக்கும். மேலாடை நழுவியிருந்தது. அதனால் அவளுடைய இளமைப் பூரிப்பு நன்றாகத் தெரிந்தது. அவளுடைய நிறமும் அழகும் அவனுடைய கண்ணைக் கூசச் செய்தன. இவ்வளவு அழகான பெண்ணை அவன் இதுவரையில் பார்த்ததேயில்லை.

மேலாடையைப் போர்த்துக் கொண்டாள். அவளுடைய முகத்தில் அச்சமும் நாணமும் கலந்து மிளிர்ந்தன. அவள் உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தது. ஈரப் புடைவையும் அச்சமும் சேர்ந்து அந்த நடுக்கத்தை உண்டாக்கின.

''சாமி, தயை செய்து என்னை என் வீட்டில் கொண்டுபோய் விட்டு விடுங்கள்'' என்று கெஞ்சிய குரலில் அவள் கூறினாள்.

சரி என்று சொல்லி, அவள் முன்னே நடந்து செல்லக் கல்யாணராமன் அவளைப் பின்தொடர்ந்தான். அவள் பின் அழகும் அவன் உள்ளத்தைச் சுண்டி இழுத்தது.

அவளுடைய வீடு வந்தது. அவள் வேகமாக அழுதபடியே உள்ளே ஓடினாள். அவளுடைய தாய் ஓடிவந்து அவளைத் தழுவிக்கொண்டு, ''என்ன நடந்தது? ஏன் இப்படி நனைந்த ஆடையுடன் இருக்கிறாய்?'' என்று கேட்டாள்.

''அம்மா, முதலில் இந்தச் சுவாமிகளுக்கு நன்றி சொல். இவரால்தான் நான் பிழைத்தேன். இல்லாவிட்டால் ஆற்றோடு போயிருப்பேன். இவர் ஆற்றில் போன என்னைக் கரையேற்றி உயிர் கொடுத்தார்.''

தாய் மற்ற விவரங்களையும் கேட்டு அறிந்து கொண்டாள். அவளுக்கு ஆற்றங்கரையில் சாந்தாசிரமம் இருப்பது தெரியும். அங்கே யாரோ சாமியார்கள் இருக்கிறார்கள் என்று தெரியுமே ஒழிய அங்கே அவள் போனதில்லை. கல்யாணராமன் துறவு வேடத்தில் இருந்ததைக் கண்டாள். அவனே அந்த ஆசிரமத்தில் இருப்பதாக எண்ணிக் கொண்டாள்.

''சாமி, அந்த ஆசிரமத்தில் தாங்களே இருக்கிறீர்களா?''

''இல்லை. என்னுடைய குருநாதரும் இருக்கிறார். அவருடைய கிருபையினால்தான் நான் அங்கே இருக்கிறேன்.''

''தாங்கள் இன்று என் மகளைக் காப்பாற்றினீர்கள். தங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்?''

இதற்குள் அந்தப் பெண்மணி ரஞ்சனி ஈர உடைகளைக் களைந்து விட்டு நல்ல உடைகளை அணிந்து, பளிச்சென்று நெற்றியில் குங்குமம் துலங்க வந்து, கல்யாணராமனுக்கு நமஸ்காரம் செய்தாள். அப்போது அவள் பின்னும் அழகுடையவளாகத் தோன்றினாள். கல்யாணராமன்

அவனை நேராகக் காண அஞ்சினான்; ஓரக்கண்ணால் பார்த்தான்.

"என்ன அற்புதமான அழகு!" என்று மனத்துக்குள் வியந்து கொண்டான்.

அதற்குள் ரஞ்சனியின் தாய் ஒரு கிண்ணத்தில் பாலைக் கொண்டு வந்து, "சாமி, இதைச் சாப்பிடுங்கள், தாங்கள் செய்த உபகாரத்துக்கு நான் என்ன செய்ய முடியும்?" என்று தந்தாள்.

அதை அவன் சாப்பிட்டான். மிகவும் சுவையாக இருந்தது. தண்ணீர் கலக்காமல் சுத்தப் பாலாகச் சர்க்கரை போட்டுக் கொடுத்தால் அதன் சுவையே வேறுதானே?

"சாமி, நீங்கள் பால் சாப்பிடுவது உண்டா?" என்று ரஞ்சனியின் தாய் கேட்டாள்.

"தினந்தோறும் இரவில் பால் சாப்பிடுவோம்."

"பாலை விலைக்குத்தானே வாங்குகிறீர்கள்?"

"ஆமாம், மாட்டை வைத்துக் கொண்டு பராமரிப்பது கஷ்டம் அல்லவா?"

"உங்களுக்கு நான் பால் தினந்தோறும் தரட்டுமா?"

"விலைக்குத்தானே?"

"ஆமாம். விலைக்குத்தான். சுத்தமான பாலை உங்களுக்கும் உங்கள் குருநாதருக்கும் கொடுத்தால் எங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும். அந்தப் புண்ணியத்தால் இவளுக்கு நல்ல கணவன் கிடைப்பான்."

அதைக் கேட்ட ரஞ்சனி சற்றே நாணத்துடன் தலையைக் குனிந்து கொண்டாள். கல்யாணராமனுக்கு என்னவோ போல இருந்தது. அவன் மனத்தில் சிறு கலக்கம்.

'இது என்ன பைத்தியக்காரத்தனம்? இந்தப் பெண்ணுக்கு நல்ல இடத்தில் கல்யாணம் ஆக வேண்டும் என்பதைக் கேட்கும் போது என் மனம் ஏன் சலிக்கிறது? நான் வேறு ஆளாக மாறிவிட்டேனா? ஞான சொரூபியாகிய சாந்தானந்த சுவாமிகளுடைய சீடனாகிய எனக்கா இந்த விகற்பமான எண்ணம்? சே! மனப் பேயே! உன்னுடைய ஆட்டத்தை என்னிடத்தில் வைத்துக் கொள்ளாதே! என்னைச் சபலத்துக்கு ஆளாக்காதே!'

அவன் இவ்வாறு எண்ணமிட்டுக் கொண்டிருக்கையில் ரஞ்சனியின் தாய், "என்ன சாமி, யோசிக்கிறீர்கள்? நான் நல்ல பாலைத் தர மாட்டேன் என்று நினைக்கிறீர்களா?" என்று கேட்டாள்.

"சே, சே! அப்படியெல்லாம் இல்லை. வேறு ஏதோ யோசித்தேன். எங்களுக்குப் பால் கொடுக்கும் பெண்மணி தங்கள் மாடு பால் வற்றும் நிலையில் இருப்பதாகச் சொன்னாள். அவளிடம் பால் கிடைக்காவிட்டால் வேறு எங்கே பால் வாங்குவது என்று யோசித்துக் கொண்டிருந்தோம். நல்ல வேளையாக நீங்கள் பால் கொடுக்க முன்வந்தீர்கள். இதுதான் தெய்வ சங்கற்பம் என்பது."

"சாமி, நீங்கள் வேறு, தெய்வம் வேறு அல்ல. என் மகளைக் காப்பாற்றின தெய்வம் நீங்களே! நானும் இவளும் உங்களை என்றைக்குமே மறக்க மாட்டோம். நீங்கள் சாமியாரா.." மேலே ஏதோ சொல்ல வந்தவள் நாக்கைக் கடித்துக் கொண்டாள். 'அபசாரமான வார்த்தைகளைச் சொல்ல வந்தேனே! என்ன அபசரரம்!" என்று உள்ளூற வருந்தினாள்.

"இனிமேல் உங்களுக்குத் தினந்தோறும் எங்கள்வீட்டுப் பால் கிடைக்கும், எங்கள் வீட்டில் இரண்டு மூன்று பசு மாடுகள் இருக்கின்றன. ஆகையால் எப்போதும் பால் கிடைக்கும்."

"சா, அப்படியே செய்யலாம்" என்று சொல்லிவிட்டுக் கல்யாணராமன் புறப்பட்டான்.

அவன் மனம் ரஞ்சனியையே நினைத்தது. அவன் கால்கள் தள்ளாடின. அவன் உள்ளத்துக்குள்



ஒரு போராட்டமே நிகழ்ந்துகொண்டிருந்தது.

ஆசிரமத்துக்குள் நுழையும்போது ஏதோ குற்றம் இழைத்தவனைப் போன்ற உணர்ச்சியோடு நுழைந்தான்: தன் குருநாதருக்கு முன் செல்லக் கூசினான்.

தனியாக ஓரிடத்தில் உட்கார்ந்துகொண்டு சிந்தனைப் போராட்டத்தில் மூழ்கியிருந்தான். அவன் உள்ளத்தில் எண்ணங்கள் அலை பாய்ந்தன. ரஞ்சனியும் குருநாதரும் மாறி மாறி வந்தார்கள். ஓவென்று கதறி அழ வேண்டும் போல் இருந்தது. அவன் மனத்தில் ஒரு புயலே வீசிக் கொண்டிருந்தது. திசை மாறி அது வீசியது. ஒரு முறை அது அவனை ரஞ்சனியிடம் தள்ளியது. மற்றொரு முறை குருநாதரிடம் தள்ளியது.

எழுந்து நின்றான். சிறிது அங்கும் இங்கும் நடந்தான். தலையைப் பிய்த்துக் கொண்டான். சுவரில் மோதிக் கொண்டான். அவன் உள்ளத்தில் பிரளய காலச் சமுத்திரமே கொந்தளித்துக் கொண்டிருந்தது. 'பேசாமல் இல்லற வாழ்வை ஏற்றுக் கொண்டு விடலாமா?' என்று ஒரு கணம் நினைப்பான். மறு கணமே தன் கன்னத்தில் தானே அறைந்து கொள்வான். 'இத்தனை நாள் காத்த விரதம் என்னாவது? நான் மனம் மாறி மணந்து கொண்டால் உலகம் என்ன சொல்லும்? எனக்கு நரகம் அல்லவா கிடைக்கும்?' அவன் உள்ளத்தில் இப்படிப் பல பல வண்ணங்கள் எழுந்து எழுந்து குமுறின.

இரவு நேடு நேரம் உறக்கம் வரவில்லை. விடியற்காலையில் சிறிது கண அயர்ந்தான். அப்போது ஒரு கனவு.

ஒரே பனிப்படலம் மூடிய மலை. எங்கே பார்த்தாலும் வானளவு ஓங்கிய மரங்கள். அங்கங்கே சில தவமுனிவர்களின் ஆசிரமங்கள். அவன் அங்கே ஓடுகிறான். ஓர் ஆசிரமத்தில் புகுகிறான். அங்கே அவன் அமர்கிறான. அந்த மோன நிலையில் அவனுக்கு அமைதி கிடைக்கிறது.

விழித்துக் கொண்டான். இன்னும் விடியவில்லை. குருநாதர் உறங்கிக் கொண்டிருந்தார். மெல்ல எழுந்தான். ஒரு போர்வையை மாத்திரம் எடுத்துப் போர்த்துக் கொண்டான். அந்த விடியற் கால இருளில் அவன் விடிவை நோக்கி வட திசையில் நடக்கத் தொடங்கினான்.

விடிந்தது. காலையில் குருநாதர், "கல்யாணராமன்!" என்று அழைத்தார். அழைப்பதற்கு முன் வந்து நிற்கும் அவனைக் காணவில்லை. அவன் இருக்கும் இடத்தைப் பார்த்தார். அங்கே ஒரு கடிதம் இருந்தது. எடுத்துப் படித்தார்.

"குருநாதர் திருவடிகளில் பல கோடி நமஸ்காரங்கள். எதிர்பாராத வகையில் நான் தங்களைப் பிரிந்து செல்கிறேன். சில காலமாக என் மன நிலை சரியில்லை. உலக ஆசாபாசங்களில் சிக்கிச் சுழன்று தவித்தது. இங்குள்ள சூழ்நிலையே அதற்குக் காரணம். ஆசிரமத்தைச் சொல்லவில்லை. இந்த ஊரைத்தான் சொல்கிறேன். இங்கே இருந்தால் நான் சாந்தியை அடியோடு இழந்து விடுவேன் என்ற அச்சம் உண்டாகி விட்டது. அதனால் நான் இமயத்தை நோக்கிப் புறப்பட்டு விட்டேன். எங்கே இருந்தாலும் தங்கள் அருளாசி என்னை நல்வழியிற் செலுத்தும் என்று நம்புகிறேன்."

சிறிது நேரம் சாந்தானந்தர் அந்தக் கடிதத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது வெளியிலே ரஞ்சனியே பால் கொண்டு வந்திருந்தாள். சுவாமிகள் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு அதை வாங்கப் போனார்.

"ஏன், சாமி, சின்னச் சாமியார் இல்லையா? நீங்கள் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு வருகிறீர்களே!" என்றாள்.

"அவன் இனிமேல் வரமாட்டான் அம்மா. எங்கேயோ போய் விட்டான்!"

அந்த இளம் பெண்ணுக்குத் தானே அவனுடைய புறப்பாட்டுக்குக் காரணம் என்பது எள்ளளவும் தெரியாதே! ⁂

அறியவேண்டிய சாலை அறிவிப்புகள்—2.

பாதுகாப்பு ஆள் இல்லாத ரயில்வே கிராஸிங்குகளில் விபத்துக்கள் நம்பமுடியாத அளவிற்கு அதிகமாக இருக்கின்றன கவனம் இழக்காதீர்கள். கடந்து போகுமுன் ஆபத்தின் அறிகுறிகள் எதுவும் இல்லை என்பதை நிச்சயப் படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் வாகனம் பி.ஐ.– கர்லிங் பிரேக்குகளால் பலப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். ஏனென்றால், பி.ஐ.– கர்லிங் பிரேக்குகள் தயாரிப்பின் போது 100% பாதுகாப்பிற்கும், 100% திறமைக்கும், 100% உத்திரவாதத்திற்கும் கடுமையான பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. மேலும், அவற்றில் இங்கிலாந்தின் பிரசித்திப்பெற்ற அகில உலக பிரேக் நுட்ப வல்லுனர்களான கர்லிங் லிமிடெட் நிறுவனத்தாரின் தொழில் திறமை அடங்கியுள்ளது.

சாலைகளில் அதிகபட்ச பாதுகாப்பிற்கு பி.ஐ – கர்லிங் பிரேக்குகள், பிரேக் உறுப்புகள், ஹைட்ராலிக் பிரேக்குகள், கிளட்ச் ஆக்சுவேஷன் சாதனங்கள் முதலியவற்றின் தயாரிப்பாளர்களான பிரேக்ஸ் இந்தியாவை நம்புங்கள்.

பிரேக்ஸ் இந்தியா லிமிடெட்,
பாடி, சென்னை - 600 050.

TVS
உங்கள் நிச்சயமான
பாதுகாப்பிற்கு
பிரேக்ஸ் இந்தியா

சாலை பாதுகாப்பிற்காக வெளியிடப்பட்டது

SAA/BI/227


கலைமகள்
தீபாவளி மலர் '82

ராமன் இருக்கும் இடம் அயோத்தி

தில்லைநாதன்

கர்நாடகத்தின் எல்லையில் மஹாகாவ் என்னும் சிறு கிராமம். அதில் சிதிலமடைந்த ஒரு மடம். அதனுள் ஒரு கோயில் இருக்கிறது. வழிபாடும் தொடர்ந்து நடக்கிறது. அங்கே தங்கியிருக்கும் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் பரமாசார்யர்களின் குரல் கணீரென ஒலிக்கிறது. ஆம். அவர்கள் பாஷ்ய பாடம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். சந்நியாசி ஒருவர் பாடத்தைப் படிக்கிறார். பெரியவர்கள் அதற்கு விளக்கம் அளிக்கிறார்கள். மற்றும் வித்வான்கள் பலர் எதிரில் அமர்ந்திருக்கிறார்கள். சுற்றிலும் பொது மக்கள். சிலர் உட்கார்ந்து கொண்டும் சிலர் நின்றுகொண்டும் கவனமாகக் கேட்கிறார்கள். மகானுடைய குரலில் எல்லோருக்கும் அமைதி கிட்டுகிறது போலும். ஸூத்திர பாஷ்யக் கிரந்தத்தில் கடைசி ஸூத்திரமான 'அநாவ்ருத்தி சப்தாத் அனாவிருத்தி சப்தாத்' என்பதற்கு விளக்கம் தருகிறார்கள் ஆசாரியர்கள்.

''பிரம்ம ஸாக்ஷாத்காரம் அடைந்த ஆத்மஞானிகளுக்குத் திரும்பவும் பிறப்பில்லை என்பது சித்தமான விஷயம். ஆனால் ஸகுண பிரம்மத்தைத் தஞ்சம் அடைந்தவர்களுக்கும் - ஸகுண சரணாநாமபி அநாவ்ருத்தி ஸித்தி: — பிறப்பில்லை என்று கிடைக்கிறது இந்த ஸூத்ரார்த்தத்தின்படி'' என்கிறார்கள்.

ஸகுணம் என்று வரும் போது ஹரிஹர அபேதத்தையும் விளக்குகிறார்கள் பெரியவர்கள்.

ஹரி ஜீவன்களைப் பரிபாலனம் செய்கிறார். ஹரன் ஸம்ஹாரம் செய்கிறார். பரிபாலனம் ஸத்வகுணத்தைச் சேர்ந்தது. ஸம்ஹாரம் தமோ குணத்தைச் சேர்ந்தது. ஸம்ஹார காரியம தமோ குணத்தைச் சேர்ந்தது ஆனாலும் மிகவும் கருணையினாலேயே அந்தக் காரியத்தைச் செய்கிறான் ஈசுவரன்.

பகல் முழுவதும் இந்திரியங்கள் வேலை செய்து செய்து களைத்துப் போய் விடுகின்றன. சோர்ந்துபோன இந்திரியங்கள் ஸுஷுப்தியில், நித்திரையில், ஆத்மாவில் லயிக்கின்றன. அந்த நிலையில் அவை விச்ராந்தி, ஓய்வு பெறுகின்றன. திரும்பவும் அவை காலையில் வெளிக்கிளம்பும் போது, ஜாக்ரத் நிலையில் தெம்போடு வருகின்றன. இந்த ஸுஷுப்தி நிலை நித்தியப் பிரளயம்.

இதேபோல மகாப்பிரளயத்திலும் சகல உயிர்களும் பாபம் செய்தவை, புண்ணியம் செய்தவை என்ற பாகுபாடே இல்லாமல், பாப ஜீவன்களும்கூட விச்ராந்தி, ஓய்வு பெறுகின்றன. இப்படி எல்லா ஜீவன்களுக்கும் துக்கத்திலிருந்து விடுதலை கிடைப்பது ஈசுவரனுடைய கருணையினால்தான்.

இப்படி ஸம்ஹார கார்யம் தமோ குணத்தால் உண்டானாலும் ஈசுவரனுடைய இருதயத்தில் கருணைக்குக் காரணமான ஸத்வகுணமே தெரிகிறது. அந்தஸ் ஸத்வம் பஹிஸ் தம: — உள்ளத்தில் ஸத்வகுணமும் வெளியில் கார்யம் தமோ குணத்தைச் சேர்ந்ததாகவும் உள்ளவன் ஈச்வரன்.

ஹரி பரிபாலனம் செய்வது ஸத்வ குணத்தின் காரியம். இருதயத்தில் ஸத்வகுணம். ஆனாலும் ரூபமோ நீலரூபம்; நீல மேக சியாமள ரூபம். நீலரூபம் தமோ குணத்தைக் காட்டுகிறது. அதனால் ஹரியும் —அந்தஸ் ஸத்வம் பஹிஸ் தம: உள்ளத்தில் ஸத்துவ குணமும் வெளியில் ரூபம் தமோ குணமாகவும் உள்ளவர். பிரம்மா ரஜோ குணத்தின் காரியமான சிருஷ்டி மட்டுமே செய்கிறார். ரஜோ குணம் ஒன்றுதான் அவரிடம் தெரிகிறது. ஹரி, ஹரன் இருவரும்-(அந்தஸ் ஸத்வம் பஹிஸ்தம:) உள்ளே ஸத்வ குணமும் வெளியே தமோ குணமும் உள்ளவர்களாக ஹரிஹர அபேதத்தையே நமக்குப் போதிக்கிறார்கள்.

ஏகைவ மூர்த்திர் பிபிதே த்ரிதைவ: பரம்பொருள், பரமாத்மா ஒருவர்தாம். அவர்தாம் ஸ்ருஷ்டிக்கும் போது பிரம்மாவாகவும் பரிபாலனத்தைச் செய்யும்போது விஷ்ணுவாகவும் ஸம்ஹாரத்தைச் செய்யும் பரமேச்வரனாகவும் காட்சி தருகிறார் என்று முடிக்கிறார்கள்.

ஹரி ஹர அபேதத்துக்குப் புதிய விளக்கம் ஒன்றை ஆசாரியர்கள் அருளிய போது அனைவருக்கும் மெய் சிலிர்க்கிறது.

மஹாளய அமாவாசைக்கு முன்னாள் பெரியவர்கள் ஜன்னல் அருகில் வந்து அமர்ந்திருக்கிறார்கள். தரிசனத்துக்காகக் காத்திருக்கும் மக்கள் வெள்ளம் அலை மோதுகிறது. முண்டியடித்துக்கொண்டு ஒரு தம்பதி முன்னே, அருகில் வருகிறார்கள். ''பிரபோ, இப்படி எங்களையெல்லாம் தவிக்க விட்டுவிட்டு எட்டாக் கையில் இவ்வளவு தூரம் வந்துவிட்டீர்களே! இனியும் எங்களைச் சோதிக்கக்கூடாது. உங்கள் கருணை மழை இல்லாமல் தஞ்சை ஜில்லாவே பாழடையும் நிலைக்கு வந்துவிட்டது. மழையே இல்லாமல் பயிர்களெல்லாம் வாடுகின்றன. எங்கே பார்த்தாலும் ஒரே வறட்சி நிலை தாண்டவமாடுகிறது. பெரியவர்கள் இனியும் பராமுகமாய் இருக்கக் கூடாது. தஞ்சாவூர் ஜில்லாவில் தங்கள் பாதம் படவேண்டும். அங்கேயே வந்துவிட வேண்டும்'' என்று ஆணும் பெண்ணும் வேண்டுகிறார்கள்; கண்ணீர் பெருகுகிறது.

அவர்களின் பிரார்த்தனையால்தானோ என்னவோ, தமிழ் நாட்டில் இப்போது நல்ல மழை பெய்திருக்கிறது.

இப்படி அவரவர் தம் கஷ்டங்களைச் சொல்லிப் பெரியவர்களின் ஆசி பெற்றுச் செல்பவர் கணக்கில் அடங்கமாட்டார்கள்.

கூட்டம் சற்றுக் கலைகிறது. பெரியவர்கள் மடத்துச் சிப்பந்தி ஒருவரிடம், ''நீ சற்றுமுன் இங்கே இருந்தாயோ? அந்த அகமுடையான் பெண்டாட்டி இருவரும் அப்படியே கதறி விட்டார்கள். தெரியுமோ உனக்கு? எதுக்காக என்று தெரியுமோ? நான் தஞ்சாவூர்ப் பக்கம் வந்துவிட வேண்டுமாம். அதற்காகத்தான்!'' என்கிறார்கள்.

"இவளுக்கு உறவிலே ஒருத்தி. பெயர்.. தெரியுமோ?" என்று கேட்கிறார்கள் ஆசார்யர்கள்.

"தெரியும். அவள்கூட இல்லை இப்போது.."

"உனக்கு எப்படித் தெரியும்?"

"நான் அந்த ஊருக்கு வேறு வேலையாகப் போயிருந்தேன்."

"அவளுக்கு நிறையச் சொத்து இருந்தது. ஆனால் புருஷன்தான் அவளுக்குச் சரியில்லை. புருஷன் தன்னோடு சேர்ந்திருக்கவேணும் என்பதற்காக அவள் செய்யாத நல்ல காரியம் இல்லை. என்னிடம் அசாத்திய பக்தி. மடத்துக்கு அடிக்கடி வருவாள். பெண்களுக்குக் கணவன்தானே தெய்வம்? அவனுக்காக எது வேணுமானாலும் போகட்டும் என்று எல்லாவற்றையும் அவனுக்காகவே செலவழித்தாள். அவனும் இவளிடமிருந்த 'பணத்தைப் பறிக்க அடிக்கடி வருவான். 'பணம் போனாலும் போகட்டும்; அவன் மனசு திருந்தாதா?' என்று அவளும் சளைக்காமல் கொடுத்தாள். சொத்தெல்லாம் போய்விட்டது. நகைகளையும் அவன் வரும்போதெல்லாம் கழற்றிக் கொடுத்துக்கொண்டே இருந்தாள். யார் தடுத்தாலும் கேட்கமாட்டாள். அப்படியும் அவன் திருந்தி வர வழியாக இல்லை. அதனாலேயே மனசு உருகி, ஒடுங்கிப் போய்விட்டாள். கதையிலேதான் இந்த மாதிரியெல்லாம் நாம் கேட்டிருக்கிறோம், இந்தக் காலத்திலேயும் இவள் உண்மையிலேயே அந்த மாதிரி நடந்துகொண்டாள். உனக்கு எல்லாம் தெரியுமோ?"

"ஆமாம். ஆமாம். கடைசியாக அவன் வந்தபோது காதிலே இருந்த தோட்டையும் கழற்றிக் கொடுத்தாள். வேறு ஒரு நகையும் இல்லை. அதைப் பார்த்து ஊர்க்காரர்கள் மிகவும் அவளைக் கோபித்துக்கொண்டார்கள். அது தாங்காமலே அவள் இறந்துவிட்டதாகக்கூடச் சில பேர் அந்த ஊரில் பேசிக்கொண்டார்கள்."

மகான் ஒருவர், 'உத்தமி! இது போல் இந்தக் காலத்தில் காண்பது அரிது' என்று போற்றுகிறார். ஆனால் ஊர்மக்கள், 'அசடு, பிழைக்கத் தெரியாதவள்!' என்று தூற்றுகிறார்கள். இதுதான் கலியுக தர்மம் போலும்!

சற்று நேரம் கழித்து வேறு ஓர் அம்மாள், "பெரியவாள் சொன்னதெல்லாம் எனக்குத்தான் சொன்ன மாதிரி இருந்தது. எங்காத்திலேயும் அவருக்கு ரொம்ப முன் கோபம். காலந்தள்ளுவதே ரொம்ப கஷ்டமாயிருக்கு. பெரியவாள்தான் எனக்கு நிறையப் பொறுமையை அநுக்கிரகம் செய்யணும்!" என்று பிரார்த்திக்கிறாள்.

இப்படித்தான் பல பேர் அதைத் தமக்கு உபதேசித்ததாகவே எடுத்துக்கொண்டார்கள்.

எதிரில் உட்கார்ந்திருந்த கிழவன் ஒருத்தன் ஏதோ சொன்னான்.

"அவன் என்ன சொல்கிறான் என்று கேள்" என்றார்கள் பெரியவர்கள்.

அவன் சொல்லும் பாஷை முதலில் புரியவில்லை. பிறகு 'தோதி' (வேஷ்டி) கேட்கிறான் என்று தெரிந்து பெரியவர்களிடம் சொன்னார் ஒருவர்.

"அவனுக்கு என்ன வயது என்று கேள்!"

"எண்பத்தைந்து!"

"அவன் இந்த ஊர் மடத்தில் வெகு காலம் தொண்டு செய்திருக்கிறான். இவ்வளவு வயசானவன் கேட்கிறான். உடனே கொண்டு வந்து இப்போதே கொடு!" என்கிறார்கள், சிப்பந்தி ஒருவரிடம்.

இப்படி அவர்களின் கருணைக்கும் அருள்மொழிகளைக் கேட்கவும் நாள்தோறும் திரண்டு வரும் மக்கள் கூட்டம் சொல்லந்தரமன்று. 'ராமன் இருக்குமிடம் அயோத்தி!' என்பார்கள். அப்படி ஆசார்யர்கள் எங்கே சென்றாலும், மொழி தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் பழக்க வழக்கங்கள் வேறாக இருந்தாலும் அவர்களின் அருளை நாடி வரும் மக்கள் கூட்டம் கணக்கில் அடங்காது. ✻

மனங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்
அசல் காஞ்சிபுரம்
பட்டுப் புடவைகள் தேர்ந்தெடுக்க
கைராசியான இடம்
ஸ்ரீ ராஜேஸ்வரி ஹால்
121, ராஜ வீதி
கோயமுத்தூர்-641001
போன் : 25859
ANJUREKHA
-OSR
உஷா சாரி பாரடைஸ்
(நவநாகரீக ஜவுளிகளின் சங்கமம்)
333, ராஜ வீதி
கோயமுத்தூர்-641001
போன் : 33369

உழவுக்கும் தொழிலுக்கும்..

தம்பி சீனிவாசன்

ஒரு காட்சி:
எங்கும் பசுமை பரந்திருக்க,
எல்லாக் குதிரும் நிறைந்திருக்கப்
பொங்கும் வளமை பூசிவிடும்
பொலிவில் சுடரும் பண்ணைகளில்,
எங்கோ, மேட்டில், வயலோரம்
இயங்கும் கரங்கள் ஓய்வறியா;
தங்கிச் சிறிதே இளைப்பாரு!
சற்றே இவர்க்கும் உய்வுண்டா?

உழைப்பை மண்ணில் விதையாக்கி,
உணர்வை மட்கி உரமாக்கி,
மழைபோல் வியர்வை நீர்பாய்ச்சி
மண்ணில் பொன்னை விளைப்பவரை
அழைப்பார் யாரோ உறவாட?
அருகே சேர்ப்பார் எத்தனைபேர்?
உழைக்கும் கரத்தில் கசப்பென்ருல் — அவர்
உலகுக் கெப்போ புதுவாழ்வு?

இன்ெனுரு காட்சி:
நகரங்கள், நகரங்கள்! கோபுரக் குடியிருப்பு!
நாளும் அடர்கின்ற மாளிகைப் பெருங்காடு!
அடுக்கு மாளிகை எழுப்புகிற
ஆயிரம் ஆயிரம் சிற்பிகள்தம்
அடுத்த வேளைதங்குமிடம்
அறியா தலைதல் பார்க்கின்ருேம்!
அடித்தளக் கலவை இவரின் அசதியும் உதிரச்சேறும்!
முடுக்கிய 'கர்டர்' நிற்க, மூச்சிலே பாதி தந்தார்!
'மொசைக்கு'ப் பளபளக்க மொத்தமாய்த் தம்மைத் தேய்த்தார்!
வசைகளும் ஏச்சும் ஏந்தி, மாளிகைப் பூச்சுள் தோய்த்தார்.

அடுத்த குடியிருப்பு அமைத்தபடி நகர்கின்ருர்,
அடுத்த குடியிருப்பு அமைக்கவே நகர்கின்ருர்!
தமக்கோர் இடமின்றி, சாரத்தில் வாழ்கின்ருர்,
எமக்கு வீடளிப்போர் இவர்க்கென்று புதுவாழ்வு?



கானல்நீரை அள்ளிக்குடிக்க முடியுமா? — இங்கே
கனவுகளைக் காட்சியாக்க இயலுமா?
கோணலில்லாக் கோடுகளே சேருமா? — வாழ்வில்
கொள்கையிலா எண்ணம்வெற்றி காணுமா?

தேயாத நிலவுவானில் தோன்றுமா? — உலகில்
தேவைகளை நிறைவுசெய்ய லாகுமா?
ஓயாத மனத்தில்நலம் வாழுமா — இங்கே
ஒருமரமே தோப்பாக மாறுமா?

நீருக்கென நிறமிங்கே தெரியுமா? — நெஞ்சில்
நீங்காத நினைவெல்லாம் ஓயுமா?
ஊருக்காக வாழ்வதெனில் போதுமா? — இன்ப
உறவினிலே பாசமெங்கும் ஆளுமா?

நிலத்தினிலே ஓடமெல்லாம் ஓடுமா? — மங்கை
நீலவிழியில் காட்சிகளே ஆடுமா?
நலிவகற்ற உள்ளங்களே பாடுமா? — இந்த
நாடெல்லாம் நலங்காணக் கூடுமா?

'ஆற்றலரசு'

அப்படி நடக்குமா?

கலைமகள்
தீபாவளி மலர் '82

டேபாஸிட்டர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி!

3 தீபாவளி போனஸ்!
ஸ்ரீராம் டிரஸ்ட்-
அமுதசுரபி
அளிக்கும்
அரிய வாய்ப்பு!

போனஸ் 1: • 7 ஆண்டுகளுக்கு தொடர்ந்து அமுதசுரபி தீபாவளி மலர்

போனஸ் 2: • 84 மாதங்களுக்கு தொடர்ந்து அமுதசுரபி மாத இதழ்

போனஸ் 3: • 6 பிரபல தென்னகத்* திருத்தலங்களின் பலவண்ண, தெய்வத் திரு உருவங்கள்.
('சில்பி' வரைந்தது)

நீங்கள் ரூ. 1000 டெபாஸிட் செய்யுங்கள்.
7 ஆண்டுகளில் ரூ. 2000ஆக திருப்பித் தருகிறோம்.
அத்துடன் மேற்கண்ட எல்லா அன்பளிப்புகளும்
உங்களை அடையும்.

அயல்நாட்டு அன்பர்கள்
ரூ. 2000 டெபாஸிட்
செய்தால் ரூ. 4000ஆக
திரும்பப் பெறலாம்.
அவர்களுக்கு கப்பல் தபால்
மூலம் அன்பளிப்புகள்
அனுப்பப்படும்.

*1. ஸ்ரீ குருவாயூரப்பன் 2. திருப்பரங்குன்றம் ஸ்ரீமுருகன் 3. பத்ராசலம் ஸ்ரீராமர் 4. தஞ்சை ஸ்ரீ பங்காரு காமாட்சி 5. சங்கரன் கோவில் ஸ்ரீ கோமதி அம்மன் 6. திருக்கடவூர் ஸ்ரீ அபிராமி அம்மன்.

மேலும் முழு விபரங்களுக்கு:
ஸ்ரீராம்
டிரஸ்ட்
123, அங்கப்ப நாயக்கன் தெரு,
சென்னை 600 001

ADWAVE/ST A5/2154

மழை

அகிலன்

தென்மேற்குப் பருவமழை அங்கங்கே கண்ணுமூச்சி காட்டி விட்டு, ஒரேடியாய்ப் போய் ஒளிந்துகொண்டு விட்டது.

இன்று வரும், நாளை வரும் என்று ஒவ்வொரு நாளும் மழையை எதிர்பார்த்து ஏமாந்தது மக்கள் கூட்டம். ஆறுகள், கண்மாய்கள், குளங்கள், கேணிகள் வற்றி வறண்டு விட்டன.

மழையை நம்பி உழவர்கள் விதைத்து நாற்று நட்டுப் பேணிய பயிர்கள் வாடித் துவண்டன.

கிராமப் புறங்களில் கன்றுகாலிகள் பசும் புல்லையும் இலை தழைகளையும் எங்கெல்லாமோ தேடி அலைந்து விட்டுக் கால் வயிறுகூட நிரம்பாமல் திரும்பின.

பயிர் பச்சைகளுக்கும் விளைச்சலுக்குந்தான் பஞ்சம் என்பதில்லை. ஆறுகளும், அருவிகளும் வறண்டு நீர்த்தேக்கங்கள் பொட்டல் வெளியானதால், மின்சார உற்பத்திக்கும் நெருக்கடி வந்துவிட்டது. மின்சாரப் பற்றாக்குறையால் தொழிற்சாலைகள் திணறத் தொடங்கின.



குளிப்பதற்குத் தண்ணீர் இல்லை; துணி துவைப்பதற்குத் தண்ணீர் இல்லை, சோறு சமைப்பதற்குத் தண்ணீர் இல்லை, ஏன்? குடிப்பதற்குக் கூடத் தண்ணீர் இல்லை.

கிராமத்துப் பெண்கள் கூட்டம் தலைகளில் குடங்களைச் சுமந்துகொண்டு மைல் கணக்கில் தண்ணீருக்காக அலைந்து திரிந்தது.

நகரங்களில் சொட்டுச் சொட்டாய்த் தண்ணீர் வடிக்கும் குழாய்களுக்கு முன்னால் நூற்றுக் கணக்கான குடங்கள்.

மக்கள் நாள்தோறும் வானத்தை அடிக்கடி அண்ணாந்து பார்த்துப் பெருமூச்சு விட்டார்கள். வானம் பழுக்கக் காய்ச்சிய ஈயத் தகடுபோல் காட்சியளித்தது.

பூமியில் வாழும் மக்களின் போக்கினைக் கண்டு, ஒருவருக்கொருவர் கொடுத்து வாழாமல் ஒருவரை ஒருவர் கெடுத்துச் சீரழியும் அவல நிலையைக் கண்டு, கடுஞ்சினம் கொண்டுவிட்டதா வானம்?

மழைத் துளிகளுக்குப் பதிலாக மக்களிடம் மழைக்காகக் கண்ணீர்த் துளிகள் கசியத் தொடங்கிய பிறகே, அவர்களில் பலருக்குத் திடீரென்று இந்த ஞானோதயம் ஏற்படத் தொடங்கியது.

கதிரொளி, காற்று, மழை, இந்த மண்ணுலகம், வானவெளி இவற்றையெல்லாம் படைத்து இயக்குப ஒரு மாபெரும் சக்தி இருக்கிறது. கடவுள் என்ற அந்த மாபெரும் சக்தியை நம்பிக் கண்ணீர் விட்டுக் கதறுவதைத் தவிர வேறு வழியில்லை.

''கடவுளுக்கு அடுத்தபடியா ஏன் வான் சிறப்பை, மழையை, வள்ளுவர் பாடியிருக்கிறார் தெரியுமா? கடவுள் அருள்தான் நமக்கு மழையாப் பொழியுதிறதைச் சுட்டிக் காட்டத்தான்!' என்றார் ஓர் அறிஞர். ''அந்த அருளை அடிப்படையா வச்சுக்கிட்டு, நாம் அறநெறியிலே பொருள் ஈட்டி இன்பமா வாழ்ந்தால் பருவமழை பொய்க்கவே பொய்க்காது.''

''அறநெறி இப்ப நாட்டிலே எங்கே இருக்கு?'' என்று கேட்டார் ஒருவர்.

''மழை எப்படிப் பெய்யும்?'' பதிலும் கேள்வியாகவே வந்தது.

துன்பம் எல்லையை மீறிப்போகும் போதுதானே மனிதன் துணைக்கு அழைக்கிறான் கடவுளை? கடவுளிடம மழையை வேண்டிக் கதறத் தொடங்கியது மக்கள் கூட்டம்.

பிரார்த்தனைகள், வேண்டுதல்கள், பூசனைகள், ஜபங்கள், யந்திர உச்சாடனங்கள், யாகங்கள், தொழுகைகள், கதறல்கள், கை கூப்புக்கள்.

''கருணைக் கடலே மழையாக வா! வந்து எங்களைக் காப்பாற்று! எங்களைக் காப்பாற்று!''

''எங்கள் பயிர்பச்சைகளைச் செழிக்கச் செய்! பஞ்சத்தை விரட்டு! நாட்டை வளமாக்கு!''

இமயமலைச் சாரலிலே ஒரு மரத்தடியில் வீற்றிருந்த இறைவனின் விழிகள் கோபத்தால் சிவந்திருந்தன. அவர் மூச்சிலும் அனல்காற்று வீசியது. அந்தக் கோபத்தின் விளைவுதான் வானவெளியும் பழுக்கக் காய்ச்சிய இரும்புத் தகடாகக் கனலை உமிழ்ந்ததா? அவர் மூச்சின் வெப்பக் காற்றுத்தான் அங்கே மழை மேகங்கள் ஒன்று திரளாதபடி விரட்டியடித்ததா?

அருகே அமர்ந்திருந்த ஆதி பராசக்தி இறைவனைப் பார்த்துக் கனிவோடு கேட்டார்:

''குழந்தைகள் எல்லாம் கதறி அழுறாங்களே, உங்களுக்குக் காது கேட்கலையா?''

அன்னையைச் சற்றே திரும்பிப் பார்த்தார் அப்பன்.

''நல்லவன் ஒருத்தன் இருந்தால் அவனுக்காக எல்லாருக்கும் மழை பெய்யலாம்னு சொல்விங்களே; அதை மறந்திட்டீங்களா?''

''நாம கொடுக்கறதைத்தான் கொடுக்கலாமே தவிர, கொடுக்கறதை அவுங்களாக் கெடுத்துக்கிட்டா நாம் என்ன செய்யறது?''

அன்னைக்கு ஒன்றும் புரியவில்லை.

''வா! நீயே என்னோட வந்து பார். என்ன செய்யறாங்க, என்ன செய்யலேங்கிறதை நேரிலே பார்.''

இறைவனின் மனம் சற்றே இளகத் தொடங்கியிருக்கிறது என்பதைக் கண்டுகொண்டார் அன்னை.

''வாங்க, போகலாம்.''

நினைத்தவுடனே நினைத்த இடத்துக்குச் செல்லும் ஆற்றல் படைத்தவர்கள் அவர்கள். இருவரும் இரு வெண்மேகப் படலங்களாக மாறி விண்வெளியில் விரைந்தார்கள்.

இமயமலைக் காடுகள் தொடங்கி எங்கெங்கே மலைகளும் காடுகளும் மண்டிக் கிடந்தனவோ அங்கெல்லாம் சென்றார்கள்.

இடையிலே படுத்துக் கிடந்த விந்திய மலைச் சாரலுக்கு வந்தார்கள். பிறகு தென்மேற்குக் கோடியில் உள்ள மேற்கு மலைச் சாரலில் தவழ்ந்தார்கள். நாடெங்கிலும் பரவிக் கிடந்த பசுமை போர்த்த சின்னஞ்சிறு குன்றுகள் முதல் பெரிய பெரிய மலைகள்வரை சுற்றித் திரிந்தார்கள்.

தாழப் பறந்து சென்று, ''அங்கே பார், இங்கே பார்'' என்று சுட்டிக் காட்டிக்கொண்டே வந்தார் கடவுள்.

அங்கெல்லாம் காடுகள் அழிக்கப்பட்டு வந்தன. மரங்கள் வெட்டித் தள்ளப்பட்டு வந்தன.

வானுற ஓங்கிய நெடிதுயர்ந்த மரங்கள் ஓலமிட்டுச் சாயும் காட்சி அன்னையைப் பதறச் செய்தது.

திருட்டுத்தனமாக வெட்டியவர்களும் வெட்டினார்கள்; பகிரங்கமாக வெட்டியவர்களும் வெட்டினார்கள். ஒரு மரத்தை வெட்டுவதற்கு அநுமதி பெற்று ஒன்பது மரங்களைச் சாய்த்துத் தள்ளியவர்களும் இருந்தார்கள்.

''மழை பெய்யலே: பஞ்சம்வறட்சி என்னு ஒரு பக்கம் கூப்பாடு போட்றான். மறுபக்கம் மழை மேகங்களை ஈர்த்து மழை பெய்யச் செய்கிற மரங்களை வெட்டித் தள்றான். பஞ்சத்தை உற்பத்தி செய்யற வேலை இப்ப இங்கே தீவிரமா நடக்குது'' என்றார் இறைவன்.

''இதைத் தடுத்து நிறுத்த முடியாதா?''

கலகலவென்ற சிரிப்பொலி கிளம்பியது.

''மரங்களை வெட்டித் தள்ளுறவன் வயிற்றுப் பாட்டுக்காக வேலை செய்ற கூலியாள். இவன்களை வச்சுப் பொழப்பு நடத்தறவன் லட்சக் கணக்கிலே சொத்துச் சேர்த்திருக்கிற பெரும்புள்ளி. இப்படி இந்த நாட்டைக் கெடுத்துப் பல பேர் திடீர்ப் பணக்காரனா உற்பத்தியாயிருக்கான்கள்.''

''இவன்களோட கைகளை வெட்டித் தள்ளினா என்ன?'' என்று கோபமாய்க் கேட்டார் அன்னை.

சிரிப்பொலி அதிகமாகியது.

''வேலியே பயிரை மேய்கிற வேலை இங்கே நடக்கிறப்ப எவன் கையை எவன் வெட்டுவான்? லஞ்சப் பணம் கொடுக்கிற கையை, கள்ளப்பணம் வாரி வழங்குறகையை, முத்தமிட்றதுக்கு இங்கே ஏராளமான ஆட்கள் இருக்கு.''

அன்னை திடுக்கிட்டார். மிகப் பெரிய மகான்களும் ஞானிகளும் தன்னலமற்ற தவப்புதல்வர்களும் தோன்றிய இந்த நாட்டிலா இவ்வளவு கேவலங்கள் நடக்கின்றன? பாரத பூமி பழம்பெரும் ஞானபூமி என்று சொல்வார்களே! அவர்களுடைய அன்புக் குழந்தைகளான புத்தரும், மஹாவீரரும், சங்கரரும், வள்ளுவரும், காந்தியும் தோன்றிய இந்த மண்ணிலா இவ்வளவு கொடுமைகள்?

''ஒரு மரத்தை வெட்டித் தள்ளணும்னா, அதுக்கு முன்னாலே ரெண்டு மரங்களை நட்டு வச்சுப் பெரிசா வளர்க்கணும்'' என்றார் கடவுள்.

''இவங்களுக்கு அறிவு கிடையாதா?''

''பயங்கரமான அளவுக்குத் தன்னலத்துக்கான அறிவு வளர்ந்திருக்கு. அன்புதான் கிடையாது. ஊர் உலகம் எக்கேடு கெட்டாலும் தானும் தன் குடும்பமும் மட்டும் வசதியா வாழணும்னு நினைக்கறான்.''

அன்னை மௌனத்தில் ஆழ்ந்தார். இறைவன் கூறினார்: ''எதைச் செய்யக் கூடாதோ, அதைச் செய்யறதை இதுவரை பார்த்தோம்; இனி எதைச் செய்யணுமோ அதைச் செய்யாமல் இருக்கறதைப் பார்ப்போம்.''

தெற்கு முனைவரை வந்த அவர்கள் மீண்டும் வடக்கே திரும்பினார்கள்.

மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கு மேல் அவர்கள் தவழ்ந்தபோது, ''இதோ, கடலில் விழும் ஆற்று வெள்ளத்தைப் பார்'' என்றார்.

மேற்கில் ஓடும் கேரளத்து ஆறுகள் சில இரு கரைகளையும் தொட்டுக்கொண்டு நுங்கும் நுரையுமாகப் பெரு வெள்ளத்தைக் கடலில் கொட்டிக் கொண்டிருந்தன.

அவற்றுக்கு நேர் தெற்கில் தமிழ்நாட்டில் ராமநாதபுரம் மாவட்டம் பாலை நிலமாய் வறண்டு கிடந்தது.

''கடலிலே விழுகிற தண்ணீரைத் தெற்கே திருப்பி விட்டால்?..''

''அந்தப் பாலைவனம் சோலைவனமாகும்'' என்றார் அன்னை.

அப்படியே கர்நாடகத்தில் உற்பத்தியாகித் தமிழ்நாட்டுக்கு வரும் காவேரிப் படுகைக்கு அவர்கள் சென்றார்கள்.

''இந்தக் காவேரித் தண்ணீரைப் பங்கு போட்டுக்கிறதிலே கன்னடத்துக்காரனுக்கும், தமிழனுக்கும் ஏகப்பட்ட சண்டை. காவேரி கன்னடத்துக்காரனுக்கு மட்டும் சொந்தம்கிறான்.''

ஆந்திராவில் ஓடும் கிருஷ்ணா கோதாவரி நதிகளைப் பார்த்துக் கொண்டே ஒரிஸ்ஸாவில் ஓடும் மஹாநதிக்கு வந்தார்கள்.

அங்கே கண்ட காட்சி அன்னையைத் திடுக்கிட வைத்தது.

எங்கே பார்த்தாலும் ஒரே வெள்ளப் பெருக்கு. பல கிராமங்கள் வெள்ளத்திலே மூழ்கிக் கிடந்தன. லட்சக் கணக்கான மக்கள் வீடிழந்து, வாசல் இழந்து, அகதிகளாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

இதே போன்ற கொடுமைகள், இதைவிட மோசமான வெள்ளச் சிரழிவுகள், இன்னும் வடக்கே உத்தரப் பிரதேசத்திலும் பிஹாரிலும் நடந்திருந்தன.

''மழையைத்தான் நம்மாலே பெய்யச் செய்ய முடியும்; வெள்ளப் பெருக்கைத்தான் நம்மாலே கொடுக்க முடியும். நாம கொடுக்கறதை எல்லாரும் பகிர்ந்துக்கிட்டு வசதியா வாழணும்கிற நல்ல எண்ணம் இவங்களுக்கு வேண்டாமா? வடக்கே வெள்ளத்தாலே பஞ்சம்; தெற்கே வறட்சியாலே பஞ்சம்! இது தொடர்ந்து நடந்துக்கிட்டேயிருக்கு. ஒவ்வொருத்தன் வீட்டுக்கும் ஒவ்வொருத்தன் காட்டுக்கும் இவ்வளவு மழைன்னு நம்மாலே அளந்து பெய்ய முடியுமா?''

''நாம கொடுக்கிறதை இப்படிக் கெடுத்துக்கிறாங்களே இவங்க?'' என்றார் ஆதி பராசக்தி.

''இந்த நாட்டிலே இருக்கிற ஆறுகளை ஒண்ணா இணைச்சா எல்லாருக்கும் தண்ணி கிடைக்கும். எல்லாரும் செழிப்போடு நல்லா வாழலாம். உழைப்பும் பிழைப்புமில்லாமல் கோடிக் கணக்கான பேர் இங்கே அவதிப்படறாங்க. அவங்களுக்கெல்லாம் வேலையும் கிடைக்கும். நாட்டிலே உழவும் பெருகும்; தொழிலும் வளரும்.''

வெள்ளப் பெருக்கால் அவதிப்படும் மக்கள் கூட்டத்தை வடக்கிலும் வறட்சியால் அவதிப்படும் மக்கள் கூட்டத்தைத் தெற்கிலும் கண்ட அன்னைக்கு, 'இது ஒரே நாடுதானா? பாரத புண்ணிய பூமிதானா?' என்ற சந்தேகம் வந்துவிட்டது.

எம்பெருமானின் கோபத்துக்கு உரிய காரணம் அவருக்குப் புரியத் தொடங்கியது.

அவருக்கோ கோபம் தீரவில்லை. ''இங்கே பொறுப்பிலே இருக்கிற யாருக்கும் இது நம்மோட நாடு, இந்த நாட்டு மக்கள் எல்லாரும் உள்ளதைப் பகிர்ந்து கொண்டு நல்லா வாழணும்கிற எண்ணம் கிடையாது. தன்னலத்தோட உச்சகட்டம் தலைவிரிச்சாடுது. சாதி, சமயம், மொழி, மாநிலம்னு காசுக்காகச் சண்டை போட்டு மண்டையை உடைச்சுக்கறான். 'மழையாம் மழை! இவ்வளவு காலம் பெய்த மழையைப் பயன்படுத்தி என்ன செய்தாங்க இவங்க? எதுக்காக இனி இவங்களுக்கு மழை?''

தேவி இறைவனிடம் மன்றாடினார்: ''மழை பெய்தாலும் பெய்யலேன்னாலும் வசதியும் வாய்ப்பும் இருக்கிறவன் எப்படியோ வாழ்ந்திடுவான். ஏழை எளியவர்கள் நெறைஞ்ச நாடு இது. நல்லவர்கள் கோடானு கோடிப் பேர் படுகிற துன்பத்தை நாம் துடைக்கறப்போ பொல்லாதவர்களும் வாழ்ந்திட்டுப் போகட்டுமே! இதுக்காக நாம் நல்லவர்களுக்கும் சேர்த்துத் தண்டனை தரலாமா?''

தேவியின் சொற்களுக்குச் செவி சாய்த்தார் இறைவன்.

''நீ என்ன சொல்கிறாய்?''

''மழை பெய்ய வேண்டும்! உடனே பெய்ய வேண்டும்!''

தெற்குக் கடலில் வங்காளக் குடாக் கடலில் அம்மையும் அப்பனும் நன்றாக மூழ்கினார்கள். கடலின் அடிவயிற்றுக்குள்ளே புகுந்து சுழன்று சுழன்று ஆடினார்கள். கடல் மையம் புயலால் சுழன்று சுழன்று கிழக்குக் கரையோரம் நகர்ந்து வந்தது.

வானத்தில் கார்மேகக் கூட்டம் கவியத் தொடங்கியது. காற்றுப் பலமாக வீசி நாட்டின் உட்பகுதிகளுக்கெல்லாம் மேகத்திரளை விரட்டிச் சென்றது.

வடகிழக்குப் பருவமழை பொய்க்கவில்லை.

'வெட்டியடித்தது மின்னல்.
கடல் வீரத் திரை கொண்டு
விண்ணை அடித்தது.
கொட்டியடித்தது மேகம்.
கூ கூவென்று விண்ணைக் குடைந்தது காற்று.
எட்டுத் திசையிலும் இடியத்
தாளம் கொட்டிக் கனைத்தது
வானம்.'

கொட்டியது, கொட்டியது, கொட்டியது மழை; பாய்ந்தது, பாய்ந்தது, பாய்ந்தது வெள்ளம், குளிர்ந்தது, குளிர்ந்தது, குளிர்ந்தது பூமி!

மக்கள் கூட்டத்தின் விழிகளிலே ஆனந்தக் கண்ணீர் பொங்கி மழையோடு கலந்தது. ❋

பளயகாட்ஸ்
சங்கு மார்க்
லுங்கிகள்
கைக்குட்டைகள்

PALAYAKAT COY. PVT. LTD. MADRAS
MADRAS
REGD. TRADE MARK



மதறாஸ் பளயகாட் கம்பெனி(பி)லிட்.
88, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-600 001.

CHARI

பல வகையிலும் பயன்படும் இதனை உபயோகிக்காமல் இவ்வளவு நாள் எவ்வாறு சமைத்தோம்!

பிரெஸ்டீஜ் அளிக்கும் பிரஷர் பேன்



வறுக்க



பொரிக்க



வதக்க



வேக வைக்க



இதில் நீங்கள் வறுக்கலாம், பொரிக்கலாம், தாளிக்கலாம், வதக்கலாம் பின்பு மூடி வைத்து வேக வைக்கலாம்—பிரஸ்டீஜின் பிரஷர் பேன் மிகவும் வசதியானது. உங்களுக்காகவே தயாரிக்கப் பட்டுள்ளது. உங்கள் குடும்பத் தினரின் சுவைக்கேற்ற பதார்த்தங்களைச் சில நிமிடங் களில் தயாரிக்க இது உதவுகிறது.

மூடியில்லாத, கனமான இந்த வாணலி வெங்காயம், காய்கறிகள், மசாலா, மாமிசம், கோழிக்கறி இவற்றைக் குறைந்த அளவு எண்ணெயில் வதக்க உதவுகிறது.

இதைப் பிரஸ்டீஜின் மூடியினால் மூடி விட்டால் உணவு சீக்கிரம் வெந்து விடுகிறது. சிக்கன் புர்த்தா—20 நிமிடங்களில் தயார். மட்டன் தோப்பியாசா—25 நிமிடங்களில். தம் ஆலு—இன்னும் சீக்கிரம். மற்றக் காரியங்களைக் கவனிக்க நேரத்தை மிச்சப்படுத்துகிறது. எரிபொருளும் நீண்ட நாட்களுக்கு வருகிறது.

பிரெஸ்டீஜ் இந்தப் பிரஷர் பேனைத் தருகிறது—இவர்கள்தான இந்தியாவில் முதன் முதலாக மிக அதிகமாக விரும்பி உபயோகிக்கப் படும் பிரஷர் குக்கரைத் தந்தவர் கள்—பிரஷர் குக்கருக்கு முழுப் பாதுகாப்பைத் தரும் ஒப்பற்ற காஸ்கெட் ரிலீஸ் ஸிஸ்டம் என்ற அமைப்பைப் புகுத்தியவர்களும் இவர்களே.

பிரெஸ்டீஜ் பிரஷர் பேன் உங்கள் சமையலறையில் மிக அதிகமாக உபயோகப்படும் பாத்திரம். இது உறுதியான சூடேற்ற ஹெண்டில்களுடனும், கனத்த அலுமினியத் தகட்டினாலான அமைப்புடனும் தயாரிக்கப் படுகிறது. இனி ஒரு பாத்திரத்தில் வதக்கி, இன்னொரு பாத்திரத்தில் வேகவைத்துக் கடைசியில் பிரஷர் குக்கரில் வேக வைக்கத் தேவையில்லை. இந்தப் பிரெஸ்டீஜ் பிரஷர் பேன் ஒரு பாத்திரத்திலேயே பல பாத்திரங் களின் வசதிகளைத் தந்து விடுகிறது.

பாதிக்கும் குறைவான விலையில் இந்தப் பிரஷர் பேனை வாங்குவது எவ்வாறு!

உங்களிடம் ஏற்கெனவே ஒரு பிரெஸ்டீஜ் பிரஷர் குக்கர் இருந்தால் நீங்கள் அதிர்ஷ்டசாலிகள்!

ஒரு சாதாரண கனமான வாணலியின் விலையில் உங்களுக்குப் பிரெஸ்டீஜ் பிரஷர் பேன் கிடைக்கிறது.

உங்கள் பிரஷர் குக்கரின் மூடியை இதில் பொருத்தி விட்டால் உங்களுக்கு ஒரு புது பிரெஸ்டீஜ் பிரஷர் பேன் குறைந்த விலையில் கிடைக்கிறது. உங்கள் கடின உழைப்பின் ஊதியத் திற்குக் குறைந்த விலையில் தரமான தயாரிப்புகளைத் தருவதே பிரெஸ்டீஜின் குறிக்கோள்.

இதுவரை உங்களிடம் பிரெஸ்டீஜ் பிரஷர் குக்கர் இல்லாவிட்டால்

இதோ உங்களுக்கு இரட்டை லாபத்திற்கு ஒரு வாய்ப்பு! இப்பொழுது நாங்கள் இரண்டு அபூர்வமான சமயலறை உபகரணங்களை அளிக்கிறோம்—இந்தியாவிலேயே மிகுந்த பாதுகாப்பைத் தரும் உன்னதமான 'காஸ்கெட் ரிலீஸ் ஸிஸ்டம்' கொண்ட பிரஷர் குக்கரையும், ஆவலைத் தூண்டும் பிரஷர் பேனையும் தருகிறோம். ஒன்றின் விலைக்குச் சிறிது கூடுதலான விலையிலேயே இரண்டும் கிடைக்கிறது. ஒரு மூடி இரண்டுக்கும் உதவுவதால் உங்களுக்கு ரூ. 150/-க்கும் அதிகமான லாபம்.

Prestige PRESSURE PAN

TTK தயாரிப்பு

maa(s) PP 1 Tam e 82

சமூக சீர்திருத்தவாதியும் பிரமுகருமான சுகவனம் அந்த விஷயத்தில் மிகவும் குரூரமான கொள்கைப் பிடிவாதம் உள்ளவராக இருந்தார். வயது முதிர்ந்தும் பிடிவாதத்தைத் தளரவிடவில்லை அவர்.

எவ்வளவு வேண்டியவர்கள் வீட்டுத் திருமணமாயிருந்தாலும், வரதட்சிணை, சீர், செனத்தி என்று பெண்ணைப் பெற்றவர்களைக் கசக்கிப் பிழியும் கல்யாணங்களுக்கு அவர் போவதில்லை. அப்படி ஒரு விரதம் வைத்திருந்தார். சம்பந்தப்பட்டவர்களே நேரில் வந்து பத்திரிகை கொடுத்து அழைத்தாலும் அத்தகைய திருமணங்களை மதித்துப் போகாமல் புறக்கணித்தார். பெண்ணுரிமை இயக்கத்துக்காக கடந்த முப்பது ஆண்டுகளாக அலுக்காமல் சலிக்காமல் போராடி வந்தார் அவர். இந்தப் போராட்டம் அவரை வெகுஜன விரோதியாக்கி இருந்தது.

''பத்தாயிரம், இருபதாயிரம் என்று விலை கொடுத்து வரதட்சிணைக்கு மாப்பிள்ளை தேடுவது என்பது சந்தையில் காளை மாடு பிடிப்பது போல அநாகரிகமாக நடந்து வருகிறது. இது சாஸ்திரங்களின்படியும் சரி அல்ல. மனிதாபிமானப்படியும் சரியல்ல. பெண்ணடிமைத்தனத்தின் அடையாளங்களில் முதன்மையானது வரதட்சிணை'' என்று அவர் முழங்கிய மகாநாடுகளும் கூட்டங்களும் கணக்கில் அடங்காதவை. வரதட்சிணை வாங்கிய ஒரு கல்யாணத்தில் மறியல் செய்து ஜெயிலுக்குக் கூடப் போய்விட்டு வந்தார்.

இப்படி அவரும் அவரைப் போன்ற சமூக சீர்திருத்தவாதிகளும் எவ்வளவோ கரடியாகக் கத்தியும் நாடு திருந்தி விடவில்லை. பழக்கங்கள் மாறிவிடவில்லை. அதுதான் அவரைக் கூடச் சற்றே விரக்தியடைய வைத்தது.

''தன் பெண்ணுக்கு வரதட்சிணை கொடுத்து, ரிஸ்ட் வாட்சிலிருந்து பாத்திரம் பண்டம்வரை சகலமும் வாங்கிக் கொடுத்துச் சிரமப்பட்ட ஒரு தாயோ தந்தையோ, அதை மனத்தில் வைத்துக் கொண்டு தன் பிள்ளைக்கு மணமகளாக வருகிற பெண்ணிடம் கருணையாக நடந்து கொள்வதில்லை. அந்தப் பெண்ணையும் அவளுடைய பெற்றோரையும் கசக்கிப் பிழியவே தயாராயிருக்கிறார்கள். இதை எல்லாம் தவிர்க்க ஒரே வழி படித்த பெண்ணே துணிந்து முன்வந்து 'வரதட்சிணை வாங்கிக் கொள்ளும் எந்த மணமகனையும் நான் திருமணம் செய்துகொள்ள மாட்டேன்' என்று மறுப்பதுதான். இப்படி மறுக்கத் துணியாமல் பெண் ஆணுக்குப் பணிந்து பயந்து போகிற வரை சமூகத்தில் எந்த மாறுதலும் ஏற்படப் போவதில்லை. நாம் எதிர்பார்க்கிற பெண்ணுரிமையும் கிடைக்கப் போவதில்லை'' என்று அவர் கூறிய யோசனையை யாரும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. உலகம் எப்போதும்போல்தான் நடந்து கொண்டிருந்தது.

''சுகவனத்துக்கென்ன? பிள்ளையா குட்டியா? ஒன்றும் இல்லை. அவர் என்ன வேண்டுமானாலும் பேசலாம்'' என்று அவருக்குக் குழந்தை குட்டிகள் இல்லாததால்தான் அவர் இப்படி எல்லாம் மேடைகளில் முழங்குவதாகச் சிலர் பேசிக் கொண்டார்கள். யார் என்ன பேசினாலும், எப்படிக் கிண்டல் செய்தாலும் பெண்ணுரிமை இயக்கத்திலும், வரதட்சிணை ஒழிப்பு இயக்கத்திலும் அவருடைய தீவிரம் குறையவே இல்லை. வயது முதிர்ந்த பின்னும் அவரைப் பொறுத்தவரை இளமையின் வேகத்துடனேயே செயற்பட்டுக் கொண்டிருந்தார் அவர். அவ்வப்போது சிறு சலிப்பு ஏற்படுவது மட்டும் தவிர்க்க முடியாததாயிருந்தது.

ஒரு சமயம் பக்கத்து வீட்டில் குடியிருந்த சிவன்கோயில் குருக்களின் கடைசிப் பெண் குழந்தையான சிறுமி காமு, தெருவில் பாண்டி விளையாடினாள். அப்போது பாண்டி விளையாட்டுக்கான கட்டங்களையும் கோடுகளையும் ஒரு பையன் காலால் அழித்தான், அவனை நோக்கி ஆத்திரத்தோடு, ''உங்க மாதிரி திமிர் பிடிச்ச ஆம்பளைக் கடங்காரங்களோட கொட்டத்தை ஒடுக்கறேன் பாரு!'' என்று அவள் பதில் சொன்னதற்காக அவளைப் பாராட்டித் திண்ணையிலிருந்தே கரகோஷம் செய்து சாக்லேட் வாங்கிக் கொடுத்திருந்தார், சுகவனம். பெண்ணுரிமை இயக்கத்தில் அவருக்கு இருந்த வெறி காரணமாக, யார் ஆண்களைத் திட்டினாலும், ஆண்களின் கொடுமையைப் புரிந்து கொண்டு திட்டினாலும், புரியாமலே திட்டினாலும், அவர்களுக்கு அவருடைய பாராட்டுக் கிடைத்தது; பரிசும் கூடக் கிடைத்தது.

''மாமா, இப்ப நீங்க எதுக்காகக் கை தட்டினீங்க? எதுக்காக என்னைக் கூப்பிட்டுச் சாக்லேட் வாங்கித் தர்றீங்க?'' என்று அன்றைக்கு அந்த அறியாப் பருவத்துச் சிறுமி காமு கேட்டபோது, ''உனக்கு

அதெல்லாம் இப்பப் புரியாது அம்மா! உன் மாதிரி ஒவ்வொரு பொண்ணும் நெனைவு தெரிந்து வயசு வந்த பின்பும் அந்த மாதிரி தைரியமா ஒவ்வொரு ஆம்பளைக் கடங்காரனின் கொட்டத்தையும் ஒடுக்கறதுன்னு துணிஞ்சிட்டீங்கன்னு, அன்னியிலேருந்து பெண் குலம் உருப்பட ஆரம்பிச்சுடும்'' என்று பதில் சொல்லியிருந்தார் அவர்.

பல வருஷங்களுக்கு முன்பு நடந்தது இது. ஆண்களையும் அவர்கள் கொடுமைகளையும் அஞ்சாமல் எதிர்க்கும் பெண்கள் உருவாகவேண்டும் என்பது சுகவனத்தின் ஆசை. நாடு முழுவதும் ஓடியாடி நகரங்களிலும் சிற்றூர்களிலும், சமயம் வாய்த்த போதெல்லாம் இந்தக் கருத்துக்களைப் பிரசாரம் செய்தார் சுகவனம். பெண்கள் மகாநாடுகளைக் கூட்டித் தீர்மானம் போட்டார். என்ன பிரசாரம் செய்தும் பயன் இல்லை. அவருடைய மனைவியே, அவரைக் கேலி செய்தாள்:

''உங்களுக்கு எதுக்கு இந்த வம்பெல்லாம்? யார் எப்படி வேணும்னாலும் போயிட்டுப் போகட்டும். குடுக்கிறவா குடுக்கறு. வாங்கறவா வாங்கிக்கறு. நீங்க பிரசாரம் பண்ணி யாரும் எதையும் விட்டுட்டதாதத் தெரியலியே!''

''நான் அதைப் பத்திக் கவலைப்படலே. நாடு பூரா என்னுடைய நல்ல கருத்துக்களை விதைக்கிறேன். எங்கேயாவது ஒரு சின்ன விதை தப்பித் தவறி முளைக்காமலியா போயிடப் போறது?''

''எப்பிடி முளைக்கும்? நீங்க முளைக்கும்னு சொப்பனம் கண்டுண்டு திண்ணையிலே உட்கார்ந்திண்டிருக்க வேண்டியதுதான். உங்க சொந்தத் தம்பியே நீங்க புலம்பறதைக் காதுலே போட்டுக்கலியே! அவரோட மூத்த புள்ளை கல்யாணத்துக்கு இருபத்தையாயிரம் கையிலே, வைரத்தோடு, வெள்ளிப் பாத்திரம், முப்பது சவரன் நகை. புள்ளைக்கு ஸ்கூட்டர்னு பொண் விட்டாரைக் கொள்ளையடிச்சார். போன மாசந்தான் நடந்துது. உங்க தங்கை அடுத்த மாசம் தான் பெண்ணுக்குக் கலியாணம் பண்ணப் போறு. பொண் பி.காம். படிச்சுப் பாங்க்லே ஆபிஸரா இருக்கா. மாசம் ஆயிரம் ருபாய் வரை சம்பாதிக்கிறு. ஆனாலும் உங்க தங்கை அவளுக்குக் கைநிறைய வரதட்சிணையைக் குடுத்துத்தான் மாப்பிள்ளையைத் தேடப் போறு. உங்க உபதேசங்களை உங்களோட சொந்தத் தம்பி தங்கைகளே கேட்டுக்கத் தயாராயில்லாத போது ஊராரா கேட்கப்போறு?''

அவள் சொன்னவை எல்லாம் உண்மைதான். மனைவியை மறுத்துப் பேச அவரிடம் எந்த வாதமும் இல்லை.

''நீங்க சொல்ற லட்சியங்களை நீங்களே கடைப்பிடிச்சு மத்தவாளுக்கு முன்மாதிரியா நடந்து காமிக்கலாம்னு உங்களுக்குப் பகவான் குழந்தை குட்டிகளையே குடுக்கலே.''

''எங்கே இப்படி ஓடிக் கிட்டிருக்கிங்க??''

''பாங்க்ல ஓ. டி. கேட்டேன். இப்ப அவுங்க பின்னால ஓடிக் கிட்டிருக்கேன்!''

மனைவி இதையும் சிரித்துக்கொண்டேதான் சாதாரணமாகச் சொன்னாள். ஆனாலும் அவருக்கு இது உறைத்தது. ஆசார்ய சுவாமிகளிடம் போய் ஆசி பெற்றுத் திருமணம் செய்யும் பெரிய மனிதர்கள்கூட அவருடைய உபதேசங்களான, 'வரதட்சிணை கூடாது, ஆடம்பரங்கள், ஜானவாசம் எல்லாம் வேண்டாம்' என்ற அறிவுரைகளைப் பொருட்படுத்துவதில்லை. வரவரக் கல்யாணம் என்ற புனித உறவு ஒரு வியாபாரம் போல ஆகிவிட்டது. ஆண், பணத்தின் துணையோடு ஒரு பெண்ணைத் தேடிப் போனால் அது பாவமாகவும், குற்றமாகவும் கருதப்படுகிறது. சமூகப் பழிக்கும் இழிவுக்கும் கூட ஆளாகிறது. ஆனால் ஒரு பெண் எத்தனை அழகியாயிருந்தாலும் அவளுடைய பெற்றோர் அநியாய விலை கொடுத்துத்தான் அவளுக்குக் கணவனைத் தேட வேண்டியிருக்கிறது. அதை யாரும் பாவமாகவோ குற்றமாகவோ கருதுவதில்லை. சமூகமும் பழிப்பதில்லை.

நினைக்க நினைக்க அவர் மனம் குமுறியது. நாட்டில் ஒரு படித்த பெண்ணாவது இதை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்த மாட்டேனென்கிறளே! சுயமரியாதையுள்ள, மானமுள்ள, ரோஷமுள்ள, ஒரு புதுமைப் பெண்கூட இன்னும் இங்கே பிறக்கவே இல்லையா? ஒரு புருஷனின் துணைக்காகவும், சுகத்துக்காகவும், பாதுகாப்புக்காகவும் பெண் கொள்ளை விலை கொடுப்பது அவளுக்கே உறைக்கவில்லையா?

இவ்வளவு அவமானமும், பணப் பேரமும், தாழ்வும் ஏற்பட்டும் குனிந்த தலை நிமிராமல் இதை எல்லாம் பொறுத்துக்கொண்டு எப்படியாவது புக்ககத்தில் நுழைந்துவிடத் தயாராயிருக்கும் பெண்கள் உள்ள வரை இந்நாட்டில் பெண்ணுரிமையாவது வெங்காயமாவது!

பெரிய நகரங்களில் பெண்ணுரிமை மகாநாடு என்று போட்டுப் பந்தல் நிறையப் படித்த பெண்களைக் கூடச் செய்து, அவர்களின் உற்சாகமான கரகோஷத்துக்கிடையே முப்பது வருஷமாகத் தாம் முழங்கிய முழக்கங்கள் ஒரு பயனும் அளிக்கவில்லையே என்று எண்ணியபோது சுகவனத்துக்குத் தம்மேலேயே வெறுப்பாயிருந்தது; கோபம் கோபமாக வந்தது.

"நிமிர்ந்த நன்னடை
நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும்
அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச்
செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர்
திறம்புவதில்லையாம்"

என்று பாடிய மகாகவி பாரதியின் புதுமைப் பெண் ஒருத்தியை இந்த இருபதாம் நூற்றுண்டில் தமது எழுபதாவது வயதில் கூட அவரால் எங்கும் காண முடியவில்லை. மிகவும் ஏமாற்றமாயிருந்தது அவருக்கு. முதுமையும், மனத்தளர்ச்சியும் அவரைப் படுக்கையில் தள்ளிவிட்டன. கூட்டங்களுக்குப் போவது குறைந்தது. பெண் விடுதலை, பெண்ணுரிமை பற்றி முழங்கி வந்த அவர் தமது கொள்கைகளில் எந்தத் தவறும் இல்லை என்று இன்னும் திடமாக நம்பினாலும் நாட்டில் அந்தச் சிந்தனைகள் அறவே முளைக்க மறுப்பதை எண்ணி வெதும்பினார். பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னால் துடுக்குத்தனம் நிறைந்த பேதைச் சிறுமியாயிருந்தபோது, 'உங்க மாதிரி ஆம்பிளைக் கடங்காரங்களோட கொட்டத்தை ஒடுக்கறேன் பாருடா!' என்று ஒரு பையனைப் பார்த்துச் சவால் விட்ட பக்கத்து விட்டுக் குருக்களின் பெண்ணுக்கு இப்போது கல்யாண வயது. காமு படித்து ஒரு தனியார் கம்பெனியில் வேலை பார்த்தாள். மாதச் சம்பளம் அறுநூறு வந்தது. ஆனாலும் அவளுக்குத் திருமணம் ஆக முடியவில்லை. கிட்டத்தட்ட ஐம்பதினாயிரம் ரூபாய் வரை தேவைப்பட்டது. பாவம்! குருக்கள் அவ்வளவு பெரிய தொகைக்கு எங்கே போவார்? சிரமப்பட்டார்; திணறினர்.

அதை எல்லாம்விட வேடிக்கை, படித்துப் பட்டம் பெற்றும்

தங்கள் பையனுக்கு வேலை கிடைக்காததால்-பெண் வேலை பார்க்கிறாள். பையன் வேலை கிடைக்காமல் சும்மாயிருக்கிறான் என்று கேவலமாகப் பேசுவார்கள். ஆகவே கல்யாணத்துக்கு முன்னால் பெண் வேலையிலிருந்து விலகிவிட வேண்டும் என்று குருக்களிடம் நிபந்தனை போட்டிருக்கிறார் ஒரு தந்தை. அது ஒன்று மட்டும் நிபந்தனை அல்ல. கையில் ரொக்கம் பத்தாயிரம், இருபது சவரன் நகை, வைரத் தோடு, பாத்திரம் பண்டங்கள் என்று செலவுள்ள பெரிய பட்டியல் வேறு!

படித்து வேலை பார்க்கத் துப்பில்லாத பையனுக்காக இவ்வளவு சீர் செனத்திகளும் பண்ணி, ஏற்கனவே தான் பார்த்துக்கொண்டிருக்கிற வேலையையும் விட்டுவிட்டுத் திண்டாடக் காமு தயாராயில்லை. அந்த ஏற்பாடு பிடிக்காததால் கல்யாணம் தட்டிப் போயிற்று. சில பையன்கள் சம்பாதிக்கிற, வேலை பார்க்கிற பெண்தான் வேண்டுமென்று வந்தார்கள். ஆனால் பெண் சம்பாதிக்கிறாள் என்பதற்காக வரதட்சிணை இருபது சவரன் வகையறாக் கோரிக்கைகளில் எதையும் அவர்கள் குறைத்துக் கொள்ளத் தயாராயில்லை.

இந்த விவரங்களை எல்லாம் மனைவி மூலந்தான் அறிந்து கொண்டார் சுகவனம். அவரைப் பொறுத்த வரை வெளி நடமாட்டமே இல்லாமற் போயிற்று. படுக்கையோடு படுக்கையாகக் கிடக்கும் நோயாளியாகி விட்டார் அவர்.

இப்படிப் பக்கத்து வீட்டுக்குச் சுமார் ஆறு மாத காலத்தில் பத்துப் பன்னிரண்டு பேர் வந்து பார்த்துத் தட்டிப் போயிற்று. 'காமுவுக்கு ராசியில்லை' என்று கெட்ட பேர் வேறு உண்டாகி விட்டது. படித்த பெண்ணாகிய காமுவுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. தடியன் தடியனாக ஆண் பிள்ளைகள் பெற்றோர், சகோதர சகோதரர்களுடன் வந்து இனிப்பு காரம், காபி சாப்பிட்டுவிட்டுத் தாறுமாறாகக் கேள்வி கேட்டுவிட்டுப் பாட்டுப் பாடச் சொல்லி ரசித்துவிட்டுப் போவது ஒரு நடைமுறையாகிவிட்டது.

கண்காட்சியில் விற்பனைக்கு ஊதுவத்திக் கடை வைப்பது போல் இந்தியப் பெண்கள் ஆகிவிட்டார்களே! எவன் வேண்டுமானாலும் வந்து மோந்து பார்த்துப் பேரம் கூடப் பேசிவிட்டு வாங்காமலே போய்விட வசதி இருந்தது. காமு உள்ளூற மனம் குமுறினாள்; கொதித்தாள்.

பதின்மூன்றாவது ஆளாக அன்று இன்னொரு பிள்ளை பார்க்கவரப் போவதாகக் குருக்கள் சொல்லியிருந்தபர். அலுவலகத்தில் அரை நாள் லீவு போட்டு விட்டுப் பிற்பகலிலேயே வீடு வந்துவிட்டாள் காமு. தாய் காமுவைச் சிங்காரித்தாள். பெண் பார்க்கும் நாடக விழாவுக்குத் தயாராக்கினாள். இனிப்பு காரம், காபி எல்லாம் தயாராயின.

பிளட்பிரஷர், பலவீனம், அசதி எல்லாமாகச் சேர்ந்து அன்று சுகவனத்தை மிகவும் தளரச் செய்திருந்தன. அடித்துப் போட்டது போல் படுக்கையில் கிடந்தார். வீட்டுக்கு வெளியே நடமாட்டம் இல்லாது போய் மாதக் கணக்காகி விட்டது.

மாலை ஏழு மணி இருக்கலாம். படுக்கையருகே யாரோ விசும்பி விசும்பி அழும் ஒலி கேட்டுச் சுகவனம் கண் விழித்தார்.

நன்றாக அலங்கரித்த கோலத்தில் பக்கத்து வீட்டுக் குருக்களின் மகள் காமு கண்ணீரும் கம்பலையுமாக நின்றுகொண்டிருந்தாள்.

''மாமா, நீங்கதான் என்னைக் காப்பத்தணும். அப்பா என்னை அடிக்க வரா.''

''ஏன்? நீ என்ன தப்புப் பண்ணினே?''

''ஒரு தப்பும் பண்ணலே மாமா! இன்னிக்கிச் சாயங்காலம் என்னை ஒருத்தன் பொண் பார்க்க வந்தான். அவனோட அப்பா அம்மாவும் கூட வந்திருந்தா. எல்லாம் முடிஞ்சு வரதட்சிணை பேரம் பேசறப்போ ஒரு ஸ்கூட்டர் கண்டிப்பா வாங்கித் தரணும்னு அந்தப் பையனே வற்புறுத்தினான்.

'''இப்ப உடனே முடியாது. கலியாணம் ஆகட்டும். ஆடிக்கு அழைக்கறப்ப ஸ்கூட்டர் விஷயம் கவனிக்கிறே'ன்னு அப்பா பணிவாகக் கெஞ்சிப் பார்த்தார்.

''அவன் கேட்கலே. இப்பவே வாங்கியாகணும்னு பிடிவாதம் புடிச்சான். இந்தக் கல்யாணத்தையே, அப்பா பரம்பரை பரம்பரையா ஆண்டு அநுபவிச்ச வீட்டை விலைக்கு வித்துத்தான் பண்ணப் போறார், அதுலே ஸ்கூட்டரும் சேர்ந்ததுன்னா அவராலே தாங்க முடியாது. என்னோட போகலே. இன்னம் எனக்கு ரெண்டு தங்கைகள் வேற இருக்கா, எங்க வீட்டிலே.

''நிலைப்படி ஓரமா நின்னு இந்தப் பேரத்தைக் கவனிச்சிண்டிருந்த

எனக்கு ஆத்திரம் ஆத்திரமா வந்துது. நானும் எவ்வளவோ அடக்கிப் பார்த்தேன். முடியலை. திடீர்னு முன்னுலே போய் நின்னு, ‘அப்படன்னு நீ ஸ்கூட்டரையே தாலி கட்டிக் கல்யாணம் பண்ணிக்கோடா! எனக்குத் தாலி கட்டவேண்டாம், போடா வெளியிலே!’’ என்று கூப்பாடு போட்டு அவங்களை எல்லாம் துரத்திட்டேன்.

‘‘காரியத்தைக் கெடுத்திட்டியேடீ பாவி! நான் உடனே உடனே வாங்கி ஸ்கூட்டரைக்குடுத்துட்டுப்போறேன். நீ ஏண்டி குறுக்கே வந்து பேசினே?’ என்று அப்பா கையை ஓங்கிண்டு என்னைத் துரத்தனுர். நீங்களே சொல்லுங்கோ நான் செஞ்சது தப்பாமா மா?’’

‘‘ஒரு தப்பும் நீ பண்ணலே. குழந்தை. நீ பண்ணினது தான் சரி. உன்னை, இதுக்காக மனப்பூர்வமாப் பாராட்டறேன். இந்தா, இதை வச்சுக்கோ’’ என்று படுக்கைக்கு அருகே ஸ்டூலில் பழக் கூடையிலிருந்து ஆப்பிள் ஒன்றை எடுத்துக் காமுவிடம் கொடுத்தார் சுகவனம்.

அவள் பல வருடங்களுக்கு முன்னுல் பேதைப் பருவத்துச் சிறுமியாகத் தெருவில் பாண்டி விளையாடும்போது, ‘உன்னை மாதிரி ஆம்பிளைக் கடங்காரங்களோட கொட்டத்தை ஒடுக்கறேனு இல்லையா பாரு!’ என்று ஒரு பையனிடம் சவால் விட்டபோது கரகோஷம் செய்து சாக்லேட் வாங்கியளித்து அவளைப் பாராட்டிய அதே உற்சாகத்தோடு இப்போதும் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தார் சீர்திருத்தவாதி சுகவனம்.

அப்போது அவருடைய மனைவி அவருக்குக் காபி கொடுக்க வந்தாள். சுகவனத்துக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. ஒரே உற்சாகமயம்.

‘‘இதோ பாருடீ காமுவை! நான் தூவிய சிந்தனை விதைகள் எங்குமே முளைக்கலேன்னியே. இங்கே பக்கத்திலேயே முளைச்சிருக்குடி. ஸ்கூட்டர் வாங்கித் தந்தால்தான் தாலி கட்டுவேன்னு சொன்ன பேடிப் பயலைப் பார்த்து, ‘நீ ஸ்கூட்டரையே கட்டிக்கோ; போடா’ன்னு மூஞ்சியிலே துப்பிட்டு வந்திருக்கா’’ என்று மனைவியிடம் காமுவை வியந்து பாராட்டினுர். அவர் மனைவி வருத்தப்பட்டாள்.

‘‘ஐயையோ! திமிர் பிடிச்ச பொண்ணுன்னு, கண்டபடி யாரையும் எதிர்த்துப் பேசும்னு கெட்ட பேராயிடப் போறதே!’’

‘‘போடீ பைத்தியம்! இது திமிர் இல்லே. இந்தியப் பெண்களுக்கு இப்படி ஒரு ஞானச் செருக்கு வரணும்னுதான் அன்னிக்கே பாரதியார் ஏங்கினுர். நானும் ஏங்கினேன். பாரதியாரை விட நான் அதிர்ஷ்டசாலிடி! இதோ என் கண் முன்னுலேயே அப்படி ஒரு பொண்ணை நான் நேரே பார்த்தாச்சு’’ என்று கூறியபடியே காமுவின் பக்கம் திரும்பி, ‘‘நீ கவலைப்படாதே, குழந்தை! பெண்மையின் சுதந்தர உணர்வுகளைப் புரிந்து கொண்டு மதிக்கும் உண்மையான நல்ல ஆண் பிள்ளை ஒருவனைத் தேடி உனக்கு நானே கல்யாணம் பண்ணி வைக்கிறேன்’’ என்று உறுதியளித்தார் சுகவனம்.

‘‘ராத்திரிக்குக் கஞ்சியா? கேப்பைக் களியா?’’ என்று அவருடைய இரவு உணவைப்பற்றி விசாரித்தாள் மனைவி.

‘‘ரெண்டுமே வேண்டாம். வடை பாயசத்தோடு சமையல் பண்ணு. உடனே இதைக் கொண்டாடியாகணும்’’ என்று காமுவை நோக்கிப் புன்னகை புரிந்தபடி மனைவிக்கு மறுமொழி கூறினுர் சுகவனம். *

சென்டெக்ஸ்

தயாரிப்பாளர்கள் & ஏற்றுமதியாளர்கள்

படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், மேஜை விரிப்புகள்,
அலங்காரத் துணிகள், டவல்கள், டெர்ரி டவல்கள் மற்றும்
திரைச் சீலைகள், சீர்சர்க்கர் முதலியன....

எங்கள் பிரத்யேக ஷோ ரும்கள்:

உம்மிடியார் அங்காடி மையம்
எல். ஐ. சி. எதிரில்
811, அண்ணசாலை, சென்னை-600 002

நீலகிரிஸ் டெக்ஸ்டைல்ஸ்
நீலகிரிஸ் பில்டிங்ஸ்,
11, பிரிகேட் ரோட், பெங்களூர்

சென்னிமலை நெசவாளர்கள் கூட்டுறவு சங்கம் லிமிடெட், சென்னிமலை, தமிழ்நாடு.

எம். பி. நாச்சிமுத்து, பி.ஏ.பி.எல்.,
தலைவர்

—Elegant

உ

ஜெய ஜெய சங்கர
ஹர ஹர சங்கர

★

தினசரி ஆராதனைக்குச்
சிறந்த தூபப் பவுடர்

ஸ்ரீசாமுண்டீஸ்வரி தசாங்கம்

இல்லந்தோறும் ஈடு இணையற்ற நறுமணத்தைப் பரப்பி
யாவரையும் திருப்தியடையச் செய்யும் தூபப் பவுடர்

தயாரிப்பாளர்: **வேதவியாசா பரிமளா ஒர்க்ஸ்**
57, மலைவாசல், திருச்சி-620 002 : : தமிழ்நாடு

Tel : அமைதி Phone: 485

நிறுவனர்: அமரர் S. சண்முகம்

ஆனந்தம் சோப்

கும்பகோணம் - 612 001

Where technology takes the reins...

The Power of technology is the power to respond to challenges for growth. Not just economic growth, but the upgrading of social prospects and a fostering of the right environment that holds a realistic promise for the future.

At Amalgamations, we have always endeavoured to harness technology in this spirit, and have come a long way since our highly finished and embellished brougham. Today our products and services touch many walks of national life. They include among others: Diesel engines, Tractors and farm equipment, a comprehensive range of auto ancillary products, Engineer's cutting tools, Paints, Transport services, Coffee and Tea, Books and Publishing.

Over the years in this continuous process of growth we have successfully sustained our technological lead by ceaselessly striving to keep abreast with the latest developments and adapting them to suit national goals and aspirations.



Simpson & Co. Ltd.
Addison & Co. Ltd.
Addisons Paints & Chemicals Ltd.
Amco Batteries Ltd.
Amalgamations Repco Ltd.
India Pistons Ltd.
Bimetal Bearings Ltd.
Indiapistons-Repco Ltd.
Shardlow India Ltd.
Tractors and Farm Equipment Limited
L.M. Van Moppes Diamond Tools India Ltd.
Reichhold Chemicals India Ltd.
The Wheel & Rim Co. of India Ltd.
Associated Printers (Madras) Ltd.
Associated Publishers (Madras) Ltd.
George Oakes Ltd., Madras.
George Oakes Ltd., (Bombay Operations)

Higginbothams Ltd.
The Madras Advertising Co. Ltd.
Simpson & General Finance Co. Ltd.
Speed-A-Way Ltd.
Sri Rama Vilas Service Ltd. Madras.
Sri Rama Vilas Service Ltd., Kumbakonam.
T. Stanes & Co. Ltd.
Stanes Amalgamated Estates Ltd.
Stanes Motors (South India) Ltd.
Stanes Tyre & Rubber Products Ltd.
Indian Cashewnuts and Plantations Ltd.
The United Coffee Supply Co. Ltd.
The United Nilgiri Tea Estates Co. Ltd.
Wallace Cartwright & Co. Ltd., London.
Malaysia Pistons Sdn. Bhd., Malaysia.

Amalgamations Limited

861, Anna Salai,
Madras-600 002.

MAC/AMAL/080

வெளிச்சத்தில் பார்த்தபோது

லக்ஷ்மி

ஆபீஸ் கோப்புக்களைப் புரட்டிக் கொண்டிருந்தபோது கணேசனுக்கு வீட்டின் நினைப்பு வந்து விட்டது. 'கட்டாயம் இன்று தேநீர் வேளையின்போது பாங்கியிலிருந்து பணம் எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். பகல் உணவு நேரத்தில் எதிர்ச் சாரியிலிருந்த அந்தப் பெரிய துணிக் கடைக்குப் போக வேண்டும். மாலதி ஆசைப்பட்ட பிரின்டெட் சில்க் புடைவையை வாங்கிக்கொண்டு வந்து விடவேண்டும். தீபாவளி நெருங்கிக் கொண்டிருக்கிறது. இப்போதே கடையில் கூட்டம்' என்று தன்னுள் தீர்மானித்துக் கொண்டான்.

கையோடு அவள் கட்டிக்கொடுத்த தயிருஞ்சாதப் பொட்டலத்தைப் பிரிக்க நேரமின்றி அதை ஆபீஸ் பையனுக்குக் கொடுத்து விட்டுப் பதிலுக்கு ஒரு தம்ளர் தண்ணீர் குடித்துவிட்டு அவன் கடைக்கு விரைந்திருந்தான். முந்நூற்று ஐம்பது ரூபாய். அவனது பட்ஜெட்டுக்கு மேல் கூடுதலாகி விட்ட தொகைதான். பாவம் மாலதி! இந்த வருஷமாவது ஆசைப்பட்டதை அடையட்டும் என்ற தாராள மனசுடன் பார்சலை வாங்கிக்கொண்டு திரும்பினான். புடைவையைப் பார்த்துவிட்டு அவள் முகத்தில் தோன்றப் போகும் புன்னகையையும் அந்த அழகிய கண்ணில் மிதக்கப் போகும் சிரிப்பையும் பஸ்ஸில் கற்பனையில் கண்டு கால் கடுக்க நின்று பிடித்துக்கொண்டு தொங்கிப் பயணப்பட்டவனுக்கு ஒரு பெருத்த அதிர்ச்சி.

புடைவையைப் பிடுங்கிப் பிரித்துப் பார்த்தாள் மாலதி. முகம் சிறுத்துப் போனது.

அவள் தோழி ஷைலா அன்று பகல் அவளுக்குக் காட்டிய தீபாவளிப் புடைவைகளுக்கு முன் அந்தப் பிரிண்டட் சில்க் ஒரு பிடி துணி போலத்தான் தெரிந்தது. 'இது என்ன புடவை வேண்டிக்கிடக்கு!' ஏக்கத்தில் மனத்தில் கசப்பு வழிந்தது:

ஷைலாவைப் போல ஆயிரத்திற்கு மேல் போட்டுப் புடைவைகள் வாங்கும் காலம் அவள் வாழ்வில் எப்போது ஏற்படப் போகிறது? அல்லது அப்படி ஒரு பெரிய பங்களாவில் தான் வாழ அவள் நினைத்துப் பார்க்க முடியுமா?

''என்ன ஒண்ணுமே சொல்லலையே! நிறம் பிடிக்கலையா?'' கணேசன், மிக அருகில் வந்து கன்னத்தைத் தொட்டபோது அவளுக்கு எரிச்சலாக இருந்தது. 'வாழ்க்கையே புடிக்கலை' என்று வெடிக்க வேண்டும் போன்று பொருமையால் பொங்கிக் கொண்டிருந்தாள்.

''பிடிக்கிறது; விலைதான் சற்றுக் கூடுதலாக இருக்கு'' என்று விழுங்கினாள்.

''போன தீபாவளிக்குக் கூட உனக்கு நல்ல புடைவை எடுக்கலேன்னு, கொஞ்சம் கூடக் குறைய இருந்தால் பரவாயில்லைன்னு எடுத்தேன். எனக்கு வேட்டியும் துண்டும் மட்டும் போதும். டெர்ரீன் ஷர்ட் வேண்டாம்னு துணிச்சலோடு உனக்கு வாங்கிட்டு வந்திட்டேன். இதுக்கு ஜோடியா ரவிக்கைத் துணி பார்த்து வாங்கித் தைக்கக் கொடுத்திடு'' என்று தன் பர்சிலிருந்து இருபது ரூபாய்களை அவளிடம் நீட்டினான்.

''காபி சாப்பிடுங்கோ. வெந்நீர் எடுத்து வச்சிருக்கேன். குளிச்சுட்டு வந்தா, சூடு ஆறுமுன் சாப்பிடலாம்'' என்றபடி புடைவைப் பொட்டலத்துடன் அவள் உள்ளே மறைந்து போனாள்.

அவள் முகத்தில் ஏன் சிரிப்பையே காணவில்லை? சரம் பூ வாங்கித்தந்து விட்டால் வாயெல்லாம் பல்லாகச் சந்தோஷத்தில் முக முழுவதும் பூவாய் மலர்ந்துவிடும் மாலதி கடுகடுவென்று.. ஏன்? சாப்பாட்டுக்குப் பின் வேலையின் களைப்பில் வெகு நேரம் சிந்திக்க முடியாது அவன் சீக்கிரம் உறங்கிப் போனான்.

ஆனால் அவள் உறங்கவில்லை.

அன்று காலைக் கடைத்தெருவில் எதிர்பாராத விதமாக ஷைலாவைச் சந்திக்க நேரிட்ட பிறகே அவளுக்கு, வாழ்க்கை தன்னை

ஏமாற்றி விட்டது என்று ஓர் அதிர்ச்சி, ஆத்திரம், குமுறல் எல்லாம்.

காலையில் சமையலுக்குப்பின் வேலைக்காரக் கிழவியிடம் குழந்தையை ஒப்படைத்துவிட்டு அவள் கடைத் தெருவுக்குப் போயிருந்தாள். தள்ளுபடி விற்பனையில் துணிகள் விற்கப்படுவதைப் பத்திரிகை விளம்பரத்தில் பார்த்துவிட்டு ஆவலை அடக்க முடியாமல் சிரமப்பட்டுச் சேர்த்து வைத்திருந்த நூறு ரூபாய்களுடன் கிளம்பியிருந்தாள்.

''ஹலோ!'' என்ற குரல் பின்னாலிருந்து எழுந்தது.

கண்ணைக் கவர்ந்த அந்தத் துணி விரிப்பை மேஜைமீதே போட்டுவிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

என்ன ஆச்சரியம்! பல ஆண்டுகளுக்குப் பின் அவள் தன் கல்லூரித் தோழி ஷைலாவைப் பார்த்தாள். போலி முத்துத் தோடும் கவரிங் வளையலும் பாசி மணி மாலையுமாகச் சிற்றப்பாவின் உதவியால் படித்துக் கொண்டிருந்த மாணவி. ஹாஸ்டல் தோழி ஷைலா இல்லை அவள், இப்போது.

காதுகளிலும் மூக்கிலும் வைரங்கள் மின்ன, கழுத்து, கைளில் தங்கம் ஒளியிட, மேனியை மெல்லியதோர் அமெரிக்கன் ஜார்ஜெட் தழுவ, முன்னைவிட ஒரு சுற்றுப் பருமனில், முதிர்ச்சியடைந்த முகத்தில் பணக்காரக் களையோடு நின்ருள் ஷைலா.

'இவளுக்கு எப்படி இந்த யோகம்?'

பிரமித்துச் செயலற்றுப் போனவளின் கையை ஷைலா அன்புடன் பற்றிக் கொண்டாள்.

''கல்லூரிப் படிப்புக்குப் பின் நாம் சந்திக்கவே இல்லை. நான் எங்கள் கிராமத்துக்குப் போய் விட்டேன். நீ உன் ஊருக்குப் போயிட்டே. கடிதப் போக்குவரத்து இல்லாமற் போனதில் நமக்குக் கல்யாணமான போது ஒருவருக்கொருவர் அழைப்பு அனுப்பித் தெரிவித்துக் கொள்ளமுடியவில்லை. ஆறு வருஷங்கள் ஆனபோதிலும் நீ அப்படியே கொஞ்சங்கூட மாறுது..'' அவள் பேசி முடிக்குமுன் பொருமை உணர்வு திகுதிகுவென்று நெஞ்சுக்குள் மூண்டெழுவதை மாலதி உணர்ந்தாள்.

திமிராகப் பேசுகிருள். தான் திடீர்ப் பணக்காரியாகிவிட்ட அகந்தை. கணேசனுக்கு மாலதியைக் கல்யாணம் செய்து கொடுப்பதற்குள் அவள் தந்தை எப்படித் திணறிப் போனுர்! அம்மாவின் நகைகள் உருமாறி, அப்பாவின் கடைசிச் சொத்தான ஒரு கிரவுண்ட் பூமி கைமாறித் தான் கழுத்து மட்டும் கடனில் அமுங்கிக்கொண்டு, மகளைக் கரையேற்றிவிட அவர் பட்ட பாடு!

அவர்களை விட வசதிக் குறைவான சிற்றப்பா தயவில் அநாதை வளர்ந்த ஷைலாவுக்கு எப்படி இந்த வாழ்க்கை அமைந்தது?



''என்னடா சதித் திட்டம், உள்ளூறச் சிரிச்சுக்கறே?''

''என்னேடு போட்டி போட்டுண்டு விச்சு வாங்கின வாணமெல்லாம் புஸ்வாணமாப் போயிடுத்து!''

எண்ணி எண்ணி மாய்ந்து போனுள் மாலதி.

ஷைலா கையில் ஒரு பெரிய பார்சலுடன் புறப்படத் தயாராக அவள் அருகில் வந்தாள்.

''மாலதி, பல வருஷங்களுக்குப் பின் சந்திக்கிரும். எங்க வீட்டுக்கு வந்துட்டுப் போயேன். கவலைப் படாதே! காரில் பத்திரமாகத் திருப்பி அனுப்பிடறேன்.''

'கார் வேறே இருக்கா? அடி சக்கை!' என்ற வியப்பில் வீட்டையும் குழந்தையையும் மறந்து அவளைப் பின்பற்றினுள் மாலதி.

படகு போன்ற கார் சாலையில் நீந்தியபடி அடையாற்றில் பெரியதொரு பங்களா வாசலில் நின்ற போது இன்னேர் அதிர்ச்சி அவளுக்கு.

முன்னறையில் நுழைந்தவள், கால்களைப் புதைத்த கனத்த கம்பளி விரிப்பின் மீது நின்று கொண்டு அறையின் அலங்காரத்தை அதிசயமாகப் பிரமிப்புடன் பார்த்தபடி நின்றுவிட்டாள். மிருதுவான சோபா ஒன்றில் சிநேகிதியை உட்காரச் சொல்லி உபசரித்த ஷைலா, அவற்றிலிருந்த பித்தான்களில் ஒன்றை அமுக்கினுள். கதவுக்குப் பின்னுல் இருந்த ஒரு வேலையாள் எட்டிப் பார்த்தான். அவர்கள் சாப்பிடக் குளிர் பானம் எடுத்து வரச் சொல்லி ஏவிவிட்டு, எதிரே உட்கார்ந்து கொண்டாள். சில நிமிடங்களில் கிரிஸ்டல் கண்ணுடித் தம்ளரில் குளிர் பானமும், பீங்கான் தட்டுகளில் நெய் முறுக்கும் பாதாம் பர்பியும் சாப்பிடக் கொண்டு வந்து வைத்துவிட்டு வேலையாள் மாயமானுன்.

பிறகு தான் வாங்கி வந்த புடைவைப் பார்சலைப் பிரித்துக் காட்டினுள் ஷைலா. மறுபடியும் மாலதிக்கு ஓர் அதிர்ச்சி..

முதல் நாள் இரவு உடுத்த ஒன்று, தீபாவளி ஸ்நானத்துக்குப் பின்னர் உடுத்த ஒன்று, அடுத்ததாகச் செய்யப் போகும் நோன்புக்கு ஒன்று என்று மூன்று புடைவைகளை எடுத்திருந்தாள். ஒவ்வொன்றின் விலையும் ஆயிரத்துக்கு மேல் ஓடியது.

வீட்டையும் தோட்டத்தையும் சுற்றிக் காட்டிவிட்டுப் பிறகு தனது காரில் அவளை ஏற்றிவிட்ட போது மென்மையாக முறுவலித்தாள் ஷைலா.

''சொன்னுல் நீ நம்பமாட்டெ. என் சித்தப்பாவைப் பார்த்துட்டுப் போக வந்த அவரது சிநேகிதர் மகன்! என்னைப் பார்த்துட்டு.. ஹி! ஹி.. எங்கள் கல்யாணம் காதல் கல்யாணம்!'' என்று சிரித்தாள்.

வீட்டுக்குத் திரும்பின மாலதிக்கு, பின்னர் வேலையே ஓடவில்லை. ஷைலாவையும் தன்னையும் ஒப்பிட்டுப் பார்த்து அலுத்துப்போனுள். ஷைலா அவளைவிடக் கொஞ்சம் நிறம் கூடுதலானவள் அதைத் தவிரப் படிப்பிலோ, புத்திசாலித்தனத்திலோ மாலதிக்குக் கொஞ்சமும் ஈடானவளே இல்லை. செத்தேன், பிழைத்தேன் என்றரிதியில் பி.ஏ. படிப்பை எப்படியோ முடித்தவள் பெற்ருேரை இழந்து அநாதையாகச் சிற்றப்பா தயவில் பண வசதியே இல்லாது வறுமையில் வாடினவள்.

அவளுக்குக் காதல் கல்யாணம்! அதுவும் அத்தனை பெரிய இடத்தில். படுக்கையறைச் சுவரில் தொங்கிய பெரிதாக்கப்பட்ட கல்யாணப் போட்டோவில் தெரிந்த அவள் கணவன், கண்ணுக்கு நிறைந்த இளைஞனகத்தான் தெரிந்தான்.

'இப்படி ஓர் அதிர்ஷ்டமா அவளுக்கு!' எண்ணி எண்ணிக் குமைந்தாள் மாலதி.

அவர்களுடைய வீட்டையும் தோட்டத்தையும் பார்த்துவிட்டு வந்த பின், அவளுக்கு தான் வசித்த அந்தச் சிறிய ஓட்டு வீடு ஒரு குடிசையைப் போலத் தோற்றமளித்தது. அப்படிப்பட்ட வாழ்க்கை தனக்கு அமையவில்லையே என்ற ஆதங்கத்தால்ஏற்பட்ட தவிப்பில், கைவிடாது கத்திய குழந்தையின்மேல் அவளுக்கு எரிச்சல் மூண்டது. அதைச் சமாதானப்படுத்தத் தெரியாது விழித்துக் கொண்டு நின்ற வேலைக்காரி மீது வெடித்தாள். பாத்திரங்களை நக்கென்று வைத்துப் புழுங்கினுள். அடுப்பைக் கவனிக்க மறந்து போனுள்.

ரூ. 3125
3 ஆண்டுகளில்
ரூ. 5000
ஆகிறது!
ஸ்ரீராம்
அளிக்கும்
மறுமுதலீட்டுத்
திட்டம்.

சேருபவர்களுக்கு
10 கிராம்
வெள்ளிப்
பதக்கம்
அன்பளிப்பு*

17% வட்டி,
3 ஆண்டுகளுக்கு
ஸ்ரீராம் அளிக்கும்
பிக்செட் டெபாஸிட்
திட்டம்.
(குறைந்தபட்ச டெபாஸிட் ரூ. 3000)

எத்திட்டத்தில் வேண்டுமானாலும் சேரலாம் பலன் பெறலாம்.

வட்டி விகிதங்கள்:

டெபாஸிட் காலம் / வட்டி விகிதம்	மாதாமாதம் வட்டி பெற	6 மாதங்களுக்கு ஒரு முறை வட்டி பெற	மறு முதலீட்டுத் திட்டத்தில் மொத்தமாக வட்டி பெற
1 ஆண்டு	14.0%	15.0%	15.5%
2 ஆண்டுகள்	14.5%	16.0%	17.5%
3 ஆண்டுகள்	15.0%	17.0%	20.0%

சலுகைகள் :
உங்கள் டெபாஸிட் தொகை பன்மடங்காகப் பெருகுகிறது. அவசரத் தேவைகளுக்கு கடன் பெறலாம்.

உத்தரவாதம் :
ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் நிறுவனம் பதிவுசெய்யப் பெற்ற பார்ட்னர்ஷிப் (Registered Partnership) நிறுவனம். இந்த நிறுவனம் மோட்டார் வாகனங்களை தவணை முறையில் வாங்குபவர்களுக்கு கடன் உதவி செய்கிறது. இத்துறையில் 15 வருட அனுபவமும் திறமையும் மிக்கவர்களால் நிர்வகிக்கப் படுகிறது.

ADWAVE/SI/2094

SHRIRAM INVESTMENTS
YOUR FINANCIAL FRIEND-IN-NEED

*ஸ்ரீ லக்ஷ்மி திருஉரு பதித்த இப்பதக்கம் உங்கள் பூஜை அறையிலும், பணப்பெட்டியிலும் பாதுகாக்க உகந்தது.

உங்கள் டெபாஸிட்டை அனுப்பும் முகவரி:

ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ்

தலைமை அலுவலகம்: 123, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை 600 001
போன்: 28545/37890

கிளைகள்:
- தி. நகர்: 54, வடக்கு உஸ்மான் சாலை, தி. நகர், சென்னை 600 017
- அண்ணா நகர்: A7, அண்ணா நகர் ரவுண்டானா (கனரா பாங்க் அருகில்), சென்னை 600 102
- மயிலாப்பூர்: 21, கிழக்கு மாட வீதி, மயிலாப்பூர், சென்னை 600 004
- பெங்களூர்: பிரவுனம்மா டவர் (Cellar Floor), 70/1, மிஷன் ரோடு, பெங்களூர் 560 027

பருப்பிலே காந்தல் வாசனை வருகிறதே! சாப்பிடும் போது கேட்ட கணேசனுக்குச் சூடாகப் பதிலளிக்கத் தோன்றியது. 'நன்னுகச் சமைத்துப் போட்ட போது கைகளுக்குச் செஞ்சு போட்ட தோடாக்களை இப்போ கழட்டிக்கோங்கோ' என்று சொல்ல நாக்குத் துடித்தது. பதிலுக்குச் சூடான குழம்பை அவசரத்தில் தடுமாறி அவன் கை மீது ஊற்றிவிட்டு, 'ஸாரி' என்ற வார்த்தையுடன் உள்ளே மறைந்துவிட்டாள்.

அவன் வாங்கிவந்த புடைவையை ஷைலாவுடைய தீபாவளிப் புடைவைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்த போது ஏற்பட்ட ஏமாற்றம் எரிச்சலாக மனத்தில் புகைந்து கொண்டிருந்தது.

''என்ன, புடைவை பிடிச்சிருக்கா?'' கேட்டபடி கொஞ்சலாச அவன் நெருங்ய போது சட்டென்று நகர்ந்துகொண்டாள்.

தீபாவளிக்கு முன்னுள். புதிதாக வெளி வந்த படத்துக்குப் பிடிவாதமாகப் பகல் காட்சிக்குப் பக்கத்து வீட்டுப் பெண்ணுடன் கிளம்பியிருந்தாள். 'வீடு, குழந்தை, சமையல் வேலை என்று நிதமும் இவற்றையே தான் செய்கிறோம். 'குழந்தையையும் வீட்டையும் வேலைக்காரி ஒரு நாள் பார்த்துக்கொண்டால் தலை முழுகிவிடாது' என்ற ஆவேசமான ஆத்திரத்தில் தங்கள் நிலைமைக்கு மீறிய முதல் வகுப்பு டிக்கெட் வாங்கியிருந்தாள். புதிய படம் என்றதால் பெருத்த கூட்டம். கதாநாயகன், நாயகி தோன்றியபோது பலத்த கைத்தட்டல், சீட்டி இரைச்சல். இவை போதாதது போலப் பின்னுல் இருந்த பெண் ஒருத்தி படத்தைப் பார்க்காமல், பேசிச் சிரித்துக்கொண்டு பெருத்த இடைஞ்சலாக இருந்தாள். இடைவேளை வரை எரிச்சலை அடக்கிக்கொண்டிருந்த மாலதி அந்தத் தொண தொணப்புக்காரியைக் கண்ணுல் எரிக்கத் திரும்பிப் பார்த்தவள் திடுக்கிட்டாள்.

அவளது ஊகம் சரி என்பது போலப் பக்கத்து வீட்டுப் பெண் தாழ்ந்த குரலில் அவளிடம் சொன்னுள்.

''பின்னுல் உட்கார்ந்திருக்கிறுரே அவர் பெரிய தொழிலதிபர். 'பர்மா பிளாஸ்ட்டிக் வொர்க்ஸ்' என்று கேள்விப்பட்டிருப்பீங்க; அதன் முதலாளி ரகுநந்தன். அவர் நிறுவனத்தில்தான் என் மைத்துனர் வேலை பார்க்கிறுர். ஆசாமி சுத்த மோசம்! குடி, அது, இது எல்லாம் உண்டாம். குத்துவிளக்குப் போல அழகான மனைவியை வீட்டில் வச்சுப் பட்டப் பகலில் எவளோ ஒருத்தியோட படத்துக்கு வந்திருக்கிறுர். இவர் மனைவி படிச்சவளாம். அழகா இருப்பாளாம். ஆனு வாயைத் தெறக்கமாட்டாளாம். ஏதாவது கேட்டால் அடித்து உதைத்து நொறுக்குவாராம். ரொம்ப முரடராம். இந்த லக்ஷணத்தில் அவளைக் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டாராம்!

''காதல் கத்தரிக்காய் எல்லாம் கதாசிரியர்கள் விடும் கைச்சரடுகள்! நம் பெற்றோர் பார்த்து நமக்கு அமைச்சுக் கொடுத்த வாழ்வ எந்த வகையில் குறைஞ்சு போச்சு, சொல்லுங்க? நேத்து என் கணவர் எனக்கு ஒரு புது டாய்லெட் செட் ஒன்று தீபாவளிப் பரிசா வாங்கிட்டு வந்தார், பிடிக்கிறதான்னு கேட்டார். நிறம் எனக்குப் பிடிக்கலே. ஆனுல் பாவம்! அவர் முகத்

"Our Hearty Deepavali" Greetings to all our Customers & well wishers

West Ponnurangam Road, R. S. Puram, COIMBATORE-641 002

தைப் பார்த்ததும் என் மனம் நெகிழ்ந்து போச்சு! தீபாவளிக் கூட்டத்திலே கடைத் தெருவிலே அலைஞ்சு திரிஞ்சு ஆசையா வாங்கிட்டு வந்திருக்கார். 'ரொம்ப நல்லா இருக்குன்னேன்.' பார்க்கணுமே அவர் முகத்தை!'' படபடவென்று பேசியபடி சிரித்தாள்.

மீண்டும் ஒரு முறை பாராதது போலத் திரும்பிப்பார்த்தாள் மாலதி. சந்தேகமே இல்லை. அவர் ஷைலாவின் கணவர்தாம். அந்தப் படுக்கையறையில் மாப்பிள்ளைக் கோலத்தில் படத்திலிருந்த மனிதர். காதலன் கோவத்தில் எவளோ ஒருத்தியுடன் காண்கிறார். சே, கை தொட்டு அடிப்பாராமே! கண்றாவி '

ஷைலாவின் அற்புதமான வாழ்க்கை — அந்தப் பெரிய பங்களா — கார் அத்தனையும் அவளது கற்பனையில் காகித அட்டையில் ஆன மாளிகை போலப் படபடவென்று சரிந்து தரை மட்டமாயின. அதற்குப் பின்னர் திரையில் தெரிந்த படத்தை அவள் பார்க்கவேயில்லை.

அன்று இரவு சாப்பாட்டுக்குப் பின்னர்க் கூடத்து நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்த கணவன் அருகில் பால் தம்ளருடன் வந்தாள். ''அதற்குள் ஏன் பால் சாப்பிடாமல் தூங்கிட்டீங்க? ரெண்டு நாளா லேசா இருமுறீங்க. ஆபீசில் நெறைய வேலை போலிருக்கு. அதுக்குத் தக்க போஷணை இல்லாட்டா உடம்பு என்னத்துக் காகும்?'' பரிவுடன் அதை அவனிடம் நீட்டினாள்.

''கைக்குழந்தைக்காரி, உனக்கும் போஷணை தேவை. ஆளுக்குப் பாதி குடிப்போம். சரிதானே?'' சிரித்தபடி பாலைப் பருகிவிட்டு மீதியைத் தம்ளருடன் அவளிடம் கொடுத்தான்.

''ஆமாம், அந்தப் புடைவை உனக்குப் பிடிச்சிருக்கான்னு சொல்லவேயில்லையே! பிடிக்காட்டா வேறே..''

வேகமாகப் பாலைப் பருகிவிட்டு வாயைத் துடைத்துக் கொண்டாள். ''தீபாவளிக் கூட்டத்திலே இதை வாங்க எத்தனை கஷ்டப்பட்டிருப்பீங்க!''

''பகல் சாப்பாட்டு நேரத்திலே ஓடிப் போய் வாங்கிட்டு வந்துட்டேன். கூட்டம் அதிகம் இல்லை. உன் அதிர்ஷ்டம் பாரு; முதல் அடுக்கிலேயிருந்து விற்பனையாளர் எடுத்துப் போட்டதிலே சட்டுனு இது அகப்பட்டது.''

'அதிர்ஷ்டக்காரிதான் நான். உங்களைப் போல நல்ல பண்பான, அன்பான கணவரை அடைஞ்சிருக்கேனே! பணம், பங்களா, பதவி இதெல்லாம் இந்தத் தகுதிகளுக்கு முன் தூசியாச்சே!' தன்னுள் எண்ணி மகிழ்ந்தபடி அவனது அருகே உட்கார்ந்து கொண்டாள்.

''புடவையைப் பத்தி ஒண்ணும் இன்னமும் சொல்லலே.'' கொஞ்சலாக அவளது முகத்தை வருடினான் கணேசன்.

''வெளிச்சத்தில் பார்த்தபோது புடவை ரொம்ப நன்னா இருக்கு'' என்றபடி அவள் தன் முகத்தை அவனது கரங்கள் மீது பதித்தபடி சாய்ந்து கொண்டாள்.

'ஷைலாவின் வாழ்க்கையைவிட என் வாழ்க்கை அமோகமா இருக்குது' என்று மீதி வாக்கியத்தைத் தனக்குள்ளே சொல்லிக் கொண்டாள். 'அன்பானதொரு கணவனுக்கு ஈடு இணை ஏது?' என்று கேட்ட அவளது இதயம் இன்பத்திலே திளைத்தது. *

ஒவ்வொரு முறையும் நீங்கள் சேமிக்கும் ரூ 25/-க்கு 11%க்கும் அதிகமான தொகையைப் பெறலாம்

இதுவரையில் சிறுசேமிப்புக்கு குறைந்தளவு வட்டியே கிடைத்துள்ளது. அதிக அளவு பயன் திரும்பப் பெற வேண்டுமானால் உங்களுக்குத் தேவை அதிகத் தொகை.

குறைந்தது ரூ 25 செலுத்தினால் 11.50 சதவிகிதத்திற்கு மேலும் அதிகப்படியான பயனளிக்கும் அளவுக்கு வேறு எங்கும் இல்லாத சிறப்பு திட்டம் ஐஓபி யின் புதிய பன்மடங்கு சேமிப்புக் கணக்கு ஆகும். இதற்கு உங்களை கேட்பதெல்லாம் 3 வருட காலத்திற்கு தொகையை கணக்கில் போட வேண்டும் என்பதே!

குறிப்பிட்ட தொகையை தொடர்ந்து முதலீடு செய்யத் தேவையில்லை.

குறிப்பிட்ட தொகையை வழக்கமான இடைவெளிகளுக்குள் முதலீடு செய்ய வேண்டும் என்று உங்களை கேட்கப் போவதில்லை. உங்களால் சேமிக்கும் தொகையை ரூ 25க்கும் அல்லது அதற்கு மேலேயும் இக்கணக்கில் முதலீடு செய்யலாம். முதலீடு செய்யும் தொகை ரூ 25க்கு அதிகமாக இருந்தால் ரூ 5ன் மடங்காக இருக்கவேண்டும்.

பன்மடங்கு சேமிப்புக்கணக்கில் நீங்கள் எவ்வளவுதான் முதலீடு செய்தாலும் சரி, குறைந்தபட்சம் ரூ 25/- முதலீடு செய்து ஒரு கணக்கை துவக்கினாலும் சரி, காலாண்டிற்கு ஒரு முறை 10 சதவிகிதம் வட்டி கணக்கிடப்படும் இத்தொகை 3 வருடத்தில் 11.50 சதவிகிதத்திற்கு சமமான தொகையாக கிடைக்கும்.

இக்கணக்கை எளிதாகவும், குறுகிய காலத்திற்குள்ளும் செயல்முறை படுத்தலாம்.

பன்மடங்கு சேமிப்புக் கணக்கிற்காக உங்களுடைய பொன்னான நேரத்தையும் அல்லது சக்தியையும் வீணாக்க வேண்டாம்.

நீங்கள் முதன்முதலாக முதலீடு செய்ய வரும்போது நீங்கள் செலுத்தும் தொகையை வரவு வைப்பதற்காக பாஸ் புத்தகம் ஒன்று உங்களுக்கு கொடுக்கப்படும். மீண்டும் பணம் செலுத்த வரும்போது பாஸ் புத்தகத்தை எடுத்துக்கொண்டு வரவேண்டும். நீங்கள் செலுத்தும் அனைத்து தொகையையும் இந்த பாஸ் புத்தகத்தில் தொடர்ந்து வரவு வைக்கப்படும்.

நீங்கள் செலுத்திய ஒவ்வொரு முதலீடும் கால அளவு முடிந்த பிறகு ஒவ்வொரு முதலீடும் கொடுக்கும் மொத்தத் தொகையை பார்க்கும் பொழுதுதான் உங்களது சேமிப்பின் மகிமையை உங்களால் அறிந்து கொள்ள முடியும்.

உங்கள் வீட்டில் பணத்தை பாதுகாப்பாக மடித்து வைப்பது போலவே இக்கணக்கு சுலபமானது. அதோடு துரிதமாக செயல்படும். ஒரு சில நிமிடத்திற்குள் உங்கள் பணத்தை பெற்றுக்கொண்டு பாஸ் புத்தகத்திலும் வரவு வைக்கப்படும்.

பணம் தேவையாக இருந்தால் எடுக்க வேண்டுமா?

குறுகிய காலத்திற்கு பணம் தேவையாக இருந்தால் நீங்கள் செலுத்திய தொகையிலிருந்து 75 சதவிகிதத்திற்கு சமமான தொகையை கடனாகப் பெற்றுக்கொள்ளலாம்.

நீங்கள் நிரந்தரமாக பணம் எடுக்க வேண்டுமென்றால் வட்டி இழப்பு இல்லாமல் செய்ய நாங்கள் உதவி செய்வோம்.

நீங்கள் ரூ 25/- வைத்திருந்தால், உடனே அருகில் உள்ள ஐஓபி கிளைக்கு சென்று பன்மடங்கு சேமிப்புக் கணக்கில் சேமியுங்கள்.

இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க்
உங்கள் வளர்ச்சிக்கோர் உத்தம நண்பன்

ஐஓபியின்
பன்மடங்கு சேமிப்புக் கணக்கு

குறைந்த பட்ச சேமிப்புக்கு அதிகப்படியான பலன்

IOB. 53. 82. TMIC

லட்சிய பக்தன்

பிரேமா பாண்டுரங்கன்

மத்கர்மக்ருத் மத்பரமோ மத்பக்த:
ஸங்கவர்ஜித: |
நிர்வைர: ஸர்வபூதேஷு ய:
ஸ மாம் ஏதி பாண்டவ ||

—கீதை—11-55

ஸ்ரீமத் பகவத்கீதை துயருறும் ஆன்மாக்களுக்குத் தேறுதலும் ஆறுதலும் தந்து காப்பாற்றுகிறது. வாழ்க்கையே ஒரு துன்பக் கடல். அதில் சிக்கித் தத்தளித்து நிற்கிறான் மனிதன். இந்த நிலையை எடுத்துக் காட்டும் மனிதனாகவும் பகவானின் அந்தரங்க பக்தனாகவும் சீடனாகவும் காட்சியளிக்கிறான் அர்ஜுனன். போர்க் களத்திலே எதிரிகளைச் சந்திக்கும் வேளையிலே குழப்பம் அடையலாமா? யோக்கந்தான் அங்கே நேரம் உண்டா? ஆனால் கலக்கமுற்றுச் செயலற்று நிற்கிறான் சீடன்.

அநத நேரத்திலே கருணைக் கடலாகிய பகவான் அர்ஜுனனுக்கு ஆன்மிக அறிவை உபதேசிக்கிறார். அந்த உபதேசம் அன்றைக்கு அவனுக்கு மட்டும் பயன்படக்கூடியது அல்ல; முக்காலத்திலும் ஜீவகோடிகள் அனைத்தும் உய்யவேண்டி அருளியது அது. ஆன்மிகத் தத்துவங்கள், பௌதிக உடலின் நிலையாமை, இம்மையிலும் மறுமையிலும் அடைய வேண்டிய நலன்கள் பற்றி விரிவான விளக்கங்களைக் கூறுகிறார் பகவான்.

பின்னர் எல்லையற்ற தம்முடைய ஆற்றலை நிரூபிக்கும் விசுவரூப தரிசனத்தைத் தம் பக்தனுக்குக் காட்டி, அந்த வீரனை வாழ்த்துகிறார். பதினோராம் அத்தியாயத்தின் இறுதியில், பகவானின் கருணை மழையில் நனைந்து நிற்கும் அர்ஜுனன் அப்போதும் அந்தக் கருணைக்கான காரணத்தைப் புரிந்துகொள்ளாதவனாகவே தோற்றம் அளிக்கிறான்.

பக்தர்களைப்பற்றிய அநுபவங்களை நாம் நிறையக் கேட்டிருக்கிறோம். மகாபுருஷர்கள் பலர் பக்தியைப் பற்றித் தெளிவாகவும் அழகாகவும் பல வகையில் மனத்தில் ஆழப் பதியும்படி எடுத்துரைத்திருக்கிறார்கள். ஆனால் ஆரம்பத்தில் கொடுத்துள்ள சுலோகம் ஒரு தனித் தன்மை வாய்ந்தது.

பகவானின் விசுவரூபத்தை விளக்கும் பதினோராம் அத்தியாயத்தின் இறுதியிலுள்ளதால் மட்டும் அல்ல: பக்தனைப் பற்றிப் பகவானே சொல்வதால் அதற்குத் தனிப் பெருமை. வார்த்தையில் அடங்காத உள்ளம் உருகும் உணர்ச்சி மட்டும் பக்தி ஆகிவிடாது. பகவானிடத்தில் தன்னுடைய எல்லா உடைமைகளையும் சமர்ப்பணம் செய்து அவனையே தஞ்சமாக அடைவதுதான் பக்தியின் லட்சணம். அங்கே கடுகளவுகூடச் சந்தேகத்துக்கோ, அவநம்பிக்கைக்கோ இடம் இல்லை;

மனித அறிவு எவ்வளவுதான் சூட்சுமமான திறமையுடன் விளங்கினாலும் பக்தியைப்பற்றி ஓரளவுதான் எடுத்துரைக்க முடியும். பகவானே சொல்லும் பக்தியின் விளக்கத்துக்கு எதிரே மற்றவை எம்மாத்திரம்?

மற்றவரெல்லாம் பகவானின் அடிமைகள்தாமே? அவனே தலைவன். ஆன்மிகத்தின் லட்சியமும் வழிகாட்டியும் அவனே. அவனை மையமாக வைத்தே பக்தரின் வாழ்க்கை சுற்றிச் சுழல்கிறது. அகில உலகத்துக்கும் ஆதாரம் அவனே. அப்படியிருக்க, அவனைத் தவிர்த்து வேறு யார் பக்தரைப் பற்றிப் போதிய ஆதாரத்துடன் முழு விளக்கம் தர முடியும்?

பதினோராம் அத்தியாயத்தின் இறுதியான 55-ஆம் சுலோகமே பக்தனைப்பற்றிய விரிவான விளக்கம் தருகிறது. இதிலுள்ள ஒவ்வொரு அடைமொழியும் இலக்கிய ரசனையுடன் கூடியது மட்டும் அல்ல; ஆன்மிகத்தின் நுட்பமான ஆழ்ந்த கருத்துக்களை மிச்சமின்றி அள்ளி வழங்குகிறது; அழகுற விளக்குகிறது. பகவான், பக்குவ நிலையில் தம்மை வந்தடையும் பக்தனின் குணாதிசயங்களையே இந்தச் சுலோகத்தில் விளக்குகிறார்.

மனிதன் இறுதி லட்சியத்தை அடைந்து பேரின்பத்தில் திளைக்கும் போது வாழ்க்கையில் ஏற்படும் எந்த விதப் புண்ணிய பாபச் செயல் ஏதும் அவனை அணுகுவதில்லை. இப்பூவுலகில் புரியும் புண்ணிய கர்மங்களே அவன் பகவானின் பாதாரவிந்தங்களை அடையக் காரணமாகின்றன.

இங்கே கூறியுள்ள குணங்களுடன் விளங்கும் மனிதனே மோட்சத்தை —பேரின்பத்தை — அடைவதாகப் பகவானே அர்ஜுனனுக்கு உபதேசிக்கிறார்.

இந்தச் சுலோகம் தொடங்கும் போதே 'மத்கர்மக்ருத்', 'எனக்காகத் தன் கடமைகளைச் செய்பவன்' என்று செயலைக் குறிக்கிறது. எந்த ஜீவனும் ஒரு கணங்கூடச் செயல் புரியாமல் வாழ முடியாது. உயிர் வாழ்வதன் அடையாளமே, மூச்சு விடுவதே, ஒரு செயல்தான். எனவே, உயிர் வாழும் எதுவும் செயல் புரிந்தே ஆகவேண்டும்.

ஆனால் உறுப்புக்கள் வேலை செய்வதோ, உடலின் அசைவோ, நம் சக்தியைக் கூட்டுவது குறைப்பது ஆகியவையோ செயல் புரிந்ததாக ஆகிவிடாது. இங்கே குறிப்பிடுவது,

உயிர்வாழ்வதும் ஈசுவரார்ப்பண மாக இருக்க வேண்டும் என்பதே.

நடமாடும் தெய்வங்களாக விளங்கும் மகாபுருஷர்கள் தமக் காக எதையும் செய்யமாட்டார்கள். தாம் செய்ய வேண்டியது எது, ஈசுவரனுக்குத் திருப்தி தருவது எது (உலகம் உய்ய ஒருத்தர் ஆற்றும் பணிதான் பகவானுக்குத் திருப்தி தருவது) என்றுதான் பார்ப்பார் கள்.

கீதையின் சாரமே சுயநலம் சிறி தளவுமின்றிப் பகவானின் விருப்பத் துக்கிணங்கச் செயல்படுவதுதான். இத்தகைய தியாக புத்தி வளர வளரப் பக்தனின் நிலை உயர்ந்து அவனே தெய்வமாகிறான்.

இப்படிப் பகவானைத் தஞ்ச மடைந்த நிலையில் செயல்படும் ஒருவன் ஆனந்தத்தை அநுபவிக் கிறான். பகவான் காட்டும் பேரின்ப நிலை அதுதான்.

இரண்டாவது அடைமொழி 'மத் பரம:' அதாவது, பக்தன் அடைய வேண்டிய இறுதியான நிலை பரம் பொருள்-நானே என்கிறார் பகவான்.

பெரும்பாலும் நாம் ஆற்றும் எல்லாச் செயல்களுமே சுயநலமுள்ளனவாகத் தான், கட்டிலடங்காத அகந்தை யுடன் கூடியவையாகத்தான் அமை கின்றன. ஆனால் தெய்வத்தினிடத்தில் தஞ்சம் புகுந்தவன், 'பகவானைக் காட்டிலும் மேம்பட்டது ஒன்று மில்லை' என்ற எண்ணத்துடன் அவனிடமே பற்றுக்கொள் கிறான்.

வாயளவில் பகவானைப் பாடிப் பரவுதல் ஏதும் பயன் தராது. ''மத் பக்த:''—'எல்லா வகையிலும் உள் ளன்போடு என்னை வழிபடுபவனே என் பக்தன்' என்று பகவானே விளக்குகிறார். பகவானுடைய பக்தனுக்கு அழிவே கிடையாது. பக வானிடத்தில் முற்றும் தஞ்சமடைந்த நிலையில் அவன் 'ஸங்க வர்ஜித:', 'தான்' என்ற எண்ணத்தையே விட்டு விடுகிறான். 'ஸங்க:' என்றால் ஆசை. பெண்டாட்டி, பிள்ளை, தோழன், வீடு, செல்வம் எல்லாவற்றிலும் அவன் பற்றற்றவனாகவே ஆகிறான். இவ்வாறு பற்றற்ற நிலையில், தான் புரியும் எந்தப் பணியையும் பகவா னுக்கு அர்ப்பணம் செய்யும்போது அவனுடைய இதயத்தில் பகைக்கே இடமில்லை.

ஆசைக்கு அடிமையாகித் தானும் கெட்டுப் பிறருக்கும் தீமையை விளைவிக்கும் மனிதர் நிறைந்த இந்த உலகைப் பக்தன் காண்பதே இல்லை. அவன் இவ்வுலகில் காண்பதெல்லாம், பகவானுடைய கல்யாண குணங்களையும் எல்லையற்ற அவனு டைய மகிமையையும் அவனை அடை வதற்கான ஸேவா மார்க்கத்தை யுமே. இவ்வுலகிலுள்ள மனிதகுலத் தில் மட்டுமின்றி எல்லா உயிர்களி டத்திலும் சமமாக அன்பு செலுத்து பவனே கடவுளை அடைகிறான்.

சுருங்கக் கூறின், மனிதன் தன் லட்சியமாகிய பரம்பொருளை, பேரின்பத்தை, அடையும்போதே பிறவிப் பயனைப் பெறுகிறான். பக் தன் உயிர் வாழ்வதே கடவுளை அடைவதற்காகத்தான். வாழ்க்கை என்பதே ஒரு பயணம். இறைவனை அடைவதே அதன் லட்சியம். எனவே பயணம் செய்பவன் எச்சரிக் கையோடு, முட்கள் நிறைந்த தீய வழியை அகற்றி, நேர்மை என்னும் ராஜபாட்டையிலே செல்ல வேண் டும்.

ஆன்மிக ஞானத்தில் மூழ்கி, பேரின்பத்தில் திளைக்கும்போதே மனிதன் முழுமை பெறுகிறான். இரவு பகலாக மனித உள்ளம் அம்மை யப்பனின் காதலால் கசிந்துருகுமே யாகில் அப்போதே அகத்தில் ஆண்ட வன் சுடர்விட்டுப் பிரகாசிப்பதைக் கண்டு களிக்கலாம். அடியார் வழி படுவது கோரிக்கைகளின் பட்டியலை நீட்டுவதற்காக அல்ல; நன்றிக் கடனைச் செலுத்தும் பொருட்டே. 'உள்ளத்தில் நிலையான இறை யன்பு கொண்ட தொண்டன் என்னை அடைவதில் சிறிதும் ஐயம் இல்லை' என்கிறார் பகவான். ❋



CM/M/KCUB/147

இனிய
தீபாவளி வாழ்த்துக்கள்!

இந்நன்னாளில் வாடிக்கையாளர்களுக்கும்
அன்பர்களுக்கும் எங்கள்
கனிவான தீபாவளி வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கிறோம்.
இந்த இனிய நேரமும், மகிழ்ச்சிகரமான
குதூகலமும் உங்கள் இல்லத்தில்
நீடிக்கவேண்டுமென வேண்டுகிறோம்.
இந்த மகிழ்ச்சி நீடித்திருக்க, நீங்கள்
மேற்கொள்ளும் புதிய இலட்சியங்கள்,
ஆசைகள் ஈடேற கேசியூபி தன் நட்புக்
கரங்களை நீட்டி உங்களுக்கு உதவக்
காத்திருக்கிறது.

KCUB

தி கும்பகோணம்
சிடி யூனியன் பாங்க் லிமிடெட்
பதிவு அலுவலகம்: கும்பகோணம்-612001.

தீபாவளி வாழ்த்துக்கள்
தீவினை அகன்றிட தீப
ஒளிதனை ஏற்றிடுவோம்
மேம்பட வாழ்ந்திட
மின்சக்தி பெருக்கிடுவோம்
மின்சக்தி பெருக்கி, எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கவேண்டும். திறமையை உருவாக்கி, பெருக்கி, நன்கு பயன்படுத்தி பொதுத்துறை நிறுவனங்கள் செம்மையாகச் செயல்பட வேண்டும்.
இந்தியப் பொருளாதார மேம்பாட்டுக்காக இவற்றை வலியுறுத்தும் 20-அம்சத் திட்டம் வெற்றிபெறப் பாடுபடுவோம் என்றுகூறி, இந்நாளில் எங்களை அர்ப்பணித்துக் கொள்கிறோம்.
1982
உற்பத்தி ஆண்டு
மக்களுக்கு சக்தி
பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி 620 014
18-20 கஸ்தூரிபா காந்தி மார்க், புது டெல்லி 110 001
HTM-BHEL-1069

இயற்கை எழிலும் பருவக் காட்சியும்

நாம் அன்றாடம் கண்டு வணங்கும் இறைவனாக விளங்குபவன் சூரியன். அவனால்தான் பூமண்டலமே ஒளி பெறுகிறது. செடிகொடிகள் வளர்கின்றன, உயிர்கள் வாழ்கின்றன. சூரியனுடைய கதியை வைத்துத்தான் நாள், மாசம், வருஷம் என்று காலத்தைக் கணக்கிடுகிறோம். பருவ காலங்களும் கதிரவனாலேயே உண்டாகின்றன. ஓர் ஆண்டுக்கு ஆறு பருவங்கள்.

வேத மந்திரங்களில் தைத்திரீய ஆரண்யகத்திலுள்ள முதல் பிரச்னமே சூரிய நமஸ்காரம். ஆறு பருவங்களைப் பற்றிய வர்ணனைகள் சூரிய நமஸ்காரத்தில் காண்கின்றன. சூரிய கிரணங்கள் ஏழு வர்ணங்களை உடையவை. ஊதா, இண்டிகோ, நீலம், பச்சை, மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு ஆகியவை. இவை வேறுபடுவதால் தான் ஆறு ருதுக்கள், பருவங்கள், உண்டாகின்றன.

வசந்த ருது

முதலாவது வஸந்தம். வசு தேவதைகளை உடைய இந்த ருதுவில் வந்தவர்களை ஆதரித்து முதலில் உபசாரம் செய்யச் சொல்கிறது, ஏழைகளைக் காப்பாற்றச் சொல்கிறது, வேதம். இதனாலேயே வஸந்த ருதுவில் கல்யாணங்களும், உற்சவங்களும் நிறைய நடைபெறுகின்றன. உபசாரமும் எங்கும் அதிகமாக இருக்கின்றன. மலர்கள் மலர்ந்து மணம் வீசுகின்றன. இயற்கை எழில் பரப்புகிறது.

திருமணங்களில் 'கௌரி கல்யாணம்' மங்கள முடிவைக் குறிக்கும். பார்வதியின் மற்றொரு பெயர் தான் கௌரி. பார்வதியின் கல்யாணம் நிச்சயமானதே இந்த வஸந்த ருதுவிலேதான். இதைக் காளிதாச மகாகவி 'குமார சம்பவ'த்தில் வெகு அழகாக வர்ணிக்கிறார். தாரகாசுரன் முதலானவர்களின் தொல்லை தாங்காமல் தேவர்கள் பரமனிடம் சென்று முறையிடுகிறார்கள். குமரக் கடவுள் மூலம் அவர்கள் தொல்லையைத் தீர்த்து வைப்பதாகக் கூறி அபயம் அளிக்கிறான் பரமன். குமரன் தோன்ற வேண்டுமே!

கைலாச பர்வதத்தில் பரமேசுவரன் தபசில் ஆழ்ந்திருக்கிறார். அங்கே பார்வதி பணிவிடை செய்து கொண்டிருக்கிறாள். தக்ஷனின் மகளாகப் பிறந்து, தந்தையால் தன் நாதருக்கு நேர்ந்த அவமானம் தாங்காமல் அந்த உடலையே தியாகம் செய்து மறு பிறவியிலும் பரமனையே அடைய வேண்டுமென்று அங்கே வந்து தவம் இருப்பவள் பார்வதி.

வசந்த ருது தொடங்குகிறது: எங்கும் குதூகலம் தோன்றுகிறது. அரவிந்தம், தாமரைகள், மலர்ந்திருக்கின்றன. அசோக மரங்கள் நல்ல சிவப்புப் புஷ்பங்களை வாரி இறைக்கின்றன. மாமரங்கள் பூக்களைச் சொரிகின்றன. மல்லிகை எங்கும் மணம் பரப்புகிறது. நீலோத்பலம் விரிந்து கண்ணைப் பறிக்கிறது. இளஞ் சூரிய வண்ண ஆடை அணிந்து கொடி போன்ற உருவத்தைத் தாங்கி, அழகிய கவரும் மார்பகங்களுடன் வசந்தகாலப் புஷ்பங்களை வலக்கையில் ஏந்தி, இடையில் மணிகள் கோத்த ஒட்டியாணம் மின்ன, நகர்ந்து வரும் மலர்க்கொடியோ என ஐயத்தை எழுப்பும் வண்ணம் பார்வதி பரமேசுவரனை நாடி வருகிறாள். மயில்கள் நிறைந்த சூழல்.

சற்றுத் தூரத்தில் அவர்கள் கண்களில் படாமல் மன்மதன் கையில் கரும்பு வில் ஏந்தி, தோளில் அம்புறாத் தூணியில் புஷ்பபாணங்கள் மிளிர, 'பரமேசுவரன் மீது அம்பு எய்யத் தக்க தருணம். இதுவே' எனக் கணித்துத் தயாராகிறான். ஓவியரின் வசந்த காலச் சித்திரம் இந்தக் காட்சியை நம் கண்முன்னே நிறுத்துகிறது.

கிரீஷ்ம ருது

வெயில் காலம். இந்த ருதுவில் சூரியனுடன் சஞ்சாரம் செய்யும் தேவதைகள் வெள்ளை ஆடையணிந்த ருத்திர கணங்கள். ருத்திரர்களின் கூட்டம் பூமி முழுவதையும் வெயிலால் தகித்துக் கொண்டு வருகிறது. கடுமையான கோடைதான் பின்னால் வரப்போகும் மழைக்குக் காரணமாகிறது. நிழலின் அருமை கோடையில்தானே நமக்குத் தெரிகிறது?

நம்மைக் காட்டிலும் வேறுபட்டவர்கள் கவிஞர் பெருமக்கள். அவர்களுடைய நோக்கமே தனி. 'காதலி—காதலன் இவர்களின் பிரிவுத் துயரம் கடுங்கோடையைக் காட்டிலும் கொடியது; அதன் தாபம் தாங்க வொண்ணாதது' என்கிறார்கள்.

காளிதாசனின் படைப்புக்களில் சாகுந்தலம் என்னும் சம்ஸ்கிருத நாடகம் மிகவும் புகழ்வாய்ந்தது. காளிதாசனை மேல் நாட்டினர் ஷேக்ஸ்பியருக்குச் சமமாகப் போற்றுகிறார்கள். அவனுடைய படைப்புக்களில் நவரசங்களையும் காணலாம். என்றாலும் சிருங்கார ரசம் அதிகமாக மிளிர்வதைக் காண்கிறோம். அவனுடைய உவமை அணிகள் மிகவும் இயற்கையாக அமைந்திருக்கும்.

சகுந்தலையைக் கதாநாயகியாகக் கொண்டதால் இந்த நாடகம் சாகுந்தலம் எனப் பெயர் பெறுகிறது. துஷ்யந்த மகாராஜன் ரதத்தில் வேட்டைக்குச் செல்லும் போது மான் ஒன்று அவனை வெகுதூரம் இழுத்துச் செல்கிறது. அரசனின் நாண் சத்தத்தைக் கேட்ட முனிகுமாரர்கள் சிலர், "அந்த மான் கண்வ மகரிஷியின் ஆசிரமத்தைச் சேர்ந்தது" எனக் கூறி அவனைத் தடுக்கிறார்கள். உடனே அரசன் அந்த மகரிஷியைத் தரிசிக்க ஆசிரமத்துக்குள் வருகிறான். அவர் வெளியே சென்றிருந்ததால் தோழிகளுடன் (பிரியம்வதை, அனசூயை) செடிகளுக்குத் தண்ணீர் வார்த்துக் கொண்டிருந்த ரிஷியின் வளர்ப்பு மகள், எழில்குமரி சகுந்தலை, அரசரை வரவேற்று உபசரிக்கிறாள்.

இருவரிடையே காதல் தோன்றி வளர்கிறது. பின்னர் ஒரு சமயம் கோடை வெயிலில் சகுந்தலையைக் காண வருகிறான் அரசன். வெப்பம் தெரியாமல் இருக்க மாவினி ஆற்றங்கரையில்தான் அவள் இருப்பாள் எனத் தீர்மானிக்கிறான். ஆற்று மணலில் பெண்ணொருத்தியின் பாதச் சுவடு தெரிகிறது. ராஜலட்சணம் பொருந்திய கன்னியின் காலடி என்பதை அறிந்து அதைப் பின்பற்றிச் சென்று, சகுந்தலை இருக்குமிடம் அடைகிறான் மன்னன். அங்கே நிழலில் மலர் தளிர்ப்படுக்கையில் படுத்திருக்கிறாள் சகுந்தலை. தோழிகள் இருவரும் பணிவிடை புரிகிறார்கள். மார்பகத்தை, தாபத்தைத் தணிக்கும் விளாமிச்சை வேர்களே துகிலாகி மறைக்கின்றன. சுற்றிலும் குளிர்ச்சி தரும் தாமரைத் தண்டுகள் சிதறிக் கிடக்கின்றன. பெண்களிடம் வெயில் இவ்வளவு தாபத்தை உண்டு பண்ணாது. காதல் நீயே இந்தத் தாபத்துக்குக் காரணம் என எண்ணி மகிழ்கிறான் மன்னன்; அதே சமயம் அவளும் தன் தோழிகளிடம் அரசன் மீதுள்ள காதலை ரகசியமாகக் கூறுகிறாள்.

வர்ஷ ருது

மழைக் காலம். இந்த ருதுவின் தேவதைகள் ஆதித்தியர்கள். பல வண்ண ஆடைகளை உடுத்துபவர்கள். மழையால் உண்மையில் மகிழ்ச்சிதான். துயர் இல்லை. மழைக் காலக் குளிர் நம்மைப் பாதிப்பதில்லை. புல்கள் வளர்வதால், எங்கும் பசுமைக் கோலம். மான் போன்றவை நன்றாக வளர்கின்றன. இந்தக் காலத்தில் உழைப்பவர்கள் நல்ல பயனை அடைகிறார்கள். உழைக்காதவர் ஆண்டுமுழுவதும் துன்பத்தையடைய நேரிடும்.

சூத்ரகன் என்னும் மன்னன் இயற்றிய நாடகம் மிருச்சகடிகம் என்பது. சூத்ரகன்: சுசம் அதாவது சோகத்தை, த்ராவயதி —விரட்டுகிறான். மக்கள் அனைவரும் சோகமின்றிச் சுகம் பெறப் பாடுபடுபவன் என்பதே அந்தச் சொல்லின் பொருள். பாலன்-பாலகன் போல் சூத்ரன்-சூத்ரகன் என்ற இரு சொற்களும் ஒரே பொருள் உடையவையே. இந்த நாடகத்தின் நாயகியாகத் திகழ்பவள் வசந்தசேனை. சிருங்கார நாயிகைகளில் அபிசாரிகா என்னும் வகையைச் சேர்ந்தவள். அவள் தன் காதலன் சாருதத்தன் என்பவனிடம் அழியாக் காதல் கொண்டவள். அவனை எதிர்பார்த்து வெகு நேரம் ஆகியும் வராததால் அவள் வீடு நோக்கிச் செல்கிறாள். வழியில் வானம் இருண்டு விடுகிறது. கார் காலத்து மேகங்கள் கர்ஜிக்கின்றன? மழை பொழிகிறது. பாதை தெரிய

வேண்டுமே: மின்னல் பளீர் பளீரென நெளிந்து சென்று ஒளியைப் பாய்ச்சுகிறது. ஆடைகள் நனைந்து விடுகின்றன. அப்போதும் வெளியே சற்றுப் பரபரப்புடன் தோன்றினாலும் அவள் உள்ளத்தில் காதலனை அடையப் போகும் மகிழ்ச்சி துள்ளுகிறது. சற்றுத் தூரத்தில் விடன் (வில்லன்) அவளைப் பின் தொடர்ந்து, ''ஏன் அவனை அடைய இவ்வளவு பாடுபடுகிறாய்? என்னிடம் வா'' என்கிறான். அதை அவள் காதில் போட்டுக்கொள்ளவேயில்லை. அவளுடைய எண்ணமெல்லாம் தன் காதலனை அடைவதிலே தீவிரமடைகின்றது. அப்போது அவளுடைய எண்ணத்தைப் பிரதிபலிக்கும் வகையில் ஆசிரியர் கூறும் சுலோகம் இது :

கர்ஜ வா வர்ஷ வா சக்ரே முஞ்ச வா சததோ (அ) சனிம்,
ந சக்யா ஹி ஸ்த்ரியோ ரோத்தும் ப்ரஸ்திதா தயிதம்
ப்ரதி''

'ஓ இந்திரா, உன்னால் என்ன செய்ய முடியும்? மழையைப் பொழிவாய், இடி முழக்கம் செய்வாய், மிஞ்சினால் இடியை வீழ்த்துவாய். நூற்றுக் கணக்கில்தான் இடி விழட்டுமே! நீ என்ன செய்தாலும் காதலர் வீடு நோக்கிக் கிளம்பிய மாதரைத் தடுத்து நிறுத்த உன்னால் முடியாது!'' என்கிறார்.

சரத் ருது

மழைக்காலம் ஓய்ந்து வானம் நிர்மலமாக இருக்கும் சமயத்தையே சரத் ருது என்கிறோம். மழைக்குப்பின் ஆகாயம் தெளிவாக இருப்பதை வேதம் எப்படி வர்ணிக்கிறது? கண் வலி நீங்கி எழுந்தவனுடைய கண் எப்படித் தெளிவாக இருக்குமோ, மையிட்ட கண்கள் கண்ணீரின்றி எவ்வளவு அழகாக இருக்குமோ அப்படிச் சரத்காலம் இருக்குமாம்.

ரிபுக்கள் இந்த ருதுவின் தேவதைகள். அவர்களுடைய ஆடைகள் பொன் நிறம் கொண்டு பளபளக்கும். இந்தக் காலத்தில் எல்லோரும் மற்றவர்களை விருந்துக்கு அழைப்பார்கள். உண்டி கொடுப்போர் உயிர் கொடுப்போர் அல்லவா? உணவை வாரி வழங்குவதில் ஆர்வம் காட்டும் பருவம் இது.

தண்டி என்னும் மகாகவி இயற்றியது தசகுமார சரித்திரம் என்னும் உரை நடைக் காவியம். 'தண்டின: பத லாலித்யம்' என்பார்கள். சொற்களை அழகாக அமைப்பதிலே அவனுக்கு இணை அவனேதான். ஆனால் வீணான சொல் ஒன்றைக் கூடக் காணமுடியாது. பொருள் பொதிந்து விளங்கும் ஒவ்வொரு சொல்லும். பத்து ராஜகுமாரர்களைப் பற்றிய வரலாற்றைக் கூறுவது இந்தக் காவியம். பல வகையான நீதிகளை எடுத்துக் கூறுவது.

முன் இரவு வேளை. பூர்ண சந்திரன் நிலவைப் பொழிகிறான். ராஜகுமாரி பால சந்திரிகைக்குத் தன் காதலன் நினைவு வருகிறது. அரண்மனையை ஒட்டிய உத்தியான வனத்துக்குள் நுழைகிறாள். அதன் ஒரு புறத்தில் விளையாட்டுக் குளம். அதன் கரையில் வந்து அமர்கிறாள். குளத்தில் அல்லி மலர்கள் மலர்ந்து சிரிக்கின்றன. இன்ப உணர்ச்சிகள் பொங்குகின்றன. எதிரே இருந்த ஒரு மலரைப் பார்த்து, ''உன் காதலன் சந்திரனைக் கண்ட களிப்பிலே நீ உல்லாசமாகத் திகழ்கிறாய். ஆனால் என் நிலையோ அதற்கு நேர் மாறானது. சந்திரனின் குளிர்ந்த கிரணங்கள் என்னை வாட்டுகின்றன. என் காதலனும் இந்நேரம் அருகே இருந்தால்..'' என்று கூறி முடிக்கவில்லை. எதிரில் தண்ணீரில் தன் காதலனின் நிழல் தெரிகிறது.

ராஜகுமாரன் புஷ்போத்பவன் அரண்மனைப் படிக்கட்டுகள் வழியே இறங்கி வந்து தன் காதலி பாலசந்திரிகையைத் தேடிவருகிறான். தனிமையில் அமர்ந்திருக்கும் அவளுடைய பக்கத்தில் வந்து நிற்கிறான்.

ஹேமந்த ருது

பனிக்காலம். இந்த ருதுவின் தேவதைகள் மருத்கணங்கள் என்ற காற்றுத் தேவதைகள். இந்தக் காலத்தில் கூரிய அம்பு போல் குளிர் துளைத்தெடுக்கும். அதைச் சமாளிக்க மக்கள் போர் முனை வீரர்களைப் போலக் கூட்டமாகக் காண்பார்கள். இவர்களுடைய போர்வைகள் தோல்களின் வண்ணமுடையவை. தலையில் முடியில்லாமல் சடைகளுடன் கூடியனவாகஇருக்கும். ஆனால் போர்வீரர்களைப் போலக் கடுமை தெரியாது. இந்த ருது புருஷனின் கண்கள் சிவந்திருக்கும்.

காளிதாசனின் காவியங்களில் மிகச் சிறியதானாலும் மேக ஸந்தேசம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. அலகாபுரியிலிருக்கும் யக்ஷன் ஒருவன் குபேரனின் சாபத்தால் தம் மனைவியை விட்டுப் பிரிந்து ராமகிரி என்னும், ராமபிரான் வசித்த சித்திரகூடபர்வதத்திலுள்ள ஆசிரமத்தில் வசிக்கிறான். பிரிவுத் துயர் ஆற்றாமல் மனைவிக்குச் செய்தியனுப்ப மேகத்தைத் தூதனாகத் தேர்ந்தெடுக்கிறான்! ''மேகமே, தாபத்தைப் போக்கிக் குளிர்ச்சியைத் தருபவன் நீதான்' என்று அதனை விளிக்கிறான். ''உன் இடியோசையைப் போல அலகாபுரியில் வாத்திய ஒலிகள் முழங்குகின்றன. வானவில்லைப் போலப் பல வண்ண ஓவியங்களை அங்கே காணலாம். பளபளப்பான உன் தூய நீரைப் போன்ற பளிங்குக் கற்களாலான மாளிகைகள் அங்கே விளங்குகின்றன'' என்கிறான் யக்ஷன்.

மனைவியிடம் அவன் கொண்டுள்ள அன்பு எல்லையற்றது என்பதைக் காட்ட இந்த நிகழ்ச்சியைச் சித்திரிக்கிறான் கவி.

பனிக்காலம் தொடங்கிவிட்டது. ஆசிரமத்துக்கு வெளியே படுத்திருக்கிறான் யக்ஷன். மனைவியின் பிரிவாற்றாமையினால் உண்டான வெப்பத்துக்கெதிரே பனியின் வாடைக் காற்றுக்கூட அவன் அருகே நெருங்க முடியவில்லை. தூக்கமே வராத அவனுடைய கண்கள் சற்றுத் தம்மை அறியாமல் அயர்ந்தபோது எங்கோ அலகாபுரியிலுள்ள தன் மனைவியைக் கனவிலே காண்கிறான். மகிழ்ச்சி பிடிபடவில்லை. அவளைக் கட்டித் தழுவ எண்ணித் தன் இரண்டு கரங்களையும் மேலே உயர்த்துகிறான். அதே சமயம் பனித் திவலைகள் அவன் மீது விழவே, விழித்துக்கொள்கிறான்.

'பனித்திவலைகளா அவை? இல்லவே இல்லை. அவனுடைய விரக வேதனையைக் கண்டு வனதேவதைகள் சொரிந்த கண்ணீர்த் துளிகள் அல்லவா அவை?' என்று வர்ணிக்கிறான் கவி. இந்த உவமை அணியை ரசிக்காதவர் இருக்க முடியுமா?

சிசிர ருது

மூடு பனிக்காலம் எனலாம் இதனை. சிசிர ருதுவுக்குத் தேவதைகள் விச்வேதேவர்கள். சிவந்த ஆடை அணிந்து அஷ்டி, வஜ்ரி, சதக்னி என்ற ஆயுதங்களைக் கொண்டவர்கள். பகைவர்களை ஒழிப்பதில் இணையற்றவர்கள். இந்தக் காலத்தில் அக்கினியில் ஹோமம் செய்து விச்வேதேவர்களை உபாசித்தால் சத்துரு ஜயமும் விக்கின நாசமும் ஏற்படும். கால சொரூபியான சூர்யனையும் ருதுக்களின் தேவதைகளையும் முறைப்படி வழிபடுபவனுக்கு ருதுக்கள் வணக்கம் செலுத்துகின்றன; அவனுடைய எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றி வைக்கின்றன என்கிறது சூரியநமஸ்கார மந்திரம்.

தஸ்மை ஸர்வ ருதவோ நமந்தே ।
இந்த்ராய ஸர்வான் காமாநபிவஹதி ॥

இதற்கு முன் காட்சியில் யக்ஷனின் அனுபவத்தைக் கண்ணுற்றோம். அவனுடைய மனைவி எப்படிப்பட்டவள்! அவள் இருக்குமிடம் எத்தகையது! தூய காதல் என்றால் கணவன்—மனைவியரிடையே சொல்லும் பொருளாகவும் அல்லவா இருக்கவேண்டும்?

அந்த யக்ஷனின் மாளிகை அலகாபுரியில் குபேரனுடைய அரண்மனையை அடுத்திருந்தது. வாசலில் பெரிய வளைவு, வானவில்போல் வண்ண ஜாலம் கூட்டியது. அதையொட்டி ஒரு மந்தார விருட்சம். மஞ்சள் நிற மலர்க் கொத்துக்கள் குலுங்கின; கையெட்டும் அளவுக்குத் தழைந்திருந்தது. அருகில் ஒரு தடாகம். மரகதப் பச்சைக் கற்களால் ஆனவை அதன் படிக்கட்டுக்கள். பொன்மயமான தாமரைகள், வைடூர்யம் இழைத்த வெண்மையான தண்டுகள். அடுத்து விளையாடலுக்குரிய செய்குன்று. இந்திர நீலக்கற்களால் ஆனது. சுற்றிலும் தங்கமயமான வாழைகள். மாளிகை வாசற்படியில் யக்ஷனின் மனைவி உட்கார்ந்திருக்கிறாள். பனிக்காலக் குளிரில் நலங்கியிருக்கும் தாமரை போன்ற முகம். 'யக்ஷனைக் காணவில்லையே!' என்ற தாபத்தை அந்த முகமே காட்டுகின்றது.

[மயிலை, சம்ஸ்கிருதக் கல்லூரிப் பேராசிரியர் திரு கே. வி. சேஷாத்திரிநாதன் அவர்கள் அளித்த கருத்துக்களை, திரு கோபுலு வண்ணத்திலே வடித்து உங்களுக்கு விருந்தாக்கியிருக்கிறார். அடுத்து விருந்தைச் சுவைத்துப் பாருங்கள்.]

வஸந்தம்
தீபாவளி மலர் '82


கிரீஷ்மம்


வர்ஷம்



ஹேமந்தம்

உங்கள் ரசனையோடு உறவாடும்–டிராவலேட்!



முகத்தோடு கேசம், நேசத்தோடு உறவாட...இலேசான மனங்கொண்டு... பறந்து செல்வீர். விரைந்துசெல்வீர். மிதந்து செல்வீர். இலக்கு நோக்கி!

இலேசானது டிராவலேட், உங்கள் மனம் போலவே! வார்த்தெடுத்த லக்கேஜ். பார்த்தறியா வசதி. சுமையற்ற பயணம். சுவைமிக்க பயணம். உங்களுக்கு. ஒயிலோடு ஒட்டியுறவாடும் டிராவலேட் இருக்கையிலே!

சுமையாகி உங்களை அழுத்தாது. தோற்றமோ மிக அடக்கம். ஆனால், பலப்பல அதனுள் அடக்கம். பயணத்தின் குலுக்கல், நசுக்கல்களைத் தாங்கும் கட்டுறுதி.

சூட்கேஸ்கள், பிரீ:ப்கேஸ்கள், 'கேரீ-ஆன்' வகைகள், வானிடிகேஸ்கள்—விரும்பித் தேர்ந்தெடுக்க 22 மனங்கவர் பாணிகள். வானவில்லையும் நாணவைக்கும் மனங்கவரும் 8 வண்ணங்கள் விரும்பினால், கூடுதல் பாதுகாப்புக்கு 'மல்டி சே:ப்' பூட்டுடன்.

வி.ஐ.பி. டிராவலேட். இது இன்றி அமையுமோ உங்கள் வாழ்க்கைப்பயணம்! இன்றே வாங்குவீர் ஒன்று நன்றே துவங்கட்டும் பயணம்.

ப்ளோ ப்ளாஸ்ட் லிமிடெட்
வி.ஐ.பி.ஹவுஸ்
68 C பழைய பிரபாதேவி ரோடு
பம்பாய் 400025.

வி.ஐ.பி. டிராவலேட்–

இந்தியாவிலேயே அதிகமாக விற்பனையாகும் மோல்டட் லக்கேஜ் ரேஞ்ச்.

Contour Ads-BP-29f/82 Tam


ஆலைகளும், அருங்கல்வியும் அழகுறவே
வளர செழுமைக் கோலமதாய் வளம் பரப்பும்
தீப ஒளி ராம்கோ
Ramco
சதர்ன் அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் லிமிடெட்
739, அண்ணா சாலை, சென்னை-600 002. போன் : 82006
CAS/SACL/7/82 TAM

கண்ணைக் காப்பாற்றுங்கள்

டாக்டர். எஸ். எஸ். பத்ரிநாத்

மனிதனின் கண் ஓர் அபூர்வமான உறுப்பு. பிரகாசமான வெளிச்சத்திலும் மங்கிய ஒளியிலும் வண்ணங்களைக் கண்டு ரசித்து, பொருள்களைப் பரிமாணத்துடன் காண உதவுவது கண். பல பொருள்களை மிக வேகமாகக் கவனிக்க உதவுகிறது. இரண்டு கண்ணும் ஒன்றாகச் செயல்பட்டு, பொருளின் சரியான பிம்பத்தைப் பார்க்க உதவுகின்றன. மிக மிக நுண்ணிய செயற்பாடு இந்தச் செயல். இந்தச் செயலில் சிறு தவறு நேர்ந்தாலும், பொருள்களின் பிம்பங்கள் இரண்டிரண்டாய்த் தெரியும். பொருள்களின் பரிமாணத்தை உள்ளபடி உணர முடியாது. இதனால்தான் பொருள்கள் உள்ள தூரத்தையும் அளவையும் சரியாகக் கணித்து, முட்டி மோதிக் கொள்ளாமல் செல்ல முடிகிறது.

வெளியிலுள்ள பொருள்களின் பிம்பங்கள் விழித்திரையில் சென்று பதிய, தங்கு தடையில்லாத ஒளி புகும் பாதை வேண்டும். இந்த வசதியை அளிப்பதுதான் கண்களின் பணிகளில் முக்கியமானதாகும். விழி வெண்படலம் (Cornea) ஜன்னல் போல் ஒளியை உள்ளே செலுத்தி விழித்திரையில் பதியச் செய்கிறது. இந்த விழி வெண்படலத்துக்கும் லென்ஸுக்கும் இடையில் உள்ள நீர் (Aqueous humor) சுத்தமான, வண்ணமற்ற திரவம். அடுத்தாற்போல் ஒளி புக விழி கோலுவது கருவிழிப்படலம் (Iris). இதன் மத்தியில் சிறிய வட்டமான திறப்பு இருக்கிறது. இதுதான் கண்மணி (Pupil). இந்தக் கருவிழி மூடித் திறக்கும் கதவு போன்று செயற்படக் கூடியது. நல்ல பார்வை கிடைப்பதற்காகத் தேவையான ஒளியை இது உள்ளே செல்ல விடுகிறது. கண்மணியின் மூலம் செல்லும் ஒளி அடுத்து லென்ஸில் குவிகிறது. இந்த லென்ஸுக்கும் விழித்திரைக்கும் இடையில் உருகிய கண்ணாடி போன்ற திரவம் (Vitreous) இருக்கிறது. கண்ணின் அமைப்பில் மூன்றில் இரண்டு பாகம் இந்தத் திரவந்தான் நிரம்பியிருக்கிறது. கண்ணின் லென்ஸையும் விழி வெண்படலத்தையும் ஒரு காமிராவுக்கு ஒப்பிட்டால், பிலிம் சுருளுக்கும் காமிரா லென்ஸுக்கும் இடையிலுள்ள தூரம் போன்றது, இந்தத் திரவம்.

SANKARA NETHRALAYA

இந்த விட்ரியஸ் திரவத்தைத் தாண்டியதும் ஒளி விழித்திரையில் படிகிறது. ஒளி பட்டதும் உணர்ச்சி பெறும் உணர்வு நரம்புகள் (ஸெல்கள்) நிறைய இங்கே உள்ளன.

இந்த உணர்வூட்டிகளில் (Cell) இரண்டு விதம் இருக்கின்றன. குச்சிகள் போன்ற ராட்ஸ் (Rods), கூம்பு போன்ற கோன்ஸ் (Cones). ராட்ஸ் சுமார் பன்னிரண்டரைக் கோடியும் கோன்ஸ் சுமார் எழுபது லட்சமும் விழித்திரையில் உள்ளன. இவற்றை வலுவான உருப்பெருக்காடியின் மூலந்தான் காண முடியும். மங்கிய வெளிச்சத்தில் பொருள்களைப் பார்க்க ராட்ஸ் உதவுகின்றன. ராட்ஸ் ஸெல்லின் அளவு குறைந்தால், சினிமாக் கொட்டகையிலோ வெளிச்சமற்ற அறைகளிலோ சரியாகப் பார்க்க முடியாது. குருடர்களைப் போலத் தடுமாற வேண்டியதுதான். இந்த ராட்ஸ் ஸெல்லில் (Rhodopsin) ரொடாப்ஸின் என்ற சத்துப் பொருள் இருக்கிறது. இந்தச் சத்துப் பொருள்கள் மிகுதியாக வைட்டமின் 'ஏ' அவசியம். பகல் வெளிச்சத்தில் பொருள்களைக் காணவும் வண்ணங்களைக் காணவும் கோன்ஸ் ஸெல் உதவுகிறது.



''தம்பி, உனக்குத் தேவை கண்ணாடி இல்லே, சீப்புதான்!''

ஐம்பது லட்சம் குருடர்கள், அதாவது உலகத்திலுள்ள குருடர்களில் மூன்றில் ஒரு பங்கு, இந்தியாவில் இருக்கிறார்கள். கண் நோய்க்கேற்ற சிகிச்சையை உடனடியாக மேற்கொண்டால் இவர்களில் எண்பது சதவிகிதத்தினருக்குக் குருட்டுத் தன்மை வராமல் தடுத்து விட முடியும். இருபது வயதுக்குள்ளாகவே, முப்பது சதவிகிதத்தினர் கண் பார்வையை இழந்து விடுகின்றனர். சத்துப் போதாத உணவு, டிரகோமா (Trachoma), கண் வலி போன்ற நோய்கள் முதலியன இளைஞர்கள் குருடாகவும், புரை, நீர் காத்தல், நீரிழிவு போன்றவை வயதானவர்கள் குருடாகவும் காரணங்கள்.

டிரகோமா என்பது ஒருவிதமான கண் நோய். மிக வேகமாகப் பரவக்கூடியது; வட இந்தியாவில் மிக அதிகமாகக் காணப்படுகிறது. இந்த நோய் காணப்பட்டால் கண்கள் சிவந்துபோகும்.

குழந்தை பிறப்பதற்கு முன்பே கண்ணைக் கவனிக்கும் பொறுப்புத் தொடங்குகிறது. தாயாருக்கு மேக நோய் இருந்தால், பிறக்கும் குழந்தையின் கண்ணைப் பாதிக்கும். பிறந்த குழந்தைகளுக்கு ஏற்படும் கண் பார்வைக் கோளாறுகளுக்குத் தாயின் நோய்தான் காரணம். அதனால் தடுப்புச் சிகிச்சை மிகவும் முக்கியம். பிரசவத்துக்கு முன் தாய்க்கு ஏதாவது திரவப் போக்கு இருந்தால், உடனடியாகச் சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். குழந்தை பிறந்ததும் குழந்தையின் இமைகளை விலக்கிக் கண்களை நன்றாகச் சுத்தம் செய்ய வேண்டும். ஏதாவது தொற்று நோய்க் கிருமி இருக்கலாம் என்ற சந்தேகம் தோன்றினால், ஸில்வர் நைட்ரேட் கலவையையோ, எதிர்ப்புச் சொட்டு மருந்துகளையோ ஒவ்வொரு கண்ணிலும் விடவேண்டும். பிறந்த முதல் வாரத்தில் குழந்தையின் கண்களை நன்கு கவனிக்க வேண்டும்.

மணல்வாரி அம்மையில் ஜெர்மன் மீஸல்ஸ் என்று ஒருவகை இருக்கிறது. கருவுற்றிருக்கும் தாய்க்கு இது வந்தால், கருவை மிகவும் பாதித்துவிடும்.

குழந்தைக்கும் புரை, விழித்திரைப் பாதிப்புப் போன்ற குறைகள் இதனால் உண்டாகலாம்.

ஜெர்மன் மீஸல்ஸ் வந்தாலும் வராவிட்டாலும் இரண்டு இடைவெளியில், இதற்கான தடுப்பு மருந்தைப் பெண்கள் எடுத்துக் கொள்வது நல்லது. முதலில் ஒரு வயதிலிருந்து பன்னிரண்டு வயதுக்குள்; பேறுகாலப் பருவத்தில் உள்ள பெண்கள், ஒரு தடவை மருந்தை ஊசிமூலம் குத்திக் கொண்டால்

மூன்று வருஷங்களுக்குத் தடுப்புச் சக்தி இருக்கும். பேறு காலப் பருவம் உள்ள பெண்கள் இந்தத் தடுப்பு மருந்தை எடுத்துக்கொண்டால், அதிலிருந்து இரண்டு மாதத்துக்குக் கருத் தரிப்பதைத் தள்ளிப் போடவேண்டும்.

பிறந்த குழந்தையின் கண்களைச் சோதிப்பது மிக அவசியம். ஒன்றரைக் கண் பார்வைக் குறை இருந்தால் உடனே சரி செய்துவிடலாம். ஆறு வயதுக்கு மேல் உள்ள குழந்தைகளுக்குச் சரி செய்வது இயலாது. பள்ளி செல்லும் மாணவர்களில் இருபதிலிருந்து முப்பது சவிதக் குழந்தைகளுக்குப் பார்வைக் குறை இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். பார்வைக்குறை, கண்டுபிடிக்காத மாறுகண் பார்வை முதலியன, பின்னாளில் குழந்தையின் வாழ்வையே இருளாக்கிவிடும்.

'தங்கள் குழந்தைகள் சரியான கண்ணாடிதான் போட்டிருக்கிறார்களா?' என்பதுகூடப் பல பெற்றோர்களுக்குத் தெரியாது. கண்ணைக் குறுக்கிச் சிரமப்பட்டுக் கொண்டு கரும்பலகையைச் சில குழந்தைகள் பார்ப்பார்கள். ஆசிரியர் தாம் இந்தக் குறையைக் கண்டு சொல்ல முடியும். குறைக்கேற்ற கண்ணாடியை அணியச் செய்தால் குழந்தைகளும் படிப்பில் கவனம் செலுத்துவார்கள்.

வைட்டமின் 'ஏ' சத்துக் குறைவு இந்தியாவில் அதிகம் காணப்படுகிறது. அதுவும் தென்னிந்திய மாநிலங்களில் மிக அதிகம். ஐம்பது லட்சம் குருடர்களில், நான்கில் ஒரு பங்கினருக்கு வைட்டமின் 'ஏ' சத்துப் போதாத குறைதான். ஒன்று முதல் பதினான்கு வயதுக் குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பால் கொடுக்கும் தாய்மார்கள் இவர்

''எங்கே படியுங்க!''

களே இந்தச் சத்துக் குறைவினால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் என்று சமீபத்தில் நடத்திய ஆய்வு ஒன்று கூறுகிறது.

இந்தச் சத்துக் குறைவால் இரவில் குருட்டுத்தன்மை அதிகமாகக் காணப்படும்; விழி வெண்படலம் வலுவிழந்துவிடும்; புண்ணும் உண்டாகலாம். உடனடிச் சிகிச்சை மேற்கொள்ளாவிட்டால் பார்வையே போய்விடலாம்.

ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு 300 மைக்ரோ கிராம்களும், பன்னிரண்டு வயது வரையில் அறுநூறும், அதற்குமேல் எழுநூற்றைம்பது மைக்ரோ கிராம் வைட்டமின் 'ஏ' சத்துத் தேவை என்பது வல்லுநர்களின் கணிப்பு. ஒரு நாளைக்கு நூறு கிராம் பச்சைக்கீரை வகைகளை உட்கொண்டால், இந்த அளவு வைட்டமின் 'ஏ' கிடைக்கப் போதுமானது என்றும் கணக்கிட்டிருக்கிறார்கள்.

இந்திய உணவுமுறையில் வைட்டமின் 'ஏ' சத்து மிகவும் குறைவு. மாமிச உணவிலும் மீன், ஈரலிலும், முட்டையிலும், தயிர் வெண்ணெய் நெய்யிலும் இந்தச் சத்து இருக்கிறது. ஷார்க்லிவர் ஆயில் மிகவும் நல்லது. செயற்கை முறையில் இந்த வைட்டமினை எலுமிச்சம் புல் எண்ணெயிலிருந்து தயாரிக்கிறார்கள். உண்ணும் உணவிலுள்ள வைட்டமின் 'ஏ' சத்தைக் கிரகிக்க, போதுமான புரதமும் கொழுப்பும் உணவில் இருக்கவேண்டும்.

ஹைதராபாத்திலுள்ள தேசியச் சத்துணவுக் கழகம், அதிக அளவில் (2 லட்சம் யூனிட்) செயற்கை வைட்டமின் 'ஏ' எண்ணெய்க் கரைசலைப் பள்ளி செல்லும் குழந்தைகளுக்குக் கொடுத்தால் நல்லது என்று ஆய்வு செய்திருக்கிறது. அதிகமாக 'ஏ' சத்து உடம்பில் போனாலும் தலைவலி, மயக்கம், வாந்தி, பசியின்மை போன்ற தொந்தரவுகள் ஏற்படும்.

கண் வலி போன்ற நோயால் பார்வைக் குறை ஏற்படுவதைத் தடுக்க முடியும். நம் நாட்டில் இந்த நோய் அதிகம் காணப்படுகிறது. இது ஒருவிதத் தொற்று நோய். இந்த நோயால் உலகில் நாற்பது ஐம்பது கோடிப் பேர் அவதிப்படுகிறார்கள். இவர்களில் பன்னிரண்டரைக் கோடிப் பேர் இந்தியாவில் இருக்கிறார்கள். இந்த நோயினால் உண்டாகும் வடு, இமையைப் பாதிப்பதுடன், கண்ணீர்க் கழிவுப் பாதையை அடைத்தும் தொல்லை கொடுக்கும். ஏழைமை, சத்துணவு இல்லாமை, சுத்தமற்ற சூழ்நிலை, அதிக நெருக்கடி போன்ற காரணங்கள், உடலிலுள்ள எதிர்ப்புச் சக்தியைக் குறைத்து, நோய் தொற்றவும் வழி செய்கின்றன. தனிமனிதனும் சமூகமும் சுத்தமாக இருக்கவேண்டி

''கண்ணாடியைக் காணும்டா.''
''ப்ராகரஸ் ரிப்போர்ட்ல நான் காட்ற இடத்துல கையெழுத்துப் போட்டுடுங்க, அப்பா. போதும்!

''காலலேருந்து என் கண்ணாடியக் காணலே. கிடைச்சுதுன்னு உடனே ஆபீசுக்குக் கொடுத்தனுப்பு, செல்லம்மா.''

''கண்ணு சரியாத் தெரியுதா, பாருங்க. இது என்னோட பில், கான்டாக்ட் லென்ஸ் வைச்சதுக்கு.''

யது அவசியம். சுகாதாரம் அற்ற முறையில் கண் மை இட்டுக் கொள்வது நல்லதல்ல. எல்லாரும் ஒரே துண்டையோ கைக்குட்டையையோ உபயோகிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

நீரிழிவு நோயினால் விழித்திரைக்கு ஏற்படும் பாதிப்பைப் பற்றி முன்பு விவரித்திருக்கிறோம். மேல் நாடுகளில் நீரிழிவு நோயினால் அதிகம் பேர் குருடாகிறார்கள். வருமுன் காப்பாக, இந்தப் பாதிப்பில் செயல்பட வேண்டும்.

கருவிழிக்கும் லென்ஸுக்கும் இடையில் சுரக்கும் திரவம் வடியும் பாதையில் அடைப்பு ஏற்பட்டு, நீர் சுரந்து போய் அழுத்தம் உண்டாகிறது. இதைக் குளுகோமா என்பார்கள். நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் கண்ணை இரண்டு ஆண்டுக்கு ஒரு முறையாவது சோதித்துக் கொள்ள வேண்டும். குளுகோமா இருப்பது தெரிந்தால், நவீன மருந்துகளால் குணப்படுத்தி விடலாம்.

வயதாவதால் கண்ணின் தன்மையில் சில குறைகள் ஏற்படுகின்றன. ஒளி ஊடுருவிச் செல்லவிடும் தன்மையைக் கண் லென்ஸ் இழந்துவிடுகிறது. 'புரை' என்ற பார்வைக் குறையை அறுவைச் சிகிச்சையின் மூலம் சரிசெய்துகொள்ளலாம். தகுந்த கண்ணாடிகள் அணிந்தும் குணம் காண முடியும்.

விபத்தினாலும் கண்ணில் பாதிப்பு உண்டாகலாம். பள்ளி செல்லும் குழந்தைகளிடையே இந்தப் பாதிப்பு அதிகம். பஸ், விளையாட்டுச் சாமான்கள், பாதுகாப்பு முறை இல்லாத நவீனப் பொருள்கள் ஆகியவை அஜாக்கிரதையினால் சிறுவர்களின் கண்ணுக்கு ஊறு விளைவிக்கலாம்.

பெரிய தொழிலகங்களில் கண் பாதுகாப்புக்குத் தேவையான தடுப்புச் சாதனங்கள் இருக்கின்றன. அமிலங்களில் வேலை செய்வோருக்கு ஆபத்து அதிகம். சிறிதளவு அமிலம் தவறிப் போய்க் கண்ணில் தெறித்து விட்டாலும் கண் சிவந்து, நீர் கொட்டும். இப்படிப் பல தடவை ஏற்பட்டால் விழி வெண்படலத்தில் சிராய்ப்புகள் உண்டாகித் தொந்தரவு கொடுக்கலாம். பள்ளி ஆய்வகம், தொழிலகம், பொது ஆய்வகங்கள் முதலிய இடங்களிலுள்ள சோதனைச் சாலைகளில் தகுந்த தடுப்பு முறைகள் இருக்க வேண்டும். அமிலங்களைவிட, காரங்கள் (Alkalies) கண்களுக்கு அதிகக் கெடுதலை விளைவிக்கும். ரசாயனப் பொருள்கள் பட்டுக் கண்ணில் தீப்புண் உண்டானால், நிறையத் தண்ணீரை விட்டுக் கழுவலாம். அபாயகரமான ரசாயனப்

வைட்டமின் 'ஏ' சத்துக் குறைவினால் பாதிப்பு

பொருள்களைக் கையாளும் தொழிலகங்களில் தகுந்த காப்பு முறைகள் அமைந்திருக்க வேண்டும். இந்த மாதிரி இடங்களில் வேலை செய்பவர்கள் தகுந்த தடுப்புக் கண்ணாடி அணிந்திருக்க வேண்டும். தொழிலகங்களில் வேலை செய்வோர் கண்ணுக்குள் பொருத்தும் கண்ணாடியை (Contact lens) உபயோகிக்கக் கூடாது. அவை கண்ணுக்குப் பாதுகாப்பு அளிக்கா.

கல், இரும்பு முதலியவற்றைச் சாணை பிடிக்கும்போது விபத்துக்கள் ஏற்படலாம். பிசிர்கள் கண்ணில் புகுந்தாலும் புண்ணாகி விடலாம். கண்ணில் ஏதாவது சிறு துகள் விழுந்து விட்டால் கண்ணீருடன் வெளிவந்துவிடலாம். அல்லது தகுந்த டாக்டரிடம் உடனே காட்ட வேண்டும்.

புற ஊதாக் கதிர் (Ultra violet) கண்ணின் வெண் விழிப் படலத்தைப் பாதிக்கக் கூடியது. சூரிய ஒளியிலுள்ள புற ஊதாக்கதிர்களை வாயு மண்டலம் கவர்ந்து விடுகிறது. அதனால் மனிதர்களுக்குத் தீங்கு ஏற்படுவதில்லை. கார்பன் ஆர்க் லாம்ப், வெல்டிங்கில் உபயோகமாகும் ஆர்க் வெளிச்சம் போன்றவற்றிலுள்ள இந்தப் புற ஊதாக் கதிர்கள் கண்ணில் பட்டால், தொல்லை கொடுக்கலாம். உடனே இல்லாவிட்டாலும், கொஞ்ச நேரம் கழித்து, கண்கள் சிவந்து நீர் கொட்டும். கொஞ்சம் கடுப்பும் வலியும் கூட இருக்கும். தகுந்த காப்புக்கண்ணாடி அணிந்து, கண்



தாயின் நோயினால்
பாதிக்கப்பட்ட பார்வை

ணைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

சூரிய கிரகணத்தைச் சாதாரணக் கண்ணால் பார்ப்பதால் விழித்திரை பாதிக்கப்படுகிறது. இந்தப் பாதிப்பு நிரந்தரமானது, பார்வையும் மங்கி விடும். எக்ஸ்ரேக் கதிர்கள் பட்டாலும் புரை, இமை வீக்கம் போன்ற குறைகள் உண்டாகலாம். நோயாளிகளும் சரி, டாக்டர்களும் சரி எக்ஸ்ரே கதிர்கள் தங்களைத் தாக்காமல் பாதுகாப்பாக இருக்கும் முறையில் செயல்பட வேண்டும்.

மொக்கையான ஆயுதங்களால் கண்ணில் அடிபட்டுவிட்டால், இமைகள் வீங்குவதற்குள் டாக்டரைப் பார்த்துச் சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். உடனே கவனித்தால் பின்னால் ஏற்படும் பல தீய விளைவுகளைச் சமாளித்து விடலாம்.

நவீன மருந்துகளினாலும் கண்டுபிடிப்புகளினாலும் கண் நோய்களைக் கண்டு பிடிப்பதுடன், குணப்படுத்தவும் முடியும். நுண்ணுயிர்ச் சோதனைகள், எதிர்ப்பு மருந்துகள் முதலியன சிகிச்சையை எளிமையாக்குகின்றன. ஸ்லிட் லாம்ப், டோனோமீட்டர் போன்ற நவீனக் கருவிகள் கண் நோயைத் துல்லியமாக அறிய உதவுகின்றன. சக்தி வாய்ந்த ஒளிக்கற்றைத் தீய்ப்பு முறை நவீனக் கண்டுபிடிப்பில் மிகவும் முக்கியமானது.

கண்ணைக் காப்பாற்றும் அவசியத்தைப் பள்ளிப் பருவத்திலேயே குழந்தைகளிடம் உண்டாக்கிவிட வேண்டும். சூழலைச் சுத்தமாக வைத்துக்கொள்வதுடன், நல்ல பழக்கங்களை மேற்கொள்ளும்படி வற்புறுத்த வேண்டும். சரியாக உட்கார்ந்து படிக்கும் நிலை, வெளிச்சம் புத்தகத்தில் விழும் முறை, போதிய வெளிச்சம், பெரிய எழுத்துக்களின் அவசியம் ஆகியவற்றைப் பற்றிச் சிறுவர்களுக்குப் போதிக்க வேண்டும். படிக்கும்போது கண்ணில் ஒளி நேராக விழாமலும் பிரதிபலிக்காமலும் இருக்க வேண்டும். டாக்டரின் ஆலோசனை இல்லாமல் எந்த மருந்தையும் உபயோகப்படுத்தக் கூடாது. சொட்டு மருந்துகளை உபயோகப்படுத்தும்போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும். சுத்தமான துணியினால் தான் கண்ணைத் துடைக்க வேண்டும். கொதிக்கும் நீரில் சுத்தம் செய்யாமல் சொட்டு மருந்து போட்டுக் கொள்ளும் குழல்களை மீண்டும் மீண்டும் உபயோகப்படுத்தக்கூடாது.

வாழ்க்கைத் தரம் உயர்ந்து சுத்தமான சூழ்நிலை அமைய வேண்டும். படிப்பும் சத்துணவும் எல்லாருக்கும் கிடைக்க வேண்டும். இந்த நிலையை அடையப் பல ஆண்டுகள் ஆகலாம். ஆனால் முயற்சிகளை இப்போதே மேற்கொள்ளலாம், அல்லவா?

[கேட்டு எழுதியவர்: எஸ். வி. ரமணி]

பரம்பொருள் வாழ்த்து

ஆத்திசூடி இளம்பிறை அணிந்து
மோனத்து இருக்கும் முழுவெண் மேனியான்

கருநிறம் கொண்டு பாற்கடல்மிசைக் கிடப்போன்
மகமது நபிக்கு மறைஅருள் புரிந்தோன்

ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவகத்தாலே உணர்ந்து உணராது

பலவகையாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே; அதன்இயல் ஒளிஉறும் அறிவாம்

அதன்நிலை கண்டார்; அல்லலை அகற்றினர்
அதன்அருள் வாழ்த்தி அமரவாழ்வு எய்துவோம்!

—மகாகவி பாரதியார்

விளம்பர உதவி:-

சக்தி சுகர்ஸ் லிமிடெட்

தலைமை அலுவலகம்
73, ஏ. ரேஸ்கோர்ஸ் சாலை,
கோயமுத்தூர்-641018.

பதிவு அலுவலகம் - ஆலை
சக்தி நகர் – 638315
பெரியார் மாவட்டம்.

K. ORR & COMPANY

28, STRINGERS STREET, MADRAS 600 001

Phone: 23019, 23526 Grams: "PRESUNDRY"

Agents and Stockists

- PAPER
- PRINTING Inks: "UNITED", "MONARK", "COATES" and "HOOGHLY" Brands
- PRINTERS SUNDRIES
- MONO SPOOLS

Indents Booked For

- Paper Process Zinc and Copper Sheets, Rubber Biankets, Lithographic Zinc Sheets, Hardware
- Bronze Powders From ENGLAND & Zip Fastners
- Art Paper From JAPAN
- Bolts and Nuts From Rachna Enterprises & Jyoti Steels, Amritsar
- Pearl Buttons, Zips & Sewing Machines from TAIWAN

BAGS & PRINTS

62, CHINNATHAMBI STREET, MADRAS 600 001

Phone: 29541 Grams: "PAPERBAG"

Manufacturers of Tele Tapes & Teleprinter Paper Rolls

தீபம் ஏற்றிய திருவிழிகள்

-கௌதம நீலாம்பரன்-

இரண்டு மூன்று நாட்களாகவே மாமன்னர் கிருஷ்ணதேவ ராயரின் மனத்தில் அந்தக் குரல் எதிரொலித்துக்கொண்டிருக்கிறது. சொப்பன அவஸ்தைபோல அந்தக் குரல் திரும்பத் திரும்ப ஒலித்துக்கொண்டேயிருப்பதால் நித்திரை கெட்டொழிந்தது. யார் அது, எங்கிருந்து பேசுகிறது, அந்தக் குரல்? ஊஹும்; ஒன்றும் புலப்படவே இல்லை.

ராயர், அந்தக் குரலால் எச்சரிக்கையடைந்து மஞ்சத்திலிருந்து எழுந்து அந்த மேன்மாடக் கூடத்தை அளந்து அளந்து எண்ணிக்கையைத் தவறிவிட்டவர் போல் குறுக்கும் நெடுக்குமாகத் திரும்பத் திரும்ப நடந்தார்; கால்கள் அயர்ந்து, கண்கள் சோர்ந்து, இமைகள் 'எனக்கு ஓய்வு கொடு' என்று கெஞ்சும்; திரும்பவும் மஞ்சத்தில் வீழ்ந்த மறு விநாடியே அந்தக் கம்பீரக் குரல், 'உன் நன்மைக்குத்தான்..; உன் நன்மைக்குத்தான்' என்று விண்ணும் மண்ணும் சேர்ந்து அதிர எதிரொலிக்கும், தொனி லயம் பிசகாமல். சில சமயம் அமைதியும் உறக்கமும் அழிந்துபோகிற ஆத்திரத்தில், "ஏ மாயப்பிசாசே! என் நன்மைக்கு என்று எதைச் சொல்லுகிறாய்? இப்படி நித்திரைப் பங்கம் செய்து, நிம்மதியைக் குலைப்பதுதான் நீ எனக்குச் செய்யும் நன்மையா?" என்று அரற்றுவார்.

அவர் தம்மைத் தாமே ஒரு தனிமைச் சிறையில் வைத்துக்கொண்டிருப்பதுபோல், 'என் சயன அறைக்குள் யாரும் பிரவேசிக்க வேண்டாம்' என்று அரசி திருமலா தேவி உட்பட அனைவருக்குமாக உத்தரவிட்டிருந்தார்.

அன்றிரவு அரசர் நெடுநேரம் உறக்கமின்றித் தவித்தார். மஞ்சத்தில் வீழ்ந்த மறு விநாடி அந்த மாயக்குரல் எழுந்து, ஒரு ராட்சச வீணையின் நரம்புகளில் ஏறி யாரோ கோர நர்த்தனம் புரிவதுபோல் ஒலிக்கத் துவங்கியது. சினம் எல்லை மீறிய நிலையில் கிருஷ்ணதேவ ராயர் மஞ்சத்தருகே பழங்களை வைத்திருந்த ஒரு பெரிய தாலத்தை ஓங்கி உதைத்தார். அது அந்த அறையின் மூலையில் போய் விழுந்து பேரொலி எழுப்பி அதிர்ந்தது.

இளைய ராணி நாகலா தேவி, சற்றுத் துணிச்சலான சுபாவம் கொண்டவள்: அரசர் படும் அவதிகளை அறிந்து, மிகவும் மனம் புழுங்கிக் கொண்டிருந்தாள். ஆறுதல் சொல்லலாம் என்றாலோ, மன்னர் உத்தரவைக் கூறி அடக்கி விடுகிறார்கள்; என்ன செய்வதென்று புரியாமல் தவித்துக்கொண்டிருந்தாள்: இன்று நிலைமை மீறிப் போகவே, பொறுமை இழந்தவளாய், அரசரின் சயன அறையை நோக்கி நடந்தாள்;

"பிரபு, ஏன் இப்படித் தனிமை நெருப்பில் தவித்து நலிகிறீர்கள்? தாங்கள் படும் அவதியைக் கண்டும் காணாதவளாய், 'மன்னர் உத்தரவு' என்ற வார்த்தையைச் சிரமேல் கொண்டு, என்னால் பேசாதிருந்துவிட முடியவில்லை பிரபு, திருமலாதேவியாரும் பரிகாரம் தெரியாமல் நெருப்பில் வீழ்ந்த பறவையாய்ப் பரிதவித்து நலிகிறார். ஏன் இப்படி மனக்கதவுகளை இறுகப் பூட்டிக் கொண்டுள்ளீர்கள்?" என்று நாகலாதேவி கனிவு சிறக்கக் கேட்ட போது, மாமன்னர் கிருஷ்ணதேவ ராயர் கோபத்துடன் சொன்னார்.

"பிரிய நாகலா, மகிழ்ச்சி பொங்க உன்னோடும், திருமலாவோடும் பேசுகிற மனநிலையில் நான் இல்லை, கண்ணே! மனக்கூடத்தின் கதவுகளைத் தாழிட்டுக் கொண்டு உள்ளே தனியாலோசனை நிகழ்த்த வேண்டிய அவசியம் இருப்பதாலேயே அப்படி உத்தரவிட்டேன்" என்றார்.

"இல்லை பிரபு, தனியாலோசனை அல்ல. தனியாக நின்று வெல்ல முடியாத எண்ணற்ற எண்ணங்களோடு தாங்கள் எதற்காகப் போரிட்டு நலிகிறீர்கள் என்பது எனக்குப் புரியாமல் இல்லை; என்னோடு மனம் விட்டுப் பேசுங்களேன்!" என்று மன்றாடினாள் அவள்;

"இல்லை, நாகலா! நீ என்மீதுள்ள அளவற்ற அன்பால் வீணாக எதையோ கற்பனை செய்து கொள்கிறாய். எனக்குத் தனிமை தேவைப்பட்டது. இரண்டு நாட்களாக ஒரு விதச் சொப்பன அவஸ்தையால் உறக்கமிழந்து போகிறேன்; இனம் தெரியாத ஓர் உருவம் நிழலாகத் தோன்றி, 'உன் நன்மைக்குத்தான்' என்று எதையோ உளறுகிறது. அந்தக் குரல் என் நிம்மதியை அடியோடு இழக்கச் செய்து விடுகிறது" என்றார் மாமன்னர்.

"அந்த நிழலுருவம், அப்பாஜியாகத்தான் இருக்குமென்று எனக்குத் தோன்றுகிறது. சமீபத்தில் அவருக்குத் தாங்கள் அளித்த தண்டனையைப்பற்றித் தங்களாலேயே பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதனால்தான் அதைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்" என்று நாகலாதேவி கூறிக் கொண்டிருக்கும் போதே குறுக்கிட்ட ராயர், "நாகா, நான் அப்பாஜிக்கு அளித்த தண்டனை பற்றி எனக்கு எந்த வருத்தமும் இல்லை. என்றைக்கு அவர் நம் இளவரசனைக் கொன்றாரோ, அப்போதே அவர் மீதிருந்த மதிப்பு, மரியாதை எல்லாம் எனக்கு மறைந்துபோய் விட்டன. ஒரு காலத்தில் அவர் எனக்குச் செய்த நன்மைகளை உத்தேசித்தே அவருக்கு இதைவிடக் கொடிய சித்திரவதையோ, மரண தண்டனையோ அளிக்காது விட்டேன். ஏற்கனவே மன உளைச்சலில் அவதிப்படுகிற எனக்கு அதையெல்லாம் நினைவுபடுத்தாதே!" என்று பதிலிறுத்தார்.

"பார்த்தீர்களா? முன்பு தாங்கள் மனக்கவலை ஏதுமில்லை, தனிமை மட்டுந்தான் தேவை என்றீர்கள். இப்போது, 'மனக்கவலையை அதிகப் படுத்தாதே' என்கிறீர்கள். உண்மையை என்னிடம் ஏன் மறைக்கிறீர்கள்? இளவரசன் - அக்கா திருமலாதேவியார் பெற்ற அருமந்தப் புதல்வன் இறந்துபோன துக்கத்திலிருந்து நானும் கூடத்தான் இன்னும் மீளவில்லை. நினைத்தாலே அந்தக் கொடிய சோகம் நெஞ்சை அடைக்கிறது! பால் மணம் மாறாத அந்தப் பச்சிளம் பாலகன், பசுந்தளிர், பட்டுப் போன சோகம் அத்தனை சாமான்யமானதில்லைதான்; ஆனாலும் நீங்கள் அரசுப் பொறுப்புகளில் மூழ்கி, அந்தச் சோகத்தை மறப்பீர்கள் என்றே நாங்கள் எதிர்பார்த்தோம்.

"நான் மட்டுமல்ல, அக்கா பெரிய தேவியாருடைய உள்ளக் கிடக்கையும் அதுதான். ஆனால், அந்த ஆறாச் சோகத்திலிருந்து தாங்கள் இன்னும் மீளவே இல்லை. தங்களுக்கு அப்படியென்ன வயதாகிவிட்டது, அடுத்த மகவு தோன்றாமல் போய்விடுவதற்கு? ஏதோ நடக்கக் கூடாதது நடந்துவிட்டது. அதற்காக அப்பாஜிக்குத் தாங்கள் அளித்த தண்டனை கடுமையானதுதான்.

''குற்றவாளியைத் தண்டித்திருந்தால், இப்படிக் குழம்பிப் போயிருக்க மாட்டீர்கள். சந்தேகப்பட்ட வரை இப்படித் தண்டித்து விட்டதாலேயே இத்தனை குழப்பமும் தங்களுக்கு நேர்ந்துள்ளது. எதற்கும் தாங்கள் அப்பாஜியை ஒரு முறை சந்தித்திருக்கலாம். இந்த விஷயத்தில் விசாரணையே நிகழ்த்த முடியாத அளவுக்குத் தாங்கள் சினம் கொண்டிருந்தது எனக்குத் தெரியாததல்ல. அப்பாஜியைக் கடுமையாகத் தண்டித்து விட்ட இந்த நிலைக்குப் பிறகாவது தாங்கள் அவரைச் சிறைக்கூடம் சென்று ஒரு முறை சந்தித்து வருவது நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது.''

ராயர், மௌனம் சாதித்தார். அவருடைய அன்புக்குப் பாத்திரமான தேவியாரான நாகலா, அதற்கு மேல் அவருடன் விவாதிக்க விரும்பாதவளாய் அந்தச் சயன அறையின் மூலையிலிருந்த வீணையை எடுத்துக் கொண்டு, பொன்னூசலில் வந்தமர்ந்து, கானம் இசைக்கத் தொடங்கினாள்.

மாமன்னர் கிருஷ்ணதேவராயர் அந்த மனோகரமான வீணை இசையில் மெய்ம்மறந்து, துன்பங்களை மறந்து கண்ணுறங்கலானார். நெடுநேரம் வீணையை இசைத்து, நாத தேவதைகளை நர்த்தனமிடச் செய்து கொண்டிருந்த நாகலாதேவி, நள்ளிரவுக்குப் பின், ஒரு வழியாக அரசரை உறங்கச் செய்ததும் அங்கிருந்து தன் அறைக்குப் புறப்பட்டுச் சென்றாள்.

அதற்கென்றே காத்திருந்ததுபோல், அந்த நிழல் மனிதன் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு நித்திரையில் ஆழ்ந்திருந்த மாமன்னரின் கனவில் எழுந்து நின்று, அதே பழைய பல்லவியைக் குரலெடுத்து முழங்கினான். இந்த முறை அரசர் அந்த மனிதனை விட்டுவிடத் தயாராயில்லை. கனவிலேயே எழுந்து சென்று, ''யார் அது? நில்! சொல்லுவதை நின்று நேராகத் திரும்பிப் பார்த்து என்னிடம் சொல்லிவிட்டுப் போ'' என்று அந்த மனிதனைத் தடுத்து நிறுத்தினார்.

எங்கோ வெண்ணிறப் பனிப்புகை மண்டலத்தின் இடையே சென்றுகொண்டிருந்த அம்மனிதன் ஒரு கணம் நின்று திரும்பி அரசரைப் பார்த்தான்.

''ஓ! அப்பாஜி! தாங்கள்தாமா இத்தனை நாளும் என் நித்திரையை, நிம்மதியைக் கெடுத்து இப்படி மாயக்குரலெழுப்பி வருகிறீர்கள்?''

அப்பாஜியின் முகத்தில் கம்பீரப் புன்முறுவல் படர்ந்தது. ''மன்னா, நீ என் மகனுக்குச் சமமானவன். உன் நித்திரையை, நிம்மதியை ஒரு போதும் நான் கெடுப்பவனல்ல. அப்படிக் கெட்டிருந்தால், அது உன் அறியாமையால் நேர்ந்த அவதியாக இருக்கும். உன் நல்வாழ்க்கைக்காகப் பாடுபட மட்டுமே எனக்குத் தெரியும், நீ எனக்குத் தீங்கிழைத்தாலுங்கூட'' என்றார்.

''அதனால்தான் என் பிள்ளையை, குலக்கொழுந்தை, விஜயநகரப் பேரரசின் எதிர்கால வாரிசை, விஷம் வைத்துக் கொன்றீர்களோ?'' என்று வெறுப்பும் சினமும் மண்டிய குரலில் வினவினார், மன்னர் கிருஷ்ணதேவராயர்.

''அதைப் பற்றி நீ இதுவரை என்னிடம் எந்த விசாரணையும் நிகழ்த்தியதில்லை. தீர விசாரிக்காமல் கிருஷ்ணதேவராயர் தீர்ப்பு வழங்கிய ஒரே பொரு வழக்கு, இந்தத் திம்மையாவின் வழக்குத்தான். மன்னர் விசாரிக்காது போனாலும், விளக்கம் கூற வேண்டியது என் கடமை. அதனால்தான் சிறையினின்று வெளியேறி இங்கே வந்தேன்'' என்று அப்பாஜி கூறினார்.

,,என்ன கூறப்போகிறீர்? இல்லையென்றுதானே? நீர் அந்த மாபாதகத்தைச் செய்திராவிடினும், உம் மகன் செய்த கொடுமைக்கு உடந்தையாகத்தானே இருந்தீர்? நான் அதுபற்றி உம்மிடம் பேசவோ, ஏன் உமது முகத்தில் விழிக்கவோகூட விரும்பவில்லை.''

''மன்னா, தாங்கள் என் முகத்தில் விழிக்க வேண்டாம். ஆனால் உண்மையின் முகத்தில் விழிக்காமல் இருந்து விடவும் வேண்டாம். தாங்கள் என்னைச் சந்தேகிக்கக் காரணமாக இருப்பது, தங்கள் குமாரனுக்கு இளவரசுப் பட்டம் கட்டுவதில் இத்தனை அவசரம் வேண்டாம் என்று நான் கூறியது மாத்திரமே. அது பல அரசியல் சிக்கல்களைத் தோற்றுவிக்கும் என்பதாலேயே அப்படிக் கூறினேன். உரிய காலம் வரும் வரை பொறுத்திருக்கலாம் என்பது என் 'உத்தேசம், தாங்கள் அந்த முடிவில் உறுதியாக இருந்ததும், நானே முன்னின்று யுவராஜ பட்டாபிஷேகத்தைச் சிறப்பாக நடத்தினேன். எதிர்பாராமல் இளவரசர் நோய்வாய்ப்பட்டுச் சில மாதங்களில் இறைவனடி சேர்ந்தார்.

''துரதிர்ஷ்டவசமாகச் சில எதிரிகள், அது கொலை என்றும், அதையும் என் மகனே செய்தான் என்றும், நானும் அதற்குத் துணைபுரிந்தேன் என்றும் கூறி, தங்களையும் நம்ப வைத்து விட்டனர். அன்பு மேலிட்டால் தாங்கள் அளித்த அரச மரியாதைகளையும், அந்தஸ்துகளையும் அநுபவித்த நான் சினமேலிட்டால் தாங்கள் அளித்த தண்டனைகளையும் மகிழ்வுடன் ஏற்றேன். இளவரசரின் மரணத்துக்கு ஈடு கட்டுவதே போல், என் மகனின் விழிகளைத் தோண்டி, அவன் உயிரையும் எடுத்துக் கொண்டீர்கள். அதன் பிறகாவது என்மீதுள்ள சினம் தணிந்திருக்குமா என்று அறியவே இப்படி வந்து போகிறேன்'' என்றார்.

''ஆமாம், நான் தங்கள் விழிகளையும் அல்லவா குருடாக்குமாறு கட்டளையிட்டிருந்தேன்? இப்போது ஒளி நிறைந்த கண்களோடு என்முன் நிற்கிறீர்களே! தங்கள் மீதுள்ள அபிமானத்தால் தண்டனையை நிறைவேற்றாமல் விட்டு விட்டார்கள் போலிருக்கிறதே!'' என்று வினவினார் அரசர்.

''அரசே, தங்கள் ஊழியர்கள் மிகுந்த ராஜ விசுவாசிகள். ஐயமே வேண்டாம் தங்களுக்கு. நான்தான் என் விருப்பப்படி அரசு பீடத்தில் ஓர் இளைஞரை ஏற்ற வேண்டுமென்பதற்காக, முன்னம்

ஒருமுறை விஜயநகர வேந்தர் வீர நரசிம்மருக்குத் துரோகம் இழைத்தேன். அவர் நோயுற்றிருந்த தருணத்தில் என்னை அழைத்து, தமக்குப் பின் தம் மகன் பட்டத்துக்கு வருவதற்கு இடைஞ்சலாக இருப்பாரோ என்று கருதி, தம் இளைய சகோதரரைக் கொன்றுவிடுமாறு எனக்கு ஆணையிட்டார்; கொலை வேண்டாமென்று நான் கூறியதும், 'அப்படியானால் அவன் விழிகளையாவது தோண்டி வந்து என்னிடம் காட்டுங்கள்; குருடனாக அவன் பிழைத்துப் போகட்டும்' என்றார்.

"'அந்த இளைய சகோதரரோ என்னிடம் ஓடிவந்து, 'என்னை ஒன்றும் செய்யாமல் விட்டு விடுங்கள். என் சகோதரரின் திருவுள்ளம் தெரிந்த பின் நான் அரண்மனையில் இருக்கவே விரும்பவில்லை. துறவறம் ஏற்றுத் தீர்த்த யாத்திரை போகிறேன். என்று மன்றாடினார்.

"'தேச நலன் கருதியும், இந்த வெற்றித் திருநகரைப் போர்மேகங்கள் சூழ்ந்து கிடக்கும் பொல்லாத வேளையில் ஓர் பச்சிளம் பாலகனைப் பொம்மை அரசனாகத் தேர்ந்தெடுப்பதைவிட, உரமேறிய தோள்களை உடைய ஓர் இளைஞனே தேவை என்று கருதியதாலும் நான் அந்த இளைய சகோதரனை விருபாட்சர் கோவிலில் மறைத்து வைத்துவிட்டு, ஆட்டின் கண்களைத் தோண்டி வந்து அரசரிடம் காட்டினேன்; அவர் நிம்மதியாக உயிர் துறந்தார். அந்த இளைய சகோதரர் அரசபீடம் ஏறி, நீதி நெறி வழுவாமல் பல ஆண்டுகள் பரிபாலனம் செய்தார். ஆனாலும் அவர் இதயத்தில் ஓர் உறுத்தல். 'நாம் அரச பீடத்தை அடைய ஒரு பாவமும் அறியாத ஓர் ஆடு தன் இரு விழிகளை இழக்க நேர்ந்ததே!' என்று வருந்திக் கொண்டிருந்தார். அதற்குப் பரிகாரமாகத்தான் நான் என் விழிகளை இழக்க நேர்ந்தது. இப்போது தாங்கள் காண்பது என் புற விழிகளை அல்ல; உள்ளொளி நிறைந்த அகவிழிகளை." பேசிக் கொண்டே இருந்த மனிதர் திடீரென்று எழுந்து பனிப்புகையில் மறைந்து விட்டார்.

கிருஷ்ணதேவ ராயர் விழித்துக் கொண்டு விட்டார். 'ஓ! இத்தனை நேரமும் கனவில்தான் அப்பாஜியுடன் பேசிக்கொண்டிருந்தேனா? எத்தனை பெரிய தவறு இழைத்து விட்டோம்! அன்றே வீர நரசிம்மரின் உத்தரவுப்படி அப்பாஜி நம் விழிகளைத் தோண்டியிருந்தால், இன்று நாடாளும் பொறுப்பு ஏது?'

''அப்பாஜி!' என்று வீரிட்டு எழுந்தார் கிருஷ்ணதேவராயர்.

"'அப்பாஜி! இந்த மாபாதகத்துக்கு என்ன பரிகாரம்? தங்கள் சித்தம் எதுவானாலும் சிரம் தாழ்த்தி ஏற்கத் துணிந்து விட்டேன்; இதோ, வருகிறேன், தங்களிடம், மன்னிப்புக் கோர!'' என்று கூறியபடியே எழுந்து சிறைக் கூடத்தை நோக்கி நடந்தார் மன்னர்.

இருள் பிரியாத அந்த வைகறையில் அரசர் சிறைக் கூடத்திற்கு வருகை தருவதைக் கண்டதும் காவலர்கள் பதற்றத்துடன் வணக்கம் செலுத்தினர். ராயர் அப்பாஜி அடைந்து கிடந்த அறையின் முன் சென்று, கதவைத் திறக்க உத்தரவிட்டார்.

உள்ளே வைக்கோல் பரப்பப்பட்ட ஒரு மேடையில் துணியை விரித்து, அதன் மீது படுத்திருந்தார் அப்பாஜி. பல முறை அவரை எழுப்பக் குரல் கொடுத்த பிறகுதான் மாமன்னர் கிருஷ்ணதேவ ராயர் தம் கரங்களாலேயே அவரைத் தொட்டு எழுப்ப முயன்றார். அதன் பிறகுதான் புரிந்தது அப்பாஜியின் மேனி சில்லிட்டுக் கிடப்பதும்.

பிரமை பிடித்தவர்போல் திகைத்துப் போய் நின்றார் மாமன்னர் கிருஷ்ணதேவராயர். உலகுக்கெல்லாம் பொழுது புலர்ந்து கொண்டிருந்த அந்த வைகறை வேளையில் அவர் உள்ளத்தில் பேரிருள் படர்ந்து கொண்டிருந்தது. அந்த இருளினிடையே தீபம் ஏற்றியது போன்ற திம்மையாவின் திருவிழிகள் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. ஓ! அவை உண்மையின் ஒளிச்சுடர்கள் அல்லவா? ✻

அபர்ணா

புதியதோர் படைப்பு! அருமையான தயாரிப்பு!!

"அபர்ணா" பிராண்டு
டபுள் ரிபைண்ட் ஆயில்

குறைவான விலை! நிறைவான தரம்!!

அபர்ணா டபுள் ரிபைண்ட் ஆயிலையே
எப்பொழுதும் வாங்கி உபயோகியுங்கள்!

தயாரிப்பாளர்:

ஸ்ரீகணேஷ் ஆயில் இண்டஸ்ட்ரீஸ்(பி)லிமிடெட்

பதிவு ஆபீஸ்:
128, மௌபரீஸ் ரோடு,
சென்னை-600 018
போன்: 444 070

பாக்டரி:
வெள்ளி வாயல் சாவடி,
சென்னை-103
போன்: வெள்ளி வாயல் சாவடி 34

காலங்காலமாக பயன்பட்டுவரும் கிராம்புத்
தைலத்தின் நன்மைகளை மீண்டும் கண்டுணர்ந்த
ஆயிரக்கணக்கான குடும்பங்கள்

கிராம்புத் தைலம் கொண்ட இணையற்ற டூத்பேஸ்ட்

ப்ராமிஸ்

உபயோகிக்கிறார்கள்

நீங்கள் இன்னுமா கண்டுணரவில்லை?

ப்ராமிஸ்

பற்சிதைவிலிருந்து பாதுகாக்கிறது,
வாய்க்குப் புத்துணர்ச்சி
தருகிறது மற்றும்
துர்நாற்றத்தை அகற்றுகிறது.

MONDE SELECTION

பல்ஸாரா தயாரிப்பு

ஆரோக்கியமான பற்கள்,
ஈறுகள் மற்றும் புத்துணர்ச்சிமிக்க
மூச்சுக்கு ப்ராமிஸ்.

CHAITRA-BLS-453 R TAM

காலி டியூப் சலுகை இப்போது, இறுதியாக 1982, டிசம்பர் 31-ஆம் தேதிவரை நீடிக்கப்பட்டிருக்கிறது.

அறுசுவையின் அடிப்படை சுவை
அம்பீஸ் சுவையே!
மனம் மகிழ நன்கு உண்ணுங்கள்
அம்பீஸ் துணையுடன்...



அம்பீஸ் ஊறுகாய் வகைகள்:

ஆவக்காய், மாங்காய், வடு மாங்காய், மாங்காய் தொக்கு, எலுமிச்சை, கோங்கூரா, பச்சை மிளகு, வெஜிடபிள் ஊறுகாய், நெல்லிக்காய், பச்சை மிளகாய், பூண்டு ஊறுகாய் மற்றும் பல வகைகள்.

அம்பீஸ் சுவை,
ஆவலைத் தூண்டும்
சுவை

Ambi's

3869
FPO

அம்பீஸ் பிக்கிள்ஸ்
அண்ட் காண்டிமெண்ட்ஸ்
ஆப் இந்தியா

ஏற்றுமதி செய்வோர்:
வெஸ்டர்ன் எக்ஸ்போர்ட்ஸ்,
(இந்தியா) பிரைவேட் லிட்

19. நீலகண்ட மேத்தா தெரு, தி. நகர். தொலைபேசி: 447355

APRC

பொன்னின் பெருமை



வணிகத்துக்கும் சேமிப்புக்கும் உதவும் தங்கக் கட்டிகள்

டாக்டர் நீ.ரா. ஸ்ரீநிவாஸன்

பொன், தங்கம், ஸ்வர்ணம், ஹேமம், கனகம், காஞ்சனம் எனப் பல பெயர்களால் அழைக்கப்படும் உலோகம் உவமையில்லா அழகு வாய்ந்தது. ஆதவனின் காலைமாலைக் கிரணங்களைப் போல் காந்தி மிகுந்து மிளிர்வது. வேதகாலத்திலிருந்தே வழக்கில் உள்ளது. கடவுளின் திருமேனி பொன் மேனியாகத் துலங்குகிறது. மன்னனின் மகுடம் பொன்னாலானது. மாதரின் கழுத்துப் பொன்னாலே மலர்கிறது. பொன் செல்வத்தின் எல்லை, நாணயத்தின் ஆதாரம், மோகத்தின் முடிவு, தூய்மையின் எடுத்துக்காட்டு, குணத்துக்கோர் உவமானம். தங்கத்தின் உயர்வு ஒப்பில்லாதது.

வேத மந்திரங்களிலே ஸ்வர்ண பாத்ரம், ஸ்வர்ண தானம், ஸ்வர்ண புஷ்பம் ஆகியவை காணப்படுகின்றன. 'பொன் வைக்குமிடத்தில் பூவையாவது வை' என்று தானதட்சிணை கொடுக்கும்போது சொல்லுகின்றனர். அழகே உருவாம் மகாலட்சுமியை வர்ணிக்கும்போது, 'ஹிரண்ய வர்ணாம் ஹரிணீம் ஸுவர்ண ரஜதஸ்ரஜாம்' என்று ஸ்ரீசூக்தம் தொடங்குகிறது. உருக்கிய தங்கத்தைப் போல் வர்ணமுடையவளும், பொன்னைப் போல் பிரகாசிக்கின்றவளுமான ஸ்ரீதேவி, மானிடர்களுக்குச் சகல செல்வங்களையும் அருளட்டும் என்று வேண்டுகிறது.

இறைவனைப் பொன் வண்ணன் என்று சொல்லுகின்றனர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தில், ''பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து, மின்னார் செஞ்சடை மேல் மிளிர் கொன்றை அணிந்தவனே'' என்று திருமழபாடி மாணிக்கத்தைப் பாடுகின்றார். பொன்மேனியுடைய சிவபெருமான் பொன்னிறமான கொன்றை மலர்களை அணிந்து ஆனந்தக் காட்சியளிக்கின்றான்.

ஸ்வர்ண விக்கிரகம்: இறைவன் அர்ச்சாவதார மூர்த்தியாகப் பல கோவில்களிலே உறைகிறான் என்று தத்துவ நூல்கள் கூறுகின்றன. அவ்வாறு கோயில் கொண்டுள்ள மூர்த்திகள் ஆகம விதிப்படி ஆராதனை செய்யப்படுகின்றன. இவற்றில் மூல விக்கிரகம் ஒன்று; கர்ப்பக்கிருகத்தில் ஸ்திரவாசம் செய்வது; உற்சவமூர்த்தியோவெனில் பல கோலம் கொண்டு வெளியே உலவி வருவது. இந்த உற்சவமூர்த்தி பல கோவில்களிலே பொன்னாலேயே செய்யப்பட்டுப் பட்டொளி வீசிக் கொண்டிருக்கும். தங்க விக்கிரகத்தை அழகாக அலங்கரித்துச் சேவை பெறுதல் கண்கொள்ளாக் காட்சி.

மிகப் புகழ்வாய்ந்த குருவாயூர்க் கோவிலிலே சிறுகாலையில் உற்சவவிக்கிரகமாகிய 'கொச்சு'த் தங்கக் கண்ணனை யானைமேல் வைத்துக் கோவில் வலம் வருகிறார்கள். இதனைக் காணக் கண்கோடி வேண்டும்! சிதம்பரம், திருவரங்கம், திருப்பதி முதலிய பல கோவில்களில் தங்க விக்கிரகங்கள் உள்ளன.

மேலும் இறைவன் உலா வரத் தங்க வாகனங்களும் உண்டு. திருப்பதிக் கோவிலில் படியே தங்கம். 'படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே' என்று உருகுகின்றார் ஆழ்வார். கீழே படிபோல் மேலே கூரையும் தங்கம். செந்தூர் முருகனுக்குத் தங்கத் தேர் இருக்கிறது. ஸ்ரீரங்கத்திலும் தங்க விமானம் உண்டு. இங்குள்ள விமானங்களிலே பொற்தகடுகள் பதிக்கப் பெற்றிருக்கின்றன. ஆனால் கனகசபையின விமானமானது தங்கப் பாளங்களாகிய ஓடுகள் பதிக்கப் பெற்றது. முதல் குலோத்துங்க மன்னன் பத்தாம் நூற்றாண்டிலே சிற்சபைக்குப் பொன் வேய்ந்து, பொன் வேய்ந்த சோழன் எனப் புகழ் பெற்றான்.

இந்துக் கோவில்களைப் போலவே, சீக்கியர் குருத்வாராவிலும் தங்க விமானம் உண்டு. பெயர் பெற்ற பொற்கோயிலாகிய சீக்கியர் ஆலயம் அமிர்தசரசில் உள்ளது. மிகுந்த உயரத்தில் விமானத்தில் செல்லும்போது, சூரியனின் பொற்கிரணங்கள் இந்தப் பொற்கோயிலின் மேலே பட்டு ஜாஜ்வல்யமாகப் பிரகாசிப்பதைக் காணலாம்.

நாம் வணங்கி வழிபடும் இறைவனின் பொன் மூர்த்தியைத் திருடுபவரும் உண்டு. எட்டுமானூர் எனும் திருவனந்தபுரத்தையடுத்த ஊரில் உறையும் பெருமான் உக்கிரமூர்த்தி. இந்தக் கோவில் பதினைந்தாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இங்குள்ள சிவனின் தங்க விக்கிரகம் சுமார் நான்கரைக் கிலோ எடையுள்ளது. ஏறக்குறைய 10 லக்ஷம் ரூபாய் தங்க விலை மதிப்புள்ளது. சமீபத்தில் இது திருட்டுப் போய், மீட்கப்பட்டது எல்லாருக்கும் தெரியும்.

தஞ்சாவூர்ப் பிருகதீசுவரர் ஆலயத்தில் பொன் ஆபரணங்



சுத்தம் செய்து உருகிய தங்கத்தை அச்சில் ஊற்றப்படும் நிலை

முத்திரை பதித்தல்

களும் முருகக் கடவுளின் வெள்ளிக் கவசமும் திருட்டுப் போய், பின் காவல் துறையினரால் மீட்கப்பட்டன. இவை சில சமீபகால நிகழ்ச்சிகள். எனினும் பல தங்க விக்கிரகங்கள் திருடப்பட்டு, நாடு கடத்தப்பட்டு வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டன.

இறைவனையே அபகரித்தல் ஒரு வகையென்றால் மற்றொரு வகையில் தங்கக் கடத்தல் நாட்டில் நடைபெற்று வருகிறது. ஏராளமான தங்கப் பாளங்களும் பொன் நாணயங்களும் வெளிநாடுகளிலிருந்து, நம் நாட்டுக்குள் தினமும் வந்தவண்ணம் இருக்கின்றன.

சமீப காலத்தில் எண்ணெய்ப் பெருக்கால் செல்வத்தில் திளைக்கும் அரபுநாடாகிய துபாயிலிருந்து ஒவ்வொரு நாளும் சுமார் 5000 தோலாக் கட்டித் தங்கம் பாகிஸ்தான் வழியாக இந்தியாவுக்குள் கடத்தப் படுகிறதாம்.

நம் நாட்டில் நிலவும் தங்க மோகத்தாலும், வெளிநாடுகளுக்கும் நம் நாட்டுக்கும் உள்ள தங்க விலை வித்தியாசம் காரணத்தாலும் பொன் கடத்தல் லாபகரமான தொழிலாக இருக்கிறது. விலை வித்தியாசம் ஒரு கிராமுக்குச் சுமார் 30 அல்லது 40 ரூபாய்; அப்படியானால் கடத்தல் மன்னர்கள் எவ்வளவு லாபம் சம்பாதிக்கமுடியும் என்று சிந்தித்துப் பாருங்கள்.

கடத்தல் தொழிலில் ஆபத்தும் உள்ளது. மாட்டிக் கொண்டாலோ 'முதலே கோவிந்தா' தான். ஆனால், உயிரையும் பணயம் வைத்துச் செய்கின்றனர். இதனால் நம் நாட்டுக்கு ஏற்படும் நஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. ஒரு நாளைக்குக் கோடி ரூபாய் நஷ்டம். இவ்வழியில் நமது பொருளாதாரம் பாதிக்கப் படுகிறது.

சில புள்ளிகள் ஒரே நாளில் லட்சாதிபதிகளாகிப் பொன்னை மதியாது பணத்தை வாரி இறைக்கின்றனர். மேலும் பதுக்கலுக்குத் தங்கம் இலகுவாக உதவுகிறது. சில வருடங்களுக்கு முன் மெய்வழிச்சாலையில் பூமியைத் தோண்டியவிடத்திலெல்லாம் தங்கப் பாளங்கள் கிடைத்தன என்ற செய்தியை நேயர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

மங்கல அணி: நம் நாட்டில் மக்களுக்குப் பொன்னாசை அதிகம். சிறு பெண் குழந்தைகளுக்குப் பொன் அரசிலை கட்டுவது அந்நாளைய மரபு; இப் பழக்கம் இன்று இல்லை. ஆனால் பெண்களின் தங்க அணிகலன்களில் தான் எத்தனை வகை! வெகு பழைய தங்க நகைகளான அருங்கலம், ஐம்படைத் தாலி, கம்பிருல், கிங்கிணி, குறுவளை, தொடி, நெற்றிப் பட்டம், பொற்றளிர் போன்றவைகளின் பெயர்களையே இன்று பலரும் கேட்டிருக்கமாட்டார்கள்.

ஆனால் இந்நாளில் தங்கக்காப்பு, வளையல், சங்கிலி, ஒட்டியாணம், காசுமாலை என்று பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. மோதிரம், மைனர்செயின் என்று ஆடவர்களும் அணிகிறார்கள். கடுக்கன் போட்டுக் கொள்வது இப்பொழுது பழக்கத்தில் இல்லை.

தங்க நகை போடாத கல்யாணம் உண்டா? குன்றி மணி எடையாவது தங்கம் போட்டே ஆகவேண்டும். இன்று தங்கம் விற்கும் விலையில், கடனோ உடனோ பட்டுப் பவுனை வாங்கிக் கல்யாணத்தை ஒப்பேற்றியாகவேண்டும். அதிலும் குறை காணும் மாமியார்கள், 'கனம் போதாது, காற்றில் பறக்கிறது' என்றெல்லாம் பேசுவார்கள்.

தங்க நகைகள் திருட்டுக்கு இலக்காகின்றன; தாலியையும் அறுத்துக் கொண்டு ஓடிவிடுகின்றனர், திருடர்கள். திருட்டுக்குப் பயந்து பொன் முலாம் பூசிய போலி நகைகளைப் போட்டுக்கொள்ளப் 'போலி'க் கௌரவம் இடம் கொடுக்கவில்லை.

காலம் மாறிக் கொண்டு வருகிறது. பெருநகரங்களில் பெரும்பாலும் இப்பொழுது தங்க நகைகள் வங்கி 'லாக்கர்'களில் உறங்குகின்றன. பொற்சிலம்பினால் விளைந்த விபரீதத்தை விவரிப்பதுவே இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம். பாண்டியன் நெடுஞ்செழியனோ தீர விசாரியாமல் கொலைத் தண்டனை விதித்தான். கிரேக்க மன்னனோ சந்தேகம் கொண்ட பொற்கொல்லனைத் தீர விசாரித்த பிறகே தண்டனை வழங்கினான்.

பொன் முடி செய்யத் தட்டானைப் பணித்தான், கிரேக்க மன்னன். பொற்கொல்லனும் பொன் மகுடத்தைத் தயாரித்து அரசனுக்குக் கொடுத்தான். தங்கத்தில் கலப்படம் இருப்பது போன்ற ஐயம் எழுந்தது மன்னனுக்கு. சிந்தனை வீரனான ஆர்க்கிமிடீஸ் என்பாரிடம் சந்தேகத்தைத் தெரிவித்தான். ஆர்க்கிமிடீஸ் குளிப்பதற்காகத் தண்ணீர்த் தொட்டியில் அமுங்கினான். அப்போது தண்ணீர் மேலெழும்பி வழிந்தது. அத்தருணத்திலே சட்டென்று ஆர்க்கிமிடீஸுக்கு ஓர் எண்ணம் உதித்தது. அப்படியே அம்மணமாக ஓடி, ''கண்டுகொண்டேன்! கண்டு கொண்டேன்!'' எனக் கூவினானாம்!

பிறகு ஒரு பெரிய பாத்திரத்தில் நீரை நிரப்பி, அதில் மிகவும் ஜாக்கிரதையாகப் பொற்கிரீடத்

தைக் கயிற்றில் கட்டி உள்ளே விட்டான். எவ்வளவு நீர் மேலெழும்பி வழிகிறது என்று கண்டான். பின்னர் பொன்முடியின் சம எடையுடைய தங்கக் கட்டியைக் கொணர்ந்து, அமுங்கும்போது வழியும் தண்ணீரை அளந்தான். அதே எடையுடைய வெள்ளிக் கட்டியையும் போட்டுப் பார்த்தான். பொன் கட்டியைப் போல் இரு மடங்கு தண்ணீரை வெள்ளிக் கட்டி வெளிப்படுத்தியது. பொன் முடியும் பத்தரை மாற்றுத் தங்கமாயிருப்பின் எத்துணை தண்ணீரை வெளிப்படுத்துமோ அதைவிட அதிகம் வெளியாகியிருப்பதை உணர்ந்து கலப்படத்தைக் கண்டுபிடித்தான்.

பொன்னாசை யாரை விட்டது? தொட்டதெல்லாம் பொன்னாக வேண்டும் என்று கேட்டவனின் கதை என்ன? எல்லாம் தங்கக் கட்டியாயிற்று. ஆயினும் என்ன பயன்? தங்கத்தைச் சாப்பிட முடியுமா? பொன் வேண்டியவனே வேண்டாம் என்று கத்தினான். பேராசையினால் பொன்முட்டையிட்ட வாத்தை அறுத்து, அதன் வயிற்றைப் பார்த்தவன் அடைந்த ஏமாற்றம் என்னே? பொன்மானின் மேல் ஆசை கொண்டதால் தானே ஜானகி கானகத்திலிருந்து கடத்தப் பட்டாள்? அறியாமையால் அடையும் ஏமாற்றம் வேறு வகை. மின்னுவதெல்லாம் பொன்னல்ல என்று காக்காய்ப் பொன்னைப் பார்த்தாவது தெரிந்துகொள்ள வேண்டும். பொன்னாசையைப்போல மற்ற இரு ஆசாபாசங்களான பெண்ணாசையும் மண்ணாசையும் மனிதனைப் படுகுழியில் தள்ளிவிடும் என்பது எல்லாரும் அறிந்ததே. ஆயினும் பலராலும் ஆசையை அடக்க முடியவில்லையே! பொன்னாசை அறவே இல்லாமல் பொன்னை வெறுத்தவரும் உண்டு.

விசிஷ்டாத்வைதத்தை ராமாநுஜர் வழியில் பரப்பிக் ''கவிதார்க்கிக சிம்மம்' என்ற விருது பெற்றவர் வேதாந்த தேசிகர். அவர் எளிமையான வாழ்க்கை நடத்தினார்; பொன்னை வெறுத்தார். ஒரு சமயம் அவருக்கு உதவ வேண்டும் என்ற நோக்குடன், பணக்காரப் பக்தனொருவன் அரிசியுடன் தங்க நாணயத்தைக் கலந்து மறைத்துப் பிக்ஷையிட்டான். தேசிகர் அரிசியில் பொன் இருக்கக் கண்டு, சீற்றம் கொண்டு, ''சீ புழு!'' என்று பொற்காசைக் கையாலும் தீண்டாமல், குச்சியால் கீழே தள்ளி விட்டுத் திரும்பிப் பாராமல் நடந்தார்.

சங்கீத மும்மணிகளிலே முதல்வராகத் திகழும் தியாகராஜருக்கு ராமபக்தியே சாம்ராஜ்யம்; செல்வத்தை வெறுத்தார். தஞ்சை மன்னனைப் பாடினால் நிதி கிடைக்கும் என்று அவரிடம் சொன்ன போது, 'நிதிசால சுகமா?' என்று கேட்டார். 'தயாநிதி ராமன் இருக்கும்போது வேறு எந்த நிதி வேண்டும்?' என்றவர் தியாகராஜர்.

ஒரு சமயம் அவர் வேற்றூருக்குச் செல்லுங்கால் இரவுநேரம் திருடர்கள் வருகிறார்கள் என்று சொன்னதும், ''எனக்கு மடியில் கனமில்லை, ஆதலால் வழியில் பயமில்லை'', என்று பதிலளித்தார். ஆனால் அவருடன் கூட வந்தவர்கள், தியாகையருக்குத் தெரியாமல் பல்லக்கில் ஆயிரம் பொன் வைத்திருந்தனர். அதனால் அஞ்சி உண்மையை ஒப்புக்கொண்டனர்.

கோபம்கொண்ட தியாகப் பிரம்மம் பொன்னைத் தூக்கி வெளியே எறியுமாறு பணித்தார். உடன் வந்தவர்கள், அவ்வாயிரம் பொன்னும் கோவூர் முதலியார் தர்ம காரியங்களுக்காகக் கொடுத்த பணம் என்றும் தூக்கி எறியலாகாது என்றும் விளக்கினர். உடனே தியாகராஜர், ''சரி, அப்படியானால் ராமனே அவன் பொன்னைக் காத்துக்கொள்ளட்டும்'' என்று, ''முந்து வெனுக'' என்று பாடி, முன்னும் பின்னும் காப்பாற்றும் பொறுப்பை ராமனிடமே விட்டுவிட்டார். என்ன ஆச்சரியம்! பொழுது புலர்ந்ததும் திருடர்கள் தியாகராஜரைச் சரணடைந்து, இரவில் தேஜோமயமான இரு வீரர்கள் முன்னும் பின்னும் வேலுடன் நடந்து, தங்களை அணுகவிடவில்லை என்று சொன்னார்கள். பளிச்சென்று தியாகராஜருக்குப் புரிந்துவிட்டது? காவல் வீரர்கள் ராமலட்சுமணர்களே என்று. உடனே திருடர்களுக்குப் பகவான் தரிசனம் கிடைத்ததை மெச்சி, ''எந்த பாக்யமு?'' என்று பாடினார். பொன்னை ஓட்டாஞ்சல்லியாக நினைத்த பெரியோர்கள் தேசிகன், தியாகராஜரைப் போன்றவர்கள்.

பொன்னை மதியாவிட்டாலும், தமக்கென்று வேண்டாமல் பிறர்க்கெனப் பகவானை வேண்டியவர்களும் உண்டு. ஆதிசங்கர பகவத்பாதர் அத்வைதத்தை நிலைநாட்டிய அவதார புருஷர். ஒரு சமயம் அவர் பிக்ஷைக்குச் செல்லுங்கால் ஒரு வீட்டின் முன் நின்றார். அவ்வீட்டில் அன்னமிட ஒரு பருக்கையும் இல்லை. மனையாள் செய்வதறியாது கையைப் பிசைந்து ஏங்கினாள். எனினும் ஒரே ஒரு காய்ந்த நெல்லிக்கனி இருப்பதைக் கண்டு உளமகிழ்ந்து சங்கரருக்குப் பக்தியுடன் அதனைச் சமர்ப்பித்து வணங்கினாள். அந்த மாதின் அவல நிலையைக் கண்டு மனமிரங்கிச் சங்கரர் அவ்விடத்திலேயே, 'கனகதாரா ஸ்தோத்திரம்' என்று, ஸ்வர்ணரூபியும் ஸ்வர்ணத்தைக் கொடுப்பவளுமான தேவியைத் தியானித்துப் பிரார்த்தித்தார்.



பல அளவுள்ள தங்கக்கட்டிகள்

மகாலட்சுமி கடைக் கண் திறந்தாள்; தங்க நெல்லிக் கனிகள் மழையெனப் பொழிந்தன!

இதேபோல், ஒரு சமயம் ஏழைப் பிரம்மசாரி ஒருவன் கல்யாணத்துக்குப் பணமின்றித் தவிப்பதை அறிந்தார். வேதாந்த தேசிகர். திருவரங்கத்தில் ரங்க நாச்சியார் சந்நிதியில் லட்சுமி தேவியைக் குறித்து ஸ்துதி பாடினார். உடனே பொன்மழை பொழிந்தது. இவ்வண்ணம் நமது சமயப் பெரியோர்கள் தமக்கென்று விரும்பாவிடினும் கருணைப் பெருக்கால் பிறர்க்காகத் தேவியிடம் பொற்பிச்சை வேண்டிப் பிரார்த்தித்திருக்கின்றனர்.

தங்கப் பாளம்: தங்கம் மாசு மருவற்றது, இரும்பு, செம்பு போன்ற உலோகங்களைப் போல் அது உருக் குலைந்து அழியாதது. ஆதலினாலேயே பொன் இயற்கையன்னையின் மடியில் தூய உலோகமாகத் திகழ்கின்றது. பெரும் பாறைகளுக்கு நடுவே தங்கம் மெல்லிய நரம்பு போல் தோய்ந்து காணப்படும். இயற்கையின் சக்திகளான வெப்பமும், குளிரும், காற்றும், மழையும் மாறி மாறி வரும்போது பெரும் பாறைகள் பிளவுபட்டுப் பொன் வெளிப்படுகிறது. வெளிவந்த தங்கம் வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போகப்பட்டு, ஆற்று மணலில் அமிழ்ந்து கிடக்கிறது. சில இடங்களில் பொன்னானது மணல் புதையலுக்கடியில் 'புதையலாகக்' கிடைக்கிறது. மற்றச் சமயங்களில் சிறு சிறு காஞ்சனப் பொடிகளாகவும் கிடைக்கும்.

பொன் தேடுபவர்களுக்குப் புதையல் கிடைத்தால் கசக்குமா? இயற்கையிலே ஆற்று மணலில் பொன் கிடைப்பதால் சில நதிகளுக்கு ஸ்வர்ணரேகா என்றும் ஸ்வர்ணமுகி என்றும் பெயரிட்டிருக்கின்றனர். இயற்கையன்னையின் இன்னருளால் சில சமயங்களில், மலைப்பாறைகளினின்றும் பிரிக்கப் பெற்ற தங்கம் பாளங்களாகவும் கட்டிகளாகவும் கிடைக்கின்றன.

கடந்த நூற்றாண்டின் நடுவில் ஐரோப்பிய நாடுகளில் பலர் 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்றபடி பொன்னைத் தேடக் கடல் கடந்து சென்றனர். இவ்வாறு துணிந்து சென்றவர்கள் கண்டுபிடித்த கண்டங்களே இன்று ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா என்று திகழ்கின்றன. தங்கம் கிடைக்கும் நாடு என்று கேள்விப்பட்ட மாத்திரத்திலேயே போட்டி போட்டுக்கொண்டு கூட்டம் கூட்டமாக ஓடினர். புதிய நாடுகளிலே சிலருக்குத் தங்கப்பாளங்கள் கிடைத்தன; சிலருக்குக் கட்டிகளே கிடைத்தன. மற்றும் சிலர் ஆற்று மணலை அலசிப் பொடித் தங்கத்தை எடுத்தனர். தங்க வேட்கை ஓயவில்லை. ஆகவே எளிதில் கிடைக்கும் தங்கம் வறண்டுவிட்டது.

எனவே தங்கக் கனிகள் தோண்டும் தொழிலை மேற்கொண்டனர். பெரிய பெரிய தங்கச் சுரங்கங்கள் வெட்டப்பட்டுத் தங்கம் எடுக்கும் தொழில் நிலைபெற்றது.

கோலார்த் தங்க வயல்: நம் நாட்டிலே ஆதிகாலம் தொட்டுத் தங்கம் கிடைத்திருக்கிறது. எனினும் பெருமளவுக்குத் தொழில் விருத்தியடையவில்லை. கடந்த நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலேயக் கம்பெனியொன்று மைசூர் சமஸ்தானத்திலுள்ள கோலாரில் தங்கம் இருப்பதைக் கண்டுபிடித்தது. பிறகு அங்கே தங்கம் வெட்டியெடுக்கப்பட்டுத் தங்கவயல் தோன்றியது. கோலார்த் தங்க வயலிலே, 'சாம்பியன்ரீப்,' 'ஊரேகாம்' போன்ற இடங்களில் தங்கச் சுரங்கங்கள் தோண்டப்பட்டன. கோலார்த் தங்கச் சுரங்கம் மிகவும் ஆழமானது. பூமிக்குக் கீழே சுமார் 10,000 அடி பாறையைக் குடைந்து சுரங்கம் அமைத்து, தங்கம் தோய்ந்த பாறைகளைப் பெயர்த்து வெளிக்கொணர்கின்றனர். வெளிவந்த காரைக் கற்களைப் பொடி செய்து நீர்க்குழம்பாக்கி, அதனைச் சாய்மானமான, தடித்த 'கார்டுராய்'த் துணி பதிந்த மேசைகளின் மேல் பாய்ச்சுகின்றனர். தங்கம் கல்லைவிடக் கனமானதால், கீழே அமுங்கித் துணியின் மேல் படிகிறது. கற்குழம்பு நிற்காமல் ஓடிவிடுகிறது. பிறகு துணியை உதறிப் பொன் பொடியைச் சேகரிக்கின்றனர். இதை உருக்கித் தங்கப் பாளங்களாக வார்க்கின்றனர். இதுவே பத்தரை மாற்றுத் தங்கம்.

நீர்க்குழம்பிலும் சிறு தங்கம் ஒட்டிக்கொண்டிருக்கும். இதனை 'சயனைட்' எனும் ரசாயனத்தில் இறுத்திப் பின்னர்ப் பிரித்தெடுக்கின்றனர்.

இயற்கையில் தங்கத்தின் கூடவே வெள்ளியும் கிடைக்கிறது. தங்க சுத்தி செய்யும்போது வெள்ளியையும் பிரித்தெடுக்கின்றனர். கோலார்த் தங்க வயல் ஆங்கிலேயர் வசமிருந்து மைசூர் அரசாங்கத்துக்கு மாறி, இப்போது இந்திய அரசாங்கத்தின் கீழ்ச் செயல்பட்டு வருகிறது.

சமீபத்தில் ஆந்திராவிலுள்ள சித்தூர், அனந்தபுர் ஜில்லாக்களிலும், தீவிரமாகத் தங்கம் தேடும் முயற்சிகள் நடந்து வருகின்றன. நம் நாட்டில் வருடமொன்றுக்குச் சுமார் மூன்று டன் தங்கம் உற்பத்தியாகிறது; கூடவே பன்னிரண்டு டன் வெள்ளியும் கிடைக்கிறது. உலகிலேயே தங்க உற்பத்தியில் முதலிடம் பெறுவது தென்னாப்பிரிக்கா; அந்நாடு வருடமொன்றுக்குச் சுமார் 700 டன் தங்கம் உற்பத்தி செய்கிறது. மற்றும் கானடா 500 டன்னும், ரஷ்யா 300 டன்னும், அமெரிக்கா 30 டன்னும் உற்பத்தி செய்கின்றன.

டன் தங்கம் என்று எளிதாகச் சொல்லலாம்; ஒரு டன் பொன் விலை என்ன தெரியுமா? இன்றைய விலையில் ஒரு கிராம் 165 ரூபாய் என்றால் ஒரு டன் தங்கத்தின் விலை சுமார் பதினாறரைக் கோடி ரூபாய் ஆகிறது; கஷ்டப்பட்டுச் சம்பாதித்த தங்கம் இது; கடத்தல் தங்கம் அல்ல.

நாணயமும் ஸ்ரீராமரும்: உலகிலே பொன் மிகவும் வேண்டப்பட்ட உலோகம். தங்கப் பாளங்கள் அரசாங்கப் பொக்கிஷ சாலைகளில் தக்க கண்காணிப்புடனும் காவலுடனும் வைக்கப்படுகின்றன. ஒரு நாட்டில் அரசாங்கத்திடமுள்ள பொன்னின் மதிப்பால் அந்நாட்டின் உயர்வு நிர்ணயிக்கப்படுகிறது. உலக அரங்கில் பொன்னில்லா நாட்டுக்கு மதிப்பில்லை. அமெரிக்காவில், 'நாக்ஸ் கோட்டை' என்ற இடத்தில், மலை மலையாகத் தங்கத்தைப் புதைத்து வைத்துப் பூதம்போல் காவல் காக்கின்றனர்.

பொன்னின் முக்கிய உபயோகங்களாவன: நாணயம் செய்தல், விசேஷ மெடல்கள், நகைகள் செய்தல், மற்றும் பல்கட்டுதல், மருத்துவம், தொழில் உபயோகம் ஆகியவையாகும்.

தங்கப் பாளங்களையும் கட்டிகளையும் எல்லாரும் பார்த்திருக்க முடியாது. தங்க நாணயங்கள் பல நாடுகளிலும் வழக்கில் உள்ளன. அமெரிக்கா 'டாலர்' படுத்தும் பாட்டைச் சொல்லவும் வேண்டுமோ? டாலருக்கு நம் நாட்டிலும் பெரு மதிப்பு இருக்கிறது.

திருமலை-திருப்பதி தேவஸ்தானம், டாலருக்குச் சலுகை கொடுக்கிறது. யார் காணிக்கையாக ஆண்டவனுக்கு ஆயிரம் ரூபாய் அளிக்கின்றாரோ, அது கறுப்போ, வெளுப்போ பரவாயில்லை; அவருக்குப் பகவானின் பிரசாதத்துடன் அமெரிக்கா தங்க டாலர் ஒன்றும் கொடுக்கப்படுகிறது. சமீபத்தில் தேவஸ்தான ஊழியனொருவன், இருபது ஊஞ்சல் சேவைகளுக்குத் தலா ஆயிரம் ரூபாய் கட்டி, இருபது டாலர்களைப் பெற்றான். ஆனால் பிறகுதான் குட்டு வெளிப்பட்டது. 'வெல்லப் பிள்ளையாரைக் கிள்ளி, பிள்ளையாருக்கு நிவேதனம் செய்வது' போல், தேவஸ்தானப் பணத்தையே திருடித் திருப்பணி செய்துவிட்டான். போலீஸார் புலன் விசாரித்து அவனைக் கைது செய்து டாலர்களை மீட்டனர்.

கானடாவில் 'மேபிள் லீப்' என்ற ஒரு நாணயம் அடித்து வழங்குகின்றனர். தென்னாப்பிரிக்காவில் 'க்ருகர் ராண்டு!' இப்படிப் பல. நம் நாட்டில் மோஹரா எனும் தங்க நாணயம் வழங்கியிருக்கிறது. மன்னர்களைக் காணச் செல்லுங்கால் மக்கள் மோஹரா கொடுக்கும் வழக்கம் மொகலாய ஆட்சியிலும், சமீபகாலம் வரை மைசூர் சமஸ்தானத்திலும் இருந்து வந்திருக்கிறது. வராகன் நமது தேசத்தில் வழங்கிய தங்க நாணயம்; ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சவரன் உலவத் தொடங்கியது. தங்க நாணயங்களை அரசாங்கமே அச்சிட வேண்டும். இதனால் தங்க சாலைகள் தோன்றின. அவை இருந்த வீதிக்கே தங்கசாலைத் தெரு என்று பெயர் வந்தது.

அரசாங்கமல்லாமல் ஒரு சமயம் ஸ்ரீராமபிரானே தங்க நாணயம் அச்சிட்டிருக்கிறார். ஆந்திராவிலுள்ள பத்ராசலத்தில் வதிந்தவர் பக்தர்

ULKA-RF-F-82 TAM

தீபாவளி வாழ்த்துக்கள்



ஸ்பென்ஸர்ஸ்
பழரச பானங்கள்

அன்னாசி • திராட்சை
மாம்பழம் • ஆரஞ்ச்

S 3575 TAM

ஸ்பென்ஸர்ஸ்
தயாரிப்பாளர்கள் :

ஸ்பென்ஸர் கன்சூயூமர் பிராடக்ட்ஸ் அண்ட் சர்வீசஸ் லிமிடெட், சென்னை மற்றும் கிளைகள்

பல நாட்டுத் தங்க நாணயங்கள்

கோபண்ணா. இவர் அரசாங்கத்துக்கென வசூலித்த வரிப்பணத்தையெல்லாம் ஆலயத் திருப்பணிக்குச் செலவழித்தார். சீற்றம் கொண்ட மன்னன் குதப் ஷாஹி தானேஷா, கோபண்ணாவைச் சிறையிலிட்டான். பக்தனைக் காக்க வேண்டி ஸ்ரீராம பிரானே தங்க நாணயம் அச்சிட்டு அதனை மன்னனுக்குச் செலுத்திக் கோபண்ணாவை மீட்டார். அன்று முதல் அப்பொன் நாணயத்துக்கு 'ராமமடா' என்று பெயர் வழங்கலாயிற்று. ராமனின் கருணைக்குப் பொன் போன்ற உதாரணம் இது.

ஹர்மிடாஜ்: நாணயமல்லாது விசேஷத் தங்க 'மெடல்'களும் பல நாடுகளில் செய்யப்படுகின்றன. நம் நாட்டில் பம்பாய் மாகாணம் பிரிந்து மகராஷ்டிரம் தோன்றியபோது, ஒரு விசேஷத் தங்க 'மெடலை' அச்சிட்டு விற்றனர். மேலும் கோவில்களில் பூஜைக்காகத் தங்கத் தட்டு, வட்டில்கள், உத்தரணிகள் போன்ற பாத்திரங்கள் செய்யப்படுகின்றன. மன்னர்கள் தங்கத் தாம்பாளங்களிலும் கிண்ணங்களிலும் உணவு உண்டனர். கிரேக்கியர்கள் தங்கள் காதலிகளுடன் தங்கக் கிண்ணங்களில் மதுவைப் பருகுவதில் பெருமகிழ்ச்சி கொண்டவராம். ஒரு காலத்தில் சீரும் சிறப்புமுடன் விளங்கிய ரஷ்ய ஜார் மன்னன் உபயோகித்த தங்கப் பேழைகளும், தட்டுகளும், மற்றப் பொருள்களும் இன்றும் அன்று போல் தகதகவெனப் பிரகாசித்துக் கொண்டு, லெனின்கிராடில் உள்ள உலகப் புகழ் பெற்ற 'ஹர்மிடாஜ்' கண்காட்சிச்சாலையில் காணக் கிடைக்கின்றன.

தங்கப் பாளத்தையோ, நாணயத்தையோ உருக்கிப் பாத்திரமாகவும் நகையாகவும் நட்டாகவும் செய்யலாம். பொன்னை உருக்கி வார்க்கலாம், தகடாக அடிக்கலாம், கம்பியாக நீட்டலாம். மிகமிக மென்மையான கம்பியாகச் செய்து, 'ஜரி' எனும் தங்க நூலால் உடை நெய்யலாம். அசல் ஜரியில் இருப்பது தங்க நூல். என்ன பளபளப்பு! தங்க ஜரிகையில்லாப் புடைவைக்கு மதிப்பு ஏது? ஜரிகை வேஷ்டி இல்லாமலும் ஒரு கல்யாணமா? பழைய ஜரிகையை உருக்கினால் தங்கம் கிடைக்கும். தங்கம் எவ்வகையிலும் அழியாதது.

தங்கபஸ்பம் பொன்னின் பல உபயோகங்களில் ஒன்று; மருந்துக்கும் உதவுவது. ஆங்கில வைத்திய முறையில் நேர்த்தியான தங்கக் குழம்பை உடலில் உட்செலுத்தினால் எலும்புருக்கி நோய் குணமாகும் என்று கருதுகின்றனர். இந்திய சித்தவைத்திய முறையில் தங்கபஸ்பம் உடலை வலுப்படுத்தி, பொன்னைப் போல் தகதகவென்று மின்னும்படி செய்யுமாம். அரசர்களும் பிரபுக்களும் தங்கரேக்குச் சுற்றிய இனிப்புப் பண்டங்களையும் வெற்றிலையையும் உண்டனர். புகையிலை போடுபவர்களுக்குத் 'தங்கபஸ்பத்'தைப் பற்றிச் சொல்ல வேண்டாம்.

பொன்னாங்கண்ணி என்ற கீரையில் பொன் சத்து இருப்பதாயும், அது உடலுக்கு நல்லது என்றும் கூறுகின்றனர். தங்கத்தின் மற்றோர் உபயோகம் தங்கப் பல் கட்டிக் கொள்வது. இது பிற நாடுகளில் அதிகம். தங்கம் பல தொழில்களுக்குப் பயன்படுகிறது.

தங்கத்தின் விலை; உலக அரங்கிலும் நம் நாட்டிலும் தங்கத்தின் விலையில் அதிகத் தாரதம்யம் காணப்படுகிறது. உலகச் சந்தையில் கட்டித் தங்கம் 'அவுன்ஸ்' எனும் அடிப்படையில் விலை பேசப்படுகிறது. ஓர் 'அவுன்ஸ்' என்பது 37.8 கிராம் கொண்டதாகும். முக்கியமாக அவுன்ஸின் மதிப்பை டாலரில்தான் கூறுவார்கள். உலக நாடுகளில் அவ்வப்போது நிலவும் அரசியல், பொருளாதார நிலைகளை ஒத்து, தங்கத்தின் விலை மாறுபடும்.

உதாரணமாக, 1981 - ஆம் ஆண்டு ஜனவரி முதலில் நிலவிய விலை 'அவுன்ஸு'க்கு 592 டாலர். அதாவது, ஒரு கிராம் தங்கத்தின் மதிப்பு ரூபாய் 157 ஆகும். இவ்விலை படிப்படியாகக் குறைந்து, 1982 ஜனவரி முதலில் 396 டாலர் அல்லது கிராம் 105 ரூபாய்க்கு வந்திறங்கியது. இவ்வருடத்தில் இன்னும் கீழிறங்கி ஜூலை முதலில் 300 டாலர் அல்லது கிராம் 80 ரூபாய்க்கு வந்துவிட்டது. ஆனால் ஆகஸ்டில் மீண்டும் விலையேறி, செப்டம்பர் முதலில் டாலர் 458 அல்லது கிராம் 121 ரூபாய் என்றாகியது. தங்கத்தின் விலை தரணியில் தங்கவில்லை; ஆகாயத்தில் ஏறிக்கொண்டிருக்கிறது. இந்தத் திடீர் விலையேற்றம் ஏன்?

உலகப் பொருளாதாரத்தைப் பாதிக்கும் வகையில் பல காரணங்கள் கூறப்படுகின்றன. முக்கியமானவை சில.

மெக்சிகோவில் அரசாங்கம் வங்கிகளைத் தேசியமயமாக்கியது. 'குத்தாலத்தில் இடி இடிச்சா, கோயமுத்தூரில் விளக்கணையுமாம்' என்பது போல், உலகில் எங்கோ ஒரு மூலையில் ஏதோ ஒன்று நிகழ்ந்தாலும் அதன் விளைவு தங்கத்தின் விலையைப் பாதிக்கிறது. மேலும், போலந்தின் உள்நாட்டுக் கலவரம், வங்கிகள் வட்டியைக் குறைக்கும் என்ற ஹேஷ்யம் ஆகியவையும் காரணங்கள். இவையெல்லாவற்றையும் விட மிக முக்கியமானதாகக் கருதப்படுவது, ஆகஸ்டு 1982, இல் உலக வங்கி (World Bank) வெளியிட்ட இவ்வருட அறிக்கை. அதன்படி, உலகில் இவ்வருடம் பொருளாதார நிலை மோசமாகவே இருக்கும் என்ற கணிப்புக் காணப்படுகின்றது. பொருளாதார நிலை பாதிக்கப்படும்போது, இருப்பதைப் பத்திரப்படுத்திக் கொள்வது மனித இயல்பாகும்.

இந்நிலையில் பெரும் பணம் படைத்தோர் ஸ்திரப் பொருளாகிய பொன்னையே நாடுகின்றனர். 'நீ முந்தி, நான் முந்தி' என்று வாங்குகின்றனர். பணப் பெருக்கால் கொழிக்கும் அரபு நாடுகள் மடமடவென்று கிடைத்த தங்கத்தையெல்லாம் வாங்கவே, பொன்னின் விலை உச்ச கட்டத்துக்கு ஏறிற்று. முதலாவதாக, 1981 இல் தங்க உற்பத்தி 962 டன்களே ஆகும். இது 1980ஐவிடக் குறைவு.

அடுத்தபடியாக, பெருமளவுக்குத் தங்கக் கனி வெட்டும் சுரங்கங்கள் மூடப்பட இருக்கின்றன. இதனால் வியாபாரத்துக்கு வரும் தங்கம் குறையும். பொருள் குறைந்தால், கிராக்கி ஏற்பட்டு, விலை ஏறுவது

சகஜந்தானே? எனவே, பொன் விலை, உலக அரங்கில் ஏறுமேயொழிய இறங்காது என்றே நிபுணர்கள் நம்புகின்றனர்.

உலகில் பொன் விலை இவ்வாறுள்ள போது நம் நாட்டில் எப்படி இருக்கிறது என்று பார்ப்போம். பிற நாடுகளில் நிலவும் விலைக்கும் உள்நாட்டு விலைக்கும் என்ன தொடர்பு? அதனால் என்ன, விளைவுகள் நேரும்? அதில் அடங்கிய ஒரு மர்மம் புரியும்.

நம் நாட்டில் நிலவும் பொன் விலை உலக விலையோடு ஒத்துப் போகாமல் மேலோங்கியே நிற்கிறது. உதாரணமாக, இவ்வருட ஜனவரி முதலில் உலகவிலை கிராமுக்கு 105 ரூபாய் என்றிருக்கும் போது நம் நாட்டில் 172.5 ரூபாயாகத் திகழ்ந்தது. அதாவது, உலக விலையைவிட வெகு அதிகம். பிப்ரவரியில் மேலும் 176.5க்கு ஏறியது. அடுத்த மாதங்களில் சற்றே குறைந்து. செப்டம்பரில் ரூபாய் 169க்கு வந்தது.

நம் நாட்டில் மக்களுக்குப் பொன்னின் மேலுள்ள மோகமே அதிக விலைக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. காரணம் எதுவாயினும் காரியம் என்னவென்று பார்க்கும் போது, விலை வித்தியாசம் காரணமாகக் கடத்தல் பெருமளவுக்கு ஓங்குகிறது. இன்றைய விலையில், வெளி நாட்டுக்கும் நம் நாட்டுக்கும் உள்ள விலை வித்தியாசம் கிராமுக்குச் சுமார் ஐம்பது ரூபாய். ஒரு கிராமுக்கு ஐம்பது ரூபாய் என்றால் ஒரு டன் தங்கத்து விலை வித்தியாசம் என்ன தெரியுமா? சுமார் இரண்டேகால் கோடி! இவ்வருடத் தங்கக் கடத்தல் சுமார் ஐம்பது டன் என்று மதிப்பிட்டிருக்கின்றனர். அப்படிப் பார்த்தால் மொத்த விலை வித்தியாசம் சுமார் 113.5 கோடி ரூபாய். 'அடேயப்பா!' என்று ஆச்சரியப்படலாம்! தங்கத்தைத் தந்திரமாகக் கடத்தி விட்டால் சுளையான கொள்ளை லாபம். இதனால் தான் உயிரைப் பணயம் வைத்துப் பொன்னைக் கடத்துகின்றனர். கடத்தல் மன்னர்கள் கோடீசுவரராகின்றனர். இவர்களுக்கு உதவுகின்றவர்களும் கணப்போதில் லட்சாதிபதியாகின்றனர்.

பொதுவாக, உலக நாடுகளைவிட இந்தியாவிலே பொன்மோகம் அதிகமாகக் காணப்படுதல், தங்கத்தின் அதிக விலைக்குக் காரணம். இதிலும் ஒரு வேடிக்கை தெரியுமா? பம்பாய், டெல்லி. கல்கத்தா ஆகிய நகரங்களை விடச் சென்னையிலேதான் தங்கத்தின் விலை மிகவும் ஓங்கி நிற்கிறது.

உதாரணமாக, இவ்வருடம் செப்டம்பர் முதல் வார விலைப்படி, பொன்விலை கிராமுக்கு, கல்கத்தாவில் ரூபாய் 165.5; பம்பாயில் ரூ.169; ஆனால் சென்னையிலோ ரூ.177! தமிழர்கள் மற்றெல்லாரையும்விடப் பொன் மோகத்தில் மிஞ்சி நிற்கின்றனர். பெண்களின் தங்கக் காதலோ அல்லது ஆடவரின் பதுக்கலோ தெரிய தெரியவில்லை. சென்னை 'பொன் நகரமா'கத் திகழ்கிறது: எனினும் மக்கள் வாழ்வு பொன்மயமாகத் துலங்கவில்லை. மற்றைய நகரங்களை விடப் பொருளாதாரத்தில் கீழேயே இருக்கிறது இதுவும் ஓர் விந்தை!

பொன்னுலகு: தங்கம் குணத்துக்கோர் எடுத்துக் காட்டு. மிக நல்லவனைத் தங்கக் கட்டி என்று சொல்லுகிறோம்; அடக்கம் ஒடுக்கம் உடையவனைத் தங்கக் கம்பி என்று சொல்லுகிறோம். தங்க ரேக்கு அச்சுத் தொழிலில் பயன்பட்டுப் பொன்னெழுத்தாகத் திகழ்கிறது.

பொன் உயர்வுக்கோர் எல்லை. வானவர் வாழும் உலகைப் பொன்னுலகு என்று கூறுகின்றனர். இறைவன் அருளால் மானுடம் பெற்ற நாம் நற்கதியடைய வழி தேடல் வேண்டும். மோட்சம் பெற்றுப் பொன்னுலகெய்தி இறைவனுடன் இரண்டறக் கலந்து எல்லையில்லா ஆனந்தக் கடலில் என்றும் திளைத்து இறைவனுக்குத் தொண்டு செய்து கிடப்பதே மனித லட்சியத்தின் கருத்தாகவும் இலக்காகவும் இருத்தல் வேண்டும். அப்பேர்ப்பட்ட பொற்காலம் நமக்கும் கிடைக்கப் பொற்றாமரையில் வீற்றிருந்து பொன்மேனி பொலிந்திலங்கும் பொற்கொடியாம் மகாலட்சுமியின் பொற்பாதங்களை வணங்கித் திருவருளைப் பெறுவோம். ※

படங்கள் உதவி:

ஜான்சன் மாத்தி குருப், லண்டன்



மாப்பிள்ளே!
கங்கா
ஸ்நானத்திற்கு
ரெடியா?
நரசுஸ்
காபி
ரெடியா?
ஜீவனுள்ள ஒரே காபி!
நரசுஸ்
"தெர்மலோ" காபி!
நரசுஸ்
காபி கம்பெனி
சேலம் 636007.
கிளைகள்: தமிழகமெங்கும்.
ADWAVE/NCC/2168

The spark of an idea... the light to the future.

Creativity is the key word—and that's what Carborundum Universal is all about...creative technology at its best. Evolving new techniques to serve industry...making scarce materials go farther, anticipating tomorrow's needs.
There aren't many like us around.

CARBORUNDUM UNIVERSAL LTD.

Manufacturers of Bonded and Coated Abrasives, Abrasive Grains, Calcined Bauxite, Super Refractories and Electrocast Refractories.

MADRAS • CALCUTTA • BOMBAY • NEW DELHI

Service-conscious suppliers of basic tools for industry

OBM 3903

இன்னொரு பிறவியிலாவது

கண்ணன் மகேஷ்

வாசலில் கண கணவென்று மணி அடிக்கும் சத்தம். 'குல்ஃபீ ஐஸ்!' இரவில் மலரும் பூக்களைப் போல் இந்த ஐஸும் ராத்திரியில் விற்பனைக்காகப் பவனி வருகிறது. வாசலுக்குப் போய்க் கூப்பிடுவதற்குள் ஐஸ்காரன் மூன்று சக்கரச் சைக்கிளில் தெருக்கோடிக்குப் போய் விடுவான். பெரிய பானையும், மேலே மூடிய சிவப்புத் துணியும், சிறிய காஸ் லைட்டுமாக.. சமயங்களில் வீட்டு வாசலில் நின்றிருந்து ஐஸ் வண்டியும் வந்து விட்டால் கல்யாணி வாங்காமல் இருக்க மாட்டாள். அரைச் சாண் நீள இரும்புக் குப்பியில் நிரப்பி, மந்தார இலைத் துண்டில் உதறுவான். உரித்த வாழைப்பழம் போல விழும். கத்தியால் துண்டுகளாக வெட்டிவிடுவான். வாயில் உணரும் இனிப்பும் ஜில்லிப்பும், அப்பப்பா!

கல்யாணி அந்த இரவு ஐஸ் வாங்கும் மனநிலையில் இல்லை. நடு நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். இரத்தப் பிசுபிசுப்பு. அன்று காலை சண்டை வந்தபோது கணவன் ஈயச் செம்பை விட்டெறிந்ததில் ஏற்பட்ட காயம்; அந்தக் காயம் அவளுக்கு அதிகம் வலிக்கவில்லை. கூடவே மனத்தைப் புண்படுத்தினுரே அதுதான் வலித்தது.

காலையில் பாதிச் சாப்பாட்டில் கோபமாக எழுந்து சென்றவன்தான். இரவு வீடு திரும்ப மாட்டான். இரண்டு நாட்களாகும், திரும்பி வர. கோபம் வரும் போதெல்லாம் இருதெருக்கள் தள்ளியிருக்கும் குடும்ப நண்பர் வீட்டில் தான் சாப்பாடு, தூக்கம் எல்லாம்.

இந்த நான்கு வருடத் தாம்பத்யத்தில் கல்யாணிக்கு இதெல்லாம் பழகி விட்டது. முன்பு தனியாக இரவைக் கழிப்பது சிரமமாக இருந்தது. இரண்டு வருடங்களாகக் குழந்தை லட்சுமிநரசிம்மன் துணை.

தூங்கும் குழந்தைக்கு ஈமொய்க்காமல் போர்த்திய துணியை இழுத்துக் குஞ்சுக் கால்களை மறைத்தாள். சிறிய ரோஜாப் புஷ்பம் போன்ற குழந்தையின் உள்ளங்கையை முத்தமிட்டாள். நிலாத் துண்டு போன்ற கன்னங்கள். தூக்கத்தில் என்ன கண்டதோ, இதழில் சிரிப்பு. குழந்தையின் தலையை வருடினுள்.

கல்யாணியின் கணவனுக்கும், அவன் சகோதரர்களுக்கும் கோபம் பரம்பரைச் சொத்து. முணுக் என்ருல் மூக்குக்கு மேல் வந்துவிடும். இந்தக் காரியத்தை இப்படிச் செய் என்று முன்னதாகச் சொல்ல மாட்டார்கள். செய்த பிறகு தப்பாகப் போய்விட்டது என்று குதிப்பார்கள். ''பையைத் தூக்கிக்கொண்டு புறப்படு உடனே!'' என்று கத்துவார்கள். நரசிம்மசுவாமியைக் குல தெய்வமாகக் கொண்டவர்கள் எல்லாரும் இப்படித்தானே?

குழந்தையின் முதுகைத் தடவினுள் கல்யாணி. இவன் வளர்நது பெரியவனுனுல் அம்மாவுக்கு ஆதரவாக இரண்டு வார்த்தை சொல்வானே? இப்போதே, அம்மாவை அடிப்பது போல யாராவது பாவனை செய்தால் அழக் கிளம்பி விடுகிறுன். காலையில் இவள் நெற்றியை ஈயச் செம்பு குசலம் விசாரித்தபோது இவன் தூங்கிக் கொண்டிருந்தான்.

''செவ்வாய்த் தோஷமும், பூராட நட்சத்திரமுமா விலை போகாத மாடாக் கெடந்தியேடி! உன்னை எத்தனை பேர் வந்து வந்து பாத்துட்டுப் போனுர்கள்? கடைசில நான்தானே உனக்கு வாழ்வு குடுத்தேன்?'' என்று காலையில் கத்திவிட்டு வெளியேறிய கணவனை நினைதக்ள். நெஞ்சு வலித்தது.

குழந்தையைக் கட்டிக்கொண்டு படுத்தாள். குழந்தையின் காதில், 'ரவீந்தர், ரவீந்தர்' என்று முணுமுணுத்தாள்.

ரவீந்தர்!

கோவையில் ஐந்து வருடங்களுக்கு முன்பு கல்யாணி தனியார் ஆஸ்பத்திரி ஒன்றில் குமாஸ்தா வேலை பார்த்தாள். காலை ஒன்பது மணியிலிருந்து இரவு எட்டு மணிவரை வேலை.

ஓர் இரவு எட்டு மணிக்கு அவள் மேசை டிராயர்களைப் பூட்டிப் புறப்பட்டபோது நர்ஸ் மிஸஸ் மேனன், ''அயோக்கியன்கள், இவன்களைத் தெய்வந்தான் கேக்கணும். என்ன சத்தம் போட்ருனுங்க?'' என்று பொரிந்தாள்.

''என்ன சிஸ்டர்?''

ஆஸ்பத்திரிக்கு நேர் எதிரே ஒரு வீடு. பிரம்மசாரிகள் வாடகைக்கு எடுத்துத் தங்கி இருந்தனர். இரவானுல் ரெகார்டு பிளேயரைப் பெரிதாக இரைய விட்டுக் கொண்டு சீட்டாட்டமும், சிகரெட் புகையும், குடி நாற்றமும்.. பதினைந்து இரவுகளாக இப்படிக் கலாட்டா. ஆஸ்பத்திரியின் பிரதான டாக்டர் நேரடியாக எதிர்வீட்டுப் பையன்களுடன் பேசாமல் உடனே போலீசுக்குப் போன் பண்ணி விட்டார். எதிர் வீட்டுக்கு வந்து கூத்தடித்த பையன்களும் சாதாரணமானவர்கள் அல்ல. கலெக்டர், எம்.எல்.ஏ., டி.எஸ்.பி. மூவரின் பிள்ளைகளும் அந்தக் கூட்டத்தில் இருந்தனர். போலீஸ் இன்ஸ்பெக்டர்கள், ''தயவுசெய்து,

சத்தத்தைக் கொஞ்சம் குறைங்க'' என்று கேட்கும் நிலை.

கல்யாணிக்கு ஏதோ வேகம் வந்தது. எதிர் வீட்டுக்குச் சென்றாள். தைரியமாகப் படிகள் ஏறி மாடியையும் அடைந்தாள்.

அப்போதுதான் அங்கே ஒரு பார்ட்டி ஆரம்பம் ஆக இருந்தது. மேசையைச் சுற்றி நாற்காலிகள், மேசை மீது விஸ்கி பாட்டில், கிளாஸ் டம்ளர்கள், சோடா, பிரிந்த வறுவல் பொட்டலம், வேர்க்கடலை உருண்டைகள்.

கையில் புகையும் சிகரெட்டுகளோடு எல்லாரும் அவளைத் திரும்பிப் பார்த்தனர். எல்லாருமே கைலியிலும், முண்டா பனியனிலும் இருந்தனர். ஒருவன் டேப் ரெகார்டரில் கேஸட்டைப் பொருத்திக் கொண்டிருந்தான்.

''அட, நடிகை ஜெயரத்னா!''

''வாங்க, சரியான நேரத்துக்கு வந்தீங்க. பார்ட்டில கலந்துக்கலாமே!''

''தாங்க்ஸ். ரெண்டே வார்த்தை பேச என்னை அனுமதிங்க'' என்று கும்பிட்டாள் கல்யாணி. ''நீங்க படிச்சவங்க, பண்பாடு தெரிஞ்சவங்க. உங்க வீட்ல யாராவது நோயாளி படுத்திருந்தா இப்படிச் சத்தம் போடுவீங்களா? யோசிங்க. உங்க சுதந்தரத்துல குறுக்கிட யாருக்கும் உரிமை இல்லே. இருந்தாலும், நேர் எதிர இருக்கிற ஆஸ்பத்திரி நோயாளிகள் கிட்டக் கொஞ்சம் எரக்கம் காட்டி, சத்தத்தைத் தயவு செஞ்சு குறைங்க'' என்று சொல்லிவிட்டுக் கல்யாணி திரும்பிவிட்டாள்.

ஏதோ ஒரு முயற்சி என்று நினைத்தாளே தவிர, பலன் இருக்கும் என்று நினைக்கவில்லை. நாளடைவில் சத்தம் படிப்படியாகக் குறைந்து, இல்லாமலே போய் விட்டது.

எதிர் வீட்டில் அதிக ஆள் நடமாட்டமே இல்லை. மாடியில் கண்ணாடி ஜன்னல் வழியாக அதிக வெளிச்சம் இல்லாமல் சாதாரண விளக்கு எரியும். எப்போதாவது நாகசுர இசை கேட்கும். கல்யாணி வீட்டுக்குக் கிளம்பும் நேரம் எதிர்வீட்டு மாடியில் விளக்கு அணையும்.

ஒரு நாள் ஏதோ ரிஜிஸ்டரில் ஜன்னல் அருகில் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்த கல்யாணி தற்செயலாக நிமிர்ந்தாள். எதிர் வீட்டு மாடி ஜன்னல் அருகில் ஓர் இளைஞன் அமர்ந்து இவளையே பார்த்தான்.

இவளுக்கு ஆரம்பத்தில் என்னவோ போல இருந்தது. பிறகு அந்தப் பார்வையை அலட்சியப்படுத்த ஆரம்பித்தாள். ஆனாலும் அவன் பார்வை குறித்து இவள் இதயம் படபடத்தது.

''உங்க ஆஸ்பத்திரிக்கு ரெண்டாயிர ரூபா நன்கொடை தர்றதா இருக்கேன். யாரைப் பார்க்கணும்?'' என்று இவளை நெருங்கிக் கேட்டான்.

''கடைசி ரூம்ல சிஸ்டரைப் பாருங்க.'' குனிந்த தலை நிமிராமல் சொன்னாள்.

''ஒரு ஃபோன் பண்ணிக்கலாமா?''

''நாங்க வெளியாரை அனுமதிக்கிறது இல்லே.''

''நெஃப்ராலஜிஸ்ட் வீட்டு அட்ரஸ் வேணுமே?''

துண்டுச் சீட்டில் குறித்துக் கொடுத்தாள்.

தினமும் ஏதாவது சாக்கில் ஆஸ்பத்திரியில் நுழைந்து அவளிடம் பேச்சுக் கொடுத்தான் அந்த வாலிபன். அவள் நிமிர்ந்து அவனைப் பார்ப்பதே இல்லை.

ஒரு நாள் காலை அவள் வேலைக்கு வந்து கொண்டிருந்த போது அவன் பரந்த மைதானத்தில் அவளைச் சந்தித்தான்.

''வணக்கம். என் பேர் ரவீந்தர். நீங்க வேலை பாக்கற ஆஸ்பத்திரிக்கு நேர் எதிர்வீட்ல குடி இருக்கேன். எம். ஏ. பட்டதாரி. இதே ஊர்ல எனக்குச் சொந்தமா ரெண்டு, மூணு கடை இருக்கு. சாயங்காலம் போய்க் கொஞ்ச நேரம் கடைகளைப் பாத்துட்டு வருவேன். மத்த நேரம் முழுவதும் உங்களைப் பாக்கறது தான் எனக்கு வேலை. அன்னிக்கு நீங்க என் வீட்டுப் படி ஏறி வந்து அப்படிப் பேசினது என் மனசிலே பொன் ஓவியமாப் பதிஞ்சுடுத்து. அந்தப் பசங்களை விரட்டிவிட்டு நானே முழுவீட்டுக்கும் வாடகை குடுக்கறேன்.'' இப்படிச் சொல்லிக்கொண்டு அவன் அவள் அருகில் நடந்தான்.

அவள் அவனைப் பொருட்படுத்தவே இல்லை. கையில் விரித்த குடையோடு அழகாக ஆடி ஆடி நடந்து ஆஸ்பத்திரியினுள் சென்று விட்டாள்.

அடுத்த நாள் அவன் அவளுக்காக அதே மைதானத்தில் ஒரு காதல் கடிதத்துடன் நின்றான். அவள் மைதானத்தைச் சுற்றி நடந்து போய்விட்டாள். அன்றிரவு அவள் புறப்படும் நேரத்துக்காகக் காத்திருந்து, பின்னாலேயே போய், ''மிஸ் கல்யாணி'' என்றான். அவள் காதிலேயே வாங்காமல் நடந்தாள்.

மறுநாள் ஆஸ்பத்திரியிலேயே நுழைந்து கடிதத்தை அவள் கையில் கொடுத்தான். ''என்ன அது?'' கடுமையாக வினவினாள்.

''தப்பாக ஒன்றும் இல்லை.''

வாங்கிப் பிரித்தவள் உடனே அதைக் கசக்கிக் குப்பைக் கூடையில் எறிந்தாள்.

இரண்டு நாளில் ரவீந்தர் ஒரு கார் வாங்கி விட்டான். அவள் வீட்டு வாசலிலேயே காரோடு பழி கிடந்தான்.

''இன்னிக்கு ஆபீசுக்கு லேட் போலிருக்கு? வாங்க, அஞ்சு நிமிஷத்தில கொண்டு விட்றேன்.''

மாலையிலும் பின்னாலேயே சென்று ஹாரன் அடித்தான்.

''வேலை செஞ்சு களைச்சிருப்பீங்க. ஏறுங்க.''

அவள் தம்பிகளைக் காரில் ஏற்றிக் கொண்டு ஊரைச் சுற்றினான். ஓட்டலுக்கு, சினிமாவுக்கு அழைத்துச் சென்றான். பேனா வாங்கிப் பரிசளித்தான்.

ஒரு சமயம் அவனுடைய அம்மாவை அழைத்து வந்து அதே ஆஸ்பத்திரியில் சேர்த்தான். ஒரு மாதத்துக்கு மேல் அவளை அங்கிருந்து டிஸ்சார்ஜ் செய்து விடாமல் பார்த்துக் கொண்டான். நர்சுகளுக்கும், ஆஸ்பத்திரிச் சிப்பந்திகளுக்கும் நிறைய இனாம் கொடுத்தான். எல்லா டாக்டர்களோடும் நன்கு பழகினான். தலைமை டாக்டரிடமும் அடிக்கடி பேசி, நிறைய நன்கொடை கொடுப்பதாக உறுதி அளித்து, அவரின் நட்பையும் சம்பாதித்தான்.

''இந்தக் கல்யாணி ரொம்ப நல்ல பொண்ணு. அழகு. அடக்கம், பதவிசு'' என்றாள், ரவீந்தரின் அம்மா, கட்டிலில் உட்கார்ந்து.

''ஆமாம்மா, தங்கமான குணம்'' என்று சாத்துக்குடி உரித்தபடி பல்லைக் காட்டினான் ரவீந்தர்.

ஆஸ்பத்திரிக்குக் கட்டவேண்டிய பாக்கித் தொகைகள் பற்றிப் பேச வந்த கல்யாணி, ''உங்களுக்கு உடம்பு குணம் ஆயிடுத்து. இன்னிக்கு டிஸ்சார்ஜ் ஆயிப் போறீங்க. எங்களை மறந்துடாதிங்க'' என்றாள் சம்பிரதாயமாக.

''அம்மா, இவர்களை நம்ம கிராமத்துக்குக் கூப்பிடும்மா.''

''ஆமா கல்யாணி, ரெண்டு நாள்ள கார் அனுப்புவேன். நீ அவசியம் எங்க வீட்டுக்கு வரணும்.''

இரண்டு நாளில் ரவீந்தரின் கார், கல்யாணியின் வீட்டு வாசலில் நின்றது. காரில் ரவீந்தர் இல்லை. டிரைவரும், ரவீந்தரின் அம்மாவுந்தான். அவள் வீட்டில் மறுப்புச் சொல்லாமல் அவளை அனுப்பினர்.

போகிற வழியில் ரவீந்தரின் அம்மா, தங்கள் பல எஸ்டேட்கள் பற்றியும், ஏராளமான வீடுகள் பற்றியும், ரவீந்தர் வீட்டின் மூன்றாவது பிள்ளையான போதிலும் அவன் பங்குக்குக் கிடைக்கக் கூடிய பெரும் சொத்துக்கள் பற்றியும், அவன் விருப்பத்துக்குக் குறுக்கே யாரும் நிற்க மாட்டார்கள் என்பது பற்றியும் விரிவாகச் சொன்னாள். கார் ஓடும் வழியில், ''இதோ, இதெல்லாம் நம்ம தோட்டந்தான்'' என்றாள் ரவீந்தரின் தாயார்.

பங்களாக் காம்பௌண்டினுள் இன்னும் இரண்டு கார்கள், ஸ்கூட்டர், மோட்டர் பைக், அழகான மாட்டு வண்டி, ட்ராக்டர் எல்லாம் இருந்தன. வீட்டுத் தரை எல்லாம் மொசைக், வினைல் விரிப்பு.

சோபாவில் உட்கார்ந்தாள், ஆப்பிள் ஜூஸ் வந்தது.

பாண்ட், சட்டையில் ஒருத்தி, சல்வார் கமீசில் இன்னொருத்தி; ரவீந்தரின் தங்கைகள். சிரித்துச் சிரித்துப் பேசினார்கள். ''உங்களைப் பத்தி எங்க அண்ணா நிறையச் சொல்லி இருக்குது.''

அப்போது டெலிபோன் மணி அடிக்க ஒருத்தி எடுத்துப் பேசினாள். ''எஸ், கே. பேசறேர். சாப்பாட்டுக்கு வர மாட்டாராம். ஜி. எம்மும் அவரும் திருநெல்வேலி போறாங்களாம். வர ரெண்டு நாளாகுமாம்.''

அவர்கள் வீட்டில் யாரும் ஆண்களின் முழுப் பெயரைச் சொல்ல மாட்டார்களாம். இனிஷியலையும், பெயரின் முதல் எழுத்தையும் சேர்த்துத்தான் சொல்வார்கள்.

டீப்பாய் மீது பல தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகள். எல்லாவற்றுக்கும் சந்தா கட்டுகிறார்களாம்.

வீடு முழுவதையும் சுற்றிக் காட்டினார்கள். ரவீந்தரின் அறையில் நிறையத் தமிழ், ஆங்கில நவீனங்கள் இருந்தன.

மேசை மீதிருந்த ஒரு நோட்டைப் பிரித்துப் பார்த்த ஒருத்தி 'களுக்' என்று சிரித்தாள். ''அண்ணன் ஸ்ரீராமஜயம் எழுதுது பாருங்க!''

கல்யாணி பார்த்தாள். நோட்டு முழுவதும் கல்யாணி, கல்யாணி, சல்யாணி என்று எழுதப்பட்டிருந்தது.

''வர்ற ஞாயித்துக்கிழமை நாம ஒரு படம் பார்க்கறோம். சரிதானா? டிக்கெட் ரிசர்வ் பண்ணட்டுமா?'' என்று ஒருத்தி சினிமாத் தியேட்டர் டெலிபோன் எண்ணை டயல் செய்தாள்.

சிற்றுண்டி அருந்திய பின் ரவீந்தரின் அம்மா மனமே இல்லாமல் அவளுக்கு விடை கொடுத்தாள். குங்குமம் கொடுத்த போது ஒரு நைலக்ஸ் சேலையும் இருநூறு ரூபாயும் பரிசளித்தாள்.

அவளைத் திருப்பிக் கொண்டு விடக் கார் டிரைவர் இருக்கையில் ரவீந்திரனே இருந்தான். அவளோடு அவன் எதுவும் பேசவில்லை. மௌனமாகக் காரைச் செலுத்தி, மௌனமாகவே திரும்பி வந்து விட்டான்.

அடுத்த நாள் காலை அவள் ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்ட போது தெரு முனையில் அவன் காரோடு நின்றிருநதான். அவளோடு ஏதோ பேசவும் முற்பட்டான். அவள் வழக்கம் போல் அலட்சியமாக நடந்துகொண்டாள்.

''இந்தக் கடிதத்தைத் தயவு செய்து பெற்றுக் கொள்'' என்று கெஞ்சினான். வாங்கிக் கொண்டு நடந்தாள்.

அந்தக் கடிதம் பிரிக்கப்படவே இல்லை. அப்படியே அவள் கைப்பையில் இன்னும் கிடக்கிறது. கைப்பை அவளின் பிறந்த வீட்டில் இரும்புப் பெட்டியில் இருக்கிறது.

மறுநாளிலிருந்து ரவீந்தரை அவளால் பார்க்க முடியவில்லை. அது பற்றியும் அவள் மனத்தில் சலனம் இல்லை. நிம்மதியாகவே இருந்தாள்.

பதினைந்து நாட்களுக்குப் பிறகு ஒரு கார் அவள் வீட்டு வாசலில் வந்து நின்றது. அதில் ரவீந்தரின் அம்மா, தங்கைகள், அண்ணா அண்ணிகள் என்று நிறையப் பேர் இருந்தார்கள்.

ரவீந்தர் கடும் ஜுரத்தில் கிடக்கிறானும். அவன் பிழைப்பது பற்றி டாக்டர் சந்தேகமாகச் சொல்லி விட்டார். ''நீ வந்து பாரும்மா. அந்தத் திருப்தியோடயாவது அவன் சாகட்டும்'' என்று கண்ணீர் விட்டாள் முதியவள்.

கல்யாணி அவர்களோடு சென்று நான்கு நாட்கள் இருந்தாள். அவளே ரவீந்தரின் படுக்கை அருகில் இருந்து வேளை தவறாமல் மருந்து கொடுத்தாள்.

ரவீந்தர் ஐந்தாவது நாள் படுக்கையில் எழுந்து அமர்ந்தான். தாடியும் மீசையுங்கூட அவனுக்கு அழகாகவே இருந்தன.

அந்தஸ்து, ஜாதி பேதம் பார்க்கவில்லை என்றும், அவளைத் தங்கள் மருமகளாக ஏற்கத் தயாராக இருப்பது பற்றியும் ரவீந்தரின் அம்மா அவளிடம் மனம் விட்டுப் பேசினாள். ''தொடர்ந்து மௌனம் சாதித்தால் எப்படி? வாயைத் திறந்து மனசில் உள்ளதைத்தான் சொல்லேன்!''

கல்யாணி சொல்ல நினைத்தாள்.

முதலில் இருவரும் வெவ்வேறு ஜாதி. பிறகு, அப்பா உயிரோடு இருந்தும், இவர்களின் கூடவே இல்லாமல் எங்கோ இவர்களுக்கு உபயோகம் இல்லாமல் இருந்து வருகிறார். பாட்டி வளர்ப்புத் தான் இவர்கள் எல்லாரும். 'இவர்கள் எங்கே உருப்படப் போகிறார்கள்? கைம்பெண் வளர்த்த கழிசடைகள்தான்' என்று உறவினர்கள் ஏளனம் செய்கிறார்கள். உறவினர்களால் உதவி இல்லை என்றாலும் கேலிப் பேச்சுக்களுக்குக் குறைவில்லை. கணநேரச் சபலத்துக்கு

ஆட்பட்டு இவள் சுலபமாக வேலியைத் தாண்டிவிட முடியும். ஆனால் குடும்பக் கௌரவம் தொலைந்துவிடும். காலத்துக்கும் பழிச் சொல் நீளும். 'இதுகள் இப்படிக் கெட்டழியும் என்று எங்களுக்குத் தெரியுமே!' என்று உறவினர்கள் கைகொட்டிச் சிரிப்பார்கள். 'எங்களை ஆளாக்க அரும்பாடு பட்ட எங்கள் கிழவியை அவமானப்படுத்தும் காரியத்தை நான் செய்ய மாட்டேன்.'

கல்யாணி புன்னகையுடன் எழுந்து கும்பிட்டாள். "என்னை மன்னியுங்கள். என் தங்கைகளின் பிற்கால நலனையும் நான் கவனிக்க வேண்டி இருக்கிறது. ரவீந்தருக்குச் சீக்கிரம் ஒரு நல்ல பொண்ணைப் பார்த்துக் கல்யாணம் செஞ்சு வையுங்கள். ரவீந்தர் சந்தோஷமாக வாழ வேண்டும் என்று நான் மனப்பூர்வமாக விரும்புகிறேன்." கண்ணில் திரண்ட நீரை விரலால் சுண்டி எறிந்தாள்.

மூன்று வாரங்களில் ரவீந்தர் அவளை ஆஸ்பத்திரியில் சந்தித்து, "என் கல்யாணப் பத்திரிகையின் முதல் பிரதியை உனக்குத்தான் தரவேண்டும் என்று விரும்புகிறேன் கல்யாணி; நீ அவசியம் கல்யாணத்துக்கு வர வேண்டும். நான் உதயகுமாரன்; நீ மணிமேகலை. இந்த ஜன்மத்தில் இணைய முடியவில்லை. ஆனால் என் இதயத்தில் உன் பிம்பமே என்றென்றும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும். எனக்கு மனைவியாக வருகிறவர்களிடம் உன்னைக் காண்பேன்" என்று மலர்களைப் போல் கண்ணீர்த் துளிகளைக் கொட்டித் திருமணப் பத்திரிகையைக் கொடுத்தான்.

அப்போதுதான் அவனை நிமிர்ந்து, சரியாக, மிக அருகில் பார்த்தாள் கல்யாணி. நல்ல அழகன்; பணக்காரனும்கூட. அவனைக் கணவனாக அடையப் போகிறவள் பாக்கியசாலிதான்.

அவள் ஏதும் சொல்லத் தோன்றாமல் அவனையே பார்த்திருந்தாள். அந்த மௌனமே அவளுடைய வழக்கமான கம்பீர நிலை என்று அவனும் வெளியேறினான்.

ரவீந்தரின் திருமண நாள் நெருங்க நெருங்க, கல்யாணி ஆஸ்பத்திரிக்கே ஒழுங்காகச் செல்ல முடியவில்லை. தினமும் கார் வந்து அவளை அழைத்துச் சென்றுவிடும்.

ரவீந்தரின் திருமணத்தன்று கல்யாணி கோவையில் இல்லை. எங்கே சென்றாள் என்று யாருக்கும் தெரியவில்லை. பத்து நாட்களுக்குப் பிறகே திரும்பி வந்தாள். மதுரையில் ஒரு சிநேகிதியின் வீட்டுக்குச் சென்றிருந்தாளாம். ரவீந்தர் தாலி கட்டிய நேரத்தில் மீனாட்சியின் சந்நிதியில் அவன் பெயருக்கு அர்ச்சனை செய்தாள் என்பதும், மாலை மாலையாகக் கண்ணீர் பெருக்கினாள் என்பதும் அந்தச் சிநேகிதி மட்டுமே அறிந்தவை.

தாலியைக் கையில் எடுத்த ரவீந்தரின் கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடியது என்றும், அவனுடைய அம்மாவும் சகோதரிகளும் அழுதனர் என்றும், கைகள் நடுங்க, தாலி கட்டி முடித்ததும் மயங்கி விட்டான் என்றும் கல்யாணிக்குத் தகவல் சொன்னார்கள்.

கல்யாணிக்குத் தீவிரமாக வரன் பார்த்தார்கள். நிறையப் பையன்கள் வந்து அவளைப் பார்த்து விட்டுப் போனார்கள். ஒரு வழியாக இந்த விசுவாமித்திர வாரிசு இவளுக்கு நிச்சயமாகியது.

கல்யாணி, ரவீந்தருக்குத் திருமணப் பத்திரிகை தரவில்லை. ஆனால் அவனுக்கு எல்லா விஷயங்களும் தெரிந்திருந்தன. அவன் கல்யாணியின் வீட்டினருக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுத்தான். ஐந்து பவுன் சங்கிலியும் அவளுக்குப் பரிசளித்தான்.

முகூர்த்த நேரத்தில் கல்யாணியின் கண்கள் கலங்கின. ரவீந்தரும் கைக்குட்டையால் நாசூக்காகக் கண்களை ஒற்றிக் கொண்டான்.

இரண்டு வருடங்கள் சென்று கல்யாணி ஒரு நாள் பிறந்த வீடு வந்தபோது, "உனக்கு விஷயம் தெரியுமா அக்கா? ரவீந்தருக்குப் பெண் பிறந்திருக்கிறது" என்றாள் தங்கை.

ரவீந்தர் பற்றிய எந்த ஒரு சின்னச் செய்தியும் கல்யாணிக்கு மகிழ்ச்சியை அளித்தது. "அப்படியா!" என்றாள். அவள் முகம் மலர்ந்தது. டாக்சி வைத்துக் கொண்டு கணவனோடு ரவீந்தரின் வீட்டுக்குச் சென்றாள்.

ரவீந்தரின் வீட்டில் எல்லாரும் அளவு கடந்த உற்சாகப் பரபரப்புக் காட்டினர். "நான் கௌரவிக்கப்பட்டேன்!" என்றான் ரவீந்தர்.

குழந்தைக்கு 'லட்சுமி' என்று பெயர் வைக்கப் போவதாக ரவீந்தர் சொன்னதும், கல்யாணிக்குச் சிலிர்த்தது. அவள் வீட்டில் அவளைச் செல்லமாக அழைக்கும் பெயரை அவன் எப்படியோ அறிந்து வைத்திருந்தான். குழந்தையைத் தூக்கி மார்போடு அணைத்து, கணக்கில்லா முத்தம் சொரிந்தாள் கல்யாணி. பத்து ரூபாயைக் குழந்தையின் கையில் வைத்தாள்.

இவளுக்குக் குழந்தை பிறந்தபோது அவனால் பகிரங்கமாகப் பரிசளிக்க முடியவில்லை. காலுக்குப் காப்பு, கை வளையல், கழுத்துச் சங்கிலி எல்லாம் தங்கத்தில் பாட்டி செய்து அணிவித்தாள். செலவு அவனுடையது.

குழந்தைக்கு ஆளுக்கு ஒரு பெயர் சொன்னார்கள். அவனை எந்தப் பெயர் சொல்லி அழைத்தாலும் கல்யாணி ஒவ்வொரு தடவையும் 'ரவீந்தர்' என்று மனத்துக்குள் சொல்வாள்.

இரவு பத்து மணிக்கு மேல் ஆகிவிட்டது. பால் காய்ச்சிக் குழந்தைக்குத் தர வேண்டும். கல்யாணி எழுந்தாள். சுவரில் மாட்டியிருந்த கண்ணாடியில் முகம் தெரிந்தது. 'விலை போகாத மாடு!' என்று சொல்லிச் சிரித்துக் கொண்டாள். 'ரவீந்தர்' என்று சொல்லியபடி நெற்றிக் காயத்தைத் தொட்டாள். வலிக்கவில்லை. ❋



Phone : 491 Grams : "YESYES"

SWAMINATHAN SILKS

(Managing Partner: S. PRAKASAM)

52, Sundara Mudali Street, Kosappalayam, Arni (N.A. Dt.)

Popularly acclaimed as the latest fashion
creators for each and every season

Renowned for high tradition
for quality manufacture and supply of

Handloom Pure Silk Sarees

of exquisite finish, tasteful designs
and delightful colours.


பாங்க் ஆஃப் பரோடாவில்
சேமிப்பது என்றாலே,
கவர்ச்சியான திட்டங்கள்
மற்றும் கனிவான
சேவை
பாங்க் ஆஃப் பரோடா
(இந்திய அரசுக்குச் சொந்தமானது)

கலையும் பரிசும்

கி. சந்திரசேகரன்

"விஜயா நீ பெங்களூர் போகத்தான் போறயா?"

"உங்களுக்குச் சந்தேகம் ஏன்?"

"இல்லை; ஜயராமன் ஏதோ சொல்லிண்டு இருந்தானே, அதனால் தான் கேட்டேன்."

"ஏன், என்ன சொல்லிண்டிருந்தார்?"

"குழந்தைகள் ரெண்டு பேரும் தன்னைத் தூங்கவிடாது தொந்தரவு செய்றான்னுன். நீ ஒரு ராத்திரி இல்லாமப் போனாக்கூடத் தனக்குச் சிரமமாயிருக்கும்னு சொல்லிண்டிருந்தான்."

"ஒரே ஒரு ராத்திரிக்குள்ளே என்ன வந்துடுமாம்? அவர் ஒண்ணும் வேண்டாங்க மாட்டார்."

இவ்விதம் தகப்பனாரும் மகளுமாய்ப் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டே வந்தான் ஜயராமன். பல்லை விளக்கிய பின் தனது மேல் துண்டை எடுத்து முகமெல்லாம் வழிந்த தண்ணீரைத் துடைத்துக் கொண்டு நிதானமாய்த் தன் மனைவியும் மாமனாருமாய் நடத்திய சம்பாஷணையின் கருத்தை ஒருவாறு புரிந்துகொண்டு சொன்னான்:

"ஆமாம், சிரமந்தான். குமாரு ரொம்பத்தான் கஷ்டப்படுத்தறான், நீ இல்லாவிட்டால். நந்தினியானாலும் சித்த விஷமம் செய்யாதிருப்பாள். இவன் கத்தித் தீத்திடுவான். சமாதானம் பண்றத்துக்குள்ளே நம்ம பாடு திண்டாட்டம். தூக்கமும் போய்ச் சிவராத்திரியாயிடறது."

இருவரையும் சிறிது புன்னகையுடன் நோக்கினாள் விஜயலட்சுமி. வீணையில் மிகவும் கை தேர்ந்தவளாய், கச்சேரிகள் பல இடங்களில் செய்யும் பழக்கமும் ஏற்பட்டிருந்தது அவளுக்கு. அவள் தந்தை பரமக்குடி வைத்தியநாத பாகவதர், பரம்பரைச் சங்கீத வித்துவான்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் வீணை வாசிப்பதில் குளிர்ச்சியை விடக் கம்பீரமும் ஆழமும் காண்பதை அவருடைய தலைமுறை ரசிகர்கள் போற்றி வந்தார்கள். தமது சாதனையையும் ரசிகர்களிடம் தமக்கு இருந்த செல்வாக்கையும் நினைத்துத் திருப்தி பெற்ற உள்ளம் அவருடையது.

தம் ஒரே பெண்ணுக்கும் ஈசுவரன் அருளால் சிறிய பிராயத்திலேயே சங்கீத ஞானம் இருப்பதை உணர்ந்த அவர், தாமே வித்தையைக் கற்பிக்கத் தொடங்கி, ஸரளி, கீதம், வர்ணம் கிரமமாய்ப் பாடம் செய்து வைத்தார். விஜயாவின் விரல்களில் பிறரிடம் காணாத தனி மிருதுத் தன்மை முதலிலிருந்தே கேட்பவர்களின் இதயங்களை ஈர்த்தது.

அறந்தாங்கி தேவுடுபிள்ளையிடம் இனி விஜயா சிட்சை பெறுவது தான் பொருத்தம் என்று தகப்பனாருக்குப் பட்டது. நய வழியில் தேவுடுபிள்ளை, பலரிடம் பாராட்டுக்களைப் பெற்றவர். விஜயாவின் உள்ளமும் வீணையை ஏதோ ஓர் அலாதியான பிரம்ம சிருஷ்டியாகவே கருதியது. விரல்கள் தந்திகளைத் தொடுவதுபோல்தான் அவள் வாசிக்கையில் தோன்றும். வழவழப்பும், துளியும் தொடர் கெடாத ஸ்வர சுத்தமும் அவளுக்கென உருவாகியிருந்தன என்றே ரசிகர்கள் நினைத்தார்கள். திராட்சை ரசத்தில் தேனையும் கலந்து ருசிப்பது போன்று அவளுடைய வீணையிலிருந்து ஒலி கிளம்புகையில் அநுபவசாலிகளின் செவிகளில் இன்பம் பாயும். மீட்டல்கள் அளவாயும், கமகக் குழைவுகள் நிரம்பியும் நாதம் பெருகுகையில், யார்தான் அதற்கு வசப்படாது இருக்க இயலும்? ரசிகர்கள் விஜயாவினிடம் கொண்டிருந்த பெருமதிப்பு, நாளடைவில் அவளுடைய தந்தையின் தேர்ச்சியை விட மேலே சென்றதாகவே விளம்பரப் படுத்திவிட்டது.

நண்பர்கள் குழாங்களில் முதல் முதலில் விஜயா கச்சேரி செய்தாள். பிற்பாடு வரவர அவள் வாசிப்பையும் சங்கீத ஞானத்தையும் வெகுவாய்ப் புகழத் தொடங்கிய பலர், சபைகளில் விரும்பி அழைத்துக் கௌரவித்தார்கள். சிறிதும் சங்கோசமின்றி அவள் செய்யும் கச்சேரிகளைத் தகப்பனாரும் ரசிக்காமல் இல்லை. ஆனால் அவருடைய அந்தரங்கம் கூறியது: 'காதுக்கு இனிமை மட்டும் போதுமா? வாத்தியத்தை உபயோகிக்கும் பலவிதச் சாதக முறைகளைக் கற்பதற்குள் கச்சேரிகள் நிறைய ஏற்படுகின்றனவே! இனி அவற்றைப் பழகிக் கொள்வதற்கு அவகாசமும் சிரத்தையும் ஏற்படாவே! எதையுமே முழுவதும் அறியாத ஒரு கும்பல் அல்லவா இவளைச் சுற்றிப் பிரமாதப்படுத்துகிறது?' என்றே அவர் கவலையடைந்து வந்தார்.

அவரே வீணையை அவளுக்குக் கற்பித்தவர். அவரே கொஞ்சம் கொஞ்சமாய் அவளுடைய வாசிப்புத் திறனைப் பாராட்டும் ரசிகர்களிடம், "எவ்வளவோ தெரிய வேண்டியிருக்கையில் அதிகம் கச்சேரிகள் செய்ய ஒப்புக்கொள்கிறாள்; நான் தடுத்துப் பார்த்தும் அவள் இணங்குவதில்லை. அவள் புருஷனாவது வேறு காரணங்களால் வெளியூர்களுக்குப் போவதையாவது குறைத்துக் கொள்ள விரும்புவானா என்று பார்த்தால், அவனும் இந்தக் கச்சேரிகளால் பணவருவாய் ஒன்றையே கண்டு திருப்தியுடன் தடை செய்ய இஷ்டப்படுவதில்லை. கலையின் அதிதேவதையான சரஸ்வதி தேவியே வந்தாலும் இனி விஜயா பிறர் சொல்லும் புத்திமதிகளைக் கேட்க மாட்டாள்" என்றார். இவ்விதமே அடிக்கடி வைத்தியநாத பாகவதர் சலிப்படைந்தார்; நெருங்கிய சிலரிடம் மெதுவான குரலில் தமது குறைகளைக் கூறி அளவளாவுவார்.

நேரில் தன்விடம் சொல்லாது மற்றவர்களிடம் சொல்வதைச் சில சமயங்களில் கேட்ட விஜயாவின் உள்ளம் தாங்கலுடனேயே அவற்றைத் தனிமையில் ஆராய்ந்தது உண்டு. தான் வாசிக்கும் முறையையும் அவள் அதற்காக மாற்றிக் கொள்ளவும் பிரயாசைப்படவில்லை.

உண்மையில் வீணைத் தந்திகளின் மேல் அவளுடைய விரல்கள்தாம் பாய்கின்றனவா அல்லது பிழிந்த கனி ரசமேதான் ஊற்றெடுத்து ஓடுகிறதா, வீணைத் தந்திகளின் மேல், என்றே கேட்கின்ற செவிகள் பிரமிப்படைந்தன. விஜயாவும் தானே நாத சுகத்தையும், வாசிப்பிலுள்ள சௌக்கியத்தையும் உணர்ந்ததால், இனியும் இந்த வீணை வாத்தியத்துக்கு ஒப்பான ஒன்று உலகில் உண்டோ என்றே தனக்குள் அடிக்கடி பரவசமடைவதுண்டு.

''கான்டாக்ட் மைக்'' (Contact mike) போன்ற நவீன ஒலிபெருக்கிச் சாதனங்களை அவள் வெறுத்தாள். வீணைத் தந்திகளுக்கு உண்டான சுய நாதம் முழுவதுமே நவீன உபகரணங்களால் கெட்டு விடுவதாகவே அவள் நினைப்பாள். கேட்பவர்களின் எண்ணிக்கை அதிகம் ஏற்பட்ட இடங்களில் எதிரே 'மைக்' கருவியை வைத்தவுடன் சற்றுத் தள்ளியே அதைத் தன் கையால் நகர்த்திவிடுவாள்.

'எதற்காக வீணை என்ற அருமையிலும் அருமையான வாத்தியத்தை ஒலி பெருக்கியின் மூலம் ஒரு பெரிய பாண்டு வாத்தியமாக்கித் தர வேண்டும்? இதற்குண்டான பெருமையை உணரும் ரசிகர்களே போதும். மற்றவர்கள் கேட்காதது ஒரு குறை' என்றே அவள் கனவிலும் நினைத்ததில்லை.

பெங்களூரிலிருந்துவந்த அழைப்பை அவளால் ஏற்காது இருக்க இயலவில்லை. ஏனெனில் அவ்விடம் தனிப்பட்ட சில ரசிகர்கள் வீணையின் நுட்பங்களை உணர்ந்திருந்தார்கள். அவர்களுக்கு விஜயாவின் கச்சேரி என்றதும் குதூகலம் எல்லை மீறியதை அவள் கவனித்திருக்கிறாள். மற்ற வீணை வித்துவான்களிடம் புலப்படாத சௌக்கியம் விஜயாவின் விரல்களினூடே இழைந்தோடியதாகக் கருதினார்கள்.

முன்கூட்டி அந்தக் கச்சேரியை ஒப்புக் கொண்டதை ஒரு நிபந்தனை என்றே அவள் கருதினாள். மேலும் இரண்டு தினங்களுக்கு முன் பெங்களூர்ச் செயலாளரான குருஸ்வாமி என்பவர் சென்னைக்கு வந்திருந்தார். நேரில் அவர் விஜயாவிடம் சொன்னதை அவள் மறக்கவே இல்லை.

''இந்தத் தடவை எக்காரணம் கொண்டும் கச்சேரித்தேதியை மாற்ற வேண்டாம். கானடா (Canada) நாட்டில் பெரும் பதவியிலிருந்து சென்னை திரும்பிய நபர் ஒருவர் கர்நாடக சங்கீதமென்றால் உயிரையே விட்டுவிடுவாராம். அதிலும் வீணை ஒரு புராதன வாத்

தியம். சங்கீதஞானம் வளர்வதற்கு அறிஞர்கள் எல்லாரும் வீணையின் ஸ்வரஸ்தானங்களை வைத்தே தங்கள் படைப்புக்களை இயற்றியுள்ளார்கள். வைணிகர்களாகவேகூடச் சில வாத்தியக்காரர்கள் இருந்ததை உயர்ந்ததோர் அரிய குறிக்கோளாகவும் விஜயா நினைப்பதுண்டு. வீணைவாத்தியத்தை அந்தக் கானடா நாட்டிலிருந்து வந்த பிரமுகர் சொந்தத்தில் பயின்றவராம். காரணம் எதுவாயினும், அவர்தாம் ரூபாய் ஐயாயிரத்தைப் பரிசுத் தொகையாக வைத்து, அரிய கலைஞர் ஒருவருக்குச் சம்மானம் செய்ய முன்வந்துள்ளார். எங்கள் சபையினரிடம் அந்தத் தொகையைச் சிறந்த வீணை வித்துவானுக்கு அளிக்க வேண்டுமென்றும் கட்டளையிட்டு வழங்கியுள்ளார்.''

இங்கே சிறிது குரலை இறக்கி, ''உங்கள் வீணை வாசிப்புக்கென்று எங்கள் நிர்வாகக் குழு அதனை ஏற்றுக் கொண்டு, கச்சேரி முடிந்ததும் அந்தப் பிரமுகரைக் கொண்டே புகழ்மாலை சூட்டிப் பண முடிப்பையும் அளிப்பதாக ஏற்பாடு. ஆகையால் அவசியம் இச்சமயம் வராது நிற்க வேண்டாம். இது எங்களில் பலருடைய வேண்டுகோள்'' என்று கூறி முடித்தான்.

தான் பெங்களூர் செல்வதற்குத் தடையொன்றும் இருக்கவகையில்லை என்றே அதுவரையிலும் விஜயா நினைத்திருந்தாள். இன்று எதனால் தன் தந்தை அங்கே போவதைத் தடுக்க முயலுகிறார் என்றே முதலில் அவளுடைய மனம் குறைபட்டது. தன் கணவர் என்றுமே தான் செய்யும் கச்சேரிகளை வெறுத்ததில்லை. மேலும் தபால் இலாகாவின் தலைமை அலுவலகத்தில் வேலை பார்த்த அவருக்கு இவற்றிலெல்லாம் ஈடுபாடு இல்லாவிட்டாலும், மனைவியின் கலை ஆர்வத்தில் குறுக்கிட்டது கிடையாது. அவரும் இன்று ஏனோ குழந்தைகளின் போறுப்பை ஏற்க அலுத்துக்கொண்டார். இருப்பினும் ஜயராமன் எதையும் பெரிதுபடுத்துவது வழக்கமில்லை.

''அப்பா, மாப்பிள்ளை சொன்னது ஒன்றும் புதுசில்லை. எப்பவாவது அவர் குழந்தைகளின் தொந்தரவு என்பதைப் பெரிதாக்குவார். போவதென்று கிளம்பிய பிறகு அதையொன்றும் அவர் பெருந்தவறாக நினைக்க மாட்டார். உங்கள் ஆட்சேபணைதான் இன்று புதிதாக இருக்கு.''

வைத்தியநாத பாகவதர் சற்று யோசித்துவிட்டு, ஒருதீர்மானத்துக்கு வந்தவராய்ச் சொன்னார்; ''இல்லை, விஜயா, நீயோ ஒரு பெண் பிள்ளை. உன்னை அதிகம் குசால் படுத்துகிறார்களே, இது எங்கோ கொண்டுபோய் விடுமோ என்றே கவலை. எங்கள் காலத்திலும் வீணை வித்துவான்கள், ஆண், பெண் இருபாலாரும் பலர் இருந்திருக்

கிறார்கள்; ஆனால் இந்த நாட்கள் மாதிரி அப்போதெல்லாம் கிடையாது. நிஜமாய் ஒன்றை உயர்ந்ததாய் நினைத்தால்தான் புகழ்வார்கள். இப்போதுபோல 'மைக்' மூலம் ஒலியைக் கேட்ட காதுகள் அதைச் சுநாதம் என்றும் இனிமையான வாசிப்பென்றும் சொல்வதை நம்ப முடியவில்லை. தனிப்பட்ட ரசிகர் வேற பெங்களூரில் இருப்பதாகவும் ஒரு பிரமை உனக்கு. இதையெல்லாம் நீ நம்பவேணுமா என்றுதான் கேட்கிறேன். அப்புறம் உன் இஷ்டம்'' என்று அலுப்பும் ஆசியுமாகக் கூறி முடித்தார், சிறு பிரசங்கத்தை.

விஜயா அவர் பேச்சை அலசிப் பார்த்தாள்,

'தந்தையானாலும் கலைத் தேர்ச்சி என்றதும் தமக்குப் போட்டியாகவே நினைப்பாரோ?' சுருக்கென்றது அவள் உள்ளத்தில்.

இன்னும் ஒரு வாரம் இடைவெளி உள்ளது. பாதகம் இல்லை. இன்னும் விவரமாகவே வீணையைச் சாதகம் செய்தாள்.

ஒரு நாள் வீணைத்தந்தியை மாற்றிப் போட உட்கார்ந்தாள். தாளத் தந்தியொன்றை அவள் சிறிது சத்திரிக்கையில் இடது ஆள்காட்டி விரலில் பட்டு ரத்தம் கசியத் தொடங்கியது. சிறிய காயந்தான். ஆனாலும் கச்சேரி நாள் நெருங்க நெருங்க விரலின் காயம் ஆறுததால் வாசிக்க இயலாது செய்து விடுமோ என்றே பயந்து விட்டாள்.

இறுதியில் சில நாட்கள் முன்பாகவே தன்னால் கச்சேரியன்று வருவதற்கு இயலாது என்று தந்தி கொடுத்து விட்டாள்.

செயலாளர் குருசுவாமி ஓடோடி ரெயிலில் புறப்பட்டு வந்தான்.

உண்மையில் விரலில் காயம் ஆறியிருந்தது. இருப்பினும் கச்சேரியை வேறு தேதிக்கு மாற்றிப் போடச் சொன்ன பிறகுதான் நிம்மதியை அடைந்தாள் விஜயா.

குருசுவாமி வைத்தியநாத பாகவதரிடம் தகவல்களைக் கொட்டினான்; ''எப்படியும் நீங்கள் பெரிய மனசு பண்ணி உங்கள் மகளை இந்தச் சமயம் ஏமாற்றம் அளிக்காது, எங்கள் அனைவரையும் கௌரவிக்கச் சொல்ல வேண்டும்'' என்று மன்றாடினான்.

''நானா சொல்லாமல் இருப்பேன்? இதோ உங்கள் எதிரிலேயே சொல்கிறேன் பாருங்கள். ஏதோ அவள் புருஷன்தான் விரல் காயத்தைக் கண்டு தற்சமயம் போவது சரியில்லை என்று கூறியிருக்க வேண்டும்'' என்று மிகவும் சமயோசிதமாய்ப் பதிலளித்தார்.

விஜயா இதைக் கேட்டுக் கொண்டுதான் இருந்தாள். குருசுவாமி சொன்ன சம்மானத் தொகையை அறிந்ததும் முகமலர்ச்சியுடன், ''என்ன விஜயா, இத்தனை பேர்களை ஏமாற வைத்திடாதேம்மா? யாரோ பணக்காரனும், சங்கீதமும் அறிந்தவனும். அவன் நேரில் கொடுக்கிற பணமுடிப்பை வாங்காமல் மனசைப் போட்டு உடைச்சுக்கொள்ளாதே. போய்வா. விரல் காயம் ஒன்றும் அவ்வளவாகத் தொந்தரவு செய்யுமென்று தெரியவில்லை'' என்று குருசாமியுடன் கூடச் சேர்ந்து பாடினார்.

''சங்கீத ஞானம் பரிசுக்காக வளர்க்கப்படவில்லை என் மனம் போலவே பிறர் மனமும் குளிர்ந்த பிறகு அவர்கள் என்னை ஆசிர்வதிப்பதையே விரும்புகிறது, அப்பா! உங்கள் திருப்தியும், உங்கள் மாப்பிள்ளையின் சந்தோஷமும் என்றுமே எனக்கு இருக்க வேண்டும் என்று தான் என் மனம் விரும்புகிறது.'' இந்தத் தடவை வெளியூர் போவதை நிறுத்தச் சொல்லி விட்டு விஜயா தனது வீணையை வெறித்து நோக்கினாள்.

வைத்தியநாத பாகவதர் மட்டும், ''இந்த நாளில் சிறுசுகள் நினைக்கறதும் பேசறதும் எல்லாமே அலாதியாகத்தான் இருக்கு'' என்று தாங்காத மனவருத்தத்துடன் தமது இருக்கையில் சாய்ந்து கொண்டார். ✱

திருத் துழாய் மங்கை

கோலோகத்தில் பசுமையான நந்தவனம். அதில் ஓர் அசோக மரம். அதன் கிளைகளில் கட்டியிருந்த ஊஞ்சலில், பட்டு மெத்தையில், பீதாம்பர தாரியாய்க் கிருஷ்ணன் சாய்ந்து அமர்ந்திருக்கிறான். எட்டினாற்போல் ராதை; இன்பமான சம்பாஷணை.

அந்தச் சமயத்தில் சுதர்மன் என்பவன் பசுக்களுக்காகவும், ராதையின் தோழி சுநந்தை தடாகத்தில் குளிப்பதற்காகவும் வருகிறார்கள். ராதையும் கிருஷ்ணனும் இன்பக் கேளிக்கைகளில் ஈடுபட்டிருப்பதைக் கண்டு 'கொல்'லென்று சிரித்துவிடுகிறார்கள். அதனால் கோபம் கொண்ட கண்ணன், இருவரையும் மண்ணுலகில் பிறக்கும்படி சபித்துவிடுகிறான்.





நீர்நிலையில் இரு ஹம்ஸங்கள் ஒன்றை ஒன்று துரத்திப் பிடித்து விளையாடுவதைக் காண்கிறாள். அப்போது கையில் ஒரு கிளிக் கூண்டுடன், அசுரனாகப் பிறந்த சங்கசூடன் குதிரையின்மேல் வருகிறான். துளசியைப் பார்த்ததும் அவன் ஆசை கொள்கிறான். காந்தர்வ முறைப்படி துளசியை அங்கேயே மணக்கிறான். கணவனும் மனைவியும் இன்பமாக வாழ்கின்றனர். கணவனைக் கண்கண்ட தெய்வமாகப் போற்றுகிறாள் துளசி.

அசுரகுலத்தில் பிறந்ததால், அசுரகுணங்கள் மிகும்போது, பல கந்தவர்களைப் பிடித்துச் சிறையில் அடைத்துவிடுகிறான். பராசக்தியைப் பூஜித்துக் கணவனின் குணத்தை மாற்ற முயற்சி செய்கிறாள் துளசி.

சங்கசூடனின் தொல்லை தாங்க முடியாத தேவர்கள் பரமசிவனிடம் போய் முறையிடுகிறார்கள். பரமசிவன், இந்திரதத்தன் என்ற கந்தர்வனை அழைத்து, ''தேவர்களை விடுவிக்கிறானா? போரிட்டு மடிகிறானா?'' என்று

கேட்டுவரச் சொல்கிருர். சிவபெருமானுடன் போரிடவே விரும்புகிருன், சங்கசூடன்.

கணவன் சிவபெருமானுடன் போரிடும் வேளை வந்துவிட்டது என்பதை அறிந்த துளசி, தன் கற்பின் திறத்தினுல் அவனைக் காக்க எண்ணி, முன்னிலும் தீவிரமாகப் பூஜையில் ஈடுபடுகிருள்.

சிவபெருமான் தம் பூத கணங்களோடு வந்து சங்கசூடனுடன் போரிடுகிருர். குன்றுகளையே பெயர்த்துச் சங்கசூடன் எறிகிருன். பரமசிவன் தம் சூலாயுதத்தால் அவனை ஸம்ஹாரம் செய்கிருர். கணவன் இறந்ததை அறிந்த துளசி, தீ மூட்டிக் குளிக்கிருள்.

கண்ணனும் ராதையும், இவர்கள் இருவரையும் வரவேற்று ஆசீர்வதிக்கிருர்கள். திருமால் முன்பு வாக்கு அளித்தபடி துளசியை மணக்கிருர். ''எனக்கு உகந்த பொருள் நீதான். நீ இல்லாமல் என்னை ஆராதித்தால் பலனே கிடையாது'' என்று துளசியை வாழ்த்துகிருர்.



இனிய தீபாவளியின்
இப்பரிசு, இதயம்
விரும்பிடும்
நற்பரிசு.
Agfa
CLICK-IV
ACHROMAT
ஆக்ஃபா காமிராவின் இந்தப்பரிசு உங்கள் முகத்தில் மலர்ச்சியை ஏற்படுத்தும். ரூ 99 மற்றும் அதற்கு மேலும் உள்ள விலைகளில் கிடைக்கின்றன ஆக்ஃகாமிரர்க்கள்,
உங்கள் பட்ஜெட்டிற்கேற்ற காமிரா. சர்வதேச தரத்திற்கேற்பதயாரிக்கப்பட்ட இக்காமிராக்கள், இந்தியா முழுவதிலும் 1300க்கும் மேற்பட்ட AGIL டீலர்களிடம் கிடைக்கின்றன.
க்ளிக் III
ஐஸோலி-II
புன்னகை அளிப்பீர். புன்னகைத்திடுவீர்
ஃபோட்டோகிராஃபியின் எல்லா வகையிலும் முதல்தரம்
Agfa
AGFA-GEVAERT INDIA LIMITED
Registered Office: Merchant Chamber, 41 New Marine Lines, Bombay 400 020 • Branches: Bombay New Delhi • Calcutta • Madras • ® Registered Trademarks of Agfa-Gevaert, Antwerp/Leverkusen.
SIMOES/AG/16 B/82 TM-R

STANDARD-20

It's a Van, It's a Micro Bus, It's a Micro Lorry.



STAMPRO

STANDARD MOTOR PRODUCTS OF INDIA LTD Madras

FDS SMP 3387 A

Distributors:

The Union Company (Motors) Private Limited,

118, Mount Road, Madras 600 002.

பாழும் உலகம்

—கோமளா வரதன்—

கோவில் பெரியதாகத்தான் இருந்தது. ரெட்டியார் அண்ணாந்து பார்த்தார். ஏழுடுக்குக் கோபுரம்; மேலடுக்கு இடிந்த நிலையிலும் பழங்காலப் பெருமையின் சின்னமாக விளங்கியது. அடேயப்பா! எத்தனை வேலைப்பாடமைந்த கதவுகள்! எப்படித்தான் திறந்து மூடினார்களோ, அந்தக் காலத்தில்! இன்று சிறிய திட்டிவாசல் மட்டும் கதவின்றித் திறந்தே கிடந்தது.

ரெட்டியாருக்குக் கலை சம்பந்தமான விஷயங்களிலெல்லாம் ஈடுபாடு உண்டு. நல்ல ரசிகர். எது செய்தாலும் அதில் ஒரு தனித்தன்மை இருக்கும். பார்ப்பவர்களைக் கவரும். இப்போதுகூட அப்படித்தான்; தம் சொந்தச் செலவில் ஒரு கட்டடம் கட்டிக்கொண்டிருந்தார். பொது உபயோகத்துக்காக யார் வேண்டுமானாலும் எந்த நல்ல காரியத்துக்காகவும் அதை முன்கூட்டியே அறிவித்து விட்டு உபயோகப்படுத்திக்கொள்ளலாம். முழுவதும் இலவசம். ஏழை, பணக்காரர், ஜாதி, மதம் என்ற எந்தக் கட்டுப்பாடும் கிடையாது. இப்படி எல்லாருக்கும் பயன்படக்கூடிய கட்டடம் சிறப்பாக அமையவேண்டும் என்றும் ஆசைப்பட்டார். துருவித் துருவி ஆராய்ந்து ஒவ்வொன்றுக்கும் மாதிரி சொன்னார். வாசல் வராந்தாவில் இரண்டு பெரிய தூண்களைப்பற்றிய பேச்சு வந்தபோது, இன்ஜினியர் ராமு சொன்னார்: ''எங்க ஊருக்குக் கொஞ்சம் தள்ளி ஒரு பழைய கோயில்லே தூண் இருக்கு. 'லேத்லே' கடைசல் பிடிச்ச மாதிரி இருக்கும். இந்தக் காலத்திலே அந்த மாதிரி தூணே கிடையாது. புதுமாதிரியாகவும் இருக்கும். எடுப்பாகவும் இருக்கும். நீங்க ஒரு நடை போய்ப் பார்த்துட்டு வாங்க.'' உடனே புறப்பட்டு வந்துவிட்டார் ரெட்டியார். கோபுரமே அபாரமாக இருந்தது.

''தேவா யாருன்னு தெரியல்லியே?'' தூக்கிவாரிப் போடத் திரும்பிப் பார்க்கிறார் ரெட்டியார்.

பட்டர் தோளில் துண்டும், துண்டில் முடிந்த சாவியும், திறந்த மார்பும் தள்ளாமையும் கையில் செம்புமாய் நிற்கிறார்.

''எனக்கு வெளியூர்.''

''உள்ளூர்னு சொல்லிக்கரதுக்கு இங்கே ஊரே இல்லியே ஸ்வாமி.'' அவர் சிரிக்கிறார். ''வெளியூர்னா?''

''நான் மெட்ராஸ். நம்ம ஆள் ஒருத்தர் இன்ஜினியர், இப்படி ஒரு கோவில் இருக்குன்னு சொன்னார். ஏதோ தூணைப் பத்திக்கூட விசேஷமாச் சொன்னார். பார்த்துட்டுப் போகலாம்னு..''

''தாயார் மண்டபத்துத் தூணைச் சொல்லியிருப்பார். வாங்கோ காட்றேன்.'' திறந்திருந்த திட்டி வாசல் வழியாகவே இருவரும் உள்ளே போகின்றனர். அகன்ற பிராகாரம். ''பெருமாளுக்கு ஒரு கை காட்டிட்டு வந்துடட்டுமா?'' என்கிறார் பட்டர்.

''பேஷா, நானும் வரேனே'' தொடர்கிறார் ரெட்டியார்.

நின்ற திருக்கோலம். சங்கு சக்கர கதாபாணியாய்க் காட்சியளிக்கிறார் பெருமாள்.

''தளியலறையெல்லாம் இழுத்து மூடி எத்தனையோ காலமாச்சு. சாதமோ கஞ்சியோ என்னாலானது, வீட்டிலேயே பண்ணி எடுத்துண்டு வந்துடறேன்'' என்று செம்பிலிருப்பதை அமுது படைக்கிறார். கர்ப்பூர ஒளியில் வௌவால்கள் படபடத்து வட்டமிடுகின்றன. திருமேனியைத் தழுவிய ஆடைகள் இற்று நைந்து போயிருப்பதையும் கரப்பான் பூச்சிகள் மேய்வதையும் கண்டு, ''ராமா, ராமா!'' என்கிறார் ரெட்டியார்.

''இந்தாங்கோ பிரசாதம். பிடியுங்கோ, போகலாம். சுத்திப் பார்த்துண்டு தாயார் சந்நிதிக்குப் போகலாம்'' என்று சந்நிதி கதவைப் பூட்டிக்கொண்டு கிளம்புகிறார் பட்டர். பிராகாரங்கள், உள் மண்டபம், வெளிமண்டபம் என்று ஒவ்வோர் இடமாகப் பார்த்துக்கொண்டே போகையில் அயர்ந்து போகிறார் ரெட்டியார். இன்ஜினியர் ராமு நிறையவே சொல்லியிருந்தும் அதெல்லாம் போதாது என்று தோன்றுகிறது. ஒவ்வொரு சிற்பமும் உயிருடன் பேசுகின்றது. கொள்ளை அழகு. தாயார் சந்நிதியிலும் கைகாட்டிவிட்டு வர, பட்டர் போனதும் எழில் கொஞ்சும் மண்டபத்திலுள்ள தூண்களை ஆராய்கிறார் ரெட்டியார். நல்ல கறுப்புக் கற்கள், மழ மழவென்று. அடேயப்பா!

''எனக்கு ஆச்சரியம் தாளலே இதே வழியா ஆயிரந்தரம் போயிருப்பேன். மெயின் ரோடிலேருந்து அரை மைல் தள்ளியிருக்குமா இந்தக் கோவில்? இப்படி ஒண்ணு இருக்குன்னு தெரியவே தெரியாது.''

''யாருக்குமே தெரியாது ஸ்வாமி. ஆடி மாசம் உச்சவத்தப்போ அக்கம்பக்கத்திலேர்ந்து நாலு ஜனங்க வரா. மத்தப்படி நான தான் நித்தியப்படி பக்தன். பரம்பரைக் கைங்கர்யம், விடமுடியல்லே. மூணு மைல் தள்ளிக் கிராமத்திலேருந்து நித்தியம் வந்து விளக்கேத்திட்டுப் போறேன். முப்பத்தஞ்சு வருஷமா நடக்கறது இது.''

கொஞ்சம் யோசிக்கிறார் ரெட்டியார். ஒன்று இல்லாத சிறிய கோயி

ளெல்லாம் எப்படி ஓஹோவென்று கொடி கட்டிப் பறக்கின்றன? பக்தர் கூட்டம் சாய்கிறது. பக்திக்குப் பக்தியும் கண்ணுக்கும் கலையுணர்வுக்கும் விருந்தும் தரக்கூடிய இந்த அற்புதமான கோயில் இப்படி யாரும் அறியாமல் பாழ்பட்டுக் கிடக்கிறதே!''

''வேளை வரணும் ஸ்வாமி'' என்கிறார் பட்டர்.

''கடவுளுக்குக்கூட நல்ல வேளை போதாத வேளையா? கூத்துதான் போங்க'' என்கிறார் ரெட்டியார்.

''நிஜமாத்தான் சொல்றேன். இது விளம்பர யுகம். எல்லாத்துக்கும் டாம் டாம்னு தம்பட்டம் அடிக்கணும். நான் சின்னவனா இருக்கச்சே எங்க ஊர்லே பக்தாள் குழு இருந்தது. உற்சவத்தப்போ பாகவதத்தைப் பாடிண்டே நடிப்பா. பக்தி சிரத்தையும் அந்தப் பாட்டும் மனசைத் தொடும். பாக்க ஆள் கிடையாது. கொஞ்ச நாள் முன்னாடி டூரிங் டாக்கீஸ் கொண்டு வந்து காட்டினா. மாட்டு வண்டிலே டாம் டாம். கும்பல் சாஞ்சுது பாருங்கோ; திருவிழாவுக்குக் கூடக் கிடையாது. எல்லாத்திலேயும் அப்படித்தான். ஒழுங்கா ரெண்டு கோடு இழுக்கறானோ இல்லியோ ஓவியர்னு அடியிலே கையெழுத்துப் பெரிசா போடவேண்டியிருக்கு. வெளிநாட்டு வழக்கம் வேரோடறது.''

'பார்த்தால் பத்தாம் பசலி போல இருக்கிறாரே தவிர, இவர் பலே ஆளாயிருப்பார் போலிருக்கிறதே' என்று யோசிக்கிறார் ரெட்டியார்.

ஆயிரக்கால் மண்டபத்துக்கு அழைத்துக் கொண்டு வருகிறார். ''பார்த்தீரா, பார்த்தீரா?'' என்று ஒவ்வொன்றாய்க் காட்டுகிறார்.

''அற்புதம்னு தான் சொன்னேனே'' என்கிறார் ரெட்டியார்.

''அதில்லை ஸ்வாமி, இத்தனை அற்புதமாச் செதுக்கினவன், ஒத்தன் இல்லே, பலபேர் செதுக்கியிருக்கணும். எவனாவது ஒருத்தன் அடியிலே தன் பேரைப் போட்டிருக்கானா? இந்தக் கோவில்லேன்னு இல்லே. நம்ம தேசத்திலே எத்தனையோ ஆயிரக்கணக்கான கோவில்லேயும் இப்படித்தான். மனம் வாக்கு காயம் எல்லாம் ஈசுவரார்ப்பணந்தான்.

''எதுக்குச் சொல்ல வந்தேன்னா இந்தப் பெருமாளும் தன்னை விளம்பரம் படுத்திக்கலே, இவரை விளம்பரம் படுத்தறவாளும் இல்லே. அதான் இப்படி இந்தக் கோவில் பாழடைஞ்சிண்டிருக்கு. பட்டணத்திலேயோ பட்டணத்துக்குப் பக்கத்திலேயோ இருந்தா மவுசே தனி. பொதுவாக் கிராமங்களெல்லாமே கேப்பாரில்லாமப் போயிட்டுது. மேலுக்கு வரணும்னா, பட்டணத்திலே இருக்கணும், வெள்ளைக்காரன் பாஷை தெரியணும், அந்தப் படிப்பு படிக்கணும். அப்புறம்? அவன் கலாசாரம் வராமப்போயிடுமா? நம்ம தத்துவம், வாழ்க்கை நெறி எல்லாமே செல்லரிச்சுப் போயிடுத்து, வரட்டுமா ஸ்வாமி, மூணு மைல் போகணும்'' என்று கிளம்பி விடுகிறார்.

அவர் போனதுந்தான், 'அடாடா காரில் கொண்டு போய் விட்டிருக்கலாமே, கிழவர் மூணு மைல் நடப்பதை தவித்திருக்கலாமே' என்று தோன்றுகிறது ரெட்டியாருக்கு. 'உபசாரத்துக்குக்கூடக் கேட்கவில்லை. அப்புறம் நம்ம வாழ்க்கை நெறிகளே போயிடுத்துன்னு அவர் சொல்றதிலே என்ன தப்பு என்று நினைத்துக்கொண்டே சென்னை திரும்புகிறார் ரெட்டியார்.

இன்ஜினியர் ராமு வருகிறார். ''என்ன செலவானாலும் பரவாயில்லே, அந்தத் தூண் மாதிரிதான் அமையணும். ஆட்களைக் கூட்டிட்டுப் போய் ஒரு நடை காமிச்சுட்டு வந்துடுங்க. கிரானைட்டோ, வேறே கல்லோ, மரமோ, எதிலே வருமோ அதுக்கு ஏற்பாடு பண்ணிடுங்க'' என்று உத்தரவிடுகிறார்.

''அப்புறம் ஸார், உங்க பெயர் பொறிக்கறதுக்கு இந்தக் கல்லுக்கு ஆர்டர் பண்ணியிருக்கேன். நீங்களும் பார்த்திடுங்க'' என்று மாதிரி கல் துண்டைக் காட்டினார் ராமு.

கையில் வாங்கிப் பார்க்கவில்லை. திடீரென்று ரெட்டியாருக்குத் தோன்றுகிறது. அவர் மட்டும் சாசுவதமா என்ன? அவருடைய மனசுக்கு எடுத்துக்காட்டாக அந்தக் கட்டடம் திகழ வேண்டுமே தவிர, அவர் பெயரைப் பறைசாற்றிக் கொண்டல்ல. ஏதோ ஒரு பத்து இருபது வருடத்துக்கு வேண்டுமானால் ரெட்டியார் கட்டியதைத் தெரிந்தவர்கள் சொல்லிக் கொண்டிருப்பார்கள். அப்புறம் அது யாரோ ஒரு தர்மவான் கட்டியதாகத்தான் இருக்கும். பெயர் தெரியாமல் வாழ்த்துவார்கள். அப்படிச் செய்துவிட்டால் என்ன?

''என் பெயர் வேண்டாம்'' என்று தலையசைக்கிறார் ரெட்டியார். ''அந்த கோவில் சுவாமி பேரு என்னன்னு கேட்டுட்டு வந்து அந்தப் பவனம்னு போடுங்க, போதும். என் பேரே எதிலேயும் வரக்கூடாது.''

திகைத்துப் போகிறார் ராமு.

''என்ன ஸார் இது. சத்திரத்திலேயோ, கோவில்லேயோ ஒரு கல்போடப் பணம் கொடுத்தவன்லாம் கொட்டையாத் தன் பேரைக் கல்லிலே செதுக்கி விளம்பரப்படுத்திக்கறான். நீங்க என்னடான்னா..''

''வலக் கை கொடுக்கறது இடக் கைக்குத் தெரியக் கூடாதுன்னு சொல்வாங்க, தெரியுமில்லே? அப்படின்னு வெச்சுக்குங்களேன்'' என்று அடித்துச் சொல்லி விடுகிறார்.

இது தெரிந்தால் அந்த பட்டர் என்ன நினைப்பார்? 'நம்ம வாழ்க்கைத் தத்துவம் முழுக்க செல்லரிச்சுப் போயிடல்லே, என்னைப் போல எங்கோயே ஒருத்தன் கடைப்பிடிக்கிறான்னு ஒப்புக்கு வாரா? கடைப்பிடிக்க வெச்சவரே அவர்தானே?' என்று மனசுக்குள் நினைத்துக் கொள்கிறார் ரெட்டியார்.

கோவிலில் உறையும் பெருமாளின் பெயரால் நீலமேக பவனமாக அமைகிறது கட்டிடம். சிறந்த வரவேற்பைப் பெறுகிறது. ''யார் கட்டியது?' என்று பலர் கேட்பதை அறிந்து விம்மிப் போகிறார் ரெட்டியார்.

அப்படியும் விஷயம் தெரிந்துவிட்ட சிலர் அவரை, அவர் வள்ளன்மையை, விளம்பரப்படுத்திக் கொள்ளாத தன்மையை வானளவாப் புகழ்ந்தபோது, பதில் பேசாமல் புன்னகை செய்தாலும், கிறங்கித்தான் போகிறார் ரெட்டியார். அந்தக் கிறக்கந்தான் அவரை நீலமேக பவனத்துக்கு அழைத்துச் செல்கிறது ஒரு நாள்.

ஏதோ சமயக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நல்ல கூட்டம். ஒதுக்குப்புறமாய் யாரும் கவனிக்காதபடி அமர்ந்து கொள்கிறார்.

''இது நம்ம வி.ஜி. ஆர். கட்டினதுதானே?''

பக்கவாட்டு நடையில் குரல் கேட்க, காதைத் தீட்டிக் கொள்கிறார்.

''ம்.''

''பின்னே ஏன் ஓர் இடத்திலேகூட அவர் பேரே போடல்லே? கோயில் விளக்குக்குப் பல்ப் போட்டவன் தன் பேரை எழுதிக்காமப் போடறதில்லேயே இந்தக் காலத்துலே?''

''அதென்ன விவகாரமோ? ஏதானா கறுப்புப்பணத் தொல்லையா இருக்கலாம். இதிலே கொட்டி மெழுகி வெள்ளையாக்கியிருக்கலாம். நீங்க வாங்க முன்னாலே போய் உட்காரலாம்.''

''அட பாவிகளா!'' அதிர்ந்து போகிறார் ரெட்டியார். மெள்ள ஓரக் கண்ணால் பார்க்கிறார், யாரென்று. ஷாக் அடித்தாற் போல் இருக்கிறது. முன்பு நேரில் அவரை ஓஹோவென்று புகழ்ந்தவர்கள்தாம்.

''பொறாமைக்காரப் பயலுக'' என்று தம்மை ஆசுவாசப்படுத்திக் கொள்கிறார்.

கூட்டம் முடிவடைகிறது. படிக்கட்டின் கீழே மறைவாகப் போய் நின்று கொள்கிறார், மேலே பேசிக்கொண்டே போவதையெல்லாம் கேட்க வசதியாக. ''இந்த ஊரிலே இவ்வளவு வசதியா ஒரு இடம் இருக்கிறதே தெரியாதே! பிரமாதமாக் கட்டியிருக்கான்.''

வெளியூர்க்காரர்கள் போலும்.

''ம், நான் கூடக் கட்டினதுன்னு யார்ன்னு விசாரிச்சேன், சரியாப் பதிலே கிடைக்கல்லே. இனாமா வேறே கொடுக்கறாங்களாமே!''

''என்ன பாவத்துக்குக் கழுவிடையோ? நமக்கெதுக்கு அந்த விசாரம்? நம்ம காரியம் ஆச்சா? சரி, அதோட விடு.''

இன்னும் சிலர்.

''ஏன்யா, கொள்ளை கிள்ளை அடிச்சிருப்பானா? சும்மா இப்படி வாரி விட்டுக் கட்டியிருக்கானே! ஆனா மனுசன் அட்ரஸே காணோமே!''

அட பெருமாளே!

தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்கிறார் ரெட்டியார். ❋

ஆர்க்கிடெக்ட்ஸ்

இன்டீரியர் டெக்கரேட்டர்ஸ்

ஃபைவ்-ஸ்டார் ஓட்டல்கள்

இல்லத்தரசிகள்

இவர்கள் அனைவருக்குமிடையே நிலவும் ஒற்றுமையான கருத்து...

சானிட்டரிவேர் என்றால் பாரிவேர் மாத்திரமே

பல்லாண்டுகளாக, ஒரே சீராக உயர்தரமாக உருவாகிவரும் பாரிவேர் சானிட்டரி படைப்புகள், பாரிவேரின் பெயரை பிரபலம் அடையச் செய்துவிட்டன. எல்லா பாரிவேர் தயாரிப்புகளும் ஐ.எஸ்.ஐ. முத்திரை பதிக்கப்பெற்றவை. தூய்மையான வெண்மையாகவும், மனங்கவரும் மற்ற வண்ணங்களிலும் உருவாகின்றன.

Parryware VITREOUS

ஈ.ஐ.டி.-பாரி (இந்தியா) லிட்.
செராமிக்ஸ் பிரிவு
'டேர் ஹவுஸ்', சென்னை 600 001

எங்கள் தயாரிப்புகளின் தரம் ஒன்றே—உயர்தரம்

EID PW 3700 TAM

இதோ! "சாக்லேட் சுவையோ, சாக்லேட் மிட்டாயோ" என மலைக்கவைக்கும்...
நியூட்ரின் சாக்லேட்
Eclairs
nutrine Eclairs
பால் மிக்கது, வெண்ணை சொக்குது,
சாக்லேட் சுரங்கமாய்,
மெத்தென மயக்குது.
மிருதுவான, மனோகரமான சாக்லேட் தீஞ்சுவை. இனிமையிலும் புதுமை. ரசனையிலும் ஓர் புதுமை. நியூட்ரின் சாக்லேட் எக்லேர்ஸ்
nutrine
நியூட்ரின் கன்பெக்ஷனிரி கம்பெனி பிரைவேட் லிமிடெட்
சித்தூர் 517 002 (ஆ.பி.)
CAS/NC/2/82 I-TAM

குரு பலன்

கோமதி ஸ்வாமிநாதன்

காட்சி 1

[சதாசிவத்தின் வீட்டு வராந்தாவில் சதாசிவம் பேப்பர் படித்துக்கொண்டிருக்கிருர், குருநாதன் வருகிருர்.]

சதாசிவம்: வாங்க! உட்காருங்க! யாரைப் பார்க்கணும்? என்ன வேணும்?

குருநாதன்: உங்களைத்தான் பார்க்க வந்தேன்; உங்க பெயர்தானே சதாசிவம்?

[உட்காருகிருர்;]

சதா: என் பெயரே உங்களுக்கு நிச்சயமாத் தெரியலே! என்னைத்தான் பார்க்க வந்ததா ஓங்கியடிச்சுச் சொல்லுகிறீர்.

குரு: என்ன செய்வது? என் தொழிலில் அப்படித் தினசரி பல பெயர்களைக் காதில் போட்டுக் கொள்ள வேண்டியிருக்கு. நேரில் பார்க்கும் போது குழப்பம் வந்து விடக்கூடாதே என்று கேட்டும் ஊர்ஜிதப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கு.

சதா: நீங்க நிச்சயமாப் போஸ்ட்மேன் இல்லை. உம்முடைய வயதும் தோற்றமும் அந்த வேலைக்கு ஒத்து வரவில்லை.

குரு: நல்ல வேளை! உங்க யூனிபாரம் எங்கேன்னு கேக்காம விட்டீர்களே! நான் ஒரு சமூக சேவகன்னு வைத்துக் கொள்ளுங்களேன்! பெயர் குருநாதன்;

சதா: நோட்டுப் புஸ்தகம், ரசிது புஸ்தகம் எதையும் காண்பித்து என் ஆத்திரத்தைக் கிளப்பக்கூடாது. குடிக்க ஒரு டம்ளர் தண்ணீர் குடுக்கச் சொல்கிறேன்; அதுதான் என்னுல் செய்யக் கூடிய உதவி;

குரு: அடடா! அவசரப்படுகிறீர்களே! நான் ஒரு கல்யாணத் தரகன். உங்கள் பெண்ணுக்கு வரன் தேடிக் கொண்டிருப்பதாக......

சதா: ஐயா குருநாதன்! போகிறீர்களா? எனக்கு வேலை இருக்கு; எனக்குக் கல்யாண வயதில் பெண் இருக்கிருள். ஆனுல் எனக்கு ஒரு தரகர் மூலம் மாப்பிள்ளை தேடும் நோக்கம இல்லை;

குரு: இந்தக் குருநாதன் ஒரு வீட்டு வாசற்படி ஏறினுலே அங்கே குருபலன் வந்துவிட்டது என்று சொல்வார்கள்; நான் தற்பெருமைக்காகச் சொல்லவில்லை.

சதா: நீர் ஒரு டம்ளர் காபியாவது குடிக்காமல் கிளம்பமாட்டீர் போலத் தோன்றுகிறது (உட்பக்கம் பார்த்து)... சந்திரா, காபி கொண்டு வாம்மா; ஓய்! குருநாதன்! இப்போதைக்கு உமக்குக் காபி பலன் கிடைத்தது என்று ஆகி விடும்! சரிதானய்யா! எல்லாப் பையன்களையும், சகட்டு மேனிக்கு இந்திரன், சந்திரன், மன்மதன்னு வர்ணித்து விட்டு நீர் போய் விடுவீர்! கடைசியிலே பெண்ணைப் பெற்றவன் மாட்டிக்கொண்டு விழிக்க வேண்டியிருக்கும்.

[சந்திரா காபி கொண்டு வந்து வைக்கிருள்.]

குரு: இந்தக் குழந்தைதான் உங்க பொண்ணுக்கும்? மகாலட்சுமி மாதிரி இருக்கா; நிச்சயமா நல்ல மாப்பிள்ளை அமைவான்; [சந்திரா உள்ளே போகிருள்]

சதா: முதலில் இந்தக் காபியைக் குடித்து முடியுங்கோ? எல்லார் வீட்டுப் பொண்களையும் பார்த்து இப்படி, 'குழந்தை மகாலட்சுமி மாதிரி இருக்கா! நிச்சயமாக நல்ல இடம் அமையும்' என்று சொல்லி எப்படியோ பிழைப்பை நடத்துறீர்.

குரு: (காபியைக் குடித்துவிட்டு) ஸ்வாமி! காபி பரவாயில்லை' என்னவோ சொன்னீர்களே!

சதா: முப்பது வயதானுலும் கல்யாணமாகாத பெண்கள் உம்முடைய நோக்கில் குழந்தைதானே? அவலட்சணமாக இருந்தாலும், உம்முடைய ஒரே அடைமொழி மகாலட்சுமிதானுக்கும்?

குரு: ஸ்வாமி! உண்மையைச் சொன்னு உதை தாராளமாக் கிடைக்கும். பனைமரம் மாதிரி இருக்கிற பொண்ணுக்கு, எந்தத் தென்னைமரம் வந்து அமையுமோ என்று சொல்லிவிட்டு, கன்னமோ முதுகோ வீங்காமல் வெளியே வர முடியுமா? ஆனு இந்த இடத்திலே, உங்களிடம் சொன்ன வார்த்தைகளில் நான் பொய்யைக் கலக்கவில்லை. ஆத்மார்த்தமாச் சொன்னேன்.

சதா: பிழைக்கத் தெரிந்த மனிதர் நீர்! கிளம்புகிறீரா?

குரு: பொதுவா எல்லாரும் என்னைத் தேடிண்டு வருவா. உங்கள் அதிருஷ்டம் நான் உங்களைப் பார்க்க வந்திருக்கேன்.

சதா: உம்ம அதிருஷ்டம் நான் இன்னும் பொறுமையை இழக்கவில்லை.

குரு: என்னுடைய தொழிலின் அடிப்படையே பொறுமைதான்; நான் உங்களுக்காக, ஹெலிகாப்டர் மாதிரி நேராகவே விஷயத்தில் இறங்குகிறேன். உங்களுக்கு உதவியா ஐந்து விலாசங்கள், கல்யாணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஐந்து மணியான பையன்களின் அட்ரஸ்

கொடுக்கறேன். நீங்க என்ன செய்யறீங்கன்னு....

சதா : அகர வரிசையிலே அடுக்கி வைக்கணுமா?

குரு : எந்த வரிசையிலும் நீங்க அதை வைத்துக் கொள்ளலாம். எனக்கு அம்பது ரூபாய் குடுத்துட்டாப் போதும்.

சதா : ஏனையா, நீர் இந்தக் கல்யாணத் தரகுத் தொழிலுக்கு வருவதற்கு முன், லாட்டரிச் சீட்டு விற்றுக்கொண்டிருந்தீரோ? தேர்தல் கால வாக்காளர் ஜாபிதாக்களிலிருந்து வயசைப் பார்த்து அட்ரஸ்களைப் பொறுக்கிக் கொடுத்து நீர் ஏமாத்தலாம் இல்லையா?

குரு : வாக்காளர் ஜாபிதாக்களிலே அவரவர்கள் ஜாதகங்களையும் அச்சடிப்பதில்லையே! நான் தான் விலாசத்தோட ஜாதகங்களையும் கொடுப்பேனே!

சதா : அப்புறம்?

குரு : நீங்க அந்த இடங்களை நேரடியாக ஆராய்ந்து பார்த்து எந்த இடம் திருப்தியா இருக்கோ அதைத் தேர்ந்தெடுக்கலாம். உங்கள் பேச்சு வார்த்தைகளில் நான் குறுக்கிட மாட்டேன்.

சதா : எனக்குத் திருப்தியைக் கொடுத்தால் மட்டும் போதுமா? அந்த இடத்துக்கு நான் செய்வது திருப்தி ஏற்படுத்தவேண்டாமா?

குரு : பேரம் பேச வேண்டியது உங்க பொறுப்பு. அந்தக் கட்டத்திலே நான் தலையைக் காண்பிக்க மாட்டேன்.

சதா : அந்த நேரத்திலே நீர் வேறு யார் தலையிலாவது இன்னொரு செட்டைக் கட்டிக் கொண்டிருப்பீர். அது உம் பிழைப்பு! ஒன்று சொல்றேன் கேட்கிறீரா?

குரு : சொல்லுங்கோ.

சதா : வந்தது வந்தீர். அந்த ஐந்து ஜாதங்களைக் குடுங்கள். நான் அவற்றை ஆராய்ச்சி செய்கிறேன். உமக்கு ஐந்து ரூபாய் தான் குடுப்பேன்.

குரு : இது அநியாய பேரம். என் வயித்தில் அடிக்கிறீர்.

சதா: முழுவதையும் கேளுமையா! ஒரு மாசம் கழிச்சு ஒரு நாள் இங்கே வாரும். உம்முடைய லிஸ்டிலிருந்து எந்தப் பையனையாவது நிச்சயப்படுத்தியிருந்தா, அந்த ஒரு ஜாதகத்துக்கான மிச்சம் ஒன்பது ரூபாயையும் வாங்கிக்கொள்ளலாம்.

குரு : கணக்கைத் துல்லியமாகப் போடுகிறீர்! அப்போதும் ஞாபகமாக அந்த அட்வான்ஸ் ஒரு ரூபாயைக் கழிக்கணுமா?

சதா : கணக்கு என்று வந்தால் கரெக்டா இருக்கணும்.

குரு : சரி! ஐந்து ரூபாய் எடுங்க.

சதா : முகவில் உம்ம பட்டியலைக் காண்பியும். வயசு இருபத்திரண்டுக்குள் இருக்க வேணும். பையன் பட்டப்படிப்புப் படித்திருக்க வேணும். ஏனென்றால் என் பெண் வயசு இருபத்திரண்டு. அவள் பட்டதாரி.

குரு : இதையெல்லாம் தெரிந்து கொள்ளாமலா நான் இங்கே வருவேன்? மறுபடியும் எப்போது வரலாம்?

சதா: எதற்கும் ரெண்டு மாசம் கழித்து வாருங்கள். ஒன்பது ரூபாய் நிச்சயம் கிடைக்கும் என்று எதிர்பார்க்க வேண்டாம். இந்த ஐந்து இடங்களுக்குள்ளேயே, என் வருங்கால மாப்பிள்ளை அடைபட்டிருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. ஐந்து ரூபாயை எடுத்துக்கொண்டு ஆளை விடும்,

(ஐந்து ரூபாயைக் கொடுக்கிறார்.)

குரு : நான் புறப்படறேன். ஒரு விஷயம் சொல்ல மறந்துவிட்டேன். இந்த ஐந்து இடங்களுமே எனக்குத் தெரிந்த நிறைய எதிர்பார்க்கிற இடங்கள். நீங்க எட்டு ரூபாய் ஒன்பது ரூபாய் என்று பேரம் பண்ண முடியாது.

(போகிறார்.)

காட்சி—2

[அடையாற்றிலுள்ள அனந்தராமன் வீடு. காலை வேளை. வராந்தாவில் ஒரு சிறுவன் படித்துக்கொண்டிருக்கிறான். சதாசிவம் வருகிறார்.]

சதா : தம்பி! இது மிஸ்டர் அனந்தராமன் வீடுதானே?

சிறுவன் : ஆமா. அப்பா ஊரிலே இல்லையே! அண்ணா தியாகு தான் இருக்கான். கூப்பிடவா?

சதாசிவம் : ஏ தியாகராஜன், கரெக்ட்! கொஞ்சம் கூப்பிடேன்.

சிறு : ஒரு நிமிஷம் (உள்ளே பார்த்து) மன்னி! மன்னி! அண்ணாவை யாரோ தேடிண்டு வந்திருக்கிறார்னு சொல்லு.

[ஒரு நாற்காலியை இழுத்துப் போடுகிறான்.]

சதா : உனக்கு இன்னொரு அண்ணன் இருக்காரா?

சிறு : இல்லையே! தியாகு ஒரு அண்ணாதான். நீங்க அவன் கல்யாணத்துக்கு வரலியா? அப்பா எல்லாச் சிநேகிதாளையும் கூப்பிட்டிருந்தாரே! இதோ தியாகுவே வந்துட்டான்.

தியாகு : (சிறுவனைப் பார்த்து) டேய் சீனு! போய்க் கொஞ்சம் தொட்டிலை ஆட்டுடா. குழந்தை அழறது. மன்னி சமையல் கட்டிலே இருக்கா. போ! (சதாசிவத்தைப் பார்த்து) வாங்க ஸார்! யாரு வேணும்?

சதா : (சில விநாடிகள் யோசித்து) இது பதினேழாம் நம்பர் வீடுதானே? இதிலே மிஸ்டர் அனந்தராமன்னு....?

தியா : சரிதான்! அவர் என் தகப்பனார். ஊரில் இல்லை.

சதா : பரவாயில்லை. நான் அவர் நண்பர் சதாசிவம். இன்னொரு சமயம் வருகிறேன்.

தியாகு : மிஸ்டர் சதாசிவம், எனக்கும் நினைவு வருகிறது. அப்பா சொல்லிக்கொண்டிருந்தார்.

சதா : என்ன? அனந்தராமன் என்னைப் பற்றிச் சொல்லிண்டிருந்தாரா?

தியாகு : ஆமா! அடிக்கடி சொல்லிண்டிருந்தார். நான் சின்னவன். அதையெல்லாம் திருப்பிச் சொல்றது மரியாதை இல்லை. நீங்க அந்த ரெண்டாயிரம் ரூபாயைத் திருப்பிக் குடுக்க என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்?

சதா: அட ராமசந்திரா! மிஸ்டர் தியாகராஜன்! இது ஆள் மாறாட்ட விவகாரம். நான் ரெண்டாயிர ரூபாய் பாக்கி சதாசிவம் இல்லே! வேற சதாசிவம்.

தியாகு : எங்க அப்பாவுக்கு ஒரே சதாசிவம், ரெண்டாயிர ரூபாய் கடன்கார சதாசிவந்தான்.

சதா : நான் ரெண்டு வருஷம் லேட்டாக இந்த அட்ரசைத் தேடி வந்த அப்பாவி சதாசிவம். உங்க அப்பா அனந்தராமன் கறுப்பா சிவப்பா என்று கூட எனக்குத் தெரியாது. இந்த ஜாதகத்தை வைத்துக்கொண்டு உங்க அப்பாவைத் தேடி வந்தேன், இங்கே அப்பாவா நீங்க நிற்கிறீர். அதனால்தான் நான் உபசாரத்துக்கு, உங்க அப்பாவின் நண்பர் என்றேன்.

தியாகு: என் பொண்ணுக்கு இன்னும் ஆறு மாசத்தில் பிறந்த நாள் வரும். அவசியம் வாருங்கள்.

(சதாசிவம் போகிறார்.)

கட்சி—3.

[சில நாள் கழிகிறது. சதாசிவத்தின் வீடு. அவர் கூடத்தில் குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருக்கிறார். அவர் மனைவி சகுந்தலா உள்ளிருந்து வருகிறாள்.]

சகுந்தலா : ஒத்தையடிப் பாதையில நடக்கிற மாதிரி எதுக்கு இப்படியும் அப்படியும் நடந்து கொண்டிருக்கிறீர்கள்?

சதா : இப்போ என் முன்னாலே அந்தக் குருநாதன் வந்து நின்னா அவனை உருத்தெரியாமச் சட்னியாக்கி விடுவேன்; பாவிப் பயல்!

சகுந் : கோபத்திலேயும் ஒவி நயத்தோடு வார்த்தைகள் வருகிறதே! ஏதோ உங்களுக்கு அலைய வேண்டிய நேரம். விட்டுத் தள்ளுங்கள்.

சதா : காலாவதியான ஜாதகங்களையெல்லாம் என் தலையில் கட்டி விட்டு ஐந்து ரூபாயையும் அடித்துக் கொண்டு போயிட்டான். (கோபத்துடன்) எந்தக் காலத்திலோ, இவனிடம் அகப்பட்ட ஜாதகங்களை என்னிடம் குடுத்து ஏமாத்தி விட்டான். ரெண்டு இடத்திலே பையன்கள், காதல் கல்யாணம் பண்ணிண்டு ஜாலியா வீட்டை விட்டுப் போயிட்டான்களாம். ரெண்டு இடத்திலே முறையா அப்பா அம்மா அடிச்ச கொள்ளைக்கு உடந்தையா இருந்து கல்யாணம் பண்ணிண்டிருக்கிறார்கள். அதில ஒருத்தன் தன் குழந்தை பிறந்த நாளுக்கு என்னை அழைக்கிறான்.

சகுந் : நாலாச்சு! அஞ்சாவது இடம்?

சதா : அங்கேதான் பெரிய கேலிக் கூத்து. அந்தப் பையன் ஒரு வருஷமா எங்கேயோ காணாமப் போய்விட்டானும், தேடிப்

பிடிச்சுக் கல்யாணத்தையும் செஞ்சு வைத்தால் அந்தப் பையனோட அப்பனுக்கு எந்தவித ஆட்சேபணையும் இருக்காதாம். எப்படி இருக்கு, கதை?

சகுந் : அட்வான்ஸா ஏதாவது பணத்தைக் குடுத்துட்டு அப்புறம் தேடுங்கள் என்று சொல்லாமல் இருந்தார்களே!

சதா : நான் இதற்காகத்தான் இந்தக் கல்யாணத் தரகர்கள் சகவாசமே வேண்டாம் என்று ஒதுக்கினேன். சிநேகிதர்கள் மூலமாகக் கிடைக்கிறதைப் பார்த்து முடிவு எடுக்கலாம் என்ற என் கொள்கையை உடைக்க இந்தக் குருநாதன் வந்து புகுந்தான்.

சகுந் : அஞ்சு புதிய குடும்பங்களின் அறிமுகம் கிடைச்ச லாபம். விட்டுத் தள்ளுங்க!

சதா : அப்புறம் அந்தக் குருநாதன் இந்தப் பக்கம் வரவே இல்லையே! ம்! அவன் ஏன் வருன்? கொள்ளைக்காரன்.

சகுந் : சும்மா அந்த ஆள் மண்டையைப் போட்டு உருட்டாதீங்க.

சதா : குரு குருன்னு அவன் நினைவு எப்போதும் இருக்கும். அது சரி! சந்திரா கிட்டேயிருந்து கடிதம் ஏதும் வந்ததா? டிரெயினிங் ரெண்டு மாதமா, மூணு மாசமா?

சகுந் : நல்ல வேளை, ஞாபகப் படுத்தினீர்கள். லெட்டர் வந்தது. பத்து வாரம்னு சொன்ன நினைவு. அவள் போய் ரெண்டு மாசம் ஆய்விட்டதே!

சதா : உடம்பு கிடம்பு ஒண்ணுமில்லையே!

சகு : இல்லை! உற்சாகமாகவே எழுதியிருக்கா. எங்க அண்ணு கூட அந்தக் கடுதாசியிலேயே ரெண்டு வரி பின்னுல் எழுதியிருக்கார். சந்திரா கல்யாணத்திலே அவரும் சிரத்தை எடுத்துக்கொண்டிருக்கிருராம்!

சதா : மூணு வருஷமா உங்க அண்ணன் இந்தப் பல்லவியை விடாமப் பாடருன். எல்லாம் இந்தச் சதாசிவம் அலைந்தால் தான் உண்டு. மத்தவர்கள் கல்யாணம்னு அழைப்புப் போட்டால் சாப்பிட வருவார்கள்.

சகு : குருநாதனைக் கொஞ்சம் தள்ளிப் போகச் சொல்லிட்டு எங்க அண்ணுவைப் பிடிச்சுண்டாச்சா? உங்களுக்கு இப்போ காபி வேண்டாமே?

சதா : நீ கேட்கிற தினுசிலிருந்து எனக்குக் காபி குடிக்கிற ஆசையே போயிடுத்து, வேண்டாம்.

(சகுந்தலா உள்ளே போகிருள்.)

காட்சி—4

[சில நாட்கள் கழித்து, சதாசிவத்தின் வீட்டுக்குக் குருநாதன் வருகிறுர்.]

குரு : நமஸ்காரம் ஸ்வாமி! சௌக்கியமா?

சதா : அடேடே! குருநாதனு? வாங்கோ! உட்காருங்கோ.

(குருநாதன் உட்காருகிறார்.]

குரு : நான் சொன்ன இடங்களிலே ஏதாவது அமைஞ்சதா?

சதா : ஓஹோஹோ! நீங்க அந்த ஒன்பது ரூபாய் அகப்படுமா என்று நோட்டம் விட வந்திருக்கிறீர்; அப்படித்தானே?

குரு : அப்பவே வந்திருக்க வேண்ணும் முடியலே!

சதா : உமக்கு அதிருஷ்டம் இல்லே!

குரு : நிஜமாத்தான் சொல்கிறீர்களா?

சதா : நிஜமாச் சொல்லப் போனு நான் உம்மிடமிருந்து நாற்பத்தெட்டு ரூபாய் முப்பத்தைந்து பைசா வசூல் செய்ய வேண்ணும்; ஆனுல் நான் அதை வஜா செய்துவிட்டேன்.

குரு : அதென்ன கணக்கு?

சதா : நீர் கொடுத்த வேஸ்ட் பேப்பர் ஜாதகக்காரங்க வீடுகளையெல்லாம் தேடிப் போய் அலைஞ்சதற்கான, பஸ், ஆட்டோரிக்ஷா, காபிச் செலவு.

குரு : அன்றைக்கு நான் இங்கே வந்தபோது நீங்க குடுத்த காபியைக் கணக்கில் சேர்த்துக் கொள்ளவில்லையே!

சதா : உமக்குக் கிண்டலா இருக்கா? அந்த அஞ்சு ஜாதகங்களையும் அப்போதே கிழிச்சுக் காத்தில் பறக்க விட்டு விட்டேன். உம்மிடம் திருப்பிக் கொடுக்கலாம்

என்றே முதலில் நெனைச்சேன் ஆனல் மறுபடியும் என்னைப் போல ஏமாந்தவன், உம்மிடம் சிக்கி அலையக்கூடாது பாரும்!

குரு : என் தொழில்லே இது ஒரு முதல் அநுபவம். நான் வருகிறேன்.

சதா : ஒரு நிமிஷம்! (உள்ளே பார்த்து) சகுந்தலா, அந்தத் தட்டில் வெத்தலை பாக்கு வைச்சு எடுத்து வா! அந்த அலமாரியிலேயே ஒரு சாத்துக்குடி கிடந்தது. அது வாடாமலிருந்தா அதையும் வச்சு எடுத்து வா. (குருநாதனைப் பார்த்து) ஐயா, குருநாதன், நேற்று என் பொண்ணுக்குக் கல்யாணம் நடந்து விட்டது! தாம்பூலம் வாங்கிக் கொண்டுபோம்.

[சகுந்தலா வெற்றிலைத் தட்டை வைத்து விட்டு நிற்கிருள்.]

குரு: (திகைப்புடன்) நேற்றுக் கல்யாணமா? இங்கே வாழை மரம், தோரணம் ஒன்றும் காண வில்லையே! சத்திரத்திலே நடந்ததா?

சதா: அவள் கல்யாணம் டில்லியிலே நடந்தது. எங்களாலே கூடப் போக முடியலே. என் அண்ணு நடத்தி வச்சார். எல்லாரும் இன்று சாயங்காலம் பிளேனிலே இங்கே வருகிருர்கள்.

குரு: இது என்ன ஸ்வாமி அதிசயமாக இருக்கு? அப்பா அம்மா கூடப் போகாமல், அவர்கள் சம்மதத்தோடு இப்படி ஒரு கல்யாணம் நடக்குமா?

சதா: காதல் கல்யாணம் ஐயா. பாங்கிலே வேலை பார்க்கும் என் பொண் ஏதோ பத்து வாரப் பயிற்சிக்காக டில்லிக்குப் போயிருந்தாள். அங்கே பயிற்சி அளிக்க வந்த இன்னொரு ஆபீஸர் பையன் மேலே காதல். குருநாதன், இந்தக் கல்யாணத்திலே இன்னொரு விசேஷம் தெரியுமோ? பையனுடைய அப்பா அம்மாவுக்கு இந்தக் கல்யாணம் நடந்த விஷயம் இதுவரை தெரியாது. அந்த மட்டில எங்கள் பொண் தேவலை.

குரு: இந்தக் காலத்துப் பசங்களை நம்பி ஒண்ணும் செய்ய முடியலே.

சதா: உமக்கு எல்லாம் பொண்கள் போலிருக்கு.

குரு: பையன் இருக்கான். ஆனல் அவன் நான் கிழித்த கோட்டைத் தாண்ட மாட்டான்.

சதா : நீர் கிழிக்கும் கோடா? அல்லது அவன் மனைவி கிழிக்கும் கோடா?

குரு : அவனுக்கு இன்னும் கல்யாணம் ஆகலே. ஒரு சரியான இடமாப் பார்த்துக் கொண்டிருக்கேன். அமைய வேணும். மாதம் ரெண்டாயிரத்து முந்நூறு சம்பளம் வாங்கருன்.

சதா : நீர் ஒன்பது ரூபாய் பாக்கிக்கு அலையறீர்.

குரு : நான்சுதந்தரமாக இருக்க ஆசைப்படறேன்.

சதா : ஆனல் புள்ளையின் சுதந்தரத்தில் குறுக்கிட்டு, அவன் தலையில் உமக்குப் புடிச்ச பெரிய இடத்துப் பொண்ணை நெறைய லஞ்சம் வாங்கிக் கொண்டு கட்ட ஆசைப்படுகிறீர், அப்படித்தானே?

குரு : லஞ்சமா?

சதா : ஆமா! வரதட்சணையை இனிமே கல்யாண லஞ்சம் என்று தான் சொல்லணும். பொண் கழுத்திலே தாலிக்கயிறு முடிய எவன் அதிகப் பணம் கொடுக்கிருன் என்று தானே நீர் காத்திருக்கிறீர்?

குரு : நான் வரேன். நான் ஏதோ சொன்னேன். நீங்க என்னையே....

சதா : ஒரு நிமிஷம், என் மாப்பிள்ளைப் பையன் அப்பாவும் இப்படித்தான் கல்யாண மார்க்கெட்டிலே வலையை விரிச்சுக்கொண்டிருக்கிருராம். மெட்ருசிலே ஏதோ கமிஷன் வியாபாரமாம். பையனுக்கு அப்பாவோட பேராசை புடிக்கலே. ஆனல் நல்ல குடும்பமாம். என் மைத்துனன் விசாரிச்சிருக்கான். அப்புறம் சிம்பிளா, உத்தரசுவாமி மலையிலே, அதுதான் டில்லியிலே, நேத்துக் கல்யாணம் நடந்துடுத்து. இனிமேல் அம்பாசமுத்திரக்காரர் அப்பா, அம்மா என்று கத்திப் பிரயோசனம் இல்லை.

குரு : அம்பாசமுத்திரமா? பையனுக்கு அப்பா பெயர்?

சதா : அதை இனிமேல் மாப்பிள்ளை வந்தவுடன் கேட்டுத் தெரிந்து கொள்ளணும். பையன் ராஜா மாதிரி இருக்கான். போன வாரம் போட்டோ வந்தது. நேத்து நாங்க டிரங்க் டெலிபோன் மூலம் ஆசிர்வாதம் பண்ணிஞேம்! சகுந்தலா, ஸாருக்கு மாப்பிள்ளை கோபாலகிருஷ்ணன் படத்தைக் காண்பி.

சகு : அதோ உங்க முன்னுலே மேஜையிலயே இருக்கு.

குரு: அம்பாசமுத்திரம் கோபாலகிருஷ்ணன், எங்கே குடுங்கோ! அட அயேக்யப் பயலே! இவன் என் பிள்ளை ஸ்வாமி! டில்லி கரோல் பாக் கிளையில் ஆபீஸரா இருக்கான். என் திட்டம் எல்லாம் போச்சு!

சதா : குருநாதன், மன்னிக்கணும். நீர் சம்பந்தியா வந்துட்டீர். ஏய் சகுந்தலா! சீக்கிரம் ஸாருக்கு நல்ல காபியாக் கொண்டு வா. அதிர்ச்சியாயிட்டார்.

சகுந் : அவர்தான் முதல் தடவை இங்கே வந்தபோதே, தாம் ஓரிடத்துக்கு வந்தால் குருபலனும் வந்ததாக அர்த்தப்ஞரே!

சதா : நம்ப பொண்ணுக்குக் குருபலன் வந்தது கல்யாணம் நடந்தது. சந்தோஷம்! மிஸ்டர் குருநாதனே சம்பந்தியாக வந்து நிற்கிருர். சம்பந்தி! இனிமே நாம, ஒன்பது ரூபாய் கணக்குப் பேசமாட்டோம். நீங்க போயி உங்க சம்சாரத்தை அழைச்சிண்டு இங்கே வந்துடுங்க. நாம் சேர்ந்து போய்க் கல்யாண மாப்பிள்ளையையும், பொண்ணையும் ஏரோடிரோமில் வரவேற்போம். முகத்தை இப்போதிலிருந்தே சிரித்தபடி வச்சுக்கொள்ளப் பழகும். புரியறதா? காலம் மாறிப் போச்சு.

குரு : சம்பந்தி சதாசிவம்! உம்ம பொண்ணுக்குக் குருபலன் வந்தது. எனக்குப் பண பலன் போச்சு! பரவாயில்லை. மகாலட்சுமி மாதிரி இருக்கும் உம்ம பெண்ணுக்கு நல்ல இடம் அமையும் என்று அன்று நான் சாதாரணமா, சம்பிரதாயமா ஆசீர்வாதம் பண்ணினேன். அது பலித்துவிட்டது. நான் இனி வாயைத் திறக்கமாட்டேன். சம்பந்தி அம்மா, காபியைக் கொண்டு வருகிறீர்களா?

(சிரிக்கிருர்கள்).

With the best compliments of

Dalmia Cement (Bharat) Limited

REGD. OFFICE & WORKS

DALMIAPURAM 621 651

HEAD OFFICE

11-12th Floor, Hansalaya Building,

15, Barakhamba Road, New Delhi-110 001

Pioneers for over 30 years in Cement Manufacturing for

Super Strength, Durability and Great Finish Rely on

"Rockfort" Brand Dalmia Cement

எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

ஒளிமயமான எதிர்காலத்திற்குச் சேமிப்பே சிறந்த வழி
இன்றே எங்கள் வங்கியின் கிளையொன்றில்
உங்களது சேமிப்புக் கணக்கைத் தொடங்குங்கள்
உங்கள் தேவைக்கேற்ற சேமிப்புத் திட்டத்தைத் தேர்ந்தெடுங்கள்

விவரங்கட்கு அணுகுங்கள்:

- ''கருணை குடில்''; 226, கதீட்ரல் சாலை; சென்னை-600 086
- 180, தம்புசெட்டித் தெரு; சென்னை-600001
- 13, மாட்லி தெரு, தி.நகர்; சென்னை-600 017
- 44, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர்; சென்னை-600 004
- பிளாட் 4035, V83; IV மெயின் தெரு; அண்ணா நகர், சென்னை-600 040
- 209, திவான் பகதூர் ரோடு; R. S. புரம்; கோயம்புத்தூர்-641 002
- 42, அருணாசல ஆசாரி தெரு; சேலம்-636 001
- 1, பேர்ட்ஸ் தெரு; கண்டோன்மென்ட்; திருச்சிராப்பள்ளி-620 001
- 73, மேற்கு ஆவணிமூல தெரு; மதுரை-625 001

பாரத் ஓவர்சீஸ் பாங்க் லிமிடெட்

[பதிவு அலுவலகம்: "ஆக்ஸ்போர்டு ஹவுஸ்"; அண்ணா சாலை
சென்னை - 600 006]



CHAITRA-CS-282 TAM

'கிருஷ்ணமணி'

காத்திருத்தல்

அவன் ஒரு மாணவன். இருபத்து மூன்று வயதாகிறது. அவன் படித்துக்கொண்டிருந்த தாவர இயலில் முதுநிலைப் பட்டப் படிப்பின் இறுதியாண்டுத் துவக்கத்துக்கு முன்பு, தன் நண்பனுடைய அழைப்பை மறந்து விட்டது அவனுக்கு நினைவு வந்தது. நினைவு வந்தவுடன் தன் பெற்றோரிடம் அதுபற்றிச் சொன்னான். விசேஷமான சில புது மாதிரிச் செடிகளைச் சேகரிக்க, தான் தன்னுடைய நண்பனின் கிராமத்துக்குப் போக வேண்டும் என்ற தன் ஆசையை வெளியிட்டான்.

சந்திரகேசன் அவன் பெயர். பெற்றோரின் செல்லப்பிள்ளை. படிப்பில் ஆர்வம் மிகுதியுள்ளவன். தேர்வில் வெற்றி பெற மட்டுமே படிப்பவன் அல்ல. தான் கற்றறிந்திருக்கும் தாவர இயல் பற்றி அவன் மிகுந்த அக்கறை கொண்டிருந்தான். அவனுடைய மனப்போக்கை அவன் தந்தை நன்கு அறிந்தவர். அவர் அவனுடைய ஆசைக்குக் குறுக்கே நிற்கவில்லை.

ஒரு ஞாயிறன்று அவன் பயணப்பட்டான. பதினைந்து நாட்களுக்கு வேண்டிய உடைகள், மற்றும் ஆராய்ச்சிக் குறிப்புகள் அடங்கிய குறிப்பேடு, செலவுக்குப் பணம் என்று திட்டமிட்டுச் சேகரித்துக் கொண்டு போனான்.

அவன் ஒரு குறிப்பிட்ட ரெயில் நிலையத்தினின்றும் அந்தக் கிராமத்துக்குச் செல்ல வேண்டும். முன்னறிவிப்பின்றிச் சென்று நண்பனைத் திகைப்பில் ஆழ்த்தவேண்டுமென்ற நினைப்பில் கடிதம் போடவில்லை.

ரெயில் நிலையம் சிறியதாக இருந்தது. வெகு சிலரே அங்கே இறங்கினார்கள். கப்பி மண்ணடித்த பிளாட்பாரம். அதில் பூவரசு மரங்கள். சிமெண்ட் இருக்கைகள். பழுப்பேறின வெள்ளைச் சீருடையில் நிலைய அதிகாரி தூக்கக் கலக்கத்துடன் இவன் கொடுத்த பயணச் சீட்டைப் பெற்றுக் கொண்டார்.

''பெருமாள் மலை கிராமத்துக்கு எப்படி ஸார் போகணும்?''

சில விநாடி மௌனத்துக்குப் பின் சொன்னார்: ''வெளியில வண்டி இருக்கும். வாடகை பேசிக்கிட்டுப் போங்க. அஞ்சு கிலோ மீட்டர் தூரம்'' என்றார்.

பழுப்பு நிறக் காளை பூட்டிய வண்டியொன்று வெளியே நின்றிருந்தது. இவன் வண்டிக்காரரை அணுகி விஷயத்தைச் சொல்லி, வாடகை பேசி, ஏறி அமர்ந்தான்.

மலை நாடு. நடு நடுவே ஆறுகள். தென்னை அமோகமாக வளர்ந்திருந்தது. வீடுகள் தனித் தனியாய் இருந்தன. சுற்றிலும் தோட்டம். நடுவே வீடு. ஆற்றோரங்களில் தூண்டில் போட்டு மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். சிலர் வலை விரித்தும் பிடித்துக் கொண்டிருந்தனர். தமிழகத்தைச் சேர்ந்த பகுதிதான் என்றாலும் பேச்சில் மலையாள ஓசை கலந்திருந்தது. வண்டி ஒரு கிலோ மீட்டர் தூரம் போயிருக்கும். வெளிர் நீலவண்ணப் புடைவை அணிந்து சாலையில் சென்று கொண்டிருந்த ஓர் இளம் பெண் கைநீட்டினாள்.

''வண்டிக்காரரே! எங்கே போகுது?'' என்றாள்; நாஞ்சில் நாட்டுத் தொனி.

''பெருமாள் மலை கிராமத்துக்கு'' என்றார் வண்டிக்காரர்.

''ஆள் அதிகமிருக்கா?''

''இல்லை. இவட ஒரு ஆளு மட்டுந்தான் பயணிக்கும்.'' பாதி தமிழும் பாதி மலையாளமுமாகப் பதில்.

சந்திரகேசன் சொன்னான்:

''அவுங்க வர்றதில எனக்கு ஆட்சேபம் இல்லே. நான் முன்பக்கமா நகர்ந்துக்கறேன்'' என்றான்.

''அம்மை! நீங்கள் வரணும்னா வரலாம். ஐயா முழு வண்டிக்கு வாடகை பேசியிருக்கிறதனாலே எனக்குத் தயக்கமாயி..''

''இடம் நிறைய இருக்கே!'' என்றான் சந்திரகேசன்.

''தாங்யூ ஸார்! என்னிக்கி பெருமாள் மலைக்குப் போகணும்.'' சொல்லிக் கொண்டே உள்ளே ஏறியமர்ந்து, வண்டியின் பின்பக்கக் கம்பியை இரும்பு வளையத்தில் செருகினாள்.

சந்திரகேசன் அவளைப் பார்த்தான். பத்தொன்பது அல்லது இருபது பிராயம் இருக்கலாம். குளித்து ஈரம் காயக் கூந்தலைப் பிரித்துப் போட்டிருந்தாள். அடர்த்தியான நீண்ட கூந்தல். புருவங்களை ஒழுங்குபடுத்தியிருந்தாள். எடுப்பான நாசி. உணர்ச்சிகளைக் கொட்டும் பார்வை. பொன்னிறம். கழுத்தில் மெல்லிய தங்கச் சங்கிலி. பிளாஸ்டிக் கூடையில் சில புத்தகங்கள். உணவுப் பொட்டலம் போன்ற ஒரு சிறு பொட்டலம். அவள் இவனைப் பார்த்துச் சிரித்தாள்.

சாலை மேடாக இருந்தது. ''சாரே! கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கணும். அம்மை கொறைச்சு முன்னுக்கு வரும். முன்பாரம் வேணும். இல்லங்கில் மாடு கஷ்டப்படும்'' என்றார் வண்டிக்காரர்.

அந்தப் பெண் முன்புறமாக நகர்ந்தாள். இப்போது இருவரும் மிகவும் சமீபமாக அமரவேண்டியதாயிற்று. பூத்த புதுமலர் போன்றிருந்த அவள் மேனியின் மீது பூசியிருந்த வாசனைப் பவுடரின் சுகந்தம் காற்றில் கலந்து வந்தது. செழுமையான தேகவாகு.

''ஸார் யார் வீட்டுக்கு வர்றீங்க?''

''என் சிநேகிதன் பாலசந்திரன் வீட்டுக்கு. அவங்க தகப்பனார் மிஸ்டர் தாணு ஐயர்.''

''ஓ! பாலண்ட தோஸ்தா நீங்க! எங்க பக்கத்து வீடுதான். மெட்ராஸ்லேர்ந்தா வர்றீங்க?''

''ஆமாம்.''

''ஸார் மாணவரோ?''

''ம். எம்.எஸ்ஸி. கடைசி வருஷம். பாட்னி மாதிரிகள் சேகரிக்க வரேன். பெருமாள் மலைப் பக்கம் விசேஷமான மாதிரிகள் இருக்குன்னு பாலசந்திரன் சொல்வான். நானும் அவனும் பி.எஸ்ஸி ஒண்ணாப் படிச்சோம். அவன் படிப்பைத் தொடரல்லே. பி. எட். படிச்சிட்டு இங்கேயே வாத்தியாரா இருக்கான்.''

''ஞான் அறியும். பாலன் நாகர் கோவிலிலே மாஸ்டர். ஞான்

இங்கே ஒரு ஸ்கூல் உண்டு. அதிலே டீச்சர்.''

''உங்க பேர் என்ன?''

''நிர்மலா.'' சொல்லிவிட்டு நிர்மலமாகச் சிரித்தாள். எதிர்பாராத அந்தக் குலுக்கலில் அவள் இவன்மீது சரிந்தாள். சுதாரித்துக் கொண்டு பின்புறம் சாய்ந்தாள். ''வண்டிக்காரரே! பார்த்து ஓட்டும்'' என்றாள்.

''எத்தனை திவசம் தாமசம்?''

''ரெண்டு வாரம் தங்கலாம்னு உத்தேசம்.''

''அருவிக்குப் போய்க் குளிக்கணும். இந்த ஜூலை மாசம் ரொம்ப நல்லா இருக்கும்.''

''இங்கே அருவிகூட இருக்குதா?''

''ம். வலிய அருவியல்ல. செறுசு. ஆனால் குளிக்க தமாஷா இருக்கும்!''

ஒரு வழியாகப் பெருமாள் மலைக் கிராமத்துக்கு வந்து சேர்ந்தான். வண்டிக்காரரிடம் இரண்டு ரூபாய்த் தாள்களைக் கொடுத்தான்.

''சில்லறை இருக்கோண்ணு பார்க்கும்.''

''பரவாயில்லே! வச்சிக்குங்க!''

நிர்மலா இறங்கியதும் சற்றுத் தாமதித்தாள். ''ஸார்! எங்கள வீட்டுக்கு வரணும்'' என்று சொல்லிப் போனாள்.

''வரேன்.''

பதினைந்து படிக்கட்டுகளை யேறி, காம்பவுண்டுக் கதவைத் திறந்து கொண்டு இவன் உள்ளே நுழைய இருந்த சமயம் கறுப்பு நிற நாயொன்று குரைத்தது. அதைக் கேட்டு வெளியே வந்த பாலசந்திரன் இவனைப் பார்த்ததும் திகைத்துவிட்டான்.

''டேய்! சந்திரன். எந்தடா இது, லெட்டர் கிட்டர் போடாம!''

நண்பர்கள் இருவரும் தழுவிக் கொண்டனர். இவன் பார்வையில் பாலசந்திரன் சற்றே மாறிப் போயிருந்தான். நிறம் கூடியிருந்தது. மேனியில் தேங்காய் எண்ணெயின் பளபளப்பு தெரிந்தது.

''வாடா!''

பெரிய வீடு. கேரள பாணியில் உயரமான வீடு. மங்களூர் ஓடு வேய்ந்திருந்தது.

''அம்மா! என் பிரண்ட் சந்திரகேசன் வந்திருக்கான் பாரு!''

பாலசந்திரன் இவன் பெட்டியையும், ஜோல்னாப் பையையும் வாங்கிக் கொண்டான்.

இவன் தன் விஜயத்தின் நோக்கத்தைச் சொன்னான்.

''நிச்சயமா! ஒரு மாசம் வேணும்னாலும் தங்கு. எனக்கு வாரத்ல அஞ்சு நாள்தான் ஸ்கூல் போகணும். பன்னிரண்டு மைல். பஸ்லதான் போய்வரேன். சனி ஞாயிறு விடுமுறை. உனக்கு இடங்களைக் காண்பிச்சுடறேன். சைக்கிள் இருக்கு. எடுத்திண்டு போ. தினம் காலை ஆறு மணிக்குப் புறப்படு. பத்து மணிக்குள்ளாற திரும்பிடு. மலை இங்கேயிருந்து மூணு கிலோ மீட்டர்ல இருக்கு. அப்பா அம்மாவல்லாம் சௌக்கியமா? எம்.எஸ்.ஸில நீ தங்கப் பதக்கம் நிச்சயம் வாங்கிடுவே. பிறகு என்ன செய்யப் போறே? அமெரிக்கா போற எண்ணமிருக்கா? இங்கேதான் நமக்கு எந்தவிதமான ஒளியும் தெரியல்லியே. ஓசந்த ஜாதிக்காரன்னு சொல்லி எல்லாத்திலேயும் ஒதுக்கிட்டு வராங்களே. இந்த ரீதியிலே போனா நம்ம சமூகம் இன்னும் பத்து வருஷத்ல பின்தங்கிய சமூகமாப் போயிடும். என்ன சொல்றே?'' நிறுத்தாமல் பேசினான் பாலசந்திரன்.

''நீ சொல்றது வாஸ்தவந்தான். நாம பொறந்த மண்ணிலே நம்மையே அந்நியப்படுத்தறாங்க. ஆனா இவங்க ஈழத் தமிழர்களுக்காக வக்காலத்து வாங்கறாங்க. இப்ப நம்ம சமூகத்ல எவன் ஜாதி பேதம் பார்க்கிறான்? எல்லாம் அரசியல் லாபத்துக்காக அரசியல்வாதிகள் செய்யற கோலம். சகிப்புத்தன்மையுள்ள சமூகம் என்கிறதினாலே இப்போ அளவுக்கு மீறி நம்மைப் பழிக்கிறாங்க'' என்றான் சந்திரகேசன்.

''நமக்குள்ளே ஒத்துமை வேணும். ஏழை பணக்காரன்கிற பேதம் நீங்கி, ஒரு கலாசாரப் பின்னணியைச் சேர்ந்தவங்க என்கிற ஐக்ய பாவம் வளரணும். தமிழ்மொழிக்கு நம்ம சமூகம் என்ன செஞ்சிருக்குங்கறதைப் பொது மக்கள் அறிய எடுத்துச் சொல்லத் தயங்கக் கூடாது'' என்றான் பாலசந்திரன்.

நண்பர்கள் சிறிது நேரம் பேசிவிட்டு, அதன் பிறகு சந்திரகேசன் குளித்து, பின் இருவரும் உணவருந்தினார்கள்.

இவனுக்குத் தன் நண்பனிடத்தில் நிர்மலாவைப்பற்றிக் கேட்கத் தோன்றியது. பிறகு கேட்கலாம் என்று இருந்துவிட்டான்.

மறுநாள் காலை இருவரும் சைக்கிளில் பெருமாள் மலைக்குப் போனார்கள். வயல்வெளிகள், பிறகு காடு ஆரம்பித்தது. மலை தெரிந்தது.

''இந்த மலைக்குத் தெற்குப்புறமா அருவியொன்னு இருக்கு. சனிக்கிழமை அதில் குளிப்போம். இலைகளைப் பறிச்சிண்டு வா. நான் புறப்படறேன். எட்டு மணி பஸ் போயிடும்'' என்று சொல்லி விட்டுப் புறப்பட்டான் பாலசந்திரன்.

ஒரு மணி நேரத்துக்கும் மேலாக இவன் அந்தப் பகுதியைச் சுற்றிப் பார்த்தான். மலை கம்பீரமாக இருந்தது. நூற்றைம்பது மீட்டர் உயரம் இருக்கலாம்.

வெயில் அவ்வளவாகத் தெரியவில்லை. கிராமத்துப் பெண்கள் சுள்ளி பொறுக்கிக் கொண்டிருந்தார்கள். இவன் பலவிதமான செடிகளைக் கண்டான். சிலவற்றை வேரோடு பறித்து ஜோல்னாப் பையில் போட்டுக்கொண்டான். காற்று வேகமாக வீசியது. திடீரென்று மேகம் சூழ்ந்து மழை தூரத் தொடங்கியது. உடனே புறப்பட்டான்.

கிராமத்தை நெருங்கிய போது நல்ல மழை. இவன் நனைந்து போனான். தார் போட்ட சாலை வந்ததும் இவன் கண்ணில் அவள் தென்பட்டாள். தாழங்குடையொன்றைப் பிடித்திருந்தாள். அவளும் இவனைப் பார்த்தாள்.

''ஐய ஸாரே! மழைல நனைஞ்சு போயிட்டீங்களே!'' என்றாள்.

இவன் பதிலுக்குச் சிரித்துவிட்டுக் கேட்டான். ''ஸ்கூலுக்குப் போகல்லியோ?''

''இல்லை. அம்மைக்கு ஒடம்பு சுகமில்லா. ஞான் லீவு. எங்கள் வீட்டுக்கு வரணும் ஸாரே.''

''போய்த் துணி மாத்திக்கிட்டு வரேன் நிர்மலா.''

''அவச்யம் வரணும்.''

''வரேன்.''

மிக உற்சாகமாக வரவேற்றாள். நடுத்தரமான வீடு. சுச்சிதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. நிச்சப்தமாக இருந்தது.

''இருக்கோணும்'' என்று சொல்லி மர நாற்காலியொன்றைக் காட்டினாள். ''இதோ வரும்.'' உள்ளே போனாள். இரண்டொரு நிமிடங்களில் ஒரு தட்டில் பலாச்சுளைகளும், நேந்திரங்காய் வறுவலும் கொண்டு வந்து வைத்தாள்.

''ம்.. சாப்பிடுங்கோ! எனக்குத் தமிழ் சரியாப் பேச வராது. இந்த ஊரில் பொறந்து வளந்தவ. அதனால் கொஞ்சம் பேச வரும்.'' சிரித்தபடி சொன்னாள்.

'இந்தப் பெண்ணிடம் என்ன பேசுவது? இவள் நம்மிடம் ஏன் இவ்வளவு ஒட்டுதலா இருக்கிறாள்? இவளைப்பற்றிப் பாலசந்திரனிடம் கேட்காமல் போய்விட்டோமே?' என்றெல்லாம் எண்ணினான்.

''எண்ட அச்சன் மரிச்சு போயி. நானும் அம்மையுந்தான். எண்ட ஜேஷ்டன் பம்பாய்ல உத்யோகம் பார்க்கும். நீங்கள் பம்பாய் கண்டிருக்கோ ஸார்?''

''ம். நான் நிறைய ஊர் பார்த்திருக்கேன், நிர்மலா. ஆனா எனக்கு இந்த மாதிரி கிராமந்தான் ரொம்பப் பிடிச்சிருக்கு. நகரத்திலே ஜனக் கூட்டம் ஜாஸ்தி சத்தம் ஜாஸ்தி!''

''இங்கே பைஸா கிட்டில்ல ஸாரே! தேங்காய் வித்துப் பைஸா வரும். எண்ட ஜேஷ்டன் மாசம் நூறு ரூபாய் அனுப்பும். ஞான் நூத்திப்பத்து ருவா சம்பாரிக்கும். மூணாங் கிளாஸ் டீச்சர். பிரைவேட் ஸ்கூல். ரசீதில் இருநூறு ரூபாய்க்கு கையெழுத்துப் போடணும். மானேஜர் பேர் கொச்சுகிருஷ்ணன். வலிய ஆளு. ஏதேனும் கேள்வி கேட்டா, 'வேலை இல்லை. போய்க்கோ'ன்னு பறையும். ஈ நாட்டில் ஈ மாதிரி மனுஷ்யங்களை யார் கேக்கறாங்க? கொச்சு கிருஷ்ணனுக்கு மந்திரிங்களைத் தெரியும். பொலீஸ் எல்லாம் அவரோட தோஸ்த்!'' தமிழும் மலையாளமுமாகப் பேசினாள்.

''சாப்பிடுங்கோ ஸாரே!''

இவன் இரண்டொரு பலாச்சுளைகளைத் தின்றான். வறுவலைக் கொறித்தான். ''நிர்மலாவுக்கு எப்ப கல்யாணம்?'' என்று கேட்டான்.

'கல்பரணமா? எனக்கா! ஞான் ஏழை ஸாரே! பாவப்பட்ட

ஜன்மம். எண்ட அச்சன் நம்பூத்ரியானு. அம்மை நாயர் ஸ்திரீ. நாயர் கம்யூனிட்டிலகூட டவ்ரி கேக்கும். டவ்ரி இல்லாத கல்யாணம் கழிக்கும்னு சொன்னால் வாலிப வயதில் ஆள் இல்லா. ஸாரே! நான் ஒங்களைப் போல் ஒருத்தரைப் பிரேமிச்சு. அந்த ஆள் பேரு பல்பநாபன். பி.ஏ. முடிச்சு மாஸ்டாராயிடுத்து.''

திடீரென்று அவள் அழ ஆரம்பித்தாள். இவனுக்குத் திகைப்பாயிருந்தது. வேறுபுறம் முகத்தைத் திருப்பிக்கொண்டான். ஆற்றங்கரையில் அமர்ந்த நிலையில் அழகிய இளம் பெண் ஒருத்தி வண்ணச் சித்திரமாகச் சுவரில் தெரிந்தாள்.

அழுகையினூடே அவள் சொன்னாள். ''பல்பநாபன் மரிச்சுப்போயி. ஞான் ஒரு பாவப்பட்ட ஸ்திரீ ஜன்மம் ஸாரே!'' அவள் அழுது கொண்டே இருந்தாள்.

இவன் சங்கடப்பட்டான். அவளைச் சமாதானப்படுத்தும் வகையறியாது மௌனமாக இருந்தான். கண்கள் மீண்டும் அந்தச் சித்திரத்தில்

மூல நோயை

முற்றவிடாமல்
நம்பிக்கையான
ஹெடன்ஸா
களிம்பு
உபயோகித்து
நிவாரணம்
அடையுங்கள்!

ரண
சிகிச்சையையும்
தடுங்கள்!

சரும நோய்களுக்கு வயப்படுபவரா ?



சுகம்தரும் லிச்சென்ஸா சருமக் களிம்பு தீங்கில்லாத, துரிதமான நிவாரணம் அளிக்கும்

தீவிரமில்லாத, நம்பகமான லிச்சென்ஸா களிம்பு 6 சக்தி வாய்ந்த மருந்துப் பொருட்களைக் கொண்டது. இவை வெட்டுக் காயம், ஊமைக் காயம், இரணங்கள், முகப் பருக்கள் போன்ற எந்த விதமான சரும நலன் கேடுகளிலிருந்தும் உடனடி நிவாரணம் கொடுக்கும்.

சரும நோய்களின் முதல் அறிகுறியிலேயே லிசென்ஸா உபயோகியுங்கள். தீங்கில்லாத துரிதமான நிவாரணம் பெறுங்கள்.

லிச்சேன்ஸா சருமக் களிம்பு

7549 TM

லயித்தன. மாலை நேரம். ஆற்றங்கரை! அழகிய குமரிப் பெண்!

''எந்தாடி மவளே? இப்ப ஏதுக்குக் கரையணும்?'' கேட்டுக் கொண்டே வந்த பெண்மணியைப் பார்த்தான். நிர்மலாவின் தாய் போலும். வெள்ளை முண்டு உடுத்தியிருந்தாள். வயது நாற்பத்தைந்து இருக்கலாம். ''நீங்கள் பாலண்ட சிநேகிதரா?'' என்றாள்.

''ஆமாங்க.''

''அம்மை! பல்பநாபன் மரிச்சு போயி. சரி இல்லம்மா?''

அந்த அம்மாள் தன் பெண்ணைப் பார்த்தாள். இவனைப் பார்த்தாள். பெண்ணின் அருகே வந்து அவளை அணைத்துக் கொண்டாள். தலையைத் தடவிக் கொடுத்தாள். நிர்மலா தேம்பினாள்.

''ஸாரே! என் மகளுக்கு மனசு சரியில்லா'' என்றாள் தாயார்.

இவன் பேசாமல் வெளியேறினான்.

அருவி இருபதடி உயரத்திலிருந்து கொட்டிக் கொண்டிருந்தது. குளிக்கச் சுகமாக இருந்தது. பின்புலமாக மூன்று திக்குகளிலும் அந்தக் குன்றின் வியாபகம். கூட்டம் அதிகம் இல்லையாதலால் சௌகரியமாகக் குளிக்க முடிந்தது.

குளித்து முடிந்ததும் உடையணிந்து கொண்டே பாலசந்திரன் இவனிடம் கேட்டான்: ''நீ பக்கத்து வீட்டு நிர்மலாவோட பேசினியா?''

''ஆமாம்! நான் இங்கே வந்த அன்னிக்கு அவளும் என்னோடதான் வண்டியிலே வந்தா.''

''நல்ல பெண். பாவம் புத்திதான் சரியில்லே. சித்தங் கலங்கிப் போனவ.''

''என்னடா சொல்றே நீ? மூணாங் க்ளாஸ் டீச்சர்னு கூடச் சொன்னாளே!''

பாலசந்திரன் சிரித்தான். ''அந்த மயக்கம் அவளுக்குத் தேவைப்படறது. அதுவும் இல்லேன்னா முழுப் பைத்தியமா மாறிப் பாயைப் பிராண்டியிருப்பா. அது ஒரு சோகமான நிகழ்ச்சியோட பாதிப்பு. அவ நல்லாப் பெயின்ட் பண்ணுவா. சித்திரங்களை ரொம்ப அழகா வரைவா. நீ அவ சித்திரங்களைப் பார்க்கல்லியா?''

''அந்த ஹால்ல ஒரு படம் மாட்டியிருந்தது. ''ஆற்றங்கரையிலே ஒரு பெண் முழங்கால்களைக் கட்டிண்டு, முகத்தை முழங்கால்மேல வச்சிண்டு ஆற்றுப் பிரவாகத்தையே பார்த்திண்டிருக்கிற மாதிரி.''

''அதுக்குக் கீழே என்ன எழுதியிருந்தது பார்க்கல்லியா?''

'' 'காத்திருத்தல்' அதாவது 'வெயிட்டிங்'னு எழுதியிருந்தது. ''நான் அந்தப் பெண்கிட்டே அவ கல்யாணத்தைப் பத்திக் கேட்டேன். உடனே அழ ஆரம்பிச்சுட்டா.''

''அது அவளோட அடிமனத்தோட நுண்ணிய உணர்வுகளைக் கிளறிவிடற கேள்வி. மென்மையான புஷ்பத்தை முள்ளால கீறிவிடற மாதிரி!'' சொல்லி விட்டுப் பாலசந்திரன் பெருமூச்சு விட்டான்.

சிறிது மௌனத்துக்குப் பின் அவன் தொடர்ந்தான்.

''நிர்மலாவோட தகப்பனார் கேசவன் நம்பூதிரி ஒரு நல்ல ஓவியர். அவர் வரையும்போது இவ கூடவே யிருந்து பார்த்து, தானும் சிறு வயசு முதலே ஓவியம் வரைய ஆரம்பிச்சா. பள்ளிக் கூடத்தில் ஓவியத்துக்காகப் பல பரிசுகள் வாங்கி யிருக்கா. இவளை ஓவியக் கல்லூரியிலே சேர்த்தார் நம்பூதிரி. அங்கே முதல் வருஷமே பரிசு வாங்கினா. அப்பத்தான் பத்மநாபன்கிறவன் இவ வாழ்க் கையிலே குறுக்கிட்டான்.''

''யார் அவன்?''

''இந்த ஊர்ல கொச்சு கிருஷ்ணன்னு ஒரு ஆள் இருக்கான். அரசியல்வாதி. செமத்தியான பணக் காரன். சாராயக் கடை வச்சிருக்கான். கள்ளக் கடத்தல் தொழிலும் உண்டு. இந்தக் கிருஷ்ணனோட தம்பி அந்தப் பத்மநாபன். இந்தப் பெண் அருவிக் குக் குளிக்கப் போயிருக்கா. அன்னிக்கு அவனும்

போயிருந்தான். இவ அழகில் சொக்கிப் போய், மெதுவாப் பேச்சுக் கொடுத்து, நாளடைவில் பழகி, இவளைக் கெடுத்துட்டான். இந்தப் பெண்ணின் தகப்பனார் காலமான வருஷமே இது நடந்தது. விஷயம் தெரிஞ்சு போய் இவளோட அம்மா அந்தக் கொச்சு கிருஷ்ணன் கிட்டே போய் நியாயம் கேட்டா. அவன் அந்த அம்மாவைக் கண்டபடி பேசி ஏசிட்டான். பெண்ணை வேசித் தனம் செய்ய விட்டுப் பணம் சம்பாதிக்கிறியேன்னு கேட்டான். அந்த அம்மா பதறிப் போய் அழுது கிட்டே திரும்பிட்டா. ஆனா விஷயம் ஊர் பூராத் தெரிஞ்சு போச்சு. இவ மறுபடியும் ஓவியக் கல்லூரிக்குப் போக முடியாமச் செஞ்சிட்டான் கொச்சு கிருஷ்ணன். நம்பூதிரியோட பழைய சித்தி ரங்களைப்பத்திக் கேள்விப்பட்டு ஓர் அமெரிக்கன் டூரிஸ்ட் நல்ல விலை கொடுத்து வாங்கிட்டுப் போனான். அந்தப் பணத்தைப் பேங்கில இந்தப் பெண்மேல போட்டு மாசம் இருநூறு ரூபாய் வட்டி வருது. அதைத்தான் கொச்சுகிருஷ்ணன் ஸ்கூல் சம்பளம் தரான்னு நிர்மலா சொல்றது.''

''அது சரி! இவ சித்தம் கலங்கிப் போனது?''

''இவளோட அம்மா இவகிட்ட உண்மையை மறைச்சிட்டா. இவ தொல்லை பொறுக்கமாட்டாம ஒரு நாள் பத்மநாபன் லாரியில அடிப்பட்டுச் செத்துப் போயிட்டான்னு சொல்லிட்டா. ஆனா அதுவே வினையாப் போயிடுத்து. இந்தப் பெண் அதை உண்மையா நினைச்சிண்டு கொச்சுகிருஷ்ணனையே நேரில் பாத்துக் கேட்டிருக்கா. அவனும் ஆமாம்னு பொய் சொல்லிட்டான். பாவம்! நிர்மலா, அன்னிக்கு மதியையே இழந்திட்டா.''

''என்ன அநியாயம்டா இது?''

''ஆமாம்! அநியாயந்தான். ஏழைக்கு யார் உறவு? யார் நட்பு? எங்கப்பா இந்தப் பெண்ணுக்கு ஒரு நல்ல வழி பண்ணணும்னு நெனைச்சி அந்தக் கொச்சுகிருஷ்ணன் மேல போலீஸ்ல பிராது கொடுக்கலாம்னு சொன்னார். இது தெரிஞ்சு போய் அந்த அம்மாவை அவன் மிரட்டியிருக்கான். ஐந்நூறு ரூபாய் பணம் கொடுத்தானாம். சீ! போய்யான்னுட்டு வந்திட்டா அந்த அம்மா. இந்தக் கிராமத்ல அவனை விரோதிச்சுக்க யாருக்கும் தைரியம் இல்லே. அவன் கையில ஐயாயிரம் ஓட்டு இருக்கு. சுத்து வட்டாரத்தில் அஞ்சாறு மைலுக்கு இவன் கொடிதான் பறக்கிறது. கேப்பாரில்லே. கேட்டா எங்களையும் தீர்த்துக் கட்டிடுவேன்னு அவன் மிரட்றான். என்ன பண்றது? நமக்குத் தெம்பும் இல்லே. பொருள் பலமும் இல்லே. தர்மமும், நியாயமும் ஊரை விட்டே ஓடிப் போயிடுத்து. அவன் பணக்காரன் கிறதினால ஊரே அவன் பக்கம் இருக்கு.'' பால சந்திரன் முடித்தான்.

''அந்தப் பத்மநாபன் இப்போ எங்கே இருக் கான்?''

''அவனுக்கு என்ன? திருவனந்தபுரத்திலே அகில இந்தியக் கட்சிப் பிரமுகர் ஒருத்தர் இருக் கார். அவரோட மகளைக் கல்யாணம் பண்ணிண்டு, ஒயின் ஷாப் வச்சு நடத்தறான். கார், பங்களான்னு கொழிக்கிறான். இந்தப் பெண்ணு இங்கே, அவன் செத்துப் போயிட்டான்னு நினைச் சிண்டு, மதிமயங்கி அம்மாவுக்குப் பாரமா இருக்கா.''

மௌனமாக இருவரும் நடந்தனர். அந்தக் குன்றின் மௌன கம்பீரம் சந்திரசேகரனின் மனசில் ஒருவித மோனநிலையை உண்டாக்குவது போன்றிருந்தது.

இப்போது அவன் மனக்கண்ணில் 'காத் திருத்தல்' என்ற தலைப்புடன் அமைந்த நிர்மலா வின் ஓவியம் தெரிந்தது. இந்தப் பாரத நாட்டின் கோடானுகோடிப் பாமர மக்களும், படித்தும் அரசியல் வலுவோ, பொருள் வலிமையோ இன்றித் தங்களுடைய வாழ்வின் விடியலுக்காக எதையோ நம்பிக் காத்திருப்பது போன்றே தோன்றியது. ❋

வேளாண்மையில் ஒரு புதுமை:

சொட்டு நீர்ப் பாசனம்

மொட்டை மாடியில், சொட்டு நீர்ப் பாசனத்தில் வளரும் காய்கறிப் பழச் செடிகள்

எஸ். எஸ். நாகராஜன்

பயிர் வளத்தின் உயிர் நாடி பாசனமாகும். பாசனப் பயிர் சாகுபடியில்தான் பசுமைப் புரட்சி தோன்றியது. உணவு உற்பத்தி முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் போது ஐம்பது மில்லியன் டன்னாக இருந்தது. சுமார் 130 மில்லியன் டன்னாக இப்போது உயர்ந்துள்ளதற்கு முக்கியக் காரணம் பாசன வேளாண்மையே. பாசன வேளாண்மையில் சமீப காலத்தில் சோதனைகள் மிகுந்து வருகின்றன. பருவ மழை தப்பிப் பெய்கிறது; குறைவாகவும் பெய்கிறது: சில வருடங்கள் பொய்த்தும் விடுகிறது. குளம், குட்டைகளில் தண்ணீர் வற்றி, கிணறுகளில் நீர்மட்டம் தாழ்வாகப் போய்க் கொண்டே இருக்கிறது. மழை குறைந்த சேலம், தர்மபுரி, வடஆர்க்காடு, ராமநாதபுரம், புதுக்கோட்டை, கோவை மாவட்டங்களில் கிணற்றுப் பாசனத்தில் பெரும் கஷ்டங்கள் தோன்றியுள்ளன. இந்தப் பகுதிகளில், காரைக் கால்வாய்ப் பாசனம், உயர்மட்டத் தொட்டிகள் அமைத்து நிலத்தின் பல பகுதிகளுக்குப் பாசனம் செய்வது, தெளிப்பு முறைப் பாசனம் போன்ற பல வழிகள் கடைப்பிடிக்கப்பட்டன. இருப்பினும் இந்த முறைகளால் எதிர்பார்த்த நன்மைகள் கிட்டவில்லை.

இது சமயம் நமது நாட்டுப் பாசன நிபுணர்களுடைய கவனத்தை இஸ்ரேல் நாடு கவர்ந்தது. இஸ்ரேல் நாட்டில் மழை மிகவும் குறைவு. கோடையில் கடும் உஷ்ணம். எங்கே பார்த்தாலும் மணல் மிகுதியாகக் கொண்ட பாலைவனம். நிலத்தடி நீர் வளம் அளவிலும், தரத்திலும் மோசமானது. சுருக்கமாகச் சொல்லப் போனால் விவசாயம் செய்வதற்குச் சாதகமான நிலையே கிடையாது. இத்தகைய சோதனைகளைக் கண்டு அவர்கள் அஞ்சாமல் வேளாண்மையில் பாராட்டத் தக்க சாதனைகளை நிகழ்த்தி வருகின்றனர். காய்கறி உற்பத்தி, பழ உற்பத்தி, மலர் சாகுபடி ஆகியவற்றில் இஸ்ரேல் முன்னணியில் நிற்கிறது. இதற்கு முக்கியக் காரணம் இந்த நாடு அனுசரித்துவரும் நுணுக்கமான சொட்டு நீர்ப் பாசனமாகும். இப்போது அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கானடா போன்ற நாடுகளும் இந்த முறையால் சிறந்த அநுகூலம் பெற்று வருகின்றன.

கொட்டு நீர், சொட்டு நீர்ப் பாசன முறைகள்:

நாம் தற்போது அனுசரித்து வரும் பாசன முறை கொட்டும் முறைப் பாசனமாகும். இதை ஆங்கிலத்தில் ஃப்ளட் இரிகேஷன் (Flood Irrigation) என்கிறோம். இந்த முறையில், பயிருக்குத் தேவைப்படும் பாசன நீர் அளவைப் போல் பல மடங்கு அதிகமாக உபயோகிக்கப்படுகிறது. நீர் வாய்க்காலில் ஓடும்போது பெருமளவு விரயமாகின்றது. மேலும் அதிக அளவு பாசனம் செய்யும்போது, நீர் வேர் மட்டத்தில் நீண்ட நேரம் தங்காமல் நிலத்தின் அடி மட்டத்துக்கு அடித்துச் செல்லப்படுகின்றது. கொட்டும் முறைப் பாசனத்தில் சுமார் எண்பது சதவிதம் நீர் விரயமாவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

இம்முறைப் பாசனத்தில் களைத் தொல்லை மிகுந்து, களையெடுப்பதற்குச் செலவு கூடி விடுகிறது. கொட்டுவதற்குப் பதில் சொட்டு நீர்ப் பாசனம் செய்யும்போது செடிகளுக்குத் தேவையான நீர் செடியின் வேர்ப் பாகத்தில் சொட்டுச் சொட்டாக நீண்ட நேரம் விழுகின்றது.

இந்த முறையில் குறைந்த அளவு நீரைப் பயன்படுத்திப் பரந்த நிலப் பரப்பில் பாசனம் செய்ய முடிகிறது. வேர்ப் பாகத்தில் காற்றோட்டம் அதிகரிக்கிறது. வேரின் வளர்ச்சி சிறப்பாக இருப்பதால் பயிர் விரைவில் முதிர்ச்சி அடைகின்றது. பாசனம் செய்யப்படும் நீரில் ரசாயன உரங்களும் கலந்து கொடுக்கப்படுவதால் அதன் உபயோகத்தில் சிக்கனம் ஏற்படுவதுடன் பயிர் மகசூலும் அதிகரிக்கிறது. சொட்டு நீர்ப் பாசன முறை பற்றி நம் நாட்டிலும் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்முறைப் பாசனத்தை அனுசரித்து வரும் இடங்களில் நன்மைகள் உள்ளன என்று தெரிய வருகிறது.

வண்டலூர்: சென்னைக்கு அருகிலுள்ள வண்டலூர் என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள பண்ணையில் காற்றின் விசையைப் பயன்படுத்தி 'விண்ட் மில்' என்னும் சாதனத்தை இயக்கிக் கிணற்றிலிருந்து நீர், உயர் மட்டத் தொட்டிக்கு ஏற்றப்படுகின்றது. இந்தத் தொட்டியிலிருந்து பிளாஸ்டிக் குழாய்களின் மூலம் தென்னங் கன்றுகள், மல்லிகைப்பூச் செடிகள், எலுமிச்சை மரங்கள், மாமரங்கள் ஆகியவற்றுக்குப் பாசனம் செய்யப்பட்டுப் பலனும் மிகுந்து காணப்பட்டுள்ளது.

மாமல்லபுரம்: சொட்டு நீர்ப் பாசனத்தின் சிறப்பை நன்கு தெரிந்து கொள்ள வேண்டுமானால் மாமல்லபுரத்தில் பஞ்ச ரதங்களுக்கும், கடலுக்கும் இடையில் அமைக்கப்பட்டுள்ள தென்னைப் பண்ணைக்குப் போகவேண்டும். அங்கே கால் கொதிக்கும் மணலில் 4500 தென்னங் கன்றுகள் நடப்பட்டுப் பாசனம் செய்யப்பட்டு வருகின்றது. இந்தக் கன்றுகளுக்குப் பாசனம் செய்ய பதினொன்று கிணறுகள் வெட்டப்பட்டன. இந்தக் கிணறுகளில் இடம் விட்டு இடம் எடுத்துச் செல்லப்படும் நான்கு பம்பு செட்டுகளைப் பயன்படுத்திக் கன்று ஒன்றுக்கு மூன்று நாட்களுக்கு ஒரு முறை இருநூறு லிட்டர் பாசன நீர் விடப்பட்டது.

கன்றுகள் தளதளவென்று வளரவில்லை. மணல் வெளியின் வெப்பத் தீட்சண்யத்தில் கன்றுகள் வதங்கின.

கன்றுகளுக்குப் பாசனம் செய்யப்பட்ட நீர், ஜல்லடை போன்ற கண்களுள்ள மண் அமைப்பைக் கொண்ட மணல் நிலத்தின் அடிமட்டத்துக்கு அடித்துச் செல்லப்பட்டு விட்டது. நீர் மிக வேகமாகக் கீழ் நோக்கிப் போனதால் வேர்ப் பாகத்தில் அது அதிக நேரம் தங்கவில்லை. இதனால் வேர் சீரான வளர்ச்சிப் பெறவில்லை. பாசனத்துக்கும் செலவு அதிகமாயிற்று. செடிகள் செழுமையாக வளராமலும் போயிற்று.

மாமல்லபுரத்து மரங்களுக்குத் தற்போது சொட்டு நீர்ப்பாசன முறையைக் கையாளுகிறார்கள். இங்குள்ள அனைத்துக் கன்றுகளுக்கும் கன்று ஒன்றுக்குத் தினம் தவறாமல் காலையில் இருபது லிட்டர் நீரும், மாலையில் இருபது லிட்டர் நீரும் பாசனம் செய்யப்படுகிறது. இவ்வாறு அன்றாடம் செடிகளுக்குப் பாசனம் செய்யப்படுவதற்குத்



மாமல்லபுரத்தில் தென்னைச் சாகுபடி



வாளிப்பான வாழைக் குலை

தேவைப்படும் கிணறுகள் இரண்டே! பதினான்கு கிணறுகள் வெட்டாமல் இரண்டு கிணறுகள், அதுவும் குழாய்க் கிணறுகளாக வெட்டப்பட்டிருந்தாலே போதுமானதாக இருந்திருக்குமென்று இப்போது தோன்றுகிறது.

பாசனத்திலுள்ள சிக்கனத்தை மாமல்லபுரத்துப் பண்ணை நமக்கு உள்ளங்கை நெல்லிக் கனியெனப் புலப்படுத்துகிறது. பதினான்கு கிணறுகளும் சேர்ந்து அன்றுடம் பாசனம் கொடுக்காத நிலையில், இப்போது இரண்டே கிணறுகள் தினமும் எல்லாக் கன்றுகளுக்கும் பாசனம் அளிக்கின்றது.

ஹைதராபாத்: இந்த நகரத்தில் மேடு பள்ளம் உள்ள பகுதியில் பூமியைச் சமப்படுத்திப் பாசனம் செய்ய இயலவில்லை. மேடு பள்ளம் உள்ள இடங்களில் மாங்கன்றுகளை நட்டு அவற்றுக்குச் சொட்டு நீர்ப் பாசன முறையைக் கையாண்டு வருகிறார்கள். செடிகள் செழித்து வளர்ந்து வருகின்றன. கடும் வறட்சி சூழ்ந்த நிலையில் சொட்டு நீர்ப் பாசனம் அளித்த இடத்தில் மட்டும் மரங்கள் பசுமையாகக் காட்சியளிப்பது கரிய இருள் சூழ்ந்த நிலையில் மின்னும் விளக்குகளை ஒத்துள்ளது.

வயதான காய்க்காத மரங்கள் காய்த்தன:

மைசூரிலுள்ள, ராமகிருஷ்ண வித்யாலயா, தென்னை மற்றும் சப்போட்டா தோட்டங்களை அமைத்துள்ளது. தென்னந் தோப்புகளுக்குப் பதினைந்து வருடங்களாகவும், சப்போட்டா பழத் தோட்டத்துக்கு வயது எட்டு வருடங்களாகவும் இருந்தன. இந்த மரங்கள் பாசனத் தட்டுப்பாட்டினால் சரியானபடி காய்த்து வரவில்லை. பாசன நிபுணர்கள் இந்தப் பண்ணையில் இப்போது சொட்டு நீர்ப் பாசனம் அமைத்து மரங்களுக்குத் தவறாமல் பாசனம் கிடைக்க வழி வகுத்துள்ளனர். வயதான இந்தத் தென்னை மற்றும் சப்போட்டா மரங்கள் இப்போது காய்த்துக் குலுங்குகின்றன.

வீட்டுத் தோட்டம்: சொட்டு நீர்ப் பாசனம், நகரங்களுக்கு அழகு தரும் பூங்காக்களிலுள்ள மரம், செடி, கொடிகளைக் காப்பாற்றவும் உதவும். தொழிற்சாலைகளில் அழகுக்காக நடப்பட்டுள்ள மரங்களைப் பேணிக் காக்கவும் உதவும். மேலும் சொட்டு நீர்ப் பாசனம் காய்கறிகளை வீட்டுத் தோட்டத்தில் சாகுபடி செய்யவும் உதவுகிறது.

வீட்டுக் கிணற்று நீர் சற்று உப்புத் தண்ணீராக இருந்தாலும் இதைச் சொட்டு நீர்ப் பாசன முறைக்குப் பயன்படுத்தலாம். சென்னை, சாஸ்திரி நகர், முதலாவது அவின்யூ, நம்பர் 45 என்ற இல்லத்தில் திருமதி மோகனா பார்த்தசாரதி என்பவர் தம் வீட்டு மாடியில் சொட்டு நீர்ப் பாசனத்தைப் பயன்படுத்திக் கத்தரி, வெண்டை, தக்காளி, மணத்தக்



நுண்ணிய குழாய்கள் வேர் மட்டத்துக்கு ரசாயனம் கலந்த நீரை எடுத்துச் செல்லுதல்

காளி, கீரை போன்றவற்றைச் சாகுபடி செய்து வருவதோடு, அவரை அணுகுபவருக்கு இம்முறையின் நுணுக்கத்தைப் பொறுமையாகவும் விளக்கி வருகிறார்.

வாழையில் வளம்: சொட்டு நீர்ப்பாசனம் வாழைச் சாகுபடிக்குச் மிகவும் ஏற்றதாகவும், அதிக லாபம் தருவதாகவும் இருப்பதைக் கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகம் செய்துள்ள பரிசோதனைகள் காட்டுகின்றன. வாழையை வியாதிகள் எதுவும் அண்டவில்லை. மேலும் நல்ல எடையுள்ள, வளப்பமான குலைகள் கிடைப்பது இம்முறைப் பாசனத்தின் சிறப்பம்சமாகத் திகழ்கின்றது.

பொன்மயமான எதிர்காலம்:

வறட்சிப் பிரதேசங்களில் அதிக லாபம் தரும் காய்கறிகள், தென்னை, திராட்சை, பழ மரங்களாகிய கொய்யா, சப்போட்டா, மா, எலுமிச்சை, ஆரஞ்சு போன்றவற்றைச் சாகுபடி செய்யலாம். இதற்குச் சொட்டு நீர்ப் பாசனமுறை உதவிகரமாக இருக்கும்.

மலைத் தோட்டப் பயிர்களான காபி, தேயிலை ஆகியவற்றுக்கும் பயன் தரும். நமது நாட்டின் வறட்சிப் பிரதேசங்களுக்குச் சொட்டு நீர்ப் பாசனம் ஒரு வரப்பிரசாதமாகும். இஸ்ரேல் நாட்டை விட அதிக வசதிகளை உடைய நமது நாட்டில் பொன்மயமான எதிர்காலத்தை இந்த நூதனப் பாசன முறை உண்டாக்குமென்று நம்பலாம்.

நுணுக்கம்: சொட்டு நீர்ப் பாசனத்தை அளிக்கும் சில முறைகளைக் கவனிப்போம். இதில் கீழ்க்கண்டவை அடங்கியுள்ளன.

1. உயர்மட்டத் தொட்டிகள்: இவற்றில் நீர் சேமித்து வைத்துக் கொள்ளப்படுகிறது.

2. வடிகட்டிகள்: இந்தத் தொட்டிகளில் பலவிதமான வடிகட்டிகள் உள்ளன. இவை தண்ணீரிலுள்ள கல், மண், தூசி ஆகியவற்றை வடிகட்டிச் சுத்தமான நீரை வெளியே அனுப்புகிறது.

3. பி.வி.சி. குழாய்கள்: உயர் மட்டத் தொட்டியிலுள்ள நீரைப் பூமியில் புதைக்கப்பட்டுள்ள பி.வி.சி. குழாய்கள் எடுத்துச் செல்கின்றன. இவற்றிலும் வடிகட்டிகள் உள்ளன.

4. எமிட்டர்ஸ்: இவை தண்ணீரைச் செடிகளுக்கு விட்டு விட்டுப் பாயச் செய்கின்றன. இது மிக முக்கியமான சாதனமாகும். வெளியிடும் தண்ணீரின் அளவு, வேகம் ஆகியவற்றை எமிட்டர்ஸ் கட்டுப்படுத்துகின்றது.

5; மைக்ரோபைப்ஸ் : இவை மயிரிழைக் குழாய்கள். எமிட்டரிலிருந்து நீரைச் செடிக்கு எடுத்துச் செல்கின்றன.

6. சிப்போஸ் முறை: இம்முறை எமிட்டர் முறைக்கு மாறுபட்டது. காய்கறிச் சாகுபடிக்கு ஏற்றது. நீண்ட பிளாஸ்டிக் தாள்களை மடித்துக் குழாய்கள் போல் உருவாக்கித் தையல் போடுகின்றனர். உயர் மட்டத் தொட்டியிலிருந்து இதில் தண்ணீர் வரும்போது குழாயிலுள்ள தையல் வாயிலிருந்து நீர் சொட்டுச் சொட்டாகக் கசியும். இப்படிக் கசியும் நீர் செடியின் வேர்ப்பாகத்தை நனைத்துச் செடியின் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்கிறது. மொட்டை மாடியில் காய்கறிச் செடிக்கு இம்முறையில் பாசனம் செய்யப்படுகின்றது.

[குறிப்பு: சொட்டு நீர்ப் பாசன முறையில் பயன்படுத்தும் பிளாஸ்டிக் சாதனங்கள் பல வருடங்கள் கெடாமல் பலன் தருகின்றன.)

உயர் மட்டத் தொட்டியிலிருந்து நீரை வால்வுகளின் மூலம் திறந்து விடும்போது அவை செடிகளை அடைகின்றது. பாசன நிபுணர்கள் நிலத்துக்கும், நில அமைப்புக்கும் பாசனம் செய்யக்கூடிய செடி, மரங்கள் ஆகியவற்றுக்கும் ஏற்ற பாசன முறையை அமைத்துக் கொடுக்க தயாராக இருக்கின்றனர்.

இந்த நூதன முறைக்காகும் செலவைச் செடிகள் விரைவில் நமக்குத் திருப்பித் தந்துவிடும். நமது நாட்டின் வேளாண்மையில் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள இந்தச் 'சொட்டு நீர்ப் பாசன' முறைக்கு நாம் அனைவரும் தக்க கவனம் கொடுப்பது அவசியத்தோடு அவசரமும் ஆகும்.

*

தீபாவளி மலர்

துங்கைக் கரைத் துறவி

பிரகலாதரின் அவதாரமாகப் போற்றி வணங்கும் ஸ்ரீமத் ராகவேந்திர சுவாமிகளின் தகப்பனார் பெயர் திம்மண்ண பட்டர், தாயார் கோபம்மா. இவருடைய காலத்தில் விஜயநகர ராஜ்யம் நலிவுற்றிருந்தபடியால், இவர்கள் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள புவனகிரியில் வந்து குடியேறினார்கள்.

திம்மண்ண பட்டருடைய பூர்வாசிரம உறவினர், சுதீந்திரதீர்த்தர் அப்போது குடந்தையில், ஸ்ரீ மாத்வ மடத்து ஆசாரியராக இருந்தார். அதனால் திம்மண்ண பட்டருக்குப் பலவித உதவிகள் கிடைத்தன.

திருப்பதிப் பெருமானின் அருளால் 1598 ஆம்-ஆண்டில் ராகவேந்திரர் அவதரித்தார். வேங்கடநாதன் என்பது பிள்ளைப் பிராயத்து நாமம். வேங்கடநாதனுக்கு ஒரு தமக்கை; பெயர் வேங்கடாம்பாள். ஒரு தமையன், குருராஜன். வீணை வாசிப்பதில் புகழ் பெற்ற குடும்பம் இது.

சில ஆண்டுகளில் திம்மண்ணபட்டர் இறந்து விடவே, அண்ணன் குருராஜனே தம்பிக்கு உபநயனம் செய்துவைத்தார். வீணை வாசிக்கக் கற்றுக் கொடுத்ததுடன், சாஸ்திரப் பயிற்சியும் அளித்தார். தம் தமக்கை வேங்கடாம்பாளை மதுரையில் மகா பண்டிதராக விளங்கிய லட்சுமி நரஸிம்ஹாசாரியர் அவர்களுக்கு மணம் முடித்து வைத்தார்.

தமையனுடன் ஸ்ரீமடத்துக்குச் சென்ற வேங்கடநாதனின் முகப் பொலிவும் சாஸ்திர ஞானமும் சுவாமிகளை ஆகர்ஷித்தன.

வேங்கடநாதன் உத்தம புருஷனாக விளங்குவான் என்று தீர்த்தருக்குத் தோன்றியது. அதனால் இளைஞனிடம் விசேஷ சிரத்தை காட்டத் தொடங்கினார்.

தமையனிடம் கற்றது போக, மேலும் ஸ்ரீமாத்வ கிரந்தங்களைப் பற்றி ஆழ்ந்து படிக்க, இளைஞன் வேங்கடநாதன் திருமடத்துக்கு வந்தான். மற்றச் சிஷ்யர்களைவிட வேங்கடநாதனின் முதிர்ந்த அறிவு நிலையை உணரப் பல சந்தர்ப்பங்கள் வாய்த்தன ஸ்ரீ சுவாமிகளுக்கு.

தனிமையை விரும்பும் வேங்கடநாதனின் குணம் பிற சிஷ்யர்களுக்குப் பிடிக்கவில்லை. குருவிடம் கற்ற கல்வியைத் தனிமையில் அமர்ந்து ஆராய்ச்சி செய்யும் இவன் போக்கை மற்றவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. பீடாதிபதிகளிடம் குறை சொன்னார்கள். ''நான் பார்த்துக்கொள்கிறேன்'' என்று கூறிய தீர்த்தர், ஒரு நாள் இரவு

எல்லா மாணவர்களையும் சுற்றிப் பார்க்கப் போனார்.

மடத்துக்கு வெளியில் ஒரு மூலையில் போர்வையின்றிக் குளிரில் குறுகிப் படுத்திருந்த வேங்கடநாதனைப் பார்த்தார் தீர்த்தர். டீகாசாரியர் எழுதிய 'நியாயஸுதா' என்ற கிரந்தத்துக்கு, எழுதிய சில விளக்கங்களும் குறிப்புகளும் அடங்கிய சுவடிகள் வேங்கடநாதனின் கையில் இருப்பதைக் கவனித்தார் பீடாதிபதி. சுவடிகளை மட்டும் எடுத்துக்கொண்டு தம் காஷாய மேலாடையை அவருக்குப் போர்த்திவிட்டுத் திரும்பிவிட்டார் சுவாமிகள்.

மறுநாள் மற்றச் சிஷ்யர்களிடம் இந்தச் சம்பவத்தைக் கூறி, வேங்கடநாதரின் பாண்டித்யத்தைப் பாராட்டி, 'மஹாபாஷ்ய பரிமளாசாரியர்' என்ற பட்டத்தையும் அளித்தார், சுதீந்திர தீர்த்தர். பின்னாளில் மடாதிபதியாக வரப்போகிறார் என்பதன் அடையாளமாக இன்றே வேங்கடநாதருக்குக் காவியாடையைப் போர்த்தினார்போலும்.

ஸ்ரீசுதீந்திர தீர்த்தர், இளைஞர் பரிமளாசாரியரையும் அழைத்துக்கொண்டு பாத யாத்திரை புறப்பட்டார். ராஜமன்னார்குடி, தஞ்சாவூர் போன்ற இடங்களுக்குப் போய் விட்டு, ஓராண்டுக்குப் பிறகு கும்பகோணத்துக்கே திரும்பினார்.

தம் குடும்பத்தைக் கவனிக்க வேண்டி, சுவாமிகளிடம் விடைபெற்று புவனகிரி வந்தார் வேங்கடநாதர். தமையன் குடும்பமே சிரமப்படுவதை அறிந்த வேங்கடநாதர், தம் மனைவி சரஸ்வதியுடன் தனியாக வாழத் தலைப்பட்டார். இவருடைய அபார பாண்டியத்தை அறிந்து நிறைய சிஷ்யர்கள் வந்தார்கள். அவர்களுக்குக் கல்வியுடன் உணவும் அளிக்க, வருவாய் போதாமல் மிகவும் சிரமப்பட்டார் வேங்கடநாதர். பொருளைத் தேடிப் பல இடங்களுக்குப் போனார்.

ஓர் ஊரிலுள்ள தனவந்தரின் வீட்டில் சமாராதனை நடந்தது. அங்கே போனதும், ஏழைமை நிலையிலுள்ள இவரைப் பார்த்த பிறர், சந்தனம் அரைக்கச் சொன்னார்கள். அரைத்தது போதாது என்று மேலும் மேலும் அரைக்கச் சொன்னார்கள். முடியாமல் தவித்த வேங்கடநாதர், பகவானை வேண்டி, அக்கினி சூக்தத்தை ஸ்மரித்துக் கொண்டே அரைத்தார். சமாராதனை முடிந்து எல்லாரும் சந்தனத்தை உடலில் பூசிக்கொண்டதும், எரிச்சல் தாளாமல் அவதிப்பட்டார்கள். தனவந்தர் காதுக்கும் செய்தி எட்டியது. இவர், 'ஏழை அந்தணர் இல்லை, சிறந்த மகான்' என்பதை அறிந்து, எல்லாரும் வேண்டிக்கொள்ள, பிறகு இவர் வருண சூக்தம் ஜபித்துச் சந்தனத்தைப் பூசிக்கொள்ளச் செய்தார். எல்லாருக்கும் சந்தனம் குளிர்ந்தது.

தனவந்தர் இவரை வணங்கி, வேண்டிய பொருள் உதவி புரிந்தார். மனைவியுடனும் சிஷ்யர்களுடனும் குடும்பம் நடத்த இந்த வருவாய் எல்லாம் இவருக்குப் போதவில்லை. இந்த நிலையில் இவருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. லட்சுமிநாராயணன் என்று நாமகரணம் சூட்டினார்.

இவர் வறுமையால் சிரமப்படுவதைப் பிற சிஷ்யர்கள் மூலம் அறிந்து மடாதிபதி சுதீந்திர தீர்த்தர் அவ்வப்போது, மடத்திலிருந்தும் உதவி வந்தார். கணவன் மனமறிந்து, வருவாய் அறிந்து குடும்பம் நடத்தும் மனைவியாக இருந்தும், ஒரே

குழந்தைக்குக்கூடத் தகுந்த ஆகாரம் கொடுக்க முடியாமல் இருந்தது, சரஸ்வதியின் மனத்தை வருத்தியது. அத்தனை கஷ்டத்திலும் வேங்கடநாதர், தம் தமையனையோ, தமக்கைப் புருஷரையோ, பிறரையோ உதவி கேட்கத் துணியவில்லை. வைராக்கிய புருஷராக வாழ்ந்தார்.

இருபது வயதுகூட நிரம்பாத சரஸ்வதியும் பதிக்கேற்ற மனப்பக்குவம் அடைந்திருந்தாள். ஒரு நாள் இரவு வேங்கடநாதர், துன்பத்தை ம்றக்க வீணை வாசித்துக் கொண்டிருந்தார். சரஸ்வதி அருகில் அமர்ந்து கேட்டுக்கொண் டிருந்தாள். ஒரே பிள்ளையையும் மனைவியையும் காப்பாற்ற முடியாத நிலை கணவரை எவ்வளவு தூரம் பாதிக்கிறது என்பதை உணர்ந்த சரஸ்வதி, 'நமது ஆசாரிய மகான்கள் இயற்றியுள்ள கிரந்தங்களுக்கு எளிய விளக்கங்கள் எழுத வேண்டும் என்ற பேரவா உங்களுக்கு இருப்பதை அறிவேன். இந்த லட்சியம் நிறைவேறவும், ஒரே பாலகனைச் சிறப்பாக வளர்க்கவும் ஸ்ரீமடத்துக்குப் போய்த் தங்குவதே சரியாகப் படுகிறது. அப்புறம் உங்கள் விருப்பம்' என்றாள்.

அருட்கன்று எப்போது வரும் என்று காத்திருந்தவர் போல் சுதீந்திர தீர்த்த சுவாமிகள், ஸ்ரீமடத்தில் இவர்களை வரவேற்றார்கள். குடும்பக் கவலை இல்லாமல் வேங்கடநாதர் கிரந்த ஆராய்ச்சியில் ஆழ்ந்தார். 'காய் கனிந்து வருகிறது' என்பதை யுணர்ந்த சுவாமிகள் வேண்டிய உதவிகளைச் செய்துவந்தார்கள்.

சுதிந்திர தீர்த்தர் பல அரசர்களுக்கு ராஜ குருவாக விளங்கிய மகான். தஞ்சை ரகுநாத பூபாலருக்கும் இவரே ராஜகுரு.

தமக்குப் பின் ஸ்ரீமடத்துக்கு வாரிசாக நியமிக்க வேங்கடநாதரே ஏற்றவர் என்பதை அறிந்த தீர்த்தர், ஒரு நாள் அதுபற்றி இவரிடம் பிரஸ்தாபித்தார். இருபது வயதான மனைவியையும் ஆறுவயதுப் பாலகனையும் விட்டுச் சந்நியாசிரமம் ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறிவிட்டார் வேங்கடநாதர். ஆனால் சுதிந்தர தீர்த்தர் விடாமல் வற்புறுத்தி வந்தார்.

ஒரு நாள் இரவு ஜோதி சொரூபிணியான சரஸ்வதியே பிரசன்னமாகி, வேங்கடநாதரின் மனத்தில் அமைதியை உண்டாக்கினாள். சஞ்சலத்தைப் போக்கினாள். 'உன்னுள் நான் ஞான ஒளியாகப் புகுந்துவிட்டேன்' என்று கலைமகள் அருளியதும் வேங்கடநாதரின் மனத்திலிருந்த உலகப் பற்றும் ஆசாபாசமும் மறைந்தன. மறுநாளே சுதிந்திர தீர்த்தர் சுவாமிகளிடம் போய்த் தஞ்சம் அடைந்துவிட்டார்.

தஞ்சையில் அரசரின் முன்னிலையில் கோலாகலமாக, பீடாரோகண விழா நடந்தது. அரசனின் முடிசூட்டு விழாபோல் இதுவும் நடந்தது. அரசன் பூபாலரே, பவனியின் போது சுவாமிகளுக்குச் சாமரம் வீசிவந்தாராம். ஸ்ரீராகவேந்திரதீர்த்த ஸ்ரீபாதங்களவரு என்ற தீட்சா நாமத்துடன் ஸ்ரீமத்வ பீட சிம்மாசனாதிபதியாக எழுந்தருளினார். சுதிந்திர தீர்த்தரே தம் கையால் ரத்னாபிஷேகம் செய்தருளினார்கள்.

அநாதி காலமாக இருந்துவரும், சீதா பிராட்டியே பூசித்த மூலராமர், ஸ்ரீதிக்விஜய ராமர், ஸ்ரீஜயராமதேவர் விக்கிரகங்களைப் பூசிக்கும் பாக்கியம் ஸ்ரீராகவேந்திர சுவாமிகளுக்குக் கிடைத்தது. ஸ்ரீமடத்துக்குத் தகுந்த



அதிபதி கிடைத்த திருப்தியில் சுதீந்திர தீர்த்தர் விஜய யாத்திரை புறப்பட்டுவிட்டார்.

ஆனால் தஞ்சாவூரில், தம் கணவர் சந்நியாச ஆசிரமம் ஏற்றுக் கொண்டு விட்டார் என்பதை அறிந்த, கண நேர அதிர்ச்சியில் அவர் மனைவி சரஸ்வதி, கிணற்றில் விழுந்து பிராணத் தியாகம் செய்துவிட்டாள். பூஜையின் போதெல்லாம் ஆவியாக வந்து தவிக்கும் தம் மனைவியின் ஆவி அமைதியுற்று வாழக் கமண்டல தீர்த்தத்தைத் தெளித்து விமோசனம் அளித்தார் ஸ்ரீராகவேந்திர மகான்.

சுதீந்திர தீர்த்தரின் பூர்வாசிரம சகோதரியின் பிள்ளை யாதவேந்திரர், அடிக்கடி தாய் மாமனை, தமக்குச் சந்நியாசம் அளிக்க வேண்டி வந்தார். சந்நியாசம் பெற்றுச் சென்ற யாதவேந்திரர், ராகவேந்திரர் மடாதிபதியானதை அறிந்து கும்பகோணம் வந்தார். தாம் மடாதிபதியாகவில்லையே என்ற வருத்தத்துடன் வந்தவர், ராகவேந்திரரைப் பார்த்ததும், மனம் மாறி, 'ஒரு நாள், பிரம்மதேவர் நிர்மாணித்த மூலராமரைப் பூசிக்க அநுமதிக்க வேண்டும்' என்று விண்ணப்பித்துக் கொண்டார். ராகவேந்திரரும் மகிழ்ச்சியுடன் அநுமதி அளித்தார். ஒரு நாள் பூசை செய்ததும் மனத் திருப்தியுடன் யாதவேந்திரர் பாத யாத்திரை போய்விட்டார்.

ஸ்ரீராகவேந்திரர் தினமும் எழுந்ததும், துளசிச் செடியின் அருகில் சென்று, செடியின் மேல் பகுதியில் மகாலட்சுமியையும், அவளது திருவடிக்கருகில் வாயுநந்தனனையும் தியானித்துவிட்டுப் பல்லக்கில் காவிரிக் கரைக்கு எழுந்தருளுவார். ஸ்நானம் முடிந்ததும், காவியுடையைத் தரித்துக் கொண்டு, கோபி சந்தன நாமங்கள் தரித்துக்கொள்வார். பிறகு சாஸ்த்ரோக்தமாக நித்திய பூசைகளைச் செய்வார். நடுப்பகலில் மீண்டும் ஸ்நானம் செய்துவிட்டு மூலராமருக்குப் பூஜை செய்வது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

தர்க்கம், சாஸ்திரம், இலக்கண ஆராய்ச்சியில் பிற பண்டிதர்களுடன் மாலைப் போதில் ஈடுபடுவார்.

ஸ்ரீராகவேந்திர சுவாமிகள் நிகழ்த்தியுள்ள அற்புதங்கள் பல.

தஞ்சையில், விஜயராகவ நாயக்கர் ஆட்சிக் காலத்தில், பஞ்சம் ஏற்பட்டது. ராகவேந்திர சுவாமிகளை வேண்டிக்கொண்டான் மன்னன்; 'அக்ஷயம்' என்று நெற்களஞ்சியத்தில் எழுதினார். வருண யாகம் செய்யச் செய்தார். மழை பெய்து வறட்சியும் நீங்கியது. மன்னன் மகிழ்ந்து தன் கழுத்திலிருந்த ரத்தினமாலையைச் சுவாமிகளுக்குச் சமர்ப்பித்தான். மகான் அதையும் யாகத்தியில் அர்ப்பித்துவிட்டார். அதைக் கண்டு மன்னன் வருந்தினான்.



மறுநாள் சுவாமிகளைத் தரிசிக்க வந்த போது, ''புதிதாக ரத்தினமாலை ஒன்று செய்ய வேண்டும். நேற்றுத் தேவரீருக்கு அளித்ததைக் கொஞ்சம் கொடுத்தால், 'மாதிரி' காட்டிவிட்டுத் திருப்பிவிடுகிறேன்'' என்று வேண்டிக் கொண்டான். மன்னனின் மனசை அறிந்த சுவாமிகள் அக்கினிதேவனைப் பிரார்த்தித்தார். அக்கினிக் குண்டத்திலிருந்து அக்கினி பகவானே எழுந்தருளி, அந்த மாலையைக் கொடுத்தார். மன்னன் அதைக் கண்டு மெய் சிலிர்த்து நின்றுவிட்டான். சுவாமிகள் கால்களில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தான். அக்கினி தேவனே ரத்தின மாலையைச் சுவாமி

களிடம் அளித்துத் தரிசனமும் அளித்தான். மன்னன் கண்ணுக்கு வெறும் அக்கினிதான் தெரிந்தது. பூஜை செய்யும் போது மனநிலை எப்படி இருக்கவேண்டும் என்பதை இந்த நிகழ்ச்சி காட்டுகிறது.

மடாதிபத்தியத்தை ஏற்றுக் கொண்ட ஸ்ரீராகவேந்திரசுவாமிகள் மதுரை, ஸ்ரீரங்கம், வேலூர், உடுப்பி, கமலாலயம் போன்ற திருப்பதிகளுக்குத் திக்விஜயம் செய்தார்கள்.

மதுரையில் திருமலை நாயக்கர் ஆட்சி செய்து கொண்டிருந்தார். நாயக்கரின் மந்திரிகளில் ஒருவர் அப்பைய தீட்சிதரின் பேரர் நீலகண்ட தீட்சிதர். சுவாமிகளுடன் தர்க்கம் செய்ய எண்ணிய நீலகண்ட தீட்சிதர், பூர்வமீமாம்சை என்ற நூலுக்குப் 'பாட்ட சங்க்ரஹம்' என்ற, தர்க்கரீதியாய்ச் சுவாமிகள் எழுதியிருந்த கிரந்தத்தைப் படித்ததும், மரியாதையும் பக்தியும் மிகுந்து, அந்த நூலை யானையின் மேல் அம்பாரியில் வைத்து வீதிவலம் வருமாறு செய்தார் தீட்சிதர்.

உடுப்பிக்குச் சுவாமிகள் எழுந்தருளிய போது, ஸ்ரீமத்வாசாரியர் பூஜித்த கோபி சந்தன பாலகிருஷ்ணனின் திவ்யசோதியில் மனம் கசிந்து சில நாட்கள் தங்கிப் பூஜித்து வந்தார். முரளி கிருஷ்ணனும், சுவாமிகளுக்கு நாளைக்கொரு கோலம் புனைந்து காட்சியளித்து மகிழ்வித்தாராம்.

'ஸ்ரீ வியாசராஜ் சுவாமிகள் இயற்றிய 'சந்த்ரிகா' என்ற நூலுக்குப் 'பிரகாசா' என்ற உரையும், ஸ்ரீமத்வாசாரியர், பிரம்ம சூத்திரத்துக்கு எழுதிய பாஷ்யத்துக்கு, 'தந்த்ர தீபிகா' என்ற விளக்க உரையும், முத்துமாலை போன்ற 'ந்யாய முக்தாவளி' என்ற கிரந்தத்தையும், 'பரிமளா' என்ற நூலையும் எழுதி, இந்த நான்கையும் பகவான் கிருஷ்ணனுக்கே அர்ப்பணம் செய்தார் ராகவேந்திரர்.

மைசூர் மகாராஜா தொட்ட தேவராஜ உடையார், சுவாமிகளை வரவேற்று, தேவராஜபுரம் என்ற கிராமத்தையும் வைரம் இழைத்த ஆபரணங்களையும் சமர்ப்பித்து, சுவாமிகளின் அன்புக்குப் பாத்திரமானார். சாதுர்மாஸ்ய விரதத்தையும் அரண்மனையில் மேற்கொண்டார்கள் சுவாமிகள்.

ஹுப்ளி அருகில் சாவனூர் (இப்போது ஹளே ஹுப்புள்ளி) என்ற கிராமத்தின் அருகில் வந்தபோது பகல் பூஜைக் காலம் வந்துவிட்டது. நதிக்கரையில் ஒரு மிகப் பெரிய மலர்த் தோட்டம் காணப்படவே சுவாமிகள் அங்கே தங்கி, ஸ்நானம் முடித்து மூலராமர் பூஜைக்கு அமர்ந்து விட்டார். அந்தத் தோட்டத்தின் ஒரு மூலையில் ஓர் அரண்மனை இருந்தது. மகனை இழந்த துக்கத்தை மறக்கத் தம் ராணியுடன் சாவனூர் நவாப் அதில் வந்து தங்கியிருந்தான்.

'ஆட்கள் நடமாட்டத்தை அறிந்து, பிறரிடம் பேசினாலாவது துயர் குறையும்' என்று அரண்மனையிலிருந்து வெளிவந்த நவாப் சுவாமிகளைப் பார்த்து வணங்கி, தான் அந்தப் பகுதியின் அரசன் என்பதையும் கூறினான்.

பூஜைக்காகத் தாம் தங்க நேரிட்டதைக் கூறி, நவாபின் மனைவி மக்களைப் பற்றி விசாரித்தார் சுவாமிகள். மன்னன் கண் கலங்கி அழுததைக் கண்டதும், சுவாமிகள் வற்புறுத்திக் கேட்டு, அரசகுமாரன் இறந்ததை அறிந்தார். புதைகுழியிலிருந்து மரித்த குழந்தையை எடுத்து வரச் செய்தார்.

மூலராமரைப் பூஜித்து, தன்வந்த்ரி ஜபம் செய்து கமண்டல தீர்த்தத்தைக் குழந்தையின் மேல் தெளித்ததும், தூங்கிய குழந்தை போல் கண் விழித்தான் அரசகுமாரன். நவாபும் ராணியும் உயிர் பெற்று எழுந்த குழந்தையுடன் சுவாமிகளின் காலில் விழுந்து வணங்கினர். சுவாமிகளுக்குப் பல கிராமங்களை மானியமாக அளித்தான் நவாப்.

பண்டரிபுரம் போகும் போது, சுவாமிகளுடன் பிரயாணம் செய்த ஒருவரின் மனைவிக்குப் பிரசவ நேரம் வந்துவிட்டது. அந்த வறட்சிப் பிரதேசத்தில் என்ன செய்வது என்று யாவரும் கலங்கினர். சுவாமிகள், தம் காவியுடையை எடுத்துப் பரத்தி விரித்தார். என்ன ஆச்சரியம்! நிழல் தரும் கூடாரம் தோன்றியது. பிரம்ம தண்டத்தைப் பூமியில் செருகியதும் ஒரு குளம் உண்டாகியது. சுகப் பிரசவமாகி, பத்து நாள் கழித்து, குழந்தையுடனும் மனைவியுடனும் அந்த நண்பர் சுவாமிகளிடம் போய்ச் சேர்ந்தார். பண்டரிபுரம் போகும் வழியில் 'தண்ட தீர்த்தம்' என்ற அந்தக் குளம் இன்றும் காணகிறது.

கோல்ஹாப்பூரில் மகாலட்சுமியைத் தரிசனம் செய்து வீர சிவாஜியின் அரண்மனையில் தங்கியிருந்தார். ராஜகுருவான சமர்த்த ராமதாஸரும் ராகவேந்திர சுவாமிகளும் சாஸ்திர சர்ச்சை செய்வதைக் கண்டு அதிசயித்துச் சிவாஜி கைகட்டி, வாய் புதைத்து நிற்பாராம்.

1621—22-இல் ராகவேந்திர சுவாமிகள், துறவாசிரமம் மேற்கொண்டார். அதிலிருந்து நாற்பதாண்டுகள் தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களிலுள்ள தலங்களுக்கு எல்லாம் சென்று தரிசித்திருக்கிறார்கள்.

ராய்ச்சூர் மாவட்டத்தைச் சேர்ந்த மானவியா ! என்ற ஊரில் பிராணதேவர் கோயிலில் சுவாமிகள் முகாமிட்டிருந்தார்கள். கோயிலின் கருடகம்பத்தின் அருகில் கீழ்ச் சாதியைச் சேர்ந்த ஒருவன் நின்று, சுவாமிகளை வணங்கி, தனக்கும் அருள் புரியுமாறு வேண்டினான்.

''அநுக்கிரகம் செய்ய காணிக்கை ஏதாவது கொண்டு வந்திருக்கிறாயா?'' என்று சுவாமிகள் கேட்டார்கள். அந்த ஏழை, தன் கந்தல் துணியில் முடித்திருந்த கடுகை எடுத்துக் கொடுத்தான். சுவாமிகள் அந்தக் கடுகை மூலராமர் பூஜை நிவேதனத்தில் சேர்க்கச் சொன்னதைக் கேட்டதும், மடத்து அலுவலர்கள், ''சாதுர்மாஸ்ய விரத காலத்தில் கடுகு தள்ளுபடியாயிற்றே'' என்று கூறினர். ''எனக்குத் தெரியும். இனிமேல் கடுகு தள்ளுபடி இல்லை'' என்று கூறிவிட்டார்கள் சுவாமிகள். மேலும் சுவாமிகள், ''இவன் சாதாரண ஆள் இல்லை. நம் சிஷ்ய சிகாமணி கனகதாஸன்' என்பதையும் அறிவுறுத்தினர்.

பிதுருஹள்ளி ஸ்ரீநிவாசாரியர் என்ற அறிஞர், சுவாமிகளைத் தரிசிக்க வந்தபோது, சாதுர்மாஸ்ய சமயத்தில் சுவாமிகள் கடுகு சேர்த்த நிவேதனங்களைப் படைப்பதைப் பார்த்துவிட்டு வினவினார். ''குரு சொல்வதைச் சிஷ்யன் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என்ற நியதிக்குச் சாட்சியாய், விளக்கம் அறிந்து, இந்த ஸ்ரீநிவாசாரியர், பிறகு வணங்கத் தொடங்கினார்.

ஆதோணியில் சுவாமிகள் எழுந்தருளியிருந்தார். தாய் மாமனிடம், அல்லல்

பட்டுக் கொண்டிருந்த அந்தணச் சிறுவன் வெங்கண்ணன், சுவாமிகளை வந்து தரிசித்தான். 'உனக்கு நல்லகாலம் பிறக்கிறது' என்று அந்த இளைஞனை ஆசீர்வதித்து மந்திராட்சதை கொடுத்தார்கள் சுவாமிகள்.

ராய்ச்சூர்க் கோட்டைப் பகுதியை ஆண்ட சித்திமசூத்கான், ஒரு நாள், தான் போகும் வழியில் இந்த அந்தணச் சிறுவனைப் பார்த்தான். இவனுடைய முகப் பொலிவைக் கண்டு, தன் திவானாக அமர்த்திக்கொண்டான் மன்னன். திவான் வெங்கண்ணா சுவாமிகளின் அருளாசியால் மதிநுட்பம் மிகுந்து விளங்கினார். சுமார் பன்னிரண்டு ஆண்டுகள் கழித்து இந்த வெங்கண்ணாதான், மந்திராலயத்தை எழுப்பியவர்.

தமிழ் நாட்டில் அரசியல் சூழ்நிலை சரியில்லை என்பதால், ராகவேந்திர சுவாமிகள், பல அன்பர்கள் தடுத்தும் ஏற்காமல், மீண்டும் பாதயாத்திரை மேற்கொண்டார்கள். கும்பகோணத்தை விட்டே திருமடத்தின் தலைமை ஸ்தானத்தை மாற்றி விடவும் திருவுள்ளம் பற்றினார்கள்.

வழியிலுள்ள பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு மீண்டும் ஆதோணிபோய்ச் சேர்ந்தார்கள் சுவாமிகள்.

மீண்டும் ஆதோணி எல்லையை அடைந்ததும் தாயைத் தேடிக் கன்று ஓடுவது போல், திவான் வெங்கண்ணா சுவாமிகளைத் தரிசித்துப் பல்லக்கையும் சுமந்துவந்தார். தம் மாளிகையில் சுவாமிகளைத் தங்கச் செய்தார். சுவாமிகளின் பெருமையைச் சொல்லி மசூத்கானையும் வந்து வணங்கச் சொன்னார் திவான்.

'யாரோ சந்நியாசி' என்ற அலட்சியத்துடன் வெள்ளித் தட்டில் மாமிசத்தை வைத்துத் துணியால் மூடி எடுத்துக் கொண்டு, பரிவாரங்களுடன் சுவாமிகளைக் காண வந்தான் மசூத்கான்.

''எங்கள் வழக்கப்படி தங்களைக் காணக் காணிக்கை கொண்டு வந்துள்ளேன்; ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டான் அரசன்.

ஸ்ரீராகவேந்திர சுவாமிகள் புன்சிரிப்புடன், ''தங்கள் காணிக்கையை மூலராமர் ஏற்றுக் கொள்வார். மூடியுள்ள துணியை விலக்குங்கள்'' என்றார்.

வீரன் ஒருவன் துணியை விலக்கினான். என்ன ஆச்சரியம்! வெள்ளித் தட்டில் பூவும் பழமும் தேங்காயும் வெற்றிலைப்பாக்கும் இருந்தன. மமதை அடங்கிய மசூத்கான், சுவாமிகள் காலில் விழுந்து, தன்னை மன்னிக்கும்படி வேண்டினான். திவானை அழைத்து, ''சுவாமிகளுக்குத் தேவையானதை எல்லாம் கொடுங்கள்; என் அநுமதி தேவையில்லை'' என்று உத்தரவிட்டு விட்டான்.

குரு ஸார்வபௌமர் ராகவேந்திர சுவாமிகள், தம் அவதார நோக்கத்தை உணர்ந்து கொண்டு விட்டார் போலும். மாஞ்சாலை என்ற கிராமத்தையே கேட்டார். இந்தக் கிராமத்துக்கு ஐந்து மைல் தொலைவிலுள்ள 'மாதாவரம்' என்ற கிராமக் குளத்தங்கரையில் இருக்கும் கருங்கல்லைக் கொண்டு வந்து பிருந்தாவனத்தை எழுப்பப் பணித்தார் சுவாமிகள். ஆக்ஞைபடியே செயல்பட்டார் திவான்.

இந்தச் சமயத்தில் சிறந்த பண்டிதனாகத் தரிசிக்க வந்த, தம் மகன் லட்சுமிநாராய



ணை, ஒரு நூல் எழுதச் செய்து, பூர்வாசிரமக் குமாரனையும் ஆசீர்வதித்தார் சுவாமிகள். மகன் எழுதிய, 'ரிக் பாஷ்ய டீகா விவர்த்தி' என்ற சிறுநூலை மேலும் தாமே விரித்து எழுதி, 'ரிக்—அர்த்த மஞ்சரி' என்று பெயரிட்டார் சுவாமிகள்.

மாஞ்சாலைக்கு வடக்கே நான்கு மைல் தூரத்தில் கணதாளம் என்ற ஊரில் குன்றின் மேலுள்ள பஞ்சமுக ஆஞ்சநேயரை அன்றாடம் போய்த் தரிசித்து வருவார். சில நாட்கள் அந்த மலையடியிலுள்ள குகையில் தவமும் மேற்கொள்வார்.

கி. பி. 1671, விரோதிகிருது ஆண்டு, சிராவண மாதம், கிருஷ்ண பக்ஷ த்விதியை, குரு வாரம்.

அதிகாலையில் ஸ்நானம் செய்து பூஜைகளை முடித்துக் கொண்டார்கள். தம் தமையனின் பேரர் யோகீந்திரர், வெங்கண்ண பட்டர் எல்லாருக்கும் தாமே தீர்த்தம், பிரசாதம் எல்லாம் வழங்கினார்கள். தாமே மற்றப் பக்தர்களுக்கும் மந்திராட்சதையும் தீர்த்தமும் வழங்கினார்கள். தம் வீணையைக் கொண்டுவரச் சொல்லி, மனமுருகச் சிறிது நேரம் வாசித்தார்கள்; அபாரமான கீர்த்தனைகள்; ஸர்வோத்தமன் நாராயணனின் பாத கமலங்களை அடையும் மன பக்குவத்தைக் காட்டும் பக்திக் கிருதிகள் அவை. கூடியிருந்த அன்பர்களுக்கு மோட்ச நிலையைப் பற்றிச் சில அறிவுரைகள்.

எல்லாரையும் பார்த்துப் புன்சிரிப்புத் தவழ ஆசீர்வதித்தார்: "ஹரியினுடைய ஆசீர்வாதங்கள். அவன் அருளால் மங்களம் பெருகட்டும்! நான் பிருந்தாவனப் பிரவேசம் செய்வதை எண்ணி யாரும் விசனப்பட வேண்டாம். உடலை விட்டு ஆத்மா பிரிந்தால் அதற்கு அபார சக்தி உண்டாகிவிடுகிறது. நீங்கள் நினைக்கும்போது தோன்றி அருளுவேன். தைரியமாக இருங்கள்."

யோகீந்திரரின் கையைப் பிடித்துக் கொண்டே பிருந்தாவனத்தை நோக்கி நடந்தார் ஸ்ரீராகவேந்திர சுவாமிகள். யோகீந்திரர் தலையில் கைவைத்து ஆசி வழங்கினார். சூழ்ந்து நின்ற அன்பர்களைக் கருணை ததும்பப் பார்த்தார். எல்லாரும் பார்த்தசாரதியாகவே சுவாமிகளுக்குத் தோற்றம் அளித்தார்கள்.

"கிருஷ்ணா! இதோ வந்துவிட்டேன்!"

யோகமுத்திரையில் பத்மாசனமிட்டுக் கிழக்கு முகமாக அமர்ந்தார் சுவாமிகள். பிரம்மதண்டமும் கமண்டலமும் அருகில் இருந்தன. துளசி மணிமாலை மட்டும் சுவாமிகளின் வலக்கை விரலில் தொங்கியது. அது விழுந்ததும் பிருந்தாவனத்தை எழுப்பிவிட வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தார் ஸ்ரீராகவேந்திர சுவாமிகள்.

துளசி மணிமாலை விழுந்தது. வெங்கண்ணர் பிருந்தாவனத்தை எழுப்பிவிட்டார். மேற்பாகத்தில் 1200 சாளக்கிராமங்களையும், அதற்கு மேற்பரப்பில் ஸ்ரீலட்சுமி நரசிம்மர், மூலராமர் விக்கிரகங்களையும் பிரதிஷ்டை செய்தார்கள்.

மாஞ்சாலைக் கிராமம் மந்திராலயமாகி அன்பர்களைக் கவர்கிறது. புனிதமும் தூய்மையும் மிகுந்த துங்கையில் நீராடி, பிருந்தாவனத்தை வலம் வரும் ஆயிரமாயிரம் பக்தர்களின் மனோரதத்தை நிறைவேற்றி, மந்திராலயத்து மகான் அருள்புரிந்து வருவதைக் கண்கூடாக இன்றும் பார்க்கிறோம். ❋

ஓம் ஸ்ரீராகவேந்திராய நம:

தீபாவளி நல்வாழ்த்துக்கள்

ஆனந்தத் தீபாவளி...
ஆனந்தம்
நல்லெண்ணெய்
இதயத்திற்கு இதமானது
V.V.V.
ADWAVE/VVV/2169

பண்டிட்-D.கோபாலாசார்லுவின்
ஜீவாம்ருதம்
ஆரோக்கியத்திற்கும்
பலத்திற்கும்
வைத்யரத்ன
பண்டிட் D.கோபாலாசார்லு
பண்டி. D. தேசிகாசார்லு.
சியவன
ப்ராஷ்
இருமலுக்கு
அருணா
ஸ்திரீகளின்
ஆரோக்கியத்திற்கு
பால
ப்ராஸ
குழந்தைகள்
டானிக்
மாதுலுங்க
ரஸாயனம்
கர்ப ஸ்திரீகளுக்கு
ரக்த
சோதக
ரத்த விருத்திக்கு
சசிவிலாஸ்
மலேரியா
ஜுரத்திற்கு
1898 முதல் பிரசித்தி பெற்றது
ஆயுர்வேதாஸ்ரமம் (பி)லிமிடெட், 70. ஜி.என்.ரோட். சென்னை 17.

ரமா எரிச்சலுடன் பவுடர் டப்பாவைத் தட்டி, அமுக்கித் தன் உள்ளங்கையில் கவிழ்த்துப் பார்த்தாள். இரண்டு வெண் புள்ளிகள் மட்டும் போனால் போகிறது என்பது போல் அவளது உள்ளங்கையில் விழுந்தன.

ரமா பாங்க் ஒன்றில் பணியாற்றுபவள். தன்னுடன் வேலை பார்க்கும் பெண்களுடன் ஒரு நிமிஷம் தன்னை ஒப்பிட்டாள். காலையில் வரும்போது முழுமையான மேக்கப்பும், உயர்ந்த ரக சென்டின் மணமும் தலை நிறையக் கூடையாகப் பூவும் அவர்களின் நடையோடு போட்டி போட்டுக் கொண்டு அசைய, அவர்கள் வேலை செய்ய வருகிறார்கள். உணவு நேரத்தில் ஒரு தடவை, மாலையில் வீட்டுக்குத் திரும்பும்போது ஒரு முறை என்று அழகு செய்துகொள்ள அழகுச்சாதனங்கள் அவர்களது கைப்பையில் தயாராகக் காத்திருக்கும்.

ரமா இந்தச் சாதாரண மலிவான பவுடரை முகத்தில் பூசிக்கொள்ள எவ்வளவு நிபந்தனைகள்! கண் குத்திப் பாம்புகளின் ஊடுருவும் பார்வைகள். முதல் தேதி வரும் வரையில், நடுவில் தீர்ந்து போனாலும் வாங்கக் கூடாது. அவளுடன் இரண்டு தங்கைகளுக்கும் இதில் பாகம் போட வேண்டும். வேலைக்குப் போய்ப் பணம் சம்பாதிக்கும் உரிமையில், ரமா அதிகப் படியாகப் பவுடரை உபயோகித்து விடப் போகிறாளே என்று தங்கைகள் கவலைப்படுவதை ரமா அறியாதவள் அல்ல. சிறிது பவுடரைப் பொட்டலம் கட்டி ஆபீசிற்கு எடுத்துப் போக நினைத்தால்கூட, அல்பமாக மேலே விழுந்து குதறும் தங்கைகளின் சின்ன புத்தி.

''ரமா, நீ இன்னும் ஆபீசுக்குப் போகல்லே?''

''போறேண்ணா, சாப்பிட்டதும் போகிறேன்.''

''வாயேன். ரெண்டு பேருமாச் சாப்பிடலாம்'' என்று கூறிய அவளது அண்ணன் சபேசன், அவளது தட்டையும் தன் தட்டுடன் கூட எடுத்துச் சென்றான்.

ரமா அதிர்ச்சியுடன் நின்றாள். சபேசன் தன்னுடன் சேர்ந்து சாப்பிட அவளை அழைத்தால், அவளிடம் அவன் ஏதோ உதவியை எதிர்பார்க்கிறான் என்பது பொருள். சகோதர பாசம் திடீரென்று அவனுக்குப் பீரிட்டுப் பெருகவில்லை.

வெளியில் காலேஜுக்கும், பள்ளிக்குமாகப் புறப்பட்டுக் கொண்டிருந்த அவளுடைய தங்கைகள் இருவரும் அக்காவைப் பாதாபமாகப் பார்த்துவிட்டுச் சென்றனர்.

ஹாலில் ஒரு மூலையாக ஈசி சேரில் சாய்ந்து பேப்பரைப் படித்துக்கொண்டிருந்த தன் தந்தையை ரமா வெறித்துப் பார்த்தாள்.

அவர் பேப்பரைப் பிடித்துக் கொண்டிருந்த விதத்திலிருந்தே, முகத்தை மறைத்துக்கொள்ள உபயோகப்படுத்துகிறாரே தவிர, அவர் படிக்கவில்லை என்பதை உணர்ந்தாள்.

பாவம், அவர்தான் என்ன செய்வார்? ரிடையர் ஆன செகண்டரி கிரேட் பள்ளி ஆசிரியர். பென்ஷனைப் பிள்ளையிடம் சமர்ப்பித்துவிட்டுப் பிள்ளையின் சர்வாதிகாரத்துக்குத் தம்மையும் உட்படுத்திக் கொண்டுவிட்ட அவரிடம் இவள் எதை எதிர்பார்க்க முடியும்?

''ரமா!'' சபேசன் உரக்கச் சமையலறையிலிருந்து கத்தினான். அவள் வேண்டா வெறுப்புடன் சமையலறைக்குச் சென்றாள்.

அவன் ரசம் சாதம் சாப்பிடும் போது மெள்ள ஆரம்பித்தான். ''ரமா, உனக்கு மூணு மாச லீவு இருப்பதாகச் சொன்னியே.''

''ஆமாம்.''

''அதை ஸரெண்டர் செய்தாக் கணிசமாப் பணம் வருமில்லையா?''

ரமாவுக்கு முகம் ஜிவ்வென்று சிவந்தது. 'அட பாவி, கல்யாணத்தைச் சாக்கா வைச்சுக் கூட வாங்கியாச்சு. சம்பளமும் பாதிதான் வரும். லீவையும் பணத்துக்கு வித்துட்டு, புருஷன் வீட்டுக்கு எந்த முகத்தோட போகிறது? வெல்லப் பிள்ளையாரைக் கிள்ளிப் பிள்ளையாருக்கே நைவேதியம் செய்யறது போலே, என்னையே அங்கம் அங்கமாப் பிய்த்துப் பிய்த்து நீங்க என்ன எனக்குக் கல்யாணம் செய்து வைக்கிறது? அதிலே உங்களுக்கு என்ன பெருமை?'

''என்ன பதிலையே காணோம்? நான் என்ன பணத்தை எனக்கா கேட்கிறேன்? உன் கல்யாணச் செலவுக்குத் தானே? கல்யாணச் சமயத்திலே ஒண்ணு ரெண்டு ஆயிரங்கள் கையிலே அதிகமாக இருந்தா நல்லதுங்கிற எண்ணத்திலேதான் சொல்றேன்.''

இருவருக்கும் உணவு பரிமாறிக்கொண்டிருந்த அவர்களின் தாய் அம்புஜம் மகனை எச்சரித்தாள். ''உஸ், சபேசா, மெள்ளப் பேசு. லக்ஷ்மி காதிலே விழப்

போறது. அவ தன் மாமா காதிலே எட்ட விட்டுடுவா.''

''இது ஒரு தொல்லை. நம்ம வீட்டிலே நம்ம விருப்பம்போலே பேச முடியல்லே. இப்ப மட்டும் இல்லே, கல்யாணம் ஆனப்புறமும் இவகிட்டே நாம் பயந்து கொண்டு நடுங்கணும்'' என்று அவன் வெளியில் சொன்னாலும், குரலின் சுருதி மிகவும் இறங்கி விட்டது. முணுமுணுக்கும் குரலில் பேசினான்.

லக்ஷ்மி அந்த வீட்டிலேயே எதிரேயுள்ள மற்றொரு போர்ஷனில் குடி இருப்பவள். ரமாவின் குணத்தையும் அழகையும் பார்த்து அவளிடம் மதிப்புக் கொண்டவள். கல்லூரிப் படிப்பு இருந்தும், கை நிறையச் சம்பளம் வாங்கியும், அண்ணனின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு இருப்பதையும், தனக்காக ஒரு பொருளையும் கேட்டுப் பெறக்கூட எண்ணமின்றி வளைய வரும் ரமாவை அவளுக்குப் பிடித்துவிட்டது.

அதே வேகத்தில் லக்ஷ்மி தன் மாமாவின் பிள்ளை கேசவனுக்கு ரமாவை விவாகம் செய்துகொடுக்க நடுவில் நின்று ஏற்பாடு செய்து விட்டாள். இன்னும் பதினைந்து நாட்களில் கல்யாணம் நடக்கப் போகிறது. இங்கு நடக்கும் வாதப் பிரதிவாதங்களை எல்லாம் லக்ஷ்மி பிள்ளைவீட்டாரிடம் சொல்லிவைக்கப் போகிறாளே என்று அம்புஜத்துக்குப் பயம்.

ஏனெனில் லக்ஷ்மியின் மாமா, ரமாவை முதல் முதலாகப் பார்த்ததும், வரதட்சிணை வேண்டாமென மறுத்துவிட்டார். சீர் விஷயத்தையும் அவர்களுடைய இஷ்டத்துக்கே விட்டுவிட்டார். அப்படியிருக்க, சபேசன், ரமாவை லீவைத் திருப்பிவிடச் செய்து, அதனால் வரும் ஆதாயம் மட்டும் இந்தக் குடும்பத்தைச் சேரவேண்டும் என்று வற்புறுத்தினால், லக்ஷ்மி மூலமாக அவரும் கேள்விப்பட்டு, இந்தக் குடும்பத்தைக் கேவலமாக நினைத்துக் கொள்வாரே என்ற கவலைஅவளுக்கு.

அதைப் புரிந்துகொண்ட ரமா, தன் தாயைப் பார்த்து விசித்திரப் புன்னகை புரிந்தாள். 'உங்கள் பெண்ணுக்குச் செய்யறது உங்கள் சௌகரியம்' என்று அவர் சொன்னதும், அவர் தலை மறைந்தவுடனேயே கணிசமான சில வெள்ளி, எவர்சில்வர் பாத்திரங்களை ரமாவுக்கு அடுத்தவளான நிர்மலாவுக்காகப் பெட்டியில் பத்திரப்படுத்தினாளே, இதே அம்மா?

இத்தனைக்கும் ரமா சிறுகச் சிறுகத் தன் சம்பாத்தியத்தில் சீட்டுக் கட்டித் தனக்காகச் சேர்த்துக் கொண்டவைதான். ''நிம்மிக்கு மட்டும்சபேசன் எங்கிருந்து செய்யப் போகிறான்? குருவி தலையிலே பனங்காயாகச் சின்ன வயசிலேயே, மூணு பொண்ணு பொறுப்பையும் அவன் ஒருத்தன் தலையிலே போட்டிருக்கோம்'' என்று அம்மா அவள் காது கேட்கப் புலம்பினதும், ரமாவுக்கு ஆத்திரம் பொங்கி வந்தது. சிரமத்துடன் தன்னை அடக்கிக் கொண்டாள்.

சபேசன் இவளுக்காக என்ன செய்தான்? சம்பாதித்த நாளிலிருந்து இவளுடைய ஊதியத்தில் தனக்கு ஒரு புடைவை வாங்கிக் கொள்ளக்கூடச் சுதந்தரம் இல்லை. சாயம் வெளுத்த நான்கு புடைவைகளைத் தவிர வேறு புடைவை ஏது?

சில சமயங்களில் வீட்டுக்குத் தெரியாமல், ஆபீஸில் அதிகப்படி நேரங்கள் வேலை செய்து பணம் வருவதுண்டு. அண்ணனுக்குத் தெரியாமல் அம்மாவின் உதவியுடன் அந்தப் பணத்தில் புடைவைகள் வாங்கிக்கொள்ள ஆசைப்பட்டு அம்மாவைத் துணைக்குக் கூப்பிட்டாள். கடைத்தெருவுக்கு அம்மாவும் வந்தாள். ஆனால்—

விதம் விதமான புடைவைகளைக் கண்டதும் அவளுக்கு மற்ற இரண்டு பெண்களின் நினைவு வந்து விட்டது. ''நிம்மிக்கும் சரோஜாவுக்குந்தான் யார் வாங்கித் தருவா? என் வயிற்றில் பிறந்து அதுகளுக்கும் சுகமேயில்லை.'' அந்தக் கடையிலேயே ரமாவிடம் புலம்பினாள்.

ரமா விரக்தியுடன் அவர்கள் இருவருக்கும் மட்டும் புடைவைகளை, அம்மாவையே தேர்ந்தெடுக்கச் செய்துவிட்டு, தனக்கு எந்தப் புடைவையுமே பிடிக்கவில்லை என்று வாங்காமல் வந்துவிட்டாள். அவள், அண்ணன் கனைத்ததைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். அவன் தன் பதிலுக்காகக் காத்திருப்பது தெரிந்தது.

''அண்ணா கல்யாணத்துக்கப்புறம் எனக்கு லீவு தேவைப்படுமோன்னு தான் தயங்கறேன்.''

''எதுக்கு லீவு? கேசவனுக்கு உள்ளூரில் தானே வேலை? வெளியூரிலே அவன் இருந்தாலும், உனக்கு மாற்றல் கிடைக்கும் வரை லீவு வேண்டியிருக்கும். அவன் கம்பெனி வெளியூருக்கு அவனை அனுப்புற சான்சே இல்லையே!''

''அதில்லே .. வந்து ... நானும்

அவரும், ரெண்டு பேருமா ஒரு சமயம் வடநாடெல்லாம் போகலாமான்னு ஒரு எண்ணம்.'' அவள் தடுமாற்றம் அவளுக்கே பிடிக்கவில்லை.

''ஓ..ஹனி மூனா?'' ரமாவின் முகம் சிவந்தது. அவன் குரலில் நையாண்டியா? எரிச்சலா? புரிந்து கொள்ள முடியாத வகையில் ஏதோ ஒன்று தெரிந்தது.

சபேசன் தொடர்ந்தான். ''கேசவனை அடிக்கடி நீ பார்க்கறதுண்டா? இல்லே, டெலிபோன்லே பேசுவீங்களா?''

சற்று எரிச்சல் கலந்த குரலில் கூறினாள்: ''ரெண்டுமேயில்லே. லக்ஷ்மி அக்காவிடம் சொல்லி அனுப்பினார்.''

''லக்ஷ்மி விடுதூது போலிருக்கு. சரி, ரமா. நீயாகவே தெரிஞ்சுண்டு உதவி செய்வாய்னு நினைச்சேன். பரவாயில்லே. நானாகவே கேட்டால் செய்ய மறுத்து விடுவாயா என்ன? உன் கல்யாணம் முடிஞ்சு ரெண்டு வருஷம், நிம்மிக்கு வேலை ஆகும்வரையில் உன் சம்பளத்தை இந்தக் குடும்பத்துக்குக் கொடுக்க வேண்டியிருக்கும். இதை லக்ஷ்மி மூலமாகச் சொல்றதை விட நீயே கேசவனுக்கு நேரிலேயோ போன் மூலமோ சொல்லிவிடு.''

''ஏற்கெனவே நான் வாங்கின கடனுக்குப் பிடிப்புப் போக ஐந்நூறுதான் கையில் வரும். அவர் பெருந்தன்மையா எத்தனையோ விஷயத்திலே விட்டுக் கொடுத்திருக்கார். எப்படி அண்ணா இதை நான் சொல்றது..? எனக்குப் பயமாயிருக்கு.''

''சரி, ஆகட்டும். கல்யாணம் நின்னுபோற பயம் உனக்கு. பொன் முட்டை இடற வாத்தே அவாளுக்குக் கிடைச்சப்புறம் இதிலே விட்டுக் கொடுக்கறது என்ன? பெருந்தன்மை எங்கே வந்தது? உன் வரையிலும், உனக்கு ஒரு புருஷனைத் தேடிண்டு ஓடிட்டாப் போதும். இந்தக் குடும்பத்தைப் பற்றி உனக்கு அக்கறையில்லே.'' சபேசன் பொரிந்து கொட்டினான்.

ரமா பொங்கிவரும் கண்ணீரைச் சிரமத்துடன் அடக்கிக் கொண்டு தாயை நிமிர்ந்து பார்த்தாள்.

''சபேசா, போறது, விடுப்பா! மழை பேய்ந்து நிறையணுமே தவிர, பனி பேயறதினாலே நிறைந்து விடாது. பெண் குழந்தைகளே அவ்வளவுதான். நம் கடமையை முடிச்சு அவளை இன்னொருத்தர் வீட்டுக்கு அனுப்பறோம். அவளுக்கு இனி இங்கே ஒட்டும்னு நாம் எதிர்பார்க்கக்கூடாது.''

இது பிள்ளைக்குக் கூறும் சமாதான மொழிகளா? இல்லே, பெண்ணுக்கு மறைமுகமாகச் சொல்லடியா?

ரமா எழுந்து விட்டாள். பிற்பகலுக்காகக் கலந்து வைத்திருந்த உணவு டப்பாவைக் கூட அவள் எடுத்துக் கொள்ளவில்லை.

வழியில் பஸ்ஸில் கூட அவளுக்கு இதே சிந்தனை. அவளுடன் வேலை பார்க்கும் மாலினிக்கும் ஏறக்குறைய இதே நிலை தான். பெரிய குடும்பம், பிடுங்கல் அதிகம். ஆனாலும் அவள் வரையில் குறைவில்லை. ஆடம்பரமான உடைகள், அலங்கார அணிகள், சினிமா, ஹோட்டலில் டிபன், தினுசு தினுசான செருப்புகள், டம்பப் பைகள் — இத்யாதிகள்.

ரமா தனக்குள் எத்தனையோ தடவை வியந்திருக்கிறாள் 'பஸ்ஸுக்கு லேட்டாச்சு; சிநேகிதி சினிமாவுக்கு அழைத்துப் போனாள்' என்று பொய் சொல்லிவிட்டு ரமா அதிகப்படி நேரங்கள் வேலை செய்து பணத்தை வீட்டுக்குத் தெரியாமல் சேமிப்பாள்.

மாலினி, இந்த விஷயத்தில் அவளுக்கு நேர் விரோதம். வீட்டில் அதிகப்படி நேரம் வேலை செய்ததாகக் கூறிவிட்டு உண்மையில் சினிமா, பீச் என்று சுற்றுவாள். அதற்கென்று அவளுக்கு நண்பர்கள் ஒரு கூட்டமாகவே காத்திருக்கிறார்கள்.

பஸ்ஸிலிருந்து இறங்கிச் சில அடிகள் நடந்திருப்பாள். அவளை உராய்வது போல் ஒரு ஸ்கூட்டர் வந்து நின்றது. அதன் பின் சீட்டிலிருந்து குதித்து இறங்கிய மாலினி ஸ்கூட்டரை ஓட்டி வந்த வாலிபனின் கன்னத்தில் தட்டிக் கொஞ்சலுடன், "மாலையில் சினிமா நிகழ்ச்சி உண்டு. சீக்கிரமா வந்திடுங்க" என்று கூறினாள்.

அவன் முகமெல்லாம் பல்லாகத் தலையை ஆட்டிவிட்டுச் சென்றான். மாலினி ,"ஹாய் ரமா" என்று கூறி அவளுடன் சேர்ந்து கொண்டாள்.

"மாலினி, யாரு அவர்?"

"சரியான பேக்கு. என் வீட்டை எப்படியோ தெரிஞ்சுண்டு தினமும் தெரு முனையிலே வந்து நின்னு ஸ்கூட்டர்லே கொண்டு விடுது. இன்னிக்குச் சினிமாவுக்குக் கூப்பிட்டுது. பரிதாபமா இருந்தது. சரின்னு ஒத்துக்கிட்டேன்."

ரமா மாலினியைக் கவனித்தாள். தொட்டால் நழுவும் வழுவழுப்பான கத்தரிப் பூ கலரில் சேலை. அதே நிறத்தில் நவநாகரிக ஆபரணங்கள், அதே நிறத்தில் செருப்புகள், கையில் டம்பப் பை, மூச்சையே சில நிமிடங்கள் திணற வைத்து நிறுத்தக் கூடிய உயர்ந்த ரக வாசனை.

ரமா முகம் சுளித்தாள். "மாலினி, புதுப் புடைவைபோல் இருக்கே.."

"ஆமா. இன்னிக்குப் பிறந்த நாள் எனக்கு."

"போன வாரந்தான் பிறந்த நாள்னு சொல்லி ஒரு புதுப் பட்டுப் புடைவை உடுத்திண்டு வந்திருந்தே!"

"அன்னிக்கு என் ஜன்ம நட்சத்திரம். அதாவது, தமிழ்ப் பிறந்தநாள். இன்னிக்கு இங்கிலீஷ் தேதியின்படி பிறந்த நாள்."

ரமா புன்னகையுடன் கூறினாள். "வயசு ஏறுவதை நினைச்சாலே கவலையாக இருக்கும்னு நாங்க பிறந்த நாளைக் கொண்டாடும் வழக்கமில்லை. தேதி, கிழமை, இன்னும் பிறந்த நேரம்னுகூடப் பிறந்த நாள் கொண்டாடிப் புதுப் புடைவை வாங்குவே போலிருக்கே, எப்படி உனக்குக் கட்டுப்படி ஆகிறது?"

மாலினி பொருளுடன் சிரித்தாள். "நீ பைத்தியம், எங்க குடும்ப நிலை உனக்குத் தெரியாதா? சம்பளம் முழுவதும் பிடுங்கிண்டு தான் வீட்டிலே முதல் தேதியன்னிக்கு என்னை உள்ளே விடுவாங்க. என் கைக்காசைச் செலவழிச்சா இதை வாங்கறேன். யாரோ வாங்கித் தராங்க, உடுத்தறேன்."

"வீட்டிலே கேக்கறதில்லையா?"

"கேட்டா என்ன? ஓவர்டைம் செய்யும் பணத்திலே வாங்கினேன்னு சொல்வேன். ஆனா அந்தப் பணம் எல்லாம் பீச், சினிமான்னு கம்பெனி கொடுக்கறதுதான் என்ற விஷயம் மட்டும் அந்த மக்கு ஜனங்களுக்குத் தெரியறதில்லே."

"மாலினி, இது தப்பில்லையா?"

"தப்பு என்னடி? ஒரு புன்னகை காட்டினால் அஞ்சு நட்சத்திர ஹோட்டலில் ஸ்வீட்டோட டிபன். ஒரு குட் மார்னிங் சொன்னா உடனே சினிமாவுக்கு அழைத்துப் போக ரெடி, நம் தோளைத் தட்டிப் பேசவும், கன்னத்தைக் கிள்ளவும் இடம் கொடுத்தால் சேலை ஜாக்கெட் வாங்கித்தர ஆண்கள் தயாராக இருக்கும்போது நாம் ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது?"

"ரொம்பத் தப்புடி, மாலினி! இன்னிக்கு வேடிக்கையாகத் தான் இருக்கும். நாளைக்கே ஏதாவது விபரீதத்திலே கொண்டு விட்டுடும்."

"நீ சொல்றது புரியறது. நான் அவ்வளவு ஏமாளியில்லை. என்னைக் காப்பாத்திக்க எனக்குத் தெரியும்."

"உன் பெயருக்கே களங்கம் வந்துடும். உனக்கே கல்யாணம் ஆகாமல் போகாது. அந்தச் சமயத்தில் இதெல்லாம் உனக்குக் கணவராக வரப் போறவர் காதிலே பட்டால் உன் வாழ்க்கையே பாதிக்கப்படும்."

"நிறுத்து, ரமா, கற்புங்கறது உண்டுன்னு எனக்குத் தெரியும். இப்போ நான் நடந்துக்கற விதத்திலே என்னைக் கற்பு இழந்தவளாக யாரும் சொல்ல முடியாது. என்னை நம்பாதவன் எனக்குப் புருஷனாக வராவிட்டால் போகிறான்.. நடந்ததைப் பற்றிக் கவலைப்படாதவன் ஒருத்தன் எனக்குப் புருஷனாக வந்தால் போதும்."

"மாலினி?" அதிர்ச்சியுடன் ரமா ஒரு நிமிஷம் சாலையிலேயே நின்றுவிட்டாள்.

மாலினி அவளது கையைப் பற்றி நடந்துகொண்டே சொன்னாள்:

"ரமா, நீயே யோசிச்சுப் பாரு, புரியும். நீரிலே இன்னொருத்தன் அழகைப் பார்த்து மனசு சலனப்பட்டதுக்கே தலை வெட்டப்பட்ட பெண்ணின் கதையும் தெரியும். இன்னொருத்தன் தன்னைத் தூக்கிண்டு போனதினாலே, அக்னியிலே குளிச்சு, கற்பை உலகத்துக்கே காட்டின கதையும் உண்டு. அவ்வளவு எதுக்கு? நம்ப பாட்டிகள் காலத்திலே சுவருக்குப் பின்னாலே நின்னு, முகம் பிறருக்குத் தெரியாமப் பேசினதை நாமே பார்த்திருக்கோம். காத்திலே கர்ப்பூரம் கரையற மாதிரி, காலத்தின் வேகத்தில், நாகரிகத்தின் வளர்ச்சியிலே கற்பினுடைய சட்டதிட்டம் கரைஞ்சுண்டு வருது."

"மாலினி, நான் உன்னைத் தப்பாகச் சொல்லலே. நமக்குச் சம்பந்தப்படாதவர்களிடமிருந்து, அதுவும் ஆண்களிடமிருந்து பொருள்கள் பெறுவது தப்பில்லையா? நமக்கு இழுக்கில்லையா?"

"குரங்குகளைக் காட்டிக் குரங்காட்டி உணவைத் தேடுகிறான். பெண்களை வைத்து எத்தனையோ ஆதாயங்கள் தேடிக் கொள்கிறார்கள். பெண்களுக்குப் பழைய தொல்லைகளிலிருந்து விடுதலை கிடைக்கவில்லை. அதிகப்படியாக ஆபீசுக்குப் போகும் தொல்லையும்கூடச் சேர்ந்திருக்கு. இது தெரியாமல் நாமும் பல்லை இளிச்சுண்டு முன்னேறி விட்டதாக, பெண்ணுக்குச் சுதந்தரம் கிடைத்து விட்டதாகப் பெருமைப்படறோம். குரங்குக்கு எப்போதாவது கிடைக்கிற கடலை மாதிரி என்னைப் போன்றவர்களுக்குக் கிடைக்கின்றன. இந்தச் சின்ன விஷயங்கள்; மெழுகுவர்த்தியாக உருகிப் போகிற நமக்கு இந்த உல்லாசங்களும் இல்லேன்னா, உனக்கு இந்த ஆபீசில் மணிமேகலைன்னு பட்டம் கிடைச்ச மாதிரி, எல்லாப் பெண்களுமே மணிமேகலை வாழ்க்கை வாழ வேண்டியதுதான்."

ரமா வெட்கத்துடன் சிரித்தாள். "மணிமேகலைன்னு எனக்குப் பெயர் வைச்சிருக்கிறதும் தெரியும். ஆனா மெழுகுவர்த்தி எரிந்து உருகுவதும், சிகரெட் புகைந்து விடுவதும் ஒன்று போல நீ பேசறே. என்னாலே அதை ஒப்புக்கொள்ள முடியவில்லை."

"ரெண்டும் ஒன்றில்லைதான். எனக்கும் தெரியும். அதுக்காக மெழுகுவர்த்தியாவே கரைய முடியுமா."

மாலினி வேகமாக மாடிப் படிக்கட்டில் ஏறினாள். அக்கௌண்டண்ட் மோகன் அவள் வருவதைப் பார்த்ததும் மேல் படிக்கட்டில் அவளுக்காக நின்றான்.

அவர்கள் இருவரும் போவதற்கு நேரம் கொடுத்து ரமா நிதானமாகப் படிகளில் ஏறினாள். அவளுடைய பார்வை, தன்னுடைய புடைவையின் மேல் விழுந்தது. சாயம் மங்கி, பார்டர் சிறிது கிழிந்து தைத்திருந்தாலும், அவளுக்கு அது ரொம்பப் பிடித்திருந்தது. ❋

ஏதாவதொரு மிக்ஸரைவாங்கிவிடாதீர்கள்
... உங்கள் தேவைக்கேற்றது ஸுமீத்

அற்புதமான ஸுமீத் ! இதன் வகையில் இந்தியாவிலேயே முதலாவது, நாடெங்கிலும் மேன்மேலும் அதிக இல்லத்தரசிகளுக்கு வியப்பூட்டி வருகிறது.

ஸுமீத்தில் மட்டுமே, எல்லா வேலைகளுக்கும் பயனுரும், விசேஷமாக வடிவமைக்கப்பட்ட, பல-பயனுள்ள ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஜாடி. அதன் மீது உள்ளே பார்க்கக் கூடிய அக்ரிலிக் மூடி, எனவே ஸுமீத் இயங்குவதைக் கண்ணெதிரில் காணலாம்.

பல்வேறு வேலைகளை விரைவிலும் எளிதிலும் செய்து முடிக்க, இப்போது இதில் 4 அலகு அமைப்பு பாகங்கள் :

ஈரப் பண்ட அரைவைக்காக,
உலர் பண்ட அரைவைக்காக,
கடைய, கலக்க, சாறு பிழிய,
மாமிசத்தை அரிக்க,
காய்கறிகளை நறுக்க.

இவை மட்டுமா? ஸுமீத்தில் 30 நிமிடங்கள் வரை நிற்காமல் ஓடக்கூடிய ஹெவி ட்யூட்டி மோட்டார்.

அற்புதமான ஸுமீத் ஒன்றுதான் முழுமையான கிட்சன் மெஷின். இதை அடைய எத்தனை நாள் வேண்டுமானாலும் காத்திருக்கலாம்.

ஈர அரவை— வடை, இட்டிலி, தோசைக்காக உளுந்தம் பருப்பு மற்றும் அரிசியை அரைக்க 3½ நிமிடங்களில்.

உலர் அரவை— எல்லாவித மசாலாக்கள், மிளகாய் வற்றல், மிளகு, மஞ்சள், கொத்துமல்லி விதை ஆகியவற்றை அரைக்க.

பொடிக்க— 1 நிமிடத்தில் மாமிசத்தை பொடிக்க, காரெட், வெங்காயம், தேங்காய் மற்றும் கொட்டைகளை நறுக்க— விநாடிகளில்.

அரைக்க— 2 நிமிடங்களில் தேங்காய் சட்னி அரைக்கலாம் அல்லது விநாடிகளில் கொத்துமல்லிச் சட்னி அரைக்கலாம்.



கடைய— லஸ்ஸி, மில்க் ஷேக் ஆகியவற்றை ஒரே நிமிடத்தில் தயாரிக்க அல்லது நிமிடங்களில் மயோன்னைஸ் தயாரிக்க. வீட்டிலேயே வெண்ணெய் கடையலாம்.

விருப்பத் தேர்வு : ஒப்பற்ற நீடிங் இணைப்பு



மாவு பிசைய— சப்பாத்தி, பூரி, நான் தயாரிக்க 2 நிமிடங்களில் மாவு பிசையலாம், கேக் மாவை மிகவும் சன்னமாகப் பிசையலாம்—. 3½ நிமிடங்களில்.

ஸுமீத்®
உங்கள் முழுமையான கிட்சன்மெஷின்

அற்புதமான ஸுமீத் பரவலாகப் பல்வேறு பணிகளைச் செய்கிறது - மற்ற எல்லா வீட்டுபயோக மிக்ஸர்களைவிடச் சிறப்பாக.
எப்போது நாங்கள் இலவசமாக இயக்கிக் காட்டுகிறோம் என்பதைக் கவனித்து வாருங்கள். உங்களுக்கொவே ஸுமீத் சிறப்பாக இயங்குவதைக் காணுங்கள்!

தயாரிப்பாளர்கள் :
பவர் கண்ட்ரோல் அண்ட் அப்ளையன்ஸஸ் கம்பெனி F/11 இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை 600 058 இந்தியா. ஃபோன் : 633340

OBM/8869/TM

சர்வீஸ் சென்டர்ஸ் :
சென்னை : ரெப்ராகிராஃபர்ஸ் & என்ஜினியர்ஸ், தொலைபேசி : 445700/442055 ● விவேக் ஏஜென்ஸீஸ், தொலைபேசி : 76923/75661 ● விவேக் & கம்பெனி, தொலைபேசி:444129 ● விவேக் & கம்பெனி, தொலைபேசி : 663545 ● வி. ஜி. பன்னீர்தாஸ் & கம்பெனி. தொலைபேசி : 812121/88184,
மதுரை : ஜே. என்ஜினியரிங் கார்ப்பரேஷன், தொலைபேசி : 24028.
கோயம்புத்தூர் : ஜே. என்ஜினியரிங் கார்ப்பரேஷன், தொலைபேசி : 24579/25566,
திருச்சி : ஸ்டாண்டர்ட் எலெக்ட்ரிக் கம்பெனி, தொலைபேசி : 24343.

எமது வாடிக்கையாளர்களுக்கும் அன்பர்களுக்கும்
இதயம் கனிந்த
தீபாவளி நல்வாழ்த்துக்கள்

இருபத்தெட்டு ஆண்டுகளாக மகளிர் மனம் கவரும் வண்ணம் கண்கவர் கலர்களிலும், புதுப் புது ரகங்களிலும், டிசைன்களிலும் காஞ்சிபுரம் பட்டாடைகள் தயாரித்து மக்களின் நல்லாதரவைப் பெற்ற நிறுவனம்.

உயர்ந்த காஞ்சிபுரம் பட்டு ஜரிகை சேலைகள்,
பாவாடைகள் குறைந்த விலைக்கு
வாங்க வருகை தருக!

காஞ்சிபுரம் காமாட்சியம்மன் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் லிட்.,

நெ. ஜி. 1612

(குளிர்பதனம் செய்யப்பட்டது)

168-ஏ, காந்தி ரோடு, காஞ்சிபுரம்-631 501
போன்: 2202

கிளை விற்பனை நிலையங்கள்:

1. 27, இரண்டாவது அக்ரஹாரம், சேலம்-636 001 போன்: 66470
2. 28-10-16, மசூதி வீதி, அருண்டேல்பேட்டை, விஜயவாடா-520 002 போன்: 77375
3. நெ. 231/13, கிருஷ்ணா மார்க்கட், சிக்பெட், பெங்களூர்-560 053
4. காஞ்சி கோவாப்பரேடிவ் சில்க்ஸ், உம்மிடியார் ஷாப்பிங் சென்டர், அண்ணா சாலை, சென்னை-600 002

ஜி. சங்கரராமசுப்ரமணியன், பி.ஏ.,
உதவி இயக்குநர்/செயலர்

ஏ. கே. ஆள்வார்,
உப தலைவர்/தலைவர் பொறுப்பு

இயக்குநர்கள்:

திரு. கே. வி. கோவிந்தராஜுலு,
திரு. கே. ஏழுமலை கிராமணி,
திரு. எஸ். துரைசாமி செட்டி,
திரு. என். ஆர். எத்திராஜுலு,
திரு. பி. ஸ்டாலின்

மோகினி ஆட்டம்

நடனம் கோபாலகிருஷ்ணன்

'சொற்கட்டு' என்ற உருப்படியில் ராஜம்மா

ஆய கலைகள் அறுபத்து நான்கில் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது அபிநயக் கலையாகும். அதிலும் முதலிடம் வகிப்பது நாட்டியக் கலை. 'கலைகளில் சிறந்தது, கவலையைத் தீர்ப்பது, கடுந் தவத்தையும் கலைக்கும் வலிமை உடையது நாட்டியக் கலை' என்று முன்னோர்கள் பாடி இருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட சாஸ்திரீயக் கலைகளில் சிறந்து விளங்குவது மோகினியாட்டம். கேரளத்துக் கலைகளில் லலிதமும் எழிலும் நிறைந்தது. இதைத் தவிர, சாக்கியர் கூத்து, கூடியாட்டம், கிருஷ்ணன் ஆட்டம், கதகளி, ஓட்டம் துள்ளல் என்பனவும் உள்ளன. மோகினியாட்டத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களில் ஆண்களும் இருப்பினும் ஆடுவது பெண்களே. அதனால் மோகினியாட்டம் பெண்களுக்கே உரித்தானது என்று கூறலாம்; மோகினியாட்டம் என்ற சொல்லுக்கு மோகனாங்கிகள்-அழகிகள் ஆடும் ஆட்டம் என்பது பொருள்.

மோகினியாட்டம் என்ற அழகான ஆடற்கலை எப்போது, யாரால், எங்கு உருவாக்கப்பட்டது என்பதற்குச் சரித்திரச் சான்றுகள் இல்லை. ஏறக்குறைய 1200 ஆண்டுகளுக்கு முன்பே, கேரளத்தை ஆண்டு வந்த சேரமான் பெருமான் காலத்திலேயே மோகினியாட்டக் கலை நடை முறையில் இருந்து வந்ததாக வரலாறு கூறுகின்றது.

கட்டுரையாசிரியர்

தமிழ்நாட்டின் முற்காலத்தைய தாசியாட்டம் போலவே கேரளாவிலும் அந்தக் காலத்தில் மோகினியாட்டம் நடந்து வந்தது. தாசியாட்டம் என்பது கோவில்களில் விழாக் காலங்களில் நடைபெற்று வந்தது. ஆனால் மோகினியாட்டம் பிரபுக்களின் இல்லங்களில் அவர்களை மகிழ்விப்பதற்காக நடைபெற்றது.

தமிழகத்தில் பரதம் வளர்ந்த அதே சமயத்தில் கேரளத்தில் மோகினியாட்டத்தின் புகழ் மங்கத் தொடங்கியது. பரதநாட்டியம் உயர்குல மாதராலும் கற்றுக்கொள்ளப்பட்டு மேடையில் ஆடப்பட்டது. ஆனால், கேரளத்தில் எவரை மகிழ்விக்க இந்த ஆட்டம் ஆடப்பட்டு வந்ததோ அவ்வீட்டு மாதரே இந்தக் கலையை இழிந்ததெனக் கருதி இதைக் கற்க மறுத்தனர்.

இப்படிச் சில நூறு ஆண்டுகள் கலையின் புகழ் மங்கி, மறைந்த நிலை தொடர்ந்தது. காலப்போக்கில் மனிதர்களுடைய மனோநிலையிலும், ரசிப்புத் தன்மையிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. அதற்கேற்றாற் போல் கலைகளிலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. உயர்குலத்தில் பிறந்தவர்களும் அருமையான இந்த மோகினியாட்டக் கலையை ஆசையுடன் கற்கத் தொடங்கினர்.

சுவாதித் திருநாள் காலம் : ஏறக்குறைய 150 வருடங்களுக்கு



குமாரி சுஜாதாவின் இரு நடன நிலைகள்

முன் திருவாங்கூர் சம்ஸ்தானத்தைச் சுவாதித் திருநாள் மகாராஜா ஆண்டு வந்தார். கலைகளுக்கும் கலைஞர்களுக்கும் அது ஒரு பொற்காலம் என்றே கூறலாம். அவர் வித்வத் சபை அமைத்து, வெளிமாநிலங்களில் இருந்தெல்லாம் கலைஞர்களை வரவழைத்து ஆடல் பாடல் கலைகளின் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றினார். அவருடைய வித்வத் சபையில் முக்கியமாக விளங்கிய இரயிம்மன் தம்பியும் மன்னரும் சேர்ந்து மோகினியாட்டத்துக்குப் பல பாடல்களை இயற்றியிருக்கிறார்கள். இன்றும் நாட்டியக் கலையில், முக்கியமாக மோகினியாட்டத்தில் அவை பாடப்பட்டு வருகின்றன.

அவர் காலத்தில் மோகினியாட்டம் முன்பிருந்த வாட்டம் நீங்கித் திடம் பெற்றுக் கேரளாவில் பல இடங்களிலும் மோகினியாட்டக் குழுக்கள் இருந்ததாகச் சரித்திரம் கூறுகின்றது. அம்பலப்புழைக் கோயிலில் உற்சவக் காலங்களில் மற்றப் பல கலை நிகழ்ச்சிகளுடன் மோகினியாட்டமும் ஆடப்பட்டு வந்தது என்பதற்கு ஓட்டந்துள்ளல் கர்த்தாவான குஞ்சன் நம்பியார் கூறுகிறார்.

"பாடணி மூலமார் மோகினியாட்டம்
பாடவமேறின பலபல மேளம்."

மோகினியாட்டம் பிரபுக்களின் இல்லங்களை விடுத்து, பொதுமக்களை மகிழ்விப்பதற்காகக் கோவிலுக்கு வந்தது என்பது இதனால் அறிய வருகின்றது. இவ்வாறு சில வருடங்கள் உருண்டோடின. சுவாதித் திருநாள் காலம் முடிந்ததும் மோகினியாட்டத்துக்கு மீண்டும் அஞ்ஞாதவாசம் தொடங்கியது.

தேடினால் கூடக் கிடைக்காத அளவுக்கு மோகினியாட்டக் கலைஞர்கள் இல்லாது போயினர். திருவனந்தபுரத்தை அடுத்துள்ள பாரசாலை, குருவாயூரை அடுத்த கொரட்டிக்கரை, திருச்சூரை அடுத்த பழயன்னூர், லக்கிடியை அடுத்த தடுக்கச்சேரி போன்ற சில கிராமங்களில் மட்டும் சில குடும்பங்கள் இருந்து வந்தன. மோகினியாட்டமே கேரளத்தில் இல்லாமல் போய் விடுமோ என்ற பயம் ஏற்பட்டது. அந்தச் சமயத்தில் 1930-இல் மகாகவி வள்ளத்தோளும், அவருடைய நண்பர் முகுந்த ராஜாவும் சேர்ந்து கேரள கலா மண்டலத்தை நிறுவினார்கள். கதகளியும் அத்துடன் மோகினியாட்டமும் கற்பிக்கத் தொடங்கினர்.

ஆனால், கற்பிக்கத் தெரிந்த ஆசிரியர் வேண்டுமே? தேடித் தேடிப் பெருங்கோட்டுக் குறிச்சி கல்யாணியம்மா, கொரட்டிக்கரை கிருஷ்ண பணிக்கர் முதலிய ஆசிரியர்களை நியமித்தனர். அவர்களிடமிருந்து கற்றுத் தேர்ந்தவர்கள் தாம் பிரபல கதகளி நடனக் கலைஞர் கிருஷ்ணன் நாயரது மனைவி கல்யாணிக் குட்டி அம்மா, குரு

கோபிநாதின் மனைவி தங்கமணி, லட்சுமி, அம்மணி முதலியோர்.

கேரள கலாமண்டபத்தில் மோகினியாட்டம் ஒரு பாடமாகத் தொடர்ந்து நடந்தது. முதலில் கூறிய ஆசிரியர்களுக்குப் பிறகு பழயன்ூர் சின்னம்மு அம்மா ஆசிரியராக நியமிக்கப்பட்டார். பல நடனமணிகள் அவரிடமும் கற்றுத் தேர்ந்தனர். ஆனாலும், கேரளத்தைவிட்டு இந்தக் கலை வெளியே வரவில்லை. ஒரு முழுக் கச்சேரிக்கு வேண்டிய உருப்படிகளும் இல்லை என்ற நிலைமையில் இது இருந்தது.

மோகினியாட்டத்தைக் கேரளத்துக்கு வெளியே கொணர்ந்த பெருமை என்னையே சாரும். 1962-இல் நான் சென்னைக்கு வந்தேன். 1963-இல் மீனம்பாக்கத்தில் பத்மினி என்ற ஒன்பது வயதுச் சிறுமிக்கு மோகினியாட்டம் கற்பிக்கத் தொடங்கினேன். அவளே மோகினியாட்டத்தில் என்னுடைய முதல் மாணவி. பல வருடங்கள் என்னிடம் நாட்டியக் கலை பயின்று வெளிநாடுகளிலும் தனது திறமையை வெளிப்படுத்தி. இப்போது பத்மினி ஸ்ரீநிவாசனாக அமெரிக்காவில் கலிஃபோர்னியா நகரில் நடனப் பள்ளி நடத்தி வருகிறாள்.

பிரபல திரைப்பட நடிகையும்நடனமணியுமானதிருமதி ஹேமமாலினிக்கு நான் 1967 - ஜனவரியில் மோகினியாட்டம் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தேன். மோகினியாட்டக் கலையை உலக அரங்குக்கு உயர்த்திய பெருமையில் ஹேமமாலினிக்குப் பெரும் பங்கு உண்டு. ஏனெனில் இந்தியாவில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும் அவருடைய கலை நிகழ்ச்சிகளில் மோகினியாட்டம் இடம் பெற்று வருகிறது.

சம்பூர்ண மோகினியாட்டம்: பரத நாட்டியத்தைப் போல ஒரு மூன்று மணி நேரம் ஆடக் கூடிய உருப்படிகள் இல்லாத குறை மோகினியாட்டத்தில் இருந்தது. அந்தக்குறையைப் போக்க, முழு நேர நடனத்துக்கு வேண்டிய உருப்படிகளைத் தொகுத்திருக்கிறேன். ஏற்கெனவே நடைமுறையில் இருந்த உருப்படிகளுடன் புதிதாக மூகாம்பிகா ஸ்துதி, அஷ்டபதி, நாராயணீயம், ஸ்வாதித் திருநாளது, ஸாமஸாயக - காபி வர்ணம், தனஸ்ரீ - தில்லானா, ப்ரபாதம், ஊர்வசி போன்ற பல உருப்படிகளைச் சிட்டப்படுத்தி, சம்பூர்ண மோகினியாட்டம் மேடையில் ஆடத் தொடங்கியது. அதற்கு நல்ல வரவேற்பும் கிடைத்தது.

பிரபல நாட்டிய மணிகளான பத்மா, ஜயஸ்ரீ (விஜயநகரச் சகோதரிகள்) இவர்களே முதல் முதலில் இந்தியாவில் 1972 ஏப்ரலில், பம்பாயில் சம்பூர்ண மோகினியாட்டத்தை நிகழ்த்தினர்.

1973 - இல் ஹேமமாலினியுடன் நான் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்தபோது என்னுடைய மாணவி பத்மினியையும் அழைத்துச் சென்றிருந்தேன். இம்முறை நாங்கள் அமெரிக்கா, கானடா, மேற்கிந்தியத் தீவுகள் முதலிய நாடுகளில் நாற்பதுக்கும் மேலான நிகழ்ச்சிகளை நடத்தினோம். அங்கெல்லாம் பரத நாட்டியத்துடன் மோகினியாட்டமும் ஆடி மக்களுடைய ஆதரவையும் பெற்றோம்.

அமெரிக்காவில் கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் எங்களுடைய கச்சேரி நடந்தபோது ரசிகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மோகினியாட்டத்தில் ஓர் அயிட்டமான பந்தாட்டத்தை மூன்று முறை பத்மினி ஆடிக் காட்டினாள். அதற்குப் பின்பும் நாங்கள் வெளிநாடுகளில் பல நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறோம்.

என்னுடைய மாணவிகள் அமெரிக்கா, கானடா, பிரான்சு, சிங்கப்பூர், ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளில் நடனப் பள்ளிகள் நடத்தி, அதில் மோகினியாட்டம் கற்பிக்கின்றனர்.

ஆதிகாலத்தில் மோகினியாட்டக் கலையில் பிரசித்தி பெற்ற நடனமணிகளாக விளங்கியவர்கள் பாரசாலா பாருக்குட்டி அம்மா, வெள்ளப்புறத்து சின்னம்மு அம்மா என்பவர்களே என்று சொல்லிக் கேட்டிருக்கிறேன்.

நளினமும் எழிலும் பாவச் செழிப்பும் கொண்ட இந்த ஆட்டத்தை இவர்கள் ஆடிப் பார்க்க வேண்டும் என்பார்கள், பெரியவர்கள்.

'நாட்ய வேதம் ததெள பூர்வம்
பரதாய சதுர்முக:..'

என்ற சுலோகத்தில் நடனக்கலையின் தோற்றத்தைப் பற்றியும் நிருத்தம், நிருத்யம், நாட்டியம் என்னும் மூன்று நடன வகைகளைப் பற்றியும், அவற்றிலிருந்து உண்டான தாண்டவம், லாஸ்யம் என்னும் சம்பிரதாயத்தைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. தாண்டவத்துக்கு அதிபதி சிவபெருமான் என்றும் லாஸ்யத்துக்கு அதிபதி பார்வதி என்றும் பரதசாஸ்திரம் கூறுகிறது. இந்த லாஸ்ய சம்பிரதாயத்தைச் சேர்ந்ததே மோகினியாட்டம்.

வளர்ந்து வரும் நடனமணிகளில் சம்பூர்ண மோகினியாட்டம், அதாவது, மூன்று மணி நேரம் ஆடும் திறமை பெற்ற என்னுடைய தற்போதைய மாணவிகளில் முதல் வரிசையில் நிற்பவர்கள் ராஜம்மா, சுஜாதா ஆகிய இருவருமே.

தென்னிந்தியாவில் சம்பூர்ண மோகினியாட்டம் கற்பித்துச் சான்றிதழ் வழங்கும் ஒரே ஒரு நடனப் பள்ளி 'கலாஸ்ரீ' நடனப் பள்ளியே யாகும். லலிதம் நிரம்பிய இந்த மோகினியாட்டக் கலை வளரவேண்டும்; அதன் புகழ் திக்கெட்டும் பரவ வேண்டும் என்பதே என் விருப்பம். ❋

கலிஃபோர்னியாவில் நடனப் பள்ளி நடத்தும்
பத்மினி ஸ்ரீநிவாசன்

ROYAL PAIR CRACKERS

REGISTERED TRADE MARK

ADWAVE/NFF/2172

வரும் ஆசிய விளையாட்டு அரங்கிலே ஒளி வீசும் வீரச்சிங்கம்

அதன் புகழ் வானளாவி
வண்ணக் கோலமிடும்.
காண்போர் களித்து மகிழ

சிங்கம் மார்க் பட்டாசு வகைகள்.

தி நேஷனல் பயர் ஒர்க்ஸ் பாக்டரி
சிவகாசி 626 123
போன்: 60 & 1205
த.பெ. எண். 13
தந்தி: SPARKLERS

ஸ்டாக்கிஸ்டுகள்:

- 315, கீழமாசி வீதி, மதுரை-1.
- 33, பாலக்கரை மெயின் ரோடு, திருச்சி-8.
- 35, ஆண்டர்சன் சந்து, மதருஸ்-1.
- 12 & 13, பாலாஜி காம்ப்ளக்ஸ், சுல்தான்பேட்டை, பெங்களூர்-53.
- 315, நரசிநாத தெரு, கஜுிர்வாலா சேம்பர்ஸ் முதல் மாடி, பம்பாய்-9.
- 26/557, ரங்கையா கவுடர் வீதி, கோவை-1.
- 646, கோட்டை மெயின் ரோடு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்-2.

அம்மாவுக்கு மருந்து....

-அனுராதா ரமணன்.

"இன்னிக்காவது மருந்து வாங்கிண்டு வாடா."

கிழவி தர்மு, மகனிடம் பொதுவான குரலில், மருமகளின் காதில் விழாத குரலில் கூறினாள்.

குரல்தான் சன்னமாக இருக்கிறதே தவிர வார்த்தைகளில் அசாத்திய அழுத்தம். கணேசன் கூனிக் குறுகிவிட்டான். அம்மாவுக்கு மருந்து வாங்க வேண்டுமே என்கிற ஆதங்கத்தைவிட, 'இந்த அம்மாவுக்குத் தான் எத்தனை குதர்க்கத்தனம்?' என்கிற எரிச்சலே அதிகமாக இருந்தது.

தர்மு, கிட்டத்தட்ட பத்து நாட்களாய், தன் கண்ணுக்கு மருந்து கேட்கிறாள். அதை வாங்கித் தரக் கூட முடியாத அளவுக்குக் கணேசன் ஏழை அல்ல. நடுத்தர வர்க்கத்துக்கும் மேலேயே அவன் வருமானம். கை நிறையச் சம்பளம். அளவாய் இரண்டே இரண்டு குழந்தைகள். இதோ நேற்றுக்கூட, மனைவி சியாமளாவுடன் வெளியே போனபோது எதிர்பாராத விதமாய் இருநூறு ரூபாய் செலவு.

"அந்த 'ஷோ ரூம்'லே இருக்கற புடைவை நன்னாயிருக்கு இல்லே? இதே மாதிரிதான் எங்க மன்னி புனாவிலீருந்து வாங்கிண்டு வந்து, தன் தங்கைகளுக்கு எல்லாம் கொடுத்து, தானும் எடுத்துண்டா. நாத்தனாருக்கு ஒரு புடைவைகொடுக்க மனசு வரல்லே."

சியாமளா சொன்ன போது, கணேசன் சற்று நேரம் மௌனமாக இருந்தான். அவனுக்குத் தெரியும், என்ன நடந்தது என்று. சியாமளாவின் மன்னி, இவளுக்காக ஒரு புடைவையைக் கொடுத்ததும் இவள், "எல்லாருக்கும் கொடுத்துட்டுக் கடைசியிலே மிஞ்சின சரக்கு எனக்காக்கும். வாங்கிண்டு வந்த உடனேயே எனக்குச் சொல்லி அனுப்பியிருந்தா, எனக்குப் பிடிச்ச கலரை எடுத்துண்டிருப்பேன். எல்லாரும், 'எனக்கு வேண்டாம், உனக்கு வேண்டாம்'னு தள்ளினதுதான் எனக்கு வந்து சேரும். அப்படி ஒண்ணும் யாரும் இங்கே புடைவை இல்லாம நிக்கலே. இதையும் நீயே எடுத்துக்கோ" என்று சொன்னவள் தான் சியாமளா.

சியாமளாவின் சுபாவம் இது; இருந்தாலும் இதை வாய்விட்டுச் சொல்லித் திருத்தக் கணேசனுக்கு முடியாது.

ஆனால் இதே சியாமளா, ஷோ ரூம் புடைவையைப் பார்த்து, தயங்கித் தயங்கி நின்ற போது, அந்தப் புடைவையின் தரத்தையும், இரண்டு மூன்று வருஷங்களுக்குப் பிறகும் புடைவை 'கல்லுப் போல' இருக்கும் என்பதையும் திரும்பத் திரும்பக் கூறிய போது, 'எதற்கும் கடைக்குள் போய் விலை விசாரிக்கலாமா? மன்னி சொன்ன விலைக்கும் இதுக்கும் எவ்வளவுதான் வித்தியாசப் படறதுன்னு பார்த்துடலாமே!' என்றான். இப்படிக் கூறியபடி கடைக்குள் நுழைந்தபோது, "ஐயோ, கொள்ளை மலிவுன்னா" என்று ஆதங்கப்பட்டாள் சியாமளா. கடைசியில் தனது ஒரே அஸ்திரமான, "உம். ஆடை வாய்க்கறதும் அகமுடையான் வாய்க்கறதும் அவா அவா அதிருஷ்டத்தைப் பொறுத்த விஷயம்னு பெரியவா தெரியாமலா சொன்னா?" என்ற வார்த்தைப் பாணத்தை அவன்மீது வீசினாள்.

"வேணுமானா, வாங்கிக்கோயேன் சியாமளா. என் கிட்ட பணம் இருக்கு" என்று சொல்லவேண்டியதாகி விட்டது. திடீர்ச் செலவாய் இருநூறு ரூபாய். வீடு திரும்புவதற்குக் கூடக் கையில் சில்லறை போதும் போதாத நிலை. இதில் அம்மாவுக்கு மருந்து வாங்க ஏது பணம்?

"அடடே! பத்து நாளா அம்மா கண்ணுக்கு மருந்து கேக்கறா. இன்னிக்கும் வாங்க மறந்தே போயிட்டேன்."

"நான் சொல்றேனேன்னு கோவிச்சுக்காதீங்கோ. உங்க அம்மாவுக்கு நீங்க மருந்து வாங்கித் தர்றதை நான் வேண்டாம்னு சொல்லலை. ஆனா, எதுக்கும் ஒரு அளவு வேணும். நேத்துக்கூட அந்தக் கண் டாக்டரைப் பார்த்தேன். 'என்ன டாக்டர், ஆபரேஷன் ஆகி, ஆறு மாசமாறது. இன்னமும் எங்க மாமியாருக்குக் கண் சரியாகல்லையே'ன்னு கேட்டேன், அதுக்கு அவர் என்ன சொன்னார் தெரியுமோ?"

"என்ன சொன்னார்?"

"உங்க மாமியாருக்கு வயசாறது இல்லே? இத்தனை வயசுக்கு மேல, கண்ணு 'பளிச்சுனு' தெரியணும்னா ஆகற காரியமா? ஏதோ, வயசானவா அப்படித்தான் தொணதொணன்னு ஏதாவது சொல்லிண்டே இருப்பாங்கனார்."

"அப்ப, அம்மாவுக்கு 'ஐ டிராப்ஸ்' வாங்க வேண்டாங்கறயா?"

"ஐயோ! நான் அப்படியா சொன்னேன்? மாமியாருக்கு மருந்துகூட வாங்கித் தராத பாவின்னு பட்டப் பெயர் வேற எனக்கு வரணுமா? ஏற்கனவே உங்க அம்மா குடுத்திருக்கற பட்டப் பெயரெல்லாம் போதாதா? வாயாடி, ராங்கிக்காரி, ராட்சஸி, மேனாமினுக்கி! ஒண்ணா, ரெண்டா! போதும் சாமி! நீங்களாச்சு, உங்க அம்மாவாச்சு? இனிமே மருந்துக்காகச் செலவழிக்கறதெல்லாம் வீணுன்னு டாக்டர் சொன்னதைச் சொன்னேன். அவ்வளவுதான்."

"கண்ணைக் கரிச்சுக் கரிச்சுக் கலமாக் கொட்டறதுங்கறாளே?"

"என்னிக்குத்தான் உங்க அம்மாவுக்குக் கண்ணைக் கரிச்சு ஜலம் கொட்டாம இருந்திருக்கு? நான் நன்னா டிரஸ் பண்ணிண்டா கண்ணைக் கரிக்கும். நீங்க என்னை ஸ்கூட்டர்லே ஏத்திண்டு போனாக் கண்ணைக் கரிக்கும். எங்க அம்மா, அப்பா யாராவது அதிசயமா நம்ம விட்டுக்கு ரெண்டு நாள் வந்து தங்கினா உடனே கண்ணைக் கரிக்கும்."

இதற்கு மேல் என்ன சொல்வான் கணேசன்?

"கையில என்ன பாக்கெட்?"

அவர்கள் உள்ளே நுழையும் போதே தர்மு கேட்டாள்.

"இது கண்ணுக்குத் தெரியறதோன்னோ?" சியாமளா, ரகசியமாய்க் கணவனின் தோள் பட்டையில் இடித்தாள்.

நிஜந்தான். 'கண்ணைக் கரிக்கிறது. ஒரே எரிச்சல்' இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் தர்மு இந்த அரைகுறைப் பார்வையை வைத்துக் கொண்டே துருவித் துருவி ஒன்று விடாமல் கவனித்துவிடுவாள்.

தர்மு அந்தக் காலத்து மனுஷி. அவள் எதைச் செய்தாலும் நறுவிசாக இருக்கும். துளசி மாடத்தின் முன்பு அரிசி மாவினால் கோலம் போட்டால், இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அதற்கென்று கோல மாவை நிறையச் செலவழிக்கவும் மாட்டாள். சின்னதாய் இரண்டு கம்பியிழைகள். ஒரு 'ஸ்ரீராமஜயம்', ஒற்றைச் சங்கு, இல்லாவிட்டால் சக்கரம். கண்ணில் ஒற்றிக் கொள்ளலாம் போல இருக்கும். அதே போலத்தான் சமையலிலும், மற்றக் காரியங்களிலும். இதெல்லாம், பார்வை ஒழுங்காக இருந்தபோது.

அந்த நாளில், சியாமளா இவளிடம் காரியம் தெரியாததற்காக, வாங்கிக் கட்டிக் கொண்ட வார்த்தைகள் கொஞ்ச நஞ்சம் இல்லை.

''கோலம் போடத் தெரியல்லே. பூத் தொடுக்கத் தெரியல்லே. இதையெல்லாங்கூடக் கத்துக்காம, என்ன காலேஜ் படிப்பு வேண்டிக்கெடக்கு?

''நாலு பேருக்கு, நின்னபடியே-குனிஞ்சு சாதம் பரிமாறத் தெரியல்லே. 'பொத்துப் பொத்து'ன்னு சாணி மாதிரி உட்கார்ந்து பரிமார்ரு. இப்பவே இப்படி இருந்தா, நாளைக்கு வயித்துல வந்தா என்ன தான் செய்வாளோ?

''குத்து விளக்கேத்தின இப்படியா எண்ணெய் வழிய வழிய விடுவா ஒருத்தி? பதவிசு வேண்டாமோ? அப்படிஎன்ன தாமரதண்டித்தனம்?''

இதற்கெல்லாம்-வட்டியும் முதலுமாய்த் திருப்பித் தருகிற சந்தர்ப்பம் இப்பொழுது சியாமளாவுக்கு.

ஏதோ, மாமியார் தனக்குக் காரியம் வரத்தானே இப்படிச் சொல்கிருள் என்று அவள் இந்த வார்த்தைகளைப் பொருட்படுத்தாமல் இருந்திருக்கலாம்.

தர்முவும், 'இப்பொழுது தெரியாவிட்டால் என்ன? எல்லாம் தானே, பின்னல் தெரிந்து கொள்வாள்' என்று வார்த்தைகளைச் சிதற விடாமல் இருந்திருக்கலாம்.

இரண்டு பேருமே துவஜம் கட்டிக் கொண்டு களத்தில் இறங்கிய தன் பலன்?

இன்று.

கணவன் ஆயிரக்கணக்கில் சம்பாதித்தாலும், அவன் பணத்தில் யார் யாரோ சாப்பிட்டாலும், மாமியாருக்கு என்று வரும்பொழுது சியாமளாவின் கை, கொஞ்சம் பின்னுக்குத்தான் இழுக்கிறது.

இவள் எப்படியோ போகட்டும். இந்தக் கணேசனுக்குத் தைரியம் வேண்டாமோ? ''என் அம்மாவுக்கு என்னை விட்டா யாருடி இருக்கா?'' இப்படி ஓர் அதட்டல் போடத் துணிச்சல் இல்லாத ஆண் பிள்ளை எதில் சேர்த்தி?

அவனைப் பொறுத்த வரையில் அம்மா நல்லவள்; நிரம்ப நல்லவள். சின்ன வயசிலேயே தகப்பனை இழந்த மகனை இவள்தான் பாடுபட்டுப் படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டு வந்தாள். இன்று, அவன் ஆயிரக் கணக்கில் சம்பாதிக்கிருனென்றுல், அது இவளது உழைப்பின் மகிமையால்தானே தவிர, வேறு மனித சமுதாயத்தினுல் அல்ல.

இன்றளவும் அவனுக்குத் தலையைக் காலை வலித்தால், பதறிப் போகிறவள் அம்மாதான். சியாமளாவுக்கு அவனது நலனில் அக்கறை இல்லாமல் இல்லை. இருக்கிறது. இருந்தாலும், அவனுக்குத் தலையை வலிக்கிற சமயத்தில் அவளுக்கு வேறு எந்தக் கோபதாபமும் இல்லாமல் இருக்க வேண்டும். மனசும் குளிர்ந்திருந்தால்- அவனுக்கு உடம்பு நேராக இருக்கும் பொழுதுகூட, ''ஏன் ஒரு மாதிரியா இருக்கேள்; உடம்பு சரியில்லையா?'' என்று கேட்பாள். கொஞ்சம் உஷ்ணத்தில் இருந்தால், அவனது தலைவலிக்கு ஒரு வாய்க் காபிகூடக் கிடைக்காது.

அதெல்லாம் அம்மாதான். அவளால் மட்டுமே இந்த மாதிரி சமயங்களில் 'என்னடா, என்னடா?' எனப் பதற முடியும். அவளால் மட்டுமே, மகன் எத்தனைதான் திட்டினுலும், அவனிடம் எத்தனைதான் இவள் கத்தியிருந்தாலும் அடுத்த கணமே ரோஷத்தைத் தூர எறிந்து விட்டு ஓடி வர முடியும்.

கணேசனுக்கு இதெல்லாம் தெரியாதா? தெரிந்திருந்தாலும், பெண்டாட்டிக்குச் சரியாக அம்மாவும் கத்தும்பொழுது, குத்தலும் குதர்க்கமுமாய்ப் பேசும்பொழுது, எரிச்சல் மண்டிக்கொண்டு வருகிறது.

'சே! என்ன மனுஷி இவ. கொஞ்சம் கூட அனுசரணையே இல்லாம. வயசான அளவுக்கு விவேகம் இல்லையே!'

இந்த எரிச்சல் அதிகமாவதெல்லாம் தர்முவின் இடக்கான பேச்சினுல்தான்.

''மருந்து வாங்கிண்டு வந்தியோ?''

''பார்த்தியா? மறந்தே போயிட்டேம்மா.''

''பொண்டாட்டிக்குப் பூ வாங்கிண்டு வர மறக்கறதா? மறந்தா அவதான் சும்மாயிருப்பாளா? நான் கிழவிதானே? எனக்கு இனிமே மருந்தும் மாயமும் எதுக்குன்னு வச்சிட்டயாக்கும்!''

இந்த வார்த்தைகள்தாம் அவளைப் பொங்கியெழச் செய்துவிடும்.

''சனியன்! சனியன்! நாளைக்காவது அந்த 'ஐ டிராப்ஸை' வாங்கிண்டு வந்து, மூஞ்சியில விட்டெறியணும்.''

''போருமே! உங்க அம்மாவுக்கு அமிர்தத்தையே வாங்கிண்டு வந்து குடுங்கோ; சஞ்சீவி மலையையே பெயர்த்தெடுத்துண்டு வந்து குடுத்துப் பாருங்கோ! அப்பவும் கழுத்து மட்டும் குறைதான்.''

சியாமளா நொடிப்பாள். கணேசனுடன் கடைத்தெருவுக்குப் போகும் பொழுது முழ நீளத்துக்குப் பட்டியல் போட்டுக்கொண்டு போவாள். இந்தப் பட்டியலை வாங்கிய பிறகும், கணேசனிடம் சில்லறை மிஞ்சியிருந்தால் அதற்கும் புதிதாய்ச் செலவு வைப்பாள்.

''இன்னிக்கு மறக்காம ஐ டிராப்ஸ் வாங்கிடணும், சியாமளா.''

''உம்! உம்! வாங்கிட்டாப் போச்சு. என்னை ரொம்ப நாளா எங்க அம்மா நைலான் சவுரி ஒண்ணு கேட்டுண்டிருக்கா. இத்தனை தூரம் வந்திருக்கோம். இப்படியே வாங்கிக் குடுத்துட்டுப் போவோமா?''

''செய்யேன். உங்க அம்மா வீட்டுக்குப் போயிட்டுத் திரும்பறப்போ ஞாபகமா மெடிகல் ஷாப் கிட்ட இறங்கிக்கணும். அம்மாவுக்கு மருந்து.''

''ஓ! நீங்க மறந்தாலும் நான் ஞாபகப்படுத்தறேன்.''

சவுரி வாங்கப் போய், அதோடு கொண்டை ஊசியும் ஒரு டஜன் வாங்கி, அந்தச் சமயத்தில் தான், தன் தங்கைக்குச்சாந்து பாட்டில் தீர்ந்து போனது நினைவுக்கு வர அதையும் வாங்கி, ஸ்டவுக்குத் திரி வாங்கி, கடையிலிருந்து வெளியே வரும்பொழுது குழந்தைகளுக்கு மகா கரிசனமாய்க் 'கோன் ஐஸ் க்ரீம்' வாங்கி, ஜாதிப்பூ வாங்கி, வயிற்றைக் குமட்டுகிறது என்று இஞ்சி மொரப்பாவும் வாங்கினாள்.

வீடு திரும்பும் சமயத்தில், சியாமளா ஞாபகமாய், அக்கறையாய்க் கூறினாள்:

''அச்சச்சோ, உங்க அம்மாவுக்கு மருந்து வாங்கவே இல்லையே!''

''இருக்கட்டும். நாளைக்கு வாங்கிக்கறேன்.''

''ஏன் நாளைக்கு? இதோ இருக்கு மருந்துக் கடை. வாங்கிடுங்கோ. அப்புறம் உங்க அம்மா வாயில விழுந்து புறப்பட வேண்டாம்.''

''பர்ஸ் காலி சியாமளா. பஸ்ஸுக்குத்தான் சில்லறை இருக்கு.''

இதைக் கூறி விட்டு, அவன் கனமான மௌனத்தில் உறைந்து போவான். அவள் இதைப் பொருட்படுத்தாதவள் போல, அல்லது இதைப் புரிந்து கொள்ளாதவள் போல, பேச்சை மாற்றுவாள்.

நேற்றுப் பார்த்த டி.வி. நாடகத்தைப் பற்றி, தன் மன்னியின் அலட்சியத்தைப் பற்றி, தன் தங்கை 'மகா கணபதே' கீர்த்தனையை அபாரமாகப் பாடுவது பற்றி, தங்களின் இரண்டாவது மகனான எட்டு மாதச் சுரேஷுக்கு மேல் வரிசைப் பல் ஒன்று எட்டிப் பார்ப்பது பற்றி, கணேசனுக்குத் தெற்றுப் பல்லே ஒரு களையாக இருப்பது பற்றி அவள் நிறையப் பேசுவாள். அவன் செம்மறியாடு மாதிரி தலையாட்டியபடி அவள்கூட நடப்பான்.

''இன்னிக்காவது எனக்கு மருந்து வாங்கிண்டு வந்தியோ?''

''மனுஷனுக்கு இதைத் தவிர வேற வேலையே இல்லேன்னு நினைச்சிண்டிருக்கியா? உன் மருந்து ஒண்ணுதான் எனக்குச் சிந்தனையா? ஆயிரம் கவலை அரிச்சுப் பிடுங்கறது. இதுல நீ வேற ஏம்மா பிராணனை எடுக்கறே?''

''ஆமாம்டா. நான்தான் பிராணனை எடுக்கறேன். சொல்ல மாட்டியா? பொண்டாட்டி வந்தாச்சுன்னு, பெத்தவ இருக்கப்படாது; இருக்கவே படாது! இருந்தா, என் கதிதான்.''

இந்தக் கத்தலுக்கும் முனகலுக்கும் இரண்டு நாட்களாய் ஓய்வு. கணேசனாலேயே நம்ப முடியவில்லை.

''அம்மா ரெண்டு நாளா மருந்து வாங்கிண்டு வரச்சொல்லித் தொணதொணக்கவே இல்லயே! எப்படின்னு தெரியுமோ?''

அவன் கேள்விக் குறியுடன் மனைவியைப் பார்த்தான்.

''உங்க அம்மாவோட கத்தல் பொறுக்க முடியாம, பழைய மருந்து பாட்டில்லே கொஞ்சம் தண்ணியைப் பிடிச்சு வச்சுண்டு, அவர் எரியறதுன்னு சொல்லிக் கூச்சல் போடற சமயத்துல எல்லாம் ரெண்டு சொட்டு கண்ணுலே விட்டுண்டிருக்கேன்.''

''ஐயோ!''

''என்ன, என்ன ஐயோ? டாக்டர் சொல்றுப்பல, இதெல்லாம் வயசான கோளாறுதான். சும்மாவாவது, நாம அவாளைக் கவனிச்சுண்டே இருக்கணும்னு செய்யற ஆகாத்தியந்தான். பின்னே பாருங்களேன். தண்ணியெ மருந்துன்னு நெனைச்சுண்டு வாயைத் தெறக்காம இருக்காரா இல்லையா? எல்லாம் வெறும் அழிச்சாட்டியம்.''

சியாமளா சொன்ன போது கணேசனுக்கு என்னவோ போல இருந்தது. என்னதான் அம்மா சண்டைக்காரி என்றாலும் பெற்ற பிள்ளையிடம் நடிப்பாளா?

''என்ன யோசனை?''

''ஒண்ணும் இல்லை. பாவம்! அவ ஒரு மருந்து பாட்டில்தானே கேட்கறா. இன்னிக்கெல்லாம் இருந்தாப் பத்து ரூபாகூட ஆகாது. அதை வாங்கித் தர முடியாம இந்த மாதிரி அவளை ஏமாத்தறது மனசுக்குக் கஷ்டமாயிருக்கு.''

''நான்தான் சொல்றேனே, இது வெறும் பிடிவாதம்னு.''

''இருக்கட்டுமே! நம்ம குழந்தை நளினிகூடத்தான் சில சமயத்துல ஐஸ் க்ரீமுக்கும், பொம்மைக்கும் அழுது அடம் பிடிக்கறா. நாம வாங்கித் தரல்லையா? வயசாயிட்டா அவாளும் குழந்தை மாதிரிதானே!''

''அடடா! நான் என்ன சொல்லிட்டேன்? எதுக்கு என் கிட்டே சண்டைக்கு வரேள்? உங்களுக்கென்ன? நீங்க பாட்டுக்கு ஆபீசுக்குப் போயிடறேள். ஒரு நாள் முழுக்க உங்க அம்மாகூட மல்லுக்கு நிக்கறது நான்தானே? அவர்கூடக் கத்திக் கத்தி என் தொண்டையே கம்மிப் போச்சு. இதுக்கு மேலேயும் பொறுக்க முடியாமத்தான் நான் அப்படிச் செஞ்சேன். செஞ்சதை அப்படியே உங்ககிட்ட வந்து சொன்னேன் பாருங்கோ. என்னைச் செருப்பாலேதான் அடிக்கணும்.''

''இல்லே சியாமளா. அம்மாவை நெனைச்சா வருத்தமா இருந்தது. அதான் சொன்னேன். உன் கிட்ட என் வருத்தத்தைச் சொல்லி ஆத்திக்க எனக்கு உரிமை இல்லையா?''

''ஏன் இல்லே? தாராளமா இருக்கு. உங்களை, உங்க அம்மா பேசற பேச்சுத் தாங்காமத்தான் இப்படிச் செஞ்சேன். தப்புன்னு மன்னிப்பு கேட்டுக்கறேன். நீங்க குஷாலா உங்க அம்மாவுக்கு மருந்து வாங்கித் தாங்களேன். நான் என்ன, கையைப் புடிச்சா தடுக்கறேன்?''

இதற்குப் பின் சியாமளா ஏகமாய் முறுக்கிக் கொள்ள, இரவு முழுக்கக் கணேசன் அவளைத் தேற்ற முயன்று தோற்க, இடையே அம்மாவின் கூப்பாடு வேறு!

''அடியே, அந்த மருந்தைக் கொஞ்சம் கண்ணுல விட்டுட்டுப் போயேன்.''

மனைவியிடம் சொல்லால் அடிபட்ட வேகம் தாளாத கணேசன் தாயிடம் தன் ஆத்திரத்தைக் கொட்டுகிறான்.

''ராத்திரி தூங்கக் கூட விட மாட்டியா? என்னிக்கு உன் தொல்லை ஒழியுமோ தெரியல்லே.''

''கவலைப்படாதேடா. நான் செத்துட்டா அப்புறம் உனக்குத் தொல்லையே இல்லே. சாவு வர மாட்டேங்கறதே!''

''உனக்கு எங்கே வரப்போறது? என்னை விழுங்கிட்டும் நீ ஜடாயு மாதிரி உட்கார்ந்திருப்பே!''

என்ன வார்த்தைகள்! அதிர்ந்து விட்டாள் தர்மு.

''என்னடா கணேசா இப்படியெல்லாம் பேசறே?'' இப்படிக் கேட்டாளே தவிர இதற்குப் பின் எதுவுமே பேசவில்லை. 'கம்'மென்று அடங்கி விட்டாள்.

மறுநாள் காலையில்.

முந்தைய இரவின் மோகம் தீர்ந்து புத்தி தெளிந்தபோது, கணேசன், தன் வார்த்தைகளை நினைத்துத் தன்னையே நொந்து கொண்டான்.

''பாவம் அம்மா!''

காலையில் ஆபீசுக்குக் கிளம்புமுன், அவளைச் சமாதானப் படுத்தும் விதமாய், அவள் அருகில் வந்து அமர்ந்துகொள்கிறான்.

''அம்மா!''

''உம்!''

''கண்ணைக் காட்டு. மருந்து விடறேன்..''

சியாமளா நிரப்பிய தண்ணீர் குப்பிதான். இப்போதைக்கு, இவளைச் சமாதானப்படுத்த இது போதும்.

'சாயந்திரம் நிஜமான மருந்தை வாங்கிண்டு வரணும்.'

இந்த நினைப்பே, அவனுடைய கண்களைக் கலங்கச் செய்ய, விழித்திரையைக் கண்ணீர் மறைக்க, இளஞ் சூடான இரு கண்ணீர்த் துளிகள் தர்முவின் படபடத்த கண்களில் விழுந்தன.

''என்னடா?''

அவளும், இன்னதென்று புரியாத வேதனையில், ஒரு கணம் நெகிழ்ந்து போகிறாள்.

''ஒண்ணுமில்லேம்மா?''

அவன் தன் தாய் அறியாதவாறு விழிகளைத் துடைத்துக் கொண்டாலும் பெற்றவளுக்கு என்ன தோன்றியதோ?

அன்று மாலை, கணேசன் உண்மையான மருந்து பாட்டிலுடன் அவளை நெருங்கியபோது, ''மருந்தாடா கணேசா?'' என்றாள்.

''ஆமாம்மா. கண்ணைத் திற.''

''வேண்டாம்பா.''

''ஏன்? ஏம்மா?''

''இப்ப எனக்கு அவ்வளவா எரிச்சல், தொந்தரவு எதுவும் இல்லே. காலம்பற நீ மருந்து விட்டுட்டுப் போனதுக்கு அப்புறம் உபாதை படிப்படியாக் குறைஞ்சிருக்கு.''

கணேசன், அவள் முகத்தையே உற்றுப் பார்க்கிறான். தர்முவின் மூடிய இமைகளின் இடுக்கு வழியே சுருங்கிய கண்ணப் பகுதியைச் சதுப்பு நிலமாய் மாற்றிக்கொண்டிருந்தது கண்ணீர்.''

இது கண்களின் எரிச்சலால் ஏற்பட்ட கண்ணீரா, உள்ளக் குமைச்சலால் பெருகிய குருதியா?

அம்மா, அன்று 'எரிகிறது' என்று புலம்பியது நிஜமா? இல்லை, இப்போது எல்லாம் சரியாகிவிட்டது என்கிறாளே, இது நிஜமா?

மருந்துப் புட்டி, சீந்துவாரின்றி அலமாரியில் கிடக்கிறது.

''நான் அப்பவே சொன்னேன். கேட்டாத்தானே? பத்து ரூபா தண்டம். விலைவாசி இருக்கற நிலையில உங்க அம்பாவுக்குக் கரன்சி நோட்டு செடியில காய்க்கிறதாத்தான் நெனைப்பு. நான் இதைச் சொல்வானேன்? அப்புறம் அவதிப்படுவானேன்?''

❋



ADWAVE/SPIC/2167

எமது மனமார்ந்த தீபாவளி வாழ்த்துக்கள்

LR-SWAMY PP

வேள்வி

ராஜேஷ்குமார்

பாரதி தயாராகிவிட்டாள். ஊதா நிறப் பட்டுப் புடைவை, அதே வண்ண ரவிக்கை. மை நிறத்தில் நெளியும் கூந்தலில் ஜாதி முல்லையும், கனகாம்பரமும் கலந்த பூப்பந்து. வருகிற இந்த மாப்பிள்ளைப் பையனாவது, 'எனக்குப் பெண் பிடித்திருக்கிறது' என்று சொல்லமாட்டானா என்கிற எதிர்பார்ப்பைத் தேக்கியிருக்கும் விழிகள்.

''பாரதி!''

குரல் கொடுத்துக்கொண்டே அம்மா மங்களம் சமையலறைக்குள் நுழைந்தாள். கையில் சின்னச் சின்னதாய் இரண்டு காகிதப் பொட்டலங்கள். கொஞ்சம் புஷ்பம்.

''என்னம்மா?''

''சௌடேச்வரியம்மன் கோயிலுக்குப் போயிட்டு வந்தேன். இந்தா, மஞ்சளும் குங்குமமும். அம்மனை மனசார நெனைச்சுக்கிட்டு நெத்திக்கு இட்டுக்கோ..இந்த வரனாவது உனக்குத் தக்கட்டும்!''

பாரதிக்குத் தன் அம்மாவைப் பார்க்க பார்க்கப் ஆச்சரியமாயிருந்தது. இந்த அம்மாவுக்குத்தான் எவ்வளவு நம்பிக்கை! ஒவ்வொரு தடவையும் தன்னைப் பெண் பார்க்க வருகிறபோது அம்மா அவசர அவசரமாய்ப் பக்கத்திலிருக்கும் சௌடேச்வரியம்மன் கோவிலுக்குப் போய்விட்டு வந்து மஞ்சளையும், குங்குமத்தையும், துளியூண்டு பூவையும் கொண்டு வந்து நீட்டுவதும், இந்த வரனாவது உனக்கு வாய்க்கட்டும் என்று வாய் நிறையச் சொல்வதும், சில சமயங்களில் அழுவதும் வழக்கம். ஆனால் அந்தச் சௌடேச்வரி, பாரதியின் விஷயத்தில் பராமுகமாய் இருந்தாள்.

பாரதி பூவை எடுத்துக் கூந்தலில் செருகிக் கொண்டு, அம்மாவைப் பார்த்துப் புன்னகை செய்தாள்.

''என் கண்ணே பட்டுடும் போல் இருக்கேடி ராஜாத்தி; பச்சை நரம்பெல்லாம் பளிச்சென்று தெரியப் பால் நிறத்துல கண்ணை ரெண்டையும் நிறைக்கிறே! ஆனா பார்க்க வர்ற எவனுக்குமே உன்னைப் புடிக்க மாட்டேங்குதே!'' பாரதியின் முகத்தை இரண்டு கைகளாலும் வழித்துச் சடசடவென்று திருஷ்டி முறித்தாள் மங்களம்.

பாரதி மெல்லச் சிரித்தாள்.

''அம்மா! வர்ற மாப்பிள்ளைகளுக்கெல்லாம் என்னைப் புடிச்சிருந்தாலும் நம்ம வீட்டோட நெலமை அவங்களுக்குப் புடிக்கிறதில்லே. ஓடு சரிஞ்சு போன வீடும், இமிடேஷனில் இளிக்கிற நகைகளும், எல்லாத்துக்கும் மேலாக வாத்தியார் வேலை பார்த்து ரிடையராகி, சுதந்தரப் போராட்டக் காலத்தில் வெள்ளைக்காரனோட துப்பாக்கிக் குண்டுக்கு ஒரு காலைப் பலி கொடுத்து முடமாகிப் போன அப்பாவும், இதெல்லாம் வர்றவங்களுக்குப் புடிக்கல்ல. பசையோடு இருக்கிற மாமனார் வீடுகளைத்தான் இந்த இந்தியாவில் இருக்கிற ஒவ்வோர் ஆணும் விரும்பறான். கேவலம் ஒரு வெண்டைக் காய் முத்திப் போனாக்கூட அது சந்தையில விலை போறதில்லே. இருபத்தஞ்சை விழுங்கப்போற நான் மட்டும் இந்தக் கல்யாணச் சந்தையிலே விலையாகவா போறேன்?'' பாரதியின் விழிகள் லேசாய்ச் செம்மையுற்றுக் கலங்கின.

மங்களம் பாரதியின் மோவாயைத் தொட்டாள். ''மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வர்ற நேரம். கண்ணைக் கசக்கிக்கிட்டு எழுதியிருக்கிற மையைக் கன்னம் பூராவும் தேய்ச்சுக்காதே. உனக்குன்னு ஒருத்தன் எங்காச்சும் பொறக்காமலா இருப்பான்? நேரம் வந்தா எல்லாம் தானே ஓடிவரும்!''

''அந்த நேரம் வர்ற வரைக்கும் என்னோட வயசு நிக்காதேம்மா!''

மங்களம் ஏதோ சொல்ல வாயெடுப்பதற்குள் சமையலறையின் வாசலருகே அந்தச் சத்தம் கேட்டது. ''டக்.. டக்.. டக்..'' மரக்கட்டையாலான ஊன்றுகோல் ஒலி.

''உங்கப்பா வர்றார் பாரதி.'' மங்களம் சொல்லி முடிக்கவில்லை.

''அம்மாவும் மகளுமாச் சமையலறையில நுழைஞ்சிக்கிட்டு என்ன பண்றீங்க?'' கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தார் மாணிக்கவேலர்.

கணீரென்று வெண்கலமணியை ஓங்கியடித்தாற்போல் குரல். அந்தக் குரலுக்குச் சற்றும் பொருத்தமில்லாத பூஞ்சையான உடல்வாகு. தேசிய வாசனை வீசும் வெள்ளைவெளேரென்ற முரட்டுக் கதர்ச் சொக்காயும் நாலு முழ வேஷ்டியும் உடம்பில் பரவி நின்று பறைசாற்றும் எளிமை; முழங்காலுக்குக் கீழே காலாய் நின்று தாங்கும் ஊன்றுகோலைக் கெட்டியாய்ப் பிடித்திருக்கும் இடக் கை.

மங்களம் தன் கணவரின் முகத்தை மெல்ல ஏறிட்டாள். ''பாரதி மனசு ஒடிஞ்சு பேசினா. அதுதான் தைரியம் சொல்லிட்டிருந்தேன்.''

விருட்டென்று பாரதியின் பக்கமாய்த் திரும்பினார் மாணிக்கவேலர்; ''ஏம்மா, பாரதி, உனக்கு எத்தினி தடவை சொல்லியிருக்கேன், எதுக்குமே கலங்காத, பயப்படாத நெஞ்சுறுதி உனக்கு இருக்கணும்னு? அதனால்தான் உனக்கு அந்தப் பாரதியோட பேரை வெச்சிருக்கேன். உன்னைப் பொண் பார்க்க இன்னும் ஆயிரம் பேர்தான் வரட்டுமே! எவனுக்கு உன்னை மனைவியா அடையக் கொடுப்பினை இருக்கோ, அவன் உனக்குத் தாலி கட்டட்டும்.''

பாரதியின் கண்கள் உணர்ச்சி மேலீட்டால் பனித்துக் கனத்தன.

சரியாய் ஐந்து மணி.

வாசலில் டாக்ஸி வந்து நின்றது. டாக்ஸியின் நான்கு பக்கக் கதவுகளின் வழியாக வெளிப்பட்டார்கள் மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள். ஊன்றுகோலை வேக வேகமாய் அசைத்து நடந்தபடி டாக்ஸியை நெருங்கினார் மாணிக்கவேலர். தடுமாறியபடி கைகளைக் குவித்தார்.

''வாங்க; வணக்கம்!''

மாப்பிள்ளைக்கு அப்பா தோளில் போட்டிருந்த ஜரிகை அங்கவஸ்திரத்தால் முகத்தில் அரும்பி நின்ற

வேர்வையை ஒற்றிக்கொண்டே சொன்னார்: ''உங்க வீட்டைக் கண்டு புடிக்கறதுக்குள்ளே ரொம்பவும் திணறிப் போயிட்டோம்.''

''உங்க கூடவே புரோக்கர் வர்றேன்னு சொன்னார். வரலையா?'' உண்மையான வருத்தத்தோடு கேட்டார் மாணிக்கவேலர்.

''வரல்லே.''

''வீட்டைக் கண்டுபுடிக்க ரொம்பவும் சிரமப்பட்டுட்டீங்களோ?'' மாணிக்கவேலர் ஊன்றுகோலால் நடந்தபடியே உள்ளே போனார்.

மாப்பிள்ளைக்கு அம்மாக்காரி, இரட்டை நாடி சரீரத்தில் நகை காய்ச்சி மரமாய் வந்தவள் சொன்னாள்: ''சிரமமா? அதையேன் கேக்கறீங்க? உங்க பேரைச் சொல்லி இந்தப் பாப்பநாய்க்கன்பாளையத்தில கேட்டா யாருக்குமே தெரியல்லே. கடைசியா ஒரு பெட்டிக்கடைக்காரன்தான் 'மொண்டி வாத்தியாரைக் கேட்கறீங்களா'ன்னு அடையாளம் புரிஞ்சுக்கிட்டு வழியைச் சொன்னான்.'' நடந்துகொண்டிருந்த மாணிக்கவேலர் சட்டென்று ஊன்றுகோலைத் தரையில் பதித்து முகம் கறுத்துப் போய்த் திரும்பினார்.

'ஒருத்தருக்கு இருக்கிற ஊனத்தை அடையாளம் காட்டி அந்த ஊனத்தை வெளிச்சம் போட்டுக் காட்டறது எவ்வளவு அநாகரிகம் தெரியுமாம்மா?'—நாக்கின் நுனி வரை வந்துவிட்ட வார்த்தைகளை மனசில் விழுங்கி ஜீரணிக்க முடியாமல் திணறினார் மாணிக்கவேலர். இவர்கள் பாரதியைப் பெண் பார்க்க வந்திருப்பவர்கள். மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் என்கிற கேடயத்தைச் சுமந்து வந்திருப்பவர்கள்! இவர்களிடம் போய்த் தன்மான வாளைச் சுழற்றினால் பாரதிக்கல்லவா ஏமாற்றம்?

ரணமான நெஞ்சோடு பேசாமல் நடந்தார் மாணிக்கவேலர். அவருடைய முதுகுக்குப் பின்னால் மாப்பிள்ளை வீட்டுக் கும்பல் இங்கிதம் பார்க்காமல் பேசியது.

''வீடு ரொம்பப் பழைய வீடு.''

''பழைய வீடா இருந்தாலும் நல்ல வெலைக்குப் போவும்.''

''பாக்கறதுக்கு வாத்தியாரு சுமாராத் தெரிஞ்சாலும் கையில காசு நடமாட்டம் இருக்கும் போலிருக்கு.''

எல்லாருமாய் உள்ளே வந்து உட்கார்ந்தார்கள். கச்சலாய், கறுப்பாய், மாப்பிள்ளைப் பையன் முன்னால் வந்து உட்கார்ந்தான்.

மாணிக்கவேலர் ஊன்றுகோலைச் சுவரில் சாய்த்துவிட்டு உட்கார்ந்துகொண்டார். அவருக்கு அருகில் வந்து சிநேகபாவமாய் அமர்ந்துகொண்ட மாப்பிள்ளைக்குத் தாய்மாமன் சாராய நெடி அடிக்கிற வாயோடு கேட்டான்:

''ஏனுங்க, உங்களுக்கு ஒரேயொரு பொண்ணுதானா?''

''ஆமாம்.''

''பையன்க யாரும் இல்லீங்களா?''

''ம்..ம்.'' சாராய நெடியின் புளிச்ச வாசனை மாணிக்கவேலரின் நாசியைத் தீண்ட, அதைத் தாங்கிக் கொள்ள இயலாமல், தோளில் போட்டிருந்த துண்டால் மூக்கை நாசுக்காய்த் துடைத்துக்கொண்டார்.

''இருக்காங்க ரெண்டு பேர்'' என்றார் வெறுப்புடன்.

''அவங்க என்ன செய்யறாங்க?'' தாய்மாமன் மறுபடியும் கேட்க, அவருக்குப் பதில் சொல்லாமலே உட்கார்ந்திருந்தார் மாணிக்கவேலர்.

எதிரே மாப்பிள்ளைப் பையனுக்குப் பக்கத்தில் யானைக்குட்டியாய் அமர்ந்திருந்த அம்மா மாணிக்கவேலரைக் கடுகடுவென்று பார்த்தாள். வார்த்தைகளில் வெடித்தாள்.

''என்னங்க, உங்களைத்தான் என்னோட தம்பி என்னமோ கேட்டுட்டிருக்கார். நீங்க பாட்டுக்குக் காதில் விழாத மாதிரி உட்கார்ந்திட்டிருக்கீங்களே! நல்லாயிருக்கு, நீங்க மாப்பிள்ளை வீட்டு ஜனங்களுக்குக் காட்டற மரியாதை!''

மாணிக்கவேலர் விசுக்கென்று தலையை உயர்த்தி அந்த அம்மாளைப் பார்த்தார். 'சாராயத்தைக் குடிச்சுட்டுப் பொண்ணு பாக்க வந்திருக்கிற உங்க தம்பியோட மரியாதையைக் காட்டிலும் என்னோட மரியாதை ஒண்ணும் குறைஞ்சு போயிடலே.' வார்த்தைகளை அள்ளி இறைக்க நினைத்தவரின் இதய ஓரத்தில் பாரதியின் முகம் நிழலாட, கனன்று கொண்டிருந்த வார்த்தைகளின் மேல் நீரை விசினார்.

''மன்னிக்கணும். ஏதோ ஞாபகத்துல இருந்துட்டேன். என்ன கேட்டீங்க?'' குடிகாரத் தாய்மாமனின் பக்கமாய்த் தலையைத் திருப்பினார் மாணிக்கவேலர்.

''உங்க பசங்க ரெண்டு பேரும் என்ன செய்யறாங்கன்னு கேட்டேன்.'' தாய்மாமன் வார்த்தைகளை அழுத்தம் திருத்தமாய் உச்சரித்தார்.

''பெரியவன் சென்னை செக்ரடேரியட்ல கிளார்க்கா இருக்கான். சின்னவன் சென்னியம்பாளையத்துல ஒரு மில்லில் சூபர்வைசரா இருக்கான்.''

''ரெண்டு பேருக்கும் நல்ல வேலைதான்'' என்றவர் மாணிக்கவேலரின் தோளைத் தொட்டு உசுப்பியபடி, ''பசங்களுக்குக் கல்யாணம் பண்ணிட்டீங்களா?'' என்றார்.

''இல்லே. இனிமேத்தான்!''

மாப்பிள்ளைக்கு அப்பா பேச்சில் சட்டென்று குறுக்கிட்டார். ''எமகண்டம் வர்றதுக்குள் முன்னாடியே பொண்ணைப் பார்த்துடலாம்னு நெனைக்கிறோம். பொண்ணை வரச் சொல்றீங்களா?''

''இதோ!'' ஊன்று கட்டையைத் தாங்கிக்கொண்டு எழ முயன்றார் மாணிக்கவேலர். மாப்பிள்ளைக்கு அம்மாக்காரி குரலில் இளக்காரத்தை நிரப்பிக்கொண்டு, ''நீங்க அப்படியே உக்காருங்க. கட்டையை ஊனிக்கிட்டுக் குறுக்கால மறுக்கால நடந்து, ஜமுக்காளம் தட்டி அச்சாணியமா விழுந்துடப் போறீங்க! சுப காரியம் நடக்கறப்போ இதுமாதிரி விஷயங்கள்ளே நாம கொஞ்சம் ஜாக்கிரதையா இருக்கணும்.''

அந்த அம்மாளின் கேலிப் பேச்சில், இதயம் அறுபட்ட கோழியாய்த் துடித்தாலும், மாணிக்கவேலர் முகத்தில் இருந்த மலர்ச்சியை அகற்றிக் கொள்ளாமலேயே சொன்னார்: ''நீங்க சொல்றதும் நியாயந்தாம்மா. இந்த மரக்காலையும், ஒத்தைக்காலையும் நம்ப முடியாது. நீங்க சொன்னபடி நான் இங்கேயே உட்கார்ந்துடறேன். மங்களம், பாரதி கையில தாம்பூலத்தட்டைக் குடுத்து அனுப்பி வை!'' மாணிக்கவேலர் சொல்ல, சமையலறை அருகே நின்றிருந்த மங்களம் உள்ளே போனாள்.

ஒரு பெரிய உயிருள்ள ஊதாப்பூ அசைந்து அசைந்து வருகிற மாதிரி

யான பிரமிப்பை ஏற்படுத்தினுள் பாரதி; அவள் கையிலிருந்த தாம்பூலத் தட்டு மெல்ல நடுங்கிக்கொண்டிருந்தது. மாப்பிள்ளைப் பையன் கொஞ்சங்கூட லஜ்ஜையில்லாமல் பாரதியை வெறித்தான்.

''பொண்ணுக்கு நல்ல நெறம்!''

''மூக்கும் முழியுமா லட்சணமாயிருக்கா!'' ஜமுக்காளத்தில் உட்கார்ந்திருந்த சகப் பெண்கள் மனப்பூர்வமாய்ச் சொன்ஞர்கள்.

''பாரதி! தாம்பூலத் தட்டை அப்படியே வெச்சுட்டு எல்லாருக்கும் நமஸ்காரம் பண்ணம்மா.'' மாணிக்க

வேலர் சொல்லப் பாரதி அதே போல் செய்து நமஸ்கரித்துவிட்டு உள்ளே போக முயன்ருள். மாப்பிள்ளையின் அம்மா குரலில் போலிக் குழைவைக் கலந்தபடி கூப்பிட்டாள்:

''வாம்மா? இப்படி வந்து உக்காரு. பொம்பளைங்க நாங்க அஞ்சாறு பேர் இருக்கிறப்போ என்ன வெக்கம்?''

பாரதி உட்காரத் தயங்கினுள். மாணிக்கவேலர் சொன்ஞர்: ''போம்மா. அவங்களுக்குப் பக்கத்துல போய் உக்காரு.''

பாரதி தலை குனிந்தபடி அந்த அம்மாளுக்குப் பக்கத்தில் போய் உட்கார்ந்தாள். மார்பு பூராவும் பயத்தில் டீசல் என்ஜினைப் தடதடத்தது.

''உம் பேர் என்னம்மா?''

''பாரதி!'' சொல்லி முடிப்பதற்குள் நெற்றியில் வியர்வைச் சரம் உற்பத்தியாகியது.

''பேரு புதுசா இருக்கே! என்ன படிச்சிருக்கே?''

''எஸ்.எஸ்.எல்.சி.'' பாரதி பதில் சொல்லிக்கொண்டிருந்த நேரத்தில் மங்களம் டிபனைப் பரிமாறுவதற்கான ஏற்பாடுகள் செய்ய ஆரம்பிக்க, கும்பல் லேசாய்க் கலைந்தது. அந்தக் கசகசப்பில் மாப்பிள்ளையின் அம்மா பாரதியிடம் தாழ்ந்த குரலில் கேட்டாள்.

''போட்டிருக்கற நகை பூராவும் உன்னுடையதுதானே?''

''உம்.''

''இந்த நெக்லசு எத்தினி பவுனு?''

சரேலென முகம் பூராவும் வேர்வையால் பிசுபிசுத்தது பாரதிக்கு. நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக்கொண்டது.

''இது தங்கமில்லை; கவரிங்நகை!''

''கவரிங்கா?'' ஒரு லிட்டர் வேப்பெண்ணெயை ஒரே மூச்சில், குடித்த மாதிரி முகம் அஷ்டக்கோணலாகியது, மாப்பிள்ளையின் அம்மாவுக்கு.

''இந்த வளையலு?''

''அதும் கவரிங்தான்.''

''காதுல போட்டிருக்கிற கம்மலு?''

தொண்டையை கப்பென்று அடைத்தது பாரதிக்கு. பட்டுச் சேலையின் முந்தானை முடிச்சை விரல்களால் பிழியப் பிழியத் திருகிக்கொண்டு, அந்த அம்மாவைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

''அ..து..ம்..கவரிங்தான்!''

''அப்போ .. எதுதான் தங்கம்?''

'இந்த ....ச்....செயின் மட்டுந்தான் தங்கம்!''

''கிழிஞ்சது போ!'' முனகிக்கொண்டே விசுக்கென்று தலையைத் திருப்பிக் கொண்டாள் மாப்பிள்ளையின் அம்மா.

பாரதியின் இதயம் முள் சவுக்கால் அடிக்கப்பட்ட மாதிரி துடிக்க ஆரம்பித்தது. கண்களில் நீர் [illegible]தத்

தளிக்க, கேசரியைப்பரிமாறிக்கொண்டிருந்த அம்மாவையும், உள்ளுக்குள் மனசு 'ஓ'வென்று அழுதாலும் மேலுக்குச் சிரித்துக் கொண்டிருந்த அப்பாவையும் பார்த்தாள் பாரதி.

கேசரியை ஒரே விழுங்காக விழுங்கி, ஒரு முழ வாழைக்காய்ப் பஜ்ஜியைச் சட்னியில் ஆழமாய்த் தோய்த்து, வாய்க்குள் திணித்துக் கொண்ட குடிகாரத் தாய்மாமன் மாணிக்கவேலரின் புஜத்தைத் தட்டிக் குழறும் குரலில் கேட்டான்.

''என்னங்க? உங்களுக்கு எப்படிக் கால் போச்சு?''

மாணிக்கவேலர் மெல்லச் சிரித்தார்: ''நம்ம தேசம் சுதந்தரம் அடையணுங்கறதுக்காக எத்தனையோ பேரு எதை எதையோ இழந்திருக்காங்க. நான் ரெண்டு கால்லே ஒரு காலை வெள்ளைக்காரனுக்குப் பலி குடுத்தேன். உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்துல கலந்துக்கிட்ட என்னைப் போலீஸ் சுட்டப்போ குண்டு கால்லே பாஞ்சுடுச்சு. தொடை எலும்பு பூராவும் சில்லுச் சில்லா உடைஞ்சதனாலே காலை எடுக்கணும்னு டாக்டருங்க சொல்லிட்டாங்க.''

குடிகாரத் தாய்மாமன் போலி அனுதாபத்தோடு, ''நீங்க ஏங்க உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்திலேயும் சர்க்கரைச் சத்தியாக்கிரகப் போராட்டத்திலேயும் கலந்துக்கறீங்க? பேசாமக் கையையும் காலையும் வெச்சுக்கிட்டு வூட்ல ஆக்கிப் போட்டதைத் தின்னுட்டுச் சும்மா இருந்தா ஒரு காலு மிச்சமாயிருக்குமில்லே?''

தாய்மாமன் பேச்சைக் கேட்டு எல்லாரும் சிரித்தார்கள். மாணிக்கவேலரின் முகம் மெல்லக் கறுத்துச் சிறுத்தது. வேதனை அவரை ஆக்கிரமித்தது.

மாப்பிள்ளைக்கு அப்பா ஒரு சிறு சிரிப்போடு, ''சரி, சரி, கேலிப்பேச்சுப் பேசிக்கிட்டு உட்கார்ந்திருந்தா, கல்யாணப் பேச்சை எப்படிப் பேசறது? என்னங்க, மாணிக்கவேலரே! உங்க பொண்ணு எங்களுக்குப் புடித்தம். இனிமே மேலே விஷயங்களைப் பேசிடலாமா?'' என்றார்.

''உம்!'' தலையாட்டினார் மாணிக்கவேலர். பெண் அவர்களுக்குப் பிடித்துப்போய்விட்டது என்கிற செய்தி அவருக்குள் சந்தோஷ அலைகளை எழுப்பியது. சற்று முன் அவருடைய ஊனத்தைக் கிண்டல் செய்த அந்த வேதனையும் குறைந்தமாதிரி இருந்தது.

பையனுக்கு அப்பா தொடர்ந்தார்: ''கல்யாணத்தை நீங்க எவ்வளவு சிக்கனமா நடத்தினாலும் அதைப்பத்தி எங்களுக்குக் கவலை இல்லே. ஆனா, பாத்திரம், பண்டம், கொடுக்கிற சீர்வரிசை, போடற நகை, தர்ற வரதட்சிணைப் பணம்-இதிலெல்லாம் தாராளமாக் கொஞ்சம் கைவீச்சா இருக்கணும்.''

''சொல்லுங்க!'' என்றார் மாணிக்கவேலர்.

மானேஜர்: இது எத்தனும் மாசம்?

டைப்பிஸ்ட்: ஆறு மாஸம்னு டாக்டர் சொன்னார், ஸார் காலேலே.

மானேஜர்: சே! அதைக் கேக்கலே; டைப் அடிச்சிருக்கிங்களே, ஆகஸ்ட்டுக்கு ஏப்ரல்னு!

மாப்பிள்ளைக்கு அப்பா சுற்றிலும் இருந்தவர்களை ஒருமுறை பார்த்துவிட்டுக் குரலை உயர்த்திச் சொன்னார்: ''பொண்ணுக்குப் போடற நகை பதினஞ்சு பவுனுக்குக் குறையாம இருக்கணும். வரதட்சணை அஞ்சாயிரம்.''

மாணிக்கவேலர் தம் மோவாயைச் சொறிந்து கொண்டார். ''பதினஞ்சு பவுன் நகை. அஞ்சாயிரம் ரூபா!''

பையனுக்கு அம்மா குறுக்கிட்டுச் சொன்னாள்: ''உங்க நிலைமையை அனுசரிச்சுக் குறைச்சலாத்தான் கேட்டிருக்கோம்!''

மாணிக்கவேலர் பதில் சொல்லாமல் தம்முடைய மனைவி மங்களத்தைப் பார்த்தார். மங்களம் முகம் இறுகிப் போய்ப் பாரதியைப் பார்த்தாள்.

''என்ன ரொம்பக் கனமா யோசிக்கிறீங்க?'' பையனுக்கு அப்பா மாணிக்கவேலரைப் பார்த்துச் சன்னமான குரலில் கேட்டார்.

மாணிக்கவேலர் கசப்பாய் ஒரு புன்னகையைச் சிந்தினார். ''யோசிக்க வேண்டிய விஷயந்தானுங்களே; நீங்க கேட்டது, உங்களுக்குக் குறைச்சலாத் தெரியலாம். ஆனா என்னோட நிலைமைக்கு இது அதிகந்தான்!''

''என்னங்க வாத்தியாரய்யா. இதைப் போய் அதிகம்னு சொல்றீங்க. ரெண்டு மகன்ங்க நல்ல வேலையில இருக்கானுங்க. அவங்ககிட்டக் கேக்க வேண்டியதுதானே? கூடப் பொறந்த தங்கச்சிக்காக இதைக்கூடச் செய்யமாட்டாங்களா அந்த அண்ணன்காரங்க?''

மாணிக்கவேலர், பையனுக்கு அப்பாவை நமட்டுச் சிரிப்போடு பார்த்தார். ''அவங்க ரெண்டு பேரும் அனுப்பற பணத்திலேதான் நாங்க மூணு பேரும் வயத்தைக் கழுவிட்டிருக்கோம். மிச்சம் வெக்கற அளவுக்குச் சம்பாத்தியம் இல்லீங்க.''

கும்பலில் இருந்த பெரியவர் ஒருவர் பேச்சில் குறுக்கிட்டார்: ''கல்யாணத்தைப் பேசி முடிக்கறவங்களெல்லாம் கையில பணத்தையா வெச்சிட்டிருக்காங்க? இருக்கற இந்த வீட்டு மேல கடனை உடனே வாங்க வேண்டியதுதான். கல்யாணத்தை நடத்த வேண்டியதுதான். அப்புறம் மெல்லக் கடனைக் கட்டிக்க வேண்டியதுதானே?''

அவர் பேசிக்கொண்டிருந்த அதே நேரம் வாசலில் யாரோ வருவதற்கு அடையாளமாய் நிழலாடியது. நிமிர்ந்தார் மாணிக்கவேலர்.

''அட! மணியக்காரரா? வாங்க, வாங்க!''

மணியகாரர் உள்ளே நுழைந்தார். ''ஏதோ முக்கியமான பேச்சு வார்த்தை நடந்திட்டிருக்கிறப்போ நான் உள்ளார வந்துட்டேன் போலிருக்கே!''

''எல்லாமே நல்ல காரியந்தான். நம்ம பொண்ணு பாரதியை இவங்க பொண் பார்க்க வந்திருக்காங்க. பொண்ணு இவங்களுக்குப் புடிச்சுப் போச்சு. மத்த விஷயங்களைப் பத்திப் பேசிட்டிருந்தோம்'' என்றார் மாணிக்கவேலர்.

மணியக்காரர் கையைக் கூப்பினார். ''அப்ப எல்லாத்தையும் பேசி முடிங்க. ஒரு அரைமணி நேரம் கழிச்சு வந்து உங்களைப் பாக்கறேன்.''

''முக்கியமான விஷயமா?''

மணியக்காரர் கடைவாய் ஓரம் ஒளிந்திருந்த தங்கப்பல் தெரியச் சிரித்தார். ''விஷயம் முக்கியமானது மட்டுமில்லை, மாணிக்கவேலரே, சந்தோஷமானதுங்கூட.!''

மாப்பிள்ளைக்கு அம்மா பேச்சில் குறுக்கிட்டாள்: ''விஷயம் சந்தோஷமானதாயிருந்தா ஒரு சுப காரியம் நடந்திட்டிருக்கிற இந்த இடத்துல தாராளமாச் சொல்லலாமே! கேட்கிறவங்களும் சந்தோஷப்படட்டுமே!''

''அப்படியா?'' என்ற மணியக்காரர் ஜமுக்காளத்தில் காலியாய் இருந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டார். தம் ஜிப்பாப் பையிலிருந்த ஒரு பழுப்பு நிறக் கவரை எடுத்தார். கவரின் மேல்பாகத்தின் ஓரத்தில் இந்திய அரசாங்கத்தின் சிங்க முத்திரை கறுப்பாய்த் தெரிந்தது.

''மாணிக்கவேலரே, ஆறு மாசத்துக்கு முன்னாடி எனக்குத் தாலுக்கா ஆபீசிலிருந்து ஒரு சுற்றறிக்கை வந்துச்சு. அதுல சுதந்தரப் போராட்டக் காலத்துல போராட்டங்கள்ல ஈடுபட்டு, அதன் காரணமா ஊனம் அடைஞ்ச தியாகிகள் யாராவது கிராமத்துல இருந்தா அவங்களோட பேரையும் விலாசத்தையும் அனுப்பும்படியாக் கேட்டிருந்தாங்க.

நானும் உங்களுக்குத் தெரியாமெ உங்களைப்பத்தின விபரத்தை அனுப்பிச்சு வெச்சேன்.

''ஊனமுற்றோர் ஆண்டான இந்த ஆண்டில் சுதந்தர காலப் போராட்டத்தில் ஈடுபட்டு அதனாலே ஊனமடைஞ்ச ஒவ்வொரு தியாகிக்கும் ரூபாய் ஐம்பதாயிரம் கொடுக்கத் தீர்மானம் பண்ணியிருக்கு. அந்த வகையில நம்ம கிராமத்தைச் சேர்ந்த உங்களுக்கும் பணம் குடுக்கச் சொல்லி உத்தரவாயிருக்கு. அதுக்கான ஆர்டர் இப்பத்தான் வந்தது. உடனே உங்ககிட்ட வந்து சொல்லி ஆர்டரைத் தரணும் போலிருந்தது. இந்தாங்க மாணிக்கவேலரே ஆர்டர்! பத்திரமா வையுங்க!''

மணியக்காரர் பழுப்பு நிறக் கவரை நீட்டினார்.

மாணிக்கவேலர் அதைப் பெற்றுக் கொள்ளாமல் மணியக்காரரையே பார்த்தார்.

கும்பலில் மகிழ்ச்சியான கிசுகிசுப்புகள்.

''பாத்திங்களா வாத்தியாரய்யா! நாங்க உங்க விட்டுக்குள்ளார காலடி எடுத்து வெச்ச நேரம் பணமாக் கொட்டுது. பதினஞ்சு பவுன் நகைக்கும், வரதட்சிணைப் பணத்துக்கும் இனிமே கடனா உடனே வாங்க வேண்டியதில்லை. இப்போ கிடைக்கப் போற இந்த அம்பதாயிரத்தை வச்சுக்கிட்டுக் கல்யாணத்தை அமர்க்களப்படுத்திடலாமே!''

மாப்பிள்ளைக்கு அம்மா முகமெல்லாம் மலர்ந்தவளாய்ப் பாரதியின் முகத்தை வழித்து, ''ராஜாத்தி!'' என்றாள்.

மணியக்காரரையே இன்னமும் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார் மாணிக்கவேலர்.

''என்ன அப்படிப் பார்க்கறீங்க?''

''என்னைப்பத்தி எதுக்காக எழுதிப் போட்டீங்க?'' மாணிக்கவேலர் கேட்டார்.

''எழுதிப் போட்டதால்தானே இப்ப உங்களுக்குப் பணம் கிடைச்சிருக்கு?''

''எனக்குத் தேவையில்லை அந்தப் பணம்.''

''மாணிக்கவேலரே, என்ன சொல்றீங்க? ரெண்டாயிரம் அஞ்சாயிரமில்ல? மொத்தமா அரை லட்சம், அம்பதாயிரம்.''

''எதுக்காகத் தர்றாங்க? என்னோட கால் ஊனத்துக்காகத் தர்றாங்க! அரசாங்கம் பின்னாடி இப்படியெல்லாம் நமக்குப் பணம் தருவாங்கன்னு நினைச்சு, நான் அந்தச் சுதந்தரப் போராட்டத்துல கலந்துக்கலே. நேசத்துக்காக ஒரு காலைத் தானமா வெள்ளைக்காரனுக்குக் குடுத்தேன். அதுக்கெல்லாம் பரிசாத்தான் நமக்குச் சுதந்தரம் கிடைச்சுடுச்சே! இனிமே என்ன? என்னோட கால் ஊனத்தைக் காரணமா வெச்சு, அதனால எனக்குக் கெடைக்கிற எந்தப் பணமும் எனக்குப் பிச்சைபோட்ட மாதிரிதான். பஸ்ஸ்டேண்ட்ல நிக்கற நொண்டி தன்னோட ஊனத்தைக் காட்டி, பிச்சை வாங்கறதும் ஒண்ணுதான்; அரசாங்கத்துக்கிட்ட என்னோட ஊனத்தைக் காட்டி அந்த அம்பதாயிரத்தை வாங்கறதும் ஒண்ணுதான். நான் பணத்தை வாங்கிக்க இஷ்டப்படலேன்னு இந்தக் கவரைத் திருப்பி அனுப்பிடுங்க.''

மணியக்காரரும் மாப்பிள்ளை விட்டைச் சேர்ந்த கும்பலும் அயர்ந்து போய் நிற்க, மாணிக்கவேலர் தம்முடைய ஊன்றுகோலின் உதவியால் எழுந்து நின்றார். பாரதியைப் பார்த்துச் சொன்னார்: ''அம்மா பாரதி! நகைக்கும் வரதட்சிணைக்கும் ஆசைப்படாமெ உன்னை மட்டுமே சொத்தா நினைச்சு எப்போ ஒருத்தன் வர்றானோ, அதுவரைக்கும் நான் காத்திருக்கத் தயார்! அதுவரைக்கும் நீயும் இந்த அக்கினி வேள்வியில எனக்குத் துணையா இரும்மா!''

இப்படிச் சொல்லிவிட்டு ஊன்றுகோலைப் பெருமிதமாய் ஊன்றிப் பாரதியோடு வீட்டின் உள் அறையை நோக்கி நடக்க ஆரம்பித்தார். ❋

National Integration Language Series

THROUGH TAMIL

Learn English	11 50
Learn Telugu	6 00
Learn Kannada	6 00
Learn Malayalam	7 00
Learn Hindi (Part 1)	5 50
Learn Hindi (Part 2)	7 50
Learn Sanskrit	4 50
Learn Bengali	4 50
Learn Marathi	5 25
Learn Punjabi	4 50
Learn Gujarathi	6 50
Learn Urdu	6 50
Learn Arabic	7 50
Learn Oriya	4 50
Learn French	9 25

THROUGH HINDI

Learn Tamil	6 00
Learn Telegu	6 50
Learn Kannada	7 50
Learn Malayalam	6 50
Learn English	10 50

THROUGH ENGLISH

Learn Tamil	6 50
Learn Telegu	6 50
Learn Kannada	6 50
Learn Malayalam	6 50
Learn Sanskrit	6 50
Learn Hindi	6 50
Learn Bengali	4 50
Learn Marathi	6 50
Learn Punjabi	7 50
Learn Gujarathi	7 00
Learn Urdu	7 50
Learn Arabic	9 75
Learn Oriya	4 50

THROUGH KANNADA

Learn Tamil	6 00
Learn Telugu	5 50
Learn Malayalam	6 50
Learn Hindi	5 50
Learn Sanskrit	6 50
Learn English	9 50

THROUGH TELUGU

Learn Tamil	6 00
Learn Kannada	6 00
Learn Malayalam	6 50
Learn Sanskrit	6 50
Learn Hindi	6 00
Learn Bengali	4 50
Learn Marathi	6 50
Learn Punjabi	6 00
Learn Gujarathi	5 50
Learn Urdu	6 50
Learn English	9 00

THROUGH MALAYALAM

Learn Tamil	6 50
Learn Telugu	6 50
Learn Kannada	6 50
Learn Hindi	6 50
Learn Sanskrit	6 50
Learn English	10 50

THROUGH MARATHI

Learn Tamil	5 25

BALAJI PUBLICATIONS

103, Pycrofts Road, Madras-600 014

WITH BEST COMPLIMENTS FROM

Kovilpatti Lakshmi Roller Flour Mills Ltd.

Gangaikondan-627 352, Tirunelveli District

Manufacturers of

KUTHUVILAKKU Brand
Maida, Sooji, Atta & Bran

Phone : Office : 62 Sankarnagar Telegram: "FLOUR"
Factory: 22 Sankarnagar Sankarnagar

KLRF SHEET METAL INDUSTRIES

(A Unit of Kovilpatti Lakshmi Roller Flour Mills Ltd.)

Periyanaickenpalayam, Coimbatore 641 020

FABRICATORS OF SHEET METAL COMPONENTS

KLRF Textiles Gangai Kondan

(A Unit of Kovilpatti Lakshmi Roller Flour Mills Ltd.)

Manufacturers of Kutuvilakku Brand Hosiery Yarn

OUR HEARTY DEEPAVALI GREETINGS

THE PALGHAT CHIT FUNDS PRIVATE LIMITED

Registered Office: 16, Nana Street, Thyagarayanagar, Madras-600 017

ESTD. 1947 Phone: 442583 INCD. 1951

PCF

NEW CHITS AT OUR AYANAVARAM BRANCH

at No. 275, Konnur High Road, Madras-600 023. Phone: 615090

Group	Capital Rs.	Monthly Rs.	Duration Months
AMF	25,000/-	500/-	50
AMB	10,000/-	100/-	100

OTHER OFFICES T.Nagar (Phone: 442583), Purasawalkam (Phone: 662315), Ayanavaram (Phone: 615090), Palghat (Phone: 4403,) Hyderabad (Phone: 35935) Coimbatore (Phone: 22491) and ARANI (Pay Office)

Prize amounts are released on Securities only and not on personal sureties

A.S.P. AYYAR
Managing Director

PALGHAT CHIT MEANS RELIABLE CHIT

LR. SWAMY. PP.

இன்று தமது ஐம்பத்து மூன்றும் வயதில் நவநீதகிருஷ்ண பாகவதராகத் திகழ்பவர், வாலிபப் பருவத்தில் — இரண்டு தவறுகளைச் செய்தார். (ஆனால் அவர் இதுவரை வெளியே யாரிடமும் வாய் வார்த்தையாகக்கூட ஒப்புக்கொண்டதில்லை.) முதல் தவறு, தமக்கு இசைஞானமும் சாரீர சம்பத்தும் இருக்கின்றன என்ற நம்பிக்கையில், ஓர் அரியக்குடியையோ மகாராஜபுரத்தையோ சரிக்குச் சரியாகச் சந்திக்க முடியும் என்ற தைரியத்தில் இசை வெள்ளத்தின் படித்துறையில் கால் வைத்தார். இரண்டாவது அழகன் அவதரிப்பது அபூர்வம் என்று நாளுக்கு நாலாயிரம் தடவை கண்ணாடி முன் நின்று பல விதமாகச் சிரித்தும் புன்முறுவலித்தும் கண்ணாடியைத் தப் பற்றி ஒரு கனவும் காணவில்லை. ஆனால் இதற்காகப் பிள்ளை மேல் கொட்டி வந்த பாச மழையை நிறுத்தவில்லை. பல தவறுகளுக்குப் பிறகு தாம் ஒருவன் விவேகி ஆகிறான் என்பதை அவர் அநுபவ ரீதியாக உணர்ந்தவர்.

ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் பிள்ளை கிருஷ்ணன் தன் வாழ்க்கை இழப்புக்களை நினைத்து வருந்தி, திசை மாறுவான் என்று எதிர்பார்த்தார். ஆனால் இந்நிலை ஏற்படுவதற்குள் அவனுக்கு வயது எக்கச்சக்கமாக ஏறிவிடுமோ என்ற பயம் ஏற்பட்டது. தம் பிள்ளை என்றென்றும் வயிறு வாடாமல் இருக்கவும் நிழல் பறி போகாமல் இருக்கவும் ஒரு காரியம் செய்தார்.

1982-இல் இருப்பது போல 1950-இல் மயிலாப்பூரில் ஒரு கொரு காலத்தில் ஆயிரம் வேலி நிலம் இருந்த குடும்பம். அந்த நிலமெல்லாம் இப்போது உருத் தெரியாமல் எங்கெங்கோ போய் விட்டாலும் (நிலங்கள் அல்ல — உரிமைதான்) பாரம்பரியம் இன்னும் இருக்கிறதே! அது அவருடைய பிள்ளை கிருஷ்ணனுடன் முடிந்து விட்டால், அப்படிப்பட்ட முடிவுக்கு அவர்தாமே பொறுப்பாளி? அவர்தாமே பிதுர் உலகுக்குச் சென்றதும் கொள்ளுத் தாத்தாவின் தகப்பனார் வரை பதில் சொல்லிக் கொண்டே போக வேண்டும்? இந்தச் சிரமத்தைத் தவிர்க்க, பிள்ளையைத் திருமணம் செய்து கொள்ளும்படி எப்படி எப்படி எல்லாமோ வற்புறுத்தினார்; கெஞ்சினார். அடித்துச் சொன்னார், கடைசியில் பயமுறுத்திப் பார்த்தார்.

அலங்கோலப்படுத்தினார். இதன் காரணமாக, அவருக்கு எந்தப் பெண்ணும் தம்முடைய அழகுக்கு ஏற்றவளாகப் படவில்லை.

தம் பிள்ளை கிருஷ்ணனைப் பற்றி நன்றாக அறிந்து வைத்திருந்த அட்வகேட் நவநீதம் ஒரு தீர்க்கதரிசி. இசை வெள்ளப் படித்துறையின் பாசியில் வழுக்கிக் கூட, வெள்ளத்தில் பிள்ளையால் விழ முடியாது என்று அசைக்க முடியாத நம்பிக்கையில் இருந்தவர். ஆனால் அவரால் பிள்ளையின் திசையைத் திருப்ப முடியவில்லை. எஸ். எஸ். எல்.ஸிக்குப் பிறகு இண்டர்மீடியட்; அப்புறம் பி.ஏ. அதன்பின் தம்மைப் போல் பி. எல். என்றெல்லாம் பையனின் சின்ன வயது நகரும் போது கனவு கண்டுகொண்டிருந்தவர், மனைவியும் பிள்ளையுடன் சேர்ந்து சதி செய்வதைக் கண்டு விழித்துக் கொண்டார். அதன் பிறகு அவர் தம் புத்திர ரத்தினத் கிரௌண்ட் நிலத்தின் விலை ஒன்றரை லட்சமாக இருக்கவில்லை. வெறும் ஒன்றரை ஆயிரமாக இருந்தது. கட்சிக்காரர்களின் கும்பல் குறையாமல் வளர்ந்துகொண்டே போனதால் அபிராமபுரத்தில் நான்கு கிரௌண்ட் நிலம் வாங்கி, சதுர அடி இருபது ரூபாய் (இப்போது எவனாவது ஒரு முட்டாள் கண்ட்ராக்டர் ஏமாற்றாமல் கட்டினாலே நூற்றைம்பது) என்ற கணக்கில் மூவாயிரம் சதுர அடியில் இரண்டு மாடிக் கட்டிடம் கட்டி உயிலில் பதித்தார்.

கல்யாண விஷயத்தில் பிள்ளையின் பிடிவாதம் அட்வகேட் நவநீதத்தின் மனத்தை மெல்ல மெல்லப் பாதிக்கவாயிற்று. அவருடைய கொள்ளுத் தாத்தாவின் தகப்பனார் காலத்திலிருந்து ஒரு பாரம்பரியம் இருந்து வந்திருக்கிறது. சாத்தனூர் பெரிய வீடு என்றால் சரபோஜியே ஒரு மரியாதையுடன் ஆசனத்தில் உட்காருவாராம். முன்

ஆனால், பெரிய பரம்பரையில் வந்தவனாயிற்றே? கிருஷ்ணன் மசியவில்லை. தியாகராஜர் தாமிரச் செம்புடன் தலைப்பாகை அணிந்து சிப்லாக் கட்டையுடன் நடை போட்ட புண்ணிய பூமியில் புழுதி அதிர நடந்தான். யாரோ சொன்னார்கள், 'திருவையாற்றில் ஒரு மண்டலம் ஒரு போது இருந்து பக்தி சிரத்தையுடன் இருந்தால் தெய்வத்தின் மனம் இளகி, அவனுடைய தொண்டையும் இளகித் தேன் பாயத் தொடங்கும்' என்று. அவன் பல மண்டலங்களைத் திருவையாற்றிலேயே கழித்தான். தன் உத்திரட்டாதி நட்சத்திரத்துக்கு ஏற்ற ராசி எந்த வித்துவானிடம் லயித்திருக்கிறது என்று ஆராய்ச்சி செய்தான். பாதிப் பேர் நாகசுர வித்வான்களாக இருந்தார்கள். ஜி.என்.பி. மதுரை மணி, சித்தூர், ஆலத்தூர் என்றெல்லாம் படை எடுத்துப் பார்த்தான். எல்லாரும் ஒருமுகமாக அவனுடைய ஆர்வத்தைப் பாராட்டினார்கள்,

அவனுடைய ரசிகத் தன்மையைக் கண்டு வியந்தார்கள். வாய் விட்டுப் பாடாமல் இருக்க வேண்டிக் கொண்டார்கள். அவனுக்கும் சங்கீதப் புலமைக்கும் உள்ள தூரத்தை உணர அவனுக்குப் பல வருடங்களாகின.

படிப்புக்குப் படிப்பும் போயிற்று. சங்கீதத் தடாகமும் கானலாகப் போயிற்று. என்ன செய்ய? சங்கீத உலகினுள் பிரவேசிக்க அவன் போராடிக் கொண்டிருக்கையில், தன்னுடைய கிரகங்களெல்லாம் என்னதான் உணர்த்துகின்றன என்று தெரிந்து கொள்ள முனைந்தான்.

காழியூர், காவிசேரி இவர்கள் எல்லாரும் அவனுடைய ஜாதகத்தைப் பார்த்துவிட்டு, 'நல்ல ஜாதகம், சாப்பாட்டுக்குக் கஷ்டமில்லை' என்று ஆசீர்வதித்து அனுப்பினார்கள். ஒரு பாலக்காட்டு நம்பூதிரி 'சனி உச்சம்' என்றார். ஒரு கோழிக்கோடு பணிக்கர், 'சுகஜீவியாணு' என்றார்.

ஒருவர்கூட அவனுடைய கிரகங்களை இசையுடன் இணைத்துப் பேசவில்லை. இது அவனுடைய நம்பிக்கையைத் தகர்த்தது. தானே ஜோசியம் படித்தால் என்ன என்று ஆரம்பித்தான். இதன் மத்தியில் ஹரிகதையில் ஒரு மோகம் பிறந்தது.

ராஜாஜி ஒரு ஹரிகதை நிகழ்ச்சியின் போது, 'அந்தக் கலை உயிர் இழக்கக்கூடாது. அதை இளம் பயிராகக் கருதி நிறையத் தண்ணீர் ஊற்றி வளர்க்க வேண்டும்' என்றார். அவர் சொன்ன விதமும் அவர் ஹரிகதை மீது கொண்டிருந்த பக்தியும் கிருஷ்ணனை வெகுவாகப் பாதித்தன. உடனே ஒரு ஹரிகதைக் கிழவரிடம் ஓடிச் சிஷ்யனாக ஏற்றுக்கொள்ள வேண்டினான். அவர் சிரித்துவிட்டு, ''மொதல்லே இதிகாச புராணங்களை, நீதி நூல்களை எல்லாம் கரைத்துக் குடி. அப்புறம் வா!'' என்றார்.

கிருஷ்ணன் ராமாயணம் படித்தான். பாரதத்தை அலசினான். பாகவதத்துக்குள் பிரவேசித்து வெளிவந்தான். கதைகள் புரிந்தன. தத்துவங்கள் என்ன என்று தாம் தெரியவில்லை.

இசை, ஜோசியம், ஹரிகதை இவை மூன்றும் அவனுடைய யௌவனத்தை, மலைப்பாம்பு ஆட்டுக் குட்டியை விழுங்குவது போல விழுங்கின.



ஒரு நாள் விழித்துப் பார்த்தான். அப்போது அவனுக்கு வயது இருபத்தேழு.

அப்பாவின் அறைக்குப் போனான். அங்கே அப்பா கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தார். நெஞ்சு வலி ஒரு தடவை கதவைத் தட்டி ஆகிவிட்டது. இரண்டாவது தடவை கதவு தட்டும் ஓசை கேட்கக் கூடாது என்று டாக்டர் எச்சரித்திருந்தார்.

பிள்ளை வந்ததைக் கண்டதும் நவநீதம் வியந்து போனார். ஹரிகேசவநல்லூர் போய் ஒரு மண்டலம் இருந்தால் ஹரிகதை ஐப்பசி மழை மாதிரி கொட்டும் என்று யாரோ சொல்ல, அவன் ரெயிலேறியிருந்தான். அதற்குப் பின் பிள்ளையை அப்பா பார்த்ததில்லை.

''அப்பா.''

''என்னடா கண்ணு?''

''நான் ஒரு முட்டாள், அப்பா.''

''எனக்குத் தெரியும்டா கண்ணு.''

''என்னப்பா, என்ன சொல்றீங்க அப்பா?''

''இதை நீ உணர்வேன்னு எனக்குத் தெரியும்னேன்.''

''பாட்டை ரசிக்க முடியறது; பாட வரலே. கற்பனையிலே சாரீரம் ஜாலவித்தை எல்லாம் செய்யறது. ஆனா வாயைத் திறந்தா..''

''திறக்காதே. இப்ப நான் என்ன செய்யணும்?''

''எனக்கு வழி காட்டுங்க, அப்பா. வயசு ரொம்ப ஆயிடுத்து.''

''எனக்கே இப்ப என் வழி தெரியலையே கண்ணு.''

''சங்கீதம் வரலே, ஹரிகதை வரலே. ஆனா கொஞ்சம் கொஞ்சம் ஜோசியம் தெரிஞ்சிருக்கு, அப்பா.''

''என் ஜாதகத்தைப் பாரேன்.''

''பார்த்தேம்ப்பா. அதான் அவசரமா வந்தேன்.''

''என்னடா சொல்றே?''

''செவ்வாய் நீசமா நிக்கறான். சனி வேறே..''

''எப்ப, உன் கணக்குப்படி?''

''என் வாயாலே..''

''உன் வாயாலே பாடத்தான் முடியலே. என் பிரயாண காலத்தைத்தான் சொல்லிப் பாரேன்.''

''இது மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி.''

''எனக்குத் தமிழ் மாசங்களோட பேர் தெரியும்.''

''ஆடி.''

''சரி, போ.''

''நான் வந்த காரியம்..''

''உனக்கு வழிதானே? காட்டறேன். ஆனா அதுக்கு முன்னாடி, ஆடிக்கு முன்னாடி, ஏன் வர்ற பங்குனியிலேயே நீ தாலி கட்டணும்.''

''கட்டறேம்ப்பா.''

''அழகு கிழகுன்னு பேத்தப்படாது.''

''பேத்தலை.''

''ருக்கு!''

''அத்தை பெண்ணு?''

''ஏன் பயப்படறே?''

''அவ பட்டதாரியாயிற்றே?''



அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!

என்றும்

கோபால் பல்பொடி

பாக்கெட் விலை 45 காசுகள்

ஜெட் பல்பொடி

பாக்கெட் விலை 20 காசுகள்

வாங்கி உபயோகியுங்கள்!

தயாரிப்பாளர்கள்: S. P. S. ஜெயம் & Co.

மதுரை - 625001.

—மினர்வா

''இப்ப எல்லாப் பெண்களும் அப்படித்தான். ஆனா அவளுக்கு ஆட்சேபணை இல்லை.''

''வந்து...''

''நீ முடியாதுன்னு சொன்னா அவளை வேற இடத்திலே..''

''தனிக்கட்டையாகவே இருக்கப் பயப்படறேன் நான்.''

''நான் வழி காட்றேன்.''

''சரிப்பா.''

நவநீதகிருஷ்ண பாகவதரின் ஜோசியம் பலித்தது. சினிமாக்களில் உயிர் பிரியும் அதே கணத்தில் ஓர் அசல்விளக்கும் அணையும். ஆடிக் காற்றில் குத்து விளக்கு அணைந்தது. நவநீதமும் அணைந்தார்.

அப்புறம் அம்மா அவள் வீட்டிலேயே இருக்க, அப்பா வைத்து விட்டுப் போன இரண்டு மாடி வீட்டில் ருக்குவுடன் குடியேறினான்.

கிருஷ்ணன் வீட்டைப் பார்த்துக் கொண்டான். ருக்கு சாந்தோமில் ஒரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியையாகப் பதவி ஏற்றாள்.

நாளடைவில் கிருஷ்ணன் சமையற்கலையில் தேர்ச்சி பெற்றான். தன் கணவனைத் தவிர, வேறு யார் ரசம் வைத்தாலும் ருக்கு நுனி நாக்கால்கூடத் தொட்டுப் பார்க்கமாட்டாள்.

அவனுக்கு முப்பது வயது பூர்த்தியான சில வாரங்களுக்குப் பிறகு சரோஜா பிறந்தாள். அதன் பின் இரண்டு வருடங்கள் ஓய்வு எடுத்துக்கொண்ட ருக்கு, சாத்தனூர் வீட்டின் பாரம்பரியத்தைப் பாதுகாக்க ரமேஷை ஈன்றாள். அவ்வளவுதான்.

காலட்சேபம் நன்றாக ஓடிக்கொண்டிருந்தது. ஒரு நாள், 'ஏதேனும் ஒரு சமூக சேவையில் ஈடுபட வேண்டும். அதே சமயம் ஏதேனும் சில்லறையும் பெற வேண்டும்' என்று கிருஷ்ணனுக்குத் தோன்றியது. சங்கீதம் மற்றும் ஹரிகதைத் துறைகளில் அவன் முரட்டுப் பிடிவாதத்துடன் பிரவேசம் செய்வதை நிறுத்திக்கொண்டதே அவர் செய்த பெரிய சமூக சேவை என்று ருக்கு பாராட்டிவிட்டு, துளியை அவன் கையில் ஒப்படைத்து விட்டுப் பள்ளிக்கூடம் சென்றாள்.

பல குடும்பங்களில் — அதுவும் தாழ்த்தப்பட்ட மேல் வகுப்புக் குடும்பங்களில் எத்தனையோ பெண்கள் கல்யாணம் ஆகாமல் தவிப்பது அவனுடைய சிந்தைக்கு எட்டியது. அவனுக்கு ஜோசியம் தெரியும். அப்பா விஷயத்தில் பலித்தும் விட்டது.

ஏன் ஒரு 'மாரேஜ் ப்யூரோ' ஆரம்பிக்கக் கூடாது?

ருக்குவுக்குத் தெரியாமல் பூர்வாங்க வேலைகளைச் செய்த அவன் அடுத்த மாதமே, பெரிய பெயர்ப் பலகை ஒன்றை வெளியில் மாட்டினான். 'மயிலாப்பூர் கற்பகாம்பாள் மாரேஜ் ப்யூரோ' என்ற பலகை சூரிய வெச்சத்தில் மின்னியது.

''நம்ம பொண்ணையும் மாப்பிள்ளையும் இன்னும் காணவியே?''

''இம்..கங்கைல முழுவப் போயிருப்பாங்க!''

சோற்றுப் பருக்கைகளை எடுக்க ஒவ்வொரு காகமாக வருவது போல அவதிக்கு ஆளானவர்கள் வரலானார்கள். பல இடங்களுக்குச் சென்று, பல பேர்களைச் சந்தித்து, பல குடும்பங்களில் இருக்கும் நூற்றுக்கணக்கான பிள்ளைகளின் ஜாதகங்களையும், மற்ற விவரங்களையும் சேகரித்தான். அப்போதுதான், தகப்பனார் வாயால் சொல்லாமலே, தம் ஜாதகம் மூலம் அவனுக்கு வழிகாட்டி இருக்கிறார் என்ற உண்மை தெரிந்தது.

ஆறு மாதத்தில் நவநீதகிருஷ்ண பாகவதர் என்.கே. பாகவதரானார். பம்பாய், டில்லி, கல்கத்தா போன்ற நகரங்களிலிருந்து விசாரிப்புக்கள் வந்தன. பிள்ளைகளைப் பெற்றவர்களும் தகவல்கள் அனுப்பினார்கள்.

உற்சாகத் திமிர்ப்புடன் ஆரம்பித்த சேவை வியாபார ரீதியில் ஓடலாயிற்று. ருக்கு மாத மாதம் அளந்து அளந்து கொண்டு வந்தாள் என்றால் என்.கே. பாகவதர் அளக்காமல் வீட்டுக்கே வரவழைத்தார்.

இந்த இருபது வருடங்களில் என். கே. (இப்படித்தான் அவர் பெயர் குறைந்தது) மலை உச்சிக்குப் போய்விட்டார். ரோட்டரி கிளப் மெம்பர், ரேஸ் கோர்ஸ் மெம்பர், (ஆனால் குதிரை ஓடியதைப் பார்த்தது கிடையாது. குதிரைக்கு ஜாதகந்தான் கணித்துக் கொடுத்திருக்கிறார்.) கடவுளை நம்பாத அரசியல் பிரமுகர்கள் தேர்தல்களின்போதும், முன் அறிவிப்புக் கொடுத்துவிட்டுச் சந்தித்தார்கள்.

இப்போது அவருக்கு அந்தரங்கக் காரியதரிசி, மானேஜர், கணக்குப்பிள்ளை எல்லாம் கே. சரோஜா பி.ஏ.தான். இந்த விஷயத்தில் ருக்குவுக்கு மகா கோபம். ஊரிலிருக்கும் பெண்களுக்கெல்லாம், ஏற்றபடி வரன் பார்த்துக் கொடுக்கிறவர் பெற்ற பெண்ணை இருபத்து மூன்று ஆண்டுகளாக வீட்டிலேயே வைத்துக்கொண்டிருக்கிறாரே? ஆனால் அவளால் எதுவும் செய்ய முடியவில்லை. அவள் இப்போது தலைமை ஆசிரியை.

சரோஜாவுக்கு உள்ளூறச் சீக்கிரம் கல்யாணம் ஆகி, அம்மாவைப் போல இருக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனால் வெளியிட முடியவில்லை. அம்மா வெளிப்படையாகச் சொல்லிக் காட்டியும் அப்பா எந்தவித நடவடிக்கையும் எடுக்காதபோது, அவளால் என்ன செய்ய முடியும்? எந்தப் பெண், 'அப்பா, சீக்கிரம் என்னை மணமேடையில் உட்கார்த்திவை' என்று பெற்ற தகப்பனாரிடம் வெட்கத்தை விட்டுச் சொல்லுவாள்?

ஒரு நாள்.

என். கே. ஊரில் இல்லை. பம்பாய் போயிருக்கிறார். மாதுங்காவிலோ அல்லது செம்பூரிலோ ஒரு மாரேஜ் ப்யூரோ அமைக்க ஒரு திட்டம் உருவாகிக் கொண்டிருக்கிறது. மறு நாள் இரவு விமானத்தில்தான் திரும்புகிறார்.

உள்ளே சமையல் அறை வாசற்படியில் தலை வைத்துக்கொண்டு பாலம்மா (பதினேழு வருடங்களாக ரசம் தவிர, பாக்கி எல்லாம் சமைக்கிறவள். ருக்குவுக்காக என். கே. 'ரசம்' மட்டில் தொடர்ந்து வைக்கிறார்) படுத்துக்கொண்டிருக்கிறாள். ரமேஷ் காலேஜில். அம்மா மூக்கிலிருந்து அடிக்கடி விழும் கண்ணாடியை அடிக்கடி சரி செய்துகொண்டு பள்ளிக்கூடத்தில் மாணவிகளைப் பழி வாங்குகிறாள்.

சரோஜா கண்ணாடியைப் பார்த்தாள். அவளுடைய கூர்மையான மூக்கும், உளியால் செதுக்கிவிட்ட தாடையும், சற்றே நுங்குபோல வீங்கின கன்னங்களும் அவளுக்கே பிடித்திருந்தன. இந்த மாதிரி அடர்த்தியான கூந்தல் வேறு யாருக்காவது இருக்கிறதா என்று அதிசயித்து விட்டு, பின்புறம் தலையைத் திருப்பிப் பார்த்தாள். பின்னல் பாம்பாக இறங்கியது.

தனக்குள் பெருமைப்பட்டுக்கொண்டு அவள் திண்ணைக்கு வந்தாள். அதே சமயம், ஒருவன், வயது இருபத்தெட்டு, இருபத்தொன்பது, நிச்சயம் முப்பது இல்லை, கேட்டைத் திறந்து மெல்ல மெல்லத் தயங்கித் தயங்கி வந்துகொண்டிருந்தான்.

சரோஜா ஹாலுக்குள் பிரவேசித்து, ஆபீஸ் அறையை அடைந்

தாள். கதவையும் திறந்தாள். வழக்கமாக அப்பா உட்காரும் சுழல் நாற்காலியில் அமர்ந்தாள். மேலே மின்விசிறி பறந்தது.

திண்ணையில் பூட்ஸ் சத்தம் கேட்டது.

சரோஜா காத்திருந்தாள்.

பூட்ஸ் மேலும் இரண்டு அடி வைத்தது.

''யார்?'' என்று அறையிலிருந்தவாறே சரோஜா குரல் கொடுத்தாள்.

''உள்ளே வரலாமா?''

''இம்.''

அவன் பார்ப்பதற்கு நல்ல உயரமாகவே இருந்தான். வயது நிச்சயமாக முப்பது இல்லை. நல்ல சிகப்பு. நெற்றியை வியர்வை முத்துக்கள் அலங்கரித்தன.

''என்.கே.யைப் பார்க்க வந்தேன்.''

''உட்காருங்கள். மிஸ்டர் என். கே. தற்போது ஊரில் இல்லை.''

''எப்ப வருவார்?''

''நாளைக்கு இரவு.''

''நாளன்னிக்கு வறேன்.''

''முன்னேற்பாடு இல்லாம அவர் யாரையும் பார்ப்பதில்லை. நீங்க என்ன காரியமாக வந்திருக்கிறீர்களோ, அதை என்னிடம் சொல்லலாம். நான்தான் அவர் காரியதரிசி.''

''என் பெயர் சதானந்தம். டி. ஆர். சதானந்தம்.''

''இருங்கள். எழுதிக் கொள்கிறேன்.''

''நான் ஒரு எலக்ட்ரானிக் என்ஜினியர்.''

''டேப் ரிகார்டர் பற்றித் தெரியும் இல்லியா?''

''தெரியும்.''

''என்கிட்டே ஒண்ணு இருக்கு. சரியா ரிக்கார்ட் ஆக மாட்டேங்கறது. இதுவரை மூணு டேப் அறுந்தாச்சு. உங்க வயசு?''

''25—5—1954.. இருபத்தெட்டு முடிஞ்சுடுத்து. உங்க ரிகார்டரை நல்ல மெகானிக்கா பார்த்துக் கொடுங்க.''

''ஓ, உங்களுக்குப் பழுது பார்க்கத் தெரியும்னு நினைச்சேன்.''

''நினைக்கறது தப்பு இல்லை. ஆனா நான் என்ஜினியர். அதைப் பண்றவன் கும்பல்லே இருக்கிறவன். நான் வந்தது கல்யாண விஷயம்.''

''உங்க தங்கைக்கா அல்லது..''

''நான் என் திருமண விஷயமா வந்திருக்கேன்.''

''அப்படியா? மணப் பெண் வேண்டுமா?''

''ஆமாம், நான் உடனடியாகக் கல்யாணம் பண்ணிக் கொண்டால்தான், ஸ்டேட்ஸ்லே வேலையை ஒத்துக்க முடியும்.''

''சம்பளம் முதலிய தகவல்கச் சொல்லுங்களேன்.''

''நாலாயிரம் டாலர்.''

''அதாவது?''

''முப்பத்திரண்டாயிரம் ரூபாய்.''

''மாசம் மூவாயிரம்னு போட்டுக்கலாமா?''

''மாசம் நாலாயிரம் டாலர். மூவாயிரம் ரூபாய் வேர்க்கடலைக்குக் கூடக் காணாது.''

''அங்கே வேர்க்கடலை அவ்வளவு விலையா?''

''நான் வறேன். என். கே.யையே வந்து பார்க்கிறேன்.''

எழுந்தான்.

''கோபப்படாதீர்கள். எனக்கு அமெரிக்காவை அட்லாஸில்தான் தெரியும். அது சரி, உங்களுக்கு எப்படிப்பட்ட பெண் தேவை?''

''நல்ல பெண். என் சுக துக்கங்களில் பங்கு எடுத்துக் கொள்ளக் கூடியவள். வயது இருபத்திரண்டு இருபத்துமூன்று இருக்கலாம். இங்கிலீஷ் பேசத் தெரியணும்.''

சரோஜா அவசர அவசரமாகக் குறித்துக் கொண்டாள்.

''முக்கியமானது ஒன்று இருக்கே. அதை விட்டு விட்டீங்களே?''

''என்ன?''

''பெண்ணின் அழகு?''

''என்னைப் பொறுத்தவரை பெண்ணின் குணந்தான் எனக்கு முக்கியம்.''

''அப்ப அழகுன்னு மறுத்து விடுவீர்களா?''

''நான் சொன்னதுக்கு அர்த்தம் அது இல்லை. அழகும் குணமும் இருந்தால் அது அபூர்வம்.''

''ஜாதகம் இருக்கா?''

''எனக்கு ஜாதகம் கிடையாது. எனக்கு அதில் நம்பிக்கையும் இல்லை.''

''சரி. முதலில் கட்டணம் இருபது ரூபாய். அப்புறம் வரதட்சிணையைப்பற்றிக் கேட்க மறந்துவிட்டேனே?.''

''இந்தாங்க இருபது ரூபா. வரதட்சிணையா? யூ மீன் டௌரி. இந்த நாட்லேந்து இது என்னிக்குத்தான் ஒழியுமோ? ஒரு பெண்ணை மனைவியாக்கிக் கொள்ள ஆண்பிள்ளை பணம் வாங்கினான்னா அவன் சம்பல் கொள்ளைக்காரனை விடக் கீழ்த்தரமானவன்.'' அவன் எழுந்தான்.

''உங்கள் மாதிரி லட்சத்திலே ஒருத்தர்தான் இருக்க முடியும். நாளன்னிக்கு மறுநாள் காலை பத்து மணிக்கு வாருங்கள். மிஸ்டர். என். கே. இருப்பார்.''

''சரி.''

''நிச்சயமா வாங்க. நல்ல பெண் ஒருத்தி இருக்கிறாள்.''

''நன்றி, மிஸ் சரோஜா.''

''மிஸ்டர் உங்களுக்கு எப்படி என் பெயர் தெரியும்?''

''ஓ! சாந்தோமிலுள்ள உங்க அம்மாவைக் கேளுங்க, பம்பாயிலுள்ள தகப்பனாரைக் கேளுங்க, தெரியும்.''

அவன் இறங்கி நடந்தான்.

''ஏண்டி என்ன சொல்றே?''

''ஏம்மா சதானந்தம் எப்படி?'' சரோஜாவுக்கு எரிச்சல் வந்தது.

''முன்கூட்டியே சொல்லியிருந்தா என்னவாம்?''

''சதானந்தந்தான் கூடாதுன்னான். பெண் பார்க்க வர்றதுன்னா பெண் தன் இயல்பிலே இல்லாம, செயற்கையா நடந்துகொள்வான்னு அபிப்பிராயப் பட்டான். நானும் சரின்னேன். கடைசியில் என் மாரேஜ் ப்யூரோவின் மூலமாகவே உன் கல்யாணம் நிச்சயமாகிறது.''

''புகழ் பூராவையும் நீங்களே கொத்திண்டு போகப் பார்க்காதீங்க. நான்தான் பம்பாய் விலாசம் கொடுத்தேன். இப்படி ஒரு தூரத்து உறவுக்காரப் பிள்ளை எனக்கு இருக்கிறான் என்பதே உங்களுக்குத் தெரியாது'' என்றாள் ருக்கு.

''ருக்கு, இன்னிக்கு ஸ்பெஷல் மைசூர் ரசம்! சரிதானே?''

''சீக்கிரம். அவன் சரியாப் பத்து மணிக்கு வந்து விடுவான். அதற்குள் நான் ஒரு கப் குடிக்கணும்'' என்றாள் ருக்கு.

''ஏம்மா, ஸ்கூலுக்குப் போக வேண்டாமா?'' என்றாள் சரோஜா.

''ஆமாண்டீ. எல்லாம் உனக்காகத்தான்'' என்றாள் ருக்கு.

நாட்டிலுள்ள மற்றப் பெண்களுக்கு வரன்கள் இணைப்பதில் முனைந்தார், நவநீத கிருஷ்ண பாகவதர். ✻

''மணி ஆயிட்டுது. வாடா ஸ்கூலுக்குப் போகலாம்.''

''போடி. பதினொரு மணிக்குத் தானே சாப்பாடு போடுறாங்க.''

Tel: "SPIDER" Phone: 20160

பொன்னான நன்நாளாம்

இத் தீபாவளித் திருநாளில்

எங்கள் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்

Spider BANIANS

SHOW ROOMS

ஸ்பைடர் ஷோரூம்
104-A, காமராஜ் சாலை,
திருப்பூர்-638604

ஸ்பைடர் ஷோரூம்
உரிமைபெற்ற விற்பனையாளர்
ராஜாராம் டெக்ஸ்டைல்ஸ்
பஸ் ஸ்டாண்ட், மேட்டுப்பாளையம்

தயாரிப்பாளர்:

ஸ்பைடர் நிட்டிங் கம்பெனி

பூர்ண உரிமையாளர்:

P. சகுந்தலா பழனிசாமி

104-A, காமராஜ் சாலை, திருப்பூர்-638604.



லக்ஷ்மிகரமான
இல்வாழ்க்கைக்கு
எங்களுடைய
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்!

லக்ஷ்மி
மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
கோயம்புத்தூர்

ADWAVE/LM/2183



இனிக்கும் இசை நினைவுகள்

என். ஆர். பூவராகன்

தஞ்சை மாவட்டத்திலுள்ள, நீடாமங்கலம் என்ற கிராமத்தில், தொடக்கப் பள்ளியில் படித்தது முதல் (1925) சங்கீத வித்துவான்களுடனும், தலைசிறந்த நாகசுரக் கலைஞர்களுடனும், சம்பிரதாயம் வழுவாத நட்டுவனார்களுடனும் அளவளாவிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இதைப் பூர்வ புண்ணியம் என்றே கருதுகிறேன். டைகர் வரதாசாரியர், மைசூர் வாசுதேவாசார், அரியக்குடி, மகாராஜபுரம், முசிரி, மதுரை ஸ்ரீரங்கம் ஐயங்கார், பாலக்காடு மணி ஐயர், ராஜரத்தினம் பிள்ளை, தவில் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, திருவீழிமிழலை சுப்பிரமணிய பிள்ளை, நடராஜ சுந்தரம் பிள்ளை, வீருசாமி பிள்ளை, இவர்களுடன் பல வருஷங்கள் நெருங்கிப் பழகி, சங்கீத விஷயங்களையும், அவ்வப்போது அவர்கள் கூறிய நகைச்சுவையையும் மனத்தில் பதித்துச் சுவைத்திருக்கிறேன். ரசமான சில, இங்கு இடம் பெறுகின்றன.

நோட்டு ஊதுகிற குழாய்: ஒரு சமயம், திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை நீடாமங்கலம், சந்தான ராமசுவாமி திருவிழாவில் நாகசுரம் வாசிக்க ஏற்பாடாயிருந்தது. பெருமாள் புறப்பட்டவுடன், இரவு ஏழு மணி முதல் மல்லாரி, நாட்டை வாசித்து வந்த ராஜரத்தினம், கடைத்தெரு வரும்போது பதினொரு மணிக்கு ஷண்முகப்பிரியாவை விஸ்தாரமாய் ஆலாபனை செய்தார். திரளான ரசிகர்கள் மெய்ம்மறந்து செவிமடுத்தனர். கோவில் டிரஸ்டி சங்கீதவாசனையே இல்லாத ஆயக்காரம்பலம் நடேசையர், (சற்றுச் செவிடுங்கூட.) வித்துவானை நோக்கி, ''பிள்ளைவாள், வெகு நேரம் ராகம் வாசிக்கிறீர்களே. ஒரு நோட்டு வாசிக்கக் கூடாதா?'' என்றார். உடனே ராஜரத்தினம் ஒத்து ஊதுகிறவரைப் பார்த்து, ''ஏண்டா எலே, ராகம் ஊதுகிற குழாயை எடுத்துக்கிட்டு வந்துட்டே. இதைப் பிடி. நோட்டு ஊதுகிற குழாயைக் கொண்டு வா'' என்று சொல்லி விலகினார், பிறகு கோவில் மேளக்காரர் புறப்பாடு முடியும் வரை வாசித்து முடித்தார். எல்லாரும் டிரஸ்டியைக் கடுகடுத்துப் பேசி, 'ஞான சூன்யம்' என்று கூறினார்கள்.

மாங்காய்ப்பால்: சங்கீதச் சரித்திரத்திலே தன்னிகர் இல்லாமல் தனிப் புகழோடு, சக்கரவர்த்தியாகச் சுமார் ஐம்பது வருஷங்களுக்கு மேலாகத் தொடர்ந்து கச்சேரி செய்ததுடன், வழிகாட்டியாகவும் விளங்கியவர் மகாவித்துவான் அரியக்குடி ராமானுஜ ஐயங்கார். இவருடன் நாற்பது வருஷத் தொடர்பில், தொகுத்த நகைச்சுவைச் சம்பவங்கள் கணக்கில் அடங்கா.

ஒரு சமயம் திருவல்லிக்கேணி சங்கீத சபாவில் நடந்த கச்சேரியில் சுமார் நாலரை மணிக்கு மேல் பாடி முடிக்கும் தறுவாயில், முன் இருந்த ரசிகர் ஒருவர், ''மாங்காய்ப் பாலுண்டு ''என்ற சித்தர் பாடலைப் பாடும்படி கேட்டார். அரியக்குடி, பிளாஸ்கில் இருந்த பாலைக் கப்பில் ஊற்றி, ''பசும்பால்தான்'' என்று சொல்லி அருந்தி, 'பவமான' என்று மங்களம் பாடி முடித்தார்.

'ஆசைமுகம்': கோகலே ஹாலில் நடந்த கச்சேரியில், ரசிகர், வித்துவானுக்கு ஒரு சீட்டு அனுப்பினார். அதில் அப்போது மிகப் பிரபலமான 'ஆசைமுகம் மறந்து போச்சே' என்ற பாட்டைப் பாடும்படி எழுதியிருந்தது. பாடகர் என்ன செய்தார் தெரியுமா? வாயை விட்டு 'ஆசைமுகம் மறந்து போச்சே' என்று சொல்லியவண்ணம் தம் கையை உயர்த்தி, 'மறந்து போச்சு' என்பதற்கு அடையாளமாக ஆட்டினார். எல்லாரும் நகைத்தார்கள். பிறகு மங்களம் பாடினார்.

ஜீயர் சந்திப்பு: திருவல்லிக்கேணியில், வானமாமலை ஜீயர் சுவாமிகள் தங்கியிருந்தபோது, ஐயங்காரைப் பார்க்க விரும்பினார். பத்தாறு பட்டைப் பஞ்சகச்சமாகக் கட்டிக்கொண்டு, திருமண் காப்புத் தரித்து, என்னையும் அழைத்துக்கொண்டு காரில் புறப்பட்டார். ஜீயர் ஐயங்காரைப் பார்த்து, ''ஒரு பாட்டுப் பாடுங்கள்'' என்றார். ''அடாடா! நான் தம்பூரா கொண்டு வரவில்லை. இருந்தாலும் தாங்கள் விண்ணப்பித்ததனால் பாடுகிறேன்'' என்றார் ஐயங்கார். ஹிந்துஸ்தான் காப்பி ராகத்தை இரண்டு நிமிஷம் ஆலாபனை செய்துவிட்டு, 'ஜானகி ரமண' என்ற கிருதியைப் பாடினார். ஜீயர் சொக்கிப் போனார்.

''இது யார் சாகித்தியம்?'' என்று கேட்டார் ஜீயர்.

''இது தங்களுடைய பீடத்தில் முன் இருந்த ஜீயர் ஸ்வாமிகள் செய்த சாகித்தியம்'' என்றார் ஐயங்கார்.

ஜீயருக்கு வியப்புத் தட்டியது. ''முந்திய ஜீயர் ஸ்வாமிகள் சாகித்தி



மகாராஜபுரம்

ஹரிகேசநல்லூர் பாகவதர்

யங்கள் செய்திருக்கிறார் என்று எனக்குத் தெரியாது. அதிலும் இந்தப் பாட்டு மிகக் கவர்ச்சியாய் இருக்கிறது. இன்னொரு பாட்டுப் பாடுங்கள்'' என்று ஜீயர் கூறியதும், ஐயங்கார், ''தசரதஸுத'' என்ற ஜோன்புரி கிருதியைப் பாடினார். ஜீயர், ''இது யாருடையது?'' என்று வினவ, ''இதுவும் அவருடையது தான்'' என்றார் ஐயங்கார். உடனே ஓர் உயர்ந்த பச்சைக் கம்பளிப் போர்வையை எடுத்து ஐயங்காருக்குப் போர்த்து, ஆசீர்வதித்தார் ஜீயரவர்கள். ''இந்தப் பாடல்களைத் தாங்கள் பிரசாரம் செய்ய வேண்டும்'' என்றும் கூறினார். ஐயங்காருக்கு அளவில்லா மகிழ்ச்சி.

எல்லாப் பிரியாக்களும்: ஹரிகேசநல்லூர் முத்தையா பாகவதர், ஒரு சமயம் அரியக்குடியைப் பார்க்க வந்தார். ஜரிகைத் தலைப்பாகை, வெள்ளித்தடி, உருமாலை போட்ட ஆஜானுபாகுவான தோற்றம். நடுத் தெருவில் ஐயங்கார் இல்லத்தில் நானும் இருந்தேன். பாகவதர் தம் கீர்த்தனைகள் அச்சிட்ட புத்தகத்தை அவரிடம் கொடுத்து, கச்சேரிகளில் சிலவற்றைப் பாட வேண்டும் என்று விண்ணப்பித்தார். ஐயங்கார் புன்சிரிப்புடன், ''யாராவது பாடுகிறார்களா?'' என்று கேட்டார். பாகவதர், ''தாங்கள் பாடினால் எல்லாரும் பாடுவார்கள்'' என்று பதிலளித்தார். ஐயங்கார் புத்தகத்தைப் புரட்டியபடி கூறினார்: ''ஸஹஜகுண (சங்கராபரணம்), இது மைசூரில் பெண்கள் பாடுகிறார்கள். 'வல்லிநாயகனே' (ஷண்முகப்பிரியா) இதை, நாகசுரக்காரர்கள் வாசிக்கிறார்கள்; 'தெலியகனே,' (உசேன்) இதை டிராமா கிட்டப்பா பாடுகிறார்.''

பாகவதர் இது கேட்டு ஆச்சரியம் அடைந்தார். மேலும் புத்தகத்தைப் புரட்டி, 'சுமனப்பிரியா', 'பசுபதிப்பிரியா', 'பவப்பிரியா', 'நாடகப்பிரியா', 'கோகிலப்பிரியா' ஆகிய ராகங்களில் கிருதிகளைக் கண்டு வியப்புற்று, ''பாகவதர்வாள், இதில் எல்லாப் பிரியாக்களும் அடங்கி இருக்கு. இன்னும் 'ராவணப்பிரியா', 'துரியோதனப்பிரியா' இவற்றில்தான் கிருதிகள் பாக்கி'' என்றார்.

பாகவதா மறுபடியும் தம் கிருதிகளில் சில பாடவேண்டும் என்று கேட்டார். ஐயங்கார் புன்முறுவலுடன், ''தியாகராஜஸ்வாமிகள், தீட்சிதர், சியாமா சாஸ்திரி, பட்டணம் சுப்பிரமணிய ஐயர், பூச்சி ஐயங்கார், இவர்களின் கிருதிகள் மொத்தம் ஆயிரத்துக்கு மேல இருக்கு. சிலவற்றைக் கச்சேரிகளில் கையாளுகிறேன். தாங்கள் சொன்னதற்காக 'மந்தாரி' கீர்த்தனத்தைப் பாடுகிறேன்'' என்றார். அவர் போனவுடன், அந்தப் புத்தகத்தை என்னிடம் கொடுத்து, ''அதைப் பீரோவில் வை'' என்றார். பிறகு, ''தியாகராஜ ஸ்வாமிகள் கீர்த்தனந்தான் கீர்த்தனம். பாக்கி எல்லாம் போக்கிரித்தனம்'' என்றார்.

கனம் கிருஷ்ணையர் தினம்: மகாராஜபுரம் விசுவநாதையர் விலாப் புடைக்கச் சிரிக்கும்படி பேசுவார். ஒரு சமயம் என் வீட்டுக்கு வந்து ''தம்பூரா இருக்கா?'' என்றார். கொண்டுவந்து கொடுத்தேன். சுருதி கூட்டி, ''வாத்தியம் நன்றாய் இருக்கு, யார் போட்டது?'' என்றார். ''தம்பூரா எனக்கு மைசூர் வாசுதேவாசார் கொடுத்தது'' என்றவுடன் ஆச்சரியமடைந்து, ''என்னடா, உன் அதிர்ஷ்டம்'' என்றார். என் மனைவி தம்பூராவை மீட்டினவுடன் ஒரு பாட்டுப் பாடினார். கனம் கிருஷ்ணையரின் கல்யாணியில் அமைந்த 'பாரெங்கும் பார்த்தாலும்' என்ற சாரங்கபாணிப் பெருமாள் பேரில் இயற்றியது. உடனே, பின்னால் திரும்பி, ''என்னம்மா, பலஸ்ருதியாய் இருக்கு'' என்று கடுகடுத்தார். அவள் உடனே நிறுத்திவிட்டாள். பிறகு சிரித்துக்கொண்டு, ''நான் ஒன்றும் விகல்பமாய்ச் சொல்லவில்லை. உங்களுக்குப் பலஸ்ருதி கிடைக்கும். ஸர்வாபீஷ்ட ஸித்திரஸ்து'' என்றார். பிறகு, அடுக்கடுக்காகப் பல கிருதிகளைப் பாடினார். நான் மிக்க சந்தோஷம் அடைந்து, பிரபல நாட்டியமணி குமாரி கமலாவை வரவழைத்தேன். அவள் வந்தவுடன் விசுவநாத ஐயர், ''அம்மா, உன் பரதநாட்டியத்தைப் பல தடவை கண்டு களித்திருக்கிறேன். இன்று, கனம் கிருஷ்ணையர் தினம். அதனால் அவர் பதங்களைப் பாடினேன்'' என்றார். கடைசியில், ஆரபியில் கோபாலகிருஷ்ண பாரதியின் கிருதியை, ''ஆடிய பாதத்தைத்தா, தத்தித்தை, தத்தித்தை, என்றாடிய பாதத்தைத்தா'' எனப் பாடவும், கமலா தன்னை அறியாமல், ''நான் அபிநயம் பிடிக்கட்டுமா?'' என்றாள். ''இந்தப் பாட்டை உடனே எழுதிக் கொடுங்கள். கேட்டதே இல்லை'' என்றாள்.

தனி ஆவர்த்தனம்: மிருதங்க வித்துவான் ஒருவர், விசுவநாதையரின் கச்சேரி. இரண்டுமணி ஆனவுடன், ''தனி ஆவர்த்தனம் வாசிக்கட்டுமா?'' என்று கேட்டார். அவர் புன்னகையுடன், ''ஏண்டா, முதலிலிருந்து தனியாகத்தானே வாசிக்

வீணை சாம்பசிவ ஐயர்

கிறாய். எப்போது சேர்ந்து வாசித்தாய்? எதற்குத் தனி?'' என்றார்.

வெள்ளைக் கட்டை, கறுப்புக் கட்டை: முசிரி சுப்பிரமணிய ஐயர் நோய்வாய்ப்பட்டிருந்த சமயம் ஒருமுறை பார்க்கப் போனேன். அப்போது சதாசிவம், எம்.எஸ். சுப்புலட்சுமி இருவரும் வந்தார்கள். அவர் வித்துவான்களைப்பற்றி வேடிக்கையாய்ப் பேசி இந்தச் சம்பவத்தைச் சொன்னார்.

ஒரு வித்துவான், காரைக்குடி வீணை சகோதரர்களில் மூத்தவரான சுப்பராம ஐயரிடம் தம் வித்வத்தைக் காண்பித்து, ஒரு மணி நேரம் வாசித்தார். நிறுத்தியவுடன் ஐயர் சொன்னதாவது: ''இந்த வாத்தியத்தில், இத்தனை வெள்ளைக் கட்டைகள் உள்ளன. இத்தனை கறுப்புக் கட்டைகள் உள்ளன. இதில் ஒரு கட்டையாவது உங்கள் சுருதியுடன் சேரக் கூடாதா?'' என்று கூறினாராம்.

ஒரு சமயம் பி. வி. கேஸ்கர் (முன்னாள் அமைச்சர்) வீணை சாம்பசிவ ஐயரைகர் நாடக ஸங்கீதத்துக்கும் ஹிந்துஸ்தானி ஸங்கீதத்துக்கும், என்ன வித்தியாசம் என்று வினவினார். அதற்கு அவர் சிரித்த முகத்துடன், ''கர்னாடக சங்கீதம் மிகப் புனிதமானது, ராமர் மாதிரி. ஹிந்துஸ்தானி சங்கீதம் கொஞ்சம் விளையாடிவிட்டது, கிருஷ்ணர் மாதிரி'' என்றார். நானும், பெரம்பூர் சபாக் காரியதரிசி சேதுராமனும் கேட்டு மகிழ்ச்சியடைந்தோம்.

வீணை தனம்மாள்

''வாருண்டே எவுரு'': மைசூர் வாசுதேவாசாருடன் பத்து வருஷத்துக்கு மேல்நெருங்கிப் பழகி, 'சுதேசமித்திரன்' வாரப் பதிப்பில் காலஞ்சென்ற வித்துவான் டி. கே. ராமஸ்வாமி ஐயங்கார் உதவியால் நூறு கீர்த்தனைகளை, ஸ்வர தாளக் குறிப்புடன் வெளியிட்டேன். அப்போது வார வாரம் அவரைச் சந்தித்துச் சில கிருதிகளைப் பாடம் செய்தேன். வால்மீகி ராமாயண சுலோகங்களுக்கு, கலாக்ஷேத்ரா, மாணவ மாணவிகள் நாட்டிய நாடகம் நடிக்க இசை அமைத்து, 'சீதா கல்யாணம்' வரை வந்தது. அந்த விழாவைப் பார்க்க ராஜாஜி, வயலின் த்வாரம் வேங்கடசாமி நாயுடு எல்லாரும் வந்திருந்தார்கள். நாடகம் முடிந்தவுடன், த்வாரம், வாசுதேவாசாரைப் பார்த்து, ''இதையெல்லாம் யார் செய்தார்கள்?'' என்றார். அதற்கு அவர் தம் எதிரில் நின்ற ருக்மிணி தேவியையும், தம்மையும் சுட்டிக் காட்டி, ''வாரு'' என்றார். த்வாரம் மறுபடியும், ''வாருண்டே எவுரு?'' என்று கேட்க, வாசு ''தேவாசார், 'வா', வாசுதேவாசார் சங்கீதம்; 'ரு' ருக்மிணி தேவி, நாட்டியம்'' என்றார். ராஜாஜி உடனே, ''உங்கள் கவிதா சக்தியைப் பற்றி முன்பே தெரியும். இன்று தங்கள் வாக்குச் சாதுர்யத்தை மிகவும் ரசித்தேன்'' என்றார்.

சாமி எப்படிக் கேட்டுக்கிட்டிருக்கு?: வெள்ளிக்கிழமைதோறும் வீணை தனம்மாள், ஜார்ஜ்டவுன் வீட்டு மாடியில், குறிப்பிட்ட வித்துவான்களும், ரசிகர்களும் சூழ வீணை வாசிப்பதுண்டு. சிறிது சப்தம் ஏற்பட்டாலும் வாசிப்பதை நிறுத்திவிடுவார். ஒரு வெள்ளிக்கிழமை வீணை வாசித்துக் கொண்டிருக்கும்போது தெருவில் சுவாமி ஊர்வலம் போயிற்று. முன்னால் ஒரு நாகசுர வித்துவான் வாசித்து வந்தார். தனம்மாள் வீணையை நிறுத்தி. ''யாரப்பா, அந்த நாகசுவரக் காரரை இங்கே அழைத்து வா'' என்று கூறினார். ஓர் அன்பர்போய் அந்தக் கலைஞரிடம் கூறினார். தனம்மாள் தம்மைப்பார்க்க விரும்பியதை பாக்கியமாகக் கருதின வித்துவான் கைகட்டியவண்ணம் வந்து நமஸ்காரம் செய்தார். ''ஏம்பா, நீதான் நாகசுரம் வாசிக்கிறாயா? அந்தச் சாமி இதை எப்படித்தான் பொறுத்துக்கிட்டிருக்கு?'' என்றார். இதை எனக்குச் சொன்னவர் தனம்மாளிடம் முறையே வீணை கற்ற சாவித்திரி ராஜனின் தாயார், கனகம்மாள் சீதாபதி. ✻

தீபாவளிக்கு

- ○ கைத்தறிச் சேலைகள்
- ○ வேஷ்டிகள்
- ○ மில் ஜவுளிகள்
- ○ சூட்டிங்குகள்
- ○ பேன்ஸி சில்க்குகள்!
- ○ பிரிண்டட் சேலைகள்
- ○ 2 × 2 பிளவுசுகள்

இதர எல்லாவிதமான, தரமான ஜவுளிகளைக் குறைந்த விலைகளில் வாங்க நம்பிக்கையான ஒரே இடம்

நல்லி ஸ்டோர்ஸ்

(ஸ்ரீ நவசக்தி விநாயகர் கோவில் அருகில்)
லஸ், மயிலாப்பூர், சென்னை-600004.

லட்சக்கணக்கான இல்லத்தரசிகளுக்கு பெரு மகிழ்ச்சி தரும்

தற்போது சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் உற்பத்தித் திறனை இரு மடங்காக உயர்த்த விரிவான நிர்மாணப் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

1984ம் ஆண்டுக்குள்ளாக சமையல் எரிவாயுவின் மொத்த உற்பத்தி மும்மடங்காகும். மேலும் லட்சக்கணக்கான இல்லத்தரசிகளுக்கு சமையல் எரிவாயு கிடைக்கும் வாய்ப்பு.

MRL மதறாஸ் ரி:பைனரீஸ் லிமிடெட்

தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு பணிபுரியும் நிறுவனம்.

maa (S) MRL 8238 TAM

கனலும் கவசமும்

எஸ்.வி. ரமணி

"அண்ணா!"

"யாரது?"

"நான்தான் துச்சலை."

"துச்சலையா?"

மேல் உப்பரிகையிலுள்ள அறைக் கதவு திறக்கப்படுகிறது. அந்த நேரத்தில் அமைதிக்குப் பதில் ஆரவாரமும் பதற்றமும் அந்தப் படுக்கையறையைச் சூழ்ந்திருக்கின்றன. அறையிலுள்ள பொருள்கள் மட்டும் அலங்கோலமாகக் காணப்படவில்லை; வீராதி வீரன், மன்னாதி மன்னனின் கண்ணில் கவ்விக் கிடக்கிறது வியாகுலம்; சிந்தனைப் பின்னலில் குழம்பிக் காட்சியளிக்கிறது முகம்; குளுமையான அந்த இரவுப் போதின் தண்மை, வெம்மையாகி வேர்வை வழிந்தோடுகிறது;

"எதற்கு இந்த நேரத்தில்?"

வார்த்தைகள் வெடுக்கென்று வருகின்றன. சிவந்த விழிகளில் சினம் கொப்புளிக்கிறது.

"தங்களை அம்மா அவசியம் உடனே வரச் சொன்னார்கள்."

"என்னையா?"

"ஆமாம்."

"எதற்காக?"

"தெரியாது. ஆனால் மிக அவசரம் என்றார்கள்."

ஒரு கணம் யோசனை; தயக்கம்.

"சரி, இதோ போகிறேன்."

ஆபத்துக் காலத்தில் ஆண்டவனைப் போல் உதவலாமே, தாயுள்ளம்; உலகத் தாயைப் போன்று சாதாரணமானவளா? 'கணவன் சுகமே தன் சுகம்' என்று தன் சொந்த விருப்பு வெறுப்புக்களையே தியாகம் செய்த, கற்பின் மணியாய் ஒளிரும், கனல் பிழம்பாயிற்றே! உள்ளத்திலே தெம்பு பிறக்கிறது. நடையை எட்டிப் போட்டுத் தாயைக் காணத் துடிக்கிறது உள்ளம். புண்பட்ட உள்ளமாயிற்றே! ஆறுதல் தேடித் தாவுகிறது, தாயிடம்.

"அண்ணா! இன்னும் ஒன்று. தங்களை ஆடை இல்லாமல் வந்து தரிசிக்கும்படி அன்னையாரின் கட்டளை. அதையும் அவசியம் நிறைவேற்றுங்கள். எல்லாம் உங்கள் நன்மைக்குத்தான்."

கனன்று எரியும் கொழுந்தில் நீர் விட்டது மாதிரி, புறப்பட்ட வேகம், அப்படியே அடங்குகிறது. பிறந்த மேனியாகவா? பத்து மாதம் என்ன, அதற்கும் மேலே சுமந்து பெற்ற தாய்தான்; அமுதூட்டி, ஆடையணி பூட்டி வளர்த்த அன்னைதான். இருந்தாலும் அப்படி எப்படிச் செல்ல முடியும்?

அன்னையைப் போய்த் தரிசித்தால், நிச்சயம் நாளைப் போரில் வெற்றிதான். தோல்விக்கு மேல் தோல்வி ஏற்பட்டு நைந்துருகும் தனக்கு, வெற்றித் திருவை அணைய ஆசி வழங்கப் போகிறது! "தாய்க்குத் தலைப்பிள்ளை நீ! நீ ஒருவன் வாழ்ந்தாலே எனக்குப் போதுமடா!" என்று எத்தனை தரம் வாயார, உள்ளம் இனிக்க, உடல் புலகிக்கச் சொல்லிச் சொல்லி வாழ்த்தியிருக்கிறது, அந்தத் தாயுள்ளம்!

ஆனால்!

பெற்ற தாயாக இருந்தாலும் ஆடையின்றி எப்படி எதிரில் போய் நிற்பது? தாயைக் கண்டு ஆசி பெறத் துடிப்பு ஒரு பக்கம்; நேரில் காணத் தயக்கம் இன்னொரு பக்கம்; பொழுது ஓடிக்கொண்டே இருக்கிறது. இன்னும் ஐந்து நாழிகைப் போது கழிந்தால் பொழுது பொலபொலவென்று விடிந்துவிடும். போர்க்களத்திலே சங்கநாதங்கள் முழங்கத் தொடங்கிவிடும்; அதற்குள் அன்னையின் அருளைப் பெற வேண்டும்; நொடிகள் தேயத் தேய, அவன் உள்ளம் துடிக்கிறது;

அவ்வளவு பெரிய அரண்மனையில் தனக்கு யோசனை கூற ஒருவரும் இல்லாதது பெருத்த அவமானமாகத் தோன்றுகிறது. சற்று முகத்தைச் சிணுங்கினால் முந்நூறு யோசனைகள் கூறும் மாமன் சகுனி, நாளைப் போருக்குத் திட்டம் வகுத்துப் பாசறையில் பழியாய்க் கிடக்கிறான். ஒருவரா, இருவரா? நூற்றுவர் தம்பியர். இப்போது ஒருவர்கூட இல்லை. பதினேழு நாள் போரே எல்லாரையும் பறித்துவிட்டது.

திடீரென்று துரியன் மனத்திலே தீப்பொறி போல் ஒரு யோசனை பளிச்சிடுகிறது. அப்படிச் செய்தால் என்ன? தன் வீரத்திலே பெருத்த நம்பிக்கை கொண்ட அவனுக்கு, எதிரியின் பாசறையில் அந்த நேரத்தில் நுழைவதற்குச் சற்றும் அதைரியம் தோன்றவில்லை. பாண்டவர்களுக்குத் தோழனாக விளங்கும் பகவான் கிருஷ்ணன் அவனுக்கு மட்டும் எதிரியா என்ன?

அந்த இரவு நேரத்தில் கிருஷ்ணனின் பாசறைக்குள் நுழைகிறான், கௌரவ வேந்தன், தாயின் கட்டளையையும் தரிசிப்பதற்குப் போகத் தடையாக உள்ள காரணத்தையும் கூறுகிறான். வெண்ணெய் உண்ட மாயனான கண்ணனுக்கு, அந்தத் தாயுள்ளத்தின் கருத்துப் புரிகிறது. 'மறுநாள் போரில் எப்படியும் தன் மூத்த பிள்ளையையாவது காப்பாற்றிவிட வேண்டும்; அவனைக் காப்பாற்றப் போதுமான சக்தி தன்னிடம் இருக்கிறது' என்ற ஆழமான நினைப்பு.

"துரியோதனா, உன்னைக் காப்பாற்றத்தான் உன் தாய் அழைக்கிறாள். நீயோ தாயின் எதிரில் ஆடை இல்லாமல் செல்லத் தயங்குகிறாய். ஆடைதானே கூடாது. வாழையிலையை இடையைச் சுற்றிக் கட்டிக்கொண்டு செல். வாழையிலை ஆடையாகாது."

மாயக் கண்ணன் கூறிய இந்த யோசனை மாமன்னனை மகிழ்விக்கிறது.

"கண்ணா, உன் யோசனைக்கு நன்றி. நான் பிழைக்க வகை செய்துவிட்டாய். இந்த உதவிக்குக் கைம்மாறு செய்யத் தயாராக உள்ளேன். நாளைப் போரில் நான் நிச்சயம் வெற்றி பெறுவேன். உன்னை அமைச்சனாக்கி உயர்ந்த பதவி அளிக்கிறேன்."

வரும்போது இருந்த தயக்கம் இப்போது இல்லை. மனத்திலே ஏற்பட்ட மகிழ்ச்சியில் உள்ளத்திலும் உடலிலும் புதுத் தெம்பும் யானைப் பலமும் கூடிவிட்டதாகத் தோன்றுகிறது. மாயக் கண்ணன் புன்னகையுடன் கூறிய யோசனையை அப்படியே செயலாக்கி, அன்னை காந்தாரியின் எதிரே வந்து நிற்கிறான், துரியோதனன்.

"அம்மா!"

கன்றின் குரலை அறிந்த தாய்ப் பசுவைப்போல் காந்தாரி, ''அப்பா மகனே! வந்தாயாடா!'' என்று பொங்கும் மகிழ்ச்சி உடலெல்லாம் புளகமிட, ஆனந்தப் பெருமூச்சு விடுகிறாள். மகனைக் கண்ணாரக் கண்டு அவன் மேனி எங்கும் கவசம் பூட்டத் தாயுள்ளம் துடிதுடிக்கிறது.'கணவன் பார்த்து ரசிக்காத இந்த உலக இன்பங்களை நானும் பார்க்கமாட்டேன்' என்று தன் கண்களையே துகிலால் கட்டிக் கொண்டு வாழும் கற்புக்கரசி காந்தாரி, குழந்தைக்குப் புத்தாடை அணிந்து பார்த்துப் பரவசப்படும் தாயைப்போல, தன் மகனுக்குக் கவசம் பூட்டி ஆனந்திக்க வேண்டும் என்ற வேகத்தில் தன் கண் கட்டையே அவிழ்த்தெறிகிறாள்.

ஆசை தீர மகனைப் பார்க்கிறாள்; ஆனால் திடீரென்று ஓர் அதிர்ச்சி.

''அம்மா, என்னை ஆசிர்வதியுங்கள், அம்மா! நாளைப் போரில் நான் வெற்றியடைய உங்கள் ஆசியும் அருளும் வேண்டும், அம்மா! நேற்றுப் போரில் வில்வீரன், கொடை வள்ளல் கர்ணனும் போய்விட்டான், அம்மா. நாளைப் போருக்கு மத்த நாட்டு மன்னன் சல்லியனைப் படைத்தலைவனாக்கியிருக்கிறேன். இன்னும் மீதியிருப்பதே சகுனி, கிருபர், அசுவத்தாமா, கிருதவர்மர், நான் ஆகிய ஆறு பேர்கள்தாம். உங்கள் ஆசிதான் என்னைக் காப்பாற்ற வேண்டும்.''



காந்தாரி, புன்முறுவலுடன் மகனை ஏற இறங்கப் பார்க்கிறாள். மலை போன்ற தோள்களையும், வெற்றித் திருவையே அணைத்த பரந்த மார்பையும், ஒளிபொருந்திய திருமுகத்தையும், எதிரிகளை அனலாகச் சுட்டெரிக்கும் அகன்ற கண்களையும், ஜொலிக்கும் திருமுடியையும் ஒவ்வொன்றாக ஆற அமரப் பார்க்கிறாள். அவள் கண்கள் மகனின் ஒவ்வோர் அங்கத்திலும் நின்று நின்று புறப்படுகின்றன. கண்ணுக்குத் தெரியாத புற ஒளிவீச்சைப் போல், தன் தாயின் கண்களிலிருந்து ஒரு வித ஒளி பாய்ந்து, தன் மேனியில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதை உணர்கிறான் துரியன்.

அன்பும் கனிவுமாகத் தன் மேனியைத் தவழ்ந்து வந்த தாயின் பார்வையில் திடீரென்று வெம்மை வீசுகிறதே? துரியோதனன் ஒரு கணம் தயங்குகிறான்.

தண்மையைப் பொழிந்த கண்கள் திடீரென்று செம்மையை ஏற்பானேன்? முறுவல் பூத்திருந்த முகத்தில் கடுகடுப்புத் தோன்றுவானேன்? சுட்டெரிக்கும் கனலாகப் பார்வை உடலைத் தகிப்பானேன்? கற்பின் திறத்தாலே தண்மையையும் வெம்

மையையும் மாறிமாறிச் செலுத்துகிறாளோ? தண்மை அளித்த குளிர்ச்சியை வெம்மை பொசுக்குவதனால் என்ன லாபம்?

தாயின் மாற்றத்தைக் கண்டு எதுவும் புரிந்துகொள்ள முடியாத துரியோதனன் தவியாய்த் தவிக்கிறான்.

''உன் தங்கை வந்து என்ன சொன்னாள்?'' அன்பிலே தோய்ந்த அமுதக் குரல் எங்கே போயிற்று? கொல்லன் உலைக்களத்து இரும்பாய் வார்த்தைகள் சுடுகின்றனவே!

''அம்மா, உங்கள் கட்டளையை அவள் சரியாகவே சொன்னாள். நான்தான்..''

''ஒகோ! இந்த போசனையைச் சொன்னவன் யார்? அந்த மாயக் கண்ணனா?'' குத்திட்டியாகப் பறந்து வந்தன சொற்கள்.

''ஆமாம், அம்மா. தவறானால் மன்னித்துக்கொள்ளுங்கள்.''

''தவறா? எது தவறு? நீ செய்ததா? அந்த மாயக் கண்ணன் சொன்னதா? எது அப்பா, தவறு?''

''அம்மா. நாளைப் போரில் நான்....''

''வெற்றி பெற வேண்டும். அதற்குத்தான் உன்னை அப்படி வரச் சொன்னேன். ஆனால், ஆனால், அந்த மாயக் கண்ணன் இடையில் புகுந்து.. இருந்தால் என்ன? இதோ ஒரு நொடியிலே இந்த இலையை மட்டும் இல்லை, அந்த மாயக் கண்ணனையும் சுட்டெரிக்கிறேன். இதோ பார், மகனே, என் சக்தியை! கண் முன்னாலே நடப்பதைப் பார்!''

கண்கள் சிவக்க, உடல் பதற, உதடு துடிக்க, வெறி பிடித்தவள் போல் கத்திய காந்தாரி, மகனின் இடையைச் சுற்றியிருந்த அந்த இலையை வெறித்துப் பார்க்கிறாள்.

''அம்மா, அம்மா! ரொம்பத் தகிக்கிறது. அம்மா, தாங்க முடியவில்லை, அம்மா!'' துரியோதனன், தணலிலிட்ட மீனைப் போல் துடிக்கிறான்.

''தகிக்கிறதா, மகனே! உண்மையாகவா?''

புயலாகச் சீறிய காந்தாரி, உடனே தணிந்துவிடுகிறாள். கண்களை இறுக மூடிக்கொள்கிறாள். கனலாக்க் கனன்றவள் கங்கை நீராகி விடுகிறாள். மூடிய கண்களுக்குள் என்ன மாயங்கள் தோன்றினவோ? முகத்திலே அமைதி தோன்றுகிறது. சிந்தனைச் சிக்கறுந்து தெளிவு உண்டானதுபோல், உடலில் பதற்றம் குறைகிறது.

துரியோதனன் தாயின் இந்தத் திடீர் மாற்றத்தைக் கண்டு மௌனமாக நிற்கிறான்; தன் உடலுக்குக் கவசம் பூட்ட எண்ணி அழைத்தவள் கண் மூடித் தவம் கிடப்பதேன்?

நொடிகள் பறக்கின்றன. ஜாமக் கோழி எங்கோ கூவுகிறது.

துரியோதனனின் உடல் பதறுகிறது. வீரத் தோள் விம்மி எழுகிறது. நாளைப் போரில் வெற்றி பெற்றாக வேண்டுமே! கண்ணன் கூறி

யதுபோல், கற்புக்கரசியாம் தாயின் கவசம் நிச்சயம் வெற்றியையே கொடுக்கும்.

"அம்மா, ஆசீர்வதியுங்கள் அம்மா. உங்களுடைய பூர்ண ஆசியுடன் நான் நாளைப் போர்க்களம் போக வேண்டும். மாலையில் வெற்றியுடன் உங்களைக் கண்டு வணங்க வேண்டும்."

மகனின் பேச்சைக் கேட்டுக் காந்தாரி, மெதுவாகக் கண்களைத் திறக்கிறாள்.

அவள் கண்ணிலே முன்போல் கோபாக்கினி பறக்கவில்லை. முகத்திலே கடுகடுப்புத் தெரியவில்லை.

தலைப்பிள்ளையை மீண்டும் கனிவுடன் தலைமுதல் கால்வரை பார்க்கிறாள். ஆனால் அந்தப் பார்வையில் முன்பு போல் ஒளி ஊடுருவுவது போன்ற உணர்ச்சி ஏற்படாததை உணர்கிறான் துரியன்.

"போய் வாப்பா! நீ செய்த தருமங்கள் உன்னைக் காக்கும்" என்று கூறிய காந்தாரி, புயலாய்ச் சீறியவள் புனலாய் மாறி, கீழே கிடந்த துகிலை எடுத்துக் கண்களைக் கட்டிக் கொள்கிறாள்.

"அம்மா?"

"போய் வா மகனே! நானும் ஒரு பெண் தானே?"

பதினெட்டாம் நாள் பொழுது புலர்ந்தது. குருக்ஷேத்திரக் களம், சல்லியன் படைத் தலைமை ஏற்றுப் போர்க்களம் ஏகுகிறான். கௌரவ வீரர்களுக்கு "அரை நாழிகைப் போதில் வெற்றி" என்று புத்துணர்வு ஊட்டுகிறான். தனித் தனியாக நின்று போர் செய்யாமல், யாவரும் ஒன்றாய்ச் சேர்ந்து எதிரிகளை அழிக்க வேண்டும் என்று அசுவத்தாமா, கிருபர், சகுனி எல்லாரும் முடிவு செய்கிறார்கள்.

சர்வதோபத்திரம் என்ற வியூகத்தை அமைத்துப் பாண்டவர்களை எதிர்த்துப் போகிறான் சல்லியன். யுதிஷ்டிரர் சக்தியாயுதத்தைப் பிரயோகித்து அவனைக் கொல்கிறார். சகுனியைச் சகாதேவன் கொல்கிறான். பதினோர் அக்குரோணி சேனையும் அழிந்து தான் மட்டும் தனித்து நிற்பதை உணர்கிறான் துரியோதனன். உலகமே சூனியமாகத் தோன்றுகிறது. ஆயிரம் ரத்தினங்கள் பதித்த மணிமுடி தரித்திருந்த துரியோதனன், எதிரிகளுக்குப் பயந்து ஒரு மடுவில் போய்ப் பதுங்கிக் கொள்கிறான்.

துரியோதனன், ஒளிந்து கொண்டிருந்த துவைபாயன மடுவைத் தெரிந்துகொண்டு, பாண்டவர்கள் வந்து, அவனைப் போருக்கு அழைக்கின்றனர். பிறவி வீரனான துரியோதனன், எதிரிகளின் இகழ்ச்சி மொழியைக் கேட்டுத் துள்ளி எழுந்து போர்க்களம் வருகிறான். ஆயுத பலமின்றித் தனித்திருக்கும் தன்னுடன் கதை யுத்தம் புரியப் பாண்டவர்களில் எவரையாவது அழைக்கிறான்.

தன் சபதத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற துடிப்பில் துரியனுடன் பீமன் கதைப் போரில் இறங்குகிறான். பீமனுக்குப் பலம் அதிகம். துரியோதனனுக்குப் பயிற்சி அதிகம். வெற்றி தோல்வி இன்றிப் போர் நடக்கிறது. தம் சிஷ்யர்கள் கதை யுத்தம் செய்வதைப் பார்க்கப் பலராமர் போர்க்களத்துக்கு வந்து அமர்ந்திருக்கிறார்.

தர்மமாக வெல்ல முடியாது என்பதை உணர்ந்த பகவான், குறிப்பாகப் பீமனுக்குத் தொடையைத் தட்டிக் காட்டுகிறார். பீமன் புரிந்து கொள்கிறான். துரியோதனன் மேலெழும்பிப் பீமனைத் தாக்க எழும்பியபோது, அவன் தொடையில் கதையால் அடித்து விழச் செய்து வெற்றி பெறுகிறான் பீமன்.

பதினெட்டாம் நாள்; பாரதப் போர் முடிகிறது.

நூறு பிள்ளைகளையும் இழந்த காந்தாரியையும் திருதராஷ்டிரனையும் போய்ப் பார்த்துச் சமாதானம் செய்யப் பகவான் போகிறார். அதற்குள் அசுவத்தாமா பகைவர் பாசறையில் புகுந்து பச்சிளம் பாலகர்களையும் வீரர்களையும் இரவில் வெட்டி வீழ்த்தி விடுகிறான். பாஞ்சாலியும் புத்திர சோகத்தை அநுபவிக்கிறாள்.

எல்லாம் முடிந்து, காந்தாரியையும் திருதராஷ்டிரனையும் சந்திக்கப் பஞ்ச பாண்டவர்களும் கண்ணனும் அரண்மனை வருகிறார்கள். பீமனுக்குப் பதிலாக இரும்புப் பதுமையை உடைத்து நொறுக்கும் அளவுக்குத் திருதராஷ்டிரனுக்குக் கோபம். காந்தாரி மட்டும் சாதாரணமா? கொஞ்சம் கண்கட்டை விலக்கி எதிரில் வந்த யுதிஷ்டிரர் காலைப் பார்க்கிறாள். அவ்வளவுதான். அவர் கால்விரல் கருகஆரம்பித்துவிடுகிறது. இதைக் கண்ட பார்த்தன் பயந்து போய்க் கண்ணன் பின்னால் போய் ஒளிந்து கொள்கிறான். பீமன் யுதிஷ்டிரர் பின்னால் போகிறான்.

கண்ணன் அப்படி என்ன பெரிய கவசமா?

காந்தாரிக்குக் கோபம் தாங்கவில்லை.

"கம்சனுக்கு அடிமையாய் இருந்த வாசுதேவன் மகனே!" என்று எடுத்த எடுப்பில் விளிக்கிறாள்.

முக்காலத்தையும் உணர்ந்த பரமாத்மா முறுவலுடன் நிற்கிறான்.

"கண்ணா! உன் யோசனையால்தான் என் மகன் இறந்து விட்டான் என்று நினைக்காதே. ஆடையின்றி வரச் சொன்ன என் மகனுக்கு அருமையான யோசனை சொல்லிக் கொடுத்து வரச் செய்தாயே கண்ணா! என்னைப் பற்றி, என் கற்புத் திறனைப் பற்றி, கனன்று எரியும் கற்புக் கனலைப் பற்றி உனக்குத் தெரிந்தது அவ்வளவுதானா? வாழையிலையைப் பொசுக்கி, என் மகன் உடலை வஜ்ர தேகமாக மாற்றியிருக்க முடியாதா? கற்புக் கனலால் அவனுக்குக் கவசம் அணிவித்திருக்க முடியாதா? ஒரு கணத்தில் தர்மபுத்திரர் கால் கட்டை விரலின் கதி என்னவாயிற்று, பார்த்தாயா? பார்த்தன் பயந்து உன் பின்னால் ஒதுங்கிக் கொண்டு விட்டானே! 'இலையை இடையில் கட்டிக் கொண்டு போனால் அந்தப் பாகத்தில் என் தீட்சண்யம் ஏற்படாது. தொடையில் அடித்து என் மகனைக் கொன்று விடுவது சுலபம்' என்றுதானே கண்ணா, நேற்று இரவு அப்படி யோசனை சொன்னாய்?

"நளாயினியின் கதை உனக்குத் தெரியாதா? மும்மூர்த்திகளையும் பாலகனாக்கிய அநசூயையின் வரலாறு அறியாயா? கண்ணா, கற்புக்கரசிகளின் சாதனையை அறியமாட்டாயா?"

"வாழையிலையை எரிக்கத்தான் முனைந்தேன். அவன் தேகம் முழுவதையும் வஜ்ரமாக்கத்தான் துடித்தேன். அப்படிச் செய்திருந்தால் இந்நேரம் என் மகன் அந்தப்புரத்திலே உல்லாசமாக இருப்பான். உன் சூழ்ச்சி ஒன்றுமே பலித்திருக்காது; 'அந்த அனலின் தகிப்புத் தாங்கவில்லை, அம்மா' என்றுகூட என் மகன் கதறினான். ஆனால், ஆனால்! அடுத்த கணம், தாயாக இருந்தவள் ஒரு பெண்ணாக மாறினேன். என் மனத்தில் அந்தக் காட்சி விரிந்தது.

"அத்தினாபுரி அரண்மனை. துச்சாதனன் வெளியில் வரக் கூடாத பாஞ்சாலியைச் சபைக்கு இழுத்து வருகிறான். தலைவிரி கோலமாகச் சபையில் திரௌபதி, தர்மம், நியாயம் நீதி கேட்டுக் கதறுகிறாள். சகுனியின் வார்த்தையைக் கேட்டுத் துஷ்டன் துச்சாதனன் பெண்ணின் சேலையைக் களைகிறான்! அக்கிரமம், அநியாயம்! பத்தினிப் பெண் பதறுகிறாள். பெண்ணின் உடலை மூடும் துணியையும் களைகிறானே? துச்சாதனன் இத்தனையும் செய்தான், போகட்டும்! என் மகன், என் மூத்த மகன், தலைமகன், தன் தொடையைத் தட்டிக் காட்டி, 'வாடி, வந்தமர் என் தொடையில்' என்றானே! பிறன் மனைவியைப் பார்த்துப் பண்புள்ளவன் சொல்லக்கூடிய வார்த்தைகளா இவை? அழுக்குப் படிந்த, கறை மலிந்த, கர்வத்தின் சின்னமாக விளங்கிய அந்தத் தொடைகளுக்கு, அந்தப் பகுதிக்குக் கவசம் பூட்ட என் மனம் ஒப்பவில்லை, கிருஷ்ணா, ஒப்பவில்லை! தாய்ப் பாசத்தையும் மிஞ்சி, 'நானும் ஒரு பெண், ஒரு பத்தினிப் பெண்' என்ற நினைப்பே மேலோங்கியது. அக்கிரமம் செய்தவன் அதற்குரிய தண்டனையைப் பெறவேண்டியதுதானே நியாயம்?"

கண்ணனைக் கூர்ந்து பார்க்கிறாள் காந்தாரி.

வியாசரின் அருளால் கொலைக் களத்தைப் பார்க்கப் பார்க்க அவள் கோபம் மிஞ்சுகிறது.

"மதுசூதனா! இத்தனை அழிவுக்கும் நீதான் காரணம். பூபாரம் தீர்க்க நூற்றுவர்களை அழித்து ஐவர்களை மீட்டு விட்டாய். கண்ணா, என் கற்பின்மேல் ஆணையாய்ச் சொல்கிறேன். நீயும் உன் உறவினர்களும் இன்னும் சில ஆண்டுகளில் அழியத்தான் போகிறீர்கள். என் மகளைப் போல், மருமகள்மார்களைப் போல் யாதவப் பெண்களும் தவிக்கத்தான் போகிறார்கள்."

அந்தத் தாயுள்ளத்தின் சாபமே தனது சங்கல்பமும் என்பது போல முறுவல் மாறாமல் நிற்கிறான் பரந்தாமன்.

*

தினந்தோறும் 77,000 கி.மீட்டர்கள் ஓடி தென்னகமெங்கும் மங்கலம் சேர்க்கிறது சதர்ன் ரோட்வேஸ்

ஆம், தென்னகமெங்கும் தினந்தோறும் 77,000 கிலோமீட்டர்களுக்கு மேல் சதர்ன் ரோட்வேஸின் லாரிகள் ஓடி உங்கள் பொருட்களை எடுத்துச் செல்கின்றன. இத்தீபாவளித் திருநாளில் உங்கள் இன்பத்தில் பங்கு கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறது சதர்ன் ரோட்வேஸ்.



TVS

சதர்ன் ரோட்வேஸ் லிமிடெட்

லக்ஷ்மி பில்டிங், உசிலம்பட்டி ரோடு,
கோச்சடை, மதுரை 625 016.

கிளைகள்:

சென்னை, பெங்களூர், கோயம்புத்தூர், சேலம், திருச்சி, திருநெல்வேலி, விஜயவாடா, செகந்திராபாத், அனந்தப்பூர்.

SAA SRL/3048



Imageads 1663

வெளி

அநுத்தமா

தீபாவளி இன்னும் ஒரு வாரம் கழித்துத்தான் என்றாலும் பட்டாசுச் சத்தம் தொடங்கி நான்கு நாட்கள் ஆகிவிட்டன. தெருவில் நடக்கும்போது யார் மீது எந்த வாணம் விழுமோ என்ற பயம் இருந்தது.

''ராதா, தோட்டத்திலே கன்னுக் குட்டியா, பாரு, கீரைப்பாத்தியை நாசம் செய்திடும்'' என்றாள் அம்மா, உள் பக்கத்திலிருந்து.

''கன்னுக்குட்டி மட்டுமா? அவங்க வீட்டுக் கோழி, பூனை, நாய் எல்லாம் நம் வீட்டிலேதான் தஞ்சம் புகும்'' என்ற மகள் ராதா தோட்டத்தை நோக்கி ஓடினாள்.

''அங்கே போய்க் கத்திடாதே, அம்மா. மெதுவாக ஓட்டிட்டு வா'' என்று பார்வதம் எச்சரித்தாள்.

ராதா தெருப்பக்கம் விரைந்தாள். முன் பக்கத் தோட்டத்திலே அவள் எதிர்பார்த்தபடியே கோழி சிறகை அடித்துக்கொண்டு, கீரைப் பாத்தியைக் கொத்துவதும் பரப்புவதுமாக இருந்தது. வெடிச் சத்தத்தில் மருண்டு விட்டது போலும். ராதா மெதுவாக அதன் பின்புறமாகச் சென்று அதைப் பிடித்து, வேலியிலிருந்த இடைவெளி வழியாக அடுத்த வீட்டுக்குள் நுழைந்து, புழைக்கடைப் பக்கமாகச் சென்று அவர்கள் வீட்டில் விட்டாள்.

''ராதா, இங்கே விடாதே, அம்மா, பாலைக் கொட்டிவிடும்.'' உள்ளேயிருந்து ஒரு குரல் வந்தது.

''என்ன செய்ய முடியுங்க? நீங்க ஒரு கூடை வாங்கிக் கவிழ்க்கலாம்'' என்று கூறி, ராதா வீடு திரும்பினாள்.

அவள் வீட்டை ஒட்டடை அடிக்க ஆரம்பித்தாள். மீண்டும் தோட்டத்தில் சத்தம் கேட்டு ஓடினாள். கன்றுக்குட்டி ஒன்று அப்போது தான் பூக்க ஆரம்பித்திருந்த காசித் தும்பைப் பாத்தியைத் துகைத்துக் கொண்டிருந்தது.

''உன்னை இன்னிக்குக் கொன்னுட்டுத்தான் மறுவேலை!'' என்று ஒரு தடியை எடுத்து ஓங்கிக்கொண்டு வந்தாள்.

ஆனால், அப்பொழுது அந்தக் கன்றுக் குட்டியைக் கயிற்றினால் கட்டிப் பிடித்து இழுத்துக்கொண்டிருந்தான் ஓர் இளைஞன். ''குழந்தைகளையே கொல்லக் கூடாது. மகா பாவம்! அதுவும் தாயில்லாத குட்டி, வாயில்லாத ஜீவன்!'' என்று கூறி முகம் மலர, அவளைப் பார்த்தான்.

''ஜீவ ஹிம்சை உபந்யாசத்தை வேறே எங்கேயாவது வச்சுக்குங்க. பக்கத்திலே குடியிருக்கிறவங்க கஷ்ட நஷ்டத்தையும் கொஞ்சம் கவனிச்சாத் தேவலை.''

''என்ன கவனிக்கணும்?''

''என்னைக் கவனிக்கவேண்டாம். கோழி வளர்த்தா, அதுக்கு ஒரு கூடை கவிழ்க்கணும், கன்னுக்குட்டிக்கு வாய்க்கூடை போட்டுக் கட்டி வைக்கணும்; நாய்க்குப் பட்டை போட்டுச் சங்கிலியாலே கட்டணும். என்னவோ, ரெண்டு வருஷமாப் பக்கத்துப் பக்கத்து வீடுகள்ல குடியிருக்கிறோமேன்னு, பேசாம இருந்தா, வர வர ரொம்பத்தான் ஏறிப்போவுது தொல்லை'' என்று படபடப்பாகப் பொரிந்து தள்ளினாள் ராதா.

''நீங்க அந்த வீட்டுப் பெண்ணா?''

''ஆமாம். நீங்க?''

''நான் இவங்களுக்கு வேண்டியவன். ஏன்?''

''ஏன்னு கேட்டா?''

''நான் யாரா இருந்தால் என்ன?''

''அவங்க வீட்டிலே நாலு பிள்ளைங்களாம். ஒருத்தர் அமெரிக்காவிலே டாக்டராம், ஒருத்தர் டில்லியிலே எஞ்சினியராம், ஒருத்தர் எங்கேயோ தமிழ் நாட்டிலேயே மாவட்டக் கலெக்டராம்.''

''பரவாயில்லையே, நல்லாத் தெரிஞ்சு வச்சிருக்கீங்களே!''

''இதிலே என்ன ஆச்சரியம் கிடக்குது? நான் வெளியூரிலதான் இருக்கிறேன். ஆனால் அடுத்த வீட்டு அம்மாவும் எங்க அம்மாவும் தினம் உட்கார்ந்து பேசுவாங்களே. எல்லாம் அம்மா சொன்னதுதான்.''

''அந்த வீட்டிலே ராதான்னு ஒரே பெண்ணாமே?''

''யார் சொன்னாங்க?''

''எங்க அம்மாதான். படுசுட்டி சாது, நல்ல பொண்ணு, அப்படின்னாங்க. அதனாலே அது வேறு யாராவது இருக்குமோன்னு நினைச்சேன்'' என்று குறும்பாகச் சிரித்துவிட்டு, கன்றுக்குட்டியை ஓட்டிப் போனான் அவன்.

ராதாவுக்கு வந்தது கோபம். வந்த சண்டையைவிட மனம் இல்லாமல், ''சார், நில்லுங்க. உங்க பக்கம் வேலியைப் பாருங்க. எப்பவோ வீட்டு மராமத்து நடந்த

போது அவிழ்த்த கம்பி அப்படியே கிடக்குது'' என்றாள்.

அவள் காட்டின இடத்தை அவன் பார்த்தான். அலட்சியமாக, ''இப்ச்'' என்றான். ''எங்க வீட்டிலேதான் வெளியே போகாம வேலி கட்டத் தெரியலே. நீங்க உங்க பக்கம் எதுவும் உள்ளே வராம ஒரு வேலி கட்டிக்கிறது தானே?''

''சரிங்க, அப்படியே செய்யறோம்!'' என்றாள ஏளனமாக ராதா.

''அதை முதல்லே செய்யுங்க'' என்று பதிலளித்துக் கன்றுக் குட்டியின் பாய்ச்சலுக்குச் சரியாக ஓடி வீட்டினுள் மறைந்தான் அவன்.

ராதா சிறிது நேரம் நின்றுவிட்டுத் தன் வீட்டுக்குள் நுழைந்து ஒட்டடை அடிப்பதை மீண்டும் தொடர்ந்தாள்.

''ராதா, ஒரு கன்னுக்குட்டியை விரட்ட இவ்வளவு நேரமா?'' என்று கடிந்தாள் அம்மா.

''கன்னுக்குட்டியையும் விரட்டினேன், அந்த வீட்டுப் பிள்ளையையும் விரட்டினேன்'' என்று பதிலளித்தாள் பெண், பெருமையாக.

''ஐயையோ, ஏனடி உனக்குப் புத்தி இப்படிப் போறது? அவர் ஒரு ஜில்லா கலெக்டர்.''

''இருக்கட்டுமே!''

''நன்னாப் பேசறே, போ! நானும் அடுத்த வீட்டு அம்மாவும் தாயாப் பிள்ளையாப் பழகறோம். அங்கே போய்த் தத்துப் பித்துன்னு பேசப் போறே. உன்னைத் தனியா வேலைக்குப் போகவிட்டதும், ஹாஸ்டல்லே சேர்த்ததும் ரொம்ப விபரீதமாப் போச்சு. நாளைக்கு அவள் மூஞ்சியிலே நான் எப்படி முழிப்பேன்?''

''தாட்சண்யத்துக்கும் ஓர் அளவு வேணும். தோட்டத்தைப் போய்ப் பார். இன்னும் அவங்க வீட்டு நாய் தான் பாக்கி.''

''சரி, சரி. மேலே மேலே பேசாதே. வீட்டைப் பெருக்கிட்டு, தலையை நல்லா வாரிப் பின்னிண்டு, முகம் கழுவிப் பொட்டிட்டு, பளிச்சினு புடைவை கட்டிண்டு..''

''எதுக்கு இப்ப அடுக்கறே, அம்மா?''

''கை முறுக்கு வேணும்னு கேட்டாங்க. இந்தப் பிளாஸ்டிக் டப்பாவிலே வச்சிருக்கேன். கொண்டு கொடு.''

''சரி, போறேன். அவங்க என் மூஞ்சியிலே கதவைச் சாத்தினாலும் சாத்தலாம்.''

''அப்படிப்பட்டவங்க இல்லே. ரொம்பப் பெரிய மனுஷங்க. பணத் திமிரே கிடையாது. மரியாதை தெரிஞ்சவங்க..''

''ஆகட்டும், அம்மா, அவங்க தெய்வமாகவே இருக்கட்டும். நான் பிடாரியாகவே இருக்கேன்.''

''ஏதாவது அசட்டுத்தனமாப் பேசிட்டியா?''

''புத்திசாலித்தனமாத்தான் பேசியிருக்கேன்; நல்லா திட்டவட்டமாச் சொல்லிட்டேன்.''

''ரொம்பச் சமத்து, போ!''

ராதா கலகலவென்று சிரித்துக்கொண்டே, அவள் தாய் தந்த முறுக்கு டப்பாவைத் தூக்கிக் கொண்டு அடுத்த வீட்டுக்கு ஓடினாள். ''மாமி.. மா.. மி'' என்று உள்ளே சென்றாள்.

''வா, ராதா வா. காலையிலே உன் குரல் கேட்டது. எப்ப வந்தே? நீ முன்னே வந்தப்பவே கேட்கணும்னு நினைச்சேன்.''

''நேற்று ராத்திரி வந்தேன்.''

''எங்கப் பையன் கூட ராத்திரி தான் வந்தான். தஞ்சாவூருக்குக் கலெக்டராகப் போட்டிருக்காங்களாம்.''

ராதா ரசிக்காதது போலச் சட்டென்று, ''இந்தாங்க, அம்மா முறுக்கு அனுப்பினாங்க'' என்று கூறி, மேஜை மீது வைத்துவிட்டுத் திரும்பினாள்.

அப்போது அவள் காலையில் சந்தித்த யுவன் எதிர்ப்பட்டான். பல் தெரியச் சந்தோஷமாகச் சிரித்து, ''என்ன, இன்னும் வேலி மராமத்துத் தொடங்கலையா?'' என்று கேட்டான்.

''வேலியைப் பிரிச்சுப் போட்டவங்க சரி செய்யமாட்டாங்க போல. அடுத்தவங்களுக்குத் தொல்லையா இருக்கிறது தான் குறின்னு இருப்பாங்கன்னு இப்பந்தானே தெரிஞ்சிகிட்டோம்? இனி எங்க வேலையை நாங்க பாத்துக்குவம். நீங்க ஏற்படுத்த ஆள் தேவையில்லே.''

வெடுக்கென்று பதிலளித்து விட்டு வேலி இடைவெளி வழியாக அவள் தன் வீட்டிற்குள் நுழைந்தபோது பின்னாடி உரத்தச் சிரிப்புக் கேட்டது.

அவள் காது கேளாதது போல் தன் வீட்டுக்குள் மறைந்தாள். அன்று மாலை தன் தந்தை வந்ததும் விவரமாகச் சொல்லி, பிடிவாதம் பிடித்து வேலி போட ஏற்பாடு செய்தாள்.

காலையில் எழுந்ததுமே, வண்டியில் முள் கம்பி, சவுக்குத் தூண்கள், இதர சாமக்கிரியைகளுடன் ஆட்கள் வந்து சேர்ந்தனர்.

ராதா வெளியிலேயே வரவில்லை. வீட்டு ஜன்னல் பக்கமாக இருந்து பார்த்துக் கொண்டிருந்தாள். அன்று வேலை முடியும்போது இருட்டி விட்டது. வேலையாட்களை அனுப்பி விட்டுத் தகப்பனார் உள்ளே வந்ததும் அவர் கையைப் பிடித்துக் கொண்டு அவள் மெல்ல வெளியே போனாள். வேலி வெகு நேர்த்தியாகப் போட்டிருந்தார்கள். குறுக்கேயும் போட்டு விட்டிருந்தபடியால் ராதாவுக்குத் திருப்தியாயிற்று.

''சரிதானா? இதோ அவங்க பக்கம் வேலியும் ரிப்பேர் ஆயிடுச்சு, பார்'' என்றார் தந்தை.

''ஆமாம் சார். இனிமேல் மிருகங்களும் புக முடியாது; மனிதர்களும் குறுக்கு வழியிலே வர முடியாது'' என்று பதில் குரல் வந்தது, அடுத்த வீட்டிலிருந்து.

ராதா தலை கவிழ்ந்தாள்.

காலையில் வேலிச் சாமான்கள் வந்ததும் அவள் தாயார் முகம் கறுத்துவிட்டது. ''அநாவசியமாக நல்ல மனிதர்களை நோகச் செய்ய நீங்க'' என்று முணுமுணுத்தாள்.

''நீ பேசறது தான் எனக்குப் புரியலே. அவங்க வீட்டு வேலியை அவங்களாலே செப்பனிட முடியலே. நமக்குள்ள கஷ்டம் அவங்களுக்குப் புரிந்தும் பேசாமல் இருக்காங்க. 'நல்லவங்க, நல்லவங்க சிநேகம் போய்டும்னு' நீ தவிக்கிறயே, அவங்களும் அதே போல எண்ண வேண்டாமா? கட்டிட வேலைக்குத் தண்ணிருக்காக, ஆட்களுக்கு நடமாட்டத்துக்காக வேலியை அழிச்சாங்களே, வேலை முடிஞ்சதும் நம் பக்கம் சரி செய்ய வேண்டாமா? அவங்க வேலியை நான் இழுத்துக் கட்டி அவங்களை அவமானப் படுத்தினேனா? என் பக்கம், என் வீட்டுப் பாதுகாப்புக்கு நான் வேலி கட்டிண்டா அது தப்பா?'' என்று அப்பா இரைந்தார்.

''எனக்கு அந்த அம்மாளை நிமிர்ந்து பார்க்க முடியாமல் செஞ்சிட்டீங்க. அக்கா தங்கையா இருந்தோம்'' என்றாள் அம்மா.

இதையெல்லாம் நினைத்துப் பார்த்துக்கொண்டே ஜன்னலருகில் அமர்ந்தாள் ராதா.

தான் நடந்துகொண்டது தவறோ என்று அவளுக்குத் தோன்றிவிட்டது. மேலும், அவள் ஜன்னல் புறமாக வெளியே நோக்கியபோது, அடுத்த வீட்டு இளைஞன் அவளுக்காகக் கண்களால் தேடுவது தெரிந்தது. 'என்ன இருந்தாலும் பெரிய உத்தியோகஸ்தர்! அவரிடம் அநாகரிகமாக நடந்து கொண்டோமே?' என்று அவளுக்கு அவமானமாகி விட்டது. 'நல்ல ரசிகர் அந்த ஆள். உங்க வேலி போட்டுக் கொள்வதுதானே என்று சொன்னாரே தவிர, கோபமே தெரியவில்லை. அகல நெற்றியில் ஒரு கோடு மின்ன, பல் தெரியச் சிரித்ததில் எவ்வளவு நகைச்சுவை நயம் தெரிந்தது!' அந்த ஆள் முன்னே போவதற்கே அவளுக்கு வெட்கமாகிவிட்டது.

அதனால்தான் அவள் தன் தந்தையைக் கைப்பிடித்து அழைத்துக்கொண்டு தோட்டத்தில் இறங்கினாள். இருட்டிலிருந்து அசரீரி போலக் குரல் வந்ததும், அவளுக்

''மைசூர்ப்பாகைக் கடிக்க முடியல்லே, அம்மா! சித்த அந்த க்ரைண்டர்ல போட்டுக் கொடேன்!''

குச் சிரிப்பு வந்து விட்டது. தன் மீது அவருக்கு ஒன்றும் கோபமில்லை என்று புரிந்துவிட்டது. அவள் நிமிர்ந்து, ''அப்பா, அவர் யாரைச் சொல்றார் தெரியுமா? அம்மாவும் மாமியும் சதா ரஸ்தா போடறாங்களே அதைத்தான்'' என்றாள், சற்று உரக்கச் சிரித்துக்கொண்டே.

''ஹலோ, பிரேம் குமார், எப்ப வந்தீங்க?'' என்று ராதாவின் தகப்பனார் குரல் கொடுத்தார்.

''ஹலோ, சார். உங்க வீட்டுப் பொண்ணும் நானும் ஒரே சமயத்துலதான் வந்தோம் போல'' என்று பதில் சொல்லிக்கொண்டே வேலி பக்கத்தில் வந்ததும், அவன் முகத்தில் வெளிச்சம் விழுந்தது.

''நீங்க இரண்டு பேரும் மீட் பண்ணியாச்சுன்னு தெரியறது'' என்று கூறிவிட்டுப் பூடகமாகச் சிரித்தார் ராதாவின் தந்தை.

''ஆமாமாம். அதுவும் எப்படி? அடேயப்பா!'' என்று பதில் வந்தது.

இதுவரை குனிந்து கொண்டிருந்த ராதா, நிமிர்ந்து நோக்கினாள். அதே அழகு முகம், அதே குறும்பு ததும்பும் புன்னகை. ''சாரி, நான் கொஞ்சம் அநாகரிகமாப் பேசிட்டேன்'' என்றாள் அவள் மெதுவாக.

''நானும் ஒண்ணும் நாகரிகமாகப் பதில் சொல்லிடலே, சார்'' என்றான் பிரேம்குமார்.

''சரியாப் போச்சு. கணக்குத் தீர்ந்தது. டபுள் வேலி போட்டாச்சு. இனிச் சச்சரவும் இருக்காது'' என்று செல்லமாக மகளைப் பார்த்துக் கூறிவிட்டு, பிறகு பிரேம்குமாரைப் பார்த்து, ''வீட்டுக்கு வாங்களேன். அப்பா எப்படி இருக்கார்? இன்னிக்கு என்னோட உலாவ வரலையே. உடம்பு ஒண்ணும் இல்லையே?'' என்று விசாரித்தார் பெரியவர்.

''உடம்பு ஒன்றுமில்லை. என்னோடு பேசிண்டு இருந்து விட்டார்.''

ராதா நழுவிவிட்டாள். வீட்டுக்குள் சென்று ஒரு புத்தகத்தை வைத்துக் கொண்டு அமர்ந்தாள்.

அவள் மனம் என்னவோ ஓர் அட்சரத்தைக் கூட ஏற்கவில்லை. பிரேம்குமாரின் முகம் குறுக்கே குறுக்கே வந்து தொல்லை கொடுத்தது. பிறகு அவள் யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் தெருவழியாக அடுத்த வீட்டுக்கு ஓடினாள்.

''மாமி!'' என்று அவள் குரல் கொடுத்ததும், ''வா, ராதா அடுப்படியிலே வேலையா இருக்கேன்'' என்று பதில் வந்தது.

பின்புறம் சென்றதும், அவள் கண்ணில் முதல் முதல் பட்டது புத்தம் புதுக் கோழிக் கூடைதான். ''மாமி, நான் என்னவோ சிறுபிள்ளைத்தனமாப் பேசிட்டேன். அதுக்காக நீங்க கூடையை உடனே வாங்கணுமா?'' என்றாள் அவள்.

''நீ சொன்னது நியாயந்தானே? எங்கக் கொமாரு உடனே வாங்கி வந்திட்டான். எனக்கும் இன்னும் பழைய வாசனை போகலே. ஊரிலே வயல்லே ஓடிட்டுக் கிடக்குங்க. ராத்திரி வேளையிலே அக்கம் பக்கத்துப்



உள்ளத்து உணர்வுகள்
இழையாய் பின்னிட
நல்முத்து வெண்மை
நகையாய் மின்னிட
தீபாவளி
வாழ்த்துக்கள்
சுந்தரம்
டெக்ஸ்டைல்ஸ்
லிமிடெட்
கோச்சடை, மதுரை 625 016.

SAA/STL/3049

பிள்ளைங்க கூடையிலே அடைப்பாங்க; மாட்டை இழுத்துக் கட்டுவாங்க; இங்கே இந்தப் பிள்ளைங்க படிச்சு வேலைக்குப் போனாலும் போனாங்க. தங்கக் கூண்டிலே கிளியை அடைச்சாப் போல என்னை இங்க உட்கார்த்தி இருக்காங்க'' என்று கூறினாளே தவிர, அந்த அன்னையின் குரலில் பெருமிதம் ஒலித்தது.

''எனக்கு விவரம் தெரியலீங்க. எங்க அம்மா என்னை ரொம்பத் திட்டிட்டாங்க'' என்றாள் ராதா.

''ஐயோ, ராதுப் பொண்ணு, நீ இதுக்குப் போய்க் கவலைப்படுவியா? எங்கக் கொமாரு நேத்து ராப்பூராச் சொல்லிச் சொல்லிச் சிரிச்சானே? 'ரொம்ப புத்திசாலிப் பொண்ணு, செல்லமா வளர்ற போல'ன்னு சொன்னான்.''

ராதா முறுவல் பூத்தபடி எழுந்துவிட்டாள். ''மாமி, வரேங்க!''

''அம்மாகிட்டே சொல்லு. நாளைக்குக் காலையிலே பெருமாள் கோயில்லே ஆயிரம் தாமரை வச்சுப் பூசை போடறாங்களாம். நீ வீட்டைப் பாத்துக்க. அம்மாவும் நானும் போய் வரோம்'' என்று பதில் வந்தது.

''சரி'' என்று கூறிக் கிளம்பியவள் பல்லைக் கடித்துக்கொண்டாள்.

அப்போது அருகில் சிரிப்புக் கேட்டது. ''நான் பதில் தரேன். சரிதானே!'' என்றான் பிரேம் குமார்.

ராதா அவனைப் பார்த்துச் சிரித்து, ரகசியமாக, ''உங்க அம்மா உங்களைக் 'கொமாரு'ன்னுங்க?'' என்று கேட்டுவிட்டாள்.

பிரேம்குமாரின் முகம் கறுத்துவிட்டது. ''அவள் உடலிலே ஊறிய பழக்கம் அது. அவங்க வேறு எப்படிக் கூப்பிட்டாலும் எனக்குப் பிடிக்காது'' என்றான்.

மறுநாள் காலையில் இரண்டு அன்னைமார்களும் கோவிலுக்குக் கிளம்பிவிட்டார்கள். ராதா வீட்டு வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டாள். தன் தாய் வந்து தப்புக் கண்டு பிடிக்கக் கூடாது என்று தீவிரமாக, சுத்தமாகச் செய்தாள்.

''ராதா, பிரேம்குமார் வந்திருக்கிறார். ஒரு டம்ளர் காபி கொண்டு வா'' என்றார்.

பரபரவென்று டபராவையும், டம்ளரையும் தேய்த்து எடுத்து, நல்ல மணமுள்ள காபியைக் கலந்து கொண்டு வந்து, பிரேம்குமார் முன் வைத்தாள் ராதா. பிறகு தயங்கியபடி வாசற்படியில் நின்றாள்.

''எங்க வீட்டுக் கோழி, நாய், கன்னுக்குட்டி எல்லாம் இங்கே வந்து துள்ள வழியில்லையா? எனக்கும் வேலையில்லை. காபிக்கு இங்கே வந்துவிட்டேன்'' என்றான் பிரேம்குமார், அவளைப் பார்த்து.

''ஏன், இந்நேரம் உங்க வீட்டுத் தோட்டத்தைத் துவம்சம் பண்ணுமே? அதைப் பிடிச்சுக் கட்டலாமே?'' என்றாள் ராதா.

''அங்கே என் கூடச் சண்டை போட ஆள் இல்லையே! ருசிக்கலை'' என்றான் அவன் சிரித்தபடி.

ராதாவின் தகப்பனாரும் உடன் சிரித்தார். ''ஏன், காபி ருசிக்கலையா?'' என்று கேட்டார்.

''ரொம்ப ருசி'' என்று சொல்லிக்கொண்டே அவன் ராதாவைப் பார்த்தான்.

நேற்று இருந்த துணிச்சல் இப்பொழுது எங்கே சென்றதோ? சாதுவாக, ''தாங்க்ஸ்'' என்று கூறிவிட்டு அவள் உள்ளே சென்றாள்.

தன் தகப்பனார், குமாரின் சமவயதுக்காரரைப் போலப் பழகுவது ராதாவுக்கு அதிசயமாக இருந்தது.

அதனால்தானோ என்னவோ பிரேம் குமார் அடிக்கடி அவர்கள் வீட்டுக்கு வருவது சகஜமாகிவிட்டது.

ராதா அவனுடன் சீட்டு விளையாடுவாள். காரம் விளையாடுவாள்.

''தலைதீபாவளிக்கு மாப்பிள்ளை, சம்பந்தி - சம்பந்தியம்மா எல்லாரும் கட்டாயம் வர்றதாத் தபால் எழுதிட்டாங்களே! பின்னே ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க?''

''அட நீ ஒண்ணு. அவங்க வந்த வேளைக்கு அடை மழை பிடிச்சுக்கிட்டா அத்தனை பேரும் இங்கேயே டேரா போட்டுடுவாங்களே!''

சில சமயம் இரண்டு குடும்பங்களும் அக்கம்பக்கத்துக் கோவில்களை விடாமல் பார்த்துவிட்டு வருவார்கள். பிரேம்குமாரின் விடுமுறையில் ஒரு வாரம் போனது தெரியாமல் போய்விட்டது.

தீபாவளியன்று ஒரே கோலாகலமாக இருந்தது. இரண்டு குடும்பத்தினரும் ராதா வீட்டில் கூடிவிட்டனர். பட்டாசும் மத்தாப்பும் அமர்க்களப்பட்டன.

ராதா பிரேம்குமாரிடம் மிகவும் நெருங்கிவிட்டாள். ''என்ன பிரேம்! உங்களைப் பார்த்தால் புது மாப்பிள்ளை மாதிரி இருக்குது. தெரியுமா?'' என்றாள்.

''எங்க அம்மாவுக்காக இந்த மயில் கண் வேஷ்டி வாங்கிட்டேன், இல்லை, அதனாலே இருக்கும்.''

''அடுத்த வருஷம் தலை தீபாவளி வரணும்'' என்று ராதாவின் தாய் வாழ்த்தினாள்.

''நாளைக்கே ஊருக்குப் போய் விடுவீங்க. பிறகு எங்களை எங்கே நினைவு இருக்கும்?'' என்றாள் ராதா.

''உளறாதே, ராதா. நான் என்ன..'' குபுகுபுவென்று கோபம் வந்துவிட்டது அவனுக்கு.

சிறிது பயந்தாலும், அவன் கோபம் ராதாவுக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

அன்றும் மறுநாளும் ராதாவும் பிரேம்குமாரும் ஒரு விநாடிகூடப் பிரிய மனம் இல்லாதவர் போலப் பழகினார்கள்.

பிரேம்குமார் ஊருக்குப் போனபோது அவனுடைய தாயார் வெளிப்படையாகக் கண்ணீர் சிந்தினாள். ராதா தன் உணர்ச்சியை அடக்க முடியாததால் வெளியே வரவேயில்லை.

ராதா எதையோ பறி கொடுத்தவள் போல நடமாடினாள். பிரேம் குமாரையே மனம் சுற்றிச் சுற்றி வந்தது.

ஒரு வாரம் கழித்து அவள் பெயருக்கே ஒரு கடிதம் வந்தது. 'உன் பேச்சும், குரலும் எனக்கு மிகவும் துணையாக இருக்கின்றன'' என்று அதில் எழுதியிருந்தான்.

'ஓ, பிரேம்! நானே என்றும் உங்களுக்குத் துணையாக இருப்பேனே!' என்று அவள் தனக்குள் அரற்றிக் கொண்டாள்.

''ராதா!'' என்று கூப்பிட்டாள் அவள் தாய்.

எடுத்த எடுப்பிலேயே கண்டிப்பாகக் கேட்டாள்: நீ பிரேமை விரும்புகிறாயா?''

''ஆமாம்'' என்றாள் ராதா உறுதியாக.

''மறந்திடு. அவர்கள் பழக்க வழக்கமே வேறே. ஆகாரம், எல்லாம் வித்தியாசம். நட்புறவு மட்டும் போதும்.'' என்று திட்டமாகக் கூறிவிட்டுச் சென்றாள் தாய்.

அவன் நினைவில் லயித்துவிட்ட ராதா, தன் தகப்பனாரிடம் மனம் திறந்து சொல்லி அழுதாள்.

அவளும் அலுவலகம் போகும் நாள் வந்துவிட்டது. சென்று விட்டாள். பிரேம்குமார் மீண்டும் வந்தபோது அவளால் வரமுடியவில்லை. அவள் மறுபடியும் வீடு வந்தபோது அடுத்த வீடு பூட்டிக் கிடந்தது.

''அவர்கள் தஞ்சாவூர்ப் பக்கத்துக் கோவில் எல்லாம் பார்த்துவிட்டு நாளைக்கு வருவார்கள்'' என்று சேதி சொன்னார் தகப்பனார்.

''சரிதான்'' என்றாள் ராதா.

''ராதா, நீ சொன்ன விஷயம் பிரேமுக்கு எழுதி விட்டேன். அம்மாவுடன் கலந்து யோசிக்க நேரம் கேட்டிருக்கிறான்.''

''யோசிக்கணுமாமோ?'' என்று ராதா வெகுண்டாள்.

அடுத்த வீட்டில் பரபரப்புக் கேட்டதும், அவள் பக்கவாட்டு ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள். எல்லாரும் உள்ளே போய்

விட்டனர் போலும். சாம்பிய உள்ளத்துடன் அவள் வீட்டுக்குள்ளேயே அடைந்துகிடந்தாள்.

பிற்பகல் ராதாவின் பெற்றோர்களும் அடுத்த வீட்டுக்குப் போய் விட்டார்கள். அவர்களுடன் போக ராதாவுக்கு மனம் வரவில்லை. 'பிரேம் குமார் வரட்டுமே' என்று அவளுக்கு ஒரு வீம்பு தோன்றியது.

ஒரு முறை அவர் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தபோது அவள் பெற்றோர் சிரித்த முகத்துடன் விடை பெறுவது தெரிந்தது. பலத்த சிரிப்பும் கேட்டது.

அம்மாவின் கை நிறையத் தாம்பூலம் தெரிந்தது. அப்பா காதில் ஒரு செவந்தி இருந்தது.

ராதாவின் இதயம் ஒரு துள்ளுத் துள்ளியது.

''ராதா, நீ ஏன் வராமல் இருந்துட்டே? எல்லாரும் கேட்டாங்க'' என்றார் தந்தை.

''அந்த அம்மாவுக்கு ரொம்பச் சந்தோஷம். பிள்ளையைப் பெற்றதற்கு இப்படி ஒரு வாய்ப்புக் கிடைத்ததே என்று மனப்பூரிப்பைச் சொல்ல முடியாது. இன்னுமொரு பையனும் வந்திருக்கிறான். அடுத்த மாசம் எஞ்சினியர் பிள்ளை வந்து வடக்கே காசிக்கு அழைச்சுப் போகப் போறானும்'' என்று அடுக்கினாள் தாய்.

ராதாவின் தவிப்பு யாருக்கும் புரியவில்லை போலும்.

தன் படுக்கையில் பொத்தென்று வந்து விழுந்தாள்.

தாயார் வந்து அவள் அருகில் அமர்ந்து கொண்டாள். பெண்ணின் தலையைக் கோதி விட்டாள். ''அப்பா சொல்லிட்டாரா? அதனால் என்னம்மா, பிராப்தம் இல்லைன்னு நினைக்க வேண்டியதுதான்.''

''என்ன சொல்றே, அம்மா?''

''கல்யாணத்துக்கு அவங்க சம்மதிக்கலை.''

தாய் பேச்சை முடிப்பதற்குள் ராதா சீறி எழுந்தாள். ''உனக்குத் திருப்திதானே?'' என்றாள்.

''நான் உன்னை எச்சரித்தது நிஜந்தான். ஆனால் அப்பாவும் நானும் சம்மதிச்சுத்தான் எழுதினோம். அவனுடைய அப்பா, அம்மா விரும்பலேன்னா அவன் என்ன செய்வான், சொல்லு?''

''அவர் ஓர் ஆண் பிள்ளையா? தான் யாரை மணக்கிறதுன்னு கூட அம்மாகிட்டே சொல்லமுடியாதா?''

''நல்ல பிள்ளை. தன் இதயத்து ஆசையையே அம்மாவின் திருப்திக்காக விட்டுக்கொடுக்கற மனப்பக்குவம் எல்லாருக்கும் வராதும்மா.''

''சீர் செய்யமாட்டோம்னு பயமா? அந்த அம்மாவும் நீயும் அக்கா, தங்கை மாதிரின்னே. பார், உன் முகத்திலே கரி பூசிட்டா.''

''அந்த உறவு எங்களுக்குள்ளே என்னைக்கும் இருக்கும். பிரேம் உத்தமமான பையன். அவனை நிந்திக்காதே!''

''சரிதான் போம்மா. உங்கக் கொள்கைப்படி நடந்து விட்டது உங்களுக்குத் திருப்தி. காலத்தோடு வாழக்கூடாதா நீங்க? இளம் பரம்பரைதான் எதையும் துறக்கணுமா? பெற்றோர்தான் துறந்தால் என்ன?''

''ராதா, என்ன, அம்மா இது? நடந்து போன விஷயத்தை ஏற்காமல் திரும்பத் திரும்ப வாதாடறியே? உனக்குத் தன்மானம் கூடப் போய்விட்டதா? அவன் விரும்பலே. அவ்வளவுதான்.. வாழ்க்கையிலே ஏற்படுகிற பிரச்னைகளை எதிர்த்துச் சமாளிக்கத் தெரியணும். எழுந்திரு. பிரேம் வேலி ஓரத்திலே நின்னு உன்னைக் கூப்பிடறான்..சிரிச்சுண்டு போ.'' தந்தையின் குரல் கண்டிப்பாக இருந்தது.

ராதாவினால் தன் ஏமாற்றத்தைத் தாங்க முடியவில்லை. சற்று நேரம் மனம் வெடிக்க அழுது தீர்த்தாள். பிறகு எழுந்து குளித்துவிட்டு, தலையை வாரிப் பின்னிக் கொண்டு, நல்ல புடைவை உடுத்து, சகஜமாக முன் ஹாலில் வந்து அமர்ந்தாள்.

''ராதா, பிரேம் மறுபடியும் வேலி ஓரம் நிற்கிறான் பார்.''

ராதா நகரவில்லை.

அப்போது தோட்டத்திலே ஒரே சத்தம். நாய் குரைத்தது, கன்றுக்குட்டி மணி ஒலித்தது.

''என்ன இப்படி? எப்படி, எல்லாம் வேலி தாண்டி வந்தது?'' என்று வியந்து கொண்டே ராதாவின் பெற்றோர் விரைந்தனர்.

''ராதா, இந்தக் கோழியைப் பிடிக்க முடியவில்லை. வாயேன்'' என்று அப்பா குரல் கொடுத்ததும் ராதா ஓடினாள்.

கோழியைத் தூக்கி வேலியைத் தாண்டி வீச இருக்கையில், அதை வாங்கிக்கொண்டான், பிரேம்குமார். ''நீ வெளியே வர மாட்டேன் என்கிறாயே என்றுதான் இவற்றையெல்லாம் கஷ்டப்பட்டுத் தூக்கி வேலி தாண்டி உள்ளே விட்டேன்'' என்று கூறிப் புன்முறுவல் பூத்தான்.

''ரொம்பக் கஷ்டப்பட்டிருக்கீங்க. தாங்க்ஸ்'' என்றாள் ராதா வெடுக்கென்று.

''ராதா, நம் நல்லதுக்காகத்தான் இப்படித் தீர்மானம் செய்தேன். நீ என்னைக் 'குமார்'னு கூப்பிடு.''

''என்ன உரிமையோ?''

''நட்பின் உரிமைதான்.''

''ஒரு பெண்ணின் மனசை அறியாத மனுஷன், கரிசனமில்லாத கல்மனசுக்காரர், என்கிட்ட நட்புரிமை கொண்டாடணுமோ?''

''என்ன வேண்டுமானாலும் சொல் ராதா. ஆனால் பெற்றோர்தான் குழந்தைகளுக்கு விட்டுக் கொடுக்க வேண்டும் என்று நீ ஏன் தன்னலமாக நினைக்கிறே? நாம்தான் அவர்களுக்காக வாழ்வோமே?''

''நம்மைப் பிரிச்சு அவர்கள் என்ன சந்தோஷம் கண்டார்களோ?''

''அப்படியில்லை ராதா. நீ அடிக்கடி படிக்கிறாயே, ஜே. கிருஷ்ணமூர்த்தி, அவர் என்ன சொல்கிறார்? தொன்று தொட்டு உடலில் ஊறிவிட்ட விஷயங்கள் எளிதில் மாறுவதில்லை. விதவைகள் மணக்கலாம் என்று சமூகம் அநுமதிக்கிறது. விவாக ரத்துச் செய்தவர்கள் மறுமணம் செய்து கொள்ளச் சட்டம் இடம் கொடுக்கிறது. ஆனால், எத்தனை பேர் முன் வந்திருக்கிறார்கள்? அதுதான் மரபு. மனம் ஒரு வழியிலே பக்குவப்பட்டு விட்டால் அதை மாற்றி அமைப்பது சுலபத்தில் நடக்காது. வேலி என்பது வெளியிலேருந்து உள்ளே வராமல் தடுக்க மட்டும் அல்ல. உள்ளே இருப்பவர்களை வெளியே போக விடாமலும் தடுக்கும். உள்வேலி என் பெற்றோரைத் தடுக்கிறது. பணப் பிரச்னைகள் இல்லை. சாப்பாடு, பேச்சு நடை, உடை, பாவனை—இவையே குறுக்கே நிற்கின்றன!''

''நான் எதையும் மாத்திக்க மாட்டேன்னு நினைச்சிட்டாங்க போலும்! என் அன்பு அவ்வளவு லேசாயிடுச்சா?''

''உன் மனம் உடையக் கூடாது. அதே போல் என் தாய் மனமும் புண்படக் கூடாதல்லவா? பச்சை மண் பாண்டம் உடைஞ்சா ஒட்டிடலாம். வெந்த மண் பாண்டம் உடைஞ்சா ஒட்டாது, அம்மா.''

ராதா ஏளனமாகப் பார்த்துவிட்டுத் திரும்பினாள்.

''நீ புரிஞ்சுக்கிற வரை எனக்கு மன நிம்மதி கிடையாது. சரி, நான் வரேன். ஆயிரம் ஆண்டுகளாக முறுக்கேறி விட்ட மனம் அவர்களுடையது. வேலியைத் தாண்ட மறுக்கிறது. அதை நீ தாராள மனசுடன் ஒப்புக் கொள்ள வேண்டும்.''

''முயன்று பார்க்கிறேன்.''

''நீ ஏளனமாகவே பதில் சொல்றே, ராதா. இருக்கட்டும். 'நீ அவளைக் கல்யாணம் கட்டிக்கோ. ஆனால் நீங்கத் தனியாத்தான் இருக்கணும். நான் எப்பவும் உங்களோடு இருக்க முடியாது'ன்னு சொன்னாங்க என் அம்மா. உன் பெற்றோரும் மனப் பூர்வமாகச் சம்மதிச்சாங்க. எங்கப் பெற்றோரும் முழு மனசோடு உன்னை ஏத்துக்கத் தயார் தான். ஆனாலும் அவங்களாக ஏற்படுத்திக் கொண்ட வேலி அவங்களைத் தடுக்கிறது.''

''அவங்க வேலியில் பெரிய இடைவெளி இருந்தது, பிரேம்! இரட்டை வேலி போட்டது நீயும் நானுந்தான்.''

''ஆமாம், ராதா'' என்றான் பிரேம் குமார், தழுதழுக்கும் குரலில்.

ராதா அவன் முகத்தைப் பார்த்தாள். அவள் மனம் இளகிவிட்டது. நட்புரிமையோடு அவள் கூறினாள். அருகில் சென்று ஆதுரத்துடன், ''ஸாரி, பிரேம். இந்தத் தீர்மானம் செய்தது நீங்கதான் என்று என் எண்ணம். அதனால் நான் மிகவும் கோபமடைந்தேன். உங்க உணர்ச்சி இப்ப எனக்கு ஒருவாறு புரிகிறது. ஆயினும் என் மனம்..''

''உன் பெற்றோருக்காக நீ ஒரு நல்ல மனிதனை மணந்து இன்பமாக இருக்க வேண்டும்.''

''நான் அதற்கு இப்போது வாக்குத் தரமாட்டேன். முயல்கிறேன்.''

ராதா சட்டென்று நிமிர்ந்து ஒரு சிறு சிரிப்புச் சிரித்தாள். பிரேம் குமாரும் வாய்விட்டுச் சிரித்துவிட்டான்.

✻

ஸ்தாபிதம்: 1904 போன்: 218

தபால் பெட்டி எண்: 3 தந்தி: "KETIOR"

தரத்தில் சிறப்பு மிக்க

K. T. R.

- கோபுரம் மார்க் பன்னீர்,
- சந்தனாதித் தைலம்,
- பொன்னாங்கண்ணித் தைலம்,
- சந்தன பில்லைகள்,
- ஜெகன் மோகனா, லவ்பேர்ட்ஸ் சந்தன பத்திகள்,
- சர்பத், ஊறுகாய் வகைகள்

தயாரிப்பாளர்:

K.T.R. வாசனாதி திரவியசாலை

திருவாரூர் – 610 001 : : தமிழ்நாடு

73 ஆண்டுகளாகப் புகழ் பெற்றது

ஆர். எஸ். பதி மருந்து

(REGD.)

- தலைவலி
- ஃப்ளு
- ஜலதோஷம்
- கைகால் வலி

முதலியவைகளுக்குச் சிறந்த மருந்து

சேல்ஸ் டாக்ஸ் லைசென்ஸ், டிரக் லைசென்ஸ் உள்ள வியாபாரிகள்
எங்களுக்கு நேரிடையாக ஆர்டர் எழுதவும்

தயாரிப்பாளர்கள்:

ஆர். எஸ். பதி அன் கோ.

214 & 215, மேல மாசி வீதி—தபால் பெட்டி எண் 99
மதுரை – 625001

—Crown Services

எமது நல்வாழ்த்துக்கள்

எங்கள் தயாரிப்பான இந்துவின் பல்வேறு பிரிவு பொருட்கள்

- ஒளி புகைப்படம்
- சினிமா படம்
- எக்ஸ்ரே
- கிராஃபிக் ஆர்ட்ஸ்
- தொழிலியல் எக்ஸ்ரே
- தொழில் முறை ரசாயனப் பொருட்கள்

விவரங்களுக்குக் கீழ்க்கண்ட நகரிலுள்ள எங்கள் கிளைகளையோ டிப்போக்களையோ அணுகவும்:
பம்பாய், டெல்லி, கல்கத்தா, பெங்களூர், கொச்சி, ஹைதராபாத், ஆமதாபாத், போபால்,
ஜெய்ப்பூர், கான்பூர், சண்டிகர், பாட்னா, கௌஹாத்தி, மற்றும் கட்டாக் அல்லது
மார்க்கெட்டிங் பிரிவு, அம்பாள் கட்டிடம், பத்திரி சாலை,
தபால் பெட்டி எண், 748, சென்னை-600 006

HPF IS INDU AND INDU IS FILM
INDU PHOTO CINE X-RAY

இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் மேனுஃபேச்சரிங் கம்பெனி லிமிடெட்

(இந்திய அரசு நிறுவனம்)

பதிவு அலுவலகம்: இந்து நகர், உதகமண்டலம்-643 005

கொடிகாய்ச்சி மரம்

சு. சமுத்திரம்

சுவரில் ஏறிய பல்லி, ஏதோ ஒரு காரணத்துக்காகத் தன வாலைத் தானே துண்டித்துக் கீழே போட்டது போல், ஊருக்குச் சற்றே தள்ளி, பள்ளமான இடத்தில் உள்ளது சேரிப் பகுதி. ஓலைக் கூரைகளும், கோணிக் கதவுகளுமாகச் சிதறிக் கிடந்த குடிசைகள். இவற்றுக்கு இடையே நெளிந்தும், வளைந்தும் போய்க்கொண்டிருந்த புழுதிப் பாதைகள். பெண்கள் பிரப்பம் நாரால் எதையோ பின்னிக்கொண்டிருக்க, தள்ளாத கிழவிகள் நார்ப் பெட்டிகளோடு போகத் துவங்கிய நேரம். ஐம்பது வயதுக்கு உட்பட்ட ஆண்களும், பெண்களும் மண் வெட்டிச் சகிதமாக வயல்வெளிக்குப் புறப்படும் சமயம்.

காசிராமன், காலையிலேயே அங்காள (பரமேசுவரி கோவில்)முகப்புக்கு வந்துவிட்டான். கையில் வைத்திருந்த தூக்குக் கூடையை அமுக்கி அமுக்கிப் பார்த்துக்கொண்டான். யாரையும் காணவில்லை. அங்கிருந்தபடியே குரலிட்டான்:

''இன்னும் என்னடா செய்யுறிய சும்பப் பயலுவளா? ஏய் மாடசாமி, அடேய் பெருமாள், வாங்கடா, சீக்கிரமாய்!''

காசிராமனுக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டுப் போய்விடலாம் என்று நினைத்துத் தோளில் மண்வெட்டிகள் தொங்கப் போய்க்கொண்டிருந்த மாடசாமியையும், பெருமாளையும் காசிராமன் பார்வை என்ற கயிற்றால் இழுக்க, அவர்களும் மாடுகள் மாதிரி முரண்டிக்கொண்டே வந்தார்கள்.

காசிராமன் சாடினான்:

''என்னடா ஒங்க மனசுல நெனப்பு? தலைவருக்கு இன்னிக்குப் பிறந்த விழா. கொடியேற்றப் பட்டுச்சாமி வாரார். நீங்க மட்டும் பட்டும் படாமப் போனா எப்படிடா? கள்ளச் சாராயம் காய்ச்சிட்டுப் போலீஸ்ல அகப்படும் போதுல்லாம் ஒப்பனா ஜாமீனுக்கு வருவான்? வேணுமுன்னா இப்போ வயலுக்குப் போங்க. அப்புறம் நம்மகிட்ட வரப்படாது. போங்கடா. ஏண்டா நிக்கிறிங்க?''

மாடனும், பெருமாளும் மண்வெட்டிமாதிரியே தலைகளைத் தொங்கப் போட்டபடி காசிராமன் பக்கமாக உட்கார்ந்தார்கள். இதற்குள் சத்தங் கேட்டோ அல்லது வேலை வந்துவிட்டதை உணர்ந்தோ ஏழெட்டுப் பேர் ஓடி வந்தார்கள். ஒருவர் காசிராமனையே அதட்டினார்.

''பேசாம இருந்தா எப்படிக் காசி? மிட்டாய் வாங்கிட்டியா?''

''இதோ, கூடையிலே இருக்கு பாரு. நீங்கதான் நயாபைசா தரல. நான் சும்மா இருக்க முடியுமா?''

பெரியவர்கள் பேச்சில் சிறிதும் அக்கறை காட்டாததுபோல் சற்றுத் தொலைவில்விளையாடிக்கொண்டிருந்த குழந்தைகளுக்கு, 'மிட்டாய்' என்ற வார்த்தை எப்படிக் கேட்டதோ? வார்த்தை சொல்லி முடிக்கும் முன்பே ஓடிவந்தார்கள். காசிராமனையும் தூக்குப் பையையும் மாறி மாறிப் பார்த்தார்கள். ஆறு வயதுச் சிறுமி ஒருத்தி, ''எப்போ சின்னய்யா மிட்டாய்?'' என்றாள்.

காசிராமனும், அவன் சகாக்களும் பார்த்த பார்வையில், குழந்தைகள் அடங்கி ஒடுங்கியபோது, வயதான ஒருவர், ''தலைவர் பட்டுச்சாமி வந்ததும் தருவோம். அதுவரைக்கும் எங்கேயும் போகாம இங்கனே நிக்கணும். தலைவர் வந்ததும் கைத்தட்டுற பிள்ளைகளுக்குத்தான் மிட்டாய்'' என்றார்.

குழந்தைகள் நேராக ஓடினார்கள். சேரியின் முகப்பில் போய் நின்றுகொண்டார்கள். அது ஒன்றுதான் சேரிக்கு உள்ள ஒரே வழி. பட்டுச்சாமி இந்த வழியாய்த்தான் வந்தாகணும்.

காசிராமனின் தோழர்கள், பரமேசுவரி கோவிலுக்குச் சற்றுத் தள்ளி நட்டிருந்த கொடிக் கம்பத்தையே பார்த்தார்கள். அதன் உச்சியில் சுற்றிச் சுற்றியும், மேலும் கீழுமாகவும் பல அரசியல் கட்சிகளின் கொடிகள் பறந்தன. இதனால் பதினெட்டடி உயரமுள்ள இந்தக் கம்பம், ஒரு விநோதமான மரம் போலவே காட்சி அளித்தது. கொடி தொங்கிய கம்புகள் கிளைகள் போல் பிரிய, அவை சுமந்த பல்வேறு வண்ணங்களைக் கொண்ட கொடிகள் இலைகள்போல் முடிந்திருந்தன. சில சிறுவர் சிறுமியர், இதற்குத் 'துணிக் காய்ச்சி மரம்' என்றும் பெயர் வைத்திருந்தார்கள். தெற்கு நோக்கிக் கட்டப்பட்ட தி.மு.க. கொடி, தென்மேற்கில் இருந்த அ.தி.மு.க. கொடி, வடக்கே பார்த்த காங்கிரஸ் கொடி, கீழ் நோக்கிய ஜனதாக் கொடி, வடகிழக்கைப் பார்த்த கம்யூனிஸ்ட் கொடி, வடமேற்கைப் பார்த்த இன்னொரு கம்யூனிஸ்ட் கொடி, மொத்தம் ஒன்பது கொடிகள் தேறும். இந்தக் கொடிகளுக்கிடையே இடைவெளிகளும் விட்டுவைக்கப்பட்டிருந்தன. ஒருவேளை இந்தக் கட்சிகள் மேலும் பிரிந்தால் அதற்குத் தக்கபடி, மேலும் சில கொடிகளைக் கட்டுவதற்கு இடம் விட்டு வைத்திருந்தார்களோ என்னவோ?

இந்தக் கொடிக் கம்பம், சேரிக்கு வந்த கதையே சுவையானது. அருகே உள்ள மலைக்கிராமத்துக்கு, மேளம் அடிப்பதற்காகப் போன காசிராமனும் முனியாண்டியும், அங்கே மின்சார வாரியம், தன் வேலைக்காகச் செப்பனிட்டு வைத்திருந்த இந்த உருண்டு திரண்ட தடியை எப்படியோ கொண்டு வந்துவிட்டார்கள். ஊருக்குத் திரும்பிய மறுநாள், காசிராமன் மற்ற

வனிடம் சொல்லாமலே, இந்தக் கம்பத்தை இப்போது இருக்கிற அதே இடத்தில் நட்டு, தனது இஷ்டதேவதையான ஒரு கட்சியின் கொடியை ஏற்றப் போனான். தூக்கக் கலக்கத்தோடு வெளியே வந்த முனியாண்டி காசி செய்யும் காரியத்தைப் பார்த்தான். "அந்தக் கம்பம் அங்கே உயிரோடு இருக்க வேண்டுமானால், தன் உயிரினும் இனியதான தனது கட்சியின் கொடி மட்டுமே இருக்க முடியும்'' என்றான். காசிராமனுக்கும் முனியாண்டிக்கும் வாக்குவாதம், கைவாதமாக மாறத் தொடங்கியது. இதற்குள், இவர்களின் சத்தம் அதிகமாகி, அக்கம் பக்கத்துக்காரர்களை ஆட்கொண்டது. இதை, நல்லதோர் கட்டிவாகச் செய்யலாம் என்று இருவருக்கும் ஒரே தாத்தாவான சுடலை மாடன் சொன்னது, அங்கே சுடலைக்கு மட்டுமே எடுபட்டது.

பரமேசுவரிக்கு இதைக் கொடி மரமாய் வைக்கலாம் என்ற யோசனை முன் வைக்கப்பட்டது. பரமேசுவரியின் பழைய கொடி மரத்திலேயே கட்சிக்கொடிகள் கட்ட நினைத்த சர்வ கட்சிக்காரர்கள், இந்த யோசனையை நிராகரித்தார்கள். இறுதியில் சேரியின் புறம்போக்கு இடத்தில் இது நடப்படுவதால், எல்லாரும் எல்லாக் கொடிகளையும் கட்டலாம் என்று தீர்மானமாயிற்று. அன்றிலிருந்து, இன்றுவரை கம்பம் கொடி விடத் துவங்கியது.

இந்த வரலாற்றுப் பின்னணியோடு, கொடிக் கம்பத்தைக் காசிராமனும் அவன் கட்சித் தொண்டர்களும் மிகவும் ரசித்தார்கள். அந்தக் கம்பத்துக்கு அருகே, கையில் எதையோ ஒரு புத்தகத்தை வைத்துக்கொண்டு, சுற்றிச் சுற்றி வந்த குழந்தைவேலுவைச் சற்றுக் கலக்கத்தோடு பார்த்தார்கள். "கிறுக்குப் பயல் பேசாம மெட்ராஸ்லேயே டெய்லராய்க் கிடக்கலாம். பட்டு வரும்போது எதையாவது பட்டுப்பட்டுன்னு புட்டு வைக்கப் போறான்.''

குழந்தைவேலுவை எப்படி அப்புறப்படுத்துவது என்ற தீவிரச் சிந்தனையால் உந்தப்பட்ட காசிராமனும், அவன் ஆட்களும், முனியாண்டி வந்ததைக் கவனிக்கவில்லை. அவன் குரலால் உலுக்கப்பட்ட பிறகே, அவனைப் பார்த்தார்கள். முனியாண்டி கர்ஜித்தான்.

"ஏய் காசி, காலையில், நீங்களும் சாயங்காலம் நாங்களும் கொடி ஏத்தணும்னு சொன்னே. ஒத்துக்கிட்டேன். இப்போ கம்பத்துல ஆறடி வரைக்கும் ஒன் கட்சியோட வர்ணத்தை அடிச்சிருக்கியே? ஏண்டா?''

காசி, தோழர்கள் மெச்சப் பதிலளித்தான்.

"பட்டு முதலாளி வரார். இப்போ குறுக்கே பேசாதே. நீயும் வேணும்னா நான் அடிச்சதுக்குக் கீழே அடிச்சுக்கோ.''

"ஒங்களுக்கு மேல, எனக்குக் கிழேயா? என்னடா நினைச்சிக்கிட்டே? ஊரை மொதல கொள்ளையடிச்சவரு பட்டுச்சாமி. அவருக்காகக் கம்பத்துல ஏண்டா கை வைச்சே? அந்த அயோக்கியனைத் திருப்திபடுத்த நினைச்சா? கட்சிக் கம்புல வர்ணம் போடு. பொதுக்கம்பத்துல ஏண்டா போட்டே?''

"இந்தா பாரு, எப்பன பேசு, எம்மாம் திட்டு, பொறுத்துக்கறேன். ஊர் ஜனங்களுக்காக ராவும் பகலுமாப் பாடுபடற பட்டு அய்யாவ பேசுனலை, பழையபடி பேசுறதுக்கு ஒன் பல்லு இருக்காது.''

"என்னடா பெரிய பெரிய வார்த்தெல்லாம் பேசுறே? அடிக்கறதாய் இருந்தாலும் என்னை அடி. பட்டுக்கிறேன். ஆனால் தாலுகா ஆபீஸ்லேயும், கூட்டுறவு சங்கத்துலேயும் சிரிப்பாய்ச் சிரிக்கிற பட்டுச்சாமி பேர இன்னொரு தடவ சொன்னே, பல்லு கழண்டுடும்.''

"பட்டு பேரு சிரிக்குதோ, சிரிக்கலியோ, நமக்குத் தெரியாது. ஆனால் ஒன்னோட நல்ல பெருமாள் நாறுகிற அளவுக்கு அவரு நாறல.''

"எல, நல்லபெருமாள் முதலாளிய இழுத்தே, ஒன்னை தெருவுல இழுத்து உதைப்போம்.''



பேச்சு தடிக்கத் தடிக்க, காசிராமன் ஆட்களின் கைகால்கள் விரைத்தன. இதற்குள் முனியாண்டியின் கட்சியாட்களும் கூடிவிட்டார்கள். அசப்பில் கிட்டத்தட்ட ஒரே மாதிரி இருக்கும் பங்காளிகளான காசியும், முனியும் ஒருவருக்கொருவர் முறைத்தார்கள். இருவருக்குமே முப்பது வயதிருக்கும்; பனைத்தூர் போன்ற உடம்பு. இவர்களின் பேச்சுக்களை ரசித்துக் கொண்டிருந்த பொது ஆட்களில் ஒருவர், "எந்த மாடு சநதிக்குப் போனு நமக்கென்னடா? அடுப்புல விறகு எரியுறதுக்கு வழிய பாருங்கடா. ஆக வேண்டியத பாக்காம ஆகாததைப் பேசுறீங்க" என்றார்.

"விஷயங்கள் ஆகாம இருக்கலாம். அதுக்காக மனுஷங்களை ஆகாதவங்களாய் நெனைக்கப்படாது" என்றார் ஒரு 'பொதுப் பிள்ளை.'

கொடிக்கம்பத்தையே கையில் புத்தகத்தோடு சுற்றி சசுற்றி வந்த டெய்லர் குழந்தைவேலு, தனக்குச் சமயம் வந்ததை உணர்ந்து திருப்பிக் கத்தினன்:

"மனுஷங்களும் விஷயங்களும், ஒண்ணுன்னு ஆகும்போது வெவகாரம் இப்படித்தான் முடியும். ஏய்யா, இவ்வளவு பேசுறீங்களே, ஒன்பது கட்சிக்கு ஒத்துப் பாடுறீங்களே? இந்த ஒன்பதுல ஒரு கட்சிக்காவது நீங்க யாரும் தலைவராய் இருக்கியளா? எல்லாம் மேல் ஜாதிக்காரனுக்கு அடிமை! அடிமைத்தனத்துக்கு ஒரு போட்டியா?"

காசியும் முனியாண்டியும் 'பொது உடன்பாட்டுடன்' குழந்தைவேலுவையே பார்த்தார்கள்; 'இருபது வயதுக்குள் என்ன பேச்சுப் பேசுறுன் இந்தப் ப்ய? பத்துப் படிச்சுட்டு மெட்ராசுக்குப் போனன். இவன யாரு வரச் சொன்னது? முட்டாப் பய.' கத்தியது, கடைசியில் குழந்தைவேலுதான் என்பதை அறிந்து, அதிகமாக அலட்டிக்காத இன்னெரு கட்சிக்காரர், கொடிக் கம்பத்தைப் பார்த்துவிட்டுக் கத்தினர்.

"எனக்குப் பதில் சொல்லிவிட்டு காரியம் பண்ணுங்கடா. உச்சியில இருந்த என் கொடி எப்படிடா கடைசில வந்தது? பதில் சொல்லாட்டா கொலை நடக்கும். எவண்டா அவிழ்த்துக் கட்டினவன்?"

குழந்தைவேலு சுவையோடு சொன்னன்.

"அவிழ்க்கிறவன் எவனுவது கட்டுவானு? ஒம்மை மாதிரி ஒம்ம கொடியும் லூசு. இறுக்கிக் கட்டாததுனுல அது சறுக்கி வந்துட்டுது."

"கொடி இருந்த இடத்துல இருக்காட்டா கொலை நடக்கும்."

இந்தச் சமயத்தில்வெளியே நின்ற குழந்தைகள், "பட்டுச்சாமி வந்துட்டார். மிட்டாய், மிட்டாய்" என்று சொல்லிக்கொண்டே ஓடிவந்தார்கள். முனியாண்டியும் அவன் ஆட்களும் மெதுவாக ஒதுங்கிக்கொண்டனர்.

கோழி மார்போடும், கோணல் முதுகோடும் வந்த பட்டுச்சாமியையும் அவருடன் வந்த கிராமத்து இதர பிரமுகர்களையும் வரவேற்கும் வண்கயில் காசிராமன் பத்தடி முன்னல் நடந்தான். பட்டுச்சாமி குரல் கொடுத்தபடியே வந்தார்.

"ஏய் வேலு, எப்போடா என் ஜிப்பாவைத் தைச்சுத் தரப் போற? எவ்வளவு நாளுடா ஆகுது? ஏய் காசி, நம்ம ஆட்கள் கொஞ்சமாய் இருக்காங்களே? ஏண்டா? சரி, டயம் ஆகுது. நான் இன்னும் நாலு இடத்துக்குப் போகணும்."

காசிராமன், விநயமாகச் சிரித்தபடி, பட்டுச்சாமியைக் கொடிக் கம்பத்துக்குக் கூட்டிப் போனன். பொட்டலம் பொதிந்தது போல வைக்கப்பட்டிருந்த கட்சிக் கொடியை அவர் ஆட்டிவிட்டுக் கட்டிய போது, மலர்கள் விழுந்தன. குழந்தைகள் வாய்களைச் சப்புக் கொட்டி, கைகளைத் தட்டினர்கள். பட்டுச்சாமி பேசத் துவங்கினர்.

"ஏழை என்றும் அடிமை என்றும் எவரும் இல்லை ஜாதியில்" என்றார். "எல்லோருமம ஓர் நிரை, எல்லோரும் ஓர் நிரை" என்றார். பிறகு என்னவெல்லாமோ பேசினர். மற்றும் பலர் பேசினர்கள். குழந்தைகளுக்கு மிட்டாய் கிடைக்க, பகல் பன்னிரண்டானது.

காலையில் வந்த பட்டுச்சாமி போய்விட்டார். மாலையில் நல்லபெருமாள் நாலைந்து பேரோடு வந்தார். முனியாண்டி அவர்களை எதிர்கொண்டு அழைத்தான். குழந்தைகள் அவர் வரவைக் கொண்டாடுவதுபோல், மிட்டாய்ப் பொட்டலத்தைப் பார்த்தார்கள். அவரும் கட்சிக்கொடியை ஏற்றிவிட்டு, 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று குரலை ஏற்றினர். பட்டுச்சாமி முக்கால் மணிநேரம் பேசியதற்காக இவர் ஒரு மணி நேரம் பேசினர்.

இந்த விழாச் சங்கதிகள் முடிந்த பிறகு, காந்தி ஜயந்தி வந்தது. சேரிவாசி சின்னையன், கிராமப் பிரமுகர் கிருஷ்ணனைக் கூட்டி வந்தார். அவரும் கொடியேற்றிவைத்து விட்டு, தீண்டாமையின் தீய விளைவுகளைப்பற்றிப் பேசினார். அவர் பேசியதைப் பார்த்தால், சேரிக்காரர்கள்தாம் தீண்டாமைக்குக் காரணம் என்று சொல்வது போல் குழந்தைவேலுவுக்குத் தோன்றியது; குழந்தைவேலுவுக்கு மட்டுந்தான்.

நாட்கள் நகரத் துவங்கின.

ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களும், பஞ்சாயத்துத் தேர்தல்களும் நெருங்குவதை நினைத்து, கிராமத்துக் கட்சித் தலைவர்கள், மாவட்டத் தலைவர்களோடு வந்தார்கள். கொடியேற்றல், பம்ப்கோலா, பன்னீர், பாமாலை, பூமாலை என்று அந்தச் சேரி வாரம் இருமுறை விழாக் கோலம் பூண்டது. வராத தலைவர்கள் இல்லை; பேசாத பேச்சில்லை.

மாத முடிவில் ஒரு நாள்.

சேரியில் அங்காள பரமேசுவரியின் கோவில் முன்னால், பத்துப் பதினைந்து பேர் உட்கார்ந்துகொண்டு, பேசிக் கொண்டிருந்தார்கள். சிநேகிதமாகப் பீடிப் பறிமாற்றம் செய்த முனியாண்டியையும், காசிராமனையும் டெய்லர் குழந்தைவேலு சீண்டிவிட்டு, அவர்களை அரசியல் வம்புக்குள் சிக்க வைத்தான். பெரிய குளத்தைப்பற்றிக் காரசாரமாக விவாதம் நடந்து கொண்டிருந்த போது, அதைக் கலைப்பது போல், குய்யோ, முறையோ என்று கூக்குரல் கேட்டது. எல்லாரும் திரும்பிப் பார்த்தார்கள். பிறகு ஓடினார்கள்.

பத்தொன்பது வயது வாலிபன் ஒருவன், இருவரின் கரங்களுக்குள் நெளிந்துகொண்டிருந்தான். பால்வடியும் முகத்தில் ரத்தப் பிரளயங்கள். வாயிலிருந்து குருதி கொட்டிக்கொண்டிருந்தது.

அவனைக் கொண்டு வந்தவர்கள் கொடிக் கம்பத்துக்கு அருகே அவனைக் கிடத்தினார்கள். அவன் கறுப்பு மேனி, செந்நிறத்தைக் கண்ட திருப்தியில் அடங்கியிருப்பது போல் தோன்றியது. இரண்டு பாதங்களிலும் ரத்தச் சிராய்ப்புக்கள். மார்பில் பாளம் பாளமாகக் கீறல்கள். இதற்குள் ஆளுயுரக் குடிசையிலிருந்து அலறிப் புடைத்துக் கொண்டு மங்கம்மா வந்தாள். மகனை முன்னும் பின்னுமாய் பிடித்துத் தலையைத் தூக்கி மடியில் வைத்துப் புலம்பினாள். அவனோ அம்மாவின் பாசப்பிடியே, எமப் பிடியானதுபோல் ஊளையிட்டான்.

எவரும் கேளாமலே அவனைத் தூக்கி வந்த ஒருவர், திக்குமுக்காடிப் பேசினார்: "நானும் இவனும் கிராமத்துல, பட்டுச்சாமி வயலுல, உழவுக்கான மாட்டெ அவிழ்த்துக்கிட்டு இருந்தோம். அப்போ இந்தக் கருப்பசாமி சைக்கிள்ல வந்துகிட்டு இருந்தான். இவன்கூடப் படிச்ச மோகன் எதிர்ல வந்தாரு. இவன் சைக்கிளை லேசாச் சாய்ச்சு, காலைத் தரையில ஊனிக்கிட்டு, அந்தப் பையனோட ஏதோ பேசியிருக்கான். அந்தச் சமயத்துல அங்கே கிடா மீசை முத்துப்பாண்டி திடீருன்னு வந்து, 'ஏல, பறப் பயல! சைக்கிளவிட்டு இறங்கப்படாதோ? அப்படியே நின்னுக்கிட்டுதான் பேசணுமோ, இறங்குறியா, இல்லே ஒன் இடுப்ப இறக்கட்டுமான்னு' கேட்டாரு. உடனே கருப்பசாமி, இறங்கிட்டான். இறங்கினபடியே, 'என்ன முதலாளி, அக்ரகாரத்துலயே ஐயர் பையங்கள சைக்கில்ல முன்னாலேயும் பின்னாலேயும் வச்சு ஓட்டேம்ம். அவங்க திண்ணையில கூட இப்படிக் கால் வச்சுக்கிட்டு நிக்கறோம்; அவங்களே விகல்பம் பாராட்டல. நீங்க என்னடான்னா?' என்று சொன்னதுதான் தாமதம். 'அப்படீன்னா நாங்க ஐயமாரை விட மட்டமான்னா' கேக்கறே? அப்புறம் பாத்தா நம்ம கருப்பசாமி கீழே கிடக்கான். முத்துப்பாண்டியும் இன்னும் இரண்டு மூணு பேருமாச் சேந்து அவனைச் செருப்புக் காலாலேயே கண்ட கண்ட இடத்துலல்லாம் மிதிச்சாங்க. நாங்க போய்த் தடுத்தோம்; எங்களுக்கும் ரெண்டு மிதி கிடச்சது. என்ன பண்ண முடியும்? அவங்க மெஜாரிட்டி. நல்லவேளை, இவன தூக்கிக்கிட்டு இங்க வரதுக்காவது விட்டாங்களே!"

கோர நிச்சப்தம். அனைவரும் அடிபட்டது போன்ற துடிப்பு. என்ன செய்யலாம் என்று யோசிக்கக்கூட முடியாத அமைதி. இந்த அசுர அமைதிக்கிடையே இன்னொருவர் சொன்னார்:

"இவ்வளவையும் பட்டுச்சாமியும் நல்லபெருமாளும் பாத்துக்கிட்டுத்தான் இருந்தாங்க. ஒரு வார்த்த பேசல. நம்ம கருப்பசாமி பேக்டரில வேல பார்த்து வெள்ளையும் சொள்ளையுமாய்த் திரியுறான் பாரு, இவன்மேல ஊர்க்காரங்களுக்கு ஒரு கண்ணு. அதனால இவன் சைக்கிளவிட்டு .. இறங்காம நின்னது ஒரு சாக்குத்தானே தவிர காரணம் இல்ல."

கருப்பசாமி, அடிபட்ட களைப்பில் மயங்கிக் கொண்டிருந்தான். அவன் அம்மாவும், இன்னும் இரண்டு மூன்று பெண்களும் ஒப்பாரியிட்டார்கள். சேரியே திரண்டு அவனைச் சுற்றி நின்றது.

குழந்தைவேலு, காசிராமனைப் பார்த்தான். பார்வையாலே புரிய வைக்கப் பார்த்தான். பிறகு குத்தலாகக் கேட்டான்.

"என்னய்யா பட்டுச்சாமி மவராசனோட தொண்டரே! ஒம்ம தலைவர் கிட்டச் சொல்லி இந்த அக்ரமத்துக்கு ஏதாவது முடிவு கட்டப் போறியா இல்ல நாம எல்லாருமா திரண்டு போய் நியாயம் கேப்போமா?"

காசிராமன் வீறாப்பாய் பேசினான்.

"மொதல்ல என்ன நடந்ததுன்னு விசாரிக்காம யாரையும் பேசாப்படாது. பட்டுச்சாமி ஜாதி வித்யாசம் பார்க்க மாட்டாரு. வேணுமுன்னால் பாரேன்.."

முனியாண்டியும் தன் பங்குக்குப் பேசினான்.

"அப்படியே பட்டுச்சாமி சும்மாயிருந்தாலும், எங்க நல்லபெருமாள் சும்மா இருக்க மாட்டாரு, கருப்பசாமியும் கொளுப்புப் பிடிச்சவன்."

இதுவரை எந்த விவகாரத்திலும் பட்டுக்காமல் இருந்த முதியவர் ஒருவர் இப்போது தணிய முடியாத தாகத்தோடு சாடினார்:

"இன்னுமாடா ஒங்களுக்கு கட்சி வெறி? வாயில ரத்தம் ரத்தமாய்க் கக்குற கருப்பசாமியப் பார்த்த பிறகுமா, கட்சி வெறி கண்ண மூடுது? உயிர் போறது மாதிரி துடிக்கறவனப் பார்த்தாடா, கொளுப்புப் பிடிச்சவன்னு சொல்ற? அந்த அளவுக்கு ஒனக்குக் கொளுப்பு பிடிச்சுட்டுதா என்ன? ஆயிரந்தான் இவன் பேசியிருக்கான்னு வச்சுக்குவோம். அதுக்கு இப்படியாடா அடிக்கறது? அப்படின்னு அவங்க இந்த ஊர்ல வந்து ஏத்திட்டுப் போன இந்தக் கொடிகளுக்கு என்னடா அர்த்தம் இருக்கு? எருமை மாடு மாதிரி சொரணை இல்லாம இருந்தா ஏன் அடிக்கமாட்டாங்க?"

குழந்தைவேலு இப்போது யதார்த்தத்திற்கு வந்தான்.

"சரி, சரி. மொதல்ல கருப்பசாமி உயிரு முக்கியம். கிராமத்துல இருக்கிற சுகாதார நிலையத்துல அவனைச் சேத்துட்டு அப்புறம் நடக்கக் கூடியதைப் பற்றிப் பேசுவோம்."

கருப்பசாமியை ஒரு நார்க்கட்டிலில் போட்டார்கள். கட்டில் கால்களை நால்வர் தூக்கியபோது, அவன் அம்மா, மகனைச் சுடுகாட்டுக்குத்தான் தூக்குகிறார்கள் என்று நினைத்து மயங்கி விழுந்துவிட்டாள்.

அந்தக் கிராமத்தின் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் கருப்பசாமியைக் கொண்டு வந்தார்கள். நல்லவேளையாக, எப்போதும் இருக்காத டாக்டர் அப்போது இருந்தார். கூட்டத்தைப் பார்த்து ஓரளவு பயந்து போன டாக்டர், அவனுக்கு உடனடியாகச் சிகிச்சை அளித்தார். இரண்டு நாள் முழுவதும் கருப்பசாமியைத் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும் என்று அவர் சொன்ன போது, குழந்தைவேலு, "இவன் அடிபட்டதுக்கு நீங்க சர்டிபிகேட் கொடுக்கணும் டாக்டர்" என்றான். "மொதல்ல ஆள் பிழைக்கட்டும்பா" என்று டாக்டர் ஆதங்கமாகவும் அதே சமயம் விநயமாகவும் விடையளித்தார்.

முப்பது முப்பத்தைந்து சேரிவாசிகள், ஊரில் நியாயம் கேட்கலாம் என்று எண்ணியதற்கு ஏற்ப, அருகே

இருந்த பள்ளிக்கூட கட்டிட மைதானத்தில் ஊர்க்காரர்கள் உட்கார்ந்திருந்தார்கள். முக்கியமான விவகாரத்தைப் பேசிக் கொண்டிருந்தார்கள். கருப்பசாமி அடிபட்டது பேச்சுக்குக் கூட வரவில்லை. அதைவிட முக்கியமான விஷயம், அந்த ஊர் அம்மன் திருவிழாவை எப்படி நடத்துவது என்ற விஷயம். கூட்டத்தில் பட்டுச்சாமி இருந்தார். கிருஷ்ணன், நல்லபெருமாள் இன்னும் பல கட்சிப்பிரமுகர்களும் ஒரு தாய் மக்கள்போல் உடனிருந்தார்கள்.

ஊர்வாசிகள் ஒட்டுமொத்தமாக இருந்ததாலோ, என்னவோ சேரிவாசிகள் தயங்கித் தயங்கி நடந்து, கூட்டத்துக்கு முன்னால் வந்து நின்றார்கள். பின்னால் ஒதுங்கி நிற்க வேண்டியவர்கள், நேருக்கு நேர் நிற்பதைப் பார்த்து, சிலர் விழியாட்டினார்கள். பெரிய மனிதர்கள், அவர்களைப் பொருட்படுத்தாதது போல், விவாதத்தைத் தொடர்ந்தார்கள். இந்த அலட்சியத்தை அலட்சியப்படுத்தியபடியே, குழந்தைவேலு இடைமறித்தான்.

''அம்மனுக்கு விழா எடுக்கறது பற்றி நீங்க பேசுற இந்தச் சமயத்துல, எங்க கருப்பசாமிக்கு, எப்படி எழவு எடுக்கதுன்னு கேக்க வந்திருக்கோம்.''

ஊர்ப் பிரமுகர்கள், அவனை ஒரு தினுசாகப் பார்த்தபோது, காசிராமன், பட்டுச்சாமியின் பார்வையில் முட்டி. நயம்படப் பேசினான்:

''ஒங்களுக்காவ உயிரையே கொடுக்கத் தயாரா இருக்கிற ஜனங்க நாங்க; எங்க கருப்பசாமி உயிர முத்துப்பாண்டி எடுக்காரு.''

நல்லபெருமாள் சூடாகக் கேட்டார்:

''எதுக்கும், கால நேரம் இல்லியா? இப்போ நாங்க அம்மனப்பத்திப் பேசுறதா? கையில காசு வந்துட்டுதுன்னு எங்க வீட்டுத் திண்ணையில கால வைக்கிற அற்பப் பயலைப் பத்திப் பேசுறதா?''

காசிராமன் திகைத்து நின்றபோது கூட்டத்துள் இருந்த முத்துப்பாண்டி எழுந்து, ''தராதரம் தெரியாம கூட்டத்துக்கு முன்னால நெஞ்சை நிமிர்த்திக்கிட்டு நிக்கற அளவுக்கு வந்தாச்சோ? ஒங்க எல்லாருக்கும் இனிமேல் செருப்படிதான் சரி'' என்றான்.

நல்லபெருமாளோ, கிருஷ்ணனோ பட்டுச்சாமியோ, முத்துப்பாண்டியைத் தடுக்கவில்லை. தப்பென்று தலையைக்கூட ஆட்டவில்லை. இதைப் பார்த்த குழந்தைவேலு, இடம், பொருள், ஏவலை மறந்து கத்தினான்.

''முத்துப்பாண்டி சொன்னது மாதிரி இவுங்கள தலைவர்கன்னு நம்புன நமக்கு அவரு சொன்ன அடிதான் சரி. புறப்படுங்க, டாக்டர்ட்ட சர்டிபிகேட் வாங்கி, போலீஸ்ல புகார் கொடுக்கலாம்.''

திடீரென்று நல்லபெருமாள் கர்ஜித்தார்.

''முத்துப்பாண்டின்னு பேர் சொல்ற அளவுக்கு ஒனக்குத் திமிரு வந்துட்டுதா என்ன? நீங்க சொன்னவுடனே சர்டிபிகேட் கிடைச்சுடுமா? சேரிப் பயலுவ பேச்சக் கேட்டு டாக்டர்பய சர்டிபிகேட் கொடுத்துட்டு உயிரோட இருக்க முடியுமா? ஒங்களை எல்லாம் முத்துப்பாண்டி சொன்னது மாதிரி....''

பட்டுச்சாமி பகிரங்கமாகச் சவால் விட்டார்.

''ஒங்களால போலீஸ்ல புகார்கொடுக்கணும் முன்னாக் கொடுத்துப் பாருங்க.. எந்தப் போலீசு இங்க வந்து முத்துப்பாண்டிய கூட்டிக்கிட்டுப் போறான்னு பாத்துடறேன்.''

காசிராமனும் முனியாண்டியும், அதிர்ந்து போனார்கள். தங்கள் தலைவர்கள், உதவி செய்வார்கள் என்று எதிர்பார்த்த அவர்களுக்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி. காசி தழுதழுத்த குரலில் பேசினான்:

''ஒங்களுக்காகவே ஊர் ஜனத்தையும் இந்த முனியாண்டியையும் பகைச்சு கொடி கட்டினவன் நான் ஒங்கள தலைவராய் ஏத்துக்கிட்டு ஒங்கள யாராவது குறை கூறினா அவங்கள அடிக்க துடிச்சவன் நான். என் காது கேட்கும்படி இப்படிப் பேசுறீங்களே, அய்யா இதுவாய்யா ஜனநாயகம்?''

கிருஷ்ணன் இறுதியாய்ப் பேசினார்:

''நீங்க சேரிக்காரங்கன்னு ஒண்ணாய்த் திரளும்போது நாங்க சாதிக்காரங்க ஒண்ணாப் பேசப்படாதோ? ஒன் கண்ணு உறுத்துதோ? எங்களுக்குள்ள ஆயிரம் கட்சி இருக்கும். அதுக்காக ஒங்களுக்கு வுட்டுக் கொடுக்கணுமா? ஒழுங்காய் இருக்கணுமுன்னா இருங்க. இல்லேன்னா சேரியையே பொசுக்க வேண்டியது வரும்.''

மிரண்டு போன காசிராமனும், முனியாண்டியும் பின்னால் நடக்க, சேரிவாசிகள் முன்னால் நடந்தார்கள். நிதர்சனத்தைப் புரிந்தவர்கள். 'போலீசுக்குப் போனால் அடிபடாம திரும்ப முடியாது. இந்தப் பெரும்பான்மைக்காரர்களைப் பகைத்து ஆகப் போவது ஒன்றும் இல்லை. அப்படிச் செல்வது தப்பு. சேரிக்குடிசைகளில் தீப்பிடிக்கலாம். கூலி வேலை தடைப்படலாம். ஊருக்கு வரும் ஒரே பாதையும் அடையலாம்.'

எல்லாரும் மௌனிகளாக அங்காளபரமேசுவரியின் ஆலயத்தின் முகப்புக்கு வந்தார்கள். எல்லாத் தலைவர்களும் அடித்தவன் பக்கம் என்பதை அறிய, அவர்கள் உடம்பெல்லாம் வலித்தது. இந்தச் சமயத்தில், அறுபதுவயது மூதாட்டி ஒருத்தி, கிராமத்திலிருந்து ஓலைப் பாய் ஒன்றைச் சுருட்டிய படி, இரண்டு மண் பாத்திரங்களைக் கக்கத்தில் வைத்தபடி வந்தாள். கோபங் கொண்ட அந்த கூட்டத்திடமே நியாயம் கேட்டாள்.

''ஊருக்குப் புறம்பா ரத்தினம் தோட்டத்துல குடிசை போட்டுப் பத்து வருசமா இருக்கேன். அவரு நிலத்தை இனிமே என்னால கவனிக்கவும் முடியாது. அந்தக் குடிசையும் இப்போ இல்ல. 'இந்த முத்துப்பாண்டி கையில கரையான் அரிக்க, எங்க கருப்பசாமியை இப்படியா அடிக்கறது'ன்னு சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னேன். ரத்னம் மவராசன் சேரில போய் இருன்னு சொல்லி, இந்தப் பானையையும் பாத்திரத்தையும் தூக்கிப் போட்டுட்டாரு வெளியில. எனக்குன்னு இங்க வீடு இல்ல. இப்போ நான் எங்கே இருக்கறது? வீடு இல்லியே?''

எல்லாரும் அந்த முதியவளையே உற்றுப் பார்த்தபோது, காசிராமன், கொடிக் கம்பத்தை நோக்கிப் போனான். ஆவேசமாக நடந்தான். பட்டுச்சாமியால் எந்தக் கட்சிக் கொடி ஏற்றி வைக்கப் பட்டதோ, அதன் கயிற்றைக் கழற்றிக் கீழே இழுத்தான்; அவன் வேலை முடிந்த திருப்தியில் கூட்டத்தோடு சேர்ந்தபோது, முனியாண்டி நடந்தான். தன் கட்சிக் கொடியை இறக்கினான். ஒவ்வொருவருமாக ஒன்பது கொடிகளையும் இறக்கினார்கள். ஏதோ மாபெரும் துக்கம் அநுஷ்டிக்கப்படுவது போல் அத்தனை கொடிகளும் அரைக் கம்பத்தில் அல்ல, அந்தப் புழுதித் தரையில் தாறுமாறாகக் கிடந்தன. துணிக் காய்ச்சி மரம் விதவையானது போல் மொட்டையாக நின்றது.

குழந்தைவேலு தோட்டத்தில் இருந்து துரத்தப்பட்ட அந்த முதியவளை உற்று உற்றுப் பார்த்தான். பிறகு கையில் இருந்த ஒரு புத்தகத்தைப் பிரித்தான். தாழ்த்தப்பட்ட குலத்தில் பிறந்த மராத்திக் கவிஞர் சவ்டேகர் எழுதிய கவிதையின் தமிழ் மொழிபெயர்ப்பை எல்லாருக்கும் புரியும்படி படித்தான்.

படித்தான் என்பதைவிடக் கத்தினான் என்று சொல்லலாம்.

: தாய்நாடு தாய்நாடு என்று
வாய்கிழியப் பேசுவோரே —
இங்கே
என் தாய் இருப்பதற்கு இட
மிருக்கோ?
பொன்னாடு பொன்னாடு என்று
புலம்புகின்ற தலைவர்களே! —
எங்களுக்கு
மண் சட்டி தந்த மர்மமென்ன?
சொல்வீரா?''

குழந்தைவேலு மாறி மாறிப் படித்தான். அவன் படிக்கப் படிக்கக் கூட்டத்தினர் அவனையும் சுற்றுப் புறத்தையும் திரும்பித் திரும்பிப் பார்த்தார்கள். கையறு நிலையோ? கட்டவிழ்க்கும் வேகமோ? இருட்டில் நின்ற அவர்களின் மனோநிலை ஆண்டவனுக்கே வெளிச்சம். ❋

அழகியின் துறவு

போதிசத்துவரின் அருள் மொழியைக் கேட்டு மனம் மாறி, உலக இன்பங்களையும் பொருளையும் துறந்து வைராக்கியச் சித்தராகப் புத்தரின் திருவடிகளைச் சார்ந்த பக்தர்கள் பலர்.

புராதன வைசாலி நகரை லிச்சவி என்ற மலை ஜாதியினர் ஆண்டு வந்தார்கள். இவர்கள் தோட்டக் கலையில் வல்லவர்கள். அழகும் மணமும் பொருந்திய மலர்ச் செடிகளை வளர்த்து, நந்தவனம் ஒன்றை உருவாக்கியிருந்தார்கள்.

இந்த நந்தவனத்தில் பழ மரங்கள் பல இருந்தன. ஒரு நாள் மாமரத்தின் அடியில், ஓர் அழகிய இளநங்கை நிற்பதைப் பார்த்தனர், தோட்டத்துப் பணியாளர்கள். காய்த்துக் குலுங்கும் மாங்கனிகளைப் பார்த்து வியந்தபடி நின்றாள், அந்த எழில் மங்கை. அந்தப் பணியாளர்கள், அந்த அழகியைப் பற்றி அரண்மனையில் போய்ச் சொன்னார்கள். மன்னனும் பிரபுக்களும் ரதத்தில் நந்தவனத்துக்கு வந்து, அவள் எழிலைக் கண்டு வியந்தனர். அவளை அரண்மனைக்கு இட்டுச் சென்றனர்.

அந்த அழகியை மணப்பதில் அவர்களுக்குள் போட்டி ஏற்பட்டது. புத்திசாலியான அவள், ''உங்களில் யாரையும் திருமணம் செய்துகொள்ள மாட்டேன். யாராவது ஒருவரை மணந்து கொண்டால் உங்களுக்குள் சண்டை ஏற்பட்டு நாடே அழிந்துவிடும்'' என்று கூறுகிறாள். இந்தக் கருத்தை எல்லாரும் ஏற்று, அவளை 'வைசாலி நகரத்துக்கே சொந்தமானவள்' என்று ஏற்றுக்கொள்கின்றனர். அந்த நந்தவனத்திலேயே அவளுக்கு மாளிகையும் கட்டித் தருகிறார்கள். மாமரத்தின் அடியில் அவளைக் கண்டதால் 'ஆம்ரபாலி' என்று மக்கள் அழைக்கத் தொடங்கினர்.

நந்தவனத்து மாளிகையில் வசிக்கத் தொடங்கிய ஆம்ரபாலி, தெரிந்திருந்த நடனக்கலையை மேலும் பயின்று, வைசாலி நகர ஆஸ்தான நர்த்தகியாக விளங்கினாள்.

ஒரு நாள், நடனம் நடந்துகொண்டிருந்தபோது ஓர் ஒற்றன் ஓடிவந்து, ''மகத பூபதி பெரும் படையுடன் வைசாலியை நோக்கி வருகிறார்'' என்று கூறுகிறான். ''அப்படியா! பிம்பிசாரனுக்குப் புத்தி புகட்டி விரட்டி அனுப்புவோம்'' என்று வீரசபதம் ஏற்று, எல்லாரும் யுத்தத்துக்குப் புறப்படுகின்றனர். 'அழகையும் கலையையும் ரசிக்கும் இவர்கள், இரத்தவெறி பிடித்தவர்களாக இருக்கிறார்களே?' என்று வருந்தினாள் ஆம்ரபாலி.

மறுநாள் நந்தவன மாளிகையில், மன அமைதிக்காக யாழை மீட்டியபடி பாடிக்கொண்டிருந்தாள் ஆம்ரபாலி. திடீரென்று ஒருவன் தோன்றி, ''உன் எழிலுக்கும் கந்தர்வ கானத்துக்கும் நான் அடிமை. வைசாலி நாடு உன்னால்தான் பெருமையடைந்திருக்கிறது: கலாராணியே!'' என்று புகழ்ந்தான்.

''தாங்கள் யார்?''

''எனக்கென்று இடம் இல்லாமல்தான் தவிக்கிறேன். உன் மனத்தில் இடம் கிடைத்தால் மகிழ்வேன்'' என்றான் அந்த ஆணழகன்.

தனிமை வாழ்விலும் ரசனை இல்லாத மக்களிடையே வசித்து வந்த அலுப்பும் அவளுக்கு. ஆணழகனுக்கு உள்ளத்தில் மட்டும் அல்ல, அந்தப்புரத்திலும் இடம் அளிக்கிறாள் ஆம்ரபாலி.

ஒரு பட்சம் தங்கி மகிழ்ந்த ஆணழகன், 'பெற்றோர் சம்மதத்துடன் வந்து, அழைத்துப் போய் மணக்கிறேன்' என்று கூறிப் பிரியா விடை பெற்றுத் திரும்புகிறான்.

ஊர் திரும்பிய காதலனிடமிருந்து சில மாதங்களாகியும் ஒரு செய்தியும் இல்லை. தாக்கமின்றி வருந்துகிறாள் அழகி. இவளுடைய நிலையைப்பற்றிச் சில தோழிகள் லிச்சவி அரண்மனையில் சொல்லி விடுகிறார்கள். விஷயமறிந்த லிச்சவித் தலைவர்கள் கொதித்தெழுகிறார்கள்.

இதற்கிடையே கார்காலத்தில், வழக்கம்போல் பொம்மலாட்ட விழாத் தொடங்குகிறது. அந்த ஆட்டத்தில், லிச்சவிகள், 'ஆம்ரபாலி-பிம்பிசாரன்' காதலையே சதையாக்கிக் காட்டுகிறார்கள். மக்கள் திரளாக வந்து பார்க்கிறார்கள். ஆம்ரபாலியும் கண்டு களிக்கிறாள். பொம்மலாட்ட நிகழ்ச்சியின் முடிவில், 'ஆம்ரபாலியைக் காதலித்தவன் பிம்பிசாரன்தான்' என்று காட்டப்படுகிறது. அதைக் கண்டதும் ஆம்ரபாலி மூர்ச்சித்து விழுகிறாள். மாளிகைக்கு எடுத்து வந்து சிகிச்சை அளிக்கின்றனர்.

சில நாட்கள் கழிகின்றன. பொம்மலாட்ட நிகழ்ச்சியைப்பற்றி அறிந்த பிம்பிசாரன், மாறுவேடத்தில் ஒரு நாள் இரவு, மாளிகையில் ஆம்ரபாலியைச் சந்திக்கிறான். தன்னை மணந்தால் போரை நிறுத்திவிடுவதாகவும், ஆம்ரபாலியின் சூலில் வளரும் குழந்தையே மகத நாடாளுவான் என்றும் கூறுகிறான். 'தான் வைசாலிக்கே சொந்தமானவள்' என்று கூறி அவனை நிராகரித்து விடுகிறாள். மனமாற்றம் அடைந்து போரை நிறுத்தி விடுகிறான் பிம்பிசாரன்.

எதிர்பாராத இந்த நடவடிக்கை லிச்சவி பிரபுக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது. பிம்பிசாரனின் மன மாற்றத்தைக் கூறி, அவளை நடனமாடும்படி வேண்டுகின்றனர். ஆம்ரபாலி நடனம் ஆடுகிறாள். ஆனால் அதில் உயிர் இல்லை. காரணம் நிறைமாதச் சூல் அவளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறக்கிறது.

ஒரு நாள் வியாகூலத்துடன் தாமரைப் பொய்கைக் கரையில் உட்கார்ந்திருக்கிறாள் ஆம்ரபாலி. அழகான தாமரை மலர் ஒன்றை ஒருவர் எடுத்துச் செல்கிறார். தாமரையின் அழகில் மயங்கிய ஆம்ரபாலி, அந்த மலரைத் தனக்குத் தரும்படி வேண்டுகிறாள். ஆனால் அந்த மனிதரோ, ''புத்த பகவான் வைசாலியில் எழுந்தருளியிருக்கிறாரே! உங்களுக்குத் தெரியாதா? பூஜைக்காக எடுத்துச் செல்கிறேன்'' என்கிறார்.

புத்த பகவான் வந்திருக்கிறாரா? அவள் உள்ளத்திலும் உடலிலும் புத்துணர்ச்சி பரவுகிறது. மனத்துக் கவலையெல்லாம் போன இடம் தெரியவில்லை. தாயைக் காணப் போகும் கன்றுபோல், போதிகிருகம் என்ற மரத்தடிக்குப் போய்க் கருணாமூர்த்தியைத் தரிசிக்கிறாள். புத்தரின் அருள்மொழிகள் அமுதமாக அவள் உள்ளத்தைக் குளிர்விக்கின்றன.

புத்தரை வணங்குகிறாள் ஆம்ரபாலி.

''குழந்தாய், என்ன சோகம் முகத்தில்?''

''பிரபோ, நான் அபலை. வாழ்க்கையில் ஏமாந்தவள். தாங்கள் இந்த ஏழையின் குடிலுக்கு வந்து, உணவு உண்டால், என் வாழ்வு புனிதமடையும். வருவீர்களா, பிரபு?''

''வருகிறேன், குழந்தாய். செய்த தவறை உணர்ந்து வருந்தினால் அதுவே வாழ்வைப் புனிதப்படுத்தி விடும்'' என்று கூறி அருளுகிறார் ததாகதர்.

பிரபுக்கள் புத்தரை அரண்மனைக்கு அழைக்கிறார்கள். ஆனால் கௌதமர் அரண்மனை அழைப்பை ஏற்றுக்கொள்ளாமல், ஆம்ரபாலியின் இல்லத்துக்கு மறுநாள் வருகிறார். அந்தக் கருணாமூர்த்தியிடம், தன்னை ஒப்படைத்து, பிட்சுணியாகித் தவவாழ்வு மேற்கொள்கிறாள் ஆம்ரபாலி.

புத்தம் சரணம் கச்சாமி; தம்மம் சரணம் கச்சாமி; சங்கம் சரணம் கச்சாமி.

[இந்தக் கதையை வண்ணத்தில் அடுத்துக் காண்கிறீர்கள்.]


கலைமகள்
தீபாவளி மலர் '82



லதா

நா. மகாலிங்கம்

பாரதி வளர்த்த சமுதாய இயக்கம்

பாரதியாரை ஒரு தேசிய கவி என்றும், மகாகவி என்றுந்தான் உலகம் தெரிந்து வைத்திருக்கிறது. பாரதியார் கவிஞர் மட்டும் அல்ல. நல்ல இசைவாணர், இனிமையான குரல் வளம் படைத்த இசைமேதை. மிகச் சிறந்த தமிழ் எழுத்தாளர், ஆங்கில எழுத்தாளர். தமிழ் உரை நடையில் புதிய சுவை, பொருள் பொதிந்த புதிய சொற்கள், வளமான சொற்றொடர்கள் முதலியவற்றை வழங்கி அவர் ஆற்றியிருக்கும் தொண்டு மகத்தானது.

தமிழ் உரைநடை வளர்ச்சியின் வரலாற்றில் பாரதியின் பணி சிறப்பாகக் குறிப்பிட்டுப் போற்ற வேண்டிய ஒன்றாகும். இவற்றுக்கு எல்லாம் மேலாகப் பாரதி தமிழ்ப் பத்திரிகை உலகுக்கும், தமிழ்நாட்டில் இங்கிலீஷ் பத்திரிகை வளர்ச்சிக்கும் ஆற்றியிருக்கும் தொண்டைப் பற்றி இந்தக் காலப் பத்திரிகையாளர் பலருக்குத் தெரியாது.

பாரதியார் 1904-ஆம் ஆண்டில் பத்திரிகைத் தொழிலில் ஈடுபடத் தொடங்கினார். அதிலிருந்து 1921-ஆம் ஆண்டு வரை பதினேழு ஆண்டுகள், தாம் உயிருடன் வாழ்ந்தகாலம் முழுவதும் பத்திரிகையாளராகவே வாழ்ந்தார். தாம் வாழ்ந்த 39 ஆண்டுகளில் ஏறக்குறைய இருபது ஆண்டுகள் கல்வி கற்பதில், தமிழ் நாட்டிலும், காசியிலுமாகத் தம் காலத்தைக் கடத்தியிருக்கிறார்.

கல்வி கற்ற காலம் போக, மற்றக் காலம் எல்லாம் பத்திரிகைத் தொழிலுடனேயே தொடர்பு கொண்டு அதன் வளர்ச்சிக்காகவே வாழ்ந்திருக்கிறார்.

'எழுதுகோல் தெய்வம், இந்த எழுத்தும் தெய்வம்' என்பது மகாகவி பாரதியின் வாக்கு. இது வெறும் உணர்ச்சியினால் பாடிய பாடல் அல்ல, அவருடைய வாழ்க்கையின் குறிக்கோளே அதுதான்.

லோகமான்ய பாலகங்காதர திலகர், அரவிந்தர், காந்தி அடிகள், விபின் சந்திரபாலர், அன்னிபெசன்ட், திரு.வி.க. ஆகியவர்களைப் போல் பாரதியாரும் மிகச் சிறந்த பத்திரிகையாளர்.

இவர்கள் எல்லாரும் இந்திய நாட்டின் விடுதலைக்குப் பத்திரிகைகள் மூலமாகப் போராடியவர்கள். அதற்காகவே பத்திரிகைகளை ஆரம்பித்தவர்கள். பல கஷ்டங்களுக்கும், நஷ்டங்களுக்கும் மத்தியில் பத்திரிகைகளைத் தொடர்ந்து நடத்தியவர்கள். பத்திரிகை மூலமாகத் தேச பக்தியையும், சமுதாயத்தில் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்திய மிகச் சிறந்த உத்தமமான பத்திரிகையாளர்கள். இந்தியப் பத்திரிகை உலகம் இந்த மகான்களை நினைவில் வைத்துப் போற்றி வரவேண்டும்.

இவர்களில் பாரதியைத் தவிர, மற்றவர்கள் எல்லாம் முதலில் தீவிரமான அரசியல்வாதிகள்தாம். பாரதியாரோ தெளிவான அரசியல் கருத்தைக் கொண்டிருந்தவர். எழுத்தையே தொழிலாகக் கொண்டு வாழ்ந்தவர். எழுத்துக்காகவே வாழ்ந்த தமிழ் எழுத்தாளர்.

'இந்தியா' என்ற ஒரு தமிழ் வார இதழின் ஆசிரியராகப் பாரதி இருந்தார். மிகச் சிறந்த முறையில் இந்தப் பத்திரிகையில் பணி ஆற்றினார்.

''சுதேசமித்திரனி''ல் துணை ஆசிரியராகப் பல ஆண்டுகள் உழைத்தார். வெளியிலிருந்தும் சுதேசமித்திரனுக்குத் தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்தார்.

''பால பாரதம்'' அல்லது ''யங் இந்தியா'' என்பது ஆங்கில வார இதழ். அவ்வப்போது இந்த இதழில் பாரதி கனல் தெறிக்கும் அரசியல் கட்டுரைகளும், புரட்சிகரமான சமுதாயச் சீர்திருத்தக் கட்டுரைகளும் எழுதி வந்தார். தமிழை ஆற்றலுடன் கையாளுவது போலவே, ஆங்கிலத்தையும் ஆற்றலுடன் கையாளும் வன்மை பெற்றவர் பாரதி.

''சக்கரவர்த்தினி'' என்பது ஒரு தமிழ் மாத இதழ். இதன் ஆசிரியராகப் பாரதியார் பணியாற்றினார். இதில் பெண் உரிமைகளை வற்புறுத்துவதற்காகவும் கற்பு நிலையை இருகட்சிக்கும் பொதுவில் வைப்பதற்காகவும், சமுதாயத்தில் பெண்கள் சுதந்தரமாக வாழ்வதற்காகவும் பாரதியார் அற்புதமான கவிதைகளையும் கட்டுரைகளையும் எழுதிக் குவித்தார்.

''கர்மயோகி'' தமிழ் மாத இதழ். மக்களுக்கு வேதாந்தக் கருத்துக்களை ஊட்டுவதற்காகப் பாரதியார் தாமே ஆரம்பித்த பத்திரிகை. பகவத்கீதையைத் தமிழாக்கம் செய்த முதல் முயற்சியை இந்தப் பத்திரிகையில்தான் பாரதி தொடங்கினார்.

''விஜயா'' — தமிழ் நாள் இதழ். பாரதியார் சில ஆண்டுகள் இதன் ஆசிரியராக இருந்து சிறப்பாகப் பணியாற்றினார்.

''சூரியோதயம்'' — பாரதியார் தாமே ஆரம்பித்து நடத்தி வந்த தமிழ் வார இதழ். வார இதழ் எப்படி நடத்தவேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்கிய அருமையான இலக்கிய ஏடு.

'சித்ராவளி', 'அமிர்தம்' என்ற பெயரில் இரண்டு பத்திரிகைகளை ஆரம்பிப்பதற்கு வேறு திட்டம் தீட்டி இருந்தார்.

தமிழ்ப் பத்திரிகை உலகுடன், பாரதிக்கு முதலில் கவிதை எழுது

வதன் மூலமாகத்தான் தொடர்பு ஏற்பட்டது.

பாரதியார் எட்டயபுரத்தில் இருந்தபோது 1904-ஆம் ஆண்டு பத்திரிகைக்குக் கவிதைகள் எழுத ஆரம்பித்தார். அவருடைய முதல் கவிதை ''தனிமை இரக்கம்'' என்ற பெயரில் 1904-ஆம் ஆண்டு ஜூலை மாதம் மதுரையிலிருந்து வெளிவந்த 'விவேகபாநு' என்ற மாத இதழில் வெளியாயிற்று.

இதற்குச் சில மாதங்களுக்குப் பின் பாரதி மதுரைக்கே வந்துவிட்டார். மதுரையில் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் மூன்று மாதங்கள் பாரதியார் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். சுயமாகச் சிந்திக்கும் ஆற்றல் உள்ள பாரதியாரால் கிளிப்பிள்ளைபோல் மாணவர்களுக்குச் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கும் தமிழ் ஆசிரியராகப் பணியாற்ற முடியவில்லை. அதிலிருந்து விலகினார்.

தமிழ்ப் பத்திரிகை உலகின் தந்தை என்று போற்ற வேண்டியவர் திரு ஜி. சுப்பிரமணிய ஐயர் அவர்கள். பத்திரிகைத் தொழிலுக்கு அடிகோலிய உத்தமர் அவர்.

திரு சுப்பிரமணிய ஐயர் இல்லையானால் சுதேசமித்திரன், இந்து போன்ற பத்திரிகைகளே தோன்றி இருக்க முடியாது. தமிழ் நாட்டின் அரசியல் எழுச்சிக்கும், சமுதாயப் புரட்சிக்கும் வித்திட்ட மாமேதை இவர்.

தமிழ் நாட்டில் தேச பக்தியையும், அன்றாட முக்கிய செய்திகளையும் தமிழ் மக்களுக்குத் தெரிவிப்பதற்காகவே பத்திரிகையை ஆரம்பித்த மிகச் சிறந்த சமுதாய சீர்திருத்தவாதி திரு ஜி. சுப்பிரமணிய ஐயர் அவர்கள். அந்த நாளிலேயே தம் விதவை மகளுக்கு முதல் முதல் பொது மேடையில் சீர்திருத்தத் திருமணம் செய்து தம் அருமை மகள் வாழ்க்கையில் விளக்கு ஏற்றி வைத்த தீரர்.

திரு ஜி. சுப்பிரமணிய ஐயர் நடத்திய சுதேசமித்திரன் பத்திரிகையில் பாரதியார் 1904-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் துணை ஆசிரியராகச் சேர்ந்தார்.

பத்திரிகைத் தொழிலின் நுணுக்கங்களையும் அதன் விந்தைகளையும், உத்திகளையும் பாரதியார் சுதேசமித்திரனில்தான் பயின்றார்.

அந்த நாளில் அரசியல் உயர்ந்த குறிக்கோளுடன் செயல்பட்டது. அரசியலையே தொழிலாக மேற்கொண்டவர்கள் அரசியல்வாதிகளாக இல்லாத காலம். தேச பக்தியையும், தெய்வ பக்தியையும் ஒன்றாக எண்ணிய உத்தமர்கள் அரசியலுக்காகப் பணி புரிந்த காலம். அரசியலுக்காகவே தங்களைத் தியாகம் செய்துகொண்டிருந்த புனிதர்கள் வாழ்ந்த காலம். அரசியல்வாதிகளை ஒழுக்க சீலர்களாக மக்கள் போற்றிய காலம்.

தாதாபாய் நௌரோஜி, விபின் சந்திரபாலர், சுவாமி விவேகாநந்தர் போன்றோர்களின் வீராவேசம் கொண்ட தேச பக்தியை ஊட்டும் சொற்பொழிவுகள் மக்களைத் தட்டி எழுப்பிக்கொண்டிருந்த காலம். அவர்கள் சொற்பொழிவுகள் எல்லாம் ஆங்கிலத்தில்தான் இருக்கும்.

அந்தச் சக்தி வாய்ந்த ஆங்கிலச் சொற்பொழிவுகளைத் தமிழாக்கம் செய்யும் வேலைதான் பாரதியார் செய்த முதல் பத்திரிகைப் பணி.

செய்திகளையும், அரசியல் நிகழ்ச்சிகளையும் தமிழில் மொழிபெயர்ப்பது அந்தக் காலத்தில் அவ்வளவு எளிதல்ல. அது ஒரு தனிக்கலை ஆகும்.

ஆங்கில மொழியில் வழங்கும் ஆற்றல் மிக்க சொற்றொடர்கள், உருவகங்கள், பிற அணிகள், வாக்குச் சாதுரியம் முதலியவற்றை அதன் சுவை, உணர்ச்சிகள், பொருள், ஆகியவற்றின் வேகம் கெட்டுப் போகாமல் உடனுக்குடன் தமிழில் கொண்டு வரவேண்டும்.

இதற்கு வெறும் ஆங்கில அறிவு மட்டும் போதாது. ஆங்கிலமும் தெரிய வேண்டும், தமிழும் தெரியவேண்டும். வேறு பல இந்திய மொழிகளும் தெரிய வேண்டும். தமிழ் நாட்டின், பாரதத்தின் பண்பாடும் தெரியவேண்டும். தெய்வ பக்தியுடன் தேச பக்தியும் வேண்டும். இவ்வளவும் ஒருவருக்கு இருந்தால்தான் அந்த நாளில் நமது தலைவர்கள் ஆங்கிலத்தில் ஆற்றிய சொற்பொழிவுகளை அதன் ஆற்றலுடன் சுவை குன்றாமல் தமிழாக்க முடியும்.

முன் இரவில் தலைவர்கள் பேசிய பேச்சுக்களை எல்லாம் பொழுது புலர்வதற்குள் தமிழாக்கம் செய்து அச்சுக்குக் கொடுத்தாக வேண்டும். அவற்றை மாலைத் தமிழ்ப் பத்திரிகையில் வெளியாகச் செய்யவும் வேண்டும்.

திரு ஜி. சுப்பிரமணிய ஐயர் பாரதியிடம் இந்த வேலையை ஒப்புவித்தார். தேசியத் தலைவர்கள் பேச்சின் ஜீவகளை சிதையாமல், துடிதுடிப்புடனும் ஆற்றலுடனும் மிளிரும் அவருடைய சக்திவாய்ந்த தமிழாக்கத்தைப் பாராட்டினார். அவரை அதில் மேலும் ஊக்குவித்தார்.

பாரதிக்கும் இந்தத் தொழில் மிகவும் பிடித்திருந்தது. அவர் அதை உற்சாகத்துடன் செய்தார். தேசப்பணியாகவே கருதிச் செய்தார்.

இன்று தமிழில் உள்ள ஏராளமான அரசியல் கலைச் சொற்கள் பாரதி தமிழுக்குத் தாமே உருவாக்கிக் கொடுத்த சுவைமிக்க புதிய சொற்களாகும்.

பாரதி, வெறும் மொழிபெயர்ப்பாளராக மட்டும் சுதேசமித்திரனில் இருக்கவில்லை. தேசியப் போராட்டத்தின் விளைவாக எழுந்த புதிய சொத்தான தேசபக்தியுடன், பாரதப் பண்பாட்டின் மரபு வழிச் சொத்தான தெய்வ பக்தியையும், மொழிப் பற்றையும் அருமையான கவிகள் மூலமும் அற்புதமான உரைநடை இலக்கியங்கள் மூலமாகவும் மக்களுக்கு வழங்கி வந்தவர் பாரதியார். அத்துடன் அன்றைய அரசியலிலும் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கினார். தாமே அரசியலில் பங்கு கொண்டும் உழைத்தார்.

திலகர், விபின் சந்திரபாலர், வ. உ. சிதம்பரனார் ஆகிய தலைவர்களின் தீவிர தேசியத்தில் பாரதி மிகுந்த உற்சாகத்துடன் ஈடுபட்டார். தாமே அரசியல் கூட்டங்களை நடத்தினார். அவர்களுடைய கருத்துக்களை மக்களிடையே பரப்பினார். மாலைதோறும் பொதுக்கூட்டங்களில் பேசினார். மக்களுடன் நெருங்கிப் பழகினார். அதற்கு ஏற்ப எழுதி அவர்களைச் சுதந்தரப் போருக்கு உருவாக்கி வந்தார். உணர்ச்சி அற்ற மண்ணுங்கட்டிகளைத் தீரமிக்க மனிதர்களாக்கினார்.

அப்போது வெளி வந்த பால பாரதம் என்னும் ஆங்கில இதழில் தமது அரசியல் கருத்துக்களை எழுதினார். பிரிட்டிஷ் ஏகாதிபத்திய தாசர்களுடைய வாதங்களை நொறுக்கித் தள்ளிய கனல் கக்கும் அரசியல் கட்டுரைகள் அவை.

பாரதியாருடைய சக்தி வாய்ந்த ஆங்கில நடையும், அதில் இருந்த வாதத் திறமையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய தாசர்களின் வாதங்களைத் தவிடு பொடியாக்கின.

பாரதியாரின் ஆங்கிலக் கட்டுரைகளைப் படித்த மண்டயம் சகோதரர்கள் பாரதியைத் தாம் நடத்தி வந்த, 'இந்தியா' என்னும் தமிழ் வார இதழுக்கு ஆசிரியர் ஆக்கினார்கள்.

மண்டயம் சகோதரர்கள் என்று புகழ்பெற்ற தேசபக்த வீரர்கள் திருமலாசாரி, சீனிவாசாசாரி என்பவர்கள்.

இந்தச் சகோதரர்கள் தேச விடுதலைக்காகவும், பத்திரிகைத் துறைக்கும் ஆற்றிய தொண்டை நன்றியுள்ள தமிழகம் போற்றிக் காப்பாற்ற வேண்டும்.

'இந்தியா' பத்திரிகையில் பாரதியார் பத்திரிகைத் தொழிலின் எல்லா உத்திகளையும் கையாண்டார்.

திறமைமிக்க மொழிபெயர்ப்பாளராக, சக்தி வாய்ந்த தலையங்கம் எழுதுபவராக, உணர்ச்சியூட்டும் கவிஞராக, சிறுகதை ஆசிரியராக, நாவல் ஆசிரியராக, ஆற்றல் மிக்க சமுதாய சீர்திருத்தக் கட்டுரைகள் எழுதும் எழுத்தாளராக, வளம் தரும் பத்திரிகையாளராகவும் விளங்கினார்.

'இந்தியா' என்ற பத்திரிகை பாரதியாரை ஆசிரியராகக் கொண்டவுடன் தமிழ்ப் பத்திரிகைத் துறையில் ஒரு புதிய உத்வேகத்தை ஏற்படுத்தியது. பத்திரிகைத் தமிழில் அது மகத்தான புரட்சியைக் கொண்டு வந்தது. பாமரர்களும் படித்தவர்களும் புரிந்து கொள்ளும் எளிய, இனிய சக்தி வாய்ந்த தமிழ் உரைநடையைப் பாரதி உருவாக்கினார்.

இதனால் பாரதியின் 'இந்தியா' பத்திரிகை எல்லாத் தமிழ் மக்களும் விரும்பிப் படிக்கும் பத்திரிகை ஆயிற்று.

சாதாரண மக்களுடன் நேருக்கு நேராகப் பேசுவதுபோல் எழுதினார். கொச்சை வார்த்தைகள் இல்லாமல் பேசும் இனிய தமிழ் நடையில் எழு

தினார். இதனால் பாரதி எழுதிய கட்டுரைகள் தமிழ் மக்களை எல்லாத் துறையிலும் உயர்த்தக் கூடியவையாக இருந்தன.

"பேசுவதுபோலத் தமிழை எழுத வேண்டும் என்றால் தமிழ் நாட்டின் எந்த மாவட்டத்துத் தமிழை எழுதுவது?" என்று இன்றுகூடச் சிலர் கேலி பேசுகிறார்கள்: இதற்கெல்லாம் பாரதி அன்றே வழி கண்டவர்.

எல்லாத் தமிழ் மாவட்டத்துக்காரர்களும் பேசுகின்ற மொழி தமிழ் தான். ஆனால் மாவட்டத்துக்கு மாவட்டம் அந்த அந்த மாவட்டத்துக்கு என்று சில சிறப்பு வழக்குச் சொல் இருக்கும். அதை உபயோகிப்பதால் உயிர் ஓட்டம் இருக்கும். அதில் மகத்தான ஆற்றலும் இருக்கும்.

அந்த ஆற்றல் மிக்க வழக்குச் சொற்களையும் இலக்கிய நயத்துடன் எளிமையாகச் சொன்னால் எல்லாரும் புரிந்து கொள்வார்கள். தமிழ் சுவை பெற்று மேலும் மேலும் வளரும். இதுதான் பேசுவதுபோல் எழுதுகிற தமிழ். உயிர்த் துடிப்புள்ள தமிழ். பேச்சுத் தமிழ் என்றால் இலக்கிய நயமுள்ள எளிய தமிழ் என்றுதான் பொருள்.

பல்லை உடைக்கும் பண்டிதத் தமிழும் அல்ல, பாமரர்கள் பேசும் கொச்சைத் தமிழும் அல்ல. இதை நன்கு உணர்ந்த பாரதி தமிழ் உரைநடையில் ஒரு புது வேகத்தையும், உயிர்த் துடிப்பையும் எளிமையையும் புகுத்தினார். எல்லாரும் பேசுகின்ற பேச்சுத் தமிழையே இலக்கணப் படுத்தி இலக்கிய நயம் கொஞ்சும்படி எழுதினார். இவ்வாறு தமிழ் உரைநடையில் புரட்சி செய்த தமிழ் எழுத்தாளர் பாரதியார்.

தமிழ்ப் பத்திரிகை உலகில் அரசியல் கார்ட்டூன்களை, அதாவது கேலிச் சித்திரங்களை வெளியிட்டு மக்களை அரசியல் அறிவு பெறவும் அதைச் செயல்படுத்தும் உணர்வைப் பெறவும் தூண்டியவர் பாரதியார்.

பல பக்கங்களைக் கொண்ட ஓர் அரசியல் கட்டுரை செய்கிற சாதனையை அரைப்பக்க அரசியல் 'கார்ட்டூன்' கேலிச் சித்திரத்தின் மூலமாக விளக்கிக் காட்டும் வித்தகத்தைத் தமிழ்ப் பத்திரிகைத் துறையில் முதல் முதலில் புகுத்தியவர் பாரதியார்.

தமது 'இந்தியா' பத்திரிகையில் 1908-ஆம் ஆண்டில் பாரதி எழுதுகிறார் : "தென் ஆப்பிரிக்க இந்தியர்களுக்கு உதவ ஒரு இந்திய பாரிஸ்டர் பெரும் முயற்சி செய்துவருகிறார்.

"எதிர்காலத்தில் இந்தப் பாரிஸ்டர் இந்தியாவின் தலைமைப் பொறுப்பை ஏற்கப்போகிறார்" என்று மகாத்மா காந்தியைப்பற்றி அப்போதே இனங் கண்டு எழுதிய முதல் இந்தியப் பத்திரிகையாளர் பாரதியார்.

காந்தி அடிகளைப் பசுவாகவும், தென்னாப்பிரிக்க அரசை அப் பசுவை விழுங்கத் துடிக்கும் வெறிபிடித்த புலியாகவும் சித்திரிக்கும் கார்ட்டூன் படத்தை 'இந்தியா' பத்திரிகையின் முகப்பு அட்டையில் வெளியிட்டவர் பாரதியார்.

காந்தி அடிகளின் முயற்சிக்கு இந்தியா பத்திரிகையின் மூலமாக நிதி திரட்டி அளித்தார் பாரதி. அந்த நிதிக்குத் தாமே ஐந்து ரூபாய் பணமும் கொடுத்து நிதியைத் தொடங்கியும் வைத்திருக்கிறார். மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி' என்று தமிழ்ப் பத்திரிகைகள் எழுதி வந்தபோது 'மகாத்மா' என்று எழுதிப் போற்றிய முதல் தமிழ் எழுத்தாளர், பத்திரிகையாளர் பாரதியார்.

நம்மிடையே இப்போது பெரும்பாலும் வெறும் அகராதிச் சொற்களை அடுக்குபவர்கள் எல்லாம் கவிஞர்களாக இருக்கிறார்கள். அடுக்குச் சொற்களை எழுதுபவர்கள் எல்லாம் எழுத்தாளர்களாக இருக்கிறார்கள். மக்களின் உள்ள உணர்ச்சிகளை, சமுதாயத்தின் சிர்கேடுகளை, அரசின் மெத்தனத்தை இடித்துக் காட்டி விழிப்படையச் செய்யும் உணர்ச்சி மிக்க கவிஞர்களையோ ஆற்றல் மிக்க எழுத்தாளர்களையோ இப்போது தமிழ்ப் பத்திரிகை உலகில் அவ்வளவாகக் காண முடியவில்லை. 'இந்தியா' பத்திரிகையில் பாரதி

—பாரதியார் படம்: ஆர்யா

யார் எழுதிய ''சுதந்தர தாகம்' என்ற தலையங்கமும் அதை ஒட்டி அவர் இயற்றிய, ''என்று தணியும் இந்தச் சுதந்தர தாகம்!'' என்ற கவிதையும் வெளிவந்தபோது நாடே பரபரப்புக்கு உள்ளாகியது.

பாரதியார் தேசத்தையும், தெய்வத்தையும் ஒன்றாக இணைத்தார். தோத்திரப் பாடல்கள் மூலமாகவும், சுதந்தர உணர்ச்சிகளைக் கிளப்பிவிட்டார். மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் அவை தோத்திரப் பாடல்கள்போல் தோன்றும். ஆனால் அவை சுதந்தர உணர்வை ஊட்டும் வகையில் இரண்டு பொருள்களில் சொற்களை அமைத்துப் படைத்த அற்புதமான கவிதைகளாக இருக்கும்.

''அன்று ஒரு பாரதம் ஆக்க வந்தானே!'' என்று கண்ணனைப் பற்றிப் பாடுகிறார் பாரதியார்.

இந்தப் பாடலில்தான் எவ்வளவு தேச பக்தியைப் புகுத்தி இருக்கிறார். இந்தப் பாடல் மக்களைத் தட்டி எழுப்பிச் சுதந்தர தாகம் கொள்ளச் செய்த விந்தையை அந்த நாளில் வாழ்ந்த தேச பக்தர்கள் சொல்லுவதைக் கேட்கும்போது மெய் சிலிர்க்கும். இந்தப் பாடல் கப்பலோட்டிய தமிழர் வ.உ. சியைக் கவர்ந்த மிக அருமையான பாடல்களில் ஒன்று.

இந்தப் பாடலைக் கேட்டவண்ணந்தான் வ.உ. சிதம்பரனார் அமரத்வம் பெற்றார் என்பது வரலாறு.

பாரதியின் கட்டுரைகளையும், கவிதைகளையும் கண்டு வெள்ளை அரசு வெகுண்டது. அவர் கவிதைகள் இறைவன்மீது பாடிய தோத்திரப் பாடலாகவும் அமைந்ததால் பாரதியார் மீது நடவடிக்கை எடுக்க முடியவில்லை. 'சத்ரபதி சிவாஜி தன் சைனியத்துக்குக் கூறியது' என்ற பாடல் சிவாஜியின் வரலாற்றில் ஒரு பகுதியை விளக்கும் காவியமாகத் தோன்றியது. ஆனால் இதன் மூலம் பாரதி நாட்டு மக்களை சுதந்தரப் போருக்குத் தயார் செய்த வீரச் சுவை மிக்க ஒரு காவியமே படைத்துவிட்டார்.

இப்படி எத்தனை எத்தனையோ எழுச்சி மிக்க கவிதைகளையும், உணர்ச்சி மிக்க கட்டுரைகளையும் எழுதி நாட்டைத் தினந்தோறும் தட்டி எழுப்பிக்கொண்டிருந்தார் பாரதியார்.

பாரதியாரை எப்படியாவது கைது செய்வதற்குப் பிரிட்டிஷ் அதிகாரிகள் காத்திருந்தார்கள். சமயம் பார்த்திருந்தார்கள். இதை அறிந்த மண்டயம் சகோதரர்கள், ''இந்தியா'' பத்திரிகையை அன்றைய தினம் பிரஞ்சுக் காலனியாக இருந்த புதுச்சேரியில் இருந்து வெளிக்கொணரத் திட்டம் இட்டனர். பாரதியைப் புதுவைக்கு அழைத்துச் சென்றுவிட்டனர்.

இந்தியா பத்திரிகைக்குத் தமிழ் நாடு எங்கும், இந்தியா எங்கும் ஏன், லண்டனில்கூட நிருபர்களை வைத்திருந்தார் பாரதியார்.

தமிழ் மக்களும், தமிழ் நாடும் பெருமைப்படும்படி அரும்பணியைச் செய்த தேசபக்தர்களான வ.வே.சு ஐயரும், டாக்டர் டி. எஸ். எஸ். ராஜனுமே இந்தியா பத்திரிகையின் லண்டன் நிருபர்கள். வீரசவர்க்கார் எழுதிய எரிமலையையும், கரிபால்டியின் வாழ்க்கை வரலாற்றையும் சக்தி வாய்ந்த தமிழில் மொழி பெயர்த்து இந்தியா பத்திரிகைக்கு அனுப்பிக்கொண்டிருந்தார் வ.வே.சு. ஐயர்.

இந்தியா பத்திரிகை வெறும் அரசியல் பத்திரிகை மட்டும் அல்ல. அது பொருளாதாரத் துறையிலும், சமுதாய சீர்திருத்தத்திலும், நமது பண்பாட்டுத் துறையிலும், அற்புதமான சேவை செய்தது. சமுதாயத்தின் எந்த நிகழ்ச்சியையும் அது விட்டு வைக்கவில்லை. அது தமிழ் இலக்கியத்துக்கு ஆற்றிய பணியும் மகத்தானது. இந்தப் பத்திரிகையில்தான் 'ஞானரதம்' என்ற சிரஞ்சீவித்தன்மை பெற்ற இலக்கியத்தை எழுதினார் பாரதியார்.

இந்தியா பத்திரிகைக்குப் பாரதியார் வைத்திருந்த சந்தா விகிதம் அற்புதமானது. சிந்தனையைத் தூண்டக்கூடியது. யாரும் நினைத்தே பார்க்க முடியாதது. இன்று சினிமாக் கொட்டகையில் ஒரே படத்தைப் பார்ப்பதற்கு அவர் அவர்களின் பொருளாதார வசதிக்கு ஏற்ப 'டிக்கெட்' வைத்திருப்பது போல வைத்திருக்கிறார்.

இந்தியா பத்திரிகைக்கு ஆண்டுச் சந்தா, அரசுக்கு ரூ. 50; அரசர்களுக்கும், ஜமீன்தார்களுக்கும் ரூ.30; மாதம் 200 ரூபாய்க்கு மேல் வருமானம் உடையவர்களுக்கு ரூ. 15, மற்றவர்களுக்கு ரூ.3.

'இந்தியா' பத்திரிகைக்குச் செய்திகளும் துணுக்குகளும் அனுப்பியவர்களுக்கு அந்த நாளிலேயே தாராளமாகச் சம்மானம் வழங்கியவர் பாரதி. இன்று பல தமிழ்ப் பத்திரிகைகள் விஷயதானமாகவே செய்திகளை ஏற்றுப் பிரசுரித்து வருகின்றன என்பதை நினைக்கும்போது பத்திரிகை ஆசிரியரான பாரதியின் விரிந்த மனத்தைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

பாரதியார் பன்மொழிப் புலவர் தமிழ் நாட்டில் எங்கும் தமிழ், எதிலும் தமிழ் ஆட்சி புரிய வேண்டும் என்று முதல் குரல் கொடுத்த தமிழ்க் கவிஞர். உன்னதமான தமிழ் வீரர். தமிழ் நாட்டையும் தமிழையும் தெய்வமாக வணங்கிய சித்தர்.

1894-ஆம் ஆண்டு திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் சேர்ந்து ஆங்கிலமும் தமிழும் பயின்றார்.

1901-ஆம் ஆண்டு காசிக்குச் சென்றார். காசி, இந்து சர்வகலாலையில் சம்ஸ்கிருதம், இந்தி ஆகிய மொழிகளைப் பயின்றார்.

1909-ஆம் ஆண்டு அரவிந்தர் 'தர்மா' என்ற வங்கமொழி இதழை வெளியிட்டார். இந்தப் பத்திரிகையைத் தமிழில் வெளியிடுவதற்காகப் பாரதியார் வங்க மொழியையும், பிரெஞ்சு மொழியையும் பயின்றார்.

1914-ஆம் ஆண்டு ஜர்மன் மொழியைப் பயின்றார். அதிலும் தேர்ச்சி பெற்றார். லத்தின் மொழியும் பயின்று தேர்ச்சி பெற்றார்.

1920-ஆம் ஆண்டு தெலுங்கையும், மலையாளத்தையும் கற்றுக்கொண்டார்.

இத்தனை மொழிகளையும் கற்றுக்கொண்ட பிறகுதான், ''யாம்அறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிது ஆவது எங்கும் காணோம்'' என்று பரவசத்துடன் பாடினார்.

ஒரு பத்திரிகை ஆசிரியர், கவிஞர், தேசபக்தர் எத்தனை மொழிகளைக் கற்றுக்கொள்ள முடியுமோ, அத்தனை மொழிகளையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்பது பாரதியார் எண்ணம். சிறப்பாக, பத்திரிகை ஆசிரியர்களுக்கு இது மிகவும் அவசியம் என்று அவர்களுக்கு அறிவுறுத்திய உபதேசமாகும்.

'சித்ராவளி' என்ற பெயரில் தமிழிலும், ஆங்கிலத்திலும் சித்திரங்களும் கார்ட்டூன்களும் கொண்ட 'பஞ்ச்' என்ற ஆங்கிலப் பத்திரிகையைப் போல ஒரு பத்திரிகையை ஆரம்பித்து நடத்தத் திட்டம் தீட்டி இருந்தார் பாரதியார்.

தமிழ் நாட்டிலே வாழையடி வாழையாக இலக்கியச் செல்வங்களை வளர்த்து வந்த கம்பன், இளங்கோ, திருவள்ளுவர் போன்ற கவிஞர் பெருமக்களுக்கு விழாக் கொண்டாட வேண்டும் என்று முதலில் எண்ணியவர் பாரதி. தாம் எண்ணியபடி அவர்களுக்கு விழா எடுத்துப் பெருமை செய்த முதல் தமிழர் பாரதியார்.

தமிழ் நாட்டின் இசை மேடைகளிலே தமிழ் இசைக்குத்தான் முதல் இடம் கொடுக்க வேண்டும் என்று குரல் கொடுத்த முதல் குரலே பாரதியின் குரல்தான்.

தமிழ் எழுத்தாளர்கள் பட்ட இன்னல்களை, பத்திரிகையாளர்களின் அல்லல்களை எதிர் ஒலித்த முதல் எழுத்தாளர், பத்திரிகையாளர் பாரதியார்.

ஹரிஜன மக்களின் பிரச்னையை, முக்கியப் பிரச்சினையாக்கி உயர்ந்த ஜாதி மக்களின் இதயத்தில் அவர்களுக்கு இடம் கொடுக்க வழிகாட்டியவர் பாரதியார். கனகலிங்கம் என்ற ஹரிஜனுக்குப் பூணூல் போட்டு அவரைப் பிராம்மணர் ஆக்கிப் புரட்சியைச் செய்த ராமாநுஜர் பாரதியார்.

தமிழ் மாவட்டங்களில் ஜனரஞ்சகமான நிகழ்ச்சிகள் நடந்தால் அதைச் செய்தியாக எழுதி அனுப்பி வைப்போருக்குத் தகுந்த சம்மானம் கொடுக்கப்படும் என்ற வழக்கத்தைப் பத்திரிகைத் துறையில் ஏற்படுத்திய முதல் பத்திரிகையாளர் பாரதியார்.

''உங்கள் ஊரில் நடக்கும் அக்கிரமங்களைத் தைரியமாக எழுதுங்கள். உங்கள் பெயர்களை வெளியிடமாட்டோம்'' என்று உறுதிமொழி கூற, பத்திரிகைத் தர்மத்தைக் காத்து

போன்
2331
2448
சாலினி
½ கிலோ கேன்களில் கிடைக்கிறது
கொழும்பு
தேங்காய் எண்ணை
S.P.R.J. மபத்லால் ஆயில் மில்ஸ்,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி-627002.
KING INDUSTRIES
SALINI
ASAFOETIDA
COMPOUNDED ASAFOETIDA
சாலினி
கூட்டு
பெருங்காயம்.
சாலினி
கூட்டு பெருங்காயம்
தூள் காயம்
-தேவி-
தந்தி:
தவம்
கிங் இண்டஸ்ட்ரீஸ்.
பாளையங்கோட்டை.627002.

வலியிலிருந்து விரைவில்
நிவாரணம் பெறவே

புதிய
அனஸின்

இதில் அதிக அளவில் வலி-நிவாரணி
அடங்கியுள்ளது

உலகெங்கும் டாக்டர்கள் மிக அதிகமாக சிபாரிசு செய்யும் வலி-நிவாரணி மருந்து அதிக அளவில் கொண்டது புதிய அனஸின். தலைவலி ஜலதோஷம், ∴ப்ளூ, முதுகு வலி, தசை வலி, பல் வலி ஆகியவற்றிற்கு நல்ல பலனளிக்கிறது அனஸின் மீது மட்டுமே நம்பிக்கை வையுங்கள்.

இப்போது பாதுகாப்பான புதிய உறையில்.

சக்தி வாய்ந்த நம்பகமான
மேனர்ஸ்
அனஸின்

GM-1-82 TM

இந்தியாவின் புகழ்பெற்ற வலி-நிவாரணி மருந்து

ட்ரேட் மார்க் உரிமை பெற்று உபயோகிப்பவர்கள்:
ஜெ∴ப்ரி மேனர்ஸ் & கம். லிட்.

TIIC ESTD. 1949

டிஐஐஸி
வைப்புத் தொகைகளை
கீழ்க்கண்டவாறு
ஏற்கிறது/புதுப்பிக்கிறது

அசல் மற்றும் வட்டி,
முழுவதும் நிபந்தனையின்றி
தமிழ்நாடு அரசாங்கத்தால்
உத்திரவாதமளிக்கப்படுகிறது.

காலம்	வட்டி விகிதம் (ஒரு ஆண்டுக்கு)
3 ஆண்டுகளுக்கு மேல்	10%
2 ஆண்டுகளுக்கு மேல் மற்றும் 3 ஆண்டுகள் (உட்பட) வரை	9%
ஒரு ஆண்டு மற்றும் அதற்குமேல் மற்றும் 2 ஆண்டுகள் (உட்பட) வரை	8%

மற்ற விவரங்களுக்கு
தயவு செய்து
தொடர்பு கொள்ளவும்

நிர்வாக இயக்குநர்

தமிழ்நாடு
தொழில் முதலீட்டுக் கழகம்
'அருள் மனை', 27, ஒயிட்ஸ் சாலை,
சென்னை-600 014.
தொலைபேசி எண்: 83078
டெலக்ஸ்: MIIC-7164 தந்தி: 'MINDVEST'

DIPR/82

வர வழிகாட்டியவர் பாரதியார். தங்கள் தங்கள் ஊரில் அதிகாரிகளும், பெரிய மனிதர்களும் ஏழை மக்களுக்குச் செய்த கொடுமைகளைப் பற்றி நமக்குத் தகவல் கொடுத்தவர்களின் பெயர்களை வெளியிடாமல் உறுதியுடன் இருந்தார்.

தமிழ் மொழியைக் கொண்டே அந்த நாளில் பொருள் சேர்த்தவர்கள் உண்டு; புகழ் சேர்த்தவர்கள் உண்டு. அப்படிச் சேர்த்துக் கொண்டிருப்பவர்கள் இன்றும் இருக்கிறார்கள். ஆனால் பாரதியாரோ பொருளுக்கும் புகழுக்கும், ஆசைப்படாமல் தமிழை வளர்ப்பதற்காகவே வாழ்ந்த சத்திய மனிதர். தமிழைக் கொண்டே சமுதாயக் கொடுமைகளைச் சாடியும், பாடியும் மக்களுக்கு விழிப்பூட்டிய உண்மையான புரட்சிக் கவிஞர் பாரதியார்.

நாள் தவறாமல் பல்வேறு விஷயங்களைப்பற்றிப் பத்திரிகைகளுக்குத் தொடர்ந்து எழுதி வந்தவர் பாரதியார். தம் சொந்தப் பெயராலும், ''காளிதாசன்'', ''சக்திதாசன்'' ''சாவித்திரி'' என்ற ''நிருபநேயர்'', ''உத்தம தேசாபிமானி'', ''நித்திய தீரர்'', என்ற பல்வேறு புனை பெயர்களில் எழுதி வந்தார்.

'உலக நிகழ்ச்சிகள்', 'ரசத்திரட்டு' 'விநோதக் கொத்து', 'விநோத விஷயங்கள்', 'உலக விநோதங்கள்', 'கால விளக்கு', 'மணித்திரள்', 'தீப்பொறிகள்', 'புதுமைகள்', 'சிறிதும் பெரிதும்' என்பன போன்ற பல தலைப்புகளில் தம் எண்ணக் குவியல்களை எழுதிக் குவித்தார்.

பெண்கள் விடுதலையைப் பற்றி அவர் எழுதியதுபோல் இதுவரை யாரும் எழுதியாதாகத்தெரியவில்லை.

மணப்பெண்ணுக்குப் பாரதி கூறியிருக்கும் அறிவுரைகள் எழுத்துக்கு எழுத்து ஏழு லட்சம் மதிப்பு உடையவை.

'புகுந்த வீட்டில் தைரியமாக இரு' பயப்படாதே! ஒட்டுக் கேட்காதே! பிறர் கடிதங்களைப் படிக்காதே! மனத்தில் உள்ளதை நேரில் சொல்லிவிடு. மனத்தில் வைத்துக்கொண்டு குமுறாதே!'

'உன்னால் முடிந்த அளவு உன் மாமனார் வீட்டில் உள்ளவர்கள்சொல்படி நட. முடியாவிட்டால் மறைக்காதே! தைரியமாகச் சொல்லிவிடு.

'உன்னை அவர்கள் விலை கொடுத்து வாங்கவில்லை! அவர்கள் வீட்டை விளங்க வைக்கும் லட்சுமி நீ; அந்த வீட்டில் உனக்குப் பரிபூரண உரிமையில்லாத விஷயங்களில் வீணாகத் தலையிடாதே.

'வேலை செய்யப் பின்வாங்காதே. அதற்காகச் சக்திக்கு மீறி வேலை செய்து உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே. செய்வதை மனத்திருப்தியுடன் செய்.'

இந்த வார்த்தைகள் காலம் எல்லாம் தமிழ்ப் பெண்களுக்குப் பொருந்தக் கூடிய சத்திய வார்த்தைகள் இல்லையா?

நம் நாட்டுப் பெண்கள் நமது பண்பாட்டைக் காப்பாற்றி வருபவர்கள்: அவர்கள்தான் எந்தக் காரியத்தையும் செய்வதற்குப் பஞ்சாங்கத்தைப் பார்த்துக்கொண்டிருப்பவர்கள்.

பஞ்சாங்கம் என்பது வெறும் நாள் நட்சத்திரங்களை மட்டும் கொண்டது அல்ல. நமது நாட்டு வரலாற்றுக்கே ஆதாரமான ஆகாயக் கல்வெட்டுக்கள்.

நம்முடைய பஞ்சாங்கத்தில் இப்போது சில தவறுகள் ஏற்பட்டிருக்கிறது. அதை இந்தக் காலத்துக்கு ஏற்றவண்ணம் சீர்திருத்த வேண்டும். அப்போதுதான் நாம் செய்யும் காரியங்கள் எல்லாம் பயன்உடையனவாக இருக்கும்என்று எழுபது ஆண்டுகளுக்கு முன்பே பாரதி எழுதியிருக்கிறார்.

வான சாத்திரப்படி காலக்கணக்கை நிர்ணயித்துப் பல நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. பழையதையே இன்னும் பின்பற்றி வருகிறோம். அதனால் பல்வேறு தவறுகள் ஏற்படுகின்றன.

திருத்தப்படாத அந்தக் காலக் கணக்குப்படியே பஞ்சாங்கங்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

'அதை உடனே மாற்றி அமைக்க வேண்டும்' என்று இப்போது பேராசிரியர் கே. சீனிவாசராகவன் போன்ற வானநூல் ஆராய்ச்சியாளர்கள் வற்புறுத்திச் சொல்கிறார்கள். வானநூல் அறிஞர்கள் நமது பஞ்சாங்கத்தில் ஏற்பட்டிருக்கும் சில முக்கியமான தவறுகளை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

இப்போது, தை மாதப் பிறப்பு, ஜனவரி மாதம் 14 அல்லது 15-ஆம் தேதிகளில் வருகிறது. இந்த நாளை உத்தராயணத்தின் ஆரம்பம் என்கிறோம்; இது தவறு.

மார்கழி மாதம் ஏழாம் நாள், டிசம்பர் மாதம் 22-ஆம் தேதி கிறிஸ்துமஸ் விழாவுக்கு முன்னதாகவே உத்தராயணம் தொடங்கிவிடுகிறது.

அப்போதே சூரியன் தன் தெற்கு எல்லையிலிருந்து வடக்கு நோக்கிச் செல்ல ஆரம்பித்துவிடுகிறான்.

ஒரு காலத்தில் வான வீதியில் சூரியன் வடக்கு எல்லையில் வைகாசி மாதம் ரோகிணி நட்சத்திரத்தில் இருந்ததை வேதத்தின் மூலமாக அறிகிறோம். அப்போது உத்தராயணம் மாசி மாதத்தில் பிறந்தது.

ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் சூரியன் வானவீதியில் வடக்கு எல்லையில் சித்திரை மாத ஆரம்பத்தில் அசுவினி நட்சத்திரத்தில் இருந்தான். அப்போது உத்தராயணம் தை மாதப் பிறப்பன்று தொடங்கிற்று.

அதற்குப் பிறகு வான சாஸ்திரிகள் காலக் கணக்கைச் சரியாகக் கணித்து வெளியிடத் தவறிவிட்டார்கள்.

இதனால் உத்தராயணம், தட்சணாயணம் ஆகிய இரண்டு அயனங்களும் ஒரு வருஷத்துக்கு 20 நிமிடங்கள் முந்தியே ஏற்பட்டன.

எழுபத்திரண்டு வருஷங்களில் இந்தஇரண்டுஅயனங்களும்இருபத்து நான்கு மணி — ஒரு முழு நாள் முந்தியே வரத் தொடங்கிவிட்டன.

பஞ்சாங்கத்தில் இந்தத் தவறு ஏற்பட்டு, அது திருத்தப்படாமலே அநேக நூற்றாண்டுகள் ஆகிவிட்டன.

அதனால் உத்தராயணம், தட்சிணாயணம் முதலிய புண்ணிய காலங்கள் பஞ்சாங்கங்களில் குறிப்பிட்டிருப்பதற்கு 23 நாட்கள் முன்னதாகவே வந்துவிடுகின்றன.

நாம் இந்த உண்மையை அறியாமையினால், அந்தப் புண்ணிய காலங்களை 23 நாட்களுக்குப் பிறகு கொண்டாடி வருகிறோம். 1500 ஆண்டுகளுக்கு முன் உத்தராயணம் தொடங்கிய தை மாதத்தில் முதல் நாளை இன்னும் தவறாக உத்தராயண புண்ணிய காலமாகக் கொண்டாடிக்கொண்டு இருக்கிறோம்.

இப்போது தமிழ் நாட்டில் இருபது வகையான பஞ்சாங்கங்கள் வெளி வருகின்றன. அவை வழக்கத்திலும் இருக்கின்றன.

ஒவ்வொரு மதத்தைச் சேர்ந்தவரும் ஒரு பஞ்சாங்கத்தை ஆதரித்து வருகிறார்கள். இவை ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாமல் இருக்கின்றன. இது சமுதாய வாழ்வுக்கு நல்லது அல்ல என்பதை யாரும் சிந்திக்கவில்லை.

தனிப்பட்டவர்கள் பஞ்சாங்கம் வெளியிடுவதை உடனே தடைப்படுத்த வேண்டும். மத்திய அரசின் வானவெளி ஆராய்ச்சிக் கேந்திரம் வெளியிடும் பஞ்சாங்கத்தைத் தான் நாடு முழுதும் பின்பற்றி வர வேண்டுமென்று ஒரு சட்டமே இயற்ற வேண்டும்.

பஞ்சாங்கத்தைச் சீர்திருத்த வேண்டும் என்ற பாரதியின் எண்ணத்தை நிறைவேற்றும் முயற்சியில் சென்னையிலிருக்கும், 'இன்டர்நேஷனல் சொசைட்டி ஃபார் தி இன்வெஸ்டிகேஷன் ஆப் ஏன்சியன்ட் சிவிலிசேஷன்ஸ்' என்ற விண்வெளி ஆய்வு மன்றம் ஈடுபட்டு அதுபற்றிப் பல உண்மைகளைக் கண்டு வெளியிட்டுக் கொண்டு வருகிறது.

இன்று விண்வெளி விஞ்ஞானம் வேகமாக வளர்ந்திருக்கிறது. விண்வெளி ஆராய்ச்சிக்கு வேண்டிய நவீன வசதிகள் கொண்ட விஞ்ஞானக் கூடங்கள் ஆங்காங்கே ஏற்பட்டு இருக்கின்றன. மனிதன் சந்திரனுக்கும் செவ்வாய்க்கும் கூடச் செல்கிறான்.

விஞ்ஞான வசதிகள் இல்லாத அந்த நாளிலேயே தமிழன் வான வெளி ஆராய்ச்சியில் வல்லுநனாக இருந்தான். அன்று அவன் கண்ட வான ஆராய்ச்சி அடிப்படையில் தான் இன்று விண்வெளி விஞ்ஞானம் விரிவடைந்து கொண்டிருக்கிறது.

சூரியன், பரணி நட்சத்திரத்திலிருந்து மீண்டும் பரணி நட்சத்திரத்துக்கு வந்து சேருவதற்கு 27,000 ஆண்டுகள் ஆகும் என்று அன்றைய வான சாஸ்திர நிபுணர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள்.

வானத்தில் உள்ள நட்சத்திரக் கூட்டங்களை 27 நட்சத்திர மண்டலங்களாகப் பிரித்துக் கொண்டார்கள். ஒரு நட்சத்திர மண்டலத்திலிருந்து இன்னொரு நட்சத்திர மண்டலத்துக்குச் சூரியன் நகர்வ

தற்கு 1000 ஆண்டுகள் ஆகின்றன என்று துல்லியமாகக் கணக்கிட்டு இருக்கிறார்கள்.

இந்தக் கணக்கைக் கண்டுபிடித்தவான சாஸ்திரிகள், சக்கரவர்த்தி வைவஸ்வத மநுவின் அரசவையில் அமைச்சர்களாக இருந்தவர்கள்.

வைவஸ்வதமநுவின், காலம் கி.மு. 8576 என்று இப்போது 'இன்டர்நேஷனல் சொசைட்டி ஃபார் தி இன்வெஸ்டிகேஷன் ஆப் ஏன்சியன்ட் சிவிலிசேஷன்ஸ்' மன்றம் கண்டுபிடித்து ஆதாரங்களுடன் வெளியிட்டிருக்கிறது.

பெரிய புராணம் பாடிய சேக்கிழார் இவரைத் தொன்மநு என்று சிறப்பித்துக் கூறியிருக்கிறார்.

வான சாஸ்திரத்தின் இன்றைய நவீன விஞ்ஞான வசதிகளைக் கொண்டு ஆராயும்போது நமக்குப் பல வரலாற்று உண்மைகள் தெரிகின்றன. ராமனும், கிருஷ்ணனும் வெறும் இதிகாசக் கற்பனை நாயகர்கள் மட்டும் அல்ல.

இந்த நாட்டை ஆண்ட உத்தமமான மன்னர்களில் மிக முக்கியமானவர்கள் என்பதையும் அறிய முடிகிறது.

ராமர், கிருஷ்ணர் ஆகிய மன்னர்களின் காலத்தையும், ''இன்டர்நேஷனல் சொசைட்டி ஃபார் தி இன்வெஸ்டிகேஷன் ஆப் ஏன்சியன்ட் சிவிலிசேஷன்ஸ்'' என்ற மன்றம் துல்லியமாகக் கண்டுபிடித்து இப்போது வெளியிட்டிருக்கிறது.

கி.மு. 4439-ஆம் ஆண்டில் ராமர் பிறந்திருக்கிறார்.

கி.மு. 3117-ஆம் ஆண்டில் கிருஷ்ணர் பிறந்திருக்கிறார்.

கி.மு. 3067--ஆம் ஆண்டில் மகாபாரத யுத்தம் ஆரம்பமாகியிருக்கிறது.

கி.மு. 1472-ஆம் ஆண்டில் அசோகர் ஆட்சிக்கு வந்திருக்கிறார்.

கி. மு. 508-ஆம் ஆண்டில் ஆதிசங்கரர் பிறந்திருக்கிறார் என்று தெளிவாகத் தெரிந்துகொள்ள முடிகிறது.

இதை எப்படித் தெரிந்துகொள்ள முடிகிறது?

இராமாயணத்திலும், மகாபாரதத்திலும், ஆதிசங்கரர் வரலாற்று நூலிலும் ராமன், கிருஷ்ணன், சங்கரர் பிறந்தபோது சூரியன் எந்த நட்சத்திரத்தின் எந்தப் பாதத்தில் இருந்தான் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

மகாபாரத யுத்தம் நடந்தபோது சூரியன் எந்த நட்சத்திரத்தில் எந்தப் பாதத்தில் இருந்தான் என்றும், அசோகன் ஆட்சிக்கு வந்தபோது சூரியன் எந்த நட்சத்திரத்தில் எந்தப் பாதத்தில் இருந்தான் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதை வைத்து வான சாஸ்திரக் கணக்கைக் கொண்டு ஆராய்ந்தால், ராமர், கிருஷ்ணர், ஆதிசங்கரர், மகாபாரத யுத்தம் நடைபெற்ற ஆண்டு, அசோகன் ஆட்சிக்கு வந்த காலம் ஆகியவற்றைத் திருத்தமாகக் கணக்கிட்டுக் காணமுடிகிறது.

ராமனும், கிருஷ்ணனும் ஆண்ட காலத்தில் அவர்கள் வழிபட்ட கடவுளாகச் சிவபெருமான் இருந்திருக்கிறார்.

காலத்தால் ராமனும் கிருஷ்ணனும் கடவுளானதுபோல், ராமனும் கிருஷ்ணனும் வாழ்ந்த காலத்தில் அவருக்கு முன் சக்கரவர்த்தியாக இருந்த பாண்டிய மன்னன் சிவன்; சிவபெருமானாக வழிபடப்பட்டிருக்கிறார்.

சிவன் என்னும் அந்த மன்னர் காலத்தில் மக்கள் வழிபட்டது 'சிவம்' என்ற ஜோதியைத்தான். இதை வேதங்களே ஒப்புக்கொள்கின்றன.

வீர சைவம் சிவனை ஒரு சித்தர் என்றே சொல்கிறது. சிவன் உண்டாக்கிய யோகத் துறைக்குச் 'சிவயோகம்' என்றே பெயர். இது ஞான யோகத்தில் ஒரு முக்கியமான பகுதியாகக் கருதப்படுகிறது.

சிவன், ஞான சித்தனாக இருந்துடன் மன்னராகவும் இருந்திருக்க வேண்டும். சக்கரவர்த்தி தட்சன் மகளைச் சிவன் திருமணம் புரிந்துகொண்டதிலிருந்து இதை உணர முடிகிறது என்று வீரசைவ ஞானிகள் கருதுகிறார்கள்.

சிவன் சக்கரவர்த்தி, தட்சன் மகளைத் திருமணம் செய்துகொண்ட காலத்தில் சூரியன் இருந்த நட்சத்திரத்தில், இந்தப் பாதத்தில் இருந்தான் என்று சம்ஸ்கிருத சிவ புராணத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதைக் கொண்டு சிவன் தாட்சாயணியைத் திருமணம் செய்துகொண்டது கி.மு. 17,000 ஆம் ஆண்டில் என்று தெளிவாகக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

நம் நாட்டில் சிவ வழிபாடு இருப்பதுபோலவே உலகின் பல பகுதிகளிலும் சிவ வழிபாடு இருந்திருக்கிறது என்பதை ஆராய்ச்சியாளர்கள் இப்போது கண்டிருக்கிறார்கள்.

பாரதி, 'பஞ்சாங்கத்தைத் திருத்த வேண்டும். மக்கள் தாம் கொண்டாடும் புண்ணிய தினங்களின் பலனை அநுபவிக்க வேண்டும்' என்று சொன்ன பணி, இன்று, ''இன்டர்நேஷனல் சொஸைட்டி ஃபார் தி இன்வெஸ்டிகேஷன் ஆப் ஏன்சியன்ட் சிவிலிசேஷன்ஸ்' என்ற மன்றத்தின் மூலமாகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த மன்றத்தின் ஆராய்ச்சியின் அடிப்படையில் நமது நாட்டின் தொன்மையான வரவாற்றைப் புதுப்பித்துச் சரித்திர ஆசிரியர்கள் எழுதவேண்டும்.

நமது நாட்டு வரலாற்றை வெள்ளைக்காரர்கள் எழுதியிருக்கிறார்கள். அவற்றை உண்மை என்று படித்துக்கொண்டிருக்கிறோம்.

அவர்கள் பைபிளில் சொல்லியிருக்கும் பத்தாயிரம் ஆண்டுகளுக்குள்தான் தங்கள் சிந்தனையைச் செலுத்தி எழுதியிருக்கிறார்கள். அது எப்படி உண்மையான நமது நாட்டு வரலாறாக இருக்கமுடியும்?

நமது நாட்டு நாகரிகம் குறைந்தது ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதற்கு வேண்டிய ஆதாரங்கள் இருக்கின்றன. இதற்குத் துணை செய்வதுதான் விண்வெளி ஆராய்ச்சி மூலமாக நம் பஞ்சாங்கத்தைப் புதுப்பித்தல்; அதன் மூலமாக நமது வரலாற்று நாயகர்களின் வரலாற்றைக் கணக்கிடுதல்.

பாரதிதான் முதல் முதலில் இந்த நாட்டில் பிறந்த கம்பனுக்கும், திருவள்ளுவருக்கும், இளங்கோ அடிகளுக்கும் மற்ற வரலாற்று நாயகர்களுக்கும் விழா எடுக்கவேண்டும் என்றும் வற்புறுத்திக் கூறியவர். அவர்களுக்கு எல்லாம் விழா எடுத்து நமக்கு வழிகாட்டியவர்.

அது இப்போது தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. நமது முன்னோர்களில், வரலாற்றில் இடம் பெற்ற ஞானியர், வீரர் ஆகியோருக்குவிழாயெடுத்துவருகிறோம். அந்த விழாக்களைப் பின்பற்றிப் பாரதிக்கும் விழா எடுத்து வருகிறோம்.

பாரதிக்கு நூற்றாண்டு விழா எடுக்கும் இந்தச் சமயத்தில் பாரதி பத்திரிகைக்கு ஆற்றியுள்ள பணியை நன்றியுணர்வுடன் போற்றுவோம்.

இன்றைப் பத்திரிகையாளர்கள் பாரதியின் லட்சியத்தைப் பின்பற்றிப் பாடுபட வேண்டும்.

அவர் ஆரம்பித்த தமிழ் எழுத்துச் சீர்திருத்தங்களையும், தமிழ் நாட்டில் இசை அரங்குகளில் தமிழ் இசைதான் பாடப்படவேண்டும் என்று போராடியதையும், காலத்துக்கு ஏற்பப் பஞ்சாங்கத்தைத் திருத்தி வெளியிட வேண்டும் என்று அவர் கூறியதையும், அதன் அடிப்படையில் நமது நாட்டின் உண்மை வரலாற்றை எழுத வேண்டும் என்ற அவர் எண்ணத்தையும், —

தமிழ் நாட்டில் எங்கும் எதிலும் தமிழ்தான் ஆளவேண்டும் என்பதைத் திட்டவட்டமாக உருவாக்குவதற்கும், தமிழ்நாட்டுச் சிறு பிள்ளைகளைப் பிடித்திருக்கும் எல்.கே.ஜி., யு.கே.ஜி., என்னும் காட்டுமிராண்டிக் கல்விமுறையை ஒழிப்பதற்கும், தமிழ் மக்கள் பாபடுபட வேண்டும்.

அப்போதுதான் தமிழ் நாட்டில் தமிழும் தமிழ்ப் பண்பாடும் காப்பாற்றப்படும். தமிழ், மக்கள் மத்தியில் முன்போல் உலகம் போற்றும் உன்னதமான அறிஞர்கள், சான்றோர்கள், ஞானிகள் தோன்றுவார்கள். இந்த அடிப்படை உண்மையை உணர்ந்து அதையே தங்கள் வாழ்க்கை லட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவர் மகாகவி பாரதி.

பாரதியார் உழைத்ததைப் போல், உழைப்பதன் மூலமாகவே வருங்காலச் சரித்திரத்தில் இன்றைத் தமிழகத்துக்கு நிலையான இடத்தைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

நாடு எல்லாத் துறைகளிலும், ஒழுக்கத்தைக் காத்து, சிறப்பாக வளருவதற்கு ஒவ்வொரு தமிழனும் இந்தத் தீபாவளித் திருநாளில் சபதம் ஏற்கவேண்டும்.

நம்முடைய முயற்சிகளுக்குப் பாரதியின் ஆத்ம சக்தி துணை புரியும்!

வளர்க, பாரதி வளர்த்த சமுதாய ஒழுக்கம்! ✻

35th year of our dedicated service to the nation

HEARTY DEEPAVALI GREETINGS

G.E.M

FULFILS ALL YOUR ELECTRICAL NEEDS



GANAPATHY ENGINEERING MANUFACTURERS PRIVATE LIMITED

POST BOX NO. 2006 ● GANAPATHY POST ● COIMBATORE-641006

PHONE: 23024 & 30808 ● TELEX No. 855 - 338 GEM.

இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்!

போன்: ஷோரும்: 938
அலுவலகம்: 988

ரெப்ரிஜிரேட்டர், டெலிவிஷன், ரேடியோ, டிரான்சிஸ்டர், ரெக்கார்டு பிளேயர், மின்விசிறி, சைக்கிள், ஸ்டீல் பர்னிச்சர், கைக்கெடிகாரம், சுவர் கெடிகாரம், தையல் மிஷின், சோபா-கம் பெட், பிரஷர்குக்கர், வெட் கிரைண்டர்கள் மற்றும் வீட்டிற்கு உபயோகமான பொருட்கள் அனைத்தும்

சுலபத் தவணையிலும், ரொக்கத்துக்கும் வாங்க மிகச் சிறந்த ஸ்தாபனம்

★ ★

அருள் அண் கோ கும்பகோணம்

15, டவுன் ஹால் ரோடு, கும்பகோணம்-612 001

மாமனார்கள் ஜாக்கிரதை!
எடிட்டர்
ஆயுள் சந்தா கட்டினாத்தான் சாந்தாவுக்குத் தாலி கட்டலாம் முடியுமா! இல்லே; நடையைக் கட்டு.
டெட்டும் உள்ளே நுழைய இலவசப் பாஸ் இந்தாங்க மாப்ளே!
தியேட்டர் மானேஜர்
துணிக் கடைக்காரர்
மைசூர் பாகு சாயம் போகாது. உடையாது. அளவு குறையாது. நான் கியாரண்டி."
யூரின் டெஸ்ட் மோஷன் டெஸ்ட் ஈ.ஸி.ஜி, பி.பி ரிசல்ட் வரட்டும். பிறகு நீங்கள் டிபன் சாப்பிடலாம்
டாக்டர்
எம்.எல்.ஏ.
சம்பந்தி போஜன விருந்தில் முதல் பந்தி, முதல் இலை உங்களுக்-காக, ரிசர்வ் பண்ணியாச்சு! போங்க மாப்ளே!
டெய்லி ஒரு ரூபாய் வீதம் 36000 நாள் என்னிடம் டெபாசிட் செய்தால் கெடு முடிந்ததிலிருந்து உங்க ஆயுள் முடியும் வரை, தீபாவளிக்குத் தீபாவளி ரூ. 1000 போனஸ் தருவேன்!
BANK AGENT

ஜோடிப் பொருத்தம்

ஏ. நடராஜன்

[சேகரும் அவன் மனைவி சாரதாவும் முதல் இரவுக்காகத் தனி அறையில் உள்ளனர்.]

சேகர்: சாரதா, ஏன் அங்கேயே நின்னுக்கிட்டிருக்கே? வாயேன்!

சாரதா : உக்கும். இப்படியெல்லாம் பேசினா எனக்கு வெக்கமா இருக்கு.

சே : வெக்கமா? வெக்கப்படறாப்பல இப்ப நான் என்ன பேசினேன்?

சா : பொல்லாதவர் நீங்க. முதலிரவு எப்போ வரும்? இப்படிக் கிண்டலாப் பேசலாம்னு காத்துக்கிட்டு இருந்தீங்களா?

சே : கிண்டலா? இப்ப நான் ஒண்ணும் கிண்டலாப் பேசலியே! கிட்ட வாயேன் சொல்றேன். (சாரதா அருகில் வந்து உட்காருகிறாள்.)

சா : என்ன அப்படிக் கொட்டக் கொட்டப் பார்க்கறீங்க? எனக்குப் பயமா இருக்கு.

சே: சரிதான் போ. வெக்கப்படவும், பயப்படவும் இதுவா நேரம்? சினிமாவிலே வர்ற மாதிரி பால் டம்ளரைக் கையிலே கொடுத்துட்டு, என் கால்லே விழுந்து வணங்குவேன்னு பார்த்தா, நீ பாட்டுக்கு ஜிங்குன்னு என் பக்கத்திலே வந்து உக்காந்துகிட்டயே.

சா : உக்கும். எனக்கும் எல்லாம் தெரியும்.

சே : (திடுக்கிட்டு) என்ன, எல்லாம் தெரியுமா?

சா : ஆமா. உங்க அக்காவும் தங்கச்சியும் எல்லாம் சொல்லிட்டாங்க.

சே : எல்லாத்தையும் சொல்லிட்டாங்களா? நேத்துதானே நமக்குக் கல்யாணம் ஆச்சு! அதுக்குள்ளார..?

சா : நீங்க ரொம்பச் சினிமா பாப்பீங்களாம். ஒரு நாளைக்கு மூணு படங்கூடப் பாப்பீங்களாம்.

சே : சில நாளைக்கு நாலுகூடப் பாத்திருக்கேன்.

சா : உங்களுக்குச் சினிமாக் கொட்டகைக்காரர் மகளைத்தான் கல்யாணம் பண்ணி வைக்கணும்னு கூட உங்க தங்கச்சி கிண்டல் பண்ணுவாங்களாமே?

சே : அது மட்டுமா, டேய் சேகர், நீ சினிமாக் கொட்டகையிலே டிக்கெட் கிழிக்கிற வேலை கிடைச்சாக்கூட ஒத்துக்கடான்னுகூடக் கோட்டா பண்ணுவாங்க.

சா : அதனாலதான் அவங்க இந்த அறைக்கு வர்றதுக்கு முன்னே சொன்னாங்க: 'சாரதா, எங்க தம்பி ஒரு மாதிரி சினிமா நிறையப் பாத்துப் பார்த்துச் சில சமயங்களிலே கிறுக்குத்தனமா நடந்துக்குவான்'னு

சே : என்ன சொன்னே?

சா : (அலட்சியமாக) கிறுக்குத்தனமா நடந்துக்குவீங்களாம்

சே : (பல்லைக் கடித்து) நல்ல அறிமுகந்தான்!

சா: 'அதனாலே எதுக்கும் கொஞ்சம் ஜாக்கிரதையாகவே இரு, சாரதா'ன்னு சொல்லியனுப்பிச்சாங்க.

சே : ஓகோ! ஜாக்கிரதையா? அப்படித் தள்ளி உக்காரு! கிட்ட வராதே.

சா: ஐயே! ஐயாவுக்குக் கோபத்தைப் பாரேன். (கன்னத்தில் இடிக்கிறாள்.)

சே : சாரு! சாரு!

சா : இதென்ன சாரு, மோருன்னுக்கிட்டிருக்கீங்க?

சே : அசடே! சாரதாமணிங்கறதைச் சுருக்கிச் செல்லமா சாருங்கறேன், இது கூடப் புரியலியா?

சா : (பிரியத்துடன்) என்மேலே உங்களுக்கு எவ்வளவு பிரியம்!

சே : அதெப்படி உனக்குத் தெரிஞ்சுது?

சா: என்னைப் பெண் பார்க்கவந்தபோது, என்னை உத்து உத்துப் பாத்திங்க. எனக்கு ரொம்ப வெக்கமாப் போச்சு.

சே : உன்னை மட்டுமா உத்துப் பார்த்தேன்? இலையிலேருந்த உருளைக் கிழங்கு போண்டாவையுந்தான் உத்துப் பார்த்தேன்.

சா : தெரியுமே!

சே : என்ன தெரியும்?

சா : உங்களுக்கு உருளைக்கிழங்குப் போண்டாவும் ரொம்பப் பிடிக்கும்னு தெரியும்.

சே : (வழக்கம் போல அசடு வழிய) இத பாரு சாரு. உன்னைப் பார்த்த கண்ணாலே உங்க வீட்டிலே வைச்ச போண்டாவைப் பார்த்ததும் உடனே உன் ஞாபகந்தான் வந்தது.

சா : (சிணுங்கி) போங்க, நான் குண்டா இருக்கேன்னு கேலி பண்றீங்களா?

சே : சே! சே! நீ என்ன அவ்வளவு ஒண்ணும் குண்டு இல்லே. அங்கே இங்கே சதை கொஞ்சம் அதிகம், அவ்வளவுதான்.

சா : ஏதோ என்னைத் தூக்கி வெயிட் பார்த்தவர் மாதிரி பேசறீங்களே?

சே : இப்போ அதுக்குத்தானே தயாராயிட்டு இருக்கேன்.

சா : போங்க, எனக்கு ஒரே வெக்கமா இருக்கு.

சே : ரொம்பவும் வெக்கப் படாதே, எதிலும் சிக்கனம் வேணும். (சேகர் அங்குமிங்கும் எதையோ தேடுகிறான்.)

சா : என்னாங்க அப்படி மும்முரமாத் தேடறீங்க? நான் சேலையை மாத்திக் கட்டிக்கவா?

சே : கொஞ்சம் இரு. அவசரப் படாதே!

சா : என்கிட்டே சொல்லுங்களேன். நானும் சேந்து தேடறேன்.

சே : என்னோட மூத்த அக்கா புருஷன் இருக்காரே, அவர் கொஞ்சம் குசும்பு புடிச்சவர்.

சா : பார்த்தாலே தெரியுது.

சே : (பயந்து) அப்படியா? என்னைப் பாத்தா எப்படித் தெரியுது?

சா : எங்கப்பா சொன்னது சரியாத்தான் இருக்கு.

சே : உங்கப்பா என்ன உளறினார்?

சா : சாரதா, உன் புருஷனைப் பார்த்தா அப்பாவியா இருக்காரு. நீ 'ஏன்'னு சொல்றதுக்குள்ளே எண்ணையா மாறிடுவாரு. நீ வெட்டிவானா கட்டிவந்திடுவாருன்னு சொன்னாரு.

சே : சொன்னாரா? நான் ஒண்ணும் பொண்டாட்டி தாசனா மாறவேமாட்டேன், தெரிஞ்சுக்கோ. அதெல்லாம் உங்க வம்சம். அந்த மாதிரி சலுகையெல்லாம் என்கிட்டக் கிடைக்காது. இன்னைக்கே தெரிஞ்சுக்கோ. நான் என்ன சொல்றேனோ அதுதான் இங்கே சட்டம்.

சா : (சற்றுக் கவலையுடன்), ஏன் இப்படிக் காட்டுக் கூச்சல் போடறீங்க? வெளியிலே இருக்கறவங்க என்னமோ ஏதோன்னு நினைக்கப் போறாங்க.

சே : நமக்குள்ளே நடக்கறது வெளியே தெரியக்கூடாதுன்னுதான் இப்ப நானே தேடறேன்.

சா : எதைத் தேடறீங்க?

சே : அதுதான் சொன்னேனே, எங்க மூத்த அக்கா புருஷன் கொஞ்சம் குறும்புக்காரர். வேடிக்கையா இங்கே ஏதாவது டேப் ரிக்கார்டரை வெச்சிருந்தாலும் இருப்பார். அதைத் தேடி எடுத்து 'ஆப்' செய்துட்டு அப்புறந்தான் உன்கிட்டே கொஞ்சணும்.

சா : நீங்க தேடிட்டு வாங்க. நான் கொஞ்சம் தூங்கறேன்.

சே: என்னது! தூங்கப் போறியா? முடியாது. நான் தூங்குன்னு சொல்ற வரைக்கும் நீ தூங்கக் கூடாது. இன்னைக்கு முதல் இரவு! ஞாபகம் இருக்கா?

சா : அசடு வழியாதீங்க. அணைங்க.

சே : உன்னைத்தானே? இதோ..

சா : விளக்கைச் சொன்னேன்.

காட்சி 2.

(சேகர் அயர்ந்து தூங்குகிறான். சாரதா எழுப்புகிறாள்.)

சா : என்னங்க... என்னங்க? (சத்தம் கேட்டுச் சேகரின் குறட்டை ஒலி நிற்கிறது. புரண்டு படுக்கிறான்.)

சே :)கண்ணைத் திறக்காமலே) யாரது. நேரம் கெட்ட நேரத்திலே தொந்தரவு குடுக்கறது?

சா : மணி என்ன ஆச்சு, தெரியுமா?

சே : கடிகாரத்தைப் பாரு. என்னை ஏன் எழுப்பறே?

சா : எங்க அப்பா வந்திருக்காருங்க. அவரு பாத்தாத் தப்பா நெனைப்பாரு.

சே : அவரை அந்த ஹால்ல படுத்துத் தூங்கச் சொல்லு. அப்புறம் நான் அவரைப் பாக்கறேன்.

சா : மணி ஒன்பதாச்சு. இன்னும் என்ன தூக்கம்?

சே : நீயும் தூங்கிப் பாரு. அதோட சொகம் தெரியும்.

சா : சரிதான், உங்க அக்காமாருங்க சொன்னது சரியாத்தான் போச்சு.

சே : (பரபரப்புடன் எழுந்து), சாரதா, போதும் நிறுத்து! முதல் இரவு அன்னைக்கு ஆரம்பிச்சே; இன்னைக்கு ஒரு மாசம் ஆயிடுச்சு: எப்பப் பார்த்தாலும் 'உங்க அக்கா சொன்னது சரியாப் போச்சு, உங்க அக்கா சொன்னது சரியாப் போச்சு'ன்னு சொல்றியே; அப்படி என்னாத்தை உன்கிட்டே சொன்னாங்க?

சா : கொஞ்சமா நஞ்சமா? 'அடியே சாரதா, உன் புருஷன் கொஞ்சம் தேரைப் பிள்ளைமாதிரி' படுக்கை கண்ட இடத்திலே படுத்துக்குவான். காலையிலே பத்துமணி வரைக்கும் தூங்குவான். சூரிய உதயத்தை இந்த ஜென்மத்திலே அவன் பார்த்தது கிடையாது. அப்புறம்..

சே : போதும் நிறுத்திக்கோ. உன் தம்பி கூட உன்னைப் பத்தி என்கிட்டே நிறையச் சொல்லியிருக்கான்; ஜாக்கிரதை.

சா : (கண்ணைக் கசக்கி), இந்தாங்க, என்னைப்பத்தி இன்னும் யார்கிட்டே விசாரிச்சீங்க?

சே : அப்படி வா வழிக்கு: ஆமா, உங்க அப்பாரு எதுக்கு விஜயம் செஞ்சிருக்காரு?

சா : உஷ். சத்தம் போடாதீங்க.

சே : உங்க அப்பன்தான் டமாரச் செவிடு ஆச்சே.

சா : என்னைப் பத்தி என்ன வேணும்னாலும் சொல்லுங்க.

சே : உன்னைப்பத்தி விசேஷமா சொல்ல என்ன இருக்கு?

சா : (கண்ணைக்கசக்கிக்கொண்டு) ம்.. அதுக்குள்ளே நான் உங்களுக்கு அலுத்துப் போய்ட்டேனா?

சே : மோகம் முப்பது நாள் தானே?

சா : வாழ்க்கைப் பூரா எப்படித்தான் உங்ககூடக் கழிக்கப் போறேனோ?

சே : நான் சொல்ல வேண்டிய வசனத்தை நீ சொல்லாதே; (சாரதா விசும்புகிறாள்.)

சே : சரி, சரி, கண்ணைக் கசக்காதே! உன் குண்டு மூஞ்சி இன்னும் வீங்கப் போகுது!

சா : தாமரைப் பூப்போல என் முகம் இருக்குன்னு சொன்னீங்களே, அதுக்குள்ளே மறந்து போயிடுச்சா?

சே : பலவீனமான நேரத்திலே நான் வாய் தவறி ஏதாவது சொல்லியிருந்தா அதையெல்லாம் 'கப்'புனு புடிச்சுக்குவியே. (கொட்டாவி விட்டுக்கொண்டே), சரி சரி, அப்பாலே போ. பாதி தூக்கத்திலே எழுப்பிவிட்டுட்டியா, தலையை வலிக்குது. இன்னும் ஒரு மணிநேரம் கழிச்சு வந்து எழுப்பிவிடு. (படுக்கையில் மீண்டும் சாய்கிறான்.)

சா : என்னங்க? இன்னும் தூக்கமா?

சே : என்னடி என்னமோ உன் சொத்து கொள்ளை போற மாதிரி தவிக்கறியே? என்னாலே தூங்க முடியுது தூங்கறேன்; உன்னாலே முடிஞ்சா நீயும் தூங்கு போ.

சா : காபி கொண்டு வந்திருக்கேங்க.

சே : கொண்டா குடிச்சிட்டுத் தெம்பாத் தூங்கறேன்

சா : பல்லை விளக்கிட்டு வாங்க.

சே : (முறைத்து), புதுப் புது வழக்கமா இருக்கே;

சா : ஏன், நீங்க பல் விளக்கறதே கிடையாதா?

சே : (திடுக்கிட்டு), அது வந்து சாரு, பாத்ரூமிலே குளிக்கும் போது பல் விளக்கிடுவேன். பெட் காபி தானே இது? இதுக்குப் போய்ப் பல் விளக்கினா தூக்கம் கலைஞ்சுடும்;

சா : பரவாயில்லை, எழுந்திரிங்க.

சே : சாரு, கிட்ட வாயேன்.

சா : குழந்தை மாதிரி கொஞ்சாதிங்க. எழுந்திரிச்சு குளிச்சிட்டு வாங்க. அப்பா உங்களுக்காகக் காத்திட்டிருக்காரு.

சே : மறுபடியும் மறுபடியும், அந்த ஆளு பேரைச் சொல்லி எனக்கு எரிச்சல் ஊட்டாதே.

சா : எங்கப்பாவுக்கு உங்க மேலே எவ்வளவு பிரியம் தெரியுமா?

சே : ரொம்பத் தெரியுமே! நீ எனக்கு ரெண்டாம் மனைவிதானே? முதல் மனைவி யாருன்னு தெரியுமில்லே".

சா : என்னங்க? என் தலையிலே இப்படிக் கல்லைப் போடறீங்க, நான் ரெண்டாந் தாரமா?

சே : சீ! பிலாக்கணம் வைக்காதே! என்னோட முதல் மனைவி சினிமாங்கறது உனக்குத் தெரிஞ்சது தானே? முதல் இரவு நடந்துதே, ஐயே! வெக்கப்படாதே, அன்னைக்குக்கூட மாட்னி ஷோவுக்குப்போயிட்டுத்தானே வந்தேன்.

சா : (பெருமூச்சு விட்டபடி), நல்ல வேளை! நான் பயந்துட்டேன்.

சே : வேகமாப் பெருமூச்சு விடாதே. காத்துலே நான் பறந்துடுவேன். கல்யாணம் முடிஞ்சு பத்து நாள் கழிச்சு உங்க வீட்டுக்குப் போயிருந்தோமே, ஞாபகம் இருக்கா?

சா : ஓ நல்லா இருக்கே. அன்னைக்குக்கூட உங்களுக்கு பிடிக்கும்னு உருளைக்கிழங்குப் போண்டா செஞ்சிருந்தாங்களே.

சே : (தலையில் அடித்துக் கொண்டு) எப்பப் பாரு, அதே ஞாபகந்தான். போண்டா சாப்பிட்டுச் சாப்பிட்டு நீயும் போண்டா மாதிரி ஆயிட்டே;

சா : (விசித்து), அன்னைக்கு நீங்கதானே சொன்னீங்க, ''எங்க அக்காங்க மாதிரி ஒல்லியா ஈர்க்குச்சியா இல்லாமக் கொழு கொழுன்னு நீ இருக்கே. கண்ணுக்குப் பார்க்க ரம்யமா இருக்கே''ன்னு நீங்க சொன்னது பொய்யா?

சே : சரிதான். அன்னைக்கு நான் பிதற்றியது அத்தனையும் நீ மனப்பாடம் பண்ணி வைச்சுக்கிட்டு நீ என்னை மடக்குறியா? அப்புறம் உங்க அப்பன் கதைக்கு வரட்டுமா?

சா : என்னங்க..?

சே : அன்னைக்கு ராத்திரி பத்து மணி இருக்கும். டிரஸ் செஞ்சிக்கிட்டு கால்லே செருப்பை மாட்டிக்கிட்டு, உங்க வீட்டிலேருந்து வலக் காலை எடுத்து வெளியிலே வைக்கறேன் அப்போ..

சா : சஸ்பென்ஸ் வேண்டாம்; மீதியைச் சொல்லுங்க.

சே : உங்க அப்பன் காவல்காரன் மாதிரி தெருத் திண்ணையிலே உக்காந்துகிட்டு, 'காலம் கெட்டுக் கிடக்கு; உள்ளே போய்ப் படுங்க, மாப்பிள்ளை'ன்னு கட்டளை போட்டார். அன்னைக்குத்தான் புதுப்படம் ரிலீஸ் ஆயிருந்தது. பாக்கலேன்னா தலை வெடிச்சுடும்; நானும் எவ்வளவோ சொல்லிப் பாத்தும் வெளியே என்னைப் போகவிடலையே! அப்பவே நான் தீர்மானிச்சுட்டேன்,

உங்க அப்பன எனக்கு எதிரின்னு.

சா : போங்க, உங்களுக்கு ஒண்ணுமே தெரியலே.

சே : அறைஞ்சுடுவேன். எனக்கா ஒண்ணும் தெரியலே?

சா : விளக்கிச் சொல்ல எனக்கும் வெக்கமா இருக்கு.

சே : ரொம்ப வெக்கப்படாதே, அசிங்கமா இருக்கு.

சா : 'கல்யாணம் ஆயி முதல் தடவையா வந்திருக்காங்க, பெண்ணும் மாப்பிளேயும் வீட்டிலேயே கொஞ்சம் மகிழ்ச்சியா இருக்கலாமே; அதை வுட்டுட்டு மாப்ளே மாத்திரம் சினிமாவுக்குக் கிளம்பறேன்'னுத்தான் எங்கப்பா உங்களைத் தடுத்தார். இதெல்லாம் உங்ககிட்ட விளக்கிச் சொல்ல முடியுமா? அதுவுமில்லாமே .. (தயங்குகிருள்.)

சே : சொல்ல வந்ததைப் பூரா சொல்லிட்டு வெக்கப்படு. இத பாரு, எதுக்கு எடுத்தாலும் இப்படி வெக்கப்படறது எனக்குப் பிடிக்காது.

சா : எங்க வீட்டுப் படுக்கை அறை ரொம்ப ராசியானது. அதனுலேதான்....போங்க உங்ககிட்டே புட்டுப் புட்டுச் சொல்லணுமாக்கும்.

சே : ஆமா, ராசியானதுதான். உங்க அப்பன் தான் அரை டஜனுக்குமேலே பெத்து வைச்சிருக்காரே,' அதைப் பாத்தாலே தெரியுதே. அந்தக் கதை நம்பகிட்டே நடக்காது;

சா: ஏங்க, அப்ப நமக்குக் குழந்தையே பிறக்காதா?

சே: சேய்! அச்சானியமா பேசாதே! என்னே யாருன்னு நினேச்சே?

சா : உங்க அக்கா என்ன சொன்னுங்கன்னு....

சே: உன்னே வாயை மூடச் சொன்னுங்க. இன்னேக்கு என் காலேத் தூக்கம் அவ்வளவுதான்!

(படுக்கையை விட்டு எழுகிருன்.)

காட்சி-3.

[சேகரின் தமக்கை புவனுவும் சாரதாவும் உரையாடுகிருர்கள்.]

புவனு : என்ன சாரதா, ஏதாவது மாற்றம் உண்டா?

சா : இந்த உலகமே மாறினுக்கூட உங்க தம்பி மாறமாட்டார்.

பு : ம். கல்யாணம் ஆனதுக்கு அப்புறமாவது மாறுவான்னு நினேச்சேன்.

சா : அஞ்சுலே வளையாதது அம்பதுலே வளையுமா?

பு : சேகருக்கு இன்னும் முழுசா முப்பது வயசுகூட ஆகலயே!

சா : ஆனு ஐம்பது வயசுக்காரருக்கு இருக்க வேண்டிய சோம்பேறித்தனம் இவர்கிட்டே இருக்கு.

பு : ஒரு மாசம் ஆகலே; அதுக்குள்ளாற இந்த மாதிரி பேச உனக்கு என்ன துணிச்சல்?

சா : இதைச் சொல்ல ஒரு மாசம் வேண்டாம். ஒரே நாள்லே கண்டு பிடிச்சுட்டேன்.

பு : சரி, சரி, அவனைத் திருத்தறதுக்கு வழியப் பாரு.

சா : நீங்க அவருக்கு மட்டும் சகோதரி இல்லே. எனக்கும் சகோதரி மாதிரிதான். அதனுலே கொஞ்சம் எனக்கு உதவி பண்ணுங்க. அவரை எப்படித் திருத்தறதுன்னு சொல்லிக் கொடுங்க.

பு : அவன் சொல்லித் திருந்தறவன் இல்லே.

சா : அவரு சின்னக் குழந்தை மாதிரி நடந்துக்கிருரு.

பு : ஆமா. அந்த சின்னக் குழந்தைக்கு நீ விளையாட்டுப் பொம்மை வாங்கிக் கொடுத்து வேடிக்கை பாரு.

சா : நான் என்னுல முடிஞ்ச வரைக்கும் முயற்சி பண்றேன். எனக்கு நீங்கதான் வழிகாட்டணும்.

பு : சேகரோட பலம் என்ன, பலவீனம் எதுன்னு இதுக்குள்ளாற உனக்குத் தெரிஞ்சிருக்கும். அதனுல அவனேட பலவீனத்தைக் கெட்டியாப் பிடிச்சுக்கோ. ஒரு 'ஷாக் ட்ரீட்மெண்ட்' கொடு.

சா : நீங்கதான் என் வழிகாட்டி. இன்னும் ஒரே மாசத்திலே அவரை வழிக்குக்கொண்டு வரேன், பாருங்க.

காட்சி-4.

சே : சாரதா! சாரதா! காபி கொண்டு வா!

(தாமதம்.)

சே: என்ன ஆச்சு? ஆளேயே காணும்.

(மீண்டும் கூப்பிடுகிருன்.)

சே : ஏய்! சாரதா காதிலே விழுதா? குடும்பமே செவிடு போலே யிருக்கு. (ஆத்திரத்துடன் போர்வையை உதறி எறிந்து விட்டுப் படுக்கையை விட்டு எழுகிருன்.)

சே : அடே! மணி ஒன்பதுக்கு மேலே ஆச்சே? இவ ஏன் என்னே எழுப்பலே? குளிச்சுமுடிச்சு டிபன் சாப்பிட்டுட்டு ஆபீசுக்குப் போய்ச் சேர முடியாது போலேருக்கு. இன்னேக்கும் லீவு போட்டா அந்த மானேஜர் நம்மைக்ளோஸ் செஞ்சுடுவான்.

(ஒவ்வோர் இடமாகச் சாரதாவைத் தேடுகிருன். அடுப்படிக்கு அடுத்த

அறையில் தரையில் படுத்து உறங்கிக் கொண்டிருக்கிறாள்).

சே: ஏய் சாரதா! எழுந்திரு. இதென்ன இங்க வந்து படுத்துக்கிட்டு இருக்கே?

சா: (சோம்பல் முறித்து), காபி! காபி!

சே: (கோபமாக) கண்ணை முழிச்சுப் பாரு, எழுப்பறது உன் கணவன். உனக்கு நான் காபி கலந்துகிட்டு வந்து எழுப்பணுமா?

சா: (கண்ணை விழிக்கிறாள். ஆனால் படுக்கையை விட்டு எழவில்லை.) ஒரே அசதியா இருக்கு.

சே: சரி சரி. எழுந்திரு. எப்படித்தான் காலைலே இவ்வளவு நேரம் தூங்கறியோ?

சா: (அலட்சியமாக), எனக்குத் தூக்கம் வருது. தூங்கறேன். முடிஞ்சா நீங்களும் தூங்குங்களேன்.

சே: (திடுக்கிட்டு), என்னது நான் சொன்ன டயலாக்கைத் திருப்பி என் கிட்டயே சொல்லிக் காண்பிக்கறியா?

சா: (மெதுவாக எழுந்து), சரி, சரி, வாங்க, ரெண்டு பேரும் சேர்ந்து சமையல் பண்ணுவோம்;

சே: ஏய்! என்னை யாருன்னு நினைச்சே? அசல் ஆம்பிள்ளை!

சா: அப்ப ஒண்ணு செய்யுங்க.

சே: என்ன?

சா: பக்கத்து ஓட்டலுக்குப் போய் உங்களுக்கு வேணுங்கற டிபனைச் சாப்பிட்டுட்டு எனக்கு டிபன் பார்சல் வாங்கிட்டு வந்து கொடுத்துட்டு ஆபீசுக்குப் போங்க.

சே: இப்ப உன்கிட்ட சண்டை போட நேரமில்லை. ஆபீசுக்கு லேட்டாயிடும். தாமதமாப் போனா அந்தக் கடுவன் பூனை மானேஜர் என்னவமோ தன்னோட சொத்து பறிபோன மாதிரி கூச்சல் போடறான். சாயங்காலம் வந்து உன்னைப் பேசிக்கறேன்.

சா: சீக்கிரம் குளிச்சிட்டுப் புறப்படுங்க. எனக்கும் நேரமாச்சு.

சே: வீட்டோட இருக்கறவளுக்கு என்ன அவசரம்?

சா: விஷயம் தெரியாதா உங்களுக்கு?

சே: என்ன விஷயம்? சீக்கிரம் சொல்லித் தொலை. பேப்பர் படிக்க எங்க நேரம் இருக்கு? காலையிலே பேப்பர் பொத்துன்னு ஜன்னல் வழியா விழுது, அதுதான் தெரியுது. புதுக் கருக்கு அழியாமப் பழைய பேப்பர் காரன்கிட்டே நிறுத்துப் போடும் போதுதான் மறுபடியும் அது கண்ணிலே படுது. தப்பித் தவறிப் பேப்பரைப் பார்க்கலாம்னு ஆவலாத் தேடினா, அன்னைக்குப் பார்த்து எதிர்த்த வீட்டுக்கோ பக்கத்து வீட்டுக்கோ ஓசியிலே பறந்து போயிருக்கும். சரி, இப்போ விஷயத்தைச் சொல்லு.

சா: சரி, பேப்பரைத்தான் பார்க்கலே, போஸ்டரைப் பார்த்திருப்பீங்களே!

சே: என்னடி சஸ்பென்ஸ்?

சா: பக்கத்துத் தியேட்டர்லே கஜினி நடிச்ச புதுப்படம் இன்னைக்கு வந்திருக்கு.

சே: அப்படியா?

சா: அதுக்குப் பதினொரு மணி ஆட்டத்துக்குப் பக்கத்துவீட்டு மாமியும் எதிர்த்த வீட்டு அக்காவும் நானும் போகப் போறோம்.

சே: (பல்லைக் கடித்து) ஓஹோ, அவ்வளவுக்கு ஆயிட்டுதா?

சா: சாயங்காலம் சீக்கிரம் வாங்க, கதையைச் சொல்றேன்.

சே: எனக்குக் கதை சொல்லப் போறியா?

சா: முடிஞ்சாப் பாட்டும் பாடிக் காண்பிக்கறேன். இப்ப நீங்க சீக்கிரம் போயி சாப்பிட்டுட்டு எனக்கும் வாங்கிட்டு வந்திடுங்க. லேட்டாப் போனா மசால் தோசை தீர்ந்துடும்.

சே: உன்னை.... இரு! இரு! சாயங்காலம் வந்து பேசிக்கறேன். (பாத்ரூமை நோக்கிப் போகிறான்.)

காட்சி-5

[மாலையில் சேகர் சோர்வுடன் வீடு திரும்புகிறான். சாரதா மேக்காக டிரஸ் செய்துகொண்டு மகிழ்ச்சி கொப்பளிக்கக் காத்திருக்கிறாள்.]

சா: வாங்க, வாங்க!

சே: என்ன வரவேற்பெல்லாம் பலமா இருக்கு!

சா: ஏன் டல்லா இருக்கீங்க? ஆபீஸ்லே தூங்க முடியலியா?

சே: ஜோக்கா அடிக்கறே? அவனவன் வேலை செஞ்சுட்டு மாஞ்சு போயி வரான். நீ சீவிச் சிங்காரிச்சுக்கிட்டு இருக்கே?

சா: (சிணுங்கி), சரி! இனிமே நானும் உங்க மாதிரியே எப்பப் பார்த்தாலும் டல்லா இருக்கேன். திருப்தியா?

சே: சரி, சரி. கண்ணைக் கசக்காதே. ஒரு வண்டி மை உன் கண்ணிலே இருக்கு. அது கலங்கி முகமே பரவிடும். (முணுமுணுக்கிறான்) ஏற்கெனவே நீ ரொம்ப அழகு.

சா: என் அழகுக்கு என்ன குறைச்சல்? மூக்கு முழி எல்லாம் கடைஞ்சு எடுத்த மாதிரி எவ்வளவு அழகா இருக்கேன்னு நீங்க அன்னைக்குச் சொன்னீங்களே.

சே: ஆரம்பிச்சுட்டியா? நான் ஒரு மடையன். எப்ப எதைப் பேசறதுன்னு தெரியாம உன்கிட்ட உளறியிருக்கேன்.

சா: சீக்கிரம் டிரஸ் செஞ்சுக்கங்க. படத்துக்குப் போகணும்.

சே: படமா?

சா: ஆமாங்க. காலையிலே நாங்க பாத்த படம் அருமையா இருக்கு. கஜினி அஞ்சு ரோல்லே வந்து விளாசறான். பாட்டு எல்லாம் டாப்கிளாஸ். காமிரா ஏ ஒன். வசனம் பிரமாதம்.

சே: ஓ! விமரிசனம் வேறயா?

சா: சாயங்காலம் கிடைக்குமோ கிடைக்காதோன்னு காலைக் காட்சி பார்த்தபோதே மாலைக் காட்சிக்கு ரெண்டு டிக்கெட் ரிசர்வ் செஞ்சுக்கிட்டு வந்துட்டேன்.

சே: உனக்கு என்ன?

சா: முன்யோசனைன்னு பாராட்ட வேண்டாம். புறப்படுங்க. படம் ஆரம்பிக்கு முன்னால போகணும்.

சே: உன்னை! உன்னை..(பல்லைக் கடிக்கிறான்.)

சா: கீறல் விழுந்த பிளேட்டு மாதிரி சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்றீங்க. புறப்படுங்க. (வேறு வழியில்லாமல் சேகரும் வெளியே புறப்பட ஆயத்தமாகிறான்.)

காட்சி-6.

[சேகரின் அக்கா புவனா தம்பியின் வீட்டுக்கு வருகிறாள்.]

பு: என்னடா இது, வீடா அல்லது சோம்பேறி மடமா? போட்டது போட்டபடி கிடக்கே?

(சேகரும் சாரதாவும் ஆளுக்கு ஒரு மூலையிலிருந்து கொட்டாவி விட்டுக்கொண்டு வருகிறார்கள்.)

பு: நல்லா இருக்கு நீங்க குடும்பம் நடத்தற லட்சணம். அங்கங்க ஒட்டடை பிடிச்சுக் கிடக்கு.

சே: அவ வேலையே செய்ய மாட்டேங்கறா. என்னை விட சோம்பேறியா இருக்கா.

பு: ஏன், சாரதா சோங்கி சோங்கி இருக்கே, மசக்கையா?

சே: என்னது?

பு: மாங்கா, புளி, சாம்பல் இதெல்லாம் கண்டாப் பிரியமா இருக்கா?

சா: மாங்கா, புளி, சாம்பல் எனக்கு எப்பவும் பிடிக்கும்.

சே: நல்ல மனைவி வந்து வாச்சே எனக்கு.

சா: லட்சிய மனைவின்னு அன்னைக்குப் புகழ்ந்தீங்களே, மறந்து போச்சா?

சே: ஆரம்பிச்சுட்டியா? புவனா அக்கா, உன் உபதேசத்தைக் கேட்டுத்தான் அவ இப்படி ஆயிட்டா.

பு: கல்யாணத்துக்கு முந்திப் படு சோம்பேறியா இருந்தே. கல்யாணத்துக்குப் பிறகாவது நீ திருந்த வேண்டுமேங்கற நல்ல எண்ணத்திலே சாரதாகிட்டே சொல்லி உன்னைத் திருத்த ஷாக் ட்ரீட்மென்ட் கொடுக்கச் சொன்னேன்.

சா: அவரு போக்கிலேயே போயி அவரைத் திருத்தவேணுமின்னு 'சினிமா சினிமா'ன்னு அவர் உசிரை எடுத்தேன்.

சே: அது மட்டுமல்ல. என்கூடப் போட்டி போட்டுக்கிட்டுத் தூங்க ஆரம்பிச்சா. இப்ப வீட்டு அடுப்பிலே பூனை தூங்குது.

சா: அவருக்காகத்தான் முதல்லே அப்படி நடக்க ஆரம்பிச்சேன். ரொம்பக் கஷ்டப்பட்டு நடிச்சேன். கடைசியிலே நானும் அவரு மாதிரியே ஆயிட்டேன்.

சே: சுறுசுறுப்பு என்ன விலைன்னு கேக்கறா.

பு: நல்ல ஜோடிப் பொருத்தம். (சாரதா வாந்தி எடுக்கிறாள்.)

சே: அக்கா, அவளை டாக்டருக்கிட்டே அழைச்சிட்டுப் போ. நான் கொஞ்ச நேரம் தூங்கறேன்.

பு: பொறுப்பத்த பயலே. உனக்குக் குழந்தை பொறக்கப் போகுதடா. அதுக்கு அப்புறமாச்சும் நீங்க ரெண்டு பேரும் திருந்துங்க.

*

நிறுவனம்: 1936 தொலைபேசி: 108

அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்

நிறுவனர்: அமரர்
S. பெத்தண்ண நாடார்

குளிப்பதற்கோர் குளுமை

வெண்சங்கு
சீயக்காய்த் தூள்

(ஸ்பெஷல்)

5 காசு, 10 காசு, 100 கிராம், 200 கிராம்
பாக்கெட்டுகளாகக் கிடைக்கும்

தினசரி குளிப்பதற்கும், பாத்திரங்களைப்
பளிச்சிட வைப்பதற்கும்

அமர்ஜோதி
பிராண்ட்
அரப்புத் தூள்

உரிமையாளர்

S. பெத்தண்ணன் செல்லதுரை (செல்வம்)

வெண்சங்கு, அமர்ஜோதி சீயக்காய்த் தூள்

கீழவாசல், தஞ்சாவூர்-613 001.

மறவா வரம்

பஸ்மாசுரன் புத்திசாலி. ஒரு வரத்தைப் பெற்றான். அதன் விளைவாகத் தன் தலையை மட்டும் தடவிக்கொண்டு அழிவைத் தேடிக்கொண்டான். மற்றவர்களின் தலைகளைத் தடவித் திணறடிக்கவில்லை. மைடாஸ் என்னும் பேராசை பிடித்த மன்னன் தொட்டதெல்லாம் பொன்னாக வரம் பெற்று மண்ணைக் கவ்வினான். போகட்டும். மற்றவருக்கு அதனால் ஒரு தீங்கும் நேரவில்லை.

கைகேயி இரண்டு வரங்களைப் பெற்று லாபம் அடையப் பார்த்தாள். தசரத மன்னன் மறைந்தான். தன் மைந்தன் அரசாளவில்லை. இராமன், சீதை, இலக்குமணனுடன் வனவாசம் புரிய நேரிட்டது. அதன் முடிவில் இராவண வதம் நிகழ்ந்தது. இராவணன், இராமனுக்குச் சரிசமமாகப் போர் புரிந்து வீர சொர்க்கம் எய்தினான். புத்திசாலி! மரணமடையும்போது வரம் கேட்டு மற்றவரைப் பழி தீர்த்துக் கொள்ளவில்லை.

நரகாசுரன் தான் செய்த தீவினைகளுக்குப் பலியானான். நல்லதொரு முடிவு! அவன் ஆன்மா சாந்தியடையட்டும். அதற்குக் குறுக்கே ஒருவரும் நிற்கவில்லை. அப்படியிருந்தும் இறக்கும் தறுவாயில் சாமர்த்தியமாக ஒரு வரத்தைக் கோரிப் பெற்றான். முன்கூட்டியே திட்டமிட்டுத்தான் இதைச் செய்திருக்க வேண்டும். எப்படியோ தன் வஞ்சத்தைப் பிற்காலச் சந்ததியார்மீது தீர்த்துக் கொண்டான். எல்லாரும் வரத்தை வேண்டுவது சுயநலத்துக்காக. நரகாசுரன் சுயநலமற்றவன். சொந்த லாபத்துக்காக வரத்தை வேண்டவில்லை. அவன் அடைந்த முக்தியை உலகில் நினைவூட்டி நிலைத்து நிற்க 'மறவா' வரம் பெற்றான். அவ்வளவுதான்!

வகை வகையான இனிப்புப் பண்டங்கள், பலரகத் துணி வகைகள், பட்டாசுகள், வாணங்கள்! இவற்றின் விசுவரூபத்தைச் சற்றேனும் சிந்தித்து எதிர்பார்த்திருக்கமாட்டான், முக்தியடைந்த நரகாசுரன். தலையில் சிக்குப் பிடிக்காதிருக்கத் 'தீவளிக்குத் தீவளியாவது' மக்கள் எண்ணெய் தேய்த்துத் தலை முழுகட்டுமே என்றே நினைத்திருப்பான். சிக்கனத்தையொட்டி ஆண்டுக்கொரு முறை என்ற வரம்பை வகுத்தான்.

அவன் கேட்ட வரத்தில் தலை தீபாவளி என்ற வைபவம் இடம் பெறவேயில்லை. மாமனார்கள் மீது தனிப்பட்ட விரோதம் அவனுக்கு இருந்ததாகச் சான்றுகள் கிடையா. வைரமோதிரம், டிஜிடல் வாட்ச், சிஃப்பான், பட்டுப் புடைவைகள், பாலியெஸ்டர் சூட்டு கோட்டுகள் அக்காலத்தில் தோன்றவில்லை.

தீபாவளிப் பரிசு என்று ஒன்றும் கிடையாது. பஸ்மாசுரன் தன் தலையை மட்டும் தடவி ஏமாந்தது போல், நரகாசுரன், மற்றவர் தங்கள் தலைகளைத் தடவி ஏமாறட்டும் என்ற எண்ணத்தில் மறையவில்லை. தான் பெற்ற வரம் திசை மாறிப்போகிறதே என்று மறுபிறவியெடுத்து வரத்தையும் வாபஸ் பெற்று, கொண்டாட்டத்தில் புதியதொரு திருப்பத்தை ஏற்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. தீபாவளியன்று அறவே மறந்து அவனைச் சம்பந்தப்படுத்தாத கேளிக்கைகளில் ஈடுபடுத்திக்கொள்ளும் மாந்தர்கள் தனக்கு இழைக்கும் அவமானம் என்று கருதக்கூடும். மறுபடியும் அவன் தோன்றட்டும். பிறகு யாருக்கு ஏமாற்றம் என்று பார்க்கலாம். 'வாழ்க நரகாசுரன்!'

கி.ராதாகிருஷ்ணன்

தந்தி: SIEVES
த.பெ.எண் 7
ASOK
போன்:
ஆபீஸ்: 3192
பேக்டரி: 3193
MADE IN INDIA
ரைஸ் மில் பேன் பாக்ஸ்
ரைஸ் ஹல்லர் சல்லடைகள்
கடலை உடைக்கும் டிகார்டிகேட்டர்கள்
(1) "அசோக்" ரைஸ் ஹல்லர் சல்லடைகள். (4) நெல் அவியல் தொட்டிகள்–சல்லடைகள் (7) ரைஸ் மில் பேன் பாக்ஸ்
(2) "அசோக்" காபி ஹல்லர் சல்லடைகள், (5) கடலைப்பெட்டி சல்லடைகள் (8) கடலை உடைக்கும் மிஷின்கள்,
(3) பருப்பு அலசு கை சல்லடைகள், (6) தேவையான சல்லடை ரகங்கள், (9) பருப்பு அலசும் மிஷின்கள்
நவீன அரிசி ஆலை ஹல்லர் சல்லடைகளும் கிடைக்கும்.
"சிறந்த முறையில் 38 வருட காலமாகத் தயாரிப்பவர்கள்;"
ஸ்ரீராமகிருஷ்ணா & கோ.,
சல்லடை தயாரிப்பாளர்கள், விருதுநகர்.
பார்ட்னர்கள்: 1. C. வீராசாமி 2. V. ஜனார்த்தனன்
ஆபீஸ்: 267, ராமமூர்த்தி ரோடு, விருதுநகர் - 626001 போன்: இல்லம் 3126

அனைவருக்கும் எங்கள் இதயம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்

திருச்சி ஸ்டீல் ரோலிங் மில்ஸ் லிமிடெட்

தபால் பெட்டி எண்: 603, செந்தண்ணீர்புரம்,
திருச்சிராப்பள்ளி - 620 004, தமிழ்நாடு.
(தொலைபேசி எண்கள்: 25301, 25302, 25303, 25304)

எங்கள் தயாரிப்புக்கள்:
தரத்தில் சிறந்த *"TSRM"* முத்திரையுள்ள முறுக்குக் கம்பிகள், சாதா கம்பிகள், பட்டைகள், ஆங்கிள்கள், சதுரங்கள், கேட் சானல், ஸ்டீல் காஸ்டிங்குகள், மற்றும் தரமான இரும்பு வலைகள்.

நீங்கள் உங்களது கட்டிடங்களுக்குத் தேவையான முறுக்குக் கம்பிகளை வாங்கும் பொழுது அவற்றில் *'TSRM'* முத்திரை இருக்கிறதா என்று கவனித்து வாங்குங்கள். உங்கள் தேவைககு அருகிலுள்ள *'TSRM'* டீலரை நாடவும் அல்லது எங்கள் முகவரிக்கு எழுதவும்.

பதிவு அலுவலகம்: 290, மேல மாசிவீதி,
மதுரை - 625 001.
தொலைபேசி: 24385

—நாகசுந்தரம்

மகிழ்ச்சிகரமான தீபாவளி

இந்தியாவின் தலை சிறந்த
தொலைபேசி கம்பெனி வழங்கும்
நல்லுறவு அடையாளச் சின்னங்கள்

ஐடிஐ

இந்த விழா காலத்தில் தனது நல்வாழ்த்துக்களை தெரிவிக்கின்றது. பக்கத்து, தூரத்து மக்களை இணைக்கும் சேவை. மக்களை ஒன்றுபட வைக்கும் தொடர்பு பணியை ஆற்றுகிறது.

தொடர்பு கொள்ளச் செய்வதே
எங்களது சேவை

ITI இந்தியன் டெலிபோன்
இண்டஸ்டிரீஸ் லிமிடெட்

பெங்களூர் * நைனி * ஸ்ரீநகர் * ரேபரலி * பாலக்காடு

கார்போரேட் ஆபீஸ்
16, மியூசியம் ரோடு, பெங்களூர் 560 001
தொலைபேசி: 566116 கிராம்ஸ்: "ஐடிஐ"
டெலக்ஸ்: 045-8202

SAA/ITI/212

மருமகள் மனைவி ஆகிறாள்

- அய்க்கண் -

‘டு பி, ஆர், நாட் டு பி’ என்று குழம்பிக்கொண்டிருந்தானுமே ஹாம்லெட், அவன் சேகரைப் பார்த்திருந்தால், ‘நான் எவ்வளவோ தேவலை’ என்று திருப்திப் பட்டுப் போயிருப்பான்.

அந்த விஷயத்தை அப்பாவிடம் சொல்வதா, வேண்டாமா என்று ஆயிரம் தடவைக்கு மேல் யோசித்துவிட்டான். யோசிக்க யோசிக்க, அவனுடைய குழப்பம் அதிகமாகிக் கொண்டேதான் இருந்தது.

அப்பாவிடம் அவனுக்கு அவ்வளவு பயம்; அவ்வளவு மரியாதை. தான் ஒரே பிள்ளை என்பதற்காக அவனை எவ்வளவு செல்லமாக வளர்த்து வருகிறார் அவர்.

அவருடைய முன் அனுமதி இல்லாமல், அவனுடைய வாழ்க்கையிலே செய்த ஒரே ஒரு காரியம்—இதுதான்:

இதை அப்பாவிடம் சொல்லலாமா? எப்படிச் சொல்வது? இவ்வாறு அவன் யோசித்து யோசித்து ஒரு முடிவுக்கு வருவதற்குள், பஞ்சாயத்துத் தேர்தலே வந்துவிடும் போலிருந்தது.

தட்டுத் தடுமாறி அவரிடம் அந்த விஷயத்தைச் சொல்லிவிட்டால் அவர் என்ன சொல்வார்?

உடனே, சீறிக் குமுறி, தாவிக் குதித்து, பொங்கித் துடித்து ஆத்திரப்படாவிட்டாலும், குறைந்த பட்சம் என்ன சொல்லுவார்?

‘சேகர்! நீ காதலிக்கிறதைப் பத்தி நான் வருத்தப்படவோ, கோபப்படவோ இல்லை. ஆனால் நீ காதலிக்கிற பெண் உன் தகுதிக்குப் பொருத்தமானவளான்னு யோசிச்சுப் பார்த்தியா? இதைவிட நீ அமெரிக்காவிலேருந்து ஒரு வெள்ளைக்காரியை இழுத்துக்கிட்டு வந்து, ‘இதோ, இவள்தான் உங்க மருமகள்னு’ சொல்லியிருந்தால்கூட, நான் சந்தோஷப்பட்டிருப்பேன்’ என்று அழுத்தமான குரலில் சொல்லுவார்.

அவர் வருத்தப்படுவதிலும் நியாயம் இல்லாமல் இல்லை.

நகரத்திலேயே ஒரு குறிப்பிடத்தக்க லட்சாதிபதி அவர். சாதாரண டாக்ஸி டிரைவராக இருந்து, உழைப்பாலும் முயற்சியாலும் முன்னேறி, இன்று பெரிய பணக்காரராகியிருக்கிறார்.

தண்டபாணி ட்ரான்ஸ்போர்ட்ஸ் என்ற பஸ் கம்பெனிக்கும், மைசூரில் இரண்டு பெரிய காபி எஸ்டேட்டுக்கும் உள்ளூரில் இரண்டு ஏ.ஸி. தியேட்டர்களுக்கும் சொந்தக்காரர் அவர்.

எதைச் செய்தாலும், ஒரு தனித்தன்மையோடு செய்கிற பழக்கம் உள்ளவர் தண்டபாணி.

அந்த நகரத்திலேயே அவருடைய பங்களா மட்டும், புதுமையான முறையில் — பெர்ஷிய ஆர்க்கிடெக்சர் பாணியில் கம்பீரமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கும்.

மற்ற டிரான்ஸ்போர்ட் பஸ்களைவிட, அவருடைய பஸ்களில் பாட்டு ஒலிபெருக்கி, கண்ணாடி, தண்ணீர்த் தொட்டி முதலிய வசதிகளும் அலங்காரங்களும் வண்ணப் பூச்சுகளும் தனித்தன்மையோடு விளங்கும். தூரத்தில் வரும்போதே ‘இது தண்டபாணியின் பஸ்’ என்று சொல்லும்படியாக, ரதம்போல் பறந்து வரும்.

அவருடைய தியேட்டர்களில் எப்போதும் புதுப் புதுப் படங்களாகத்தான் வெளிவரும். பழைய படங்களைச் ‘செகண்ட் ரன்’ போடுவதே கிடையாது. தியேட்டருக்குள், பாதியில் நிறுத்தாத ஏ.ஸி. வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள ஆயாக்கள், கைக்குழந்தைகளுக்குத் தொட்டில் வசதி.. இத்யாதி வசதிகள்.

இப்படியாகத்தானே, அவருடைய வீடு, கார், ஆபீஸ், தொழில் எல்லாமே, ‘இது தண்டபாணியினுடையது’ என்று குறிப்பிட்டுச் சொல்லும்படியாக இருப்பது வழக்கம். அவர் தம் மகனை அமெரிக்காவுக்குப் படிக்க அனுப்பியதும் இதே மாதிரி ‘தண்டபாணியின் மகன் அமெரிக்காவில் படித்தவன்’ என்று பெருமையாகப் பேசுவதைக் கேட்கத்தான்.

அமெரிக்கா போய்த் திரும்பிய மகன், ஒரு வெள்ளைக்காரியை மணந்து வந்திருந்தால்கூட, உண்மையில் தண்டபாணி மகிழ்ச்சியடைந்திருப்பார். ‘தண்டபாணியின் மருமகள், அமெரிக்கப் பெண்’ என்ற தனிச் சிறப்பு அவருக்குக் கிடைத்திருக்குமே? ஆனால் அவருடைய புத்திரனோ, அமெரிக்காவெல்லாம் போய், கடைசியில் ‘பி இண்டியன்; பை இண்டியன்’ என்ற வாசகத்தைத் தாரக மந்திரமாய் ஏற்று, ஏழை நீலாவின் மேல் காதல் கொண்டுவிட்டான்.

உண்மையில், அவனது காதல், தெய்விகக் காதல் மாதிரிதான். அவன் நீலாவைச் சந்தித்தது, சிவன் கோயில் சந்நிதியில்தான்:

அமெரிக்காவிலிருந்து திரும்பியதும், சேகர் தன் நண்பனை

அழைத்துக்கொண்டு, கோயிலுக்குப் புறப்பட்டான்.

''என்னடா, சேகர்! வெளிநாடு போனவனெல்லாம் ங்கே வந்தா தலைகீழா மாறிப் இபோயிடருன். ஸ்டேட்ஸுக்குப் போய்ப் படிச்சவன், பத்தாம் பசலி மாதிரி சிவன் கோயிலுக்குக் கிளம்பறியேடா?'' என்று கேட்டான் நண்பன்.

''நான் எங்கே போனாலும் என் உடம்பிலே ஓடற ரத்தம், இந்திய ரத்தம் தானேடா? அது மட்டும் இல்லே சுகு! இப்போ அமெரிக்கா உள்பட எல்லா மேல்நாடுகளுமே 'ஹரே ராமா, ஹரே கிருஷ்ணா'னு நம்ம கோயிலுக்குத் தான் வர்ருங்க'' என்றான் சேகர்.

சேகர் கோயிலுக்குள் நுழைந்ததும், அவனைப் பார்த்து விட்டார் குருக்கள்.

மற்ற அர்ச்சனைகளையெல்லாம் ஒத்திப் போட்டுவிட்டு, சேகர் பெயருக்கு அவசர அர்ச்சனை செய்து, திருநீறு, கர்ப்பூரத் தட்டோடு அவன் முன்னே வந்து நின்றார் குருக்கள்.

'தண்டபாணியோட மகன், அமெரிக்கா போயிட்டு வந்திருக்காரு' என்ற சலசலப்பு அங்கே எழுந்து பரவியது.

சந்நிதியில் நின்ற அத்தனை பேரும், அவன் பக்கம் திரும்பி, கன்னத்தில் போட்டுக் கொள்ளாத குறையாகத் தரிசித்துக்கொண்டிருந்தார்கள்.

அந்தக் கூட்டத்தில் ஒரே ஒரு இளம் பெண் மட்டும், அவன் பக்கம் திரும்பாமல், ஆண்டவனைப் பார்த்தபடி, ஏதோ ஸ்தோத்திரத்தை மெதுவாகச் சொல்லிக்கொண்டிருந்தாள்.

கோயில் சிலைகளுடே, தானும் ஓர் அற்புத அழகுச் சிலையாக நின்ற அவளைப் பார்த்த சேகருக்கு— அவளை எங்கோ முன்பு பார்த்த நினைவுப் பொறி, மனத்துக்குள் தெறித்தது.

அவளது அழகுருவத்தை நெஞ்சுக்குள் பதித்துக்கொண்டு வெளியே வந்த சேகர், சுகுமாரிடம் மெதுவாகக் கேட்டான்.

''சுகு! சந்நிதியில் பார்த்தோமே, ஒரு பெண், அவள் யார்னு உனக்குத் தெரியுமா?''

நண்பன் கடகடவென்று சிரித்தான்:

''நல்ல வேளை! நீ அமெரிக்காவுக்குப் போனதினாலே, 'ஹரே ராமா ஹரே கிருஷ்ணா'னு சாமியாராகி விட்டியோன்னு நினைச்சேன். பரவாயில்லே. அழகான பொண்ணைப் பார்த்த உடனே, அவ யார்னு கேக்கிற அளவுக்கு நீ இளைஞனாய்த்தான் இருக்கே'' என்று கேலி செய்த சுகுமார் தொடர்ந்தான்:

''சேகர்! நம்ம ஊரிலே பரமசிவம்னு ஒரு வாத்தியார் — ஆறுமுகா ஹைஸ்கூலிலே வேலை பார்க்கிருரே, தெரியுமா?''

''என்னடா இப்படிக் கேக்கிறே? அவர் என்னுடைய மாமாதானே?''

''அடடே! அது உனக்கு இன்னும் ஞாபகம் இருக்கா?'' என்று மறுபடியும் சிரித்தான் நண்பன்.

சுகுமார் சிரிப்பதில் அர்த்தம் இல்லாமல் இல்லை.

தண்டபாணி பணக்காரரான பிறகு, அவருக்கும் பரமசிவத்துக்கும் தொடர்பு அறுந்து விட்டது. அதாவது அப்படி அறுத்துக் கொண்டு விட்டார் தண்டபாணி.

சாதாரண டிரைவராக இருந்து, தாம் முன்னேறிப் பணக்காரரானதைப் போல், தம் மைத்துனர் பரமசிவமும் பணக்காரராக வேண்டும் என்று எதிர்பார்த்தார் தண்டபாணி. அது அந்த ஆசிரியரால் முடியுமா?

அந்த ஏழை ஆசிரியருடைய தொடர்பை அறுத்துக் கொள்ள, புதிய பணக்காரர் சிறிதும் யோசிக்கவில்லை.

ஆசிரியர் பரமசிவமும் ரோஷக்காரர். மானம், கௌரவம், சுயமரியாதையெல்லாம் இலக்கியங்களிலிருந்து படித்துத் தேர்ந்தவர். ஆகவே, மதியார் வீட்டு வாசலை அவர் மிதிப்பதே இல்லை.

பரமசிவத்தின் தங்கை கல்யாணிக்குச் சிறிது வருத்தம் இருந்தது. ஏழை அண்ணன் தன் பங்களாவுக்குள் வருவதேயில்லை என்ற வருத்தம் சில ஆண்டுகள் தான் இருந்தது. பின்பு, அவளுடைய ஏ. ஸி. பங்களாவின் கதவுபோல், அவளது பிறந்தகத்து உறவும் மூடிக் கொண்டுவிட்டது.

நண்பன் சுகுமார், தன் மாமாவை நினைவுபடுத்தியவுடன், சேகருக்குச் சட்டென்று நீலாவின் பிஞ்சு முகம் மனத்தில் நிழலாடியது.

சிறுவயதில் இருவரும் சேர்ந்து விளையாடிய நினைவுகள், இப்போது மீண்டும் எழுந்து நெஞ்சுக்குள் விளையாடின.

''ஓ! அந்த நீலா இப்போது எவ்வளவு பெரியவளாகப் பேரழகியாக வளர்ந்துவிட்டாள்!''

நீலாவைத் தான் காதலிப்பதை அப்பாவிடம் சொல்லும்போது அவர் எப்படியெல்லாம் வருத்தப்படுவார் என்பதைக் கற்பனை செய்துகொண்டிருந்தான் சேகர்.

தம்முடைய ஒரே மகன் கல்யாணத்தை இதுவரை யாரும் செய்யாத முறையில் — தமக்கே உரிய 'தண்டபாணித் தனிப் பாணி'யில் செய்ய வேண்டும் என்று அவர் திட்டமிட்டிருக்கிருர் என்பது சேகருக்குத் தெரியும்.

அவருடன் சம்பந்தம் செய்துகொள்ள எத்தனையோ மில் முதலாளிகளும், எஸ்டேட் சொந்தக்காரர்களும், பஸ் உரிமையாளர்களும் பரம்பரைப் பணக்காரர்களும் முற்றுகையிட்டுக் கொண்டிருந்தார்கள்.

இந்த நிலைமையில், சேகர் ஓர் ஏழைப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புவதை அறிந்தால் அவர் மனம் என்ன பாடுபடும்?

தண்டபாணியின் மருமகளாக வரத் தகுதியில்லாத நீலாவைவிட ஒரு வெளி நாட்டுக்காரியைத் தன் மருமகளாக ஏற்றுக் கொள்ள அவர் தயாராயிருப்பார்..

'அப்பா! நீலாவுக்குத் தகுதி இல்லைனு சொல்லிவிட முடியாது. அவள் யார்? என் சொந்த மாமா மகள் இல்லையா? அம்மாவோட அண்ணன் மகள்தானே நீலா? அவங்க வீட்டிலே நீங்களே சம்பந்தம் பண்ணிக்கிட்டிருக்கீங்களே?' என்று அவன் அப்பாவைத் திருப்பிக் கேட்கலாம்.

அவர் என்ன சொல்வார்?

''அந்த வாத்தியார் வீட்டிலே நான் சம்பந்தம் பண்றபோது, நான் வெறும் டாக்ஸி டிரைவர். ஆனல் இப்போ—? நீ என்னுடைய ஒரே பிள்ளை— ஒரு லட்சாதிபதியோட பிள்ளை; ஞாபகம் வச்சுக்கோ'' என்று கம்பீரமாகச் சொல்வார்.

''அதுக்காக, பழையதெல்லாம் மறந்திடலாமா, அப்பா?'' என்று நாசூக்காக அவரை மடக்கலாம்.

அப்படி எளிதாக மடங்கி விடுவாரா தண்டபாணி?

'பழையதை மறந்திடக் கூடாது தான்; அதுக்காக, பழசுக்கே திரும்பிப் போறது புத்திசாலித்தனமா?' என்று அவர் திருப்பி மடக்கினர் என்றால், அவன் 'க்ளீன் போல்டு' ஆகிவிடுவானே!

'என்ன ஆனாலும் தன் விருப்பத்தை அப்பாவிடம் சொல்லி விடுவோம்' என்ற தீர்மானத்துக்கு வந்தான்.

ஒரு நாள், எப்படியோ தைரியத்துடன் தகப்பனாரிடம் விருப்பத்தைச் சொன்னபோது அவர் ஒரு நிமிஷம் நின்று விட்டார்.

ஒரு நிமிஷந்தான்.

மறுநிமிஷம் — அவருடைய தனித்தன்மையான பாணியில் பிரச்சினையை எதிர்கொண்டார்.

''போகட்டும். மற்ற லட்சாதிபதிகள் மாதிரியின்றி உன் காதலை உன் விருப்பப்படியே, கல்யாணத்தை நடத்தி வைக்கிறேன். கவலைப்படாதே!'' என்று அன்புடன் மகனின் தோளில் தட்டி, அந்தச் சிக்கலையும் தனக்குச் சாதகமாகத் திருப்பிக் கொண்டு விட்டார், அந்தத் 'தனிப்பாணி.'

'அந்தஸ்து, தகுதி எல்லாவற்றையும் உதறிவிட்டு, உண்மைக் காதலுக்கு மதிப்பளித்து, ஏழை உறவுப் பெண்ணைத் தம் மருமகளாக ஏற்றுக் கொண்டிருக்கிருரே தண்டபாணி, அவர் உண்மையில் தனிப்பட்ட மனிதர்தானே!' என்று மக்கள் பேசிக் கொள்ளும்படியாக, திருமணத்தை நடத்தத் திட்டமிட்டார் அவர்.

நீலாவுக்கு அந்தஸ்து, தரம், செல்வம் எல்லாவற்றிலும் குறை இருந்தாலும், 'இவள் தண்டபாணியின் மருமகள்' என்று சொல்வதற்கேற்ற குணாதிசயங்கள் நிறைய இருந்தன.

அவள் தெருவில் நடந்துபோனல் 'யார் இந்த அழகி?' என்று எல்லாரும் திரும்பி நின்று வியக்கிற அளவுக்கு அழகும் கவர்ச்சியும் உடையவள் அவள்.

ஒரு நாள், அவள் கல்லூரி பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தபோது, அந்த வழியில் வந்த ஒரு

சினிமா டைரெக்டர், 'என் படத்தில் கதாநாயகியாக நடிக்கிறியாம்மா? நடிப்பைப் பற்றி நீ கவலைப்படாதே. நான் கல்லையும் நடிக்க வைத்து விடுவேன்; குரலைப் பற்றி நான் கவலைப்படவில்லை. பின்னணிக் குரல் வைத்துக் கொள்ளலாம். உன் அழகும் கவர்ச்சியும் இருந்தால் போதும்; ஒரே படத்தில் உயர்ந்த நட்சத்திரமாகித் தெலுங்கு, ஹிந்தி எல்லாம் புகுந்து, அகில இந்திய நட்சத்திரமாகி, பிறகு தமிழ்ப் படத்தையே மறந்து விடலாம். என்ன சொல்கிறாய்? இதோ பிடி முன் பணம் ''என்று வலிய வந்து கெஞ்சிக் கூத்தாடியதும், நீலா மறுத்துவிட்டதும் எல்லாருக்கும் தெரிந்த விஷயம்.

தன் செல்ல மகனின் விருப்பத்தை நிறைவேற்ற நினைத்த தண்டபாணி, உடனே தன் மைத்துனர் பணியாற்றும் ஹைஸ்கூலுக்குப் போன் செய்தார்.

''ஹலோ யார் பேசறது?'' என்று எதிர் முனையில் கேட்டார் பரமசிவம்.

''ஹலோ, நான்தான் தண்டபாணி, பிரஸிடெண்ட் ஆப் சேம்பர் ஆஃப் காமர்ஸ் பேசறேன்.''

'ஸாரி, இது ஸ்கூல்; நான் ஏழை ஆசிரியர் பரமசிவம். வியாபாரம் பற்றி எல்லாம் பேசற இடமில்லை. ஆளும் நான் இல்லை'' என்று போன் வழியாக, தண்டபாணியின் திமிருக்கு அடி கொடுத்தார் பரமசிவம். காரியம் சாதிப்பதற்காக வளைந்து கொடுக்கத் தெரியாதா தண்டபாணிக்கு.

தன் தோரணையை மாற்றிக் கொண்டு, விஷயத்தைச் சொன்னார் அவர்.

பாமசிவத்துக்கு ஒரு பக்கம் ஆச்சரியம்; இன்னொரு பக்கம் அவநம்பிக்கை.

தண்டபாணியாவது, நீலாவை மருமகளாக ஏற்றுக்கொள்வதாவது?

''அப்படின்னா, நீங்களே முறைப்படி எங்க வீட்டுக்கு வந்து பெண் கேட்க வரலாமே?'' என்றார் பரமசிவம்.

''நானும் கல்யாணியும் நிச்சயம் உங்க வீட்டுக்கு முறைப்படி வந்து பெண் கேக்கலாம்னுதான் இருக்கோம். அதுக்கு முன்னாலே, சாதாரணமாக, உங்க விருப்பமும் நீலா விருப்பமும் எப்படி இருக்குதுனு தெரிஞ்சுக்கத்தான் போன் பண்ணினேன்.''

''சரி. இதிலே விருப்பம் சொல்லவேண்டியவ நீலாதான்; அவளுடைய அபிப்ராயத்தைக் கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டு, உங்களுக்குப் போன் பண்றேன், அதுக்குப் பிறகு நீங்க வரலாம்'' என்று சொல்லி முடித்தார் பரமசிவம்.

அன்று பள்ளி வேலை முடிந்ததும், ஒரு முக்கிய காரியமாகக் கடைத்தெருவரை போய்விட்டு வீடு திரும்பினார் பரமசிவம்.



கல்லூரியிலிருந்து திரும்பிய நீலா, ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள்.

எதிரே இன்னொரு நாற்காலியில் பரமசிவத்திடம் ட்யூஷன் படிக்கும் பள்ளி மாணவன் உட்கார்ந்திருந்தான்.

பரமசிவம் உள்ளே நுழைந்ததும், பையன் எழுந்திருந்தான்.

''ஸார், உங்களைத் தேடி ஒருத்தர் வந்திருந்தார், ஸார்!'' என்று பவ்யமாகத் தெரிவித்தான் அவன்.

''யாரப்பா அது?'' - என்று விசாரித்தார் பரமசிவம்.

புத்தகத்திலிருந்து தன் நீண்ட விழிகளை மீட்டு, மாணவன் பக்கம் திரும்பினாள் நீலா.

''ஸார்! நம்ம தெருக்கோடியிலே புதுசா ஒரு ஒர்க்ஷாப் வச்சிருக்காரே 'ரவி'ன்னு ஒருத்தர்-அவரோட அப்பாதான் வந்திருந்தார்'' என்று விவரம் சொன்னான் பையன்.

ரவி, வேறு யாரும் இல்லை. பரமசிவத்தின் மனைவி கமலாவின் அண்ணன் மகன்தான்.

ரவியின் அப்பா, ஒரு கான்ஸ்டபிள். ரவி, தன் ஏழைமையையும், வசதிக் குறைவையும் வென்று உதவிச் சம்பளத்தில் பி.இ. படித்து முடித்து, ஒரு பாங்க் நிதியுதவி பெற்று சொந்தமாக ஒர்க் ஷாப் தொடங்கி, உழைத்து முன்னேறிக் கொண்டிருக்கிற இளைஞன்.

''ஓ! சந்தானமா? என்ன விஷயம்னு சொன்னார்? '' என்று பரமசிவம் பையனைக் கேட்டுக்கொண்டிருந்தபோதே, உள்ளேயிருந்து பரமசிவத்தின் மனைவி கமலா வந்தாள்:

''என்ன விஷயம்னு எனக்குத் தெரியும்: ரவிக்கு நம்ம நீலாவைக் கட்டிக் கொடுன்னு என்கிட்டே கேட்டுக்கிட்டேயிருக்கார் அவர் ..'' என்று முகஞ் சுளித்தாள் கமலம்.

அவளுக்கு நெடுநாளாகவே ஒரு குறை .

தான்தான் போலீசுக்கார வீட்டிலே பிறந்து, வாத்தியார் வீட்டிலே வாழ்க்கைப் பட்டுவிட்டோம். 'போக்கற்றவனுக்குப் போலீஸ் வேலை; வக்கற்றவனுக்கு வாத்தியார் வேலை' என்ற பழமொழியை முழுவதும் அநுபவித்து விட்டோம்; தன் மகளையாவது ஒரு நல்ல இடத்தில் கொடுக்கவேண்டும் . கடவுள் புண்ணியத்தில், அழகுக் கிளியாகப் பிறந்திருக்கின்ற மகளை, எந்தப் பணக்கார மாப்பிள்ளையாவது கொத்திக் கொண்டு போய்விடுவான்' என்று நினைத்துக் கொண்டிருந்தாள் தாய்.

ட்யூஷன் படிக்க வந்த பையனை அனுப்பிவிட்டுப் பரமசிவம் தண்டபாணி போன் செய்ததைப்பற்றிக் கூறினார்:

அதைக் கேட்டதும் கமலாவின் உடலெங்கும் லட்சம் லட்சமாய் இரத்த அணுக்கள் மகிழ்ச்சியில் பொங்கிப் பிரவகித்தன.

''அப்பாடா! நான் நினைச்சது வீண் போகலே; என் மகளுக்கு ஒரு நல்ல வழியை ஆண்டவன் காட்டிட்டான்'' என்று பூரித்த தாய், ''இதிலே யோசிக்கிறதுக்கு என்னங்க இருக்கு? உடனே அவங்களை நம்ம வீட்டுக்கு வரச் சொல்லுங்க'' என்று பறந்தாள்:

பரமசிவம், நீலாவைத் திரும்பிப் பார்த்தார்.

அவளுடைய நிலா முகத்திலே மேகம் படிவது போல் ஆசிரியருக்குத் தோன்றியது.

''நீலா! நீ என்னம்மா நினைக்கிறே?''

தாய் அவள் முன்னால் போய் நின்றாள்.

''ஏண்டி நீலா! ஒரு லட்சாதிபதி வீட்டு மருமகளாகிறதிலே உனக்குச் சந்தோஷமே இல்லியா? ஏன் இப்படியிருக்கே?''

''இதிலே சந்தோஷப்படறதுக்கு என்னம்மா இருக்கு?'' என்று நிச்சலனமாக, ஆனால் அழுத்தமாகச் சொன்னாள் மகள்..

மகளின் பதில் அழுத்தமாகத் தாயின் ஆசையில் விழுந்து உடைந்தது.

''என்னடி இப்படிச் சொல்றே? ஊரிலே தண்டபாணின்னா எவ்வளவு மதிப்பு இருக்கு? அவரோட பங்களா, கார், பணம், கௌரவம், செல்வாக்கு எல்லாம் எவ்வளவு? அந்த லட்சாதிபதிக்கு மருமகளாகிறதுக்கு எவ்வளவோ புண்ணியம் செஞ்சிருக்கணும்'' என்று துடித்தாள் கமலம்.

''அம்மா! மாமா கிட்டே இருக்கிற பணத்தைப் பெரிசா நினைக்கிறவங்களுக்குத்தான், அந்த மாமா பெரியவர்; எல்லாருக்கும் அப்படியில்லை. எப்போ நீயே சொன்னியே, தண்டபாணியோட பங்களா, தண்டபாணியோட கார், தண்டபாணியோட பணம்னு — அது மாதிரிதான் , நாளைக்கு என்னையும் பார்த்து, தண்டபாணியோட மருமகள்னு ஊரிலே சொல்லுவாங்க. ஆனால் அதிலே எனக்குப் பெருமை இல்லே. இன்னாருடைய மனைவின்னு சொல்றதிலே தான் ஒரு பெண்ணுக்குப் பெருமை.''

மகளின் விளக்கம் , இடியாகத் தாய் தலையில் விழுந்தது.

''என்னடி சொல்றே?''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே அப்பாவோட மாணவன் சொன்னானே — ரவியோட அப்பா வந்திருந்தார்னு — அது மாதிரி மத்தவங்க என்னை ரவியோட மனைவின்னு சொல்றதுதான் எனக்குப் பெருமை'' என்று உறுதியான குரலில் எழுந்த முழக்கத்தைக் கேட்டுத் திகைத்து நின்றாள் தாய். ❋

அசலைக் கண்டு அழுகை

நகலைக் கண்டு நகைத்தல்

போட்டோ: எஸ். பாலசுப்பிரமணியன்

அமிர்தாஞ்சன் அறியும் ஜலதோஷத் தொல்லைகளை
ஜலதோஷம் என்றாலே தாங்க முடியாத தொல்லைதான். அதைப்போக்க சுலபமான வழி, அமிர்தாஞ்சன். சிறிதளவு அமிர்தாஞ்சன் எடுத்து மூக்கிலும், தொல்லைதரும் இடங்களிலும் தேயுங்கள். ஜலதோஷத்திலிருந்து இதமான உடனடி நிவாரணம் கிடைக்கும்.
அமிர்தாஞ்சன் மற்ற மருந்துகளைப் போலல்ல. அமிர்தாஞ்சனில் உள்ள சக்திமிக்க 10 மருந்துப் பொருட்கள் உடனடியாக செயல்புரிந்து ஜலதோஷத்திலிருந்து உங்களுக்கு துரிதமாக நிவாரணம் அளிக்கின்றன. தீங்கு செய்யும் பின் விளைவுகள் எதுவுமில்லை.
85 ஆண்டுகளுக்கும் மேலாக புகழ்வாய்ந்த அமிர்தாஞ்சன் சுளுக்கு, உடல்வலி மற்றும் தலைவலி இவற்றிலிருந்தும் சிறந்த நிவாரணம் அளிக்கிறது.
எப்போதும் அமிர்தாஞ்சன் உங்கள் கைவசம் இருக்கட்டும். ஏனெனில் அது எப்போது தேவைப் படுமென்று சொல்ல முடியாது.
AMRUTANJAN
Pain Balm
AMRUTANJAN
PAIN BALM
அமிர்தாஞ்சன்
துரித நிவாரணம் உறுதியுடன் அளிப்பது. தீய பின்விளைவுகள் இல்லாதது.
OBM 7654 TM

வஸந்த பவன்

''ஏர்கண்டிஷன்
டீலக்ஸ் ரெஸ்டாரெண்ட்''
24, N. S. B. ரோடு,
திருச்சி-620 002.

"வேகா ரெஸ்டாரெண்ட்''
ஒரு நட்சத்திர அந்தஸ்து பெற்றது
20, காந்தி இர்வின் ரோடு,
சென்னை—600 008

உயர்தரச் சைவ உணவிற்கும், சிற்றுண்டிகளுக்கும், சிறந்த ஸ்வீட்,
காரங்களுக்கும் புகழ்பெற்ற 'திருநெல்வேலி அல்வா'விற்கும் சிறந்த இடம்

For your travel problems please contact

JANTHA TRAVELS

TIRUCHY - 620 002

National Permit Holders for Deluxe A/C Bus & Car Services
Phones: 27955 & 26112 **Madras Phone: 844083**

—நாகசுந்தரம்

உங்கள் இல்லங்களில்-உள்ளங்களில் என்றும் இருக்க வேண்டிய நூல்கள்

- ★ திருவலத்து தீபம் —ஆசிரியர் பகீரதன்
- ★ உன்னை நீ அறிந்துகொள்வது எப்படி? —சுவாமி சச்சிதானந்தா
- ★ பாட்டியின் கனவுகள் (ஞானபீட பரிசு பெற்றது) —சிவராம கரந்த்
- ★ பாரதியார் பயணக் கட்டுரை —'அமரகவி பாரதி'
- ★ *BHARATHI THE TAMIL POET* —'Rajaji'
- ★ *GURU AND DISCIPLE* —Swami Satchidananda

மற்றும் எண்ணற்ற பயனுள்ள வெளியீடுகள்

வெளியிடுவோர்:

கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம்

புத்தக வெளியீட்டுப் பகுதி
வேதாரண்யம் 614 810 -- தஞ்சை மாவட்டம்

ராமனுக்குக் கொண்டாட்டம்!

அம்மாக்காரி ஏகமாய்ச் சத்தம் போட்டாள்.

''ஏண்டா தடிராமா! எத்தனை நாளடா இப்படித் தின்றுவிட்டுத் தின்றுவிட்டுத் திண்ணையில் தூங்கப் போறே? எவ்வளவு காலத்துக்கு உன்னை உக்கார வைச்சு என்னாலே தண்டச் சோறு போட முடியும்? கடாமாடு மாதிரி வளர்ந்திருக்கிறாயே! என்றைக்குத்தான் உனக்குப் பொறுப்பு வருமோ?''

தடிராமனுக்கு அதிசயமாய் அன்று ரோஷம் பொத்துக்கொண்டது. ''சரி அம்மா. இன்றைக்கே நான் புறப்பட்டுப் போகிறேன். வழித் தீனிக்கு மட்டும் உன் கையாலே ஏதாவது பலகாரம் பண்ணிக்கொடு'' என்றான்.

இந்த மட்டும் பிள்ளையாண்டானுக்கு நல்ல புத்தி வந்ததே என்று அம்மாக்காரி நினைத்தாள். இருந்த மாவிலே ஆறேழு அடை தட்டினாள். ஒரு பொட்டலமாகக் கட்டி அவன் கையிலே கொடுத்தாள்.

அடுத்த கணமே தடிராமன் விடுவிடென்று வீட்டை விட்டு இறங்கி நடந்தான். அதே மூச்சில் எட்டி நடந்து ஊர் எல்லையைத் தாண்டினான். காட்டுப் பகுதிக்குள் நுழைந்தபோது நன்றாய் இருட்டிவிட்டது. தடிராமனுக்கும் வயிற்றைப் பசித்தது. எதிரே

இவை பேசினால்..!

எலுமிச்சம் பழம் : ஆனந்தமா ஜூஸ் பிழிஞ்சு உறிஞ்சாம, சும்மா ஸ்கூட்டர் சக்கரத்திலே வச்சு நசுக்கறாங்களே!

பூசணிக்காய்: ஆசையாய் அல்வா பண்ணித் தின்னாம, கோர மூஞ்சி வரைஞ்சு அலங் கோலம் பண்றாங்களே!

வாழைப்பழம்: சத்தமில்லாமே உரிச்சு விழுங்காம, ஊதுபத்தி சொருகி என்னை உதவாம அடிக்கிறாங்களே!

தெரிந்த குகைப் பக்கமாக ஒதுங்கிப் பொட்டலத்தைப் பிரித்தான்.

முதலாவதாக ஒரு முழு அடையை எடுத்து வாயில் போட்டுக் கொண்டான். ''இன்றைக்கு ஒன்று தீர்ந்தது!'' என்றான். அடுத்தாற்போல் இரண்டு அடைகளை எண்ணி வைத்தான். ''நாளைக்கு இரண்டு தீர்ந்துவிடும்!'' என்றான். மறுபடியும் மூன்று அடைகளை எண்ணித் தனியே வைத்தான். மீதம் ஒரு அடைதான் இருந்தது. நாலாம் நாள் அது நன்றாயிருக்குமோ என்னவோ?' ''ஏழையும் இன்றைக்கே தீர்த்துவிடுவோம்!'' என்று சொல்லிக் கொண்டான்.

அவன் இரவுப் போதுக்கு ஒதுங்க வந்த குகைக்குள்ளே ஏழு வேதாளக் குட்டிகள் குடியிருந்தன. ஆறு வேதாளக் குட்டிகள் தூங்கும்போது 'ஏழாவது' வெளியே காவலிருந்தது. தடிராமனின் பேச்சைக் கேட்டதும் அது பயந்து நடுங்கியது. இனியும் சும்மா இருந்தால் ஆபத்து என்று குகைக்குள் போய்த் தன் சகாக்களை எழுப்பியது. தங்கள் ஏழு பேரையும் விழுங்கி ஏப்பம்விட வெளியே ஒருத்தன் காத்திருக்கிறான்; ஆள் பலே ஆசாமியாக இருக்கிறான்; எப்படியாவது அவனை நாம் வசப்படுத்த வேண்டும் என்றது.

ஏழு வேதாளக் குட்டிகளும் வெளியே வந்து தடிராமனைச் சூழ்ந்து கொண்டன. அந்த விசித்திரப் பிறவிகளைப் பார்க்க அவனுக்குப் பகீர் என்றது. கண்விழிகள் பிதுங்க வாயடைத்துப் போனான்.

மூத்த வேதாளம் பேசிற்று: ''ஐயா! உள்ளே வருகிறீரா? காலங்காலமாய் நிறையப் புதையல்களை வைத்துக் காப்பாற்றி வருகிறோம்; எல்லாவற்றையும் நீரே எடுத்துக் கொள்ளலாம். பதிலுக்கு எங்களை நீர் கபளீகரம் செய்யாமலிருந்தால் போதும்!''

அப்போதுதான் தடிராமனுக்கு விஷயம் புரிந்தது. சரேலென்று எழுந்து, நிமிர்ந்து நின்றான். சத்தமிட்டு உரக்கப் பேசினான்: ''ஆகட்டும்; போய் உங்கள் புதையலையெல்லாம் விடிவதற்குள்ளே என் வீட்டில் கொண்டு வந்து சேருங்கள். நான் உங்களை ஒன்றும் செய்யாமல் விட்டுவிடுகிறேன்!''

''அப்பாடா!'' என்று ஏழு வேதாளக் குட்டிகளும் நல்ல மூச்சு விட்டன. உண்டான புதையலையெல்லாம் வாரிச் சுமந்துகொண்டு தடிராமன் பின்னோடு அவன் வீடு வந்து சேர்ந்தன.

தடிராமன் அம்மாக்காரியை அழைத்தான்: ''இதோ பார், அம்மா! எல்லாவற்றையும் பத்திரமாக உள்ளே கொண்டு வைக்கச் சொல். இந்த ஏழும் இனி நம் எடு

ஒரு புதிர்

நான்கு முக்கிய திசைகளைத் தெரியும். அவற்றுக்கு இடைப்பட்ட நான்கு கோணங்களையும் தெரியும். இந்த எண்கோணத் திசைகள் தவிர வேறு திசைகளும் உண்டா?

1. கருடன் திசை	5. முயல் திசை
2. பாம்புத் திசை	6. எலித் திசை
3. யானைத் திசை	7. பூனைத் திசை
4. சிங்கத் திசை	8. நாய்த் திசை

இந்த எட்டுத் திசைகளும் என்னென்ன என்று உங்களுக்குத் தெரியுமா? —விடை: 196-ஆம் பக்கம்

பிடிகள். என்ன வேலையானாலும் சரி; உத்தரவுபோடு! விடிவதற்குள் செய்துவிட்டுப் போகும்!'' என்றான்.

அம்மாக்காரி சொன்னாள்: ''இப்போது ஒன்றும் வேண்டாம். பிறகு எப்போதாவது தேவையானால் சொல்கிறேன்; வந்து செய்துவிட்டுப் போகட்டும்!''

தடிராமனும் சரிதான் என்று வேதாளக் குட்டிகளை அனுப்பிவைத்தான். போகிற வழியில் அவை ஏழும் பேசிக்கொண்டன.

''நல்லவேளை; அந்த ஆள் புதையலையெல்லாம் பெற்றுக்கொண்டு நம்மைச் சும்மா விட்டுவிட்டான்; இல்லாவிட்டால் இந்த நேரம் நம் ஏழுபேர் கதியும் அதோ கதிதான்!''

அப்போது வேதாளங்களின் பேச்சை ஒட்டுக் கேட்டபடி நரி ஒன்று வந்தது. ''ஓ, இது அந்தத் தடிராமனின் வேலையாகத்தான் இருக்கும்!'' என்று ஊகித்துக்கொண்டது. உடனே தாவிக் குதித்து மூத்த வேதாளத்தின் முன்னே போய் நின்றது. ''அட ஏமாளிகளா! அந்தத் தடிராமன் சுத்த சோம்பேறி. ஒன்றும் கையாலாகாதவன். 'ஆளைக் கண்டு மருளாதே - ஊது காமாலை' என்பார்களே; கேட்டதில்லையா? அவனிடம் போய் உங்கள் பரம்பரைச் சொத்துக்களையெல்லாம் பறிகொடுத்துவிட்டு நிற்கிறீர்களே!'' என்று ஏளனம் செய்தது.

''அப்படியா! நாங்கள் எல்லாம் ஏமாளிகளா?''

''அதுமட்டுமா? படுமுட்டாள் பயல்கள்! அந்தத் தடிராமனுக்கு 'இனிமேல் வீட்டில் சோறு கிடையாது' என்று அவன் அம்மாக்காரி அடித்துத் துரத்திவிட்டாள்; நீங்கள் என்னவோ அவனைப் பெரிய பகாசுரன் என்று நினைத்துப் பயந்து சாகிறீர்கள்; நான் தினசரி அவர்கள் வீட்டிலிருந்து கோழிக் குஞ்சுகளைத் திருடிக்கொண்டு போகிறேன்; ஒரு நாள்கூட அந்தத் தடிராமன் என்னைத் துரத்தி வந்து பிடித்ததில்லை; தெரியுமா?''

''நீ சொல்வதெல்லாம் உண்மையா?'' என்றன ஏழு வேதாளக் குட்டிகளும்;

''பின்னே பொய்யா சொல்கிறேன்? என்னோடு வாருங்கள்! உடனே போய் அந்தப் புதையலையெல்லாம் கேட்டு மீட்டுக்கொண்டு வருவோம்!''

ஏழு வேதாளங்களும் தங்களுக்குள் கலந்து ஆலோசித்தன.

''நரி சொல்வதையெல்லாம் நாம் அப்படியே நம்பக்கூடாது. சமயத்தில் அது நம்மைச் சந்தியிலே நிறுத்திவிட்டுத் தான் மட்டும் தப்பி ஓடிவிடும்;''

''அதுவும் மெய்தான்; அப்படி இது நம்மைப் பாதியில் விட்டுவிட்டு ஓடாமலிருக்க என்ன செய்வது?''

இடைவழியிலே எல்லாம் நின்று நின்று யோசித்தன. நரி பார்த்தது. ஏழு வேதாளங்களின் தலையிலும் அடித்துச் சத்தியம் செய்தது. தான் அப்படி வேதாளங்களைத் தடிராமனிடம் காட்டிக் கொடுத்துவிட்டுப் பதுங்கி ஓடிவிடாது என்று உறுதி அளித்தது.

ஆனாலும் மூத்த வேதாளம் நரியை நம்புவதற்கில்லை என்று சொல்லவே, நரி அதனிடம், ''அப்படியானால் ஒன்று செய்வோம்'' என்றது.

''ஒரு வலுவான கயிற்றை எடுத்து ஒரு முனையை உன் இடுப்போடு இறுகக் கட்டிக்கொள். மறு முனையை நான் என் கழுத்தில் கட்டிக்கொள்கிறேன். தடிராமன் வீட்டுக்குப் போய் நம் காரியம் முடிந்ததும் இரண்டு பேரும் கயிற்றை அவிழ்த்துக்கொள்வோம்!''

''சரிதான்..'' என்றது மூத்த வேதாளம், அரை மனதோடு. தன் இடுப்பில் ஒரு கயிற்றைக் கட்டிக்

ஏணி மேலே ஏணி!



ஏணி மேலே ஏணி வைத்தே
ஏறப் போகிறேன்;
ஏறி ஏறி எட்டி வானை
முட்டப் போகிறேன்!
வானில் உள்ள மீனையெல்லாம்
பிடிக்கப் போகிறேன்
வளைத்து வளைத்துச் சட்டைப் பைக்குள்
அடைக்கப் போகிறேன்.

பந்து நிலா அதை எடுத்து
வீசப் போகிறேன்;
பாலு, சோமு, உங்கள் சமர்த்தைப்
பார்க்கப் போகிறேன்;
முந்திப் பந்தைப் பிடிப்பவனை
வாழ்த்தப் போகிறேன்;
மூச்சுப் பிடித்துப் பூமி மீது
குதிக்கப் போகிறேன்!

குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா

திசை முகங்கள்
புதிர் விடை

கருடன் திசை—கிழக்கு
பாம்புத் திசை—மேற்கு
யானைத் திசை—வடக்கு
சிங்கத் திசை—தெற்கு
முயல் திசை—வட கிழக்கு
எலித் திசை—வடமேற்கு
பூனைத் திசை—தென் கிழக்கு
நாய்த் திசை—தென் மேற்கு

வடமேற்குத் திசையைக் 'கழுதைத் திசை' என்றும் தெற்குத் திசையை 'எருமைத் திசை' என்றும் குறிப்பிடுவதுண்டு. ஒன்றுக்கொன்று பகையான பிராணிகளே எதிர்எதிர்த் திசைகளில் அமைந்திருப்பது ஒரு விநோதம்; இந்தத் திசை முகங்கள் யாவும் ஜோதிடர்கள் குறிப்பிடுபவை.

—எஸ். எல்.



கொண்டு மறு முனையை நரியின் கழுத்தில் கட்டியது. நரி அதை இழுத்துக்கொண்டு முன்னே செல்ல மற்ற ஆறு வேதாளங்களும் பின்தொடர்ந்தன.

தடிராமன் தன் வீட்டுவாசலில் நின்று சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டிருந்தான். வீட்டுக்குள் ஏராளமான புதையல்கள் இன்னும் சரிவரப் பத்திரப்படுத்தாமல் இருக்கவே, அம்மாக்காரியும் தூங்காமல் உட்கார்ந்திருந்தாள்.

தூரத்தில் அந்தத் திருட்டு நரி மூத்த வேதாளத்தைக் கட்டியிழுத்துக்கொண்டு வருவது தெரிந்தது. தடிராமன் உஷாராகி உரத்த குரலில் இரைந்தான்.

இதோ தெய்வம்!

சமுத்திரக் கரையிலோர்
தோப்பிலே — ராமர்
சைனியம் ஒதுங்கிய
போதிலே —

திமுதிமு எனப்பெரும்
குரங்குகள் — வரத்
திகில்கொண்டு கத்தின
பறவைகள் —

அவைகளை ராமர்கை
அமர்த்தவும் — குரல்
அடங்கின பறவைகள்
குறிப்பினால் —

எவையும்கீழ்ப் படிந்திடும்
ராமனே—தெய்வம்
என்றனர் மீனவர்
வியப்பினால்!

— லெமன்

In the development of radio broadcasting and television networks in India BEL plays a crucial role. Providing transmitters and studio equipment to AIR and Doordarshan. In your homes, the radio and TV receivers are built with vital components from BEL. As also the tape recorders and amplifiers. Unknown to you, BEL is bringing the latest news and the finest entertainment programmes to the comfort of a home.

Entertainment tomorrow will have new challenges. And BEL is all set to face them.

BEL: Building India's future through electronics.

Bringing home the finest in entertainment.

BHARAT ELECTRONICS LTD.

(A Govt. of India Enterprise)

Bangalore · Ghaziabad · Pune

BEL. 150

''மோசக்கார நரியே! நான் உன்னிடம் ஏழு வேதாளங்களையல்லவா பரிசப் பணயமாகக் கொண்டுவரச் சொன்னேன்? நீ ஒரே ஒரு வேதாளத்தைக் கூட்டி வருகிறாயே!''

அம்மாக்காரியும் கூடவே இரைச்சல் போட்டாள். ''பொல்லாத நரியே! எப்போதும் எல்லாரையும் ஏமாற்றுவதே உன் தொழிலாய்ப் போச்சு. சொன்னபடி ஏழு வேதாளங்களைப் பரிசப் பணத்துக்கு ஈடாக நீ கொண்டுவந்தால் ஒழிய உனக்கு எங்கள் பெண்ணைக் கல்யாணம் கட்டி வைக்கமாட்டோம்; உடனே வந்த வழியைப் பார்த்துக்கொண்டு ஓடிப்போ!''

அம்மாக்காரி, தடிராமன் இவர்களது கூச்சலைக் கேட்ட வேதாளங்கள் வெலவெலத்துப் போயின.

''அட பாவி நரியே! பரிசப் பணத்துக்கு ஈடாகப் பணயம் வைக்கவா திரும்பவும் எங்களை இங்கே அழைத்து வந்தாய்? இரு இரு! உன்னைக் கவனித்துக்கொள்கிறோம்!''

அடுத்த நிமிஷம் ஏழு வேதாளங்களும் விழுந்தடித்துக் கொண்டு காட்டுப்பக்கம் ஓடின; குதிகால் பிடரியில் இடிக்க, தலைதெறிந்துவிடும் போல் மூத்த வேதாளம் நரியையும் கட்டியிழுத்துக் கொண்டு ஓடிற்று. காடுமேடெல்லாம் தரையில் இழுபட்டு நரியின் உடம்பில் மேல்தோல் கழன்றுவிட்டது. கடைசியில் வேதாளத்தோடு கட்டியிருந்த கயிறு

இற்றுப் போய்த்தான் நரிக்கு விடுதலை கிடைத்தது.

நரிக்கு ஒரே உடல் வேதனை; மனவேதனை. ''எனக்கு இது வேண்டியதுதான். அநாவசியமாய்ப் பிறத்தியார் விஷயத்தில் போய்த் தலையிட்டுக் கொண்டேன்; புத்தி—புத்தி. இனிமேல் இந்த மாதிரி ஒருபோதும் செய்ய மாட்டேன்!'' என்று யார் வீட்டு வைக்கோல் போரிலோ புரண்டு புரண்டு புலம்பிற்று.

தடிராமனுக்கு ஊரிலேயே தடிமனான பணக்காரப் பெண்ணை மணம் பேசினாள் அம்மாக்காரி. கல்யாணத்தன்றுதான் அவனை எல்லாரும் கல்யாணராமன் என்று இட்ட பேர் சொல்லி அழைத்தார்கள்.

கொசுவே இனி நீ என் வசமே!

தம்பி: சந்தன சோப்பைத் தவிர வேற எதுவும் தேய்ச்சுக்க மாட்டாள் ராணி; இப்போ வேம்பு சோப்புத்தான் வேணும் என்கிறாளே!

அக்கா: ஏண்டா, வயிற்றெரிச்சலைக் கிளர்றே? வேம்பு வாடைக்குக் கொசுக்கள் கிட்டே நெருங்காதாம்!

அக்கா: அடபாவி! ஏண்டா என்னோட மாக்ஸியை எடுத்து மாட்டிக்கிறே?

தம்பி: ப்ளீஸ் அக்கா! பெண்பிள்ளைகளைக் கொசுக்கள் அதிகம் கடிக்கிறதில்லையாம். அதுதான் நான் பெண் வேஷம் போட்டுக்கறேன்.

தங்கை: ஏண்டா இப்பிடி ரெண்டு வேளையும் தலையிலே பச்சத்தண்ணியைக் கொட்டிக்கிறே?

அண்ணன்: குளிரக் குளிரக் குளிச்சாக் கொசுப் பிடுங்காதாம்; அதுதான்!

பூ ஜாடி: தலைவிதி! நல்ல நல்ல பூங்கொத்தெல்லாம் இருக்கத் துளசித் தழையைக் கொண்டுவந்து சொருகறாங்க!

பத்தி ஸ்டாண்டு: உன்பாடு தேவலை. இந்த வீட்டில் நல்ல ஊதுபத்தி வாங்கி எவ்வளவோ நாளாச்சு. இப்போ எல்லாம் கொசு வத்திக்குத்தான் மவுசு!





அப்பாக் கொசு: உனக்குப் பெண் கொசுதான் உசத்தி; பிள்ளைக் கொசுன்னு மட்டம்.

அம்மாக் கொசு: பின்னே என்ன? ஆண் கொசு அசடு; யாரையும் கடிச்சு ரத்தம் உறிஞ்சாது; பட்டினி கிடந்து சாகும்.

மாமா: என்னடா இது! உங்கள் யாருக்கும் ஐஸ்கிரீமே வேண்டாமா?

மருமக்கள்: ஆமா. எங்க உடம்பெல்லாம் பாருங்க; கொசு என்னமாப் பிடுங்கி விட்டிருக்கு! கொசு கிரீம் வாங்கிக் கொடுத்துடுங்க; போதும்.

தீபாவளி வாழ்த்துக்கள்

தங்க கவரிங் நகைகளின் ஓர் புதுமை

25 ஆண்டுகளாக பொது மக்களின்
உள்ளங்கவர்ந்த 22ct

பேன்ஸி

தங்க கவரிங் நகைகள்

கல்யாணம், பரதநாட்டியம்
மற்றும் உங்கள் தேவைகளுக்கு
கண் கவரும் டிசைன்களில்
நகைகள் வழங்குபவர்கள்

22 ct. தங்க கவரிங் நகைகளுக்கு
பேன்ஸி
ஆபரணங்கள்

ஸ்ரீ
பேன்ஸி
கோல்டு கவரிங் ஓர்க்ஸ்

54 நாராயணமுதலி தெரு
சென்னை-600 001
போன் 37161

L.R.SWAMI - P.P.

'பேன்ஸி' நகைகள் கிடைக்கும் இடங்கள்

● நியோ பேன்ஸி கோல்டு கவரிங் ஒர்க்ஸ், திருவல்லிக்கேணி, சென்னை-5 ● ஜெய் பேன்ஸி கோல்டு கவரிங் ஒர்க்ஸ், தி. நகர், சென்னை-17 ● ஓம் பேன்ஸி கோல்டு கவரிங் ஒர்க்ஸ், லஸ் கார்னர், மைலாப்பூர், சென்னை.4 ● நியூ பேன்ஸி கோல்டு கவரிங் ஒர்க்ஸ், என்.எஸ்.சி. போஸ் ரோடு, சென்னை-1.

ௐ
பரிசுத்தமான
கோபால்
கற்பூர பில்லைகள்

அழகிய அட்டை
பெட்டிகளிலும் பிளாஸ்டிக்
டப்பிகளிலும் கிடைக்கும்

வைரத்தைப்போல் பிரகாசிக்கும்
ஆண்டவன் அருளையும் கூட்டிவைக்கும்.

தயாரிப்பாளர்கள்:
ஆர். கோபாலகிருஷ்ணன் & சன்
கோபால் கேம்பர் ஒர்க்ஸ்
90, தெலுங்கு பிருமணாள்தெரு
கோயமுத்தூர்-641001

ஏஜென்சி இல்லாத ஊர்களிலிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படும்

தயாரிப்பு நிலையம்:

ருக்மணி பாளையம் 2-வது தெரு,
முனிச்சாலை ரோடு,
மதுரை 625009.

அலுவலகம்:

46, கீழ வெளிவீதி,
மதுரை-625001.

விற்பனை நிலையங்கள்:

46, கீழ வெளிவீதி, மதுரை.
166, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு, மதுரை.
20, மேலமாசி வீதி, மதுரை.
டவுன்ஹால் ரோடு, மதுரை.

—மினர்வா

மீனும் நீலமும்

பேராசிரியர்
இரா. இராதாகிருஷ்ணன்

கம்பன் கவிச்சக்கரவர்த்தி; ஒரு மகாகவி.

ஒரு மகா கவியை இன்னொரு மகா கவி இனம் கண்டான்.

இப்படி ஒரு புலவன் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை என்று புகழ்ச்சி அற்ற உண்மை உரை புகன்றான்.

''இப்படியும் மானுடம் பாட வந்தவன் உண்டா? பாடியவன் உண்டா? இவன்தான் மனிதன்! கம்பன் என்றொரு மானிடன்'' என்று ஏற்றம் காட்டினான். சொல்ல முடியாத எல்லையற்றதைக்கூடச் சொல் சிமிழுக்குள்ளே கம்பன் அடைத்துவிட்டானே!

''‘எல்லை ஒன்றின்மை’ எனும்
பொருள் அதனைக்
கம்பன் குறிகளால் காட்டிட
முயலும்
முயற்சி'' என்று எக்காளம்
இட்டான்!

''பாண்டியா! இத் தமிழ்நாடு கல்வியில் சிறந்ததடா! கம்பனைக் கற்றுப் பார்; இது விளங்கும்'' என்று பெருமிதக் குரல் எழுப்பினான்.

''கல்வி சிறந்த தமிழ்நாடு புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு''—என்பது மகாகவியின் சத்திய வாக்கு.

மகாகவி பாரதியின் நெஞ்சத்தில் ராமனுக்குக் கோயில் இல்லாவிட்டாலும் கம்பனுக்கு ஆலயம் உண்டு.

கம்பன் அவ்வாறு செய்தது என்ன?

இராமாயணப் பாத்திரங்களைக் கொண்டு அற்புதமான ஒரு பிரபஞ்சத்தையே கம்பன் படைத்துவிடுகிறான். மானுடம் பாடவந்த கம்பன் மானுடத்தின் குணங்கள், பேச்சுக்கள் செயல்கள் இவற்றின் வேறுபாடுகளை எல்லாம் வேறுபட்ட பாத்திரங்கள் வாயிலாகத் தெளிவாக்குகிறான். அவனால் எடுத்தாளப் பெற்ற சொற்கள் தவம்கிடந்தனவாம்! சொற்கோவையால் பொருளமைதி பொருந்த உணர்ச்சிக்கு ஏற்ற சந்தம் கம்பன் பாடல்களில் நடமிடுகின்றது.

மகாகவி படைக்கும் கவிதைக்கு ஒரு தனி ஆற்றல் உண்டு. கவிதையைக் கற்றுச் சுவைப்போர்க்கு, கவி காணாதன எல்லாம் கூடப் புலனாகும். கவிதையைப் பெற்றெடுத்த தந்தையாகிய மகாகவி, தான் பெற்ற மகளை ரசிகனாகிய மருமகனுக்குக் கொடுத்துவிடுகிறான். ரசிகனுக்குக் கவிதையை அநுபவிக்கும் சர்வ சுதந்தரம் கிடைத்துவிடுகிறது. மகாகவியின் படைப்பு, கற்போர் ஆற்றலுக்கு, அறிவுக்கு, ரசனைக்குத் தக்க புதுமையும், பொலிவும், பயனும் காட்டி நிற்பது. தமிழும், தமிழைச் சுவைக்கத் தெரிந்த தமிழனும் உள்ளவரையில் கம்பனின் காப்பியம் பழைமைத் துரு ஏறாமல் இளமை எழில் காட்டி நிற்கும்.

ஒரு சோறு பதம் பார்க்கலாம். அதுவே விருந்துமாம்.

இராமனும் இலக்குவனும் இணை பிரியாதவர்கள். பாவிட்ட தறியிலே, தறியை அடித்தவுடன், குறுக்கே குழை ஓடும். குழையோடு நூல் ஓடும். அவ்வாறே, ‘நெய் குழல் உறும் இழை என’ இராமனும் இலக்குவனும் இணைந்திருந்தனர். இலக்குவன் இராமனுக்குத் தொண்டு செய்வதையே தன் பெருஞ் செல்வமாகக் கருதியவன். அறம், தாய், தந்தை, சுற்றம், மற்றும் எல்லாம் இராமன் அன்றி வேறில்லை என்று உறுதி பூண்டவன். துறக்க முடியாத உணவையும், உறக்கத்தையும் இராமனுக்காகத் துறந்தவன். தான் தன் மனைவியைப் பிரிந்து வந்தும், இராமன் சீதையைப் பிரிந்து துயருறும்போது, இராமனைத் தேற்றியவன் இலக்குவன். அவன் கண்ணிலும் கருத்திலும் இராமனே உறைந்தான்.

இராமன் காடு நோக்கிப் புறப்பட்டுவிட்டான். இலக்குவனின் தாய் சுமித்திரை அவனை, ''இராமன்பின் செல்; அடியாரின் ஏவல செய்திடு'' என்று பணித்தாள். தன் இயல்புப்படியும் இலக்குவன் இராமனைத் தொடர நினைத்தான்.

''நான் காடு போகிறேன். தந்தை தாயாரைக் காத்து நீ இங்கேயே இரு'' என்றான் இராமன். அந்த உரை கேட்டு இலக்குவன் உள்ளம் நொந்தான். ''இராமா, உனக்கு நான் என்ன பிழை செய்தேன்?'' என்று வினவி, அவன் நிலையையும், உடன் தன் நிலையையும் இலக்குவன் வடித்துச் சொன்னான்.

இராமனிடம் இலக்குவன் உரைத்ததைக் கம்பன் சொற்கவி கட்டிக் காட்டுகிறான். கவி ஆழத்தின் எல்லை காணத்தக்கது இந்தப் பாடல்:

''நீர்உள எனின்உள் மீனும் நீலமும்;
பார்உள எனின்உள யாவும்; பார்ப்
புறின்
நார்உள தனுஉளாய்! நானும்
சீதையும்
ஆர்உளர்எனின் உளம்; அருளுவாய்!'
என்றான்.

''நாணேற்றிய வில்லைக் கொண்டவனே! தண்ணீர் இருந்தால்தான் மீனும் நீலமும் இருக்கும். உலகிருந்தால்தான் உலகிலுள்ள பொருள்கள் இருக்கும். ஆராய்ந்து பார்த்தால் நானும், சீதையும் யார் இருந்தால் இருப்போம்; நீயே கூறுவாய்?'' என்று இலக்குவன் நிலை விளக்கம் செய்தான்.

பொருள்கள் யாவும் உலகத்தையே பற்றுக்கோடாகக் கொண்டுள்ளன;

அவ்வாறே தானும், சீதையும் இராமனையே பற்றுக்கோடாகக் கொண்டவர்கள் என்பதைப் பொதுப்படக் கூறினான் இலக்குவன். ஆனால் தனக்கும் சீதைக்கும் உள்ள வேறுபாட்டையும் சிறப்பு வகையால் உணர்த்தினான். இராமனை நீர் போன்றவன் என்றான்; தன்னை மீனாகவும், சீதையை நீலப்பூவாகவும் சொன்னான்.

உண்ண உணவைத் தருவதும், தானே உணவாவதும் நீரே. நீரின்றி அமையாது உலகு. இராமனே எல்லாவற்றுக்கும் தாரகம் ஆனவன். அவனை நீர் போன்றவன் என்றது பொருத்தமே.

இலக்குவன் தன்னை மீன் என்று கூறிக்கொண்டான். தண்ணீரினின்று பிரிக்கப்பட்ட மீன் உடனே இறந்துவிடும். மீன் தண்ணீரைப் பிரிந்து வாழாது; அவ்வாறே இராமனைப் பிரிந்து ஒரு கணப் பொழுதேனும் தரிக்கமாட்டாதவன் இலக்குவன்.

சீதையோ நீலமலர் போன்றவள். நீர்வற்றினால் நீலப் பூ வாடி விடும். ஆனாலும் சேற்றில் கிழங்கு கிடந்து மீள நீர் வந்தால் தளிர்த்துக் கிளைத்துப் பூத்துவிடும்; அவ்வாறே சீதை இராமனைப் பிரிந்து அசோக வனத்தில் வாடிக்கிடந்து மீள இராமனைச் சேர்ந்து மகிழ்வால் மலர்ந்தாள்.

இனி, காப்பியப் போக்கிலே சீதையும், இலக்குவனுமாகிய இரு பாத்திரங்கள் அமைந்து விளங்கும் தன்மையைக் கருதிப் பார்த்தால் சீதை நீலமலர் போன்றவள் என்பதும் இலக்குவன் மீன் போன்றவன் என்பதும் பொருத்தமுறத் திகழும் பாங்கு பரவசமூட்டும்.

நீர்ப்பரப்புக்கு எழில் சேர்ப்பது நீலப்பூ. அதுபோல இராமனுக்கு அழகு சேர்த்தவள் சீதை. இராமாவதார தத்துவமாகிய இராவண வதம் நிறைவேறக் 'காந்தையர்க்கு அணி அனைய சானகியார் பேரழகும் கற்பு'மே காரணமாயின. இராமன் காடு புகுந்தபோதே முதல் துணையாக அமைந்தது 'தையல்தன் கற்பு.'

அசோகவனத்தில் சீதை மேற்கொண்ட கற்புத்தவம் இராமன் கோதண்டத்தின் வெற்றி ஆயிற்று. இராமனும் சீதையும் மணவறையில் அமர்ந்திருந்த காட்சியை, ''ஒன்றிய போகமும் யோகமும் ஒத்தார்' என்றபடி இராமனாகிய போகத்தைச் சீதையாகிய யோகமே விளைவித்தது. நீர்ப்பரப்புக்கு மேலே நீலமலர் காண்போரைக் கவர்தல்போல இராமன் சரித்திரத்துக்கு மேலே சீதையின் மகத்தான சரிதம் கற்போரைக் கவர்ந்துவிடுகிறது.

இலக்குவனோ நீரில் வாழும் மீன். ஓடும் நீரை எதிர்த்தும் மீன் நீந்தும். இராமனிடம் கொண்ட பேரன்பினால் தான் இராமனுக்கு நன்மை என்று கருதுகின்றவற்றை, இராமன் உள்ளத்துக்கு எதிராயினும் இலக்குவன் பேசுவான்; செய்வான். கைகேயி கேட்ட இரு வரங்களால் இராமனுக்கு உரிய நாடு பரதனுக்கு ஆயிற்று. இராமன் காடேக நேர்ந்தது. இலக்குவன் தந்தையை, தாய் கைகேயியை, அண்ணன் பரதனை இகழ்ந்தான்; பகைத்தான். இராமன் உள்ளத்துக்கு இலக்குவன் நோக்கங்களும் உரைகளும் செயலும் உகப்பினைத் தந்தில. இராமன் சித்திரக்கூடத்தில் இருந்தபோது, அரசினை இராமனுக்கு வழங்கவந்த பரதன் நிலை உணராது பரதனோடு போரிடப் புறப்பட்ட இலக்குவன் இராமனாகிய நீரின் ஓட்டத்தை எதிர்த்து நீந்திய மீனானான்.

நீரில் சேரும் மாசுகளை மீன் தானுண்ணும். நீரின் தூய்மையை மீன் காக்கும். எங்கேனும் இராமனுக்குக் குறை நேரவரின் இலக்குவன், இராமனின் நலத்தைப் பேணிக் காக்கும் இயல்பினன். வாலியின் மார்பில் மறைந்திருந்து அம்பு எய்தான் இராமன். ''நான் விலங்கில்லை என்பது உண்மையானால், இராமா! நீ ஏன் வேடனாகி என்னை மறைந்திருந்து எய்தாய்?'' என்று வாலி இறுதியாக இராமனை வினவினான். இராமன் பதில் ஏதும் கூறவில்லை. சுக்கிரீவனுக்கு அடைக்கலம் ஈந்து, அளித்த வாக்கைக் காக்கும் பொருட்டே, வாலியை இராமன் மறைந்திருந்து அம்பெய்தான் என்று இலக்குவனே வாலிக்கு அமைதி உரைத்தான். இதனால் அடைக்கலம் அளித்துக் காக்கும் பரம்பொருள் இராமன் என்பதை இலக்குவன் வாலிக்கு உணர்த்தினான்போலும்.

வாலி, இலக்குவன் உரை கேட்டுச் சமாதானம் உற்றான் என்பான் கம்பன். தன்னை உணர்த்திக்கொள்ள முடியாத நிலையில் இருந்த இராமனுக்கு அறம் பிழைத்தான் என நேர இருந்த குறையை இலக்குவன் நீரிலே மீனாகி நீக்கினான்.

இராமன் வீடணனை அடைக்கலமாக ஏற்றுக் கொண்டான்; போர்க்களத்தில் இராவணன் வீடணனைச் சினந்து, அவன் மேல் வேலெறிந்தான். இலக்குவன், ''தோற்றன் என்னினும் புகழ் நிற்கும்'' என்று அந்த வேலினைத் தன் மார்பில் ஏற்று, வீழ்ந்து, வீடணனைக் காத்தான்; இராமன் ஏற்ற அடைக்கலப் பொருளைக் காத்து, இராமன் பெருமையை இலக்குவன் நீரிலே மீனாகி நிலைநாட்டினான்.

நீரிலே வாழும் மீனுக்குப் பின்னும் ஓர் இயல்பு உண்டு. அடித்து மோதி வரும் நீரின் வேகத்தைத் தாங்கி அதிலேயே வாழும். பிரியத் தரியாது. இராமன் எவ்வளவு சினந்து பேசினும் இலக்குவன் வருந்தினானே தவிர தன்னைத்தான் நொந்து கொண்டானே அன்றி, இராமனை வெறுத்தான் அல்லன். இராமனும் இலக்குவனிடம் கொண்ட பேரன்பால், உரிமையால், கடுஞ்சொல் கூறினான்.

தான் காடு போக நேர்ந்தது விதியால் என்றான் இராமன். 'விதிக்கும் விதியாகும் என் வில் தொழில் காண்டி' என்று வீர வசனம் பேசினான் இலக்குவன்; ''வேதம் ஓதிய நாவால் வாய்க்கு வந்தன பேசுதியோ'' என்று இராமன் இடித்துரைத்தான். தந்தையை, தாய் கைகேயியை, அண்ணன் பரதனைப் பார்த்து, வெறுத்து இலக்குவன் சுமந்தரனிடம் பேசியபோது, இராமன், 'சீரியன அல்ல செப்பல்' என்று கண்டித்தான். பரதனைப் பகைத்துச் சினந்து இலக்குவன் போருக்குச் சன்னத்தனாகியபோது இராமன் 'பரதனை ஐயுறல் அறிவுடைமையோ', பரதன், 'தானையால் பொரும் என நினைகையும் புலமைப்பாலதோ' என்று கொடுஞ்சொல் கூறினான். இராமனிடம் அன்பு மீதூர்ந்து, அவனே எல்லாம் என்று கருதிநின்ற இலக்குவன் மீனாகி, இராமன் எனும் நீரின் வேகம் தாங்கிப் பிரியாது நின்றான்.

இராமன் மாயமான் பின்னே போக, இராமன் குரலில் ஓலம் கேட்டு, உணர்ச்சி வயப்பட்டு, காத்து நின்ற இலக்குவனைச் சீதை கடிந்துரைத்தாள். மகனை நோக்கித் தாய் கூறக் கூடாதன உரைத்தாள். சீதை தன்னை ஏசினாள் என்பதை இராமனிடம் யாதெனக் கூறாமல் மறைத்துக் காத்தான் இலக்குவன்.

வைணவப் பெரியோர்கள் இப் பாடலைக் கொண்டு, இலக்குவன் இராமன் திருவடிகளிலே அடைக்கலமாகப் புகுகின்றான் என்று உரைப்பர். ''நீ உடன் வராதே'' என்று இலக்குவனிடம் இராமன் கூற, இலக்குவனோ, ''நானும் சீதையும் நீ இன்றி வாழோம்'' என்று பதில் உரைத்தான். தாயாகிய சீதையைத் துணைக்குக் கொண்டு பெருமான் திருவடிகளைப் பற்றினான்; பிராட்டியை முன்னிட்டுக்கொண்டே பெருமானைப் பற்றுதல் முறையன்றோ?

காப்பிய நோக்கிலே, பாத்திரங்களின் உளப்பாட்டு விளக்கமாகக் கண்டால் இங்கு ஓர் உண்மை புலனாகும். இராமனைப்பற்றிக் கொண்டு, மற்ற யாவற்றையும் துறந்து, பணியாற்றும் இலக்குவன், தன்னை உடன் வராதே என்று கூறித் தடுக்கும் இராமன், சீதையிடமும் அவ்வாறே சொல்வானோ என்று நினைத்தான். சீதை மலர் போன்றவள். அவளையும் வருத்துதல் தகாது என்பதை உணர்த்தவே, ''நீர் உள எனின் உள மீனும் நீலமும் நானும் சீதையும் நீ இருந்தால் இருப்போம்'' என்று இராமனிடம் உரைத்தான்.

இராமனோ, காடு போதலில் தன் துன்பம் கருதாது, இலக்குவனும், சீதையும் உறத் தக்க துன்பம் எண்ணி அவர்களை உடன்வருதல் தகாது எனத் தகைந்தான். ஆனால் இலக்குவன் உரைத்தது உண்மை ஆயிற்று. தண்ணீருக்கு அதனுள் வாழும் மீனை விலக்கும் உரிமை இல்லை. அதனிடையே பூக்கும் நீலத்தைப் பிரிக்கும் தகவில்லை. ஆகவே, இராமன், வேறு வகை இன்றி, இலக்குவனையும் சீதையையும் காட்டிற்கு உடன்கொண்டு சென்றான்.

நீரும், மீனும், நீலமுமாகி இராமனும், இலக்குவனும், சீதையும் இராமாயணக் காப்பியப் பயணத்தைத் தொடங்கிவிட்டனர்.

ஒரு பாடலிலே மூன்று பாத்திரங்களை இனம் காட்டும் கம்பன் கவிச் சக்கரவர்த்தியே! அவன் ஒரு மகா கவியே!

*

கோள்களின் சிறப்புத் தலங்கள்

சூரியன்:

'உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு, பலர் புகழ் ஞாயிறு' என்று திருமுருகாற்றுப்படை தொடங்குகிறது. கதிரவனுடைய ஒளியால்தான் உலகமே இயங்குகிறது. 'அஸாவாதித்யோ ப்ரஹ்ம' ஆதித்தனே பிரம்மம் என்று வருணிக்கிறது, சந்தியா வந்தன மந்திரம்.

நவ கோள்களில் சூரியனே பிரதானமானவன். சங்கர பகவத் பாதர் ஸ்தாபித்த ஆறு மதங்களில், சூரியனை வழிபாட்டுத் தெய்வமாகக் கொண்ட முறைக்கு ஸௌரம் என்று பெயர்.

நவக்கிரகங்கள் மனிதர்களைத்தான் பிடித்து ஆட்டுகின்றன என்பதில்லை. அவற்றுக்கும் துன்பங்கள் உண்டாகி இறையருளைப் பெற்றுக் கிரக பதவியை அடைந்திருக்கின்றன. இப்படி நவக்கிரகங்கள் இறையருளைப் பெற்ற சிறப்புத் திருத்தலங்கள் பல உள்ளன. இவை தொடர்பான கதைகளும் உள்ளன.

முதலில் சூரியன் உகந்த தலங்களில் முக்கியமானது தஞ்சை மாவட்டத்துச் சூரியனார் கோயில். இங்கே சூரியன்தான் கருவறைத் தெய்வம். இதைத் தவிர, திருக்கண்டியூர், திருப்புறவார் பனங்காட்டூர் என்ற தலங்களையும், ஒரிஸ்ஸாவிலுள்ள கோணார்க்கையும் சூரியன் உகந்த தலமாகக் கூறுவர்.

காலவர் என்ற முனிவர் விந்திய மலைச் சாரலில் தவம் இயற்றிவந்தார். அவருக்குச் சோதிடம் தெரியும். தமக்கு ஏற்பட இருக்கும் துன்பத்தைப் போக்கிக் கொள்ள நவக்கிரகங்களை உபாசித்துத் தவம் செய்தார். நவக்கிரகங்கள் முனிவருக்குத் தரிசனம் அளித்து, அவர் விரும்பிய வரத்தைக் கொடுத்தன. ஒவ்வொரு கிரகத்துக்கும் அதிதேவதைகள் உண்டு. 'வரம் அளிக்கக் கிரகங்களுக்கு உரிமை இல்லை' என்று சொல்லி, அதிதேவதைகள் கோள்களுக்குச் சாபம் கொடுத்துவிட்டன. தொழு நோயால் துன்பப்பட்ட நவக்கிரகங்கள், தங்கள் அதிதேவதைகள் கூறியபடி, அரக்கவனத்தில் விரதம் இருந்து சாபவிமோசனம் பெற்றன. அர்க்கவனம் என்பதுதான் சூரியனார் கோயில்.

துர்வாசர் உபதேசித்த மந்திரத்தின் சக்தியைச் சோதிக்க விரும்பிய குந்தி, சூரியதேவனை எண்ணி மந்திரத்தை உச்சரித்தாள். சூரியதேவன் எதிரில் தோன்றினான். அவனைக் கண்டு திடுக்கிட்டாள் குந்தி. சூரியன், அவள் கன்னிமையைப் போக்கி, அவளுடன் இணைந்தான். கர்ணன் பிறந்ததும் கன்னித்தன்மை பெற்றாள்.

பாரதத்தில், காசிப முனிவருக்கும் அதிதிக்கும் பிறந்தவன் சூரியன் என்று வருகிறது. அதிதியின் புத்திரன் ஆதலின் ஆதித்தியன் என்று பெயர் பெற்றான்.

சூரியனுடைய புகழை வேதங்கள் பல படியாக வருணிக்கின்றன. ராமாயணத்தில் சூரியன் துதியாகிய ஆதித்திய ஹ்ருதயம் இருக்கிறது. தைத்திரீய ஆரண்யகம், முதல் ப்ரச்னத்தில் சூரிய நமஸ்கார மந்திரங்கள் உள்ளன. ஏழு குதிரைகள் பூட்டிய ஒற்றைச் சக்கரத்தேரில், உஷா, ப்ரத்யுஷா என்ற தேவிமார்களுடன் பவனி வருபவன் சூரியன். சூரியனுக்கு அதிதேவதை அக்கினி; பிரத்யதிதேவதை ருத்திரன். சிம்மம் சொந்த ராசி; மேஷம் உச்சவீடு. சூரியனுக்கு உரிய நிறம் சிவப்பு; நவரத்தினம்- மாணிக்கம். சூரியன் காயத்திரி:

பாஸ்கராய வித்மஹே மஹாத்யுதிகராய தீமஹி
தந்நோ ஆதித்ய: ப்ரசோதயாத்

சந்திரன்:

நவக்கிரக மண்டலத்தில் அடுத்தபடியாக வருவது சந்திரன். வெம்மையைப் பெற்றாலும் தண்மையை அளிப்பவன். மதியை மக்கள் பெரிதும் விரும்புவதால், 'லோகப் பிரியன்' என்ற நாமமும் உண்டு. பாற்கடலைக் கடைந்தபோது அமிர்தத்துடன் வெளிவந்தவன். சிவபெருமானின் ஜடாமுடியை அலங்கரிப்பவன். வேதங்களில் ஸோமன் என்றும், சந்திரமா என்றும் சந்திரனைக் குறித்திருக்கிறார்கள். சந்திரன் ஒஷதிகளுக்குத் தலைவன்.

சந்திரன் பூசித்துப் பேறு பெற்ற தலங்கள் இரண்டு. திங்களூர், திருப்பதி என்பவை அவை.

வைகுண்ட ஏகாதசி அன்று மட்டுமே எழுந்தருளச் செய்யும் ஸ்ரீநிவாஸன், உக்கிரமூர்த்தி. இரணியனைச் சங்காரம் செய்த பிறகும், நரசிம்ம மூர்த்தியின் உக்கிரம் தணியவில்லையாம். லட்சுமி தேவியை அழைத்து, அவருடைய கோபத்தைத் தணிக்கும்படி வேண்டினார் பிரமதேவன். சந்திரனும் லட்சுமியும் பாற்கடலிலிருந்து தோன்றியவர்கள், அல்லவா? சந்திரனிடமுள்ள அமுதக் கலைகளை எல்லாம் ஸ்வீகரித்துக்கொண்டு போய், திருமகள் அவர் உக்கிரத்தைத் தணித்து, வரப்பிரசாதி ஆக்கியருளினாள்.

சந்திரன், பிரஜாபதியின் முப்பத்துமூன்று பெண்களை மணக்கிறான். அவர்களில் ரோகிணியிடம் மட்டும் அதிக அன்பு வைத்து, மற்றவர்களை அலட்சியம் செய்கிறான். மனைவியரிடையே பாரபட்சம் காட்டிய சந்திரனை, பிரஜாபதி சபித்துவிடுகிறார். சாபம் நீங்கச் சூரியனை அணுகி வேண்டுகிறான் சந்திரன். திருமலை நாதனை வழிபட்டுச் சாப விமோசனம் பெறும்படி சூரியன் யோசனை கூறுகிறான்.

பத்துக் குதிரைகள் பூட்டிய தேரில் பவனி வருபவன்.

சந்திரனுக்குக் கடகம் - ஆட்சி வீடு; மேஷம் - உச்ச ராசி. சந்திரனுக்கு அதிதேவதை நீர் (வருணன்); பிரத்யதிதேவதை - கௌரி. உரிய வண்ணம் - வெள்ளை; நவரத்தினம்-முத்து. சந்திரன் காயத்திரி:

பத்மத்வஜாய வித்மஹே ஹேமருபாய தீமஹி
தந்ந: ஸோம: ப்ரசோதயாத்

அங்காரகன்:

மங்களன் என்று அழைக்கப்படும் செவ்வாய் மன வலிமையையும் வீரத்தையும் அளிப்பவன். சிவபெருமான் தவத்தில் இருந்தபோது அவருடைய நெற்றிக் கண்ணிலிருந்து வேர்வை திரண்டு பூமியில் விழுந்தது. அதிலிருந்து உருவான குழந்தையைப் பூமிதேவி எடுத்து வளர்த்தாள். அதனால் பூமிகாரகன் என்றும் செவ்வாய்க்குப் பெயர் உண்டு.

செவ்வாய் பூசித்துப் பேறுபெற்ற தலங்கள் திருச்சிறுகுடி, வைத்தீசுவரன்கோயில், பழனி.

அங்காரகனுக்கு ஒரு சமயம் சரும நோய் உண்டாயிற்று. வைத்தீசுவரன்கோயிலிலுள்ள தடாகத்தில் ஒரு மண்டலம் முழுகி, இறைவனை வழிபட்டான். செவ்வாயின் நோய் இறைவன் அருளால் குணமாயிற்று. மங்கள வாரத்தில், சித்தாமிர்த தீர்த்தத்தில் முழுகி இறைவனை வழிபடுவோர்க்கெல்லாம், தனக்கு அநுக்கிரகம் செய்தது போல, நோய்களைத் தீர்த்தருள வேண்டும் என்று இறைவனிடம் வேண்டி வரம் பெற்றான் செவ்வாய். அதனால்தான் இதை 'அங்காரக க்ஷேத்திரம்' என்கிறார்கள். வைத்திய நாதர் தீராத நோய்களை எல்லாம் தீர்த்துவைக்கிறார், செவ்வாய்க்கு இங்கே தனிச் சந்நிதி இருக்கிறது.

செம்மலர் மாலை அணிபவன்: எட்டுக் குதிரை பூட்டிய பொன் தேரில் பவனி வருபவன். செவ்வாயின் அதிதேவதை - பிருதிவி; பிரத்யதிதேவதை - க்ஷேத்திரபாலன். விருச்சிகமும் மேஷமும்- சொந்த ராசிகள்; மகரம்-உச்ச வீடு. செவ்வாய்க்குரிய நிறம் - சிவப்பு; நவரத்தினம் - பவளம்; அங்காரகன் காயத்திரி:

வீரத்வஜாய வித்மஹே விக்ன ஹஸ்தாய தீமஹி
தந்நோ பௌம: ப்ரசோதயாத்

புதன்:

சந்திரனின் புதல்வன் புதன். தாரைக்குப் பிறந்தவன். புதன் பூசித்துப் பேறுபெற்ற தலம் மதுரையும், திருவெண்காடும் ஆகும்.

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரை, தருமி என்ற ஏழை அந்தணன் பொற்கிழி பெற இறைவனே பாடல் இயற்றிக் கொடுத்த சிறப்புப் பெற்றது.

சுகுமார வனத்துக்கு இளன் என்ற அரசன் வேட்டையாடச் சென்றான். அம்பிகையின் சாபத்தால் இளன் பெண்ணானான். அங்கே வந்த புதன், இளையின் அழகில் மயங்கி, அவளை மணந்து இன்புற்று வாழ்ந்தான்;

ஒரு மாதம் ஆணாகவும், ஒரு மாதம் பெண்ணாகவும் இளன் வாழ்வதைக் கண்டு வருந்தி, புதன் ஆலவாயில் அசுவமேத யாகம் செய்தான். சிவனருளால் இளனுக்கு ஏற்பட்ட சாபம் விலகியது.

புதனின் அதிதேவதை-விஷ்ணு; பிரத்யதி தேவதை-நாராயணன்.

சிங்க வாகனத்துடன் பொன்னிறத் தேரும் பெற்றவன் புதன். அறிவுத் திட்சண்யத்துக்கு அதிபதி. மிதுன, கன்னியாராசிக்கு அதிபதி. உரிய நிறம்-பச்சை; நவரத்தினம் - மரகதம். புதன் காயத்திரி:

கஜத்வஜாய வித்மஹே சுகஹஸ்தாய தீமஹி
தந்நோ புத: ப்ரசோதயாத்

குரு:

பிருகஸ்பதி என்றாலே அறிவில் சிறந்தவன் என்று பொருள் கொள்வார்கள். தேவ குரு. பிரமதேவனுடைய மானச புத்திரர்களில் ஒருவராகிய ஆங்கீரச முனிவருக்கும் ச்ரத்தாதேவிக்கும் புதல்வராக உதித்தவர். குரு இறைவனைப் பூசித்த பல தலங்களில் முக்கியமானது திருச்செந்தூர் ஆகும்.

சிவபெருமானின் ஆசியுடன் முருகன் கந்தகிரியை விட்டு 100009 வீரர்களுடன் சூரசங்காரத்துக்கு வருகிறார். வழியில் கிரௌஞ்ச மலையின் ஆணவத்தை அடக்கி, தாரகாசுரனையும் அழித்துவிட்டுச் செந்தில் கடற்கரையருகில் பாசறை அமைத்துத் தங்குகிறார். தேவதச்சனாகிய விசுவகர்மா, ஒரே இரவில் ஒரு கோயில் நிர்மாணிக்கிறான். கோயிலில் எழுந்தருளிய முருகவேள் வியாழபகவானை அழைத்து, அசுரர்களுடைய வரலாற்றைக் கேட்கிறார். சூரபதுமனை அழிக்கக் குமாரர் புறப்பட்டதும், குருபகவான் அக்கோயிலில் உறைந்து புனிதத்தைக் காக்கிறார்.

தனுர், மீனராசிக்கு அதிபதி; கடகம்-உச்ச வீடு. அதிதேவதை-பிரமதேவன். பிரத்யதிதேவதை-இந்திரன். வியாழனுக்கு உரிய நிறம் - மஞ்சள்; நவரத்தினம் - புஷ்பராகம். குரு காயத்திரி:

வ்ருஷபத்வஜாய வித்மஹே|க்ருணிஹஸ்தாய தீமஹி
தந்நோ குரு: ப்ரசோதயாத்

சுக்கிரன்:

பிருகு முனிவருடைய திருமகனாக உதித்தவன் பார்க்கவன். காசியில் லிங்கப் பிரதிஷ்டை செய்து பூசித்தான். சிவபெருமான், சுக்கிரனின் தவத்தை மெச்சி, இறந்தவர்களைப் பிழைப்பிக்கும் 'மிருத சஞ்சீவினி' மந்திரத்தை உபதேசித்தார். தேவாசுர யுத்தத்தில் இறந்த அசுரர்களை எல்லாம் சுக்கிரன், இந்த மந்திரத்தால்தான் உயிர்ப்பித்து வந்தான். தேவர்கள் இந்த நிலையை அறிந்து, சிவபெருமானிடம் முறையிட்டுக்கொண்டார்கள். சிவபிரான் சுக்கிரனை வரவழைத்து, தம்முள் விழுங்கிவிடுகிறார். ஆயிரம் ஆண்டுகள் யோகத்தில் இருந்து, வெண்ணிறத்தோடு வெளிவந்தமையால் சுக்கிரன் என்ற பெயர் பெற்றான். சுக்கிரன் வழிபட்ட திருத்தலம் ஸ்ரீரங்கம்.

அசுரகுருவுக்குத் தெரிந்திருக்கும் மிருத சஞ்சீவினி மந்திரத்தைத் தெரிந்துவர, தேவகுருவான குருபகவான், தம் மகன் கசனை அனுப்புகிறார். யாரென்று சொல்லாமல், அவரிடம் மாணவனாக நடித்து, சுக்கிரன் மகள் தேவயானியைக் காதலித்து அந்த மந்திரத்தைத் தெரிந்து கொள்கிறான்.

மூன்று அடி மண் தர மகாபலி ஒப்புக்கொண்டபோது, 'வந்திருப்பது சாதாரண மனிதர் இல்லை, திருமால்தான். கொடுக்காதே' என்று சுக்கிரன், மகாபலியைத் தடுக்கிறான். மகாபலி தடுத்தும் கேளாமல் கொடுத்து விடுகிறான். திருமால் இட்ட சாபத்தால், சுக்கிரன், பல்லாண்டுகள் இத்தலத்தில் திருமாலை நோக்கித் தவம் இருக்கிறான். ரங்கநாதரே, சுக்கிரனுக்குச் சேவை சாதித்துக் கிரகபதி அளிக்கிறார்.

சுக்கிரனின் அதிதேவதை-இந்திராணி; பிரத்யதி தேவதை-இந்திர மருத்துவன்.

ரிஷப - துலா ராசிக்கு அதிபதி; மீனத்தில் - உச்சன். சுக்கிரனுக்குரிய வண்ணம் - வெள்ளை; நவரத்தினம் - வைரம். சுக்கிரன் காயத்திரி:

அச்வத்வஜாய வித்மஹே தநுர் ஹஸ்தாய தீமஹி
தந்ந: சுக்ர: ப்ரசோதயாத்

சனி பகவான்:

நவக்கிரகங்கள் எல்லாக் கோயில்களிலும் இருந்தாலும் சனிபகவானுக்கு மட்டும் தனிச் சந்நிதி இருக்கும். இந்தச் சந்நிதியில் எள் பொட்டலம் போட்டு நல்லெண்ணெய் விளக்கேற்றி வழிபடும் மக்கள் பலர். ஏழரை நாட்டுச் சனி என்றாலே பலருக்கு மனத்தில் பயந்தான். தன்னை வழிபடுபவர்களுக்கு அருள் புரிபவன் சனீச்வரன். சூரியனுக்கும் சாயாதேவிக்கும் பிறந்தவன்.

சனி பகவானுக்குரிய பிரபலமான ஒரே திருத்தலம் திருநள்ளாறுதான். ஏழரை நாட்டுச் சனியால் பீடிக்கப்பட்டு மிகுந்த துன்பங்களை அநுபவித்த நளன் கதை எல்லாருக்கும் தெரியும்.

திருக்கச்சி நம்பி என்ற வைணவ ஆசாரியரைக்கூடச் சனிபகவான், ஏழரை ஆண்டுகளுக்குப் பதிலாக, ஏழரை நாழிகை பீடித்து, கோயில் வட்டில் திருட்டை அவர் மேல் சுமத்தும்படி செய்கிறான்.

'தான் அநுபவித்த துயரங்களைப் பிற மக்கள் அநுபவிக்கக் கூடாது' என்று சனிபகவானிடம் வரமாகக் கேட்டுப் பெறுகிறான் நளன். திருநள்ளாறு சென்று, சிவபெருமானைத் தரிசித்துச் சனிபகவானையும் வணங்கினால் கலியின் கொடுமை நீங்கும் என்பது நம்பிக்கை.

சனிக் கிரகத்தின் அதிதேவதை - யமன்; பிரத்யதி தேவதை - பிரஜாபதி. எட்டுக் குதிரைகள் பூட்டிய இரும்புத் தேரில் பவனி வருபவன். மகர —கும்ப ராசிகளுக்கு அதிபன்; துலாத்தில் உச்சன். சனிக்குரிய வண்ணம்-கருமை; நவரத்தினம் - நீலம். சனி பகவான் காயத்திரி:

காகத்வஜாய வித்மஹே கட்க ஹஸ்தாய தீமஹி
தந்நோ மந்த: ப்ரசோதயாத்

ராகு-கேது:

இவை இரண்டும் சாயாக் கிரகங்கள். ராசிச் சக்கரத்தை அப்பிரதட்சணமாகச் சுற்றி வருபவை. சிலந்தியும் யானையும் பாம்பும் பூசித்துப் பேறு பெற்ற தலமாகிய திருக்காளத்தி இந்தக் கிரகங்களுக்குரிய தலம்.

விப்ரசித்தி என்ற அசுரனுக்கும் சிம்ஹிகை என்பவளுக்கும் மகனாகப் பிறந்தவன் ராகு. பாற்கடலைக் கடைந்து அமுதம் வெளிவந்ததும் தேவர்களும் அசுரர்களும் அதற்குப் போட்டியிட்டார்கள். திருமால், மோகினி அவதாரம் எடுத்து, அசுரர்களை மயக்கி, தேவர்களுக்கு மட்டும் அமுதம் படைத்தார். அப்போது ராகு, தேவர் உருக்கொண்டு, சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் அமர்ந்து அமுதம் உண்டான். அசுரன் மாறுவேஷத்தில் அமுதம் கொள்வதை, சூரியனும் சந்திரனும் திருமாலிடம் ஜாடையாகத் தெரிவித்தனர். அமுதம் படைத்த சட்டுவத்தாலேயே ராகுவை அடித்துச் சக்கரத்தால் தலையை அறுத்துவிடுகிறார் திருமால்.

அமுதம் உண்டதால் ராகு இறக்கவில்லை. தலைப் பாகமும் உடல் பாகமும் தனித்தனியாகப் பூமியில் விழுந்தன. தலைப்பகுதி, பர்ப்பர தேசத்தில் விழுந்தது. குறையை எண்ணி வருந்தி, திருமாலை நோக்கித் தவம் இருந்தான்; பாம்பு உடல் வளர்ந்தது.

கேது என்ற உடற்பகுதி மலையத்தில் விழுந்தது. மினி என்ற அந்தணர் எடுத்து வளர்த்தார். அதனால் கேது ஞானகாரகன் ஆனான். வாயுத்தலமாகிய திருக்காளத்தி அருகே சொர்ணமுகியில் நீராடிப் பல ஆண்டுகள் தவமிருந்து, ராகுவும் கேதுவும் கிரகபதவிபெற்றனர்.

ராகுவின் அதிதேவதை - பசு, பிரத்யதிதேவதை; சர்ப்பம். ராகுவுக்குப் பிடித்த வண்ணம் — கறுப்பு, நவரத்தினம்—கோமேதகம். ராகுவின் காயத்திரி:

நகத்வஜாய வித்மஹே பத்மஹஸ்தாய தீமஹி
தந்நோ ராஹு: ப்ரசோதயாத்.

கேதுவின் அதிதேவதை - சித்திரகுப்தன்; பிரத்யதிதேவதை - பிரம்மா; உகந்த நிறம்—சிவப்பு; நவரத்தினம்-வைடூரியம். கேதுவின் காயத்திரி:

அச்வத்வஜாய வித்மஹே சூலஹஸ்தாய தீமஹி
தந்ந: கேது; ப்ரசோதயாத்

[நவக்கிரகத் தலக் காட்சிகளை அடுத்துச் சித்திரத்தில் காண்கிறீர்கள்.] ✳

(புகைப்படங்கள்: என். ராமகிருஷ்ணா, கே. ராமசந்திரன்,
எஸ். பாலசுப்பிரமணியன்,
செல்வம் போட்டோ ஸ்டுடியோ, காரைக்கால்)

சூாயன

சந்திரன்

அங்காரகன்



புதன்









சனி




ராகு
கேது

தீபாவளி
நல்வாழ்த்துக்கள்
ஆண்டு முழுதும்
நீங்களும் உங்கள் குடும்பத்தினரும்
சுபிட்ச நல்வாழ்வு பெற்றிட
எமது பண்டிகை
அன்பளிப்புகள் இதோ:
சேமிப்புக் கணக்கு
ரெகரிங் டிபாஸிட்
பிக்ஸெட் டிபாஸிட்
ரொக்க சர்டிபிகேட்டுகள்
மினி டிபாஸிட்
பொற்குவியல் டிபாஸிட்
இந்த தீபாவளி
சமயத்தில் எமது
ஆதரவாளர்கள்,
நலம் விரும்புவோர் மற்றும்
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
நல்வாழ்த்து கூறுகிறோம்:
அனைத்து மக்களும் சாந்தியும்,
சந்தோஷமும், சுபிட்சமும் பெற்று
வாழ்த்திடவும் பிரார்த்தனை செய்கிறோம்
SERVICE · SECURITY · STABILITY
ESTD : 1901
பாங்க் ஆப் தஞ்சாவூர் லிமிடெட்
பதிவு அலுவலகம்: 1087, மிஷன் வீதி, தஞ்சாவூர் 613 001
S. சொக்கலிங்கம்
ஜெனரல் மானேஜர்.
B.K. மாதவன்
சேர்மன்.

"தீபாவளி நல்வாழ்த்துக்கள்"

—BUMA

Grams: COLOR CRAFT

Phone No.: 656

The Orient Color Crafts

POST BOX NO. 192

8-4-152, MUNDAGA NADAR STREET

SIVAKASI 626123

Specialist in manufacture of photo offset Calendars

Table Calendars and Special Varieties of

Sheeter Calendars and Diaries

கருத்தைக் கவர்ந்த கதை

மக்களிடையே முன் காலத்திலிருந்து வந்த இறையுணர்வு இப்போது அதிகம் இல்லை என்று சொல்கிருர்கள். தற்கால வாழ்க்கையில் வழிபாட்டுக்கு அதிக அவகாசம் இல்லை என்றும் சிலர் சொல்கிருர்கள். சத்விஷயங்களைக் கேட்பதே ஒரு வகை வழிபாடுதான். அந்த முறையில் உபந்நியாசம் செய்பவர்கள் தங்கள் வாக்குச் சாதுர்யத்தால் ஒளிபெறச் செய்துவிடுகிருர்கள். அந்தப் பெருமக்களில் சிலர் தங்களுக்குப் பிடித்த கதை பற்றிச் சொல்கிருர்கள்.

மன்னார்குடி சாம்பசிவ பாகவதர்:

நாற்பது வருடங்களாகக் கதா காலட்சேபம் செய்துவரும் இவர் கதையில் மட்டும் அல்ல, இசையிலும் நல்ல தேர்ச்சி பெற்றவர். சென்னை இசைக் கல்லூரியில் ஹரிகதை சொல்லிக் கொடுக்கும் பகுதி நேரச் சிறப்பாசிரியர். பல்வேறு மொழிகளில் ஆயிரம் பாடல்களை இயற்றியுள்ள இவர் இதுவரை 250 வகைக் கதைகளைச் சொல்லியிருக்கிருர். அகில இந்தியாவெங்கும் சென்று பிரசங்கம் செய்துள்ள இவரும், செம்மங்குடி சீனிவாசையரும் மகாராஜபுரத்தின் சிஷ்யர்கள்.

இவர் பல்வேறு சரித்திரங்களைச் சொன்னாலும் அதிகமாகச் சொல்வது

புரந்தரதாசர், முத்துஸ்வாமி தீட்சதர் ஆகியோரது கதைகளைத்தான். இவருடைய ஸ்பெஷல் கதை தியாகராஜர் சரித்திரம். இவருக்கு மிகவும் பிடித்ததும் தியாகராஜர் சரித்திரந்தான்.

'அந்த மகானின் வாழ்க்கையைச் சொல்லச் சொல்ல நம்மையும் அறியாமல் ஒருவித மின்சாரம் நம் உடலில் பாய்கிறது' என்று கூறுகிருர். ஒவ்வொரு முறை சொல்லும்போதும் இவரே தியாகையராக மனத்தளவில் மாறிவிடுவாராம். அறுநூறு தியாகராஜ கீர்த்தனைகளைப் பாடும் சாம்பசிவ பாகவதர் அந்த மகானின் கீர்த்தனைகளைப் பற்றிப் பெரிய ஆராய்ச்சியே செய்துள்ளார். முடிவு: ''ஒலிகளாலேயே எதையும் உணர்த்த முடியும், உயிரூட்ட முடியும்'' என்று அடித்துக் கூறுகிருர். ''ஆனால் இது தியாகராஜ கீர்த்தனைகளினால் மட்டுமே சாத்தியம்'' என்றும் கூறுகிருர்.

பிரேமா பாண்டுரங்கன்:

தமிழிலும் சம்ஸ்கிருதத்திலும் உபந்நியாசம் செய்பவர்கள் மத்தியில் முழுமையான ஆங்கிலத்தில் பிரசங்கம் செய்பவர் இவர். இவரது ஆங்கில உபந்நியாசம் மிகவும் கவர்ச்சியாக, எளிமையாக இருக்கும். பதினாறு வயதில், ஒரு நாள் இவர் சிறுமியாக இருந்தபோது சேங்காலிபுரம் அனந்தராம தீட்சிதர் கதை கேட்கச் சென்றிருந்தாராம். குடும்ப நண்பரான தீட்சிதர், தம் கதையின் நடுவில் இவர் பேசுவார் என்று அறிவித்தாராம். ஒன்றுமே புரியாத நிலையிலும் சிறுமி பிரேமா தயங்காமல் மேடையேறிப் பேசினர். அதுதான் இவரது முதல் மேடைப் பேச்சு. அன்றிலிருந்து இன்று வரை பக்திமார்க்கத்தையும், கடவுளிடம் எல்லாரும் அன்பு செலுத்தும் வழியைப் போதிப்பதையுமே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து வருகிருர். சமீப காலமாகத்தான் இவர் ராமாயணம் சொல்லி வருகிருர். எந்த வகையான கதையைச் சொன்னாலும் இவருக்குப் பாகவதந்தான் மனத்துக்கு மிகவும் பிடித்ததாக இருக்கிறதாம். காரணம் பகவான் கிருஷ்ணனின்மேல் இவருக்கு இருக்கிற வாத்சல்யம், பக்தி, அன்பு. ஆங்கிலப் பேராசிரியையான இவர் மற்றவர்களிடமிருந்து மாறுபட்டு, புதுமையாக இருக்க வேண்டும் என்பதாலேயே பிரசங்கத்தை ஆங்கிலத்தில் மட்டும் செய்கிருர். பிரசங்கம் செய்பவர் பக்தி மார்க்கத்தைப் போதிப்பதோடு நின்று விடாமல் தாமும் வாழ்வில் கடைபிடிக்க வேண்டும் என்றும் கூறுகிருர், திருமதி பிரேமா பாண்டுரங்கன் அவர்கள்.

டி. எஸ் பாலகிருஷ்ண சாஸ்திரிகள்:

12,000 தடவை மேடை ஏறியுள்ளவர். நாற்பது வருஷமாகப் பிரசங்கம் செய்து வருகிருர். கதையில் வரும் சில பாடல்களைத் தவிர,

மற்றவை இவரது சொந்தச் சாகித்தியங்கள். இவர் ராமாயணம், மகாபாரதம் என்று பல காவியங்களைத் தொடர்ந்து முப்பது நாற்பது நாட்கள் சொல்லியிருக்கிருர். தியாகராஜ ராமாயணத்தை முதல் முறையாக மேடை ஏற்றிய பெருமை இவரைச் சாரும்.

இவருக்குப் பிடித்த கதை தியாகராஜ சுவாமிகளின் சரித்திரந்தான். அதில்தான் சிறந்த கீர்த்தனைகள், போதனைகள் இரண்டுமே கலந்துள்ளன. 'சங்கீதம், மொழிக்கு, நாட்டுக்கு, மதத்துக்கு எல்லாம் அப்பாற்பட்டதல்லவா? அதனால் தியாகராஜ சரித்திரத்தின் இசையின் மூலம் எல்லாரையும் கவர முடிகிறது. பக்தி சுலபமாக உண்டாகிறது' என்பதே இவர் கூறும் காரணம்.

முக்கூர் சீனிவாச வரதாசாரியார்:

இவர் வார்த்தைக்கு வார்த்தை காஞ்சிப் பெரியவர்களைக் கூறுகிறார். அந்த மகான்தாம் இவரைப் பிரசங்கம் செய்யவே சொன்னார்களாம். இவர் சுமார் இருபத்தைந்து வருஷமாக உபந்நியாசம் செய்துவருகிறார். பல கதைகளைச் சொன்னாலும் ராமாயணமே இவருக்கு மிகவும் பிடித்தமானது. பகவான் மனுஷனாக அவதாரம் எடுத்து மனிதனுடைய சுகதுக்கங்களை ராமாவதாரத்தில் அநுபவித்து விட்டார். ஆனால் அந்த ராமாயணத்திலேயே பரதன் பாத்திரந்தான் சிறந்தது என்கிறார். காரணம்:

ராமன் காட்டுக்குப் பதினான்கு ஆண்டுகள் போக வேண்டும் என்று வரம் கேட்டவுடனேயே அந்தத் துக்கத்திலேயே தசரதன் இறந்துவிடுகிறார்.

அந்தச் சமயத்தில் பரதன் அரண்மனை வர அவனுக்கு விவரம் தெரிகிறது. இதற்குக் காரணம் யாரோ அவரைத் தண்டிக்க விரும்புகிறான். முதலில் தன் தாயாரே காரணம் என்று நினைக்கிறான். பின், கைகேயிக்குத் தண்டனை, தான் கொடுக்காமலேயே தசரதன் இறந்ததால் விதவைக் கோலம் ஏற்பட்டதை உணர்கிறான். தந்தைதான் காரணமோ? ஏன் இப்படி ஒரு வரத்தைக் கைகேயிக்கு கொடுத்தார்? அதற்கும் அவருக்குத் தண்டனை இறப்பு என்ற உருவில் வந்துவிட்டது. ராமன் காரணமோ? ராமனுக்கும் எல்லாரையும் பிரிந்து காடு செல்வதே தண்டனைதானே? இந்த நாட்டு மக்கள் காரணமோ என்றால் அவர்கள் அரசன் இல்லா ஆட்சியால் தண்டிக்கப் படுகிறார்கள். பின் யார் காரணம்? தானே என்று உணர்கிறான். கைகேயிக்குத் தான் மகனாகப் பிறக்காவிட்டால் இப்படி வரம் கேட்டிருக்க மாட்டாள் இல்லையா; எல்லாருடைய பாவத்தையும் தன் பாவமாக ஏற்றுக்கொள்ளும் பரதனே எனக்கு மிகவும் பிடித்த சிறந்த பாத்திரம்.

சுகி சிவம்:

இளந் தலைமுறையில் மிக எடுப்பாகக் கதை சொல்பவர்களில் திரு சுகி சிவம் ஒருவர். ஆனால் இவர் இத்துறையை எடுத்துக் கொண்டதற்கு, 'நம்முடைய கருத்துக்களை மக்களுக்குச் சொல்ல கதாகலாட்சேபம் நல்ல வழி என்பதே' காரணம். புதுப் பெரியவர்கள் இதையே முழு நேரத் தொழிலாக வைத்துக் கொள்ளச் சொன்னபோது பயந்தாராம். ஆனால் அந்தப் பயம் இப்போது துளிகூடக் கிடையாதாம்.

கம்பராமாயணம், வில்லி பாரதம், பெரிய புராணம், கந்த புராணம், அபிராமி அந்தாதி ஆகிய கதைகளை இவர் தெள்ளிய தமிழில் மிக அழகாகச் சொல்கிறார். அதிலும் கம்பராமாயணம் சொல்வது, 'நமக்கு நாமே நல்லதைச் செய்துகொள்வது போல் தோன்றுகிறது' என்கிறார். அதில் உள்ள கவிச்சுவை, படிப்பவர்களையும் கேட்பவர்களையும் கிறங்கச் செய்துவிடுகிறதாம். இவரைக் கவர்ந்த பாத்திரம் ஜனக குமாரி. "இந்தத் தேசத்தின் லட்சியப் பெண்மையின்முழுமையானஉருவம் எடுத்திருப்பது சீதைதான். சீதையைப் பற்றிச் சொன்னாலும் கேட்டாலும் உள்ளம் பண்புபெற்று உயருகிறது" என்கிறார் திரு சுகிசிவம் அவர்கள்.

"என்ன ஜோசியரே, கன்யா ராசிக்கு மட்டும் மாசாமாசம் நல்ல பலனாவே எழுதறீங்க?"

"அது என் மனைவியோட ராசி! அதனாலதான்!"

மஞ்சக்குடி ராஜகோபால சாஸ்திரிகள்:

பழுத்த பழமாக இருக்கும் மஞ்சக்குடி சாஸ்திரிகள் சுமார் 45 வருஷமாக உபந்நியாசம் செய்துவருகிறார். யஜுர்வேதம் முவழுதும் கற்ற இவருக்குச் சேங்காலிபுரம் அனந்தராம தீட்சிதர் அண்ணா முறையாக வேண்டுமாம். புராண விருத்தி, பரம்பரை

பழக்கமாம். இவருடைய தகப்பனார், தாத்தா எல்லாரும் உபந்நியாசத் துறையில் தேர்ந்திருந்தவர்கள். சங்கீதத்தைச் சாஸ்திர முறைப்படி பயின்ற இவர் தம் கை விரல் நுனியில் எந்தக் கதையை எவ்வளவு முறை சொல்லி இருக்கிறார் என்பதைக் கூறுகிறார்: ராமாயணம்-186, பாகவதம்-113, கந்தபுராணம் - 140, தேவிபாகவதம் - 32, மகாபாரதம்-18, பெரிய புராணம்-12, திருவிளையாடல் புராணம் 40, பகவத் கீதை 40.

இப்படிப் பல கதைகள் சொன்னாலும் ராமாயணம் இவருக்கு மிகவும் உகந்தகதை. அதில் உள்ள ஆஞ்சநேய ஸ்வாமி இவரைக் கவர்ந்த பாத்திரம்

தன்னலமற்ற தியாகம் செய்துள்ள பாத்திரம் இராமாயணத்திலேயே ஆஞ்சநேயர் தாம். இதை ராமரே ஒரு சமயம் கூறுகிறார். பட்டாபிஷேகம் நடந்தபோது சீதை, ஆஞ்சநேயருக்கு ஒரு மாலையைப் பரிசளித்துவிட்டு, "நீங்கள் என்ன கொடுக்கப் போகிறீர்கள்?" என்று கேட்க ராமர், "ஆஞ்சநேயன் ஆயிரம் உபகாரங்கள் செய்துள்ளான். ஓர் உதவிக்கே எனது உயிரைத் தர வேண்டும். அப்படித் தந்தால் மீதமுள்ள 9999 உபகாரங்களுக்கு நான் கடனாளியாக வேண்டும். அதனால் 1000 உபகாரங்களுக்கும் ஒட்டுமொத்தமாகக் கடனாளியாகவே இருந்து வருகிறேன் என்கிறார். இப்படி அநுமானின் பிரபாவத்தை விளக்குகிறார், மஞ்சக்குடி அவர்கள்.

[தொகுப்பு: 'சலன்']

அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!



38 வருடங்களுக்கு மேலாக
நம்பகமான சேவை

மானோபிளாக் பம்பு
* பெல்ட் பம்பு
* டொமெஸ்டிக் பம்பு
* ஆயில் இன்ஜின் பம்பு
மோட்டார் பம்பு
* மின்சார மோட்டார்
* கரும்பு ஆலை
* மின்சங்கு (SIREN)
* ஜெட் பம்பு

நீடித்த உழைப்புக்கும், சிறந்த சேவைக்கும் 'சுப்பையா' பம்புகளையும், மோட்டார்களையும் வாங்கிப் பயனடையுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

சுப்பையா பவுண்டரி

(ஸ்தாபிதம் 1944)

பாப்பநாயக்கன்பாளையம்
கோயமுத்தூர் - 641 037.

தந்தி: "பவுண்டரி" ★ போன்: 22935, 35390

Subbiah Foundry,
Coimbatore 641 037.

வியாபார விசாரணைகள்
வரவேற்கப்படுகின்றன

—B.P

போன்: 1182

உயர்ரக சப்புரி பட்டு! உத்தரவாதமுள்ள
அசல் வெள்ளி சரிகையினாலான
நவீன ரக பட்டாடைகள்
வாங்க சிறந்த இடம்!!

பேரறிஞர் அண்ணா கூட்டுறவுப்
பட்டு சொசைட்டி எண் T. R. (H) 27

5-A, நடனகோபாலர் தெரு, கும்பகோணம்.

கிளைகள்: 1. திருபுவனம் காம்பிளக்ஸ், 2. சுமங்கலி, திருச்சி, 3. கீழவெளி வீதி, மதுரை,
4. SKC'S பில்டிங், திண்டுக்கல், 5. 2-வது அக்ரகாரம், சேலம்.

R. நடராசன், துணிநூல் கட்டுப்பாடு அதிகாரி/செயலாளர்
M. V. சாந்தாராமன், B.Sc., B.L. தலைவர்
V. K. இராமாச்சாரி, உபதலைவர்

P. R. இராஜம், S. V. சத்தியமூர்த்தி, M. S. இராசகோபால்,
J. G. ஜெயராமன், K. V. இராமமூர்த்தி
இயக்குனர்கள்

காலத்தோடு இணைந்து தற்கால நங்கையர்க்கு ஏ ஆர்வி இண்டஸ்ட்ரீஸ் அளிக்கும் நவீனமானதோர் மாவரைக்கும் இயந்திரம்

புதிய கிரைண்ட்மாஸ்டர்

ஏ ஆர்வி இண்டஸ்ட்ரீஸ் தென்னிந்தியாவில் மாவரைக்கும் யந்திரங்கள் தயாரிப்புக்கு வழி காட்டியவர்கள். ஆகவே அவர்கள் இப்பொழுது புதிய ஓர் நவயுக மாவரைக்கும் யந்திரத்தை அளிப்பதில் வியப்பொன்றுமில்லை.

கிரைண்ட்மாஸ்டர்: நவநாகரிக நங்கையர்களுக்கென்றே தயாரிக்கப்பட்ட இதுவரை கண்டிராத, ஓர் அற்புதமான யந்திரம். உங்கள் சமையல் பாங்கு நவீனமாகிறது. ஆனாலும் உங்கள் சமையலில் எப்பொழுதும் உள்ள கை மணமும் ருசியும் அப்படியே இருக்கிறது.

எழிலே உருவானது:

- அரைக்கும் கல்லைத்தவிர இந்த இயந்திரம் முழுவதும் உயர்ரக ஸ்டென்லெஸ் ஸ்டீலினால் செய்யப்பட்டது.
- வெளிப்பக்கம் 17 வெவ்வேறு கலர்களில் கிடைக்கும் ஃபைபர் கிளாஸினால் அமைக்கப்பட்டது.

சௌகரியம் (வேலை பளு குறைவு)

- உள்ளுக்குள் அமைக்கப்பட்ட ஒரு சாதனம் அரவை முடிந்தவுடன் யந்திரத்தை தானே நிறுத்திவிடுகிறது.
- எதுவாயிருந்தாலும் 5 நிமிடங்களுக்குள் அரவை முடிந்துவிடும்.
- அரவையான மாவு வெளிப்பக்கமுள்ள மூக்கு வழியாய் பாத்திரத்தில் விழுவதால் கையால் ஒன்றும் செய்ய வேண்டாம்.

சுகாதாரம்:

- யந்திரத்தில் தங்கிய மாவை ஒரு பிரஷ்ஷினால் சுத்தம் செய்துவிடலாம்.
- யந்திரத்தை அலம்பிய அசுத்த நீர் மூக்கு வழியாய் வெளியேறிவிடுகிறது.

மேலும்:

இவ்வியந்திரம் உயர்திறனுள்ளதால், இதில் அரைத்த மாவினால் உங்கள் சமையல் பாங்கும் கை மணமும் மாறுவதில்லை. எப்பொழுதும் போல் ருசியாயிருக்கும். இட்லி, தோசை, வடை எதுவாயிருந்தாலும் உங்கள் தேவைக்கேற்ப மாவு சன்னமாயும், சரியான பதத்திலும் கிடைக்கிறது. உங்களுக்கு என்ன வேண்டும்... கிரைண்ட்மாஸ்டர் இருக்கிறது! கூடவே எங்கள் பராமரிப்பு பணியும் உண்டு. உடனுக்குடன் திறமையான சேவை இந்தியாவெங்கிலும்.

ஒரு வருட உத்தரவாதம்.

Arvind Industries
21, Second Line Beach, Madras-600 001
Phone: 35456 (Office & Showroom)
31074 (Works)

இவ்வியந்திரம் இயங்குவதை ஸ்பென்ஸரில் காணலாம்.

Marketed by: Spencer's Madras-2

APRC A/9



தீபாவளி ஜோக்ஸ்!
'அப்பா! எங்க சட்டையைத் தைச்சுக்கொடு!'
'தலைக்கு மேலே வேலை இருக்கு. எங்கேயானும் தைச்சுக்குங்கடா!'
'என்னங்க, தலையைப் பனைமரம் மாதிரி..
'நல்லெண்ணெய்க்குப் பதிலா 'பாம் ஆயில்' தடவின்டா இப்படித்தான் இருக்கும்!'
பட்டாஸ் கடை
'உங்க கடை வெடிகளை எல்லாம் எங்க 'துபாய்' அத்திம்பேர் வந்துதான் கொளுத்தணும்.'
'ஏன்?'
''அவர் பெட்ரோல் கொண்டு வருவார்.''
''பட்டாஸ் கடை டூட்டி போட்டுக்குங்க. கையோட இந்தப் பையையும் கொண்டு போங்க. குழந்தைங்க அடிக்கற லூட்டி தாங்கலே!''
''கரியாட்டமா இருக்கிற முறுக்கு காஸ் ஸ்டவ்லே பண்ணினது! வேகாம இருக்கிற முறுக்கு காஸ் ஆனதும் கெரசின் ஸ்டவ்லே பண்ணினது.''
'மாப்ளே! ஜம்னு கங்கா ஸ்நானம் பண்ணுங்கோ! அண்டா ஜலத்திலேயே ஒரு டிராப் கங்கா தண்ணி, ஒரு கரண்டி எண்ணெய், ஒரு கரண்டி சிக்காய், கலந்தாச்சு. த்ரீ இன் ஒன்! பேஷா கங்கா ஸ்நானம் பண்ணுங்கோ!''

சொற்கள்

நா. சீ. வரதராஜன்

எண்ணத்தை உலகிற்கே ஏற்றுமதி ஆக்குகின்ற
புண்ணியத்தைச் செய்வதற்குப் புறப்பட்ட கப்பல்கள்.
நினைவுக் கடற்பரப்பில் நெளிகின்ற அலைகள்செயும்
முனகல் வடிவமைந்து முளைத்திட்ட ஒலிமாயம்.
மனிதனுடன் மனிதன்தன் மனம்திறந்து கையுடன்கை
இனிதே இணைவதற்காய் ஏற்பட்ட மொழிப்பாலம்.
கவிதைப்பொன் மாளிகையைக் கட்டுகின்ற படிகங்கள்.
சுவைமிக்க இசைக்கனியுள் சூழ்ந்திருக்கும் தேன்சுளைகள்.
விலங்கினங்கள் அறியாத விந்தை! மனிதகுலம்
நலங்காண இறைதந்த நல்லவரம் சொல். ஆமாம்.
இதயத்தின் வெம்மையிலே எழுந்துவந்த புனிதமுடன்
புதியத்தின் உருமாற்றிப் பதமாகி, வாய்மணந்து
வெளியே வரும்சொல்லில் வேகம் மிகுந்திருக்கும்.
ஒளியும் உயிர்ப்புமதன் உடம்பில் நிறைந்திருக்கும்.
எண்ணக் கருவறையின் இருட்டுக்குள் ஒளிந்தவமே
பண்ணிப்பின் வெளியேறும் பக்குவத்தில் வலியாகும்
சொல்லில் சுடர்இருக்கும். தூய்மைக் கதிர்சொடுக்கி
வெல்லும் திறன்படைக்கும் வீறும் மிகுந்திருக்கும்!
அந்தச்சொல் மந்திரச்சொல். அவனைப் படைப்பதற்கே
சிந்தைத் திறம்வளர்க்கும் செம்மைத் தவம்புரிவோம்!

சோர்வு

"மஹி"

புல்லில் மிதக்கும் புதுமலரின்
புதுமை வண்ணக் கோலங்கள்,
சொல்லில் வடிக்க முயலுகிறேன்
சோர்வில் மாலைவீழ் மலரானேன்.

விண்ணில் மலர்ந்த சுடர்ச்சொட்டை
வியந்தே ஓவியக் காட்சிசெய
எண்ணித் தூரிகை எடுக்கின்றேன்
ஏனோ படத்தில் ஒளிரவில்லை,

மாமலை படர்கிற அருவியெழில்
மனத்துள் சிலிர்க்க உணர்வுகளின்
பூமழை ஃஃரஜதிக் கோவைகளாய்
பொழிந்திட ஏனோ முடியவில்லை.

அந்தியின் வான்செயும் செக்கரிடை
அமையும் வயிர ஒளிக்கோட்டை
விந்தை யாகப் பதிக்க ஒளி
வண்ணம் கைவசம் இல்லையடா?

நெஞ்சக்கடலாழம்

பாலைக் குழைத்திட்ட பண்ணிசையால்—காதல்
பாதையைக் காட்டிய பாவையவள்!
வேலைக் குழைத்த விழியிரண்டால் — எனை
வேதனை ஆழியில் வீழ்த்திவிட்டாள்!

செப்புக் குடம்வைத்த சிற்றிடையாள்—எனைச்
சிந்தையில் கொண்டிட்ட பற்றுடையாள்
ஒப்புக்குச் சீறும் சினமுடையாள்—ஆனால்
உத்தமக் காதல் மனமுடையாள்!

நீலக் கடலாழம் கண்டிடினும்—அவள்
நெஞ்சக் கடலாழம் காண்பரிதே;
சீலம் அழிந்திடில் செத்து மடிந்திடும்
சீரிய பண்பின் சிகரமவள்!

காதற் குறிப்பினைக் காட்டிடு வாமெனில்
காலந் துணைசெய வேண்டுமன்றோ?
மோதும் அலையென மூண்டெழும் சிந்தையின்
மோகம் தணிய வழியில்லையே!

ஆவிக் கலப்பில் அகம்குழைவேன்—அவள்
அன்பினுக் கேங்குந் தவமுடையேன்;
மேவிக் கலந்திடத் தெய்வஅருள்—வந்து
விந்தை புரிந்திட வேண்டுவனே.

வி. துரைசாமி



ராஜேஷ்குமார் விட்டத்தில் எதையோ தேடியபடி 'லெதர்' ஸோபாவில் தலையைச் சாய்த்து அமர்ந்திருந்தான். அவன் மிகப் பிரயாசைப்பட்டு மறைக்கப் பார்த்த வயதும், அதன் இயல்பான தளர்ச்சியும் ஓர் இரவின் தூக்கம் நழுவியதில் திரை கிழிந்துபோன மாதிரி எட்டிப் பார்த்தன. முகத்தில் லேசான உப்புசமும், கண்களுக்கடியில் கரிய திட்டும்.

அவன் ஆயாசத்துடன் விட்டத்திலிருந்து பார்வையை எடுக்காமலே கன்னங்களைத் தேய்த்து விட்டுக் கொண்டான்.

இன்றைக்கு மஸாஜ்ஜுக்குப் போக வேண்டும். நன்றாக எண்ணெயை நீவி விட்டுக்கொண்டு 'ஸானு' ஆவிக் குளியலில் முங்கி வந்தால் பத்து வயது குறையும்.

விட்டத்திலிருந்து பார்வையை அகற்றிக் கீழிறக்கியபோது, முழுவதும் நிலைக்கண்ணாடியாகவே இருந்த எதிர்ச் சுவரில் அவனுடைய பிம்பம் தெரிந்தது. அவன் கலவரத்துடன் பார்வையைத் திருப்பிக் கொண்டான். அந்த விஸ்தாரமான அறையின் மூலையில் பிரம்மாண்டமாய் நின்ற அவனது 'ஸினிமா கட் அவுட்' பிம்பம் தெம்பை அளித்தது.

''இது என்ன? எந்தச் சினிமாப் பத்திரிகையைத் திறந்தாலும் சந்திரகாந்துடைய போட்டோவாவே இருக்கு! ஒரே பப்ளிஸிடியா இருக்கு!''

ரமா அங்கே உட்கார்ந்திருப்பதை அவன் அப்போதுதான் கவனித்தான். எரிச்சலுடன் சொன்னான்.

''காசு குடுத்து எழுதச் சொன்னா எந்தப் பத்திரிகைக்காரன் எழுத மாட்டான்?''

அவன் பேசியது காதில் விழாத மாதிரி ரமா பத்திரிகையிலேயே கண்ணாக இருந்தாள்.

''நல்லாத்தான் இருக்கான் ஆளு! வடக்கத்திக்காரன் மாதிரி நல்ல நிறம் வேறே!

''வெறும் அழகு போதுமா? திறமை வேண்டாம்?''

ரமா சட்டென்று அவனை நிமிர்ந்து பார்த்தாள். புன்னகை செய்தாள்.

''சமீபத்தில் வந்த படத்திலே அவன் ரொம்ப நல்லா நடிச்சிருக்கறதா எல்லாரும் சொல்றாங்க.''

''அதெல்லாம் வெறும் விளம்பரம், அதான் சொன்னேனே காசு கொடுத்து...!''

''உங்களுக்குப் பொறாமை.''

அவனுக்கு ஆத்திரம் கிளம்பிற்று.

''நான் எதுக்குப் பொறாமைப் படணும், நேத்து முளைச்சவனைப் பார்த்து, என்னுடைய மார்க்கெட்டைப்பத்தி இன்னும் பதினஞ்சு வருஷத்துக்குக் கவலையில்லே.

''பொறாமை எனக்கில்லே· உனக்குத்தான். நான் எந்த ஹீரோயினோட நடிச்சாலும் பொறாமை. வேறு பொண்ணைப்பார்த்துச் சிரிச்சாப் பொறாமை. எனக்கு அந்தக் குறுகிய மனசு கெடையாது. நீ வேறு ஆணோடு உறவு வச்சிட்டிருந்தாலும் நான் ஒண்ணும் நெனைக்க மாட்டேன்,''

அவள் கண்களில் நீர் திரையிடுகிறது.

'தான் அப்படிப் போயி நீங்க அதைப் பொருட்படுத்தல்லேன்னு அதுக்கு ஒரே ஒரு அர்த்தந்தான் இருக்க முடியும், ராஜேஷ்.'

அவள் மேற்கொண்டு எதுவும் விளக்காமல் விருவிருவென்று மாடிப் படி ஏற ஆரம்பித்தாள்.

''என்ன அர்த்தம்?''

''என்மேலே உங்களுக்குப் பிடிப்பும் பிரியமும் இல்லேன்னு அர்த்தம். என்னை மூணும் மனுஷியாய்ப் பாவிக்கிறீங்கன்னு அர்த்தம்.''

கோபப்படக்கூட அலுத்துப் போய் அவன் கண்களை மூடிக்கொண்டான். குழந்தையைச் சீண்டிவிட்டு அழ விட்ட திருப்திக்கிடையில் லேசாக ஓர் அநுதாபமும் சுரந்தது. 'இவளாக இருக்கக்கொண்டு நமது ஆட்டத்தை எல்லாம் சகித்துக்கொண்டு இருந்து வருகிறாள். ஆ! இந்த மாநிலத்து ஸூபர்ஸ்டாருடன் இருக்கக் கசக்குமோ?'

'இருபது வருஷங்களாக, ஒரு நாள் கூட ஓய்வில்லாமல் நடித்து வந்திருக்கிறேன். இப்போதுதான் ரெண்டு மூன்று மாசங்களாக ஒரு புதிய சூழல் உருவாவதை உணர முடிகிறது. காரணம் புரியாமல் ஒப்பந்தங்கள் நழுவிக்கொண்டிருக்கின்றன.'

மேஜைமேல் இருந்த பத்திரிகையில் அந்த நேற்று முளைத்தவனின் முகம் பளிச்சென்று சிரித்தது.

கண்ணாடிக் கதவுகளுக்கப்பால் வாசலில் ஒரு கார் வந்து நிற்பது தெரிந்தது. அவன் சட்டென்று தலை மயிரைக் கோதிவிட்டு முகத்தை நீவி இயல்பாக வைத்துக்கொண்டான்.

அவனுக்கு அறிமுகம் இல்லாத இரண்டு மூன்று பேர் உள்ளே நுழைந்தார்கள். புதிய தயாரிப்பாளர்களாக இருக்கலாம் என்று இருப்பிடத்தை விட்டு எழுந்திருக்காமலேயே, ''யாரு?'' என்றான்.

''நாங்கள் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள். உங்க உதவி வேணும்.''

அவன் லேசான விறைப்புடன், ''நான் அரசியல் விவகாரங்கள்ளே புகுந்துக்கறதில்லையே எந்தக் கட்சியிலேயும் இல்லையே!'' என்றான்.

''இது அரசியல் இல்லே. உங்களை எங்க கட்சியிலே சேரவும் சொல்லல்லே. இந்த மாநிலத்தைச் சேர்ந்த ஒவ்வொரு பிரஜையோட தன்மானத்துக்கும் ஏற்பட்டுப் போன அபாயத்துக்காக நாங்க கவலைப்படறோம். அதற்காக ஒரு மாபெரும் இயக்கத்தைத் தொடங்கியிருக்கிறோம். நீங்கள் இந்த மாநிலத்துச் சிறந்த நடிகர். மக்கள் மனத்தில் நிரந்தரமான இடம் பிடிச்சுக் கொண்டிருக்கிற சினிமா நட்சத்திரம். உங்களுடைய ஒத்துழைப்பு இருந்தால் எங்க இயக்கம் வலுவடையும்.''

அவர்களது புகழ்ச்சி, கிளுகிளுப்பைத் தந்தது. ஆனால் தலையும் புரியவில்லை; காலும் புரியவில்லை.

''எனக்குப் புரியல்லே!''

''விளக்கமாச் சொல்றோம். வரவர நம்ம மாநிலம் நமக்குச் சொந்தமானதுதானா என்கிற சந்தேகம் வந்துவிட்டது. ஒவ்வொரு தெருவிலேயும் அந்நிய மாநிலத்தவன் வந்து உக்கார்ந்திருக்கான். இடம் குறைந்தது தப்பாப் போயிட்டது. எல்லா வேலைவாய்ப்பையும் தட்டிக்கறான். இங்கிலீஷ் ஒண்ணு தெரிந்தால் போதும் என்கிற தைரியத்திலே எல்லாத் துறையிலேயும் நம்மைப் பின்னுக்குத் தள்ளிட்டு நகர்ந்துக்கறான். அதனாலே...''

இதில் நுழைவது எந்த வகையில் தனக்கு லாபம் என்கிற அலட்சியத்துடன் அவன் சொன்னான்.

''நீங்க சொல்றதெல்லாம் உண்மையா இருக்கலாம். ஆனா இதிலெல்லாம் நான் எதுக்குங்க கலந்துக்கணும்?''

''நீங்களும் இந்த மாநிலத்துப் பிரஜை என்கிற காரணந்தான். சினிமாத் துறையையே எடுத்துக் கொள்ளுங்களேன். அந்நிய மாநிலத்தான் உங்கள் வாய்ப்பை எல்லாம் தட்டிக்க ஆரம்பிச்சுட்டதாக் கேள்விப்படறோம்.''

அவன் நிமிர்ந்து உட்கார்ந்தான்; ''யாரைச் சொல்றீங்க?''

''சந்திரகாந்துன்னு பேராமே.''

சுறுசுறுவென்று கிளம்பிய பொருமைப் பொறியை அமுக்கியபடி, ''கலை உலகத்திலே இந்த மாதிரி அடிக்கடி நடக்கிறது சகஜம். இந்தச் சலசலப்புக்கெல்லாம் நான் கவலைப்படல்லே!'' என்றான்.

''நாங்க கவலைப்படறோம். இது சில்லறை விஷயம் இல்லே. இது முக்கியமான விஷயம். நாம் பேசாமல் இருந்துவிட்டோமானால் நமக்கு நம் மாநிலத்திலேயே இருக்க இடம் கெடையாது.''

அவன் சில விநாடிகள் பேசாமலிருந்து சந்தேகத்துடன் கேட்டான்!

''இதுக்காக என்ன செய்யப் போறீங்க?''

''அறிக்கைகள், கோரிக்கைகள் அனுப்பப் போகிறோம், அரசாங்கத்துக்கு. நம் மாநிலத்து ஆட்களுக்குத்தான் முதல் வேலை வாய்ப்பு. கல்லூரியில் இடம் கிடைக்க வேண்டும். நமது பாஷை தெரிந்த அந்நியர்களுக்கே வேலை வாய்ப்பளிக்க வேண்டும். நமது பாஷைதான்...''

''நான் இதிலெ நுழையறதினாலே என்ன லாபம்னு பார்க்கறேன்.''

''நம்ம ரெண்டு பேருக்குமே விளம்பரம் கிடைக்கும். கூட்டத்திலே நீங்க பேசப் போறீங்கன்னா நெறையக் கூட்டம் வரும். நெறையப் பேர் நம்ம பேச்சைக் கேட்டாங்கன்னா நமக்கும் பலம் சேரும். நகரத்து முக்கியமான பெரிய தெருக்கள்லே உங்களுடைய முழு உருவச் சித்திரங்கள் வெக்கறோம்.''

அவன் கண்ணை மூடியபடி சில விநாடிகள் யோசனையில் இருந்தான். அந்தப் பொடியன் சந்திரகாந்த் இந்த மாநிலத்தைச் சேர்ந்தவன் இல்லை என்கிற விஷயம் தனக்குச் சாதகமானது என எண்ணினான்.

''நீங்க இத்தனை தூரம் வந்து சொல்றதினாலே சரிங்கலாம்னு நெனைக்கிறேன். இதனாலே அரசாங்கத்துக்கும் எனக்கும் ஏதோ லடாய்னு ஆயிடக்கூடாது. அரசியலுக்கும் எனக்கும் ரொம்பத் தூரம்.''

''நீங்க கவலையே படவேண்டாம். உங்களுக்கிருக்கிற புகழுக்கு அரசாங்கம் ஒண்ணும் செஞ்சுக்க முடியாது. உங்க பேரைப் பார்த்து மக்கள்

தன்னாலே இந்தப் பிரச்னைக்குத் தங்கள் ஆதரவைக் குடுப்பாங்க. நிச்சயமா அரசு எங்க கோரிக்கையை ஆதரிக்க வேண்டிய நிலை ஏற்படும்.''

''சரி, பார்க்கறேன். என்னுடைய 'கால்ஷீட்டு'களைப் பார்த்து எப்ப நேரம் கிடைக்கும்னு சொல்றேன்.''

''நீங்கள் ஒன்றிரண்டு நாட்கள் ஒதுக்கினால் போதும். எல்லா ஏற்பாடுகளையும் நாங்க கவனிச்சுக் கொள்கிறோம்.''

அவர்கள் கிளம்பிப் போனதும், ஒரு லேசான திருப்தி ஏற்பட்டது. மேஜைமேல் தெரிந்த சந்திரகாந்தின் முகத்தைப் பார்த்து அவன் ஏளனமாகச் சிரித்தான்.

''இனிமேல் பார். எல்லாத் தயாரிப்பாளர்களும் என் வீட்டு வாசல்லே நிக்கப்போறாங்க. மடத்தைப் பிடுங்கினாச் சும்மா இருப்பேனா?''

''யார் வந்திருந்தது? தயாரிப்பாளர்களா?'' சற்றுமுன் ஏற்பட்ட மனத் தாங்கலை முற்றும் மறந்த மாதிரி ரமா காணப்பட்டாள்.

''இல்லே; அரசியல்வாதிகள்!''

''என்ன விஷயம்?''

அவன் சொன்னான்.

அவள் கவலையுடன் அவனைப் பார்த்தாள். ''நீங்க எதுக்கு இதிலெல்லாம் மாட்டிக்கிறீங்க? இந்த மாதிரி கூட்டங்களுக்கெல்லாம் நடிகர்கள் போனா அடிக்கடி சண்டை தான் ஏற்படும்.''

''நீ இதிலேயெல்லாம் தலையிட வேண்டியதில்லே. நீ பேசாம இரு.''

''நான் தலையிடல்லே. அரசியல்வாதிங்ககூடக் கூட்டுச் சேர்றது ஆபத்து. கலைஞர்கள்ளாம் இப்படிப் பிரிவினை பேசறது தப்பு. மத்த பாஷைத் தயாரிப்பாளர்கள் தயவு உங்களுக்குத் தேவையில்லையா?''

''உன் அபிப்பிராயத்தை நான் கேக்கல்லே.''

இவள் கழுத்தை நெறித்தால் என்ன என்று அவனுக்கு ஆத்திரம் ஏற்பட்டது. யாருமே அவன் மனசு கோணும்படியாகப் பேசத் துணிந்ததில்லை, இவள் ஒருத்திதான் பேசுகிறாள், மனைவி என்ற உரிமையில்.

உடம்பை நீவிவிட ஆள் வந்தான். அவன் சட்டென்று அடங்கினான்.

அந்த அரசியல்வாதிகள் அடிக்கடி வந்தார்கள். நிறைய அச்சடித்த காகிதங்களைக் கொடுத்த வண்ணம் இருந்தார்கள். அவற்றையெல்லாம் படிக்க அவனுக்குப் பொறுமை இல்லை

பதினைந்தே நாட்களில் அரசியலில் தான் தலைகுப்புற விழுந்தது புரியாமல் அவன் மாறுபட்ட மனிதனாகிப் போனான்.

அன்று காலையிலிருந்து அவன் பதற்ற நிலையில் இருந்தான். அன்று மாலை நடக்கவிருந்த மாபெரும் கூட்டத்தைப்பற்றி அறிவிப்பு எல்லாப் பத்திரிகைகளிலும் இருப்பதைத் திருப்தியுடன் கவனித்தான்.

ரமா கொஞ்சநாட்களாக அதிகம் எதுவும் பேசாமல் மௌனம் சாதிப்பது லேசாக உறுத்திற்று. அன்றும் அவள் பேப்பரை ஒரு நோட்டம் விட்டுப் பேசாமல் தன் அலுவலைக் கவனிக்க ஆரம்பித்தது அவனுக்கு ஏமாற்றமும் ஆத்திரமும் அளித்தது.



''இன்னிக்குக் கூட்டத்துக்கு வர்றியா?''

''வரல்லே. வந்தா உங்க கொள்கையை நான் ஆதரிக்கிறேன்னு ஆகும்.''

இவள் ஏன் இப்படி வெட்டொன்று துண்டு இரண்டாகப் பேசுகிறாள் என்கிற எரிச்சல் அவனுக்கு.

''ரொம்ப ஆழமான பிரச்னை இது. புரிஞ்சமாதிரி பேசாதே. நீ வரல்லேன்னா ஒண்ணும் பெரிய நஷ்டமில்லே. ஜனங்க என்னைப் பார்க்க, என் பேச்சைக் கேட்கத் தான் வராங்க. உன்னை இல்லே.''

அவள் தன்னை மறந்து சிரித்தாள். அவனுக்கு மகா ஆத்திரம் வந்தது.

''இதுக்கு என்ன சிரிப்பு?''

அவள் அடங்கிப் போனாள்.

''ஒண்ணுமில்லே. ஜனங்க வரது உங்களைப் பார்க்க. நீங்க போறதும் நீங்க இன்னும் பெரிய ஆளுன்னு காண்பிச்சுக்க. மூலைக்கு மூலை இருக்கிற அந்தப் பிரம்மாண்டமான போஸ்டர்களைப் பார்த்தா எனக்கே திகைச்சுப் போறது. இதிலே கொள்கையும் ரசனையும் எங்கேருந்து வந்தது?''

''உனக்கு இதெல்லாம் புரியாது. பேசாம இரு.''

இவன் திரும்பி வரமுடியாத தூரத்துக்குப் போய்விட்டான் என்ற ஆயாசத்துடன் அவள் பேசாமல் இருந்தாள். பிறகு திடீரென்று நினைவுக்கு வந்தவள்போல் சொன்னாள்.

''நேத்து ஹைதராபாத்திலிருந்து தயாரிப்பாளர் நஞ்சுண்டராவ் போன் பண்ணினார். அவருடைய அடுத்த படத்துக்கு உங்களை 'புக்' செய்யணும்னு யோசனையாம்.''

அவனுக்குச் சட்டென்று அகமும் முகமும் மலர்ந்து போயின.

''ஆனா அரசியல் விஷயங்களுக்கு நடுவிலே நேரம் கெடைக்குமான்னு கேட்டார். நாளைக்கு மறுபடி போன் பண்ணச் சொன்னேன்.''

''நானும் என் பி.ஏயும் இல்லாத சமயத்திலே போன் வந்தா அரசியலுக்கும் இதுக்கும் சம்பந்தமில்லேன்னு சொல்லு. நேரா வந்து பேசச் சொல்லு.''

அவளுக்கு மறுபடி சிரிப்பு வந்தது.

தன் வார்த்தைகளின் அசம்பாவிதத்தைத் தானே உணர்ந்தவன் போல் அவன் அவள் பார்வையைத் தவிர்த்தான். அன்றைக்குக் கவனிக்க வேண்டிய எத்தனையோ விஷயங்களில் மூழ்கிப் போனான்.

அன்று மாலை மிகப் பெரிய ஆரவாரத்துடன் அவன் ரசிகர்கள் புடைசூழ அரசியல்வாதிகள் மாலைகூட்டக் கிளம்பியபோது மிகப் பெருமையாக இருந்தது. கேரளத்துச் சமையல்காரரும் நேபாளக் கூர்க்காவும் காரியதரிசி தமிழ்ப்பெண்ணும் குழப்பத்துடன் ஒட்டாமல் நிற்கையில் அவன் தன்னுள் மூழ்கிப் போனவனாய் அவர்களைப் பார்த்துப் புன்னகை செய்தபடி ஊர்வலம் கிளம்பினான்.

வழிநெடுக இருந்த ஜனத்திரளைக் கிழித்துக்கொண்டு அவனுடைய கார் போவதற்குள் போதும் போதும் என்றாயிற்று.

எங்கே திரும்பினாலும் தோரணங்கள். வாசகங்கள்.

''நமது பூமி நமக்கே! அந்நியனை வெளியேற்று!''

கூட்டத்தைப் பார்த்துப் பக்கத்திலிருந்த அரசியல்வாதி பெருமையுடன் சொன்னார்:

''நம்ம கொள்கைக்குப் பெரிய ஆதரவு கெடைக்கப் போறது பாருங்கள். அரசு நம்ம கோரிக்கையை ஒத்துக்கொண்டே ஆகணும். இல்லே, வர எலக்ஷன்லே தோத்துப் போகும்.''

அவனுக்குச் சம்பந்தம் இல்லாமல் ரமாவின் வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. ''இதிலே கொள்கையும் பிரச்னையும் எங்கே வந்தது?''

அவனுக்கு ஒரே வி நா டி, இவர்களுக்கும் தனக்கும் அதிக வித்தியாசம் இல்லை என்று தோன்றிற்று. ஒவ்வொருத்தனும் எந்த வகையிலோ தனது முக்கியத்துவத்தை நிலைநிறுத்தக் கூட்டப்பட்ட கூட்டம்.

அவன் அந்த ஜனத் திரளைப் பார்த்தான். உச்சி வெயிலில் வியர்த்துப் போய் நின்றது கூட்டம்,

'எதை எதிர்பார்த்து இவர்கள் வந்திருக்கிறார்கள்? இந்தக் கூட்டம் எதற்குக் கூடுகிறது? இவர்களுக்கு அதைப்பற்றி ஏதும் தெரியுமா? இந்த மேடையில் இருப்பவர்கள் எல்லாம் தங்களுக்கு நல்லதைச் செய்யப் போகிறவர்கள் என்று இவர்கள் நம்புகிறார்களா?'

அவன சட்டென்று தன்னை நிலைப்படுத்திக்கொண்டான். 'ஓ, இவர்கள் எல்லாம் என்னைப் பார்க்க வந்தவர்கள். என்னுடைய ரசிகர்கள். இங்கே கூட்டத்தைச் சேர்க்கத்தான் நான் வரவழைக்கப்பட்டிருக்கிறேன். அரசியல்வாதிகளின் தூண்டில்.'

''ஹலோ! ஹலோ!''

மைக்கைச் சரி பார்க்க ஓர் ஆள் வந்து நின்றான். பிறகு அவனைப் பார்த்து வெட்கத்துடன் புன்னகை செய்து, ''மை ஆப்கா ஃபான் ஹூம் ஸாப்!'' (நான் உங்கள் விசிறி) என்றான்.

அவன் தனது வழக்கமான புன்னகையுடன், ''ஷுக்ரியா!'' என்றான்.

கூட்டம் ஆரம்பிக்க இன்னும் ஐந்து நிமிஷங்களே இருந்தன.

ஒலி பெருக்கியைச் சரிபார்த்தபடி ஆட்கள் நின்றிருந்தார்கள்.

''மாதவன்!''

''எந்தா?''

''கிருஷ்ணன் குட்டி எவிடே?''

''இவிடே இல்லில்லோ.''

அவன் கவனிக்கிறானே என்கிற பார்வை, வெட்கப் புன்னகை. 'இவர்கள் எல்லாரும் எனக்காக வந்திருக்கிறார்கள்!' அவன் பெருமிதத்துடன் தனக்குள் மூழ்கிப் போனவனாய் உட்கார்ந்திருக்கையில் கூட்டம் ஆரம்பித்தது. ஒவ்வொருத்தராகப் பேசி முடித்துக் கடைசியில் அவன் மைக்கின் முன் நின்றபோது கூட்டம் பெரிய கரகோஷம் செய்தது.

அவன் பதினைந்து நாட்களாக அந்த அரசியல்வாதிகள் எழுதிக் கொடுத்து மனனம் செய்திருந்த சொற்பொழிவைச் சினிமா வசனம் ஒப்புவிக்கிற மாதிரி எந்தவிதப் பாதிப்பும் இல்லாமல் பேசினான்.

''நம்ம தோட்டத்திலே விளையும் பயிர்நம்ம உபயோகத்துக்குக்கெடைக்கல்லையானுல அந்தப் பயிரைச் சூறையாடுவது யார் என்று பார்ப்போம்.'' கரகோஷம் வானைப் பிளந்தது.

''உங்கள் பிள்ளை சோறில்லாமல் நிற்கிறான். ஏனென்றால் உங்கள் விருந்தாளி, ஆக்கிய சோற்றையெல்லாம் தின்றுவிட்டான். இன்னமும் அந்த விருந்தாளியை உபசரிக்க வேண்டுமா?''

கூட்டத்தின் உற்சாகம் கரைபுரண்டு போயிற்று. அடுத்த அரை மணி நேரத்துக்கு அதில் அவன் நீந்தினான்.

திடீரென்று கூட்டத்தின் மத்தியில் ஏதோ கூக்குரல் கேட்டது. தொடர்ந்து பல திசைகளில் பல குரல்கள்! அவன் குழப்பத்துடன் பார்த்தான். உட்கார்ந்திருந்த கூட்டம் எழுந்தது. கற்கள் சில மேடையை நோக்கிப் பாய்ந்தன.

''ஏய்? அவனை அடி! அந்த மைக் ஆள் நம்ம ஜனம் இல்லே. அதோ பார்! அவன் மலையாளத்தான். அடிடா! இவன் தெலுங்கு! இவனை நொறுக்கு!''

சமுத்திர அலை மாதிரி பாய்ந்த ஜன நெரிசலில் பாதிக் கூட்டம் கலவரத்துடன். பெரிய சத்தத்துடன் இங்குமங்கும் ஓடிற்று. மேடையில் இருந்தவர்கள திகைத்துப் போய் நின்று பிறகு சட்டென்று தங்களுடைய பாதுகாப்புக்கு விரைந்தார்கள். அவனை யாரோ கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு நடந்தார்.

''ஹேய் ராஜேஷ்! ராஜேஷ் குமார்!''

யார் யாரோ அவன் மேல் மோதினார்கள். சட்டையைப் பிடித்து இழுத்தார்கள். அவன் கவனமாக வாரிய மயிரைப் பிடித்து இழுத்தார்கள். அவனுக்குப் பீதியில் மார்பு படபடத்தது.

'இவர்கள்என் ரசிகர்கள்!' அலையோடு அலையாய் நகர்ந்து ஒரு வழியாய் அவன் காரை அடைந்தபோது அவன் அதிர்ந்துபோனான். அவனுடைய தமிழ் டிரைவரை அடித்துப் போட்டிருந்தார்கள்.

அவன் பீதியுடன் தன்னுடன் வந்தவர்களைப் பார்த்தான்.

''இது என்ன இத்தனை விபரீதமாகப் போயிட்டது?''

அவர்கள் அவன் முதுகைத் தட்டினார்கள்.

''கவலைப்படாதீர்கள். இதெல்லாம் நல்லதுக்குத்தான். இந்தக் கலாட்டாவெல்லாம் நம்ம வெற்றிக்கு அறிகுறி.''

அவனுக்குச் சுர்ரென்று ஆத்திரம் வந்தது.

''என் டிரைவர் செத்துக்கிட்டிருக்கான் ஐயா! முதல்ல ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போகணும்.''

''போகலாம். கவலைப்படாதீங்க.''

இவர்களும் இவர்களது நிதானமும்! ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேரவே ஒரு மணி நேரம் ஆகிவிட்டது.

அவன் அடிக்கடி டிரைவரின் மூக்கருகில் கை வைத்துச் சுவாசம் இருக்கிறதா என்று பார்த்தான்.

ராமசாமி எத்தனை நல்லவன்! அவனுக்குத் துக்கம் குமுறிக்கொண்டு வந்தது. 'பதினைந்து வருஷமாக என்னுடன் இருக்கிறான்.'

அவன் புதிய கலவரத்துடன் சுற்றிலும் பார்த்தான்.

ஜனக் கும்பலின் ஆக்கிரோஷமும் வெறியும் நம்பமுடியாதனவாக இருந்தன. 'என்ன அசுரத்தனம் இது? யோசனை இல்லாமல் நாம் ஒப்புவித்த வார்த்தைகளுக்கு இத்தனை சக்தி இருக்குமா? நமக்குத் தெரியாமல் யாராவது வேண்டுமென்றே கிளப்பியிருப்பார்களா?'

ராமசாமியின் நிலை நிரம்ப அபாயகரமானது என்கிற டாக்டரின் வார்த்தைகளைக் கேட்டு வீட்டுக்குச் சோர்ந்து வந்து சேருகையில் போர்க்களத்துக்குப் போய் வந்த மாதிரி உடம்பு கனத்தது.

ரமாவைப் பார்க்கத் தெம்பில்லாமல் அவன் உடை மாற்றிக்கொண்டு படுத்தான்.

காலையில் கண் விழித்ததும் ஆஸ்பத்திரிக்கு டெலிபோன் செய்தான்.

ராமசாமி இன்னும் அபாய நிலையில் இருந்தான். அவன் ஆயாசத்துடன் கண்களை மூடிக்கொண்டான்.

அன்றைய செய்தித்தாளுடன் ரமா உள்ளே நுழைந்தாள். தாளை டீப்பாயில் வைத்தபடி மெல்லிய குரலில் சொன்னாள்:

''நேத்து நஞ்சண்டராவ் போன் பண்ணினார். தினமும் உங்களைப் பத்திப் பேப்பர்லே படிக்கிறாராம். இத்தனை மும்முரமான கொள்கையைப் பிரசாரம் செய்துவிட்டு அவசரமாக தயாரிக்க வேண்டிய தெலுங்குப் படத்துக்கு நீங்க கால்ஷீட் கொடுக்கமாட்டீங்கன்னு தாமாகவே தீர்மானம் செய்து வேறு ஒருத்தரை ஃபிக்ஸ் பண்ணிட்டாராம்.''

இன்றைக்குக் கோபப்படக்கூடிய அயர்வாக இருந்தது.

''சரி!''

''யாரைப் போட்டிருக்காங்க, தெரியுமா?''

''எனக்குத் தெரியவேண்டிய அவசியம் இல்லே.''

''அப்ப, சரி.''

அவள் கதவருகில் செல்லும்போது, ''யாரை?'' என்றான்.

''சந்திரகாந்த்!''

அவள் குரலில் எகத்தாளம் தொனித்ததுபோல் அவனுக்குத் தோன்றிற்று.

அவன் ஒரு மௌனக் கோபத்துடன் செய்தித் தாளைப் பிரித்தான்.

அரைப் பக்கத்தை அடைத்த மாதிரி அவனுடைய புகைப்படம் இருந்தது. ஜன சமுத்திரம் இருந்தது. அவன் பேசிய பேச்சும், அவனது பிராபல்யமும் அவனுக்காக, அவன் பேச்சுக்காக ஜனங்கள் கிளப்பிய எதிரொலியும் அதன் விளைவும்.

அவன் அதில் ஆழ்ந்து போனான். சந்திரகாந்தையும், அதிகப் பிரசங்கி ரமாவையும், செத்துக்கொண்டிருந்த ராமசாமியையும் நல்ல வேளையாகச் சிலவி நாடிகள் மறக்க முடிந்தது. ❋

Criterion T.S.R. 3750

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்

சைபால்

வழங்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

சேத்துப்புண்
வேனல்கட்டி
தீப்பட்டபுண்
சொறிசிரங்கு
முதலியவைகளை
குணப்படுத்தும்
களிம்பு

சைபால்

சர்ம ரோக நிவாரணி

Manufactured by :
THE SOUTH INDIAN MFG CO.
70/2, SATHAMANGALAM, MADURAI-625 020.

—ராஜன்

அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

ஆரிய வைத்திய பார்மஸி

(கோயமுத்தூர்), லிமிடெட்.

தலைமை அலுவலகம்:

366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-641018
தந்தி: ''அம்ருதம்'' ★ போன்: 26006, 22623, 30674

மறைந்த மாமேதை ஆரியவைத்தியன்
P. V. ராமவாரியர் அவர்களால் நிறுவப்பட்டது

36 ஆண்டுகளாக மிகச் சிறந்த பயனளிக்கக்கூடிய ஆயுர்வேத மருந்துகள் தயார் செய்தும் சிகிச்சை அளித்தும் வருகின்ற மிகப் புகழ்பெற்ற ஸ்தாபனம்

சென்னைக் கிளை:
140-A, கௌடியா மடத் தெரு, ராயப்பேட்டை, மதராஸ்-600 014
போன்: 848752

இந்தியாவின் முக்கிய நகரங்களில் 21 கிளைகளும் மற்றும் 250க்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற விற்பனையாளர்களும் கொண்ட மிகப் பெரிய ஆயுர்வேத நிறுவனம்.

THE ARYA VAIDYA PHARMACY (COIMBATORE) LTD · AVP

ஆரிய வைத்தியன்
K. S. வாரியர்
பிரதம வைத்தியர்

P. V. சந்திரசேகர வாரியர்,
மானேஜிங் டைரக்டர்

மேலும் விவரங்களுக்குத் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

—OSR



அன்று என் நண்பர் சலபதிராவ் எலியட்ஸ் பீச்சுக்கு வர மிகவும் தாமதமாகிவிட்டது.

''ஏன் ராவ், இன்னைக்கு இவ்வளவு தாமதம்?'' என்று கேட்டேன்.

''எங்க வீட்டிலே புதுசா திருமணமான ஜோடி ஒண்ணு இருக்கு, சார். அவங்களுக்குள்ளே ஒரு தகராறு. நான் தலையிட்டுச் சமரசம் பண்ணும்படி ஆயிடிச்சு.''

''புதுசாக் கல்யாணமான தம்பதிகளுக்குள்ளே தகராறுன்னு, அது ஊடல் விஷயமா இருக்குமே?''

''இது ஊடல் விஷயமில்லே, சார். அவங்களுக்குள்ளே பிளவையே உண்டாக்கிவிடக்கூடிய சந்தேகம் ஒண்ணு, இவங்க கல்யாணம் நடக்கறதுக்கு முன்னே அந்தப் பெண் அநுசூயா வேறொரு பையனைக் காதல் செஞ்சிருக்கா; ஆனா அவ பெற்றோர் அந்தக் காதலை ஏத்துக்கலே. அதனாலெ அநுசூயா அந்தப் பையனை மறந்திட்டுக் கௌரிசங்கருக்குக் கழுத்தை நீட்டியிருக்கா.

''இன்னைக்குப் பகல்லே இருவரும் அஷ்டலட்சுமி கோவிலுக்குப் போய்க் கிட்டிருந்தாங்களாம். அப்பொ அநுசூயா காதலித்த பையன் தற்செயலா எதிரே வந்திருக்கான். அவளைப் பார்த்ததும் அவன், 'என்னம்மா அநுசூயா சௌக்கியமா? பெசென்ட் நகரிலெதான் இருக்கியா? இவர்தான் ஒன் கணவரா?' என்று கேட்டானும்.

''இப்படி எதிர்பாராம தன் மாஜிக் காதலனைக் கண்டதும், பாவம், அந்தப் பொண்ணு கதிகலங்கிப் போயிடிச்சு. அவளாலெ பேச முடியலே. பயத்தோடயும் திகிலோடயும் கணவன் முகத்தைப் பார்த்துப் பேந்தப் பேந்த முழிச்சிருக்கு. கௌரிசங்கருக்கு ஒரே கோபம். 'யாரையா நீங்க?'ன்னு அந்தப் பையனை அதட்டியிருக்கான். அந்தப் 'படுபாவிப் பயல் அநுசூயாவைப் பழி தீர்த்துக்க நினைச்சானோ என்னவோ, 'நான் யாருன்னு ஒங்க மனைவியைக் கேட்டுத் தெரிஞ்சுக்குங்க. மாஜிக் காதலனை அவள் அவ்வளவு சீக்கிரம் மறந்திருப்பாள்னு நான் நெனைக்கலே'ன்னு சொல்லிட்டு விடுவிடுன்னு போயிட்டானும்.''

''சரிதான்; உடனே கௌரிசங்கருக்குத் தன் மனைவியின் நடத்தையிலெ சந்தேகம் தட்டிச்சாக்கும்.''

''ஆமாம்.''

''சரி; அப்புறம் எப்படி அவங்களுக்குள்ள சமரசம் பண்ணினீங்க?''

''வேறெ எப்படி? என் கதையைச் சொல்லித்தான்..''

''ஒங்க கதையா?''

''ஆமாம் சார். ஒரு காலத்திலே நானும் என் மனைவி மேலே சந்தேகம் கொண்டேன்.

''ஆண்டாண்டுக் காலமா, 'ஆண்களுக்கு ஒரு நீதி, பெண்களுக்கு ஒரு நீதி'ன்னு. நம் மனசிலெ உறைஞ்சு உறுதிப்பட்டுப் போயிருக்கே ஒரு தத்துவம்.''

''இருந்தாலும் நீங்க... எதுக்காக மனைவிமேலே சந்தேகம் கொண்டீங்க?''

''நான் புரொபசரா இருந்து ரிடையரானவன் என்கிறது ஒங்களுக்குத் தெரியுமே!''

''ஆமா; சொல்லியிருக்கீங்க!''

பேராசிரியர் வாழ்க்கையிலெ கற்பிக்கும் திறமை மட்டும் இல்லெ. ஆங்கில மொழியிலே சரளமாகவும், நகைச்சுவையாகவும் சொற்பொழிவு ஆற்றக்கூடிய என் திறமையும் என் புகழுக்கு ஒரு முக்கிய காரணம். இதனால பல கல்லூரிகள்ளெ சொற்பொழிவு ஆற்ற அடிக்கடி எனக்கு அழைப்பு வரும்.

அப்படித்தான், அன்னைக்குக் கரக்புரிலே உள்ள உத்கல் வித்யாபீட

மாணவர்களிடையே சொற்பொழிவு ஆற்றப் போய்க்கிட்டிருந்தேன். ஆனா அன்னைக்கு நான் நானாக இல்லை. என் மனசு அப்பொ கொட்டிக்கிட்டிருந்த கண்ணீரைப் போலவே, வெளியிலெ வானமும் மழையைக் கொட்டிக்கிட்டிருந்திச்சு. அது என்ன சாதாரணப் பிரச்னையா? இல்லை. வாழ்வா, சாவாங்கிற பிரச்னை.

இருந்தாலும் கரக்பூர் வித்யாபீட மாணவர்கள்ளெ பல பேர் முன்பு எங்கிட்டெ படிச்சவங்க; என்மேலே அன்பைப் பொழிஞ்சவங்க. அவங்க நேரிலெ வந்து வற்புறுத்தினப்போ என்னாலெ மறுக்க முடியல. அப்ப வெல்லாம் வாழ்வு என்கிறது வெறும் சொற்பொழிவிலேதான் இருக்குன்னு நான் நினைச்சுக்கிட்டிருந்தேன்.

ஆனால் வாழ்வு என்கிறது முள் நிறைஞ்ச மலர்ச் செடி; அதில நறுமணமுள்ள மலர்களைச் சுத்தி இருக்கிறது கூரான முட்கள் என்கிற உண்மை, முந்தின நாள்தான் எனக்குத் தெரிய வந்திச்சு. ஆமா சார், சொற்பொழிவிலெ அலங்காரமான சொற்களையும், நகைச்சுவை, சிலேடை கலந்த வாக்கியங்களையும் அடுக்கி, கேட்கிறவங்களின் கைத் தட்டலால் மகிழ்ச்சி அடையறதுபோல, அழகான மனைவியைப் பெற்று, அவ தந்த இன்பத்தால வாழ்வே நிறைஞ்சிடிச்சுன்னுதான் அன்னைக்கு வரையிலெ எண்ணிக்கிட்டிருந்தேன். படிச்சவள், அழகானவள்னதும் வேறே எதுவும் விசாரிக்காமக் கல்யாணம் செய்துக்கிட்டேனே, அந்த என் மடத்தனத்தையில்லெ குறை சொல்லணும்.

கல்லூரியில படிச்ச பொண்ணுங்க மனசிலெ காதலே ஏற்பட்டிராதுன்னு நினைக்கிற அளவுக்கு நான் முட்டாள் இல்லை: மாறாக, அதுதான் அவங்ககிட்டெ காதலை மலரச் செய்யுற பருவம்னு எனக்கு ரொம்ப நல்லாவே தெரியும். அந்தக் காதல்லெ வெற்றி அடைஞ்சவங்களும் உண்டு; தோல்வி அடைஞ்சவங்களும் உண்டு என்கிற விஷயமும் எனக்கு நல்லாவே தெரியும். அது மட்டும் இல்லை. காதல்ல தோல்வி அடைஞ்சு, வேறொருத்தனுக்கு மனைவியாக நேர்ந்த பொண்ணுங்க சிலகாலம் பழைய காதலனை மறக்க முடியாமத் திணறுவாங்க என்கிற தத்துவமும் எனக்குத் தெரியும்.

ஆனா கல்யாணம் நடந்து ஆறு வருஷத்துக்கு மேலே ஆகி, ஒரு குழந்தைக்குத் தாயானப்பறமும் பழைய காதலனோட நினைவு அவங்க மனசிலெ கொந்தளிச்சுக்கிட்டிருக்கும் என்கிற உண்மைதான் எனக்குப் பிடிபடாத மனோதத்துவமாயிருந்திச்சு. ஆமா சார், அப்படித்தான் இருந்தா என் மனைவி லெட்சம்மா.

முந்தின நாள் சனிக்கிழமை. சனிக்கிழமை எங்க கல்லூரிக்கு அரை நாள்தான். ஆனா இலக்கிய மன்றம் ஒண்ணு அமைச்சு, கூட்டம் நடத்திக்கிட்டு இருந்ததினாலே, எந்த ஒரு சனிக்கிழமையும் காலேஜ் விட்டதும் வீட்டுக்குத் திரும்பினது இல்லை. அஞ்சு மணிகூட ஆயிடும். அதுக்கு அப்புறந்தான் வீட்டுக்கு வருவேன்.

ஆனா முந்தின நாள் எங்க இலக்கிய சங்கக் கூட்டத்தை மூணு மணிக்கே முடிச்சிட்டேன். உத்கல் வித்யாபீடத்திலெ ஆற்ற வேண்டிய சொற்பொழிவுக்காகத் தயார் செய்ய வேண்டியிருந்திச்சு. அதனாலெ கூட்டத்தைச் சீக்கிரமா முடிச்சிட்டு வீட்டுக்கு மூணரைக்கெல்லாம் வந்திட்டேன்

நான் வந்தப்போ, மனைவி மூத்த மகன் பிரசாதை (அவனுக்கு அப்பொ ரெண்டு வயசுகூட ஆகலை) அணைச்சபடி தூங்கிட்டு இருந்தா.

ஒரு கப் காபி குடிச்சா, சொற்பொழிவுக்கான குறிப்புகளைச் சீக்கிரமாத் தயார் செய்திடலாம்னு தோணிச்சு. அதனாலெ, காபி போடறதுக்கு லெட்சம்மாவை எழுப்புவோம்னு அவ படுத்துக்கிட்டிருந்த கட்டிலை நெருங்கினேன். அப்பொத்தான் அவ முகத்தை நான் நல்லாப் பார்த்தேன். லெட்சம்மா அழுதபடியே தூங்கியிருக்கா: கன்னங்கள்ளெ கண்ணீர் வழிஞ்ச கறை காஞ்சு போயிருந்திச்சு.

எனக்குப் 'பக்'னு ஆயிடிச்சு. ஆனா, மகனை அணைச்சுக்கிட்டிருந்த லெட்சம்மாவின் கையிலெ ஒரு லெட்டர். ஊரிலே என் வயசான மாமனார் படுத்த படுக்கையாக் கிடந்தார். ஒருவேளை அவருக்கு ஏதாவது ஆகியிருக்குமோ? அப்படியிருந்தா லெட்சம்மாவால எப்படி இவ்வளவு நிம்மதியாத் தூங்க முடியுது? நான் மெதுவா அவ கையிலெ இருந்த லெட்டரை எடுத்துப் படிக்கத் தொடங்கினேன்.

அதிலெ அப்பாவுக்கு முன்னெ விட இப்பொ தேவலைன்னுதான் லெட்சம்மாவின் தம்பி எழுதியிருந்தான். லெட்டரை மேலே படிச்சேன். அதிலெ கடைசியா ஒரு வரி, —''அக்கா! உன் மாஜிக் காதலன் மல்லிகார்ஜுன் நேற்றிரவு இறந்துவிட்டான்!''

மாஜிக் காதலனா? கையிலெ அந்த லெட்டரோடு அங்கேயிருந்த நாற்காலியில சிலையா யிட்டேன்.

எத்தனை நேரம் அப்படி இருந்தேனோ, தெரியாது. ''வந்துட்டீங்களா?'' என்கிற குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தேன். எதிரில லெட்சம்மா நின்னுக்கிட்டிந்தா. அவளோட முகம் துக்கத்தாலெ உப்பிப் போயிருந்திச்சு.

''இது என்ன லெட்சம்மா?'' லெட்டரிலெ கடைசி வரிமேலே விரலை வச்சபடி கேட்டேன்.

''விடுங்க; அதெல்லாம் நடந்து போன விஷயம்; அதுகூட இப்போ அடியோடு தீர்ந்து போயிடிச்சு'' என்றாள் அவள், துக்கம் தொண்டையை அடைக்க.



''தீரலை லெட்சம்மா. தீர்ந்திருந்தா நீ ஏன் அழுதிருக்கே?''

''செத்துப் போன ஓர் ஆத்மாவுக்காக அழக்கூட உரிமையில்லையா ஒரு பொண்ணுக்கு?'' அவள் ரோசம் பொங்கக் கேட்டாள்.

''அவன் யாரோ ஒரு ஆத்மா வில்லை, உன் காதலன்.''

''இல்லேன்னு சொல்லலியே!''

லெட்சம்மா இதைக் கம்பீரமாகச் சொன்னபோது நான் கொஞ்சம் அதிர்ந்தே போயிட்டேன். இருந்தாலும் எனக்கு மட்டும் ரோசம் வராதா என்ன? ''நீ இல்லேன்னு சொல்லணும்னு நான் எதிர்பார்க்கல்லெ, லெட்சம்மா! ஆனா என்பெண்டாட்டி மனசிலெ தன்னைத் தவிர இன்னொருத்தன் தங்கியிருக்கிறதை என்னாலெ தாங்கிக்க முடியாது.''

லெட்சம்மா ரொம்ப சாந்தமா எனக்குப் பதில் சொன்னாள்: ''நீங்க சொல்றது உண்மைதான். ஆனா உங்களுக்கு ஒண்ணே ஒண்ணு மட்டும் சொல்லப் பிரியப்படறேன். மல்லிகார்ஜுனுக்கு மட்டும் அந்த டி.பி. வந்திருக்காட்டி என் வாழ்க்கையிலெ ஒங்களுக்கு இடமே கிடைச்சிருக்காது. இருந்தாலும் அதையெல்லாம் ஒரு கனவுன்னு ஒதுக்கிட்டு, என் இதயபீடத்தின் ஏக சக்ராதிபதியாக ஒங்களையே ஆக்கத்தான் முயற்சி பண்றேன்; ஆனா முடியலியே!''

''அப்படின்னா ஒன் உடல் எனக்கும், உள்ளம் அவனுக்குமா?''ன்னு நான் வெறி பிடிச்சுக் கத்தினேன்.

''அப்படியெல்லாம் பேசாதீங்க! என் உள்ளத்திலெ ஒங்களுக்கு இடம் கொடுத்திருக்கலேன்னா இந்தப் பிரசாத் பிறந்தே இருக்கமாட்டான்''னு கட்டில்லெ தூங்கிக்கிட்டிருந்த எங்க புள்ளையை அவள் காட்டினாள்.

''மன்னிச்சுக்குங்க. இது தவிர்க்க முடியாதது. மல்லிகார்ஜுன் உலகத்துக்குத்தான் இறந்திட்டார். என் வரையிலெ என்னிக்குமே இறக்க மாட்டார்?'' என்றாள் மேலும்.

மேலே பேச எனக்கு என்ன இருந்திச்சு?

பெரிய பிரச்னைதான். சட்டுனு ஒரு முடிவுக்கு வந்திட முடியாது. திர ஆலோசிக்கணும். ஆனா மனசிலெ வேதனை புழுவாகக் குடைசுக்கிட்டிருக்கறப்போ வேலை எப்படி ஓடும்? கூட்டத்துக்கு வர முடியாதுன்னு தந்தி கொடுக்கலாமான்னு கூட நினைச்சேன், ஆனா நிதானமாச் சிந்தித்துப் பார்த்தப்போ, பிரயா

ணந்தான் மனுஷனுக்கு எதையும் ஆற அமர ஆலோசிக்க வாய்ப்புத் தரக்கூடியது; பல பேரைச் சந்திக்க முடியும்; பல பேர்களின் அனுபவங்களைப் பார்க்கவும், கேட்கவும் முடியும்னு தோணினதினாலே, மறுநாள் கரக்புருக்குப் புறப்பட்டுட்டேன்.

நான் ரெயில்வே ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தப்போ, ரெயில் புறப்பட ரெண்டே நிமிஷந்தான் இருந்திச்சு. அவசரம் அவசரமா முதல் வகுப்புப் பெட்டியைத் தேடிக் கண்டுபிடிச்சுக் காலியாக இருந்த சீட் ஒன்னிலெ அமர்ந்து கொண்டேன்.

நான் ஏறி உட்கார்ந்த முதல் வகுப்புப் பெட்டியின் பகுதியில கீழும், மேலுமா நாலு பெர்த்துக்கள் இருந்திச்சு. மேல்பெர்த்துக்கள் ரெண்டும் காலி. கீழ் பெர்த்துக்கள்லெ ஒண்ணை நான் ஆக்ரமிச்சுகிட்டேன். இன்னொண்ணிலெ இளவயசுள்ள ஓர் ஆங்கிலோ இந்தியத் தம்பதியரும், அவங்களோடு ரெண்டு ஆண் குழந்தைங்களும் உக்கார்ந்திருந்தாங்க.

கைக்குட்டையை எடுத்துக் கழுத்திலும் முகத்திலும் விழுந்திருந்த மழைத் துளிகளைத் துடைச்சுக்கிட்டு, எதிர் பெர்த்திலெ இருந்த அந்தத் தம்பதியின் பக்கம் பார்வையைத் திருப்பினேன். ஏனோ தெரியாது. அவங்க ஒக்காந்திருந்த தோரணை, முந்தின நாள் நானும் லெட்சம்மாவும் இருந்த பிணக்கான நிலைமையை எனக்கு நினைவுபடுத்திச்சு. அந்தப் பொண்ணு கண்களைப் பாதி மூடிய நிலையிலெ ஸ்டேஷனுக்கு எதிர்ப் பக்கம் பாத்துக்கிட்டிருந்தா. அவ புருஷன் ஒரு நியூஸ் பேப்பர்லெ தன் முகத்தைப் புதைச்சுக்கிட்டிருந்தான்.

ரெயில் புறப்பட்டுது; கொஞ்சம் ஒய்ந்ததுபோல இருந்த மழை மறுபடியும் கடுமையாகப் பெய்யத் தொடங்கிடிச்சு. அந்தப் பெண்ணும் அவ பிள்ளைகளும் அந்தக் கொட்டற மழையிலெயும், அடைச்சிருந்த கண்ணாடி ஜன்னல் வழியாக வெளியே தான் பார்த்துக்கிட்டிருந்தாங்க.

கொஞ்ச நேரத்துக்கு அப்புறம், அந்தப் பையன் மெதுவாத் தன் பார்வையைப் பேப்பரிலிருந்து என் பக்கமாத் திருப்பி நட்புறவோடு சிரித்தபடி, ''குட் மார்னிங்''ன்னு சொன்னான்.

''நமஸ்தே''ன்னு நான் நம்ம பாணியிலெ கை கூப்பினேன்.

''டு கல்கட்டா?'' அப்படீன்னு அவன் இங்கிலீஷிலெ கேட்டான்.

''இல்லே''ன்னு நான் ஒரியா மொழியிலேயே பதில் சொன்னேன்.

அதுக்கு அப்பறம் அவன் என்கிட்டெ இங்கிலீஷிலெ பேசலே. அவனைப் போலே கோட்டும், சூட்டும் போட்டுக்காம, சாதாரணமா பஞ்சகச்சம் கட்டிய வேட்டியும், ஜிப்பாவுமா இருந்த என்னை இங்கிலீஷ் தெரியாத ஒரியாப் பணக்காரன்னு நினைச்சுட்டான் போலிருக்கு. அதனாலெ, ''பின்னெ எங்கே போறீங்க''ன்னு ஒரியா பாஷையிலேயே கேட்டான்.

''கரக்புருக்குப் போறேன்''னு நான் சொன்னேன்.

எங்க சம்பாஷணை இவ்வளவோடு முடிஞ்சிடிச்சு. அவன் எங்கிட்டெ பேச்சுக் கொடுத்ததன் நோக்கம் எனக்கு இங்கிலீஷ் தெரியுமா என்கிறதைத் தெரிஞ்சுக்கறதுக்காகத் தான் என்பதைத் தொடர்ந்து அவன் தன் பெண்டாட்டிகிட்ட பேசின பேச்சிலிருந்து உணர்ந்துகிட்டேன். அவன், ''இனிமே நாம் தைரியமா நம்ப விஷயத்தை விவாதிக்கலாம், ரோஸி. இவருக்கு இங்கிலீஷ் தெரியாது''ன்னு இங்கிலீஷிலெ சொன்னான்.

ரோஸி என்கிற அந்தப் பொண்ணு சொல்லிச்சு: ''நீங்க இந்த விஷயத்தை இவ்வளவு சீரியஸ்ஸா எடுத்துக்குவீங்கன்னு நான் நினைக்கவே இல்லே, ஜானி. என்னை இந்த ஒரு தபா மன்னிச்சிடுங்க. ஏதோ பழைய நேசத்தை மறக்க முடியாம...''

அவ தயக்கத்தோடு என் முகத்தைப் பார்த்தா. அவங்க பேச்சை நான் கவனிக்கிறேனா என்கிறதைத் தெரிஞ்சுக்க முயற்சி செய்யறதுபோல இருந்திச்சு அவ பார்வை.

ஜானி முரட்டுத்தனமாக அவள் முகத்தைத் திருப்பினான்: ''அவரை ஏன் பார்க்கிறே? அவருக்கு நாம்ப பேசிக்கிறதிலெ ஒரு வார்த்தைகூட அர்த்தமாகாது. இதோ பாரு, இந்த விஷயத்தை இப்படியே விட்டுட, மானமுள்ள என்னாலெ ஒருபோதும் முடியாது. என் வரையிலெ விவாகரத்துதான் இதுக்கு முடிவு; அதை நீ செய்யப் போறியா? இல்ல செய்தாக வேண்டிய நிலைக்கு என்னை விரட்டப் போறியா என்கிறதுதான் இப்பொ என் கேள்வி. என்ன சொல்றே?'' அவன் குரல் ரொம்பக் கடுமையாயிருந்திச்சு; கண் ரெண்டும் ரத்தச் செவப்பா மாறிடிச்சு.

நான் என் முகத்தை ஜன்னல் பக்கமாத் திருப்பிக்கிட்டு வெளியே பாத்துக்கிட்டிருந்தேன். வெளியே எதையும் பார்க்க முடியாதபடி பலமாக் கொட்டிக்கிட்டிருந்த மழை, பகல நேரத்தை இருட்டாக்கி இருந்திச்சு. இருந்தாலும் நான் என் பார்வையை உள்ளே திருப்பலே. என் பிரச்னைதான் இந்த ஆங்கிலோ இந்தியனின் நிலையும் என்கிறதை உணர்ந்தப்பொ, இவங்க என்ன முடிவுக்கு வரப்போறாங்க என்கிறதைத் தெரிஞ்சுக்கற ஆர்வம் என் கிட்டெ பெருகிச்சு.

எதிர் பெர்த்திலெ உட்கார்ந்திருந்த அந்த ஆங்கிலோ—இந்திய தம்பதியின் குழந்தைகள்லெ ஒண்ணு திடீர்னு 'வீல்'னு கத்திச்சு. நான் திடுக்கிட்டுப் பார்வையை வண்டிக்குள்ளே திருப்பினேன். அந்தக் குழந்தை மட்டும் இல்லே; இன்னொரு குழந்தையும், ''மம்மி! மம்மி!''ன்னு வீரிட்டுக்கிட்டு ரோஸியை ஒட்டிக் கட்டிக்கிச்சு. நானும் கிட்டத்தட்ட பதறிப் போனேன். ஆமா சார்! அவள் முன்னாலெ அவ கணவன் ஜானி, பளபளன்னு மின்னிக்கிட்டிருந்த கூர்மையான புத்தம் புதிய கத்தி ஒன்றைச் சுழட்டிக்கிட்டு நின்னான். 'ஐயோ! கொலை நடக்கப் போறது போலிருக்குதே!' என் உடம்பிலெ உள்ள ஒவ்வொரு நரம்பும் பதறிச்சு.

ஆனா அந்தப் பொண்ணு கொஞ்சங்கூட மனம் பதறலே. அவ சிரிச்சுக்கிட்டே, ''ஜானி! இது என்ன விளையாட்டு? கத்தியை உள்ளே வையுங்க. குழந்தைங்க எப்படிப் பயந்துபோயிடிச்சு பாருங்க. தவிர, வண்டியிலெ அந்நியர் ஒருத்தர் இருக்கார் என்கிறதை மறந்திட்டிங்களா?''ன்னு சொன்னாள்.

ஜானி அவ பேச்சைக் காதிலேயே போட்டுக்கலே. அவன் கோபத்தோடு கத்தினான்: ''இது ஒன் காதலன் ஒனக்கு அனுப்பின பரிசு இல்லையா? எதுக்காக அனுப்பினான்? என்னைக் கொல்றதுக்குத்தானே? இதோ பாரு ரோஸி, மரியாதையா நீயா என்னை விவாகரத்து செய்யவேன்னு, என்னைக் கொல்றதுக்காக ஒன் காதலன் அனுப்பின இதே கத்தியாலெ ஒன்னைக் கொலை செய்திட்டு ஜெயிலுக்குப் போனாலும் போவேனே தவிர, என் மனைவிக்கு வேறொரு காதலன் இருக்கான் என்கிறதைக் காரணமாக் காட்டி, நான் விவாகரத்துக்கு விண்ணப்பிக்கமாட்டேன். அது மட்டும் நிச்சயம்.'' அவன் வேகத்தோடு இப்படிப் பேசிட்டு, அந்தக் கத்தியை அதன் தோல் உறையிலெ போட்டுத் தன் பாண்டுப் பையில வச்சுக்கிட்டான்.

ரோஸி அவனோட பயமுறுத்தலைத் துளிக்கூட லட்சியம் செய்யவில்லை. அவ ஒயிலாகச் சிரிச்சுக்கிட்டே, ''சரி ஜானி, அதுதான் ஒங்க விருப்பம்னா அப்படியே செய்திட்டாப் போச்சு. ஆனா நான் ஒங்கமேலே விவாகரத்து வழக்குப் போடறதெல்லாம் நம்ப பிரயாணத் திட்டம் முடிஞ்சப்பறந்தான். என்னையும், குழந்தைங்களையும் கல்கத்தாவுக்குக் கூட்டிக்கிட்டுப் போயி, ரெண்டு நாள் நல்ல ஹோட்டல் ஒண்ணுலெ தங்க வச்சு, உல்லாசமா ஊர் சுத்திக் காட்டறதா நீங்க எனக்கு வாக்குக் கொடுத்திருக்கீங்க. ஒங்க வாக்குறுதியை நீங்க நிறைவேத்தினாத்தான் நான் என் வாக்குறுதியை நிறைவேத்துவேன். சரிதானே ஜானி?'' அப்படீன்னு சொன்னாள்.

எனக்கு அந்தப் பொண்ணோட பேச்சைக் கேட்டப்பொ சிரிப்புத்தான் வந்திச்சு. கணவனைக் கல்கத்தாவிலெ ரெண்டு நாள் சந்தோஷமா வச்சுக்கறதின் மூலம் அவன் மனசிலெ விழுந்திருக்கிற குழிப்புண்ணை ஆற்றிடலாம்னு அவ நம்பிக்கிட்டுருக்கா போலிருக்கு. ஆனா அவன் மனப் புண் இதனாலெல்லாம் ஆறிடாது என்கிறதை அவன் நிலையிலெ இருந்த என்னாலெ திட்டவட்டமா ஊகிக்க முடிஞ்சுது. ஒண்ணு அந்தப் பெண் விவாகரத்துச் செய்துக்கிட்டு அவனைப் பிரிஞ்சு போவாள்;



Even black and white looks good in colour - Dolphinar Colour!

Manufacturers may scream about Japanese and German technologies that go into their colour TVs.

But when you buy a colour TV, judge one by its colour (even if it be just black and white), its needle sharp picture, its impeccable sound, like in a Dolphinar Colour TV. Gives everything you can ask for in a colour TV.

* IC transistorized circuits
* 'Quick Start' without pre heating
* VCR facilities
* Stabilised power supply
* Automatic Frequency Tuning (AFT)
* 5W sound output
* Low Power Consumption of 80W
* Aesthetic design

and of course an excellent after sales service network.

So, once again, when you go in for a colour TV, don't get zapped by the mention of Japanese technology. Look first for its performance. Because everything is to do with careful assembling of components, which we get from Japan anyway!

DOLPHINAR
Colour TV
TOMORROW'S TECHNOLOGY TODAY.

To Book your Colour TV sets Contact :

KayJaytronics P. Ltd.

10, Abdul Razack Street, Saidapet,
Madras-600 015. Ph : 446058, 442591

Branches :

G. F. 10, Meghdoot, 94, Nehru Place,
New Delhi-110 019. Ph : 632360

11/3, R. T. Prakash Nagar, Begampet,
Hyderabad-500 016. Ph : 821402

8, Raja Rammohan Roy Road, (Sampange Tank Road),
Bangalore-560 025. Ph : 222465

C/o Swarna Traders,
8/504, Trichy Road, Coimbatore-641 018.

C/o Renga Electricals, 3, East Avani Moola Street,
Madurai-625 001. Ph : 22986

C/o Srinivas Agencies, 41-D, High Road,
Tirunelveli-627 001. Ph : 337

Concept/M/KJP/143

இல்லேன்னு அவன்கையாலெ சாவை ஏற்பாள். இந்த ரெண்டிலெ ஒண்ணுதான் இவங்க பிரச்னைக்கு முடிவாக இருக்கப் போகுது.

அப்படியானு என் பிரச்னைக்கும் இதுதானு முடிவு?

இந்தக் கேள்வி என் மனசைக் குடை குடைன்னு குடைஞ்சுக்கிட்டு இருக்க, ஒரு மாதிரி கரக்பூர் போய்ச் சேர்ந்தேன்.

கீரக்பூர் ஸ்டேஷன்லெ மாணவர் சங்கத்தைச் சேர்ந்த மாணவர்கள் திரண்டு வந்து மாலே போட்டு என்னை வரவேற்று வித்யா பீடத்துக்குக் கூட்டிப் போனுங்க.

என்கூடக் காரிலே வந்த மாணவர் சங்கத்தின் செயலர் என் மாணவர்கள்ளெ ஒருத்தன். கார் கிளம்பினதும் அவன், தன் முகத்தை ரொம்ப விசனமா வச்சுக்கிட்டு, "எங்களை மன்னிக்கணும் சார். ஆண்டு விழாக் கொண்டாட்டம் இன்னிக்கு இல்லே. அதை நாளேக்குத் தள்ளி வச்சிருக்கோம்"னு சொன்னுன்.

அவங்களோடு மூணு நாள் தங்கிச் சொற்பொழிவு ஆற்ற ஒப்புக்கொண்டிருந்ததினுலே, இந்த மாற்றம் என்னை எந்த விதத்திலேயும் பாதிச்சுடலே. இருந்தாலும் எதுக்காக அவங்க ஆண்டு விழாவைத் தள்ளிப் போட்டிருக்காங்க?

"ஒரு துக்ககரமான சம்பவம் நடந்து போச்சு, சார். எங்க சங்கத்தின் துணைத் தலைவரும், வித்யா பீடத்துப் புரொபசர்கள்ளெ ஒருத்தருமான லால் பிஹாரி போஸ் என்கிறவர் நேத்து ராத்திரி தற்கொலை பண்ணிக்கிட்டார்."

"தற்கொலையா? எதுக்கு?"

"எல்லாம் வீண் சந்தேகந்தான். அவரோட மனைவிக்கு யாரோ ஒருவன் காதல் கடிதம் அனுப்பிட்டான். உடனே அவர் மனைவியின் நடத்தையைச் சந்தேகிச்சு இப்படிப் பண்ணிக்கிட்டார். எவ்வளவு படிச்சு என்ன பிரயோசனம், சார்? நீங்களும் அவரைப் போல ஒரு புரொபசர்தானே? நீங்களே சொல்லுங்க, சார்! அவரோட மனைவி அழகி. அந்த அழகில மயங்கி எவனே ஒரு பித்தன் அவளுக்குத் தத்து—பித்துனு லெட்டர் எழுதினுன்னுரு. அதுக்கு அவங்க என்ன செய்ய முடியும், சார்?"

"ஒருவேளை லால் பிஹாரி போஸின் மனைவியும் அந்த நபர் மேலே காதல் கொண்டிருந்தாளோ, என்னவோ?"

"கொண்டிருந்தா என்ன சார்? தற்கொலை செய்துக்கிற அளவுக்கு அது பெரிய தவருயிடுமா? அவங்களோடு கற்பு கெட்டுப் போனதாயிடுமா? அப்படீன்னு, கன்னிப் பொண் ஒருத்தி, முதல்லெ ஒருத்தரைக் காதலிச்சு, அவரை மணக்க முடியாம வேறொருத்தரை மணந்துக்கிட்டான்னு, அவளேயும் கற்பை இழந்தவள்னுதானே சொல்ல வேண்டியிருக்கும்?"

மாணவர் சங்கத்தின் செயலாளன் சாதுர்யமாக வாதாடினுன். ஆனு நான் அவனுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த புரொபசர் ஆச்சே? ஆகையினுலெ சொன்னேன்: 'நீ சொல்றது திருமணம் ஆகாத பொண்ணுங்க விஷயத்திலெ வேணும்னு பொருந்தும், அப்பா! ஆனு கல்யாணம் ஆன ஒரு பொண்ணேட உள்ளத்திலெ இன்னொருத்தனுக்கு இடம் அளிக்கப்பட்டிருந்தா, அவ உடலாலே பரிசுத்தமானவளானுலும் உள்ளத்தாலே மாசடைந்தவள்தான்.'

கெட்டிக்காரத்தனமா அவன் வாயை முடிட்டதாகப் பெருமை பட்டுக்கிட்டேன். அதே சமயம் என் பிரச்னைக்கும் புரொபசர் போஸின் முடிவுதான் முடிவா என ஆலோசிக்கத் தொடங்கினேன்.

ஆனு திடீர்னு எங்க காரை ஓட்டிக்கிட்டிருந்த டிரைவர் கேட்ட ஒரு கேள்வி என் நெஞ்சைத் துளைச்சிடுச்சு. அவன் கேட்டான். "ஒங்க பேச்சிலெ குறுக்கிடறதுக்கு என்னை மன்னிச்சிடுங்க சார்! ஏன் சார், நீங்க இப்படிச் சொல்றீங்களே, ஆனு ஆம்புள்ளேகளான நம்ப எத்தனையோ அழகான பொண்ணுங்களைப் பார்த்திட்டு, அவங்களை மறக்க முடியாமத் திணர்றுமே; அப்போ நாமும் மனசால மாசடைஞ்சவங்கதானே?"

ஊசியைக் கொண்டு சுர்ர்ன்னு, நெஞ்சிலெ குத்தினதுபோல இருந்திச்சு, டாக்சி டிரைவரின் இந்தக் கேள்வி. அப்படியானு நான்கூட மாசில்லாதவன் இல்லே. ரெண்டு வருஷங்களுக்கு முன்னே என் மாணவி ஒருத்திக்கு ஸ்பெஷல் டியூஷன் சொல்லிக் கொடுக்க ஒப்புக்கொண்டேன். எத்தனையோ வேலைகளுக்கு இடையில பொழுது கண்டு, ரொம்பக் குறைவான ஃபீசுக்கு அவளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க ஒப்புக்கொண்டது எதுக்காக? அப்பழுக்கில்லாத அவளோட அழகைப் பாத்துக்கிட்டிருக்கலாம் என்கிறதுக்காகத்தானே? அவளை அடையணும் என்கிற எண்ணம் என் மனசிலெ லவலேசமும் ஏற்பட்டதில்லைதான். இருந்தாலும் இன்னைக்கு வரையிலெ என்னுலெ அவளோட அழகான உருவத்தை மறக்க முடிஞ்சிருக்கா?

என் மனசு குழம்பிப் போச்சு. அப்படீன்னு லெட்சம்மா அவ வெளிப்படையா சொன்னுள்; நான் சொல்லாம மூடி வச்சுக்கிட்டு இருக்கேன்; இதுதானே வித்தியாசம்?

உத்கல் வித்யாபீட மாணவர்களோடு மூணு நாள் தங்கி, ரெண்டு அற்புதமான சொற்பொழிவுகளையும் நடத்தி முடிச்சு, கட்டாக்குக்குப் புறப்பட்டேன். மறுபடியும் அதே கல்கத்தா—மெட்ராஸ் எக்ஸ்பிரஸ் வண்டியில் பிரயாணம் செய்தேன். அவசரத்திலெ ராத்திரிச் சாப்பாட்டை முடிச்சுக்கிட்டுப் புறப்பட முடியல. ரெயில்லே ரெஸ்டாரெண்ட் காரிலேயே சாப்பிட்டுக்கிறேன்னு மாணவர்களிடம் சொல்லிட்டேன்.

ராத்திரி எட்டு மணி சுமாருக்கு ரெஸ்ட்டாரெண்ட் காருக்குச் சாப்பிடறதுக்காகப் போனபோது, "ஹலோ!" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். ஒரு மேஜை முன்னுலெ ஜானியும் ரோஸியும் அமர்ந்து தங்கள் குழந்தைகளோடு சாப்பிட்டுக்கிட்டு இருந்தாங்க. அவசரத்தில் வாய் தவறி, "நீங்களும் இதே ரெயிலில்தான் திரும்பிக்கிட்டிருக்கீங்களா? என்ன அபூர்வமான சந்திப்பு"ன்னு அவங்ககிட்டெ இங்கிலீஷ்ல பேசிட்டேன். அவங்க திடுக்கிட்டுப் போயிட்டாங்க. "ஒங்களுக்கு இங்கிலீஷ், தெரியுமா? அட கடவுளே!" அப்படீன்னு ரோஸி அலறினுள்.

"தெரிஞ்சா என்ன ரோஸி! நாம்பதான் சமரசத்துக்கு வந்திட்டோமே"ன்னு ஜானி சொன்னுன்.

"விவாகரத்துக்கு விண்ணப்பிக்கலேன்னு மனைவியைக் கொலை செய்திடப்போறதாக அன்னிக்குச் சொன்னீங்களே, மிஸ்டர் ஜானி?"

"ஆமாம். ஆனு அப்புறம் யோசனை பண்ணிப் பார்த்தேன். ரோஸி, தன் காதலன் தனக்குப் பரிசாக அனுப்பின கத்தியைக் காட்டி, அது தன் பழைய காதலன் அனுப்பினதுன்னு உண்மையைச் சொல்லியிருக்காட்டி எனக்கு, அந்தவிஷயம் தெரிஞ்சிருக்குமான்னு சிந்தனை செய்தேன்.

"கண்கள் அப்பத்தான் திறந்திச்சு. மனசில களங்கம் உள்ளவளா இருந்தா, அவ இந்தச் சமாசாரத்தை ஒளிக்கத்தானே செய்வா? ரோஸி ஒளிக்கலையே! ஆகையினுலெ என் மனைவி களங்கம் இல்லாதவள் என்கிற முடிவுக்கு வந்தேன்!"

கட்டாக் திரும்பி விட்டுக்குள்ளே நுழையும் போதே, "லெட்சம்மா"ன்னு உற்சாகத்தோடு கூப்பிட்டுக்கிட்டே நுழைஞ்சேன்.

"வந்துட்டீங்களா?" அவ வழக்கமான சந்தோஷத்தோடு என்னை வரவேற்றுள்.

"ஆமாம், ஒரு புது மனுஷனுக! அன்னிக்கு நான் மல்லிகார்ஜுன் விஷயமா ஒங்கிட்ட கடுமையாகப் பேசினதையெல்லாம் மறந்திடு."

"நான் அதை அப்பவே மறந்திட்டேனே!"ன்னு சிரிச்சா என் மனைவி.

சலபதி ராவ் கதையை முடித்தார்.

"சரி, கௌரி சங்கர்-அநுசுயா விஷயம் என்ன ஆச்சு? அதைச் சொல்லுங்க" என்றேன்;

"என் கதையைக் கேட்டதும் அவங்களும் சமரசத்துக்கு வந்திட்டாங்க" என்றுர் என் நண்பர் ❋

நவரசங்களில் ஒன்று சிருங்காரம். இந்தச் சுவை பரிமளிக்கக் கவர்ச்சியும் கலையுணர்வும் கற்பனையும் அவசியம். மனித வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் எந்தச் செயலிலும் இந்தச் சுவையும் அவசியந்தான். சிருங்காரம் எவ்வளவு இருக்கவேண்டும் என்பதற்கு அளவுகோல் எதுவும் இல்லையாதலால், அவரவர் கற்பனை வளத்துக்கும், எதையும் எடுத்துக் கொள்ளும் மனப் பக்குவத்துக்கும் ஏற்ப, இந்தச் சுவை கசப்பாகவோ, இனிப்பாகவோ காண்கிறது. கற்பனை, கலை என்றாலே



கதையிலிருந்து காட்சிவரை

பஞ்சாமிருதமும் தண்ணீர் பட்ட பாடு இங்கே. பிறகு அந்தத் துண்டங்களை ஒட்டிச் சேர்த்து, கதையை முழுமையாக்குவது கதாசிரியரின் கற்பனையையும் வளைந்து கொடுக்கும் தன்மையையும் பொறுத்தது. எதையும் காமிராக்

கண் கொண்டு பார்த்து அலசுவார்கள். நடிக-நடிகையர் தேர்வைப் பலமாக விவாதிப்பார்கள். எந்த எந்தக் காட்சிகளை எங்கே எடுக்க வேண்டும், பெரிய நகரங்கள் அல்லாத புறநகர்களில் எப்படி ஓடும், பெண்களைக் கவரும் சோகம், சிருங்காரம் இருப்பது போதுமா, போதாதா-இப்படிப் பல விவாதங்கள். 'லேடீஸ் ஸைடுவிக்'காக இருந்தால், கதாநாயகியோ, கதாநாயகனோ மேலும் சிரமப்பட்டு விக்கி விக்கி அழுவது போன்ற காட்சிகளை இணைக்கப் பார்ப்பார்கள். பெண்களின் இரக்கத்தையோ பாராட்டையோ பெற்ருல்தான் படம் வெற்றிகரமாக ஓடும் என்பது திரையுலகக் கணிப்பு.

ஓரளவுக்கு மிகைப்படுத்திக் காட்டிஞல்தான் பரிணமிக்கும்.

இந்தக் கோணத்தில் சினிமாக் கலையை எடுத்துக்கொண்டால் அதன் உயர்வும் சிறப்பும் புரியும். காட்சிகளைக் கண்ணுல் காண்பதால், மக்களை இது பெரிதும் கவர்ந்திருக்கிறது.

"உக்காருவோமா?" என்று கூறி, கதாசிரியர், தயாரிப்பாளர், இயக்குநர் எல்லாரும் ஒருங்கு சேர்ந்து கதையைப் பற்றி விவாதிக்க உட்கார்ந்ததும், ஒவ்வொருவரும் கதையைப் பற்றிய தம் கருத்துக்களையும், சேர்க்க வேண்டியது, மாற்ற வேண்டியது, வெட்ட வேண்டியது என்று கூறி, கதையைத் துண்டம் துண்டமாகச் செய்து விடுவார்கள். அவியலும்



இந்தப் பாலாரிஷ்டத்தில் கதை தேர்ந்து வந்ததும் அடுத்தது பூஜைதான். முக்கிய நடிகர்கள், இயக்குநர்கள், படத் தயாரிப்புச் சம்பந்தமானவர்கள் எல்லாரும் பூஜையில் கலந்துகொண்டாலும், தயாரிப்பாளர் மனசுதான் அதில் அதிகமாக லயிக்கும்!

புதுப் படத்துக்குப் பூஜை போடுகிற தினத்தன்றே, நல்ல நேரம் பார்த்து ஏதாவது ஒரு பாடலைப் பதிவு செய்வார்கள், அல்லது ஒத்திகையாவது பார்ப்பார்கள். படத்துக்கு நாமகரணம் சூட்டுவது அன்றும் நடக்கலாம்; பிறகும் நடக்கலாம். எண் ஜோதிடத்தைப் பார்த்துப் பெயர் வைக்கும் தயாரிப்பாளர்களும் இருக்கிறார்கள். நாமகரணம் சூட்டினாலும் இல்லாவிட்டாலும் பிலிம் சேம்பரில் பதிவு செய்து கொள்ளும் சடங்கைத் தவறாமல் செய்து விடுவார்கள்.

சினிமாவினால்தான் ஒப்பனைக் கலையே பெரிதும் வளர்ந்திருக்கிறது என்று சொல்லலாம். சில நடிக-நடிகைகள் பிரத்தியேக ஒப்பனைக் கலைஞர்களையே வைத்திருக்கிறார்கள். நடிக-நடிகையரின் குறைகளை இட்டு நிரப்பும் கலைஞர்கள் அவர்கள். ஒப்பனை அறையில் ஒப்பனை செய்துகொள்வது மட்டும் இல்லை;

ஸ்டுடியோவில் ஒரு காட்சிக்கு இடையில் வேர்வையைத் துடைத்துச் சற்று முகத்தைப் பிரகாசப்படுத்திக் கொள்வதும் அவசியமாகும். சுட்டெரிக்கும் ஒளிவீச்சில் ஒப்பனை அப்படியே இருக்குமா?

திரைப்படம் என்றால் இன்னது இன்னது வேண்டும் என்கிற வரைமுறை ஐம்பது ஆண்டுகளில் தானாகவே உருவாகியிருக்கிறது! எல்லாவித மக்களையும் கவர வேண்டும் என்ற நோக்கத்தில் நடனம், சண்டை, கொலை, களவு, கற்பழிப்பு போன்ற காட்சிகளையும் கதையின் மென்னியைத் திருகித் திணித்துவிடும் சூரர்கள் இந்த உலகில் அதிகம். நடனம் கற்றவர்களும் கற்பிப்பவரும் பிழைக்க வேண்டாமா? துணை நடிகைகள் வாழ வேண்டாமா?

ஸ்டுடியோவுக்குள் பெரிய பெரிய 'செட்'டுகள் போட்டுப் படம் எடுப்பதைவிட வெளிப்புறப் படப்பிடிப்பையே இப்போது பெரிதும் விரும்புகின்றனர். செலவும் குறைவு, இயற்கைச் சூழ்நிலையில் செயற்கையான காட்சிகளை எடுக்க முடிகிறது. நடிகைகள் சறுக்கி விழுவதும். கதாநாயகன் அவளைக் காப்பாற்றுவதும், நீர் விளையாட்டும், சொட்டச் சொட்ட நடிகையர் நடந்து வருவதும், படத்தின் வசூலுக்குத் தெம்பூட்டும் நிகழ்ச்சிகள். இயக்குநரும் தம் தோள் வலுவைக் காட்டவேண்டி வரலாம்.

ராஜாராணிக் கதைகளை அதிகமாக இப்போது யாரும் எடுப்ப



தில்லை. சமூகக் கதைகளின்மேல் தான் இப்போது மே,,கம். பட இயக்குநர் 'ஓ.கே' என்று சொல்கிறவரை, காமிரா முன்னும் பின்னும் போய்வர வேண்டியது தான். ஒரே செயலை ஒரு தடவைக்குமேல் செய்தாலே நமக்கு அலுப்புத் தட்டுகிறது. பட இயக்குநர் 'ஓ.கே' செய்வதற்குள் எத்தனை தரம் 'இம்போசிஷன்' மாதிரி! பாவம்.

ராஜா ராணிக் கதைக்கு, பிரம்மாண்டமான ஸெட் வேண்டும். அணிகளும் உடையும் அதிகமாகத் தேவைப்படும். புராணக் கதை என்றால் கேட்க வேண்டுமா? அதுவும் கைலையங்கிரியில் பார்வதி-பரமசிவன் காட்சி என்றால் முருகன், விநாயகர், நந்தி என்று அவர்களுடைய பரிவாரங்கள் வேண்டுமே!

பார்வதியும்-பரமசிவனும் அந்தரத்தில் பறப்பார்கள்; அல்லது காதலன்-காதலியை அள்ளிக் கொண்டு புஷ்பக விமானத்தில் பறப்பான். பஷ்பக விமானம் மேகங்களுடே விர்ரென்று பறக்கும். ஜால வித்தை போன்ற இந்தக் காட்சிகளை ஸ்டுடியோவுக்குள் தான் எடுக்க முடியும்.

ஒரு படப் பிடிப்புக்கும் இன்னொன்றுக்கும் உள்ள இடைவேளையில் நடிக-நடிகையர்கள் 'தமாஷாக'ப் பேசிச் சிரிப்பது வேடிக்கையாக இருக்கும். புதுப் புது உறவுமுறைப் பெயர்கள் அங்கே அடிபடும்.

'பெற்றதெல்லாம் பிள்ளையாகுமா?' என்பதைப் போல் எடுத்த காட்சிகள் எல்லாம் திருப்தியாக இருக்கும் என்று எப்படிச் சொல்ல முடியும்? ஸ்டுடியோவில் ஒரு காட்சியை எடுத்திருப்பார்கள். அடுத்த காட்சி 'தேனிலவு' காட்சியாக இருக்கும். குளு குளு ஊட்டியில் காதலர்களைப் புரள விட வேண்டியிருக்கும், அல்லது காச்மீர் ஏரியிலுள்ள உல்லாசப் படகில் துடுப்பு வலிப்பார்கள். அல்லது தாஜ்மகலின் மேல் ஏறிக் காதலின் ஆழத்தை ரசிப்பார்கள். இப்படித் துண்டு துண்டாக எடுத்த படச் சுருளை எல்லாம் சரிவர இணைத்து, காட்சிகளைக் கோவையாக்கும் வேலை மிக முக்கியமானது. தொடர்ச்சியாக இணைத்துக் கோவையாக்கும் 'எடிட்டிங்' மேஜையில் எடுத்த காட்சிகளின் சுருள்கள் அடங்கிய பெட்டிகள் பல இருக்கும். இன்ன படத்தின் இத்தனையாவது காட்சி, காட்சியின் தொடர்ச்சியில் எத்தனையாவது 'ஷாட்', காட்சி படமாக்கப்பட்ட வேளை, வெறும் நடிப்பு மட்டுமா, பேச்சோ, பாட்டோ உள்ளதா என்ற விவரங்கள், 'கிளாப்' கட்டையில் பொறித்திருப்பதும்



அந்தச் சுருளில் தெரியும். இந்த விவரங்களே இணைப்பு வேலைகளுக் கை கொடுக்கின்றன.

'எடிட்டிங்கில் வெட்டி ஒட்டிய படங்களின் தொடர்ச்சி சரியாக இருக்கிறதா?' என்று போட்டுப் பார்க்கவும், திருத்தங்களைச் செய்யவும் 'மூவியோலா' என்ற கருவி உதவுகிறது.

இந்த நிலையில் எல்லாம் காட்சிகள் பதிந்த படமும், பேச்சுக்கள், பாடல்கள் பதிந்த படமும், தனித்தனியாகத்தான் இருக்கும். கார் விபத்து ஏற்படுகிறது; அல்லது ஒருத்தி ஒருவனைப் பிடித்துத் தள்ளுகிறாள்; திருடன் வீட்டுக்குள் வருகிறான்; காதலியைத் தூக்கிச் செல்கிறான் —இப்படிப்பட்ட சம்பவங்களைப் பிரத்தியேக ஒலிக் குறிப்பின் மூலம் வெளியிடுகிறார்கள், அல்லவா? அந்த மாதிரி ஒலிக்குறிப்புகளை 'ரீ- ரிக்கார்டிங்' என்ற முறையில் தனியாகப் பதிவு செய்திருப்பார்கள்.

படம் தயாராகி, படத்தணிக்கைக்குப் போகவேண்டிய சமயத்தில்தான், காட்சிப் படம், பேச்சுப் படம், ஒலிக்குறிப்புப் படம் ஆகிய மூன்றையும் இணைத்துப் 'பிரின்ட்' செய்வார்கள். குளிர்பதன அறையில் வண்ணப் படங்களைப் 'பிரின்ட்' செய்வார்கள்.

படத்தணிக்கைக் குழுவினர்; மக்கள் காணக்கூடாத காட்சிகள்' என்று தங்களுக்குத் தோன்றுவதைக் குறிப்பிட்டுக் கத்தரிக்கு வேலை கொடுப்பார்கள். 'காணக்கூடாத காட்சி' என்று தீர்மானிப்பதில் பலவித 'அபிப்பிராயங்கள்' இருக்கலாம். 'லோகோ பின்ன ருசி:'

மாதக்கணக்கில், இரவு பகல் பாராமல், முக்கிய நடிகர்களின் 'கால்ஷீட்'களை வேண்டிப்



பெற்று, பணத்தைக் கொட்டி விட்டு, அள்ளக் காத்திருக்கும் தயாரிப்பாளர் இனிமேல்தான் தலைநீட்டுவார். எந்த எந்த ஏரியாவுக்கு யார் யாருக்கு விற்கலாம்; யார் அதிகப் பணம் கொடுப்பார்' என்று ஏலம் போடும் மனநிலைதான். முன்கூட்டியே விநியோகஸ்தர்களிடம் முன் பணம் வாங்கிவிட்டு, அவர் கேட்கும் தொகைக்குப் பட விநியோகத்தைக் கொடுக்க விரும்பாத சாமர்த்தியசாலிகளும் இருக்கிறார்கள். தொழில் என்றால் எல்லாந்தான் இருக்கும்.

படத்தின் வெற்றிக்கு மட்டும் இல்லை, முக்கியச் சாலைகளில் போகும்போது உங்கள் கவனத்தைக் கவர்ந்து, தியேட்டருக்கு நெட்டித் தள்ளிக்கொண்டு போக, பெரிய பெரிய பானர்கள், சுவரொட்டிகள் உதவுகின்றன. தனிக்கைக் குழு வெட்டிய காட்சிகள்கூட இந்தப் பானர்களில் ஒளிர்ந்து உங்கள் கண்களைக் கூசச் செய்யலாம்.

ஆண்டுதோறும் சிறந்த படம், சிறந்த நடிகர், துணை நடிகர், நடிகை, இயக்குநர், பாடலாசிரியர், வசனகர்த்தா என்று தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்கி, திரையுலகக் கலைஞர்களை ஊக்குவிக்

கின்றன, மத்திய, மாநில அரசுகள். பெயரும் புகழும் பொருளும் எவ்வளவு வந்தால் என்ன? பரிசுப் பொருளுடன் போட்டோ எடுத்துக் கொள்ளும் போது நெஞ்சு நிமிரத்தான் செய்கிறது. பேருக்கும் புகழுக்கும் ஆசைப்படுவது மனிதனின் இயற்கை. கலைஞர்கள் அல்லவா? அதனால் கொஞ்சம் மிகையாகப் படுகிறது. அது அவர்களுக்கு இயற்கை.

அப்படி இல்லாவிட்டால் சினிமாக் கொட்டகையின் வாசலில் கூட்டம் அலை மோதுமா? வெற்றிகரமான நூறாவது வாரந்தான் கொண்டாட முடியுமா?

★

—புகைப்படங்கள்:

ஜேவி: நெல்லை சுந்தரராஜன்.

பொம்மை, பேசும் படம்.

முன்றுவேது படி

எஸ். லட்சுமி சுப்பிரமணியம்

எதிரே இருந்த எலக்ட்ரானிக் கடிகாரத்தில் ஒன்பது மணி, நிமிடக் கணக்காய், விநாடிக் கணக்காய், மின்னி மறைந்துகொண் டிருந்தது. மேஜைமீது இருந்த நான்கு வண்ண டெலிபோன்கள் மாறி மாறி ஒலித்து அடங்கலாயிற்று: பம்பாயிலிருந்து வரும் அவசரமான அழைப்பு, சென்னையில் மார்க்கெட் நிலவரம் பற்றிய குறிப்பு; அலுவலகத்துக்குள்ளேயே சுற்றிவரும் 'இன்டர்-காம்' பேச்சு, சொந்த முறையில் அவரிடம் பேசும் நண்பர்கள். இப்படி நான்கு விதமாக அவை வரும்.

மேஜை மீது வைத்திருக்கும் காபியைக் குடிக்க நேரம் இராது. பிரிக்காமல் மடிந்து கிடக்கும் செய்தித்தாளில் தலையங்கத்தையாவது பார்க்கப் பொழுது இராது. உறவினர்களின் கலியாண அழைப்புகளுக்குத் தந்தி அனுப்பவதன்றி நான்கு வரிகள் ஆசி கூறிக் கடிதம் எழுதவும் வகை இராது. ஊருக்குக் கிளம்பும் போது பெட்டியுள் துணிமணிகளையும் சாமான்களையும் கொள்ளாமல் வைத்து, மேலே மூடியின் மீது உட்கார்ந்து அழுத்திப் பூட்டுவதைப் போல, ஒரு நாளைக்கு இருபத்து நான்கு மணி நேரத்தில் அடைத்து முடிக்கும் அலுவல்கள் —அவற்றின் அவசரமான அள்ளித் தெளிப்புக்களுடன்.

இது என்ன வாழ்க்கை? இதற்காகவா ஒரு காலத்தில் ஆசைப்பட்டார் சுந்தரேசன்? அந்தக் கம்பெனியில் சைக்கிளில் அலுவலகத்துக்கு வந்த இளமைப் பருவம் அது. அப்போது சைக்கிளை மிதித்து நான்கு மைல்கள் வர உடம்பில் திராணியும் இருந்தது; சட்டைப் பையில் சில்லறை இல்லாத குறையும் இருந்தது. திமிங்கலம் போலப் பெரிய காரில், அதன் நீண்ட வாகவமான உடல் 'போர்டிகோ' வினுள் நுழைந்து அடங்கி அமிழ்ந்து நிற்க, கால் பூட்ஸின் கறுப்புப் பளபளப் புத்துணி மங்காமல், சேர்மன் படியேறிப் போவதைச் சுந்தரேசன் ஓரமாய் ஒதுங்கி நின்று கவனித்ததுண்டு:

"ஒரு நாள் அதைப் போல நாமும் வந்து இறங்க முடியுமா?" இந்த ஏக்கம் காண்டீனில் ஒருவடை, அரை கப் காபிக்கு மட்டும் சில்லறையிருக்க, அரை வயிற்றுக்குத் தயிர் சாதம் சாப்பிட்டு முடிக்கும் வேளைகளில், நெஞ்சில் எழுந்து நிற்கும். அலுமினிய டப்பாவில் ராஜம் மோர் விட்ட தயிர் சாதம் என்ற டிபனை வைத்து, அடையாளமாக நடுவில் இரண்டு மாவடுவையும் அழுத்தி வைத்திருப்பாள். அது போதாத குறைக்குத் தொட்டுக் கொள்ள ஒரு வடை. நெஞ்சை நனைக்க அரை கப் காபி.

அப்போதும் ராஜத்தை ஆசையாக நாலு இடங்களுக்கு அழைத்துக் கொண்டு போக முடிந்ததில்லை. கையில் காசு இராது. வீட்டுக்குக் கொண்டுபோக வேண்டிய 'பைல்'கள், அலுவலகத்தில் சீட்டு நடத்திச் சேகரித்த பணக் கணக்குகள், மானேஜர் கொடுத்த சில்லறைவேலைகள், இப்படிக் குவிந்து இரவு ஒன்பது மணிவரை நேரத்தை விழுங்கிவிடும், சொர்க்கத்திலும் சுகமான நித்திரைக்கும் விழிப்புக்கும் இடைவிளிம்பில் கண் சொக்க, ராஜம் பின்புறமாய் வந்து கழுத்தைக் கட்டிக்கொண்டு, "இன்னும் தூங்க வர மனசாகலியா?" என்று சிணுங்குவாள்.

இப்போதும் அதைப் போல நேரம் போதவில்லை. அப்போது செல்வம் இல்லாத குறை. இப்போது நேரம் இல்லாத ஏக்கம். அப்போது வேலை செய்து உடம்பு அலுத்துப் போகும். இப்போது மனக்கவலைகளில் உள்ளம் சலித்துப் போகிறது. அநுபவிக்க வேண்டிய நாட்களில், உடல் பலம் இருந்தபோது வசதிகள் இல்லை. இப்போது வசதிகள் இருந்தபோது, அநுபவிக்க உடல் பலம் இல்லை. ஆண்டவன் விளையாடுகிறான்; எந்தப் பருவத்திலும் அவன் மனிதனை மிஞ்ச விடுவதில்லை.

மஞ்சள், கறுப்பு, சிவப்பு, வெள்ளை, இப்படி மாத்திரைகளைப் பொறுக்கி எடுத்து விழுங்குகிறார். அவசரமாகக் கொஞ்சம் ஐஸ் வாட்டரையும் உறிஞ்சிக் கொள்வார். நீரிழிவு நோய், இரத்த அழுத்தம், ஆஸ்துமா எல்லாம் இருக்கின்றன.

டாக்டர் சொல்லுகிறபடி எல்லாவற்றையும் தள்ளினால், எதையுமே சாப்பிட முடியாது. அதனால் யாருக்கும் தெரியாமல் கள்ளத்தனமாக ஓரிரண்டு ஜிலேபிகளைச் சாப்பிட்டு விடுவார். பின்னே வாழ்க்கையில் எப்படித்தான் அநுபவிப்பது? அன்று வடை வாங்க மட்டுந்தான் காசு இருந்தது. ஜிலேபிக்குப் பணம் இல்லை. இன்று பணம் நிறைய இருந்தது. உடம்பில் இடம் இல்லையே!

வாழ்க்கையில் அநுபவித்துத் தீராத சுகம் இன்னும் அவ்வப்போது தலை நீட்டி எழும்: கண் பார்வையில் விழும் ஒய்யார நடைகள், கழுத்து ஒடிப்புகள், ஸ்படிகம் உடைந்தது போன்ற சிரிப்பு மணிகள், குதிகால் செருப்பின் தூக்கலில் அலையாடும் உடல் ஏற்றங்கள், இவற்றில் மனம் மிதக்கும். அவ்வப்போது கிடைக்கும் இந்தக் கள்ள சுகங்களை அவர் ராஜத்துக்குச் செய்யும் துரோகமாக எண்ணியதில்லை. பார்வையில், எண்ணங்களில் ஒரு சில நேரங்களில் உடம்

பிலும்— படரும் இந்தச் சில்லறை இன்பங்கள் அவர்மீது நிரந்தரக் கறையாக விழுந்ததில்லை.

இந்த வழுக்கல்களை, அஜாக்கிரதைகளை, அளவோடு செய்யும் அத்துமீறல்களை, உள்ளம் கூட மன்னித்து விடலாம். உடம்பு மன்னிக்குமா? பவழத்துடன் தாலியாய், தங்க மணிகளிடையே தவமணியாய் ராஜம் அணிந்துகொண்டு அம்மன் எதிரே நின்று, கோயில் குங்குமப் பிரசாதத்தைத் தொட்டு அதன் மீது வைத்து, கண்ணில் ஒற்றிக் கொள்ளும் காட்சி நினைவுக்கு வரும். அப்போது நெஞ்சில் நேரும் கரை உடைப்பு அவரை எங்கோ இழுத்துச் செல்லும்:

அவருக்கும் ராஜத்துக்கும் இடையே பங்கிட்டுக்கொண்ட பிரியத்தின் அடையாளமாக ஒரே ஒரு குழந்தையாக வாசு மட்டுந்தான் இருந்தான். அவன் பிறந்த வேளை நல்லவேளை. அவருடைய பதவியும் பணவசதியும் பெருகி உயர்ந்தன. அவனுடைய எதிர்காலத்தைப் பற்றி அவரும் ராஜமும் இரவு நேரத்தின் அமைதியில் இரகசியமாகத் திட்டம் போடுவார்கள். அப்போது அவள் முகத்தில் ஒரு தனிக் கனிவு தெரியும்.

குடும்பத்தின் அவ்வப்போதைய தேய்வு, ஓய்வு, ஓய்ச்சல், ஒடுங்கல், ஓங்கல் இவற்றுக்கு நடுவில், ராஜம் அந்த ஒரே மகனை வளர்த்துத் தேற்றி உருவாக்கி விட்டாள். பொறி இயல் படிப்புப் படித்து முடித்தவனைத் தமக்குப் பின் வாரிசாகத் தமது கம்பெனியிலேயே அமர்த்தி விட, எவ்வளவோ முயன்று பார்த்தார் சுந்தரேசன். ஆனால் வாசு கேட்கவில்லை. இறக்கை முளைத்த குஞ்சு கூட்டில் தங்க மறுப்பதைப் போல, பிரிந்துக் கொண்டு போய் விட்டான். அமெரிக்காவில் 'பிஸினஸ் மானேஜ்மென்ட்' படிப்பு. இந்நேரம் இலியனஸ் பல்கலைக் கழகக் கல்லூரி லைப்ரரியில் மும்முரமாகப் புத்தகங்களைப் புரட்டிக்கொண்டிருப்பான். தாய்நாட்டு மண்ணைத் திரும்ப மிதிக்கும் உத்தேசம் அவனுக்கு இல்லை. அவருக்குத் தெரியும். அதை அவர் ராஜத்திடம் சொல்லவில்லை; அவள் அந்த வேதனையைத் தாங்கமாட்டாள்.

நினைத்துப் பார்க்கும்போது நெஞ்சில் எங்கேயோ இடிக்கிறது. அசுரவேகத்தில் இப்படி நீந்தி, ஆழ்கடலில் முக்குளித்து, முத்துக்களை எடுத்துச் சேகரித்தது எதற்காக? பாங்குகளில் போட்டது கொள்ளாமல், நகையாகவும், ஷேர் சர்டிபிக்கேட்களாகவும், வீடாகவும் நிலமாகவும் குவித்தது யாருக்காக? ஒருவேளை ஆசை தீர, பசி அடங்க ருசிகளின் வேகம் தணியச் சாப்பிட வகை இல்லை. வீடு நிறையக் கலகலவென்று ஒலிக்கும் குழந்தைகள், பெரியவர்களின் குரல்களுக்கு நடுவே அமர்ந்து கொம்மாளம் அடிக்கப் பெரிய குடும்பம் இல்லை. அவரும் அவர் மனைவியுமாக ஆர்ப்பாட்டமாகவோ; அமைதியாகவோ, ஊர் ஊராகப் பறந்து போய் அலுத்துத் திகட்டும்வரை அநுபவிக்க, உடல் பலமும் இல்லை; —நேரமும் இல்லை. இந்த அவசர வாழ்க்கையில் இழந்தது எவ்வளவு? சேர்த்தது எத்தனை?

பெருமூச்சு விட்டபடி எழுந்து நின்றார் சுந்தரேசன். அறைக்குள்ளே இருந்த டாய்லெட்டில் நுழைந்து முகத்தைக் கழுவிக் கொண்டார். ஜியோமெட்ரி வடிவமாய் உடல் அமைப்பு. அம்புபோல் நிமிர்ந்த முதுகு. பொட்டில் நரைத்தது அன்றி வெளுக்காத தலைமயிர். வயது ஐம்பத்தைந்தைக் கடந்தது தெரியாத இளமைக் களை. ஆனால் அந்தத் தோற்றம் பொய் சொல்லுகிறது. உள்ளே பிசுபிசுத்துப் போய்விட்டது.

அறைக் கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்தார். குளிர் சாதனத்தின் தண்மையிலிருந்து இரண்டொரு நிமிடங்கள்தாம் விலகி இந்த வெம்மையை அநுபவிக்க வேண்டும்; 'லிப்'டில் இறங்கிக் காரில் ஏறிவிட்டால், அதிலும் குளிர்சாதன வசதி உண்டு. வீட்டில் அந்தக் குளிர்ச்சி அமைப்பு நிரந்தரம்.

காரில் ஏறி அமர்ந்து கொண்டார். சோடியம் விளக்குகளின் பகல் வெளிச்சத்தில், தார்ச்சாலையில், வாழை இலையில் அல்வா வழுக்கிக் கொண்டு போவதைப் போலக் கார் ஓடிற்று. ஸ்பென்சர் மூலை, ஜெமினி மேம்பாலம், நுங்கம்பாக்கம் சாலையின் வளைவு —பங்களாவுக்குள் கார் நுழைந்தது.

அறைக்குப் போய்க் கோட்டையும் பூட்ஸையும் உதறிவிட்டு, இடுப்புக்குச் சுகமாய் நீராவி மல் வேட்டி அணிந்து கொண்டு சாப்பாட்டு மேஜையில் வந்து உட்கார்ந்தார். வெங்காய சாம்பார், உருளைக்கிழங்கு கறி, கத்தரிக்காய் எண்ணெய்க் கறி, பதக்கம் பதக்கமாய் வெங்காய பஜ்ஜி — இப்படித் தட்டுக்களில் வைத்த மேஜை. தும்பைப் பூவாய் மலர்ந்து நிற்கும் பாசுமதி அரிசிச்சாதம். அவரால் எதையும் தொட முடியாது. எண்ணெய் காணாத, அட்டைப் பத்தத்தில் சுட்ட சப்பாத்தி இரண்டு. காரம், உப்பு, தாளிப்பு ஏதும் இல்லாமல் வேக வைத்த கறிகாய். ஓர் உரித்த ஆரஞ்சுப் பழம். இதுதான் அவருடைய இரவுச் சாப்பாடு. மேஜைமீது இருக்கும் அத்தனை அலங்கார வரிசைகளும் அவசியமில்லாத, தேவைக்கு அதிகமான, கண்ணை மயக்கிக் கருத்தை விரட்டுகிற ஜோடனைகள் தாம்.

சாப்பிட்டு விட்டுக் கொஞ்ச நேரம் தோட்டத்தில் ரச விளக்குகளின் வெளிச்சத்தில் உலாவிவிட்டு, படுத்துக் கொள்ளப் போனார். இரவு மணி பத்தரை. உண்மையான உழைப்பில் உடல் களைத்து, இமைகள் சலித்து மூடும் உறக்கம் அல்ல.

தூக்க மாத்திரையில் வலுக்கட்டாயமாக வரவழைத்துக் கொள்ளும் நித்திரை போன்ற மயக்கம்.

சட்டென்று விழித்துக்கொண்டார். இரவு பன்னிரண்டு மணி அடிப்பது நிதானமாய்க் கேட்டது. மணிக்கட்டுக் கடிகாரத்தின் ரேடியம் முள் அது சரிதான் என்று சாட்சி சொல்லிற்று. நெஞ்சில் முணுமுணுவென்ற வலி. உடலில் குப்பென்று பூத்துப் பரவிய வேர்வை! அந்தக் குளிர்ச் சாதனம் செய்த அறையிலா?

புரிபடாத திகில் நெஞ்சை அழுத்திற்று. இந்த வலி என்ன என்பதைப் பற்றி அவர் புத்தகங்களில் படித்திருக்கிறார். நிபுணர்கள் கூறக் கேட்டிருக்கிறார். இது சாதாரணமாய் மார்பில் பரவும் வாயுப்பிடிப்பு வலி அல்ல. தோள் பட்டையில் வலிக்கிறது. இடது கை முழுவதும் ஒரு குடைச்சல் பரவி ஓடுகிறது. இடது மணிக்கட்டு தெறிக்கிறது. மூச்சில் லேசான அடைப்பு. இது இருதய வலிதான்.

திகிலுடன் கட்டிலுக்கடியில் இருந்த 'பஸ்ஸரை' அழுத்தினார். ஒரே விநாடிதான். வெளியே விளக்கு எரிந்தது. வாசலில் படுத்திருந்த ஆள் மாடிப் படிகளை நாலெட்டாய்த் தாண்டிக்கொண்டு ஏறி உள்ளே வந்துவிட்டான்.

''ஐயா! ஐயா! என்ன ஆச்சு? ஏன் இப்படிப் பார்க்கறீங்க?'' உதறும் அவன் குரலுக்கு எதிரொலியாக, படபடவென்ற காலடிச் சத்தத்துடன் உள்ளே நுழையும் பாதங்கள். ராஜம் — சமையற்காரர் — டிரைவர். அவசரமாய்க் கூப்பிடும் டெலிபோன் பேச்சு. காரேஜில் இருந்து கார் புறப்படும் ஒலியின் வேகம். கண்கள் ஆயாசத்துடன் மூடின.

கண்கள் அந்தக் களைப்பில் செருகின. ராஜம் ஓடிவந்து மடியில் தலையை எடுத்து வைத்துக் கொள்ளுவது புரிகிறது. தலைக்கு மேலே தரைப் பலகையில் போட்ட வண்ணக் கோலங்கள் மின்னி மறைகின்றன. ஏதேதோ நினைவுகள் பொருந்திப் பொருந்தி எடுக்கும் படங்களாய் மாறுகின்றன. மாறி மாறி ராஜத்தின் முகமும், வாசுவின் முகமும், நெஞ்சில் படலமாடுகின்றன.

டாக்டர் வந்ததோ, ஆம்புலன்ஸில் அழைத்துச் சென்றதோ தெரியாது. நர்ஸிங் ஹோமில் அவசரக் கவனிப்பு அறையில் வைக்கப்பட்டிருந்ததும் தெரியாது. இருதய மருத்துவ நிபுணர்கள் பிள்ளையும் கணேசனும், நாயரும் மாறி மாறி வந்து அரை மணிக்கொரு தடவை கவனித்து விட்டுப் போனதும் தெரியாது. நேரம் மணிகளாய், நாட்களாய், வாரமாய் உருவிழந்து தேய்ந்ததும் நினைவில்லை.

ஒரு வாரம். அவசரக் கவனிப்பிலிருந்து பொது அறைக்கு வருவதற்கு அந்தக் கால அளவு தேவைப்பட்டது. அப்புறம் நர்ஸிங் ஹோமிலேயே இரண்டு வாரம். படுக்கையிலேயே ஓய்வு பெற அந்தக் காலக்கெடு. அப்புறம் இரண்டு வாரங்கள். அறைக்குள்ளேயே நிதானமாய் அடியெடுத்து வைத்துக் கொஞ்சம் நடக்க அந்தக் கால இடைவெளி.

அமெரிக்காவிலிருந்து வாசு வந்திருந்தான். வீட்டில் உறவினர்களும் நண்பர்களுமாக மாறி மாறி வந்து போனார்கள். சகத் தொழிலதிபர்கள், ரோட்டரி கிளப் கவர்னர்கள், சேம்பர் ஆப் காமர்ஸ் உறுப்பினர்கள், ஆன்மிகச் சங்கப் பிரதிநிதிகள் - இப்படி எத்தனை பேர்? கோயில் மாலைகளும், அர்ச்சனைப் பிரசாதங்களும், தாயத்துகளும், ஆறுதல் கடிதங்களும், அவரைத் தேற்றித் தூக்கிப் பிடித்து நிறுத்த எத்தனை உதவிக் கால்கள்?

அவருடைய மௌனப் புன்னகைதான் பதில். அதிகமாகப் பேசக் கூடாது. சோர்வினால் ஓய்வு. மாத்திரைகளால் கட்டாய ஓய்வு. அறையில் இருந்த டெலிபோனைக் கூட எடுத்துவிட்டார்கள். வெளி உலகச் செய்திகள் — அவற்றின் அதிர்ச்சிகள் — அறைக்குள் வருவதில்லை. அவருக்கென்று அமைந்த தனி உலகத்தில் சிறு தீவில் தனி மனிதனாய் ஒதுங்கி விட்டார் சுந்தரேசன்.

வேளாவேளைக்குக் கஞ்சி, பழரசம், ஹார்லிக்ஸ், மருந்து மாத்திரைகள் என்று ராஜமே கொடுப்பாள். வாசு நடுவில் வந்து பார்த்து விட்டுப் போவான். புன்னகையுடன் தலையை அசைத்து அவனுக்கு ஆறுத

லாய் ஒரே வார்த்தையில் பதில் சொல்லி, கையைத் தூக்கி ஆட்டி அனுப்பி வைப்பார் சுந்தரேசன்.

மூன்று மாதங்கள் .

நேரம் நழுவவில்லை. மணி மணியாய்ப் பிடித்துத் தள்ள வேண்டி இருந்தது. அறை மாடியிலிருந்து கீழே மாறி விட்டது. படி ஏறிச் செல்லத் தடை. நடை நாளுக்கு நூறுகஜமாகச் சுருங்கிவிட்டது. சூடாய், குளிர்ச்சியாய், கெட்டியாய் எதையும் சாப்பிடக்கூடாது. எதற்குமே அலட்டிக் கொள்ளக்கூடாது. நிதானமாய், அமைதியாய், வாழ்க்கை நழுவிக் கொண்டு போக வேண்டும்.

தினமும் டாக்டர் கணேசன் வருவான். உடம்பைச் சோதித்துப் பார்த்துவிட்டு, "குணமாகிவிட்டது" என்று சொல்லிக் கையைப் பிடித்துக் குலுக்கி விட்டுப் போவார். அவருடைய கை வெதுவெதுப்பாக இருக்கும். தனது கை சில்லென்று இருக்கும்; அவருடைய பிடி உறுதியாக இருக்கும். தனது பிடி தளர்ந்திருக்கும்; அவருடைய கரம் உலோக வலுவாய் இருக்கும்; தன் கை நடுங்கும்; இது சுந்தரேசனுக்குத் தெரியாமல் இல்லை.

இனி பழையபடி மாறமுடியாது. இது வயதுக் கோளாறு மட்டும் அல்ல. விழுந்து எழுந்த உடம்பு, ஒட்டுப் போட்ட கண்ணாடியைப் போல; பக்குவமாய்ப் பார்த்துக் கொள்ளாவிட்டால் ஒட்டவே முடியாத அளவுக்கு நொறுங்கிப் போய்விடும். சாவு கதவுக்கு வெளியே காத்துக் கொண்டிருப்பதைப் போல எந்த நேரமும் பாதுகாப்பாக இருக்க வேண்டும். வேலும் மயிலும் துணை, டாக்டரும் ஊசியும் துணைதான்; ஏகாதசி, கிருத்திகை உபவாசம்—கட்டாயக் கஞ்சியும் பழ ஆகாரமும் கூட உபவாசந்தான். பற்றில்லாத சிந்தனைகள் நீங்கிய துறவு —கட்டாயமான இந்த ஒதுக்கமும் துறவுதான்.

வாசு அமெரிக்காவுக்குத் திரும்பிப் போய்விட்டான். கம்பெனியில் சேர்மன் பதவியை உதறியாகிவிட்டது; ரோட்டரி கிளப், சேம்பர் கூட்டங்கள், திறப்புவிழாக்கள், எதிலும் கலந்து கொள்வதில்லை. நிதானமான நீரோட்டமாக, வாழ்க்கை நெகிழ்ந்து படிந்து அமர்ந்து விட்டது; டாக்டரைக் கேட்காமல் எதுவும் செய்வதில்லை; ராஜத்தின் துணை இல்லாமல் எழுந்து நடப்பதும் இல்லை. உடம்போடு ஒட்டாத ஊன்று கோல், கற்பனையில் எப்போதும் தேவைப்பட்டது. நெஞ்சில் தைரியம் போய் விட்டது. எதிலும் ஒட்டாத விரக்தி, உள்ளத்தில் இறங்கி விட்டது.

மாலை நேரம். ராஜம் உள்ளே பூஜை அறையில் உட்கார்ந்து திருப்புகழ் பாடுவது கேட்கிறது. வாழ்க்கையில் இன்பங்களைத் துய்த்து அலுத்துச் சலித்து, அப்புறம் உள்ளத்தில் பொன் மயமான ஒளியைத் தேடிக்கொண்ட அருணகிரிநாதரின் அருள் சுரந்த சிந்தனைகள் சந்தமாய் ஒலிக்கின்றன —ராஜம் மனம் உருகிப் பாடுகிறாள்.

பொன்னொளி புல்தரைமீது தவழ்ந்தது. சுகமான காற்று நெற்றியை ஒற்றி எடுத்தது. பிரம்புச் சாய்வு நாற்காலியில் தோட்டத்தைப் பார்த்தபடி, சாய்ந்து அயர்ந்திருந்தார் சுந்தரேசன். காரைப் பக்கத்து நடைபாதை ஓரம் நிறுத்திவிட்டு, நிதானமாகக் கணேசன் நடந்து உள்ளே வருவது தெரிந்தது. சற்றே உடம்பை நிமிர்த்தி உட்கார்ந்தார். டாக்டர் கணேசன் பக்கத்தில் வந்து அமர்ந்துகொண்டார். வழக்கமான அரும்பு மீசை விரியும் அமைதிப் புன்னகை. மூக்குக் கண்ணாடி வழியே சிந்தும் குறும்புப் பார்வை. நெஞ்சைத் தொடுவதுபோலப் பரிவுடன் விசாரிக்கும் குரல். அருகில் உட்கார்ந்த அவருடைய கையின் மணிக்கட்டைப் பிடித்துக் கொண்டார் சுந்தரேசன். விரல்கள் லேசாக நடுங்கிப் படிந்து அமைதி கண்டன.

"டாக்டர்! இன்று சோதனைகளைக் கொஞ்சம் நிதானமாகப் பார்த்துக் கொள்ளலாம். கொஞ்சநேரம் நிதானமாகப் பேசுவோம்" என்றார் லேசாகச் சிரித்துக்கொண்டே.

"சொல்லுங்கள்! ஆற அமர உட்கார்ந்து கேட்கிறேன்" என்று தம் நாற்காலியை அருகில் இழுத்துக் கொண்டார் கணேசன்.

"டாக்டர் ஸார்! இது என்ன வாழ்க்கை? எதற்கும் உபயோகம் இல்லாத ஒரு நோயாளியாய்ப் போய் விட்டேனே! வாழ்க்கையின் சாரம் எல்லாம் போன பிறகு, வெறும் சக்கையாய் ஒதுங்கிவிட்டேனே? என்னைப் பிழைக்கவைத்து இப்படி ஒரு வாழ்க்கையை வாழச் சொல்லுகிறீர்களே? இது அவசியந்தானா?" என்று குரல் கம்மக் கேட்டார் சுந்தரேசன்.

டாக்டர் ஒரு நிமிடம் பதில் சொல்லவில்லை. பிறகு நிதானமான புன்னகையுடன், "நான் சொல்லவில்லை ஸார். நம்முடைய வேதாந்த நூல்கள், சாத்திரங்கள் சொல்லி இருக்கின்றன. அவை விதித்துள்ள நெறிகளைத்தான் இன்று நீங்கள் பின்பற்றுகிறீர்கள்" என்றார்.

"புரியவில்லை டாக்டர்" என்று உதட்டைப் பிதுக்கிக் கொண்டார் சுந்தரேசன்.

"புரியும்படி சொல்லுகிறேன் கேளுங்கள்! இந்து மதக் கோட்பாடுகளின்படி சிலமான ஒரு வாழ்க்கை எப்படி அமைய வேண்டும் என்று சொல்லி இருக்கிறது. அந்த வாழ்க்கையில் நான்கு படிகள். முதலாவது கற்றுத் தெரிந்து, உழைத்துப் பயில வேண்டிய பிரம்மசரியம். இரண்டாவது அநுபவித்து உணர்ந்து, சுகம் கண்டு திளைக்கவேண்டிய கிருகஸ்தாசிரமம். மூன்றாவது இந்தப் பற்றுகளிலிருந்து ஒதுங்கி, மெல்ல மெல்ல வாழ்க்கையின் நீரோட்டத்திலிருந்து விலகவேண்டிய வானப்பிரஸ்தம்; நாலாவது எல்லாவற்றையுமே துறந்து இறைவனை நாடிப் போகவேண்டிய சந்நியாசம்.

"நீங்கள் ஐம்பது வயதிலேயே இந்த மூன்றாவது படிக்கு வந்திருக்கவேண்டும். ஆனால் உலகத்துப் பற்றுக்கள், அதன்பிடிப்புகள் உங்களை விடவில்லை, இன்று மும்முரமான வாழ்க்கை நடத்தும் பேல்பட்ட மக்கள் எல்லாருடைய நிலையும் அதுதான். பின் அவர்கள் எப்படித்தான் மனத் தெளிவு கண்டு, வாழ்க்கையில் ஒதுங்கி அமைதி காணும் வானப்பிரஸ்த நிலையை அடைவது? இந்த நாகரிக உலகத்தில் ஆண்டவன் அதை ஓர் எச்சரிக்கையுடன் அருளுகிறார். அதுதான் ஹார்ட்-அட்டாக்! இப்போது நீங்கள் அநுபவிப்பது அந்த நிலைதான்.

"அதற்கு அப்புறம் உணவுப் பழக்கங்கள் மென்மையாகிவிடுகின்றன. உடல் ஓட்டம் அமைதி கண்டுவிடுகிறது வாழ்க்கையில் 'த்ரில்', இன்ப சுகம், விறுவிறுப்பு ஆகியவை அடங்கி மெதுவாக ஓர் இடத்தில் உட்கார்ந்து இறைவனைச் சிந்திக்கத் தோன்றுகிறது. வாழ்க்கையில் எல்லாம் சாசுவதம் என்ற நினைப்பு மறைந்து, விரக்தி உண்டாகிவிடுகிறது.

"இன்றையஅவசர வாழ்க்கையில் நாமாகத் தேடிக்கொள்ளாத மூன்றாவது படியை-வானப்பிரஸ்த ஆசிரமத்தை—ஆண்டவன் இப்படி நமக்குக் கொடுத்து அருளுகிறார். இப்படி ஒரு நிலை வராவிட்டால், நீங்கள் இரவு பத்து மணிவரை வேலை செய்துகொண்டுதான் இருப்பீர்கள்; எந்தப் பொறுப்பிலிருந்தும் விலக மாட்டீர்கள். உங்கள் மனைவியின் துணையுடன் நிதானமாக வெளியே போய்வர, கோயிலுக்குப் போய்த் தரிசனம் செய்துவிட்டு வர, உங்களுக்குப் பொழுது இருந்திராது. மன அமைதியும் கிடைத்திருக்காது. இப்போது அது உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. வாழ்க்கையை உள்ளது உள்ளபடி ஏற்கப் பழகிக் கொண்டிருக்கிறீர்கள். பந்த பாசங்கள் மெல்ல மெல்ல விலகிவிட்டன. ஒரே மகனைக்கூடக் கண்காணாதஇடத்துக்கு அனுப்பி விட்டு, அமைதியாக இருக்க உங்கள் மனம் பழகிவிட்டது. வீட்டினுள்ளேயே இருந்து விலகி இருக்கும்—ஒட்டி இருந்தே விலகி நிற்கும் இந்தத் துறவு—இதுதான் உண்மையான வானப்பிரஸ்தம், இதை உங்களுக்கு ஆண்டவன், 'ஹார்ட்-அட்டாக்' மூலம் அளித்து விட்டான். ஒப்புக்கொள்கிறீர்களா? இன்று நீங்கள் அநுபவிப்பது உண்மையான, கட்டாயமான வானப்பிரஸ்தம்!"

டாக்டரைச் சுந்தரேசன் நிமிர்ந்து பார்த்தார். வாழ்க்கையின் அர்த்தம் புதுவிதமாகத் தெரிவது போன்ற உணர்வு. நெஞ்சில் பலகணி திறந்தது போன்ற புது வெளிச்சம். அதுவரை சப்பிட்டுப் போனது போலத் தோன்றிய வாழ்க்கையில் ஓர் அமைதியான அபூர்வ ருசி தெரியும் அநுபவம்.

"கணேசன், உண்மையைச் சொல்லுங்கள். நீங்கள் உடம்புக்கு டாக்டரா? உள்ளத்துக்கு டாக்டரா?" என்று புன்னகையுடன் கேட்டார் சுந்தரேசன்.

"இரண்டுந்தான்!" என்று தலையை ஆட்டிச் சிரித்தார் கணேசன். ✳

PRODUCTS TESTED IN INDIA & ABROAD TO SURPASS WORLD STANDARDS!



All W.S. products score the highest quality ratings! Our care for every unit manufactured by us is reflected in its performance reliability.

Photograph shows a 400 KV Instrument Transformer under special high voltage tests in W. Germany

YOU CAN BE SURE IF IT IS

W.S. INSULATORS OF INDIA LIMITED

PORUR, MADRAS-602 104

WITH BEST COMPLIMENTS FROM

Arasan

TRAILERS

- Low centre of gravity and loading height for greater stability and safety
- Sturdy all welded steel construction to withstand on the roughest farm roads
- Jolt free smooth running and easy turning
- Versatile and readily suits tractors with different hitching heights
- No unwanted weight and saves on fuel too

Arasan

Arasan and Company

Works: 51, High Road, Tirunelveli - 1

Madras - Bangalore - Madurai - Hyderabad



அன்பு மகனின்
சிறப்புமிகு உயர்கல்வி
அன்பு மகளின்
சீர்மிகு திருமணம்
உங்கள் எண்ணங்கள் ஆயிரம்
அத்தனையும் நனவாகிட

உங்கள் ஒளிமயமான
எதிர்காலத்திற்காக எமது
சிறப்புமிகு சேமிப்புத் திட்டங்கள்

முத்துக்குவியல்: மினி-முத்துக்குவியல்:
நவரத்னமாலா

மற்றும் பல அரிய சேமிப்புத் திட்டங்கள்

தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்:
56, பீச் ரோடு, தூத்துக்குடி - 1

மக்கள்
சேவையில்
60 ஆண்டுகளுக்கும்
மேல்

—V. S. மணி

Telephone : 81777 & 81825
Telex : 41-7761-ADJ
Telegram : JEYSARATHY

A. D. Jeyaveerapandia Nadar & Bros.

And other Associate Firms, Exporters, Importers,
Stevedoring, Clearing and Transport Contractors

H. O. : No. 37, Anna Salai, Madras-2

Offices at :

Nagapattinam - Tuticorin - Madurai -
Cuddalore - Pondicherry - Bombay

CLEVITE

Quality bearings from quality conscious manufacturers

BIMETAL BEARINGS LIMITED
114, RACE COURSE ROAD, COIMBATORE-641 018



Cheers
Quench

தயாரிப்பாளர்கள் :
ஸ்ரீ ஜகதாம்பா பாட்லிங் கம்பெனி (பி) லிமிடெட்
6, எம். ஜி. ஆர். சாலை
பாலவாக்கம்
சென்னை — 600 041

Concept/M/JBC/149

வாடிக்கையாளர்களுக்கு ஓர் நற்செய்தி!

29-9-82 முதல் இலங்கை
"ரூபவாகினி" தொலைக்காட்சியில்
தமிழ்த் திரைப்படம் தொடர்ந்து
காண்பிக்கப்படுகிறது என்பதை
மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக்கொள்கிறோம்.

தஞ்சை மாவட்டத்தில் கலர் T. V. கள்
மலிவு விலையில் ஆர்டர்கள் பதிவு
செய்யப்படுகின்றன.
பதிவுத் தொகை ரூ. 1000/-



Weston TV

டிசம்பர் முடியமட்டுமே கலர் T.V.கள்
மலிவு விலையில் கிடைக்கும்.
இந்த அரிய சந்தர்ப்பத்தை
நழுவ விடாதீர்கள்

**Weston T. V. வாங்கிட
எமது ஷோ ரூமிற்கு
அன்புடன் அழைக்கிறோம்**

தஞ்சை மாவட்ட பூர்ண விநியோகஸ்தர்கள்:

பாண்டியன் ரேடியோ சர்வீஸ்,
No. 1-A, T S. R. பெரிய தெரு,
கும்பகோணம் போன்: 620

இந்தியாவில் தயாராகும்
T. V. ஆண்டினாக்களில்
தரமானதும்,
முலாம் பூசப்பட்டதும்,
சக்தி வாய்ந்ததும்,
ஜப்பான் தொழில் நுட்பப்படி
தயாராகும் ஒரே ஆண்டினா

கலர் T. V. களுக்கு என்று
தனியாக தயாரிப்பது



பான் ஆண்டினாதான்

நீங்கள் வாங்கும் T.V.களுக்கு
பான் ஆண்டினாவையே
கேட்டு வாங்குங்கள்

பான் ஆண்டினா கம்பெனி
2/83, மாரியம்மன் சன்னதி,
அண்ணாலக்கிரகாரம், P.o.
சாக்கோட்டை (S. O.) கும்பகோணம்
போன்: 620

ஏக விநியோகஸ்தர்கள்:

**பாண்டியன்
ரேடியோ சர்வீஸ்,**
1-A, பெரிய தெரு, கும்பகோணம்

'அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்'
உயர்ந்தரகம்!
சிறந்த தயாரிப்பு!!
சமையலுக்கு சுவையூட்டுவது
P.T.C
கூட்டு
பெருங்காயம்
EXTRA SUPERIOR QUALITY
P.T.C
MISKY
COMPOUNDED
ASAFOETIDA
போன்: 22261]
தயாரிப்பு:
[தந்தி பெருங்காயம்
பிரபாத் டிரேடிங் கம்பெனி
மதுரை-9.

டைகர்
பிராண்டு தயாரிப்புகள்
TIGER
MILK BOILER
RJ
இட்லி குக்கர்
இட்லி தட்டு
இடியாப்ப மேக்கர்
MFRS: ராஜி இண்டஸ்ட்ரீஸ்
திருச்சி-2. தமிழ்நாடு.
Chandra arts

சொகுசான பயணம்! வசதிமிக்க பயணம்!! அதுவே திருவள்ளுவர் பஸ்!!!

பயணிகளின் வசதிக்கென்றே கடமை உணர்வுடன் செயல்படும் பணி, மெத்தை கொண்ட தனி இருக்கை, மூடக்கூடிய பெரிய சன்னல்களோடு, செவிக்கினிய இசை விருந்து போன்ற குளிர்சாதன வசதிகொண்ட பேருந்துகளில் முக்கிய நகரங்களுக்கு பயணம் செய்கின்ற பொழுதே, பதிவு செய்யப்பட்ட, டி.வி.யில் திரைப்படக் காட்சிகளை கண்டு மகிழுங்கள், மதுரை, மற்றும் கன்னியாகுமரி போன்ற எந்த முக்கிய நகரங்களுக்கு செல்ல வேண்டுமானாலும் இப்பேருந்துகள் உள்ளன. இரவோ, பகலோ இப்பேருந்துகள் உங்களுக்கு சேவை செய்ய எந்நேரமும் காத்திருக்கின்றன, உடைமைகளைப் பாதுகாக்கும் அறை, ஓய்வு அறை மற்றும் முன்பதிவு வசதிகளும் உண்டு.

ஓர் அரிய வாய்ப்பு, இது பொதுமக்களுக்கென்றே வசதியாக சாய்ந்து செல்லக்கூடிய சொகுசு அகலமான கால் இடவசதியுடன், திறந்து அதிர்ச்சி தவிர்க்கும் அமைப்புடன், பல அம்சங்கள் கொண்டவை. மேலும் பெங்களூர், திருவனந்தபுரம் போன்ற

எத்தனை வசதி எத்தனை களிப்பு
இலவை அத்தனைக்கும் ஒரு உற்ற துணை
-திருவள்ளுவர்

தொடர்பு கொள்ளுங்கள்:
திருவள்ளுவர்
போக்குவரத்துக் கழகம்
(ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
திருவள்ளுவர் இல்லம்,
சென்னை-600 002.
போன்: 846351.

தீபாவளி வாழ்த்துக்கள்

CYCLON

CYCLE . HEAY DUTY CYCLE . CYCLERICKSHAW . CHAINS

CYCLON
Chains are a tradition
Since they are best
made with
ROLON
Know-how.



CYCLON PRODUCTS PRIVATE LTD.
Ganapathy Post Coimbatore 641 006

"வாடிக்கைக்காரர்கள் அனைவருக்கும் எங்களது மனம் உகந்த தீபாவளி வாழ்த்துக்கள்"



நெல்-கல்-குருணை-உமி நீக்கிச்
சுத்தமான அரிசி சப்ளை செய்யும்
"ரைஸ் மில் பேன் பாக்ஸ் மிஷின்"

நிலக்கடலை உடைத்து உமி உறிஞ்சும்
புது மாதிரி "ஸ்பெஷல் டைப்
நிலக்கடலை உடைப்பு மிஷின்"

தயாரிப்பாளர்கள்:

ESTD: 1969 போன்: 3876 ஆபீஸ். 3126 வீடு.

G. A. J. நாயுடு & கோ.,

மெஷினரி டீலர்ஸ்

128/19, ராமமூர்த்தி ரோடு, விருதுநகர் - 626001.

—L. ரங்கன்

தீபாவளி வாழ்த்துக்கள்

NAVALAR SILK

**காஞ்சிபுரம் Dr. நாவலர் நெடுஞ்செழியன்
பட்டு கூட்டுறவு சங்கம் லிட்.**

**தரமான காஞ்சிபுரம் பட்டு புடவைகள் மற்றும்
பாவாடைகள் நியாயமான விலையில் கிடைக்குமிடம்**

எண்: 62. காந்தி சாலை, காஞ்சிபுரம் போன்: 2116

விற்பனைக் கிளைகள்:

1. M/s. விஜயா சில்க்ஸ், கிருஷ்ண மார்க்கெட், சிக்பெட், பெங்களூர்-53.
2. M/s. மீனாட்சியம்மன் சில்க் சேல்ஸ் எம்போரியம், 27, II அக்ரஹாரம், சேலம்-1.

D. சிவசுப்ரமணியன்
கைத்தறி அலுவலர்/செயலாளர்

—V. K. வீரராகவன்


NADU HALL
நாயுடு ஹால்
NADU HALL
NADU HALL
NADU HALL
NADU HALL
Introducing
UMISS
Brassieres
N H
Bras designed for fit
support & comfort

அன்பர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்

பழனி சித்த வைத்தியத்திற்குச் சிறப்பு பெற்றதே!

அதிலே முன்னணியில் திகழ்பவர்

Dr S K

டாக்டர் S. காளிமுத்து

R.M.P. (IND) V.V.C. A.M.I.H. அவர்களே என்பது

இந்தியாவின் முக்கிய மாநிலங்களில் சுமார் 40 நகரங்களில் முகாம் செய்து, மற்றவர்களைவிட ஏராளமான வாலிப வயோதிக அன்பர்களுக்குச் சிகிச்சை செய்து பாராட்டும் நற்சாட்சிகளும் மெடல்களும் புகழும் பெற்றவர் இவர் ஒருவரே!

தங்கபஸ்பம் - சிட்டுக்குருவி லேகியம்

கலந்து சாப்பிடுங்கள்

இதற்கு நிகரானது எதுவுமில்லை, இழந்து போன வாழ்க்கையின் மறுமலர்ச்சிக்காகக் கைகால் அசதி, தளர்ச்சி, வெட்கம், பயம், ரத்தக் குறைவு, கெட்ட கனவுகள் முதலியவற்றைக் குணப்படுத்தி, புதிய சக்தி, புத்துணர்ச்சி தந்து இணையில்லா வெற்றி தருகிறது. 84 வருட அனுபவம் நற்சாட்சிகளும் பெற்றது இதுவே. பத்தியம் இல்லை

60 வேளை தங்கபஸ்பம சிட்டுக்குருவி லேகியம் விலை ரூ. 120/-
90 வேளைக்கு ரூ. 180/-
120 ,, ரூ. 240/-

வி.பி.பி.யில் பெற இன்றே எழுதுங்கள்!

தங்கபஸ்பம் சூப்பர் செட் - ரூ. 600/-, ரூ. 900/-

ஆஸ்துமா நோயாளிகள் கவனிக்கவும்

கஸ்தூரி கல்பம் உபயோகியுங்கள்

ஆஸ்துமா என்னும் இருமல், சளி, இளைப்பு, கபக்கட்டு, கோழை, சளி அடைப்பு, தொண்டைக்கட்டு, பேசவும் மூச்சு விடவும் கஷ்டம், கர்முர் சப்தம், மூச்சுத் திணறல், மூக்கில் நீர் வடிதல், தினசரி அலுவல்களில் அவஸ்தை, பலகீனம் முதலியவற்ருல் பலகாலம் கஷ்டப்பட்ட நோயாளிகள் நம்மிடம் மருந்து சாப்பிட்டு நலம் பெற்று விட்டார்கள். பத்தியமில்லை. நற்சான்றுகள் ஏராளம். வி.பி. தபால் பார்சலில் பெற இன்றே எழுதுங்கள்.

24 நாள் கஸ்தூரி-கல்பம் ஸ்பெஷல் செட் - கோர்ஸ் ரூ. 124/-, 158-, 226/-, 346/-

சரும நோய் என்ற தோலைப்பற்றிய வியாதிகளுக்கு

சரும நோய் என்பது பலவகைப்படும். இதில் முக்கியமாக தொந்தரவு கொடுக்கும் வியாதிகளான ஊரல், பத்து படை, சாம்பல் நிறப் படை, திட்டு திட்டாக, செதில் செதிலாக தோலில் உதிர்தல் முதலியவற்ருல் கஷ்டப்பட்ட நோயாளிகள் நம்மிடம் சிகிச்சை பெற்று சீக்கிரத்தில் குணமடைந்துள்ளார்கள். திரும்பி வருவதில்லை, பத்தியக் கஷ்டமில்லை.

30 நாள் சரும நோய் செட் விலை ரூ. 140/-, 260/-, 380/-

Govt. Regd. T.M. No. [illegible]4811 | Regd. 15443 M.F.G.L.I.C. No. 5

★ வைத்தியதிலகம், வைத்தியராஜ் ★

டாக்டர் S. காளிமுத்து, R.M.P. (IND) V.V.C.A.M.I.H. R.A.M.P, R.H.M.P., S.M.P., M.D.H.

பழனி சித்தர் வைத்தியசாலை (Regd.)

பழனி - 624 601

போன்: 316, 316A, வீடு: 420, பிரஸ்: 361 ● தந்தி: சித்தர்

சென்னையில் பிரதி மாதம் 10, 11, 17, 18, & 19 தேதிகளில்
நியூ உட்லண்ட்ஸ் ஹோட்டலில் நேரில் சந்திக்கலாம். போன்: 83111
பழனியில் 5 ந்தேதி முதல் 8 ந்தேதி வரையிலும் 23 ந் தேதி முதல் 31 ந்தேதி வரையிலும் டாக்டரை நேரில் சந்திக்கலாம்.

—மினர்வா

Hauers Lines Private Limited

7 & 9 STEPHEN HOUSE

5, DALHOUSIE SQUARE EAST, CALCUTTA-700 001

Telephones: 23-1762, 23-2735, 23-1683, 23-9444
Grams: SUNNYISLES Telex: 021-3100

Branches: Diana House, 31, Walltax Road, Madras-600 001
Phone: 39382 Grams: POTENTIAL Telex: 041-7385
61, Rajat Apartments, Mount Pleasant Road,
Malabar Hills, Bombay-400 006,
Phones: 819867 & 828205 Grams: POTENTIAL
Aberdeen Bazar, Port Blair-744 101 (Andamans)
Phone: 609 Grams: SRIKANTH

Owners of Fleet of ocean going vessels:

m. v. KAMAKSHI, m. v. ISLAND GLORY, m. v. VISALAKSHI,
m. v. ISLAND PRINCESS & m. v. ISLAND QUEEN
Cruising Coastal & International Waters.

'Diana' Rolling Shutters & Grils

DISTINCTLY SUPERIOR IN: QUALITY OF MATERIAL
DESIGN & CONSTRUCTION
DURABILITY & TROUBLE-FREE PERFORMANCE
DEPENDABLE AFTER-SALES SERVICE

A TRUSTED NAME FOR 28 YEARS

Diana Shutters Private Limited

DIANA HOUSE
31, WALLTAX ROAD
MADRAS-600 001

Phones: 39682/39683
Grams: DIANADOORS
Telex: MS 7385

20617

Edited and Published by R. Narayanaswamy, for and on behalf of the Kalaimagal Office and Printed at M.L.J. Press Private Ltd., 87, Mundakakanni Amman Koil Street, Madras-600 004.

Managing Editor: K. V. Jagannathan.

அனைவருக்கும் எங்கள் தீபாவளி நல்வாழ்த்துக்கள்
நல்லியின்
பட்டுச் சேலைகள்
வேஷ்டிகள்
எல்லாவித
ஜவுளிகள்
உயர்ந்த ரகம்
ஒரே விலை
போன்:44415·445657
நல்லி சின்னசாமி செட்டி
9. நாகேஸ்வர ராவ் ரோடு
தி.நகர்·சென்னை-600017.
பனகல் பார்க் எதிரில்

d. No. M. 2748
plement to Kalaimagal
ed 1-11-82